அயல் நாடுகளில் கூட்டுறவு

(CO-OPERATION IN ABROAD)

வே. பத்மநாபன்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த.பா.நி.(க.வெ.) வரிசை எண் — 335

அயல் நாடுகளில் கூட்டுறவு

ஆசிரியர்
வே. பத்மநாபன், எம்.காம்.,
வணிகவியல் விரிவுரையாளர்,
வைணவக் கல்லூரி,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—June, 1972

T.N.T.B.S. (C.P.) No. 335

© Tamil Nadu Text Book Society

CO-OPERATION IN ABROAD

V. PADMANABAN

Net Price Rs. 7 - 40

(No discount)

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by

SOUNDARA PRINTERS
403, T. H. Road,
Madras - 5.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி — உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினோராண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி. ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புதுமுக வகுப்பிலும் P.U.C.) 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்து வரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல் புவியமைப்பியல், மனையியல், கணிதம், பௌதிகம், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'அயல் நாடுகளில் கூட்டுறவு' என்ற இந்நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 335 ஆவது வெளியீடாகும். இதுவரை 370 நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக் கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை. ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

பக்கம்

1. கூட்டுறவு என்றால் என்ன? ... 1

முன்னுரை—இலக்கணங்கள் — ராக்டேல் முன்னோடிகள் — கூட்டுறவுத் தத்துவங்கள் — சங்கங்களிடையே கூட்டுறவு.

2. இங்கிலாந்து நாட்டில் கூட்டுறவு இயக்கம் ... 15

முன்னுரை—விடிவெள்ளியின் வரவு—தொழிலாளர் தனிக் குடியிருப்புகள்—தேசிய உழைப்புப் பரிமாற்ற நியாய அமைப்புகள் — ராக்டேல் முன்னோடிகள்—பண்டகசாலையின் நோக்கங்கள்—கொள்கைகள்—சம தருமவாதிகளின் ஈடுபாடு—சில்லறை விற்பனைச் சங்கங்கள்—விலைக் கொள்கை—விற்பனைச் சங்கங்களின் நிர்வாகம்—நுகர்வோர் சில்லறை விற்பனைச் சங்கங்களின் கூட்டமைப்புகள் — மொத்த விற்பனைச் சங்கங்கள் — ஸ்காட்லாந்து மொத்த விற்பனைச் சங்கம்—உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்—வெற்றியின் இரகசியம்—குறைபாடுகளும் அவற்றிற்கான தீர்வுகளும்—கூட்டுறவு இணைப்புச் சங்கம்—விவசாயக் கூட்டுறவு—அரசின் பங்கும் கூட்டுறவு அமைப்புகளின் வளர்ச்சியும்—விவசாய இயக்கமும் நுகர்வோர் இயக்கமும்.

3. ஜெர்மானிய நாட்டில் கூட்டுறவு இயக்கம் ... 52

முன்னுரை—இயக்கத்தின் தூண்கள்—வங்கியின் நோக்கங்கள்—உறுப்பினர் நிலை—நிர்வாக அமைப்பு—பொறுப்பு—பங்கு மூலதனம்—காப்பு நிதி—வங்கிகளின் சாதனைச் சிறப்பு — ரைபீசன் வங்கிகள் — ஒப்பீடு காண்டல்—1945ஆம் ஆண்டும் அதன் பின்னரும்—கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள்—நகர்ப்புறச் சங்கங்கள்—வீடளிப்புச் சங்கங்கள்—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் — கூட்டமைப்புகள் — பொதுத் தன்மைகள்—டாக்டர் ஹாஸ் ஆற்றிய பணி—இன்றைய நிலை—அட்டவணைகள்.

4. இத்தாலி நாட்டில் கூட்டுறவு இயக்கம் ... 74

கூட்டுறவின் தொடக்கம்—மக்கள் வங்கிகள்—ஒப்புமை காண்டல்—கிராமக் கடன் இயக்கம்—வல்லாண்மைக் கட்சியின் வளர்ச்சிப் பணிகள்—தொழிலாளர் சங்கங்கள்—கூட்டிணைப்புகள்—கூட்டுறவு விவசாயச் சங்கங்கள்.

5. சுவீடன் நாட்டில் கூட்டுறவு இயக்கம் ... 104

முன்னுரை—கூட்டுறவு இயக்கத்தின் தொடக்கம்—சுவீடனின் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பு அம்சங்கள்—கோ ஆப்பரேட்டிவ் ஃபார்பன்டெட்—மொத்த விற்பனைப் பணிகள்—உற்பத்தித் துறையில் இச் சங்கத்தின் பணிகள்—கூட்டுறவுக் கல்வியின் வளர்ச்சி—சோதனை ஆய்வுக் கூடங்கள்—கூட்டுறவுச் சங்கமும் வேலை வாய்ப்பும்—கூட்டுறவுச் சங்கத்தின் அமைப்பு—தில்லியில் மத்தியக் கல்விக் கூடம்—விவசாயக் கூட்டுறவு இயக்கம்—பொது விவசாயச் சங்கம்—பாற் பண்ணைகள்—கூட்டுறவு இறைச்சி விற்பனையேற்பாடு—முட்டை விற்பனைச் சங்கங்கள்—கூட்டுறவுக் கொள்முதல், விற்பனைச் சங்கங்கள்—வன உரிமையாளர் சங்கம்—கூட்டுறவுக் கடன் சங்கங்கள்—தேசியக் குடியானவர்கள் சங்கம்—கூட்டுறவு மனை இயக்கம்—சுவீடன் கூட்டிணைப்பு—வெற்றியின் இரகசியம்.

6. டென்மார்க்கில் கூட்டுறவு இயக்கம் ... 145

டென்மார்க்கைப்பற்றி — பால் பண்ணைத் தொழிலின் தொடக்கம்—பால் பண்ணைத் தொழிலும் கூட்டுறவும்—பண்ணையின் அமைப்பும் அதன் பணியும்—பால் பொருள்களின் விற்பனை—வெற்றிக்கான காரணங்கள்—பன்றி இறைச்சித் தொழில்—கூட்டுறவு முட்டை ஏற்றுமதிச் சங்கம்—கூட்டுறவு அளிப்புச் சங்கங்கள்—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்—கூட்டுறவுச் சில்லறை விற்பனைச் சங்கங்கள்—கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம்—விவசாயத் துறையில் இயங்கி வரும் பிற கூட்டுறவுச் சங்கங்கள்—கால்நடைக் கூட்டுறவுச் சங்கங்கள்—பசு தேர்வாய்வுச் சங்கங்கள்—கால்நடை முன்னேற்றச் சங்கங்கள்—கால்நடைக் காப்புறுதிச் சங்கங்கள்—விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி—கூட்டுறவுக் கடன் சங்கங்கள்—டென்மார்க் கூட்டிணைப்புகள்

—நகர் சார்ந்த கூட்டுறவுச் சங்கங்கள்—கூட்டுறவுக் கல்வி —டென்மார்க் அரசும் கூட்டுறவுச் சங்கங்களும்—டென் மார்க் கூட்டுறவு இயக்கத்தின் தனிச் சிறப்புகள்—வெற்றிக்கான காரணங்கள்—நாம் பெற வேண்டியவை.

7. சீன நாட்டில் கூட்டுறவு இயக்கம் ... 190

முன்னுரை — கூட்டுறவு வரலாறு — 1937ஆம் ஆண்டுக்குப் பின்—கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு முறை—கிராம அளிப்பு, விற்பனை ஏற்பாட்டுச் சங்கங்கள் —நகர நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்—தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்—அரசின் ஆதரவு—சங்கங்களின் அமைப்பு—கூட்டமைப்புகள்—புதிய சீனுவில் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்—உற்பத்தியாளர் குழுமம்—அளிப்பு, விற்பனை யேற்பாட்டுச் சங்கங்கள்—உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்—வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள்—ஒருவருக்கொருவர் உதவிக் குழுமங்கள் — சமதர்மப் பண்ணைகள் — சீனக் கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பியல்புகள்.

8. சோவியத்து நாட்டில் கூட்டுறவு இயக்கம் ... 221

வரலாற்றுப் பின்னணி—கூட்டுறவு இயக்க வளர்ச்சி வரலாறு—சோவியத்து நாட்டின் கூட்டுறவு அமைப்புகள் —தொழிலாளர் அமைப்புகள்—விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள்—கூட்டுறவுக் கடன் சங்கங்கள்—கூட்டுறவு இணைப்புச் சங்கங்கள்—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்—பண்டகசாலைகளின் நிர்வாக அமைப்பு—மத்தியக் கூட்டமைப்பின் பணிகள்—கூட்டுறவுப் பண்டக சாலையின் சிறப்பியல்புகள்—பண்டகசாலைகளின் நிதி நிலை—உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்—மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்—வேளாண்மைக் கூட்டுறவு—கூட்டுப் பண்ணைகள்—பண்ணைகளின் நிர்வாகம்—விளை பொருள் விநியோகம் — கூட்டுப் பண்ணைகளால் விளையும் நன்மைகள்—கூட்டுப் பண்ணைகளின் குறை பாடுகள்—தீர்வழி நடவடிக்கைகள்—கூட்டுப்பண்ணையும் கூட்டுறவுப் பண்ணையும்—கூட்டுப்பண்ணை விவசாய மும் இந்தியாவும்—நாம் பெற வேண்டிய பாடம்.

9. அயர்லாந்தில் கூட்டுறவு ... 280

வரலாற்றுப் பின்னணி—கூட்டுறவின் தோற்றமும் வளர்ச்சியும்—நாட்டுப் பிரிவினையும் அதனுல் கூட்டுறவு

இயக்கத்தில் ஏற்பட்ட விளைவுகளும்—கூட்டுறவுப் பால் பண்ணைகளும் அவற்றின் வளர்ச்சியும்—அயர்லாந்து அரசாங்கத்தின் பணி—கூட்டுறவுக் கடன் சங்கங்கள்—இரண்டாம் உலகப் போரும் அதன் விளைவுகளும்—கூட்டுறவுச் சங்கங்களின் தற்போதைய நிலை.

10. ஜப்பானில் கூட்டுறவு இயக்கம் ... 302

ஜப்பானைப்பற்றி—கூட்டுறவு இயக்கத்தின் வரலாறு—இன்றைய நிலை—விவசாயக் கூட்டுறவுக் கழகங்கள்—கடன் அளிப்பு—தொகை வைப்பு—விளைபொருள்களின் விற்பனையேற்பாடு—விவசாயத் தேவைப் பொருள்களின் கொள்முதல்—ஜப்பானின் கூட்டுறவுக் கூட்டிணைப்புகள்—மீன்பிடிப்புக் கூட்டுறவுச் சங்கங்கள்—ஜப்பானின் வனக் கூட்டுறவுச். சங்கங்கள்—வன விவசாய மத்தியக் கூட்டுறவு வங்கி—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்—அயல்நாட்டு வாணிகமும் கூட்டுறவு அமைப்பும்—விற்பனைமுறை—நன்மைகள், தீமைகள்—தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்—பெறவேண்டிய படிப்பினை.

11. அமெரிக்க ஐக்கிய நாட்டில் கூட்டுறவு ... 344

புதிய நாடும் பழைய மக்களும்—கூட்டுறவின் தொடக்கம்—கூட்டுறவு இயக்கத்தின் வரலாறு—வேளாண்மைக் கூட்டுறவு—அளிப்புக் கூட்டுறவுச் சங்கங்கள்—கூட்டுறவு விற்பனை யேற்பாட்டுச் சங்கங்கள்—கூட்டுறவுப் பால் பண்ணைத் தொழில்—தானியச் சங்கங்கள்—பருத்தி, எண்ணெய்க் கூட்டுறவுகள்—கம்பளிக் கூட்டுறவுச் சங்கங்கள்—முட்டை விற்பனை யேற்பாட்டுச் சங்கங்கள் — காய்கறி, பழ விற்பனை யேற்பாட்டுச் சங்கங்கள்—விற்பனை யேற்பாட்டுச் சங்கங்களின் சிறப்பியல்புகள்—அரசாங்க ஆதரவு — அட்டவணைகள் — கூட்டுறவுக் கொள்முதல் சங்கங்கள்—கிராமச் சேவைச் சங்கங்கள்—கூட்டுறவுக் கடன் இயக்கம்—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்—சில்லறை விற்பனைப் பண்டக சாலைகள்—மொத்த விற்பனைப் பண்டக சாலைகள்—தேசிய மொத்த விற்பனைச் சங்கங்கள்—சேவைச் சங்கங்கள்—கடன் சங்கங்கள்—கல்விப் பணியும் கூட்டுறவு இயக்கமும்—அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கூட்டுறவு இயக்கத்தின் தனிச்சிறப்புகள்.

12. கனடாவில் கூட்டுறவு இயக்கம் ... 385

முன்னுரை — கூட்டுறவின் தொடக்கம்—விற்பனை யேற்பாட்டுச் சங்கங்கள் — கூட்டுறவு விற்பனை யேற்பாட்டுக் கொள்முதல் சங்கங்கள்—மொத்த விற்பனைச் சங்கங்கள்—கொள்முதல் கூட்டுறவுச் சங்கங்கள்—கூட்டுறவுச் சேவைச் சங்கங்கள் — மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்—எண்ணெய்க் கூட்டுறவுச் சங்கங்கள்—கூட்டுறவுக் கடன் சங்கங்கள் — கூட்டுறவுக் கல்வியும் பிரசாரமும்—கூட்டுறவுச் சட்டங்கள்—கனடாவின் தற்போதைய நிலை.

13. இஸ்ரேல் நாட்டில் கூட்டுறவு இயக்கம் ... 407

முன்னுரை—தொழிலாளர்க் கூட்டு அமைப்பு—ஹேவரத் ஓவ்டிம்—கூட்டுப்பண்ணை விவசாயவரலாறு—கிராமக் குடியிருப்புகள்—தொழிலாளர் குடியிருப்புச் சங்கங்கள்—சிறப்பியல்புகள்—குடியிருப்பின் அமைப்பு —பொருளாதார சமத்துவம்—கூட்டுக் குடியிருப்புகள் —இவைகளின் நோக்கங்கள்—அடிப்படைக் கொள்கைகள்—குடியிருப்பின் அமைப்பு—நிருவாகம் — வெற்றிக்கான காரணங்கள்—கலப்புக் கூட்டுக் குடியிருப்புகள்.

கலைச்சொற்கள் ... 432

BIBLIOGRAPHY ... 441

1. கூட்டுறவு என்றால் என்ன?

முன்னுரை

எழுத்துகளின் கூட்டுறவுதான் சொல்லாகின்றது. சில சொற்களின் கூட்டுறவுதான் வாக்கியம் என வழங்கப்படுகின்றது. இவையாவும் தனித்து நிற்பின் யாது பயன்? எனவே 'கூட்டுறவு' (Co-operation) என்னும் சொல் மிகவும் வலிமை வாய்ந்த சொல்லாகும். 'கூடிவாழ்தலே கோடி நன்மை'. இது பழமொழியே யாயினும் எக் காலத்திற்கும் ஒத்துவரக்கூடிய பொன்மொழி யாகும். கூட்டு வாழ்க்கையில்தான் ஒருவருடைய துன்பம் மற்றவரால் நீக்கப்படும். கூட்டுறவு ஒன்றினால்தான் நட்புறவு வளர முடியும். மனிதர்களிடையே நிலவும் கூட்டுறவுதான் நல்லாட்சிக்கு வித்திடுகின்றது. நாடுகளிடையே நிலவும் கூட்டுறவுதான் உலக அமைதிக்கே வழிகோலுகின்றது. கூட்டுறவு ஒன்றினால்தான் பல வியத்தகு சாதனைகள் நிகழ்த்தப் படுகின்றன. மனிதன் தோன்றிய நாள் தொட்டே இக் கூட்டுறவு வாழ்க்கையில் கலந்தே வந்துள்ளது. இனி, இத்துணைச் சிறப்பு வாய்ந்த கூட்டுறவின் இலக்கணங்களைக் காண்போம்.

இலக்கணங்கள் (Definitions)

கூட்டுறவிற்குச் சரியான இலக்கணத்தை வகுப்பது கடினமான காரியமாகும். ஏனெனில், நாட்டுக்குநாடு இது தோன்றிய விதம் வேறுபட்டு நிற்கின்றது. ஆங்காங்கே நிலவிய சூழ்நிலைக் கேற்பக் கூட்டுறவு பிறந்து வளர்ந்து தழைத்து நிற்கின்றது. இந் நிலையில் இலக்கணங்களிடையே ஒருமைப்பாட்டைக் காண்பது அரியவொரு காரியமாக உள்ளது. கூட்டுறவு என்னும் சொல்லுக்குப் பல இலக்கணங்கள் பல ஆசிரியர்களால் வகுக்கப்பட்டிருந்தாலும், அவற்றுள் நாம் ஒரு பொதுவான

கருத்தைக் காணமுடிகின்றது. அதாவது, கூட்டுறவு என்பது தரங்குறையா நன்மைகளை மக்களுக்கு நல்கும் ஒரு சிறந்த அமைப்பாகும். அது எவ்வாறு என்று காண்போம். முதலில், 'கூட்டுறவு என்றால் என்ன?'

இந்த வினாவுக்கு விளக்கமான விடை அளிப்பது எளிதான காரியமாக இருக்கலாம். ஆனால், இச் சிறிய சொல்லுக்குச் சரியான இலக்கணத்தைத் தருவது மிகவும் சிக்கலாக உள்ளது. அதை ஓர் எல்லைக்கோட்டிற்குள் கொண்டுவந்து நிறுத்து வதோ, அதன் எல்லைகளையும் வரம்புகளையும் வரையறுப்பதோ எளிதான காரியமன்று. கூட்டுறவைப்பற்றி உரைஆசிரியர்கள் கூறியுள்ள பல இலக்கணங்களைக் கொண்டே நாம் 'கூட்டுறவு என்றால் என்ன?' என்ற வினாவுக்கு விடை காண்கின்றோம்.

'கால்வெர்ட்' (Calvert) என்னும் ஆசிரியர், 'மனிதர்கள் மனிதர்களாகவே தாமாகவே ஒன்றுகூடி ஓர் அமைப்பைச் சமத்துவத்தின் அடிப்படையில் அமைத்து, தங்களது பொரு ளாதார உயர்விற்கு உழைப்பதே கூட்டுறவு எனப்படும்' என்று அழகாக விளக்குகிறார் (A form of organisation wherein the persons voluntarily associate together as human beings on a basis of equality, for the promotion of economic interests of themselves).

அயர்லாந்தின் கூட்டுறவு இயக்கத்திற்கே மூலகாரணமாக விளங்கிய 'சர் ஹொரேஸ் ப்ளங்கட்' (Sir Horace Plunkett) என்னும் கூட்டுறவாளர், கூட்டுறவைச் 'சீரிய பண்ணைமுறை, மேம்பாடுடைய வணிகம், வளமான வாழ்வு' என்று மூன்று நீதி மொழிகளைக் கொண்டு விளக்குகிறார்.

'ஹெரிக்' (M. T. Herrick) என்னும் ஆசிரியர், 'ஒவ்வொரு வரும் தமக்காகவும் பிறருக்காகவும் தம்முடைய நிருவாகத்தின் கீழ், தமது திறன் அல்லது முதல் அல்லது இவ் விரண்டையும், தமது பொதுவான இலாப நட்டத்திற்குப் பயன்படுத்தத் தாமாகவே சேரும் நபர்களின் செயலே கூட்டுறவு' என்று மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார் ('Co-operation is the act of persons voluntarily united for utilizing reciprocally their own forces, resources or both under their mutual management to their common profit or loss').

1946ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட 'கூட்டுறவுத் திட்டக்குழு' (Co-op. Planning Commission) கூட்டுறவிற்கு ஒரு முழுமையான

இலக்கணத்தைக் காண முயன்றிருக்கிறது. 'மனிதர்கள் தத்தம் விருப்பப்படி ஒன்றுகூடிச் சமத்துவ அடிப்படையில் ஓர் அமைப்பை உருவாக்கித் தத்தமது பொருளாதார முன்னேற்றத் திற்குப் பாடுபடுவதே கூட்டுறவு எனப்படும்' என்று கால்வெர்ட் வரையறையை ஒட்டிக் கூறப்பட்டிருக்கும் இக் குழுவின் இலக்கணமும் சிறந்து காண்கின்றது.

இந்தியாவின் தலைசிறந்த கூட்டுறவாளர் மேத்தா அவர்கள் (V. L. Mehta), 'மிகப்பெரியதோர் இயக்கத்தின் ஒரு பகுதியான கூட்டுறவு தன்னிச்சையாக இயங்கும் அமைப்புகளை மேம்பாடு அடையச்செய்து அதன்மூலம் பொதுத் தேவைகளை ஒருங் கிணைத்துப் பொதுவான பொருளாதார இலக்கினை எய்துவதற்கு உறுதுணையாக இருக்கின்றது' என்று நயம்பட எடுத்துக் காட்டுகின்ருர் ('Co-operation is only one aspect of vast movement which promotes voluntary associations having common needs who combine together for the achievement of common economic ends').

இவ் விலக்கணங்களை நாம் கூர்ந்துநோக்குவோமானல், கூட்டுறவு என்பது மனிதர்கள் வேற்றுமையின்றி ஒன்றுகூடி எல்லாருடைய நல்வாழ்வுக்காகவும், பொருளாதார உயர்வுக் காகவும் உழைப்பதேயாகும். ஒருமரம் தோப்பாக மாறுவதில்லை. தனி மனிதன் நாட்டிற்கே நன்மைபயக்கும் காரியங்களைச் செய்வதும் இயலாத காரியமாகும். எனவே, எல்லாரும் ஒன்றுகூடி உழைப்பையும், தங்கள் செல்வத்தையும் பயன்படுத்தி ளுல்தான் சிறப்பான எதிர்காலம் அமையும். தனிமனிதன் வாழ்வும் செம்மையுறும். இதன் தத்துவத்தை விளக்குவதே கூட்டுறவு என்னும் சொல்.

இலாப நோக்கையே குறிக்கோளாகக் கொண்டு இயங்கும் தொழில்கள், வாணிகம் முதலானவற்ருல் மிகவும் பாதிக்கப்படு பவர்கள் துய்ப்போரேயாவர். சில முக்கியப் பண்டங்களுக்குத் 'தேவை நெகிழ்ச்சி' (elasticity of demand) குறைவாக இருப்ப தால், அப் பொருள்களின் விலை பெரும்பாலும் விற்பனையாளர் களால்தாம் நிர்ணயம் செய்யப்படுகின்றது. இதன் விளைவாக நுகர்வோர் அதிகவிலை கொடுத்தே அப் பொருள்களைப் பெற வேண்டியுள்ளது. 'கள்ளச் சந்தை'யும் கணிசமாக வளர வாய்ப்பேற்படுகின்றது. இத் தொல்லையை அகற்றும் பொருட்டு நுகர்வோர் ஒரு மனதாக ஒன்றுகூடி விலையேற்றத்தை எதிர்ப்பதற்கும், தவிர்ப்பதற்கும் கூட்டுறவு அமைப்புப் பெரிதும்

உதவுகிறது. இவ்வகைக் கூட்டுறவு நிறுவனங்கள் கடந்த சில ஆண்டுகளாகப் பெருமளவில் வளர்ந்து வருகின்றன. இத்தகைய வளர்ச்சி மக்களிடையே மலர்ந்துவரும் கூட்டுறவு மனப்பான்மைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

ராக்டேல் முன்னேடிகள்
(Rochdale Pioneers)

1844ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின் காரணமாகப் பாதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கோரில் 28 நெசவாளர்கள் ராக்டேல் என்ற இடத்தில் ஒன்றுகூடி ஒரு கூட்டுறவுப் பண்டகசாலையைத் தொடங்கியதாக அறிகிறோம். £28 மூலதனத்தில் சங்கத்தைத் தொடங்கிய இந் நெசவாளர்களே ராக்டேல் முன்னேடிகளென அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் அமைத்த நுகர்வோர் பண்டகசாலையை மாதிரியாகக்கொண்டே ஏனைய நாடுகள் தத்தம் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துள்ளன.

இனிக் கூட்டுறவின் கொள்கைகளைக் காண்போம். இக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டே அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களும் இயங்குகின்றன. கூட்டுறவின் வெற்றி அதன் கொள்கை வெற்றியாகும்.

கூட்டுறவுத் தத்துவங்கள்
(Principles of Co-operation)

கூட்டுறவுக் கொள்கைகளை முதன்முதலில் உருவாக்கிச் செயல்படுத்தியவர்கள் ராக்டேல் முன்னேடிகளே யாவர். 1937ஆம் ஆண்டு 'சர்வதேசக் கூட்டுறவு ஒப்பந்த அமைப்பினுல்' உருவாக்கப்பட்ட குழு, ராக்டேல் பண்டகசாலையின் கொள்கைகளைக் கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்தியுள்ளது.

(i) திறந்த உறுப்பினர் நிலை (Open Membership)

(ii) மக்களாட்சி முறையில் நிர்வாகம் (Democratic control)

(iii) உறுப்பினர்களது மூலதனத்திற்கு வரையறுக்கப்பட்ட வட்டித் தொகை (Limited interest on capital)

(iv) உறுப்பினர்கள் காட்டிய ஈடுபாட்டின் அடிப்படையில் வருமான மிகுதியை வழங்குதல்

(v) அரசியல், மதம் சம்பந்தப்பட்ட கோட்பாடுகளில் நடுநிலைமை வகித்தல்

(vi) ரொக்க விற்பனையை மட்டும் (Cash sales) கைக் கொள்ளல்

(vii) கூட்டுறவுக் கல்வியை நன்கு வளர்ச்சியுறச் செய்தல்.

இக் கூட்டுறவுக் கொள்கைகள் யாவும் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கெனக் கைக்கொள்ளப்பட்டவை யாகும். கூட்டுறவு இயக்கத்தில் எண்ணற்ற மாறுதல்கள் நாடுகளிடையே ஏற்படும் என்பதை நன்குணர்ந்திருந்த 'சர்வதேசக் கூட்டுறவுப் பேரவை' (International Co-op. Congress) 'சர்வதேசக் கூட்டுறவு ஒன்றிப்பை' (International Co-op. Alliance), கூட்டுறவின் அடிப்படைக் கொள்கைகளை ஒழுங்குபடுத்துமாறு வேண்டிக்கொண்டது. இதையொட்டி அமைக்கப்பட்ட ஓர் 'ஆணைக்குழு' (Commission), ராக்டேல் பண்டகசாலைக் கொள்கைகளை நன்கு ஆராய்ந்து முடிவில் கூட்டுறவுக் கொள்கைகளை எல்லாரும் பாராட்டத்தக்கவகையில் அமைத்தது. இனி, கூட்டுறவுக் கொள்கைகளை விளக்கமாக ஆராய்வோம்.

(i) **தன்னியலான, கட்டுப்பாடற்ற உறுப்பினர் நிலை**

கூட்டுறவு இயக்கம் சில நாடுகளில் மட்டுமே தன்னியலான இயக்கமாகத் தோன்றின. உதாரணமாக, டென்மார்க்கில் அமைந்த கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாகும். மக்களே கூடி உறவு கொண்டதனுல் இங்குக் கூட்டுறவு இயக்கம் தோன்றியது. 'சோவியத்து நாடு' போன்ற நாடுகளில் அரசாங்கம் மக்களைக் கூட்டி உறவுகொள்ள வைத்துக் கூட்டுறவு இயக்கத்தை உருவாக்கியது.

தனி நபர் எவரும் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பின ராகும்படி கட்டாயப்படுத்தப்படுவதில்லை. மக்களே சங்கத்தின் பெருமைகளை உணர்ந்து, அதனுல் விளையும் நன்மைகளைக் கண்டு உறுப்பினராகும்படி ஊக்குவிக்கப்படுகிருர்கள். எனவே, 'கட்டாயப் படுத்துதல்' என்ற சொல்லிற்கே கூட்டுறவு உலகில் இடமில்லை. உறுப்பினர் ஆவதற்குச் சமூகத்தில் தனிக்கௌரவம் இருக்கவேண்டு மென்பதில்லை. செல்வநிலையில் வாழ்பவனும், வறியனுக வாழ்பவனும் கூட்டுறவுச் சங்கங்களில் ஒருசேர உறுப்பினர்களாக விளங்கமுடியும். கூட்டுறவு அமைப்புகள் பணத்தின் சேர்க்கையல்லாமல் மக்கள் பலரின் சேர்க்கையாகத் திகழ்வதாகும். இவ் வமைப்பில் ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு இல்லை. எனவே, தம் நலன் கருதி உறுப்பினராகச் சேரும் எவரும் சங்கம் ஆற்றும் பணிகளை முழுவதும் பயன்

படுத்திக் கொள்ளவேண்டும். இவ்வாறு பயன்பெற விரும்பாத எவரும் கூட்டுறவு அமைப்பில் உறுப்பினராக இருப்பதற்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்.

(ii) மக்களாட்சி முறையில் நிர்வாகம்

கூட்டுறவு அமைப்புகள் யாவும் மக்களாட்சி முறையில் இயங்கும் நிறுவனங்களாகும். முறையான நிர்வாகமே எந்த நிறுவன அமைப்பின் வெற்றிக்கும் முழுமுதற்காரணம் என்பதை நாம் நன்கறிவோம். கூட்டுறவு அமைப்புகளின் முறையான நிர்வாகத்தை உறுப்பினர்களே பொறுப்பேற்று நடத்துகின்றனர். உறுப்பினர்கள் யாவரும் தகுதி வாய்ந்த நபர்களைத் தங்களுக்குள் தேர்ந்தெடுத்து ஒரு சிறப்பான நிர்வாகத்தை ஏற்படுத்து கின்றனர். பொதுவாகத் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்சள் நேரடியாகவே நிர்வாகத்தில் ஈடுபடுகின்றனர். தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதில் உறுப்பினர்களுக்குப் பெரும்பங்குள்ளது. பிற மட்டங்களில் இயங்கும் கூட்டுறவு அமைப்புகள் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி களால் நிர்வகிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அமைப்பாகப் 'பொதுமன்றம்' (General Body) திகழ்கின்றது. உறுப்பினர்கள் அனைவரும் இம் மன்றத்தில் உறுப்பினர்களாவர். ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒரு 'வாக்கு' (Vote) அளிக்கப்படுகின்றது. அன்றாட நிர்வாகத்திற்கென 'இயக்குநர் அவை'யும் (Board of Directors), மேலாண்மைக் குழுக்களும் (Managing Committee) அமைக்கப்படுகின்றன. இவற்றைப் பொதுமன்றத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களே தேர்ந்தெடுக்கின்றனர். இத்தகைய நிர்வாகக் கொள்கை தொடக்கத்திலிருந்தே பின்பற்றப்பட்டு வருகிறது.

வாணிகப் 'பங்கமைப்புகளில்' (Joint-Stock Companies) பங்குதாரர்களுக்கு அவர்கள் பெற்றிருக்கும் 'பங்கு'களின் (Share) அடிப்படையில் 'வாக்கு' வழங்கப்படுகின்றது. கூட்டுறவு அமைப்பு களில், எத்தனை பங்குகள் வைத்திருந்தாலும் ஒருவருக்கு ஒரு வாக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. இக் கொள்கை, சில சமயங் களில் துணைச்சங்கங்கள் அமைக்கப்படும்போது பின்பற்றப் படுவதில்லை. உறுப்பினர்கள் சங்கங்கள்பால் கொண் டிருக்கும் ஈடுபாட்டை ஊக்குவிக்கும்பொருட்டு அவர்கள் செய்யும் கொள்முதல் அடிப்படையில் 'வாக்கு' வழங்கப்படுகிறது.

(iii) **பங்கு மூலதனத்திற்குக் குறிப்பிட்ட வட்டித்தொகையும், உறுப்பினர்களுக்குப் பங்கு ஆதாயமும்**

இவ் விரு கொள்கைகளும் கூட்டுறவு அமைப்புகளின் முதுகெலும்பைப் போன்றவையாகும். கூட்டுறவுச் சங்கங்களை வாணிகப் பங்கமைப்புகளின்று தெளிவாகப் பிரித்துக் காட்டுபவை இக் கொள்கைகளேயாகும்.

பங்குதாரர்களுக்கு அதிக இலாபத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே 'பங்கமைப்புகள்' உருவாக்கப்படுகின்றன. ஆனால், உறுப்பினர்களின் வாழ்க்கைநிலையைக் கூட்டு உழைப்பின்மூலம் உயர்த்தும் எண்ணத்துடன் உருவாக்கப்படுபவையே கூட்டுறவுச் சங்கங்களாகும். உதாரணமாகக் கூட்டுறவுப் பண்டகசாலையின் முக்கியக் குறிக்கோள் மக்களுக்குத் தேவையான முக்கியப் பொருள்களைத் தரம் குறையாமல் நியாயவிலைக்கு விற்பதேயாகும். இந்தக் கூட்டுறவுப் பண்டகசாலையில் இலாப நோக்கம் பெருமளவில் ஆட்சி செய்வதில்லை.

'இலாப நோக்கம்' இல்லையே தவிர, முறையான நிர்வாகத்தினால் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு கணிசமான தொகையை இலாபமாகப் பெற்றே வருகின்றன. இது சலியா உழைப்பினால், முறையான நிர்வாகத்தினால், உயர்ந்த கோட்பாடுகளால் உருவாகும் ஊதியத் தொகையாகும்.

உறுப்பினர்களின் பங்கு மூலதனத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகையே வட்டியாக வழங்கப்படுகின்றது. ஆண்டு முடிவில் ஏற்படும் 'வருமான மிகுதி' (Surplus) உறுப்பினர்களுக்கு அவர்கள் காட்டிய ஈடுபாட்டை அடிப்படையாகக் கொண்டு இலாப ஈவுத் தொகையாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இத்தகைய உயர்ந்த குறிக்கோள்களை இவை பின்பற்றுவதால், மனிதர்களிடையே மனிதாபிமானத்தைத் தோற்றுவிக்க வாய்ப்புகள் ஏற்படுகின்றன. இலாபம் கருதி நடத்தப்பெறுவதில்லை யாதலால் இலாப வேட்டை இதில் ஏற்படுவதில்லை. இலாபத் தொகையில் ஒரு சிறிய பகுதியே உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

(iv) **கல்வி வளர்ச்சி**

'கூட்டுறவுக் கல்வியை உறுப்பினர்களுக்கும், ஊழியர்களுக்கும் நன்கு போதிப்பதன் மூலம்தான் கூட்டுறவு இயக்கத்தை வளர்க்க முடியும்' என்ற முக்கியக் கொள்கையையும் கூட்டுறவுச் சங்கங்கள் பெற்றுள்ளன. பொதுமக்களுக்குக் கூட்டுறவுக்

கொள்கைகளை நன்கு புரியவைப்பதும் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தலையாய கடமையாகக் கருதப்படுகின்றது. எனவே, இலாபத்தில் ஒரு கணிசமான தொகை கூட்டுறவுக் கல்வி வளர்ச்சிக்கெனச் செலவிடப்படுகிறது. கூட்டுறவுச் சங்கம் ஒரு தன்னியலான அமைப்பாகும். கட்டாயத்தின் பேரில் எவரையும் உறுப்பினராக மாற்றுதல் என்பது இயலாத காரியமாகும். எனவே, தனி நபர்கள் கூட்டுறவு அமைப்புகளின் நன்மைகளை நன்குணர்ந்தால்தான் உறுப்பினர்களாகச் சங்கத்தில் அங்கம் வகிப்பர். கூட்டுறவுச் சங்கத்தின் நன்மைகளை மக்கள் உணர வேண்டுமெனில், கூட்டுறவுக் கொள்கைகளை அவர்கள் அறிந்திருத்தலவசியம். இப் பணியைத்தான் கூட்டுறவுச் சங்கங்கள் செய்து வருகின்றன. கூட்டுறவுக் கொள்கைகளுக்கு முறையான விளம்பரம் தேவை. மேலும், சங்க நடவடிக்கைகளை உறுப்பினர்கள் நன்குணர்ந்திருப்பதும் அவசியமாகும்.

உறுப்பினர்களை ஊக்குவிப்பதற்கும், ஊழியர்களை முறையான நிர்வாகத்தில் ஈடுபடுத்தவும், உறுப்பினரல்லாதாரை உறுப்பினர்களாக மாற்றவும் கூட்டுறவுக் கல்வி உதவிபுரிகிறது. இப் பணியைச் செவ்வனே செய்வதற்காகவே இலாபத்தில் ஒரு பங்கு கூட்டுறவுக் கல்வி வளர்ச்சிக்கெனப் பயன்படுத்தப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் கொள்கைகள், கூட்டுறவுச் சங்கங்களினால் பயனடைந்தோர் புள்ளி விவரங்கள், சங்கங்களின் நடவடிக்கைகள் முதலானவை நன்கு விளம்பரப்படுத்தப்படுவதால் கூட்டுறவு இயக்கம் நன்கு வளர்ச்சிபெற வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

சங்கங்களிடையே கூட்டுறவு
(Mutuality)

மக்களுக்குத் தொண்டு புரிவதற்காக அமைக்கப்பட்டவையே கூட்டுறவுச் சங்கங்கள். இப் பணியைச் செவ்வனே நிறைவேற்ற வேண்டுமெனில் கூட்டுறவுச் சங்கங்களிடையே கூட்டுறவு நிலவுதல் வேண்டும்.

நிதிவசதி குறைந்த ஏழைமக்களால் உருவாக்கப்படுபவையே இச் சங்கங்கள். தத்தம் ஏழ்மை நிலையிலிருந்து விடுபடுவதற்காகத் தத்தம் உழைப்பையும் உடைமையையும் ஒன்று சேர்த்துப் பணியாற்றுகின்றனர். உறுப்பினர் எல்லோரும் பொது நலனுக்காக உழைத்திட வேண்டும் என்பதே கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படை நோக்கமாகும்.

இத்தகைய உயரிய குறிக்கோள் கூட்டுறவு அமைப்புகளிடையேயும் இருந்திடல் வேண்டும். நிதிவசதிகளை நிரம்பப்பெற்ற கூட்டுறவு அமைப்புகளை நிதிவசதி குறைந்த கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்த்திட இயலாதாகையால், சங்கங்களிடையே 'சேர்க்கை' (Combination) முறை வலியுறுத்தப்படுகிறது. தொண்டு செய்வதில் போட்டி மனப்பான்மை வரவேற்கத்தக்கதே என்ருலும் கடும்போட்டி இருக்கலாகாதல்லவா? எனவேதான், கூட்டுறவுச் சங்கங்களும் ஒன்றுக்கொன்று உதவிபுரிந்து கொள்வதும் கூட்டுறவின் முக்கியக் கொள்கைகளில் ஒன்ருக வலியுறுத்தப்படுகின்றது.

மனிதனின் பிறப்பு முதல் இறப்புவரை தேவைப்படும் அத்தனை தேவைகளையும் சேவைகளையும் அளிக்கும்வகையில் கூட்டுறவு இயக்கம் பலப்பல துறைகளில் பரந்து வளர்ந்து வருகின்றது. எல்லாருக்காக ஒவ்வொருவரும், ஒவ்வொருவருக்காக 'எல்லாரும்' என்ற சொற்றொடர் கூட்டுறவின் அடிப்படைத் தத்துவத்தை நன்கு விளக்குகின்றது. கூட்டுறவுச் சங்கங்கள் வீண் செலவுகளையும் ஆடம்பரத்தையும் ஊக்குவிக்காமல் உறுப்பினர்களிடையே சிக்கனத்தை (Thrift) ஊக்குவிப்பதாக விளங்குகிறது.

கூட்டுறவின் கொள்கைகளை நன்குணர்ந்தோர் கூட்டுறவுச் சங்கங்களையே நாடுவர். கூட்டுறவின் தன்மைகளையும் அதனுல் விளையும் நன்மைகளையும் புரட்சிக்கவி பாரதிதாசன் அவருக்கே உரிய பாணியில் வெகு அழகாகக் கவிதை வடிவில் வடித்துக் காட்டுகின்ருர். அக் கவிதையைக் கற்ருேர் அனைவரும் காமுறுகின்றனர். இனி அக் கவிதையைக் காண்போம். அக் கவிதையின் வாயிலாகக் கூட்டுறவினுல் விளையும் நன்மைகளைக் காண்போம்.

கூடித் தொழில் செய்க

'கூடித் தொழில்செய்தோர் கொள்ளைலாபம் பெற்ருர்
வாடிடும் பேதத்தால் வாய்ப்பதுண்டோ தோழர்களே!

நாடிய ஓர்தொழிலில் நாட்டார் பலர்சேர்ந்தால்
கேடில்லை நன்மை கிடைக்குமன்ருே தோழர்களே!

சிறுமுதலால் லாபம் சிறிதாகும்; ஆயிரம்பேர்
உறுமுதலால் லாபம் உயருமன்ருே தோழர்களே!

அறுபதுபேர் ஆக்கும் அதனை ஒருவன்
பெறுவதுதான் சாத்தியமோ பேசிடுவீர் தோழர்களே!

பற்பலபேர் சேர்க்கை பலம்சேர்க்கும்; செய்தொழிலில்
முற்போக்கும் உண்டாகும் முன்னிடுவீர் தோழர்களே!

ஒற்றைக்கை தட்டினுல் ஓசை பெருகிடுமோ
மற்றும் பலரால் வளம்பெறுமோ தோழர்களே!

ஒருவன் அறிதொழிலை ஊரார் தொழிலாக்கிப்
பெரும்பேறடைவதுதான் வெற்றிஎன்க தோழர்களே!

இருவர் ஒருதொழிலில் இரண்டுநாள் ஒத்திருந்த
சரிதம் அரிதுநம் தாய்நாட்டில் தோழர்களே!

நாடெங்கும் வாழ்வதிற் கேடொன்று மில்லைஎனும்
பாடம் அதைஉணர்ந்தாற் பயன்பெறலாம் தோழர்களே!

பீடுற்றுர் மேற்கில் பிறநாட்டார் என்பதெலாம்
கூடித் தொழில்செய்யும் கொள்கையினுல் தோழர்களே!'

அனைத்து நாடுகளிலும் கூட்டுறவு இயக்கம் அவற்றின் சூழ்நிலைகளுக் கேற்பத் தோன்றிப் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கி வந்துள்ளது. ஒரு சில நாடுகளில் மக்களே ஒன்றுகூடிக் கூட்டுறவு இயக்கத்தைத் தொடங்கினர். பல நாடுகளில் அரசாங்கமே மக்களை ஒன்றுகூட்டிக் கூட்டுறவு இயக்கத்தைத் தொடங்கியது. நம் நாடு இரண்டாவது வகையைச் சேர்ந்ததாகும். அரசாங்கத்தின் முக்கியத் திட்டங்களில் ஒன்ருகத் திகழ்கின்றது நமது கூட்டுறவு இயக்கம்.

1904ஆம் ஆண்டு 'கூட்டுறவுச் சட்டம்' இந்தியாவில் நிறைவேற்றப்பட்டது. இந்த 66 ஆண்டுகளில் இந்தியக் கூட்டுறவு இயக்கம் பல மேடுபள்ளங்களைத் தாண்டி வந்துள்ளது. இங்கு 'மக்கள் இயக்கமாக' இது தோன்றவில்லையாதலால், அரசாங்கமே ஒவ்வொரு கட்டத்திலும் இவ் வியக்க வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வந்துள்ளது. 1904ஆம் ஆண்டுக்குப் பின்னர்த்தான் தொடக்கக் கடன் சங்கங்கள் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. விவசாயிகளுக்குப் போதிய நிதிவசதிகளைக் கூட்டுறவு இயக்கத்தின் வாயிலாக வழங்குவதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டன. கிராமக் கடன் சங்கங்களைத் தோற்றுவிப்பதற்காகப் பல ஊழியர்கள் நியமிக்கப்பட்டனர். இம் முயற்சிகளின் பயனுக, 1912ஆம் ஆண்டு இறுதியில் 8177 கூட்டுறவுக் கடன் சங்கங்கள் இயங்கிவந்தன. உறுப்பினர் எண்ணிக்கை 4 இலட்சமாகும். நடைமுறை முதல் (Working Capital) 335·7 இலட்சமாகும்.

'லாலு பாய் சாமல்தாஸ்' (Lallu Bhai Samal Das) 'கோகேல்' (G. K. Gokhle) 'இராமதாஸ் பந்துலு' (Ramadas Pantulu) 'கோபால கிருஷ்ணன்' போன்ற கூட்டுறவாளர்கள்

நம் நாட்டுக் கூட்டுறவு இயக்கம் முறையாக வளர்வதற்குப் பெருந்தொண்டாற்றினர். இவர்களது சலியா உழைப்பினால் தான் இந்திய மண்ணில் கூட்டுறவு இயக்கம் வேரூன்றத் தொடங்கியது. 1912ஆம் ஆண்டு மீண்டும் ஒரு சட்டம் நிறை வேற்றப்பட்டது.

இச் சட்டத்தின் மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்து கொள்வதற்கு வழிமுறைகள் ஏற்பட்டன. 1915ஆம் ஆண்டு 'மாக்மில்லன் குழு' இந்தியக் கூட்டுறவு இயக்கத்தை நன்கு ஆராய்ந்து தன் அறிக்கையைச் சமர்ப்பித்தது. இவ் வியக்கத்தில் காணப்பட்ட குறைபாடுகளும் அவற்றைக் களைவதற்கான வழி முறைகளும் நன்கு இவ் வறிக்கை மூலம் விளக்கப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகள் இதன்பிறகு நன்கு கண்காணிக்கப்பட்டது. இத் தருணத்தில்தான் இந்தியக் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு மேத்தா அவர்கள் (V. L Mehta) அருந்தொண்டாற்றி வந்தார். 1919ஆம் ஆண்டு 11 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட 28,000 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வந்தன. இச் சங்கங்களின் நடைமுறை முதல் 15 கோடியாகும்.

1925ஆம் ஆண்டு கூட்டுறவுச் சட்டத்தில் மேலும் பல மாறுதல்கள் செய்யப்பட்டன. மாநிலங்கள் யாவும் தங்கள் பகுதியில் ஏற்பட்டிருக்கும் கூட்டுறவு இயக்க வளர்ச்சியை அறி வதற்கெனச் 'செயற்குழுக்'களை அமைத்தன. விவசாயப் பிரச் சினைகளை ஆராய்வதற்கென்றும் செயற்குழு (Royal Commission) அமைக்கப்பட்டது. 1929ஆம் ஆண்டு 94,000 சங்கங்கள் இயங்கி வந்தன. உறுப்பினர் தொகை 37 இலட்சமாகும். நடைமுறை மூல தனம் 75 கோடியாகும்.

விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடன்வசதிகளை அளிக்கும் பொருட்டு நிலவள வங்கிகளும் அமைக்கப்படலாயின. 1929ஆம் ஆண்டு முதல் நில அடமான வங்கி (Land Mortgage Bank) சென்னையில் அமைக்கப்பட்டது. 1935ஆம் ஆண்டு மாநில அளவில் மேலும் ஒரு வங்கி பம்பாயில் தொடங்கப்பட்டது. இவ் வாண்டில்தான் இந்தியாவின் தலைமை வங்கி (Reserve Bank of India) அமைக்கப்பட்டது. விவசாயத்தை நன்கு பேணிக் காக்கும் பொருட்டு இவ் வங்கி ஒரு 'விவசாயக் கடன் பிரிவை'த் (Agricultural Credit Department) தொடங்கியது.

1939ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து பொருள்களின் விலை கணிசமாக உயரலாயிற்று. இச் சூழ்நிலையில்தான் இந்தியக்

கூட்டுறவு இயக்கம் நன்கு வளரத் தொடங்கியது. 1947ஆம் ஆண்டு 91 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட 1,39,000 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிவந்தன. நடைமுறை மூலதனம் 156 கோடியாகும்.

1956ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இயங்கிவந்த கிராமக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் எண்ணிக்கை 1,59,939 ஆகும். உறுப்பினர் எண்ணிக்கை 77·91 இலட்சமாகும். சராசரியாக ஒவ்வொரு சங்கமும் 49 உறுப்பினர்களைக் கொண்டு விளங்கியது.

1955ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் நாள் அமைக்கப் பட்ட 'ஸ்டேட் பேங்' (State Bank) இந்திய நாட்டுக் கூட்டுறவு இயக்கத்திற்குப் பேருதவிகள் புரிகின்றது. ஐந்தாண்டுத் திட் டங்கள் வாயிலாகவும் இவ்வியக்கம் நன்கு வளர்ச்சிபெறத் தொடங்கியது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 2,12,129 ஆகும். உறுப்பினர் எண்ணிக்கை 17·4 மிலியனாகும். விற்பனை யேற்பாட்டுச் சங்கங்களின் எண்ணிக்கை 3,108 ஆகும். கூட்டுறவு இயக்கத்தின்கீழ் இயங்கிவந்த சருக்கரை ஆலைகளின் எண்ணிக்கை 69 ஆகும்.

1960ஆம் ஆண்டு மே மாதம் 'மேத்தா கமிட்டி' கூட்டுறவுக் கடன் இயக்கத்தை நன்கு ஆராய்ந்து தன் அறிக்கையைச் சமர்ப் பித்தது. 1959–'60ஆம் ஆண்டு முதல் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் கூட்டுறவுப் பயிற்சி முறை மக்களிடையே நிலவத் தொடங்கியது. பல பயிற்சிக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன.

1961ஆம் ஆண்டு முதல் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் இந்திய மண்ணில் நன்கு வளர்ச்சிபெறத் தொடங்கியது. எண் ணிக்கையில் அதிகமான நுகர்வோர் பண்டகசாலைகள் அமைக் கப்பட்டன. தரமான பொருள்கள் நியாய விலையில் விற்கப் பட்டன. பண்டகசாலைகளின் எண்ணிக்கை உயர்வதற்கு வழி முறைகள் செய்யப்பட்டன.

1966ஆம் ஆண்டு 3,46,185 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வந்தன. இதில் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் எண்ணிக்கை 2,14,012 ஆகும். மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 5,18,88,845

ஆகும். அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுறை முதல் 2,800 கோடியாகும். உத்தரப்பிரதேச மாநிலத்தில்தான் கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவில் (35,188) இயங்கிவந்தன. இதே ஆண்டு, 346 கூட்டுறவு வங்கிகள் இயங்கிவந்தன. இவ் வங்கிகள் 2,58,166 உறுப்பினர் சங்கங்களைப் பெற்றிருந்தன. தனி நபர்களும் (1,03,900) உறுப்பினர்களாக விளங்கினர். மூன்றாவது திட்டத்தின் இறுதியில் இவ் வங்கிகள் 236 கோடி 'வைப்புத் தொகை'யைப் (Deposits) பெற்றிருந்தன.

1966ஆம் ஆண்டு ஜூன் மாதம் 673 தொடக்க நிலவள வங்கிகள் இயங்கி வந்தன. உறுப்பினர் எண்ணிக்கை 1·8 மிலியனாகும். நடைமுறை முதல் 137 கோடியாகும்.

மூன்றாம் திட்ட இறுதியில், 3,198 தொடக்க விற்பனை யேற்பாட்டுச் சங்கங்கள், 155 மத்திய விற்பனை யேற்பாட்டுச் சங்கங்கள், 21 மாநில விற்பனை யேற்பாட்டுச் சங்கங்கள் இயங்கி வந்தன. உறுப்பினர் நிலை மிக வலிமையாகக் காணப்பட்டது. எண்ணெய் விதைகள், நெல், தானிய வகைகள், பருத்தி முதலான விவசாயப் பொருள்கள் இச் சங்கங்கள் வாயிலாக விற்பனை செய்யப்பட்டன. 1966ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் 78 கூட்டுறவுச் சருக்கரை ஆலைகள் (Sugar Factories) இயங்கி வந்தன. இதே ஆண்டில் 12,947 கிராமக் கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் இயங்கி வந்தன. இந்நெசவாளர் சங்கங்கள் (Primary Weavers Socs.) 109 கூட்டமைப்புகளைப் (Federations) பெற்றிருந்தன. இவை மாவட்ட அளவில் அமைக்கப்பட்டிருந்தன. மாநில அளவில் 20 கூட்டமைப்புகள் இயங்கிவந்தன. இவற்றின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 13 இலட்சமாகும். நடைமுறை முதல் 34 கோடி எனப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

1967ஆம் ஆண்டு இயங்கிவந்த மொத்தக் கூட்டுறவுச் சங்கங்கள் 3·3 இலட்சமாகும். தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கை 5·3 கோடியாகும். பங்கு மூலதனம் 514 கோடியாகும். நடைமுறை முதல் 3,187 கோடியாகும். 1966ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பலவகைக் கூட்டுறவுச் சங்கங்களின் புள்ளிவிவரங்கள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளன.

சங்கங்களின் வகை	எண்ணிக்கை	உறுப்பினர் எண்ணிக்கை
விற்பனை யேற்பாட்டுச் சங்கங்கள்	3,198	22,80,467
சர்க்கரைத் தொழிற்சாலைகள்	78	2,95,265
பதப்படுத்தும் தொழிற்சாலைகள்	2,049	3,03,562
கூட்டுறவு விவசாயப் பண்ணைச் சங்கங்கள்	7,295	1,87,870
தொழிற் சங்கங்கள்	47,897	29,14,293
நுகர்வோர் சங்கங்கள்	13,077	29,29,987
மனை வழங்கு சங்கங்கள்	11,765	7,56,808

இவ்வாறு நம் தாய்த்திருநாட்டில் கூட்டுறவு இயக்கம் கணிசமாக வளர்ந்து வருகிறது. எனினும் நாம் பெறவேண்டிய வளர்ச்சியும் கணிசமாகவே உள்ளது. கூட்டுறவுக் கொள்கைகளின் மூலம் பொருளாதார வளர்ச்சியடைந்துள்ள பிற நாடுகளை நாம் பின்பற்றியே ஆகவேண்டும். இச் சூழ்நிலையில், பிற நாடுகள் எவ்வாறு கூட்டுறவு இயக்கத்தின் வாயிலாகப் பெருவளர்ச்சி அடைந்துள்ளன என்பதைக் காண்பது நமது கடமையாகும். இனி, அப் பணியைத் தொடர்வோம்.

தனிமரம் தோப்பாவதில்லை !

2. இங்கிலாந்து நாட்டில் கூட்டுறவு இயக்கம்
(Co-operative Movement in England)

முன்னுரை

இங்கிலாந்தின் கூட்டுறவு இயக்கம் உலக முழுமைக்கும் வழிகாட்டியாக விளங்குகின்றது. 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கிய 'தொழிற் புரட்சி'யே (Industrial Revolution) கூட்டுறவு இயக்கம் இங்கிலாந்தில் தொடங்கக் காரணமாக அமைந்தது. தொழிற் புரட்சி ஏற்படுவதற்கு முன்னர், ஏனைய பின்தங்கிய நாடுகளைப் போலவே இங்கிலாந்தும் விளங்கியது.

தொழிற் புரட்சிக்கு முன்னர், இங்கிலாந்து ஒரு விவசாய நாடாகவே விளங்கிற்று. பழைய முறைகளைக் கொண்டே விவசாயத் தொழில் நடத்தப்பட்டு வந்தது. விளைநிலங்கள் சிறுசிறு பகுதிகளாகச் சிதறிக்கிடந்தன. எனவே, சாதாரண விவசாயக் கருவிகள்கூடப் பயன்படுத்தப்படவில்லை. புரட்சிக்கு முன்னர் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாக இருந்தது. இயங்கிவந்த ஒரு சில தொழிற்சாலைகளில் இயந்திரங்கள் பயன்படுத்தப்படவில்லை.

தொழிற்புரட்சிக்குப் பின்னர் விவசாயத் துறையிலும், தொழில்துறையிலும் எண்ணற்ற மாற்றங்கள் ஏற்பட்டன. 1760ஆம் ஆண்டிலிருந்து இங்கிலாந்தின் பொருளாதாரநிலை உயரலாயிற்று. விவசாய நாடாக விளங்கிய இங்கிலாந்து தொழில் வளமும் பெற்று விளங்கலாயிற்று. நாள்தோறும் புதிய தொழிற்சாலைகள் தோன்றின. தொழிற்சாலைகளின் எண்ணிக்கை உயரஉயர, தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் தொழிற்சாலைகளின் அதிபர்களையே பெரிதும் நம்பி வாழவேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகியது. தொழிலாளர்கள் நீண்ட நேரம்

உழைத்தும், போதிய உழைப்பிற்கேற்ற ஊதியம் தரப்படவில்லை. வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளைப் பெறஇயலாமல் தொழிலாளர்கள் தவித்தனர். அவர்களது வாழ்க்கைநிலை மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. இத் தருணத்தில் அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்ட பயிர்ச் சட்டங்கள் (Corn Laws) உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்திற்குக் காரணமாக அமைந்தன. தரமற்ற பொருள்கள் தவறான முறையில் விற்பனைசெய்யப் பட்டன. தொழிலாளர்களின் இன்னல்கள் நாள்தோறும் பெருகின. தொழிலாளர்களுக்கும் தொழிற்சாலை அதிபர்களுக்கு மிடையே பகைமை வளரலாயிற்று. பாதிக்கப்பட்ட தொழிலா ளர்கள் வன்முறைச் செயல்களில் ஈடுபடத் தொடங்கினர்.

கிராமப் புறங்களில் வாழ்ந்துவந்த விவசாயிகளில் பெரும் பாலோர் நகரங்களுக்குச் சென்று குடியேறத் தொடங்கினர். தொழிற்சாலைகளில் பணிபுரிந்தோரின் எண்ணிக்கைதான் உயர்ந்ததே தவிர, அவர்களது வாழ்க்கைநிலை ஒருசிறிதும் உயரவில்லை. இங்கிலாந்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த 'அரசியற் கட்டுப்பாடற்ற வாணிகக் கோட்பாடும்' (Laissez Faire policy) தொழிலாளர்களின் இன்னல்களைக் கணிசமாக உயர்த்தியது.

விடிவெள்ளியின் வரவு

தொழிலாளர்களின் துயர் துடைக்க முனைந்தவர்களில் 'இராபர்ட் ஓவன்' (Robert Owen) தலைசிறந்தவராவார். தொழிலாளர்களுக்கும் அதிபர்களுக்குமிடையே நல்லுறவை உருவாக்க இவர் அரும்பாடுபட்டார்.

இராபர்ட் ஓவன் 1771ஆம் ஆண்டு நியூட்டன் (Newton) என்ற ஊரில் பிறந்தார். அவர் தொழிற்சாலைகளிலும், கடை களிலும் வேலை செய்து தம் வாழ்க்கையை நடத்திவந்தார். இவர் தொழிலாளியாகவே பணிபுரிந்தமையால், தொழிலாளர்கள் படும் பாட்டையும், இன்னல்களையும் நன்கு உணர்ந்திருந்தார். சில சிறிய நூற்பு இயந்திரங்களையும் இவர் கண்டு பிடித்துள்ளார். உழைப்பையே நம்பி வாழ்ந்திருந்த இவர், தம் திருமணத்தின் மூலம் 'கிளாஸ்கோ' நகரில் இயங்கி வந்த ஒரு நூற்பாலைக்கு (New Lenark Mills) அதிபரானார். இதன் பின்னர்த்தான் இவரது வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. தொழிலாளிகளின் துயர் துடைப்பதற்காக இவர் பல திட்டங்களைத் தீட்டலானார்.

இயற்கையிலேயே இளகிய மனம் படைத்த 'ஓவன்' தொழிலாளிகளின் துயர்களைக் களைவதிலேயே தன் கவனத்தைச் செலுத்தினர். அவர்களது வாழ்விலே மறுமலர்ச்சி ஏற்படுத்த விரும்பிய இவர் தனது எண்ணங்களைச் செயற்படுத்தவும் முனைந்தார். இவர் ஓர் ஆலை அதிபராக விளங்கியதால், தாமதமின்றித் தன் எண்ணங்களைத் தொழிலாளர் நலன் கருதிச் செயற்படுத்தத் தொடங்கினர். அவருடைய கருத்துக்கள் 'பகுத்தறிவுச் சிந்தனை'யின் (Philosophy) அடிப்படையில் அமைந்தவையாகும். இவரது கருத்துக்கள் 'சூழ்நிலைகளின் சித்தாந்தம்' (Doctrine of Circumstances) என அழைக்கப்படுகின்றன. இவரது கருத்துப்படி, பிறக்கும்போது எவனும் நல்லவனுகவோ அல்லது தீயவனுகவோ பிறப்பதில்லை. பிறந்து வளரும்போது, உருவாகும் சூழ்நிலைகளைப் பொறுத்தே அவனது குணங்கள் உருவாகின்றன சுருங்கக்கூறின், சூழ்நிலைகளே மனிதனை உருவாக்குகின்றன. இவர் 'மனிதனை'விட 'மனிதாபிமானத்தை'ப் பெரிதும் மதித்தார்.

இவரது இரண்டாவது கருத்துப்படி, ஏழைகள் வாழ்வில் உயர வசதி நிறைந்தவர்கள் வழி செய்யவேண்டும். ஏழைகள் தாங்களாகவே வாழ்க்கை நிலையை உயர்த்துவது என்பது இயலாத காரியமாகும் என்பதை நன்கு புரிந்திருந்த திரு. இராபர்ட் ஓவன், தனது புரட்சிக் கருத்துக்களைச் செயல் மூலமாகவே உலகிற்கு எடுத்துக்காட்டத் தொடங்கினர். இவர் மதங்களையும், மதவாதிகளையும் வன்மையாகக் கண்டித்து வந்தார்.

ஏழைத் தொழிலாளர்களின் வாழ்வில் 'ஒளி விளக்காகத்' திகழ்ந்த ஓவன், தனது முன்னேற்றக் கருத்துக்களைச் செயற்படுத்துவதற்குத் தன் சொந்த நூற்பாலையையே சோதனைக் கூடமாகக் கொண்டார். தனது ஆலையில் பணிபுரிந்து வந்த தொழிலாளர்களின் நிலையை உயர்த்துவதற்கெனப் பல திட்டங்களைத்தீட்டி, அவைகளை நடைமுறைக்கும் கொண்டுவந்தார். பணியாற்றுவதற்குக் குறிக்கப்பட்ட கால அளவைக் (Hours of Work) குறைத்து, தொழிலாளிகளுக்கு வழங்கப்பட்ட ஊதியத்தை அதிகரித்தார். தொழிலாளர்கள் தவறு செய்யும் போது விதிக்கப்படும் அபராதத் தொகை முறை கைவிடப்பட்டது. ஆலையில் குழந்தைகள் வேலை செய்வதை அறவே தடுத்து நிறுத்தினர். இத்தகைய சீர்திருத்தங்களைத் தனது ஆலையில் செய்துகாட்டி ஏனையோருக்கு வழிகாட்டியாக விளங்கினர். இத்தகைய நடவடிக்கைகளால், உற்பத்தித் திறன் கனிசமாக இவரது ஆலைகளில் உயர்ந்தது. ஆலைகளின் செலவீனம்

அதிகரித்தாலும், பெருமளவு உற்பத்திப் பெருக்கத்தினுல் நிலைமை எளிதாகச் சரி செய்யப்பட்டது. இலாபத் தொகையும் கணிசமாக உயரலாயிற்று. தனது ஆலைகளில் செய்வித்த மாற்றங்களையும், அதனுல் ஏற்பட்ட நல் விளைவுகளையும் பிற அதிபர்களுக்குத் தெளிவாக எடுத்துக்காட்டி அவர்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்தப் பெரிதும் விழைந்தார். அரசாங்கத்தையும் அணுகி, தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் வகையில் சட்டங்களை இயற்றத் தூண்டுகோலாக விளங்கினுர். இத்தகைய சீரிய முயற்சிகள், மேற்கொண்ட ஓவன் முடிவில் தோல்வியையும் ஏமாற்றத்தையுமே கண்டார். எனினும், 'தோல்வியே வெற்றியின் முதல்படி' என்ற வாக்கை நன்குணர்ந்திருந்த ஓவன், மனந் தளராமல் தொழிலாளர்களின் வசதிகளைப் பெருக்க, வாழ்க்கை நிலையை உயர்த்த வேறுபல திட்டங்களைத் தீட்டத் தொடங்கினுர். இவரது உழைப்பின் பலனுக உருவானவையே தொழிலாளர் தனிக்குடியிருப்புகள்.

தொழிலாளர் தனிக் குடியிருப்புகள் (Labour Colonies)

தொழிற் புரட்சியைத் தொடர்ந்து நாடு தொழில் வளம் பெற்றுலும், தொழிலாளர்கள் தங்களது வளமான வாழ்க்கையை இழந்தனர். ஊதியத்தைவிட இவர்கள் அடைந்த இன்னல்கள் மிகுதியாகக் காணப்பட்டன. அரசாங்கமும் இவர்களது நலனில் அக்கறை ஏதும் காட்டவில்லை. இச்சூழ்நிலையில் தான், இராபர்ட் ஓவன் தொழிலாள வர்க்கத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பெரும் பொறுப்பைத் தன் தோள்களில் ஏற்ருர். தொழிலாளர்களைக் கொண்ட ஒரு தனிச் சமுதாயத்தையே உருவாக்கப் பெரு முயற்சி எடுத்துக்கொண்டார். மக்கள் ஒன்றுகூடி எல்லோர் நன்மைக்காகவும் அமைக்கும் ஒரு கூட்டுறவு அமைப்பின் பேரில் இவர் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்திருந்தார். இவரது திட்டத்தின்படி (Scheme) உருவானவையே தொழிலாளர் தனிக் குடியிருப்புகளாகும். தொழிலாளிகள் தங்கள் முதலாளிகளைப் பெரிதும் நம்புவதைவிட, அவர்களால் உருவாக்கப்பட்ட சங்கங்களை நம்புவதே சாலச் சிறந்ததாகும் என்று இவர் எண்ணினுர். இக்குடியிருப்புகளில், தொழிலாளர்கள் தாங்களாகவே ஒன்றுகூடிச் சமத்துவ அடிப்படையில் ஒரு பொதுச் சங்கத்தை அமைத்துப் பொதுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வழிமுறைகள் உண்டு. இக்குடியிருப்புகளில் ஏற்றத் தாழ்வு என்ற சொல்லுக்கே இடமில்லையாதலால், உறுப்பினர்களிடையே போட்டி மனப்பான்மை, இலாபவேட்டை

முதலானவை அறவே அற்றுப்போகின்றன. தொழிலாளர்களுக்கு உழைப்பிற்கேற்ற ஊதியம் வழங்கப்படும். இக் கூட்டுறவுக் குடியிருப்பில், கூட்டு உழைப்பின் பலனை எல்லோரும் எல்லாமும் பெற்று வாழ வழி செய்யப்படும். இராபர்ட் ஓவனின் கண்டு பிடிப்பான இக்குடியிருப்பில் 'இடை நிலையர்கள்' (Middlemen) அறவே அகற்றப்படுகின்றனர். இத்தகைய குடியிருப்புகளுக்கு அரசாங்கம் தகுந்த பாதுகாப்பும், தேவையான ஆதரவும் அளித்தால், அவை வெற்றி பெறுதல் திண்ணம் என்று ஓவன் திடமாக நம்பினர். இக்கூட்டுறவுக் குடியிருப்புகள் இங்கிலாந்தை மட்டுமின்றி உலக நாடுகள் அனைத்தையும் பொருளாதார ரீதியில் மாற்றியமைக்க வல்லவை என்று அவர் சுட்டிக்காட்டினர். அதாவது, இக்குடியிருப்புகள் ஒரு புதிய உலகையே உருவாக்க வல்லவை என்று கருதினர். வளமான கருத்துக்களைக் கொண்ட இவர், பிரித்தானிய (Britain) அரசாங்கத்தை அணுகி இத்தகைய குடியிருப்புகளை அமைக்க வேண்டுகோள் விடுத்தார். தொழிலாளர்கள் தாங்களே நடத்தும் தொழிற்கூடங்களுக்கு எளிதில் சென்று பணிபுரியத்தக்க வகையில் இக்குடியிருப்புகளை அவற்றருகே அமைக்க விரும்பினர். ஆனல், இராபர்ட் ஓவன் தனது முயற்சிகளில் வெற்றி பெற இயலவில்லை. அரசின் ஆதரவையும் பெற இயலாமலும், மக்கள் ஆதரவைப் பெற இயலாமலும் ஓவன் தன் எண்ணங்களுக்கு உருக்கொடுக்க முடியாமல் தவித்தார். இவரது புரட்சிக் கருத்துக்களை கண்ட செல்வந்தர்களும், செல்வாக்கு நிறைந்தவர்களும் இவரது திட்டத்தை அடியோடு வெறுத்தொதுக்கினர். மதவாதிகளையும் இவர் சாடிவந்தமையால், அவர்களது எதிர்ப்பும் எழலாயிற்று. எனவே, இவரது தொழிலாளர் குடியிருப்புத்திட்டம் ஏட்டளவிலேயே நின்றது. எழுந்த இடர்ப்பாடுகளைக் கண்டு மனம் தளராமல், இராபர்ட் ஓவன் அமெரிக்க நாட்டிற்குச் சென்று, அந்நாட்டுத் தலைவரைச் சந்தித்துப் பேசினர். இதன் பயனுக, 'இண்டியானுவில் (Indiana) உள்ள 'நியூ ஹார்மனி' (New Harmony) என்ற பகுதியை வாங்கினர். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த திரு. இராபர்ட் ஓவன் அமெரிக்காவைச் சேர்ந்த நியூ ஹார்மனியில் தான் முதல் 'தொழிலாளர் தனிக்குடியிருப்பைத்' (Labour Colony) தொடங்கினர்.

இக்குடியிருப்புப் பகுதி 40,000 ஏக்கர் நிலத்தைக் கொண்டு விளங்கியது. இக்குடியிருப்பு தானிய உற்பத்தி நிறைவுப் பகுதிகளையும் (Granaries), பல சிறு தொழிற்சாலைகளையும், ஓர் அழகிய மாதாகோயிலையும் கொண்டு விளங்கியது. தொடக்கத்தில் 700 உறுப்பினர்களையே கொண்டிருந்த இக் குடியிருப்பு, வெகு

விரைவில் 900 என உயர்ந்தது. கூட்டுப் பொறுப்பும், கூட்டு உழைப்பும் இக்குடியிருப்பில் தாரக மந்திரங்களாக விளங்கின. மக்களும் இக்குடியிருப்பில் ஆர்வத்துடன் சேர்ந்தனர். எனினும், இத் தொழிலாளர் தனிக் குடியிருப்பு நெடுநாள் நீடிக்க முடியவில்லை. இதற்குக் காரணம் உறுப்பினர்கள் கல்வியறிவு அற்றவர்களாகவும், சுய நலம் நிறைந்தவர்களாகவும், திறமை குறைந்தவர்களாகவும் விளங்கியதுதான் இராபர்ட் ஓவன், இக் குடியிருப்பு கலைக்கப்பட்டவுடன், மீண்டும் தன் தாயகமான இங்கிலாந்திற்குத் திரும்பினர். இவர் சென்றவுடன், குடியிருப்பில் எஞ்சியிருந்தவர்களும் கலைந்தனர். ஓவனின் முதல் முயற்சி இவ்வாறு தோல்வியில் முடிந்தது.

இராபர்ட் ஓவன் அமெரிக்காவில் இத் தொழிலாளர் குடியிருப்பை அமைப்பதற்கு முயன்று கொண்டிருந்த போது, இவரது சீடர்களான 'கோம்பெ' (Combe), 'ஹேமில்டன்' (Hamilton) போன்ருேர் இங்கிலாந்தில் இத்தகைய அமைப்புகளை உருவாக்கப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருந்தனர். 1826-ஆம் ஆண்டு, 'ஓர்பிஸ்டன்' (Orbiston) என்ற ஊரில் ஒரு குடியிருப்புத் தொடங்கப்பட்டது. தொடங்கிய சில காலத்திற்கு இக் குடியிருப்பு வெற்றிகரமாக நடைபெற்ருலும், 1827-ஆம் ஆண்டு திரு. கோம்பெ இயற்கை எய்தியதிஞல் இக் குடியிருப்பு கலைக்கப்பட்டது. இக்குடியிருப்பைத் தொடர்ந்து, 'க்வீன்ஸ்வுட்' (Queenswood) என்ற மற்ருெரு தொழிலாளர் குடியிருப்பும் ஓவன் தலைமையில் தொடங்கப்பட்டது. நிதிப்பற்ருக் குறையாலும், உறுப்பினர்களின் திறனற்ற உழைப்பினுலும் இக்குடியிருப்பும் தோல்வி கண்டது. தோல்விகளைக் கண்டு மனந்தளராத ஓவன், தொழிலாளர்களின் துயர் துடைக்க வேறுவழிகளைச் சிந்திக்கலானுர். தீவிர சிந்தனையின் பயனுக எழுந்தவையே, 'தேசீய உழைப்பு பரிமாற்ற நியாய அமைப்புகள்' (National Equitable Labour Exchanges) ஆகும்.

தேசீய உழைப்பு பரிமாற்ற நியாய அமைப்புகள்

தொழிலாளர் தனிக் குடியிருப்புகளை அமைத்து வெற்றி காண இயலாத இராபர்ட் ஓவன் 1832-ஆம் ஆண்டு இத்தகைய அமைப்புகளை அமைக்கத் தொடங்கினுர். இவ்வமைப்புகளில் தொழிலாளர்களின் உழைப்புக்கு ஈடாக அவர்களுக்குத் தேவையான பொருள்கள் தரப்பட்டன. உறுப்பினர்கள் அன்ருட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்து, சங்கத்திடம் ஒப்படைத்து விடுவார்கள். அவர்களது உற்பத்திப்

பொருள்களின் அடிப்படையில் அவர்களுக்கு 'உழைப்புக் குறிப்புச் சீட்டு' (Labour Notes) வழங்கப்பட்டது. இக் குறிப்புச் சீட்டைக் கொண்டு, அவர்களுக்குத் தேவையான பிற பொருள்கள் அலுவலகத்தின் மூலம் பெறப்பட்டன. இச் சேவைக்கு ஒரு சிறிய தொகை கட்டணமாக வசூலிக்கப்பட்டது. நாளடைவில், இவ்வமைப்புகளும் தோல்வியடைந்தன. உயர்ந்த கருத்துக்களையும் கொள்கைகளையும் இவர் கொண்டிருந்தாலும், செயலாக்கம் மிகுதியாக காணப் பெறவில்லை. தொழிலாளர்களின் இன்னல்கள் குறையவுமில்லை, இவரது கொள்கைகளில் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்த 'டாக்டர் கிங்' (Dr. King), இங்கிலாந்தில் கூட்டுறவு இயக்கம் ஏற்படுவதற்கு அரும்பாடுபட்டார். 'கூட்டுறவு' என்ற பத்திரிகையின் மூலம் கூட்டுறவுக் கொள்கைகளை மக்களிடையே நன்கு பரப்பி வந்தார்.

'ராக்டேல் முன்னோடிகள்' (Rochdale Pioneers)

இங்கிலாந்தில் இங்குமங்குமாகப் பல கூட்டுறவு அமைப்புகள் தொடங்கப்பட்டும், தொழிலாளர்களின் வாழ்வில் வரவேற்கத் தக்க மாற்றம் ஏற்படவே இல்லை. பாதிக்கப்பட்ட மக்கள் வன்முறைகளிலும், வேலை நிறுத்தம் போன்ற செயல்களிலும் ஈடுபடலாயினர். எனினும் அவர்களது குறைகள் அவர்களுடன் ஒட்டியே வாழ்ந்தன.

இந் நிலையில், 1843-ஆம் ஆண்டு, 28 நெசவாளர்கள் ஒரு மன்றத்தில் (Chartist Hall) ஒன்று கூடி, தொழிலாளர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முனைந்தனர். அவர்களுள் ஒருவரான திரு. சார்லஸ் ஹவ்ரத் (Mr. Charles Howrath), தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்தப் போராடுவதைவிட அவர்களது செலவைக் கூட்டுறவு முறையில் பொருள்களைக் கொள்முதல் செய்வதன் மூலம் கணிசமாகக் குறைக்கலாம் என்று நயம்பட விளக்கினார். அமைக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புகளின் தோல்விக்கான காரணங்கள் நன்கு ஆராயப்பட்டன. இக்குறைகளைக் களைவதற்கான வழிமுறைகளும் ஆராயப்பட்டன. கீழ்க் காண்பனவே தோல்விக்கான காரணங்கள் என்று புலனாயிற்று.

1. கடன்பேரிலும் பொருள்கள் விற்கப்பட்டமையால், இழப்பு அதிக அளவில் ஏற்பட்டது. 'வராக் கடன்கள்' (Bad Debts) அதிகரித்தன.

2. பொருள்களின் அங்காடி விலையைவிடத் தொழிலாளர் குடியிருப்பில் நிர்ணயிக்கப்பட்ட விலை மிகவும் குறைவாக இருந்தமையால் தனிப்பட்ட வணிகர்களுடன் கடும் போட்டி ஏற்பட்டது.

3. உறுப்பினர்கள் உண்மையுடன் உழைக்கவில்லை. சுய நலமே பெரிதும் நிலவியது.

இக் குறைகளை அறவே அகற்றி, ஒரு கூட்டுறவுப் பண்டக சாலையை அமைக்க இந் நெசவாளர்கள் தீர்மானித்தனர். இந் நெசவாளர்கள் ஒவ்வொருவரும் ஒரு பவுனைச் (£ 1) சேமித்து 1844-ஆம் ஆண்டு ராக்டேல் என்ற இடத்தில் ஒரு 'கூட்டுறவுப் பண்டகசாலையைத் (The Rochdale Equitable Pioneers' Soc.) தொடங்கினர். இப் பண்டகசாலை இங்கிலாந்து நட்பினர் சங்கச் சட்டத்தின் (Friendly Socs. Act) கீழ்ப் பதிவு செய்யப்பட்டது. £ 28 மூலதனத்துடன் சங்கத்தைத் தொடங்கிய இந் நெசவாளர்கள் 'ராக்டேல் முன்னோடிகள்' என அழைக்கப்படுகின்றனர். 'டோட் லேன்' (Toad Lane) இடத்தில் ஒரு கடையை வாடகைக்குப் பெற்றுப் பண்டகசாலையை அமைத்தனர். ஆண்டு வாடகை £ 10 என ஒப்புக்கொள்ளப்பட்டது. தங்களிடம் இருந்த குறைந்த வசதிகளைக் கொண்டு மாவுப்பொருள்கள், வெண்ணெய், சோப்பு, மெழுகுவர்த்தி, காப்பி போன்ற பொருள்களைக் கொள்முதல் செய்து பண்டகசாலையைத் தொடங்கினர்.

உறுப்பினர்களின் உண்மைச் செயல் திறன்களினாலும், சலியா உழைப்பினாலும் இப் பண்டகசாலை பெருவளர்ச்சியைப் பெறத் தொடங்கியது. தொடங்கப்பட்ட முதல் ஆண்டிலேயே, உறுப்பினர் எண்ணிக்கை 74-ஆக உயர்ந்தது. 1851-ஆம் ஆண்டின் இறுதியில், இப் பண்டகசாலையின் நிர்வாகத்தைக் கவனிப்பதற்கென ஒரு 'நிர்வாகி' நியமிக்கப்பட்டார். சிறந்த வணிக முறைகளினால் நிதிநிலையும் உயரத் தொடங்கியது. பண்டகசாலையின் மொத்த விற்பனை கணிசமாகப் பெருகியது 1852-ஆம் ஆண்டு, இப் பண்டகசாலை காலணி தயாரிப்பதற்கும், ஆடைகள் தயாரிப்பதற்கும் இரு பிரிவுகளைத் தொடங்கியது, 1888-ஆம் ஆண்டு, இப் பண்டகசாலை 1123 உறுப்பினர்களைக் கொண்டு பணியாற்றி வந்தது. மூலதன மதிப்பு £ 3.4 இலட்சமாகும் உறுப்பினர்களுக்குக் கூட்டுறவு முறையில் தகுந்த பயிற்சி அளிப்பதற்கென்று ஒரு பள்ளியையும் இப் பண்டகசாலை தொடங்கியது. 1700 புத்தகங்களைக் கொண்ட ஒரு நூல் நிலையத்தையும் அமைத்துக் கூட்டுறவுக் கல்வியை நன்கு பரப்பத் தொடங்கியது

இப் பண்டகசாலை. இப் பண்டகசாலை சுமார் 100 கிளை அமைப்புகளையும் பெற்றுள்ளது. இவ்வமைப்புகளின் உறுப்பினர் எண்ணிக்கை சுமார் 40,000 எனக்கணக்கிடப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் கணிசமான தொகை (Quarter Million Pounds) 'இலாப ஈவாக' (Dividend) உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது. நிமிடத்திற்கு 1200 ரொட்டித் துண்டுகளைத் தயாரிக்க வல்ல ஒரு ரொட்டித் தொழிற்சாலையையும் இப்பண்டகசாலை பெற்றுள்ளது. இதன் மொத்த விற்பனை ஒரு மிலியனாகும்.

பண்டகசாலையின் நோக்கங்கள் (Objects)

உறுப்பினர்களுக்குத் தேவையான முக்கியப் பொருள்களை விற்பனை செய்வதை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளவில்லை இப் பண்டகசாலை. மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு இப் பண்டக சாலை பல்வேறு நோக்கங்களைக் கொண்டு விளங்குகிறது அவையாவன :

1. தன்னிறைவு பெற்ற குடியிருப்புகளை அமைத்தல் ;
2. உறுப்பினர்களின் வாழ்க்கை நிலையைப் பெருக்க, அவர்களுக்கு தகுந்த இல்லங்களை வழங்குதல் ;
3. உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்புகளை அதிகரித்தல் ;
4. வேலையற்ற உறுப்பினர்களுக்குப் பயிரிடத்தக்க வகையில் நிலம் வழங்குதல் ;
5. உறுப்பினர்களின் நலன் கருதி உண்டிச் சாலைகளை அமைத்தல்.

ராக்டேல் பண்டகசாலைத்திட்டம் நீண்டகாலத் திட்டம், குறுகிய காலத்திட்டம் என இரு பிரிவுகளைக் கொண்டதாகும். குறுகிய காலத்தின் சிறப்பியல்புகளாவன.

1. எவரும் உறுப்பினராகக்கூடிய நிலை (Open Membership) ;
2. மக்களாட்சி முறையில் நிர்வாகம் ;
3. உறுப்பினர்களின் கொள்முதல் அடிப்படையில் இலாப ஈவுத்தொகை வழங்குதல் ;
4. பங்கு மூலதனத்திற்கு வரையறுக்கப்பட்ட வட்டித் தொகை வழங்குதல் ;

5. அங்காடிகளில் விற்கப்படும் விலையையே நிர்ணயித்தல்;
6. ரொக்க விற்பனை முறை (பொருள்களைக் கடனுக்கு விற்பனை செய்யாமை);
7. கலப்படமற்ற தரமான பொருள்களை விற்பனை செய்தல்;
8. இலாபத்தின் ஒரு பகுதியைக் கல்விக்கென ஒதுக்குதல்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள கொள்கைகளைக் கொண்ட சுற்றறிக்கைகளை உறுப்பினர்களுக்கு இப்பண்டகசாலை விநியோகம் செய்கின்றது. எனவே, உறுப்பினர் ஒவ்வொருவரும் பண்டகசாலை தன்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கின்றது என்பதை நன்கு புரிந்து கொண்டு அதன்படி பணியாற்றுகின்றனர். உறுப்பினர்களது கடமைகளை இப்பண்டகசாலை அவ்வப்போது நயம்பட எடுத்துக்காட்டத் தயங்குவதில்லை உறுப்பினர்களும் பண்டகசாலை நலனுக்கும் குந்தகம் விளைவிக்காமல் உண்மையுடன் நடந்து கொள்கின்றனர்.

இத்துறையில் ராக்டேல் பண்டகசாலை சிறப்புற விளங்கினாலும், இதற்கு முன்பே பல கூட்டுறவுப் பண்டகசாலைகள் இயங்கி வந்தன: 1760-ஆம் ஆண்டு துறைமுகத் தொழிலாளர்களால் ஒரு பண்டகசாலை தொடங்கப்பட்டது. இதையொட்டி வேறு சில கூட்டுறவுப் பண்டகசாலைகளும் தோன்றின. இருப்பினும் ராக்டேல் பண்டகசாலையே இங்கிலாந்திற்கும், பிறநாடுகளுக்கும் முன்னோடியாகத் திகழ்கின்றது. ஏனெனில்—

1. இப்பண்டகசாலையே நிரந்தரமாக வெற்றிநடைபோட்டு வந்தது. இதற்கு முன்னர் அமைந்தவை வெற்றி பெற இயலவில்லை.
2. கூட்டுறவுக் கொள்கைகளுக்கு ஓர் 'உரு'க் கொடுத்தது இப்பண்டகசாலையேயாகும். ஏட்டளவிலும், சில கூட்டுறவாளர்களின் இதயங்களிலும் வாழ்ந்து வந்த கூட்டுறவுக் கொள்கைகளைச் செயல் படுத்தியது இப்பண்டகசாலையேயாகும்!
3. தோல்வியே கண்டு வந்த கூட்டுறவு அமைப்புகளுக்கு ஒரு திருப்பமாக அமைந்தது இப்பண்டகசாலையே!
4. இப்பண்டகசாலையைத் தொடங்கியவர்கள் சாமான்யமானவர்கள் அல்லர். தொழிற்சங்கங்களில் உறுப்பினர்களாக விளங்கி நல்ல பயிற்சி பெற்றவர்களே இப்

பண்டகசாலையைத் தொடங்கினர். பொருள்களை உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்வதை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளாமல், வேறு பல உயர்ந்த நோக்கங்களையும் உள்ளடக்கிப் பணி புரிந்ததே இப்பண்டகசாலை.

5. இப் பண்டகசாலையை ஒட்டிச் சிறந்த மொத்த விற்பனைச் சங்கமும் தொடங்கப்பட்டது. மக்களின் எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றுவதில் இச் சங்கம் பெரும் கவனமும், ஈடுபாடும் கொண்டு விளங்கியது.

இத்தகைய காரணங்களினுல்தான் இப்பண்டகசாலை இங்கிலாந்திற்கு மட்டுமின்றி, பிற நாடுகள் எல்லாவற்றிற்கும் முன்னோடியாகக் கருதப்படுகின்றது. இக்கருத்தில் எவருக்கும் வேறுபாடு என்பதே இல்லை.

இனி, ராக்டேல் பண்டகசாலையின் நடைமுறைக் கொள்கைகளை விளக்கமாகக் காண்போம்.

1. **எவரும் உறுப்பினராகக் கூடிய** (Open Membership)

இப்பண்டகசாலையில் உறுப்பினராக விரும்பும் எவரும் (ஆண் பெண் இருபாலாரும்) பண்டகசாலையின் 'பங்கொன்றை'ப் பெற்று எளிதில் உறுப்பினராக முடியும். இப்பண்டக சாலையில் சாதி, மத பேதங்களுக்கு இடமே கிடையாது. பண்டகசாலை உறுப்பினர்களிடையே வேறுபாடு ஏதும் காட்டுவதில்லை.

2. **ரொக்க விற்பனை** (Cash Sales)

இப்பண்டகசாலையில் பொருள்கள் ரொக்கத்திற்கு மட்டுமே விற்பனை செய்யப்பட்டன. கடன் அடிப்படையில் பொருள்கள் விற்கப்படுவதால் எழும் பிரச்சினைகள் பலவற்றையும் இப்பண்டக சாலையின் முன்னோடிகள் அறிந்திருந்தனர். இப்பண்டக சாலைக்கு முன்னர் துவங்கப்பெற்ற ஆனுல் தோல்வியுற்ற பல பண்டகசாலைகள் ராக்டேல் முன்னோடிகளுக்குச் சிறந்த வழி காட்டியாகவும், படிப்பினையாகவும் விளங்கின. ரொக்க விற்பனையின் மூலம் பண்டகசாலையின் நிதிநிலை கணிசமாக உயரலாயிற்று. உறுப்பினர்களின் மனக்குறை 'வராக் கடன்களின்' பெருக்கம், செலவுத் தொகை அதிகரிப்பு போன்ற பிரச்சினைகள் இவ்விற்பனை முறை மூலம் அறவே அகற்றப்பட்டன.

3. **ஒருவருக்கு ஒரு 'வாக்கு'** (One Man One Vote)

மக்களாட்சி முறையில் இயங்கும் இக் கூட்டுறவுப் பண்டக சாலையில் ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு இல்லை. எத்தனை

'பங்கு' வைத்திருந்தாலும் தலைக்கு ஒரு 'வாக்கு' (Vote) மட்டுமே வழங்கப்பட்டது எனவே பங்குரிமை அடிப்படையில் 'வாக்குரிமை' வழங்கப்படாமல், நபர் அடிப்படையில் 'வாக்குரிமை' வழங்கப்பட்டது. கூட்டுறவுக் கொள்கைகளில் இது தலையாய கொள்கையாகும்.

4. **தரமான கலப்படமற்ற பொருள்களின் விற்பனை :**

நல்ல பொருள்களே இப் பண்டகசாலையில் விற்பனை செய்யப்பட்டன. 'இலாபம்' ஒன்றையே குறிக் கோளாகக் கொண்டிருக்கவில்லை இப்பண்டகசாலை. 'நேர்மை'யையே தங்கள் வியாபாரக் குறிக்கோளாகக் கொண்டு இயங்கி வந்தனர் ராக்டேல் முன்னோடிகள். கலப்படமற்ற தரமான பொருள்களை விற்பனை செய்து வந்தமையால், விற்பனை அதிகரித்தது. மக்களிடம் இப்பண்டகசாலை பெற்றிருந்த நன்மதிப்பும் உயர்ந்தது.

5. **விலைக் கொள்கை :**

ராக்டேல் பண்டகசாலைக்கு முன்னர் இயங்கி வந்த பண்டக சாலைகள் பொருள்களை அங்காடி விலையைக் காட்டிலும்குறைவாக விற்பனை செய்து வந்தன. இதன் விளைவாக, அங்காடிகளில் இயங்கி வந்த வணிகர்களுடன் கடும் போட்டி ஏற்பட்டது கடும் போட்டி அப்பண்டகசாலைகளைத் தோல்வி வழி நோக்கி நடத்திச் சென்றது. இதை நன்குணர்ந்திருந்த ராக்டேல் பண்டகசாலை பொருள்களை அங்காடி விலையையொட்டியே விற்பனை செய்தது.

6. **உறுப்பினர் மூலதனத்திற்கு வட்டி :**

உறுப்பினர்களை ஊக்குவிப்பதற்காக, அவர்களது மூல தனத்திற்கு வட்டித் தொகை வழங்கியது இப்பண்டகசாலை. உறுப்பினர்களுக்கு இலாப ஈவுத் தொகையுடன் இவ் வட்டித் தொகையையும் வழங்கியது.

7. **கொள்முதல் அடிப்படையில் இலாப ஈவுத்தொகை :**

உறுப்பினர்கள் வழங்கியிருக்கும் மூலதன அடிப்படையில் இலாப ஈவுத் தொகையை இப்பண்டகசாலை உறுப்பினர்களுக்கு வழங்கவில்லை. மூலதனத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகை வட்டியாக அளிக்கப்பட்டது. 'இலாப ஈவு'த் தொகை (Dividend) உறுப்பினர்கள் செய்திருக்கும் கொள்முதல் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டது. அதிகக் கொள்முதல் செய்திருக்கும்

உறுப்பினர்களுக்குப் 'பங்கு ஆதாயம்' கணிசமாக வழங்கப் பட்டது. ஆகவே, உறுப்பினர் பெறும் ஆதாயத்தின் அளவு அவர் பண்டகசாலையில் எந்த அளவுக்குப் பண்டங்கள் வாங்கி, அதை ஆதரித்துள்ளார் என்ற அடிப்படையில் அமைந்தது. இத்தகைய சிறப்பான முன்னேற்றத்தை இப்பண்டகசாலையில் தோற்றுவித்தவர் முன்னோடிகளில் ஒருவரான 'ஹவ்ரத்' ஆவர்:

8. **உறுப்பினர்களுக்குக் கல்வி :**

முறையான கல்வியை உறுப்பினர்களுக்குப் புகட்டுவதன் மூலமே திட்டங்களை வெற்றிபெறச் செய்ய இயலும் என்பதை நன்குணர்ந்திருந்த இப் பண்டகசாலை அதற்கான நடவடிக்கை களையும் எடுத்தது. இலாபத்தில் ஒரு பங்கு கல்வி வளர்ச்சிக் கெனச் செலவிடப்பட்டது. கூட்டுறவு வளர்ச்சியைத் தூண்டு கின்ற வகையில் கல்வியளிக்கப்பட்டது. கூட்டுறவுக் கல்வியைத் தவிர, பொதுக் கல்வி, தொழில் கல்வி முதலானவற்றையும் சிறந்த முறையில் உறுப்பினர்களிடையே பரப்பி வந்தது இப்பண்டகசாலை. இதையொட்டிப் பள்ளிகள் தொடங்கப் பட்டன.

9. **நடு நிலைமைக் கண்ணோட்டம் :**

ராக்டேல் முன்னோடிகள் அரசியல், மதம் போன்ற துறை களில் நடுநிலைமைக் கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்தனர். எம் மதத்தைச் சேர்ந்தவரும் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். உறுப்பினர்கள் வேறுபாடின்றி கவனிக்கப் பட்டனர். உறுப்பினர்களுக்குள் ஏற்றத் தாழ்வு என்பது கிடையாது. பண்டகசாலையைப் பொறுத்த மட்டில் எல்லோரும் சமம் என்ற கொள்கை எந்நிலையிலும் கடைபிடிக்கப்பட்டது. இப்பண்டகசாலை மதச் சார்புள்ள நிறுவனங்களுடனோ அல்லது அரசியல் அமைப்புகளுடனோ தொடர்பு கொண்டிருக்கவில்லை. இத்துறைகளில் நடுநிலைமைக் கொள்கைகளைச் சிறந்த முறையில் பின்பற்றியதால் வெற்றி எளிதாகக் கிட்டியது. பண்டகசாலையின் முன்னேற்றம் உலக நாடுகளின் கண்களைத் திறந்தது. இன்று பெரும்பாலான நாடுகள் 'ராக்டேல் பண்டகசாலையை' ஒட்டியே தங்கள் நுகர்வோர் பண்டகசாலைகளை அமைத்துள்ளதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இங்கிலாந்தில் மட்டுமின்றி, உலக நாடுகள் எல்லாவற்றிலும் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது இந்த ராக்டேல் பண்டகசாலையேயாகும்.

இலாப நோக்கத்துடன் நடத்தப்படும் தொழில்கள், வாணிகம் ஆகியவைகளால் பாதிக்கப்படுபவர்கள் நுகர்வோரே, தேவை நெகிழ்ச்சி குறைந்த இன்றியமையாப் பண்டங்களின் விற்பனையில், பெரும்பாலும் விற்போர் சந்தை (Sellers' Market) ஏற்படுவதால் நுகர்வோர் அதிக விலை கொடுத்து அப் பொருள்களை வாங்க வேண்டியுள்ளது என்பதை நன்குணர்ந்திருந்த ராக்டேல் முன்னோடிகள், விலை ஏற்றத்தை எதிர்ப்பதற்கென இப்பண்டகசாலையை அமைத்து அப்பணியில் வெற்றியும் கண்டார்.

சமதரும வாதிகளின் ஈடுபாடு
(Efforts of Socialists)

தொடக்கத்திலிருந்தே இங்கிலாந்தில் கூட்டுறவு அமைப்புகள் 'பதிவு' பெற்றுப் பணியாற்றத் தக்க வகையில் சட்டங்கள் இயற்றப்படவில்லை. அரசாங்கமும் அதற்கான முயற்சிகளில் ஈடுபடவில்லை. 1852-ஆம் ஆண்டுவரை, கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான சட்டங்கள் இயற்றப்படவே இல்லை. ஏனைய வணிக அமைப்புகள் போலவே, கூட்டுறவுச் சங்கங்களும் அப்போதைய நட்பினர் சங்கச் சட்டத்தின் கீழ் (Friendly Societies Act) பதிவு பெற்றுப் பணியாற்றிவந்தன. கூட்டுறவு அமைப்புகளுக்கென ஒரு தனிச் சட்டத்தை நிறைவேற்றும்படி அரசாங்கத்தைப்பல மன்றங்கள் வற்புறுத்தி வந்தன. அவற்றுள் 'கிறித்துவ சமதரும வாதிகளைக் கொண்ட ஓரு 'குழுமம்' (Body) மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

இயேசு கிறித்துவின் கொள்கைகளைச் சிறந்த முறையில் பின்பற்றி வந்த இவர்கள் மக்களின் துயர் துடைக்கப் பலவழிகளிலும் முயன்றனர். மக்கள் தொண்டே கடவுளுக்கு நாம் செய்யும் மாபெரும் தொண்டாகும் என்பதை நன்குணர்ந்திருந்த இவர்கள், செல்வம் ஒரு சிலர் கைகளில் சிக்குண்டு விடுவதால்தான் வறுமை நிலை நாட்டில் பெருகத் தொடங்குகிறது என்ற கருத்தின் அடிப்படையில் பிரச்சாரம் செய்துவந்தனர். இவ்வியக்கத்தில் 'மௌரிஸ்' (F. E Maurice), 'நீலர்' (Nealer), சார்லஸ் 'கிங்ஸ்லே' (Charles Kingsley) போன்ற பல அறிஞர்கள் பணியாற்றி வந்தனர். சுயநலமற்று உழைத்தால்தான் நாட்டின் வறுமை நீங்கும் என்பதை மக்களுக்கு நன்கு புரியும்படிப் பிரச்சாரம் செய்து வந்தனர். இவர்கள் வறுமையின் கைகளில் சிக்கிடாத செல்வந்தர்களாவர். ஏழைகளின் உழைப்பைக்

கொண்டு செல்வந்தர்கள் மேலும் மேலும் பொருள் குவிப்பதை வன்மையாகக் கண்டித்தனர். இங்கிலாந்து நாட்டில் ஒரு விழிப் புணர்ச்சியை மக்களிடையே ஏற்படுத்திய பெருமை இவர்களையே சாரும். கலப்படமற்ற பொருள்களை விற்பனை செய்யும்படி வணிகர்களை வேண்டிக் கேட்டுக் கொண்டனர்.

வணிகர்களின் கொள்ளை இலாப மனப்பான்மையை, வன்மையாகக் கண்டித்தனர். அரசாங்கத்தின் ‘தலையிடாக் கொள்கை’யும் இவர்களால் சாடப்பட்டது. தொழிலாளர்களின் நலன் கருதிப் பல சிறு தொழிற்சாலைகளை இவர்கள் தொடங்கினர். பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்தவர்களின் நல் வாழ்வுக் காகக் கூட்டுறவுக் கழகங்களை அமைத்தனர். இவர்களில் பலர் செல்வம் படைத்தவர்களாதலால், இச் சங்கங்களுக்குக் தேவையானபோது குறைந்த வட்டியில் (4%) கடனுதவிகளும் அளித்தனர். இச் சங்கங்களின் உறுப்பினர்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்த தொழிலாளிகளேயாவர். இச் சங்கங்கள் தங்களின் நிர்வாகத்திற்கெனத் தகுதிவாய்ந்த நிர்வாகி களையும் பெற்றிருந்தன. இலாபத்தின் பெரும் பங்கு உறுப் பினர்களின் நல்வாழ்விற்காகச் செலவிடப்பட்டது. இலாபத்தில் ஒரு சிறு பகுதியே உறுப்பினர்களுக்கு இலாப ஈவுத் தொகை யாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

1850-ஆம் ஆண்டு, இச் சமதருமவாதிகள் தொழிலாளர் களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கென மேலும் பல சங்கங்களை உருவாக்கினர். இவர்களது முக்கியக் குறிக்கோள் கூட்டுறவுக் கொள்கைகளின் மூலம் இக் கழகங்களை உயர்த்து வதேயாகும். இக் கழகங்களைச் சிறந்த முறையில் நிருவகிப்பதற் காகவும், சங்கங்களின் பணிகளைக் கண்காணிப்பதற்காகவும் தேவையான நிதி வசதிகளையும் ஏற்படுத்தத் தொடங்கினர். இச் சங்கங்கள் வல்லுனர்களைக் கொண்டு விளங்கியதால் தொழிலாளர்களைக் கொண்டு பணிபுரிந்துவந்த கூட்டுறவுக் கழகங்களைச் சிறந்த முறையில் வழி நடத்திச் செல்ல முடிந்தது. 1854-ஆம் ஆண்டு ‘சமதருமவாதிகளின் குழுமம்’ தொழிலாளர் களுக்குப் போதிய கல்வி வசதிகளை அளிப்பதற்காக ஒரு கல்லூரி யைத் தொடங்கியது. இரவு நேரங்களில் பல துறைகளில் வல்லுணர்களாக விளங்கிய பலரைக் கொண்டு சொற்பொழிவு கள் நிகழ்த்தப்பட்டன. 1904-ஆம் ஆண்டு இக்கல்லூரி தனது சொந்தக் கட்டிடத்தைப் பெற்றது. இக் கல்லூரி ஆற்றிய பணி அளப்பரியதாகும்.

தொடக்கத்தில் பெற்ற வெற்றியை இத் தொழிலாளர் சங்கங்கள் தொடர்ந்து பெறவில்லை. நாளடைவில் இச் சங்கங்களும் நலிவுற்றன. 'காதரின் வெப்' (Catherine Webb) என்பவர் இக் கழகங்களின் தோல்விக்கான காரணங்களை நயம்படத் தன் நூலில் விளக்கியுள்ளார். நிதிப்பற்றுக்குறை காரணமாகவோ, அனுபவமின்மை காரணமாகவோ இச்சங்கங்கள் தோல்வியடையவில்லை. இக் கூட்டுறவுக் கழகங்களில் உறுப்பினர்களாகப் பணிபுரிந்தவர்களிடையே கூட்டுறவு மனப்பான்மை நன்கு மலரவில்லை. உறுப்பினர்கள் கட்டுப்பாடின்றி நடந்து வந்தமையால் தான் இவ்வமைப்புகள் தோல்வியடைந்தன. இக் கழகங்களின் தோல்வி பின்னால் அமைந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு நல்லதொரு படிப்பினையாக விளங்கியது.

இச் சமதருமவாதிகளின் சலியா உழைப்பினால்தான், 1852-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கென ஒரு தனிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதுவே அவர்களின் முயற்சியினால் விளைந்த மாபெரும் வெற்றியாகும். இச் சட்டத்தின் மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் தொழில் அமைப்புகளாக அங்கீகரிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து 1862-ஆம் ஆண்டு 'காப்பீட்டுத் தொழிற் சங்கச் சட்டம்' இங்கிலாந்து அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டது. இச் சட்டத்தின் மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் 'வரையறுக்கப்பட்ட பொறுப்பின்' அடிப்படையில் இயங்க அனுமதி வழங்கப்பட்டது. துணைச் சங்கங்கள் அமைக்கப் படுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

இவ்வாறு, கிறித்துவ சமதரும வாதிகளும் இங்கிலாந்தில் கூட்டுறவு இயக்கம் வலிமையுடன் திகழ மறுபயன் எதிர்நோக்காது தங்கள் உழைப்பை நல்கினர். இன்று இங்கிலாந்தில் வளமான கூட்டுறவு இயக்கம் அமைந்திருக்கிறதென்றால் அதற்குக் காரணம் இச் சமதருமவாதிகளின் திட்டமிட்ட பணிகளேயாகும். இதை எவரும் மறுக்க இயலாது. இன்றைய கூட்டுறவு இயக்கம் இவர்களுக்குப் பெரிதும் நன்றிக் கடன் பட்டுள்ளது.

சில்லறை விற்பனைச் சங்கள்கள்:

இங்கிலாந்து கூட்டுறவு இயக்கத்தில் 'நுகர்வோர்கூட்டுறவுச் சில்லறை விற்பனைக் கழகங்களே' (Consumers' Co-op. Retail Societies) மிகவும் முக்கியமானவைகளாகும். இச் சங்கங்கள் மக்கள் ஆதரவு, நிதி வசதி முதலானவற்றை பெருமளவில் பெற்று வலிமையுடன் திகழ்கின்றது. 1966-ஆம் ஆண்டு தொடக்கத்தில் இங்கிலாந்தில் 680 கூட்டுறவுச் சில்லறை விற்பனை

சங்கங்களே இயங்கி வந்தன. இச் சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கை 13 மிலியனாகும். சராசரியாக ஒவ்வொரு சங்கமும் 17,000 உறுப்பினர்களைக் கொண்டு விளங்கியது. 100 சில்லறை விற்பனைச் சங்கங்கள் ஆயிரத்திற்கும் குறைவான உறுப்பினர் களைக் கொண்டு பணிபுரிந்து வந்தன. பெரிய அளவில் இயங்கி வந்த கூட்டுறவுச் சங்கங்களும் இங்கிலாந்தில் சிறப்புடன் விளங் கின. இலண்டனில் இயங்கிவந்த 'நுகர்வோர் கூட்டுறவுச் சில்லறை விற்பனைச் சங்கம்' ஒரு மிலியனுக்கும் அதிகமான உறுப் பினர்களைக் கொண்டுள்ளது. 'பர்மிங்ஹாமில்' (Birmngham) இயங்கும் விற்பனைச் சங்கம் நான்கு இலட்ச உறுப்பினர்களைக் கொண்டு விளங்குகிறது. எல்லாச் சமூகத்தையும் சார்ந்தவர்கள் இக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகப் பணி புரிகின்ற னர். உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு வாலிபர்களாவர்.

1966-ஆம் ஆண்டு இச் சங்கங்களின் மொத்த விற்பனை £ 1,100 மிலியனுக்கும் அதிகமாகக் காணப்படுகின்றது. மொத்த விற்பனையில் உணவுப் பொருள்களின் விற்பனை நான்கில் மூன்று பங்காகத் திகழ்கின்றது. ரொட்டி, காய்கறிகள், பழ வகைகள், மீன், இறைச்சி, பால் முதலான முக்கியப் பொருள் களின் விற்பனை £ 768 மிலியன் எனத்தெரிய வருகின்றது. அளவில் பெரிய விற்பனைச் சங்கங்கள் காலணிகள், ஆடைகள், தட்டுமுட்டுப் பொருள்கள், மருந்து வகைகள் முதலானவற்றை யும் விற்பனை செய்கின்றன. வேறு சில சங்கங்கள் முடிதிருத்தும் நிலையங்கள், சலவை நிலையங்கள் போன்ற நிலையங்களையும் நடத்தி வருகின்றன.

1961-ஆம் ஆண்டு இவ்விற்பனைச் சங்கங்கள் நாட்டின் மொத்த வணிகத்தில் 11 சதவிகிதத்தைத் தம் வசம் கொண்டி ருந்தன. உணவுப் பொருள்களின் விற்பனையில் 15 சதவிகிதத்தை யும், உலர்த்தப்பட்ட பொருள்களின் விற்பனையில் 6 சத விகிதத்தையும் பெற்றிருந்தன. இன்றும் இந்நிலையிலேயே இச் சில்லறை விற்பனைச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச் சங்கங்கள் சுமார் 30,000 கடைகளைச் செவ்வனே நடத்தி வருகின் றன. இதை தவிர, 3,000 நடமாடும் கடைகளை (Mobile Shops) இச் சங்கங்கள் பெற்றுள்ளன. இவ்வகைக் கடைகளை சுமார் 35,000 மோட்டார் வாகனங்களைக் கொண்டு திறமையுடன் நடத்தி வருகின்றன. இச் சங்கங்கள் வாடிக்கையாளர்களே தங்கள் தேவைக் கேற்பப் பொருள்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளத்தக்க வகையில் அமைக்கப்பட்ட கடைகள் சுமார் 3821 ஆகும். அதாவது இவ்வகைக் கடைகளில் (Self Service Shops)

36 சதவிகிதம் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் இயங்குபவையாகும். உறுப்பினர்களிடமிருந்து இச்சங்கங்கள் வைப்புத் தொகையாக £ 7,388,702 பெற்றுள்ளன. இச் சங்கங்களின் 'பங்கு மூலதனம்', (Share Capital) £ 247 மிலியனுகும். 'கடன் மூலதன'த்தின் மதிப்பு £ 3·66 மிலியன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 1962-ஆம் ஆண்டின் நிகர இலாபம் £ 54 மிலியனுகும். இந்த இலாபத் தொகையில், உறுப்பினர்களின் கொள்முதல் அடிப்படையில் 4% பங்கு ஆதாயமாக வழங்கப்பட்டுள்ளது. 'காப்புநிதி'[3]களை உருவாக்குமாறு இச் சங்கங்கள் சட்டங்களால் கட்டாயப்படுத்தப் படவில்லை. எனினும், இச் சங்கங்கள் தாங்களாகவே இலாபத்தில் ஒரு பகுதியைக் காப்பு நிதியில் சேர்த்து வைக்கின்றன. தற்போது, இக் காப்பு நிதியில் £ 47 மிலியன் உள்ளது. பகிர்ந்தளிக்கப்படாத வருமான மிகுதிக்கு அரசாங்கத்தால் வரி விதிக்கப்படுகின்றது.

இச் சங்கங்களின் சொத்துகள் பலதரப்பட்டவையாக உள்ளன. கட்டடங்கள், முதலீடுகள், தட்டு முட்டுப் பொருள்கள், பங்குத் தொகுப்பு (Stock) முதலானவை இச்சங்கங்களின் முக்கியச் சொத்துகளாகும். 1964–ஆண்டு இச் சொத்துக்களின் ஏட்டு மதிப்பு (Book Value) விற்பனைச் சங்கத்தின் முதல் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 1 [Table]

சொத்துக்கள் 1964

£ மிலியன்

உடைமைப் பொருள்கள்	[Property]	165.6
வணிகத்தில் தொடர்பில்லாத சொத்துக்கள்	[Non-Trade Property]	5.8
முதலீடுகள்	[Investments]	175.1
பங்கு தொகுப்புகள்	[Stocks]	100.1
கடனாளிகள்	[Sundry Debtors]	46.2
பிற சொத்துக்கள்	[Other Assets]	5.1
ரொக்கம் [கையிருப்பும் வங்கி இருப்பும்]	[Cash in Hand & at Bank]	12.2
	மொத்தம்	510.0

1965-ஆம் ஆண்டு இவ்விற்பனைச் சங்கங்களின் மேற்பார்வையில் 325 கூட்டுறவு சிறப்பு அங்காடிகளும், 200 பல பிரிவுப் பண்டகசாலைகளும் இயங்கி வந்தன.

1964-ஆம் ஆண்டு இச்சில்லறை விற்பனைச் சங்கங்களில் பணி புரிவோர் எண்ணிக்கை 2,50,000 ஆகும். இவர்களில் சுமார் 218,000 நபர்கள் பொருள்களை விநியோகிக்கும் போக்குவரத்துத் துறையிலும், சுமார் 32,000 பணியாளர்கள் உற்பத்தித் துறையிலும் பணிபுரிந்து வந்தனர். இவர்களுக்கு வழங்கப்படும் மாத வருமானத்தின் மதிப்பு சுமார் £ 140 மிலியன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பினும், தொழிலாளர் பிரச்சினைகள் இங்கு எழுவதில்லை. பணியாளர்களில் பலர் தொழிற் சங்கங்களில் உறுப்பினர்களாக விளங்குகின்றனர். பொருள்களின் விலை நிருணயம், ஊதிய நிருணயம் போன்ற செய்தி அவர்களின் கருத்துக்கள் அறியப்படுகின்றன. அவர்களுக்குத் தேவையான எல்லா வாழ்க்கை வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. இச் சில்லறை விற்பனைச் சங்கங்களின் வளர்ச்சியை கீழே காணப்படும் அட்டவணையைக் கொண்டு அறியலாம்.

ஆண்டு	சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர் எண்ணிக்கை	வாணிகம் £	உறுப்பினர் சராசரி வாணிகம் £	தொழிலாளர் எண்ணிக்கை
1888	1,367	904,114	24,046,190	26 . 59	—
1938	1,085	8,404,588	263,265,306	31 . 32	239,919
1948	1,030	10,162,299	502,616,532	49 . 46	260,162
1958	918	12,594,186	997,779,319	79 . 23	292,562
1960	859	12,958,839	1,032,749,334	79 . 71	284,278
1961	826	13,043,484	1,044,798,803	80 . 10	210,902
1262	801	13,140,188	1,053,940,921	80 . 21	272,064
1965	769	13,250,000	1,100,000,000	80 . 51	244,100
1966	680	13,065,000	1,108,000,000	84 . 80	230,672

விலைக்கொள்கை (Price Policy)

பொதுவாக, இவ்விற்பனைச் சங்கங்கள் பொருள்களை அங்காடிகளில் நிலவும் விலை அடிப்படையிலேயே விற்பனை செய்கின்றன. நிதி வசதியை அதிகமாகப் பெற்றிருக்கும் சில விற்பனைச் சங்கங்கள் அடக்க விலையுடன் ஒரு சிறு தொகையை

இலாபம் பெறுவதற்கெனக்கூட்டி விற்பனை செய்கின்றன. இவ்வாறு நிர்ணயம் செய்யப்படுகின்ற விலை, சில சமயங்களில் அங்காடி விலையைக் காட்டினும் சற்றுக் குறைவாக இருப்பதும் உண்டு. இத்தகைய விலை நிருணய முறை 'செயல்திறமுடைய விலைக் கொள்கை' (Active Price Policy) என வழங்கப்படுகிறது. இத்தகைய விலை நிருணய முறை, நிதி வசதிகளை அதிகமாகப் பெற்றுள்ள விற்பனைச் சங்கங்களால் பின்பற்றப்படுகிறது.

விற்பனைச் சங்கங்களின் நிருவாகம் :

இச்சங்கங்கள் திறமையாகச் செயல்படுவதின் இரகசியம் இவைகளின் சிறப்பான நிருவாகமேயாகும். உறுப்பினர்கள் எல்லோரையும் கொண்ட 'பொது மன்றம்' (General Body) இச் சங்கங்களின் தலைமை மன்றமாகத் திகழ்கின்றது. உறுப்பினர் களால் தேர்ந்தெடுக்கப்படும் 'நிர்வாகக் குழுக்களே' அன்றாட நிருவாகச் செய்திகளைக் கவனிக்கின்றன. பொதுவாக நிர்வாகக் குழு 12 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. பெண்களுக்கென்று ஒன்று அல்லது இரண்டு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. விற்பனைச்சங்கங்களின் செயற்பாடுகளுக் கேற்பத் திட்டங்களை வகுப்பது இக்குழுக்களேயாகும். ஒரு குறிப்பிட்டத் தொகை 'இயக்குநரு'க்குச் சம்பளமாக (Salary) அளிக்கப்படுகிறது. நிர்வாகக் காரியங்களைக் கவனிப்பதற்கும், அன்றாடம் எழும் பிரச் சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் ஊதியத்திற்கு உழைக்கும் நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களது பணிகளில் குழுக்கள் தலையிடுவது கிடையாது. நடவடிக்கைகள் இக்குழுக்க ளால் நன்கு கண்காணிக்கப் படுகின்றன. குழுக்களின் உறுப் பினர்கள் 'சுற்றி வரு முறையில்' (By Rotation) பதவியிலிருந்து ஓய்வு பெறுகின்றனர். அவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படு வதில் தடையேதுமில்லை. 21 வயது நிறைந்த எவரும் உறுப் பினர் தேர்தலில் போட்டியிட வழி முறைகள் செய்யப்பட்டுள்ளன. சில சங்கங்களில் ஒரு குறிப்பிட்ட 'பங்குத் தொகையைப்' பெற்றுள்ளவர்களே (உதாரணமாக £ 10) போட்டியில் ஈடுபட அனுமதிக்கப்படுகிறார்கள். ஒன்று அல்லது இரண்டு கடைகளையே பெற்றுள்ள சங்கங்கள் 'நிர்வாகச் செயலாளர்'களைக் (Managing Secretary) கொண்டு இயங்கி வருகின்றன. வேறு சில சங்கங்களில் 'பகுதி நேரச் செயலாளர்கள், (Part-time Secretary) நிருவாகத்தைக் கவனித்துக் கொள்கின்றனர். கணக்கு வைப்பு முறையை ஒழுங்கு படுத்துவதும் செயலாளர் களின் முக்கிய பணிகளுள் ஒன்றாகும். எல்லாச் சில்லறை விற்பனைச் சங்கங்களும் 'ரொக்க விற்பனை (Cash Sales)

முறையையே பின்பற்றுகின்றன. எனவே, 'வராக்கடன்' மூலம் பிரச்சினை எழுவதே இல்லை. எனினும், சுமார் 367 விற்பனைச் சங்கங்கள் பொருள்களைக் கடனுக்கும் விற்பனை செய்து வருகின்றன. நபர்களின் நாணய மதிப்பைப் பொறுத்து இவ்விற்பனை செய்யப்படுகின்றது.

சில விற்பனைச் சங்கங்கள் குறிப்பிட்ட சில பொருள்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றன. இடுகாடு வசதிகளைக் கூட சில சங்கங்கள் அளித்து வருகின்றன. இனிப்புத் தின்பண்டங்களைப் பெரும்பாலான கழகங்கள் தாங்களாகவே உற்பத்தி செய்து கொள்கின்றன. 1964-ஆம் ஆண்டு மொத்த விற்பனையில் 6 சதவிகிதப் பொருள்கள் இச்சங்கங்களினாலேயே உற்பத்தி செய்யப் பட்டவையாகும்.

நுகர்வோர் சில்லறை விற்பனைச் சங்கங்களின் கூட்டமைப்புகள்

(Federal Consumer Societies)

இங்கிலாந்தின் இச்சில்லறை விற்பனைச் சங்கங்கள் ஒன்று சேர்ந்து ஒரு சில கூட்டமைப்புகளையும் உருவாக்கியுள்ளன. இவ்வாறு உருவாக்கப்பட்ட கூட்டமைப்புகளில் மிக முக்கியமானவை 'கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கமும்' 'ஸ்காட்லாந்து மொத்த விற்பனைச் சங்கமும்' (Scottish Co-operative Wholesale Society) ஆகும். இக்கூட்டமைப்புகளிடமிருந்தே சில்லறை விற்பனைச் சங்கங்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களைக் கொள்முதல் செய்கின்றன. தற்போது 63 மாவட்டக் கூட்டமைப்புகள் இயங்கி வருகின்றன. அண்மையில் 'கூட்டுக் கொள் முதல் அமைப்புகளும்', உருவாக்கப்பட்டுள்ளன. தற்போது, 296 சில்லறை விற்பனைச் சங்கங்களை உள்ளடக்கி 13 கூட்டுக் கொள் முதல் அமைப்புகள் இயங்கி வருகின்றன. முதல் கூட்டமைப்புக் கழகம் 1860–ஆம் ஆண்டு 'கிளாஸ்கோ' (Glasgow) நகரில் தொடங்கப்பட்டது.

இக்கூட்டமைப்புச் சங்கங்களைத் தவிர, வேறு சில 'சிறப்புத் தேசீயச் சங்கங்களையும்' இவ்விற்பனைச் சங்கங்கள் உருவாக்கியுள்ளன. இதர தேசீய அமைப்புகளுடன் இச்சங்கங்கள் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. 'கூட்டுறவு அச்சகம்' (Co–operative Press), 'கூட்டுறவு அச்சுத் தொழில் சங்கம்' (Co-operative Printing Soc.) போன்றவை இவ்வாறு உருவாக்கப் பட்டவையேயாகும்.

கூட்டுறவு அச்சுத் தொழில் சங்கம் கூட்டுறவு இயக்கத்திற்கும் தொழிற்ச்சங்க இயக்கத்திற்கும் ஒரு சேரப் பணி புரிந்து வருகின்றது. இச்சங்கம் சிறந்த முறையில், தொழிற் சங்க இயக் கத்தினுலும் கூட்டுறவு இயக்கத்தினுலும் நிருவகிக்கப் படுகின்றது.

1884-ஆம் ஆண்டு, சில்லறை விற்பனைச் சங்கங்களின் நலன் கருதி ஒரு 'கூட்டுறவு நிரந்தரக் கட்டிடச் சங்கம், ('Co-operative Permanent Building Society) உருவாக்கப்பட்டது. இச் சங்கத்தின் உதவியோடு விற்பனைச் சங்கங்கள் பாதுகாப்பான முறையில் தங்கள் நிதியை முதலீடு செய்ய வழிவகைகள் செய்யப் பட்டன. உறுப்பினர்களுக்கு மனைகள் அமைப்பதற்கென நிதி வசதிகளும் செய்யப்படுகின்றன. 1964-ஆம் ஆண்டு, இச்சங்கம் 656,000 உறுப்பினர்களைக் கொண்டு விளங்கியது. பங்கு மூலதனம் £ 299 மிலியன் என்றும் கடன் பெற்ற முதல் (Borrowed Capital) £ 10 மிலியன் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. 1961-ஆம் ஆண்டு அடைமானத்தின் பேரில் வழங்கப்பட்ட மொத்தத் தொகை £ 71 மிலியனுகும். விற்பனைச் சங்கங்களுக்கும், உறுப் பினர்களுக்கும் ஒரு சேரச் சேவை செய்கின்றது இச்சங்கம்.

மொத்த விற்பனைச் சங்கங்கள்
(Wholesale Societies)

தனித்து இயங்கி வந்த நுகர்வோர் கூட்டுறவுச் சில்லறை விற்பனைச் சங்கங்கள் தங்களுக்குள் ஒரு கூட்டுறவை உருவாக்கிக் கொள்ள விரும்பின. தங்களுக்குள் ஒன்றுக்கொன்று உதவி புரிந்து கொள்வதற்காகவும், பொதுப் பிரச்சினைகளைக் கூட்டாகக் கவனிப்பதற்காகவும் இச்சங்கங்கள் கூட்டமைப்புகளை அமைக்க ஏற்பாடுகள் செய்யலாயின. 1862-ஆம் ஆண்டு நிறைவேற்றப் பட்ட காப்பீட்டுத் தொழிற் சட்டத்தில் இதற்கான வழிமுறைகள் அனுமதிக்கப்பட்டிருந்தன. இதைத் தொடர்ந்து 1863-ம் ஆண்டு கூட்டுறவுப் பண்டகசாலைகளைச் சேர்ந்த 200 பிரதிநிதிகள் 'மான் செஸ்டர்' (Manchester) என்ற நகரில் ஒன்றுகூடிக் கூட்டமைப்பு களை அமைப்பதைப் பற்றி விரிவாக விவாதித்தனர். சில்லறை விற்பனைச் சங்கங்களுக்குத் தேவையான பொருள்களை மொத்த மாகக் கொள்முதல் செய்வதற்கே இக்கூட்டமைப்புகள் அமைக்கப் பட்டன. முதல் கூட்டமைப்பு 'வட இங்கிலாந்து கூட்டுறவு மொத்த விற்பனை முகமை கிடங்குக் கழகம்' (The North of England Co-operative Wholesale Agency and Depot Society Ltd.) என்ற பெயரில் 1863-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் தொடங்கப்பட்டது. 1864-ஆம் ஆண்டிலிருந்து இக்கூட்டமைப்பு

வியாபாரப் பணிகளைத் தொடங்கியது. தொடங்கிய சில காலத்திற்குப் பின்னர், இக்கூட்டமைப்புச் சங்கத்தின் பெயர் 'கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம்' (C.W.S) என மாற்றப்பட்டது (1867). இதன் தலைமை அலுவலகம் மான்செஸ்டரில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டமைப்பு இங்கிலாந்திலும், 'வேல்ஸி'லும் (Wales) பணிபுரிந்து வருகின்றது. இக்கூட்டமைப்பின் அமைப்பு, தற்போது, 108 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தது போலல்லாமல் சற்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது. சில்லறை விற்பனைச் சங்கங்களுக்கு உதவுவதற்காகவே தொடங்கப்பட்ட இக்கூட்டமைப்பு, தற்போது வாணிபம், உற்பத்தி, காப்பீடு, வங்கியல் போன்ற பல துறைகளிலும் வெற்றிகரமாக ஈடுபட்டு வருகின்றது.

உறுப்பினர் நிலை (Membership)

பதிவு பெற்ற எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் இக்கூட்டமைப்பில் உறுப்பினர்களாக விளங்க அனுமதிக்கப்படுகின்றன. தனி நபர்கள் இக்கூட்டமைப்பில் உறுப்பிரைகளாக அனுமதிக்கப்படுவதில்லை, ஒவ்வோர் உறுப்பினர் சங்கமும் இக்கூட்டமைப்பில் குறைந்தது ஒரு பங்கையாவது (£ 5 for every 5 Members) பெற வேண்டும் என்ற கட்டுப்பாடு உள்ளது. இப்பங்குகளின் மூலம் இக்கூட்டமைப்பு கணிசமான ஒரு தொகையை பங்கு மூலதனமாகப் பெற்றுள்ளது. 1966-ஆம் ஆண்டு, இக்கூட்டமைப்பின் 'பங்கு மூலதனம்' £31.5 மிலியனாகும். இக்கூட்டமைப்பின் 'பொதுக்காப்பிருப்புகள்' சுமார் £ 36 மிலியன் என கணக்கிடப்பட்டுள்ளது. உறுப்பினர் சங்கங்கள் தங்கள் பங்குகளைப் பிற சங்கங்களுக்கு மாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், பங்குப் பணத்தைக் கூட்டமைப்பிடமிருந்து திரும்பப் பெற இயலாது.

நிருவாகம் (Management)

இம்மொத்த விற்பனைச் சங்கத்தின் நிருவாகம் மக்களாட்சி முறையில் நடைபெறுகிறது. இக்கூட்டமைப்பின் பொது மன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் 'இயக்குநர்'களைத் (Director) தேர்ந்தெடுக்கின்றனர். ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒரு 'வாக்கு' மட்டுமே அளிக்கப்படுகின்றது. £ 12,500 மதிப்புள்ள பொருள்களைக் கொள்முதல் செய்யும் உறுப்பினர்களுக்கு மேலும் ஒரு 'வாக்கு' அளிக்கப்படுகின்றது. இவ்வாக்குரிமை உறுப்பினர்கள் முதன் முதலில் செய்யும் கொள்முதல் அடிப்படையில் அளிக்கப்படுகின்றது. £ 25,000 மதிப்புள்ள பொருள்கள் கொள்முதல்

செய்யப்படும் ஒவ்வொரு முறையும் மற்ருெரு 'வாக்கு' (Vote) உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றது. எந்த உறுப்பினர் சங்கமும் 50 வாக்குகளுக்குமேல் பெற இயலாது. தொடக்கத்தில் 'இயக்குநர் அவை' 28 தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்களேக் கொண்டு விளங்கியது. ஒவ்வோர் இயக்குநருக்கும் £ 750 ஊதியமாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1966-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட குழு (Joint Reorganisation Committee) செய்த சிபாரிசுகளின்படி, இயக்குநர்களேத் தேர்ந்தெடுக்கும் முறையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன, தற்போது, இயக்குநர் அவை 30 இயக்குநர்களேக் கொண்டுள்ளது. இவர்களது பதவிக்காலம் ஐந்தாண்டிலிருந்து மூன்ருண்டாடுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. இயக்குநர்களுக்கு ஊதியம் வழங்குவது நிறுத்தப்பட்டது. இவ்வியக்குநர் அவை ஒரு 'தலேமைச் செயற்குழு அலுவல'ரை (Chief Executive Officer) நியமித்துள்ளது. நிர்வாகப் பொறுப்புகள் அனைத்தும் இவ்வலுவலரால் நிறைவேற்றப்படுகின்றன. உறுப்பினர் சங்கங்களிடையே நேர்மையை உயர்த்த இக்கூட்டமைப்பு அரும்பாடுபட்டு வருகிறது.

இலாப ஈவு (Dividend)

உறுப்பினர் சங்கங்கள் பெற்றிருக்கும் பங்குகளின் அடிப்படையில் இலாபத் தொகை பகிர்ந்தளிக்கப்படுகின்றது. மிகக் குறைந்த தொகையே பங்கு ஆதாயமாக உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது. உறுப்பினர்களின் கொள் முதல் அடிப்படையில் ஒரு கணிசமான தொகை 'மேலூதியமா'க (Bonus) வழங்கப்படுகிறது. உறுப்பினரல்லாதவர்களுக்கும் இது வழங்கப்படுகிறது. உறுப்பினர்கள் பெறும் மேலூதியத்தில் பாதித் தொகையையே உறுப்பினரல்லாதவர்கள் பெறுகின்றனர்.

வணிக நடவடிக்கைகள் (Trading Activities)

தேவையான பொருள்களேச் சிறந்த முறையில் உற்பத்தி செய்தோ அல்லது கொள்முதல் செய்தோ உறுப்பினர் சங்கங்களுக்கு அளிப்பதே இம்மொத்த விற்பனேச் சங்கத்தின் முக்கியப் பணியாகும். இக்கூட்டமைப்பு அயல்நாடுகளிலிருந்தும் உள் நாட்டு அங்காடிகளிலிருந்தும் மொத்தமாகப் பொருள்களேப் பெறுகின்றது. சொந்தமான தொழிற்சாலேகளில் பல பொருள்களே உற்பத்தியும் செய்கின்றது இக்கூட்டமைப்பு. 1958-ஆம் ஆண்டு, இச்சங்கத்தின் மொத்த விற்பனே £ 46.3 கோடியாகும். 1966-ஆம் ஆண்டுவிற்பனே £ 49 கோடியாகும். சில்லறை விற்பனேக்

கடைகள் இல்லாத இடங்களில் புதிதாகக் கடைகளை அமைப்பதற்கென்று இம்மொத்த விற்பனைச் சங்கம் 1957-ஆம் ஆண்டு ஒரு துணைச் சங்கத்தை (Co-op. Retail Services Ltd.)தொடங்கியது. 1062-ஆம் ஆண்டு இச்சங்கம் 5.5 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்டு விளங்கியது. இதே ஆண்டில், இத்துணைச் சங்கம் 32 விற்பனைக் கடைகளைப் புதிதாக அமைத்தது. இதன் விற்பனை £ 32 மிலியனாகும்.

1873-ஆம் ஆண்டு, மேலும் பல பொருள்களை உற்பத்தி செய்யத்தொடங்கியது இச்சங்கம். இதன்மூலம் மொத்த விற்பனைச் சங்கத்தின் செலவுகள் குறைந்து உறுப்பினர்களுக்கு வழங்கும் இலாப ஈவுத் தொகை உயரலாயிற்று. முதன் முதலில் ரொட்டித் தொழிற்சாலை தொடங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து வேறு பல தொழிற்சாலைகளும் தொடங்கப்பட்டன. தற்போது இங்கிலாந்துக் கூட்டுறவு இயக்கத்தில் இம்மொத்த விற்பனைச் சங்கமே பெரியதோர் உற்பத்தி அமைப்பாக விளங்குகிறது. இச்சங்கத்திற்குச் சொந்தமாக சுமார் 200 தொழிற்சாலைகள் உள்ளன. மாவு அரைப்பு இயந்திரத் தொழில், சோப்பு, செயற்கை வெண்ணெய் (Margarine) தயாரித்தல் போன்றவையும் இச்சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச்சங்கம் 10,000 ஏக்கர்களைக் கொண்ட ஒரு பண்ணையைக் கனடாவில் பெற்றுள்ளது. பொருள்களைக் கொண்டு செல்வதற்குத் தகுதியான பல கப்பல்களையும் சொந்தமாகப் பெற்றுள்ளது. பல பன்றி இறைச்சித் தொழிற்சாலைகளையும் இச்சங்கம் நிருவகித்து வருகின்றது. 1966-ஆம் ஆண்டு £ 147 மிலியன் மதிப்புள்ள முக்கியப் பொருள்களை உற்பத்தி செய்துள்ளது இம்மொத்த விற்பனைச் சங்கம்.

இக்கூட்டமைப்புச் சங்கம் வங்கியல் தொழிலையும் நடத்தி வருகின்றது. இங்கிலாந்தில் இயங்கிவரும் பெரிய வங்கிகளுடன் போட்டியிடக் கூடிய அளவில் இச்சங்கத்தின் 'வங்கியியல் பிரிவு' (Banking Department) பணியாற்றி வருகின்றது. கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தனி நபர்களுக்கும் இச்சங்கம் வங்கியாகப் பணியாற்றுவதுடன் 280 வட்டார ஆட்சி அமைப்புகளுக்கும், பல தொழிற் சங்கங்களுக்கும் வங்கியாகப் பணிபுரிகிறது. 1967-ஆம் ஆண்டு, இச்சங்கம் 1,68,000 'நடப்புக் கணக்கு'களையும் (Current Account) 55,000 'தவணை வைப்புக் கணக்கு'களையும் (Fixed Deposit Account) பெற்றிருந்தது. 1967-ஆம் ஆண்டு, இதன் சொத்துக்களின் மதிப்பு £ 177 மிலியனாகும். 1966-ஆம் ஆண்டு, உறுப்பினர்களின் வைப்புத் தொகை £ 145 மிலியன் என்று தெரியு

வருகின்றது. கட்டிடக்கலை, கட்டிடங்கள், இயந்திரத் தொழில் முதலானவற்றில் இச்சங்கம் தன்னிறைவு பெற்று விளங்குகின்றது. பல பெரிய விற்பனைக் கடைகளை இங்கிலாந்து முழுவதும் இச்சங்கம் பெற்றுள்ளது. தொடங்கி நூறாண்டுகளுக்கு மேலாகியும் இம்மொத்த விற்பனைச்சங்கம் நாள்தோறும் வளர்ந்து வருகிறது. இச்சங்கம் வேலை வாய்ப்புகளையும் பெருக்கி வருகின்றது. இச்சங்கத்தின் கீழ் சுமார் 53,000 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் பெறும் ஊதியத் தொகை சுமார் £ 31 மிலியனாகும்.

இனி, இம்மொத்த விற்பனைச் சங்கத்தைப் போலவே ஸ்காட்லாந்தில் இயங்கி வரும் மொத்த விற்பனைச் சங்கத்தை ஆராய்வோம்.

ஸ்காட்லாந்து மொத்த விற்பனைச் சங்கம் (Scottish Co-operative Wholesale Society)

ஸ்காட்லாந்தில் இயங்கி வந்த 'நுகர்வோர் கூட்டுறவு சில்லறை விற்பனைச் சங்கங்கள்' ஒன்று சேர்ந்து கூட்டுறவு அடிப்படையில் ஒரு மொத்த விற்பனைச் சங்கத்தை 1868–ஆம் ஆண்டு தொடங்கின. இதன் தலைமை அலுவலகம் 'கிளாஸ்கோ (Glasgow) நகரில் அமைக்கப் பட்டுள்ளது. உறுப்பினர் சங்கங்களுக்குத் தேவையான பொருள்களைக் கொள்முதல் செய்து அளிப்பதே இக்கூட்டமைப்புச் சங்கத்தின் முக்கியப் பணியாகும். 1966–ஆம் ஆண்டு, இம்மொத்த விற்பனைச் சங்கம் £ 92 மிலியன் மதிப்புள்ள பொருள்களை விற்பனை செய்துள்ளது. இது 1963 ஆம் ஆண்டு விற்பனையைவிட £ 4 மிலியன் அதிகமாகும். மொத்த விற்பனையில் 70% உறுப்பினர்களுக்குச் செய்யப்படுகிறது. இச்சங்கத்தின் 'உற்பத்திப் பிரிவு' பல தொழிற்சாலைகளை அமைத்துள்ளது. 1966-ஆம் ஆண்டு £ 22 மிலியன் மதிப்புள்ள பல்வேறு பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இது 1962-ஆம் ஆண்டு உற்பத்தியைவிட £ 2 மிலியன் குறைவாகும். இங்கிலாந்து மொத்த விற்பனைச் சங்கத்தைப் போலவே இச்சங்கமும் ஒரு வங்கியல் பிரிவைப் பெற்றுள்ளது. 1948-ஆம் ஆண்டு இப்பிரிவு தொடங்கப்பட்டது. இவ்வங்கி 63,000 நடப்புக் கணக்குகளையும், நிலையான வைப்புக் கணக்குகளையும் பெற்று விளங்குகிறது. 1965-ஆம் ஆண்டு இறுதியில். இவ்வங்கி £ 2.57 மிலியனை நடப்புக் கணக்குகளிலும், £ 13.4 மிலியனை மற்ற வைப்புக் கணக்குகளிலும் பெற்றிருந்தது. நிதி வசதிகளை நாடும் உறுப்பினர் சங்கங்களுக்குக் கடனுதவிகளையும் செய்து வருகின்றது இச்சங்கம்,

1965-ஆம் ஆண்டு இறுதியில் இச்சங்கம் வழங்கியிருந்த மொத்தக் கடன்கள் £ 1.83 மிலியன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் பங்கு மூலதனம் £ 5 மிலியனாகும். காப்பிருப்புகளின் மொத்த மதிப்பு £ 8.7 மிலியனாகும். 1965—'66 ஆம் ஆண்டின் இலாபத் தொகை £ 1 மிலியனாகும். நாடு முழுவதும் பல கிடங்குகளைப் பெற்றுள்ளது இச்சங்கம். எனவே, உறுப்பினர் சங்கங்களுக்குத் தேவையான பொருள்களைத் தாமதமின்றி விநியோகம் செய்ய முடிகின்றது. கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கமும், ஸ்காட்லாந்து கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கமும் 'பிரித்தானிய லூமா மின் விளக்குச் சங்கத்தில்', (British Luma Electric Lamp Society) 'கூட்டாளி'களாகப் (Partners) பணி புரிகின்றன. இவ்விரு மொத்த விற்பனைச் சங்கங்களும் 'கூட்டுறவுக் காப்பீடு சங்கத்தில்' (Co-op. Insurance Soc.) உறுப்பினர்களாக விளங்குகின்றன. இக்காப்பீட்டுக் கழகம் இந்நாட்டில் இயங்கும் அமைப்புகளில் முக்கியமான கழகமாகும். இக்காப்பீட்டுக் கழகத்தின் பங்கு மூலதனம் £ 52,5000 எனத்தெரிய வருகின்றது. இக்கழகத்தின் காப்பிருப்புகள், நிதிகள் முதலானவற்றின் மொத்த மதிப்பு £ 6,5 மிலியன் ஆகும். இச்சங்கத்தின். நடைமுறை முதல் (Working Capital) £ 400 மிலியனாகும். 1967-ஆம் ஆண்டு, இச்சங்கத்தின் காப்பீட்டுக் கட்டணத்தொகை £ 83,374,104எனப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இதே ஆண்டில் இச்சங்கத்தின் இலாபத்தொகை £ 16,680,000 எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

1923-ஆம் ஆண்டு, இவ்விரு மொத்த விற்பனைச் சங்கங்களும் (C.W.S. & S.C.W.S.) ஒரு கூட்டமைப்பை உருவாக்கித் தேயிலை, காப்பி, சாக்லெட் முதலான பொருள்களின் வியாபாரத்தில் ஈடுபட்டன. இச்சங்கம் தென்னிந்தியா (South India) 'டான்ஜானியா (Tanzania) இலங்கை(Ceylon) போன்ற நாடுகளில் சொந்தமாகத் தேயிலைத் தோட்டங்களைப் பெற்றுள்ளது. 1965-ஆம் ஆண்டு இச்சங்கத்தின் மொத்த விற்பனை £ 20 மிலியனாகும். இதன் மூலம் £ 1 மிலியன் தொகையை இலாபமாகப் பெற்றது இச்சங்கம். 1965 ஆம் ஆண்டு இறுதியில் இச்சங்கத்தின் பங்கு மூலதனம் £ 3 மிலியன் என்றும் காப்பிருப்புகள் £ 4 மிலியன் என்றும் தெரிகின்றது.

உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
(Producers' Co-op. Socs.)

இதுவரை கண்ட விற்பனைச் சங்கங்களைத் தவிர, வேறு சில கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டாண்மை அடிப்படையிலும், இலாபப்

பங்கீடு அடிப்படையிலும் (Profit Sharing Basis) உற்பத்தித் துறையில் இயங்கிவந்தன. இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது 36 இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள் யாவும் 'கூட்டுறவு உற்பத்திக் கூட்டிணைப்பில்' (Co-operative Production Federation) உறுப்பினர்களாக விளங்குகின்றன. இச்சங்கங்கள் சட்டப்படி அங்கீகரிக்கப் பட்டவையாகும். உற்பத்திக் கூட்டமைப்பு ஆடைகள், காலணிகள் முதலான பொருள்களை உற்பத்தி செய்கின்றது. 1962-ஆம் ஆண்டு இக்கூட்டமைப்பு 4566 தொழிலாளர்களைக் கொண்டிருந்தது. இக்கூட்டமைப்பின் வணிகம் சுமார் £ 7 மிலியனாகும்.

வெற்றியின் இரகசியம்

இங்கிலாந்தில் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. உலக நாடுகள் அனைத்தும் இவ்வியக்கத்தை முன்னோடியாகக் கொண்டே தங்கள் நாட்டில் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டக சாலைகளை அமைத்துள்ளன. உலகிற்கே வழிகாட்டியாக விளங்குகிறது இங்கிலாந்தின் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம்.

இனி இவ்வியக்கத்தின் வெற்றிக்கான காரணங்களைக் காண்போம்:

1. கூட்டுறவுக் கொள்கைகள் இவ்வியக்கத்தில் மிகச் சிறந்த முறையில் கடைப் பிடிக்கப்பட்டன. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இக்கொள்கைகளின் அடிப்படையிலேயே அமைக்கப் பட்டன.

2. இச்சங்கங்களில் தொழிலாளர்கள் உண்மையுடனும், நேர்மையுடனும் உழைத்தனர். தொழிலாளிகளுக்கும் சங்கங்களுக்குமிடையே நல்லுறவு நிலவியது.

3. மொத்த விற்பனைச் சங்கங்களும், பிற விற்பனைச் சங்கங்களும் விற்பனைப் பணியுடன் வங்கியல் தொழிலையும் நடத்தி வருகின்றன. எனவே, நிதிநிலை எப்பொழுதும் பாதிக்கப்படுவதில்லை.

4. இவ்வியக்கத்தின் பெரு வெற்றியில் பெண்களுக்கும் பெரும் பங்குள்ளது. பொருள்களைக் கொள்முதல் செய்வதில் இவர்கள் தீவிர அக்கறை காட்டினர்,

5. இங்கிலாந்தின் இவ்வியக்கம் மக்களால் தொடங்கப்பட்டதாகும். மக்களின் உழைப்பு பெருகும் வெற்றி நல்குவது இயற்கை,

6. இச்சங்கங்கள் எதிர்ப்பட்ட எல்லா பிரச்சினைகளையும் தாமே எளிதாகத் தீர்த்துக் கொண்டன. ஒவ்வொரு பிரச்சினைக்கும் மற்றவர் தலையீடின்றி தாங்களே தீர்வு கண்டனர்.

7. இலாபத்தொகை முழுவதும் உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப் படுவதில்லை. ஒரு கணிசமான தொகை 'காப்பிருப்பு' களில் ஒதுக்கப்பட்டதால் நிதிப் பற்றுக்குறை ஏற்படும்போது இச்சங்கங்கள் பாதிக்கப் படுவதில்லை.

8. கடைசியாக, இவ்வியக்கத்தின் வெற்றி முறையான நிருவாகத்தினால் ஏற்பட்டதாகும். ஒவ்வொரு விற்பனைச் சங்கமும், பண்டகசாலையும், விற்பனைக் கடையும் சிறந்த முறையில் நிருவகிக்கப் படுகின்றது.

9. அரசாங்கத்தின் ஆதரவும் இச்சங்கங்களுக்கு அவ்வப்போது கிடைத்து வந்தது.

குறைபாடுகளும் அவற்றிற்கான தீர்வுகளும்

இத் துணைச் சிறப்புடன் இயங்கும் இந் நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தில் குறைபாடுகளும் இல்லாமலில்லை. 1955-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட 'ஓர் ஆணைக்குழு' (Commission) இவ்வியக்கத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை நன்கு ஆராய்ந்து முடிவில் தன் கருத்துக்களைக் கொண்ட அறிக்கையைக் கூட்டுறவு இணைப்புச் சங்கத்திடம் சமர்ப்பித்தது. இவ்வியக்கத்தில் மலிந்திருந்த குறைபாடுகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தன. இவ்வறிக்கையின் மூலம் பல உண்மைகள் வெளிப்பட்டன. தனியார் துறையில் இயங்கி வந்த பண்டகசாலைகள் பெருமளவில் வணிகத்தைப் பெருக்கியுள்ளன. ஆனால் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அத்துணை அளவிற்கு விற்பனையைப் பெருக்கவில்லை. விற்பனையில் கணிசமான முன்னேற்றம் ஏற்படவே இல்லை. உணவுப் பொருள்கள், காலணிகள், போன்ற பொருள்களின் விற்பனை 13.6 சத விகிதத்திலிருந்து 7.8 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.

மேலும், பல பண்டகசாலைகள் அளவில் மிகச் சிறியனவாக இருப்பதையும் இவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது. சங்கங்களிடையே தேவையற்ற போட்டியும் உருவாகியுள்ளன. பெரும்பாலான விற்பனைச் சங்கங்கள் 15-க்கும் குறைவான விற்பனைக் கடைகளையே பெற்றுள்ளன. தனியார் துறையில் இயங்கும் பண்டகசாலைகளைப் போல் இயங்க இவ்விற்பனைச் சங்கங்கள் தவறி விட்டன என்பதையும் இவ்வறிக்கை தெளிவாகப் புடம்

பிடித்துக் காட்டியுள்ளது. மேற் கூறியுள்ள குறைபாடுகளைக் களைவதற்கும் இவ்வறிக்கை வழிமுறைகளைக் காட்டியுள்ளது.

1. விற்பனைச் சங்கங்களின் நிர்வாகத்தைக் கவனிப்பதற்கென முழு நேர நிருவாகிகள் நியமிக்கப்பட வேண்டும். அவர்களது பணிகளில் இயக்குநர் அவை அடிக்கடி தலையிடுதல் கூடாது.

2. சிறு விற்பனைச் சங்கங்கள் போட்டியைத் தவிர்ப்பதற்காக தங்களுக்குள் 'தொழில் இணைப்பை' ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

3, விற்பனைச் சங்கங்களை வழிநடத்திச் செல்லவும், அவைகளுக்கு ஆலோசனைகள் வழங்குவதற்கும் தகுதியான ஒரு 'கூட்டுறவு சில்லறை விற்பனை முன்னேற்றச் சங்கம்' (Cooperative Retail Development Society) அமைக்கப்பட வேண்டும்.

4. அங்காடிகளின் விலையை நன்கு பரிசீலித்து, பொருள்களின் விலையை நியாயமான முறையில் நிருணயம் செய்திடல் வேண்டும்.

மேலும் பல கூட்டுறவாளர்கள் இவ்வியக்கத்தில் காணப்பட்ட குறைகளை நன்கு சுட்டிக் காட்டத் தொடங்கினர். 1958-ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு மகாநாட்டில் இயக்குநர் ஒருவர் (C.W.S.) இக்குறைகளை நன்கு விளக்கிக் கூறியுள்ளார். அவரது கருத்துப்படி, சங்கங்களிடையே காணப்படும் ஒற்றுமையின்மை, உற்பத்திக் குறைவு, தவறான விலை நிருணயம், தரமற்ற பொருள்கள் முதலானவையே இவ்வியக்கத்தின் சரிவிற்குக் காரணங்களாகும். இக்குறைபாடுகளை நீக்குவதற்கு அவரே வழிமுறைகளையும் காட்டியுள்ளார்.

1. பொருள்கள் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட வேண்டும். பொருள்கள் 'தனித் துறைப் பயிச்சி' (Specialisation) மூலம் உற்பத்தி செய்யப்படின், பொருள்களின் தரம் உயரும்; செலவு குறையும்,

2. உற்பத்திப் பிரிவுகளுக்கும் மொத்த விற்பனைச் சங்கங்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பும், நல்லுறவும் ஏற்பட வேண்டும்;

3. நவீன வியாபாரக் கொள்கைகள் சிறந்த முறையில் கையாளப்பட்டு விற்பனை உயர்த்தப் பட வேண்டும்;

4. விற்பனை அதிகரிக்கத் தக்கவகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்;

5. மாறிவரும் அங்காடி நிலைமைகளை அவ்வப்போது ஆராய்ந்து அதற் கேற்பத் திட்டங்களை மாற்றியமைத்தல்.

குறைகளை நீக்கத்தக்க இப் பரிகாரங்கள் (Remedies) இங்கிலாந்திற்கு மட்டுமின்றி, உலக நாடுகள் அனைத்திற்கும் பொருந்தும்.

கூட்டுறவு இணைப்புச் சங்கம்
(Co-operative Union Ltd.)

பிரித்தானிய நாட்டில் இயங்கி வந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கும், அயர்லாந்தில் இயங்கி வந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உறுதுணையாக ஒரு 'மத்திய அமைப்பு' (Central Organisation) 18r9-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இவ்வாறு அமைக்கப் பட்ட அமைப்பே 'கூட்டுறவு இணைப்புச் சங்கம்' என வழங்கப்படுகிறது. இச்சங்கம் மான்செஸ்டரில் தொடங்கப்பட்டதாகும். இச் சங்கம் 800 சில்லறை விற்பனைச் சங்கங்களையும், 68 உள்ளூர்க் கூட்டமைப்புகளையும், 36 உற்பத்திச் சங்கங்களையும் உறுப்பினர்களாகப் பெற்றுள்ளது. இங்கிலாந்து மொத்த விற்பனைச் சங்கமும் (C.W.S.), ஸ்காட்லாந்து விற்பனைச் சங்கமும் (S.C.W.S.) இதன் உறுப்பினர்களாக விளங்குகின்றன. பெரும்பாலான விவசாயச் சங்கங்கள் இதனுடன் இணைக்கப்படவில்லை. கூட்டுறவுக் கொள்கைகளைப் பரப்புதலும், உறுப்பினர்களின் நலன்களைக் கவனித்தலுமே இவ்விணைப்புச் சங்கத்தின் முக்கியப் பணிகளாகும். இச்சங்கம் வணிகத்தில் ஈடுபடுவது கிடையாது. உறுப்பினர்களின் செயல்களைக் கண்காணிப்பதும் கிடையாது. சங்க உறுப்பினர்களின் கணக்கு வைப்பு முறையைத் தணிக்கை செய்வதில்லை இச்சங்கம். இவ்விணைப்புச் சங்கம் நிறைவேற்றும் தீர்மானங்களைச் செயல் படுத்தும்படி உறுப்பினர்கள் கட்டாயப் படுத்தப் படுவதில்லை. உறுப்பினர்கள், பொதுவாக, இச் சங்கத்தின் தீர்மானங்களுக்கு மறுப்பின்றி கட்டுப்படுகின்றன. இவ்விணைப்புச் சங்கம் 'தேசீய சமரச அவை'யில் (National Reconciliation Board) கூட்டாளியாக விளங்குகிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதே இத்தேசீய அமைப்பின் முக்கியப் பணியாகும்.

கூட்டுறவுக் கல்வியை நன்கு பரப்புவதும் இச்சங்கத்தின் முக்கியப் பணிகளுள் ஒன்ருகும். 1963-ஆம் ஆண்டு 506 உறுப்பினர் சங்கங்கள் இவ்விணைப்புச் சங்கத்தின் கல்வித் திட்டத்தில் பங்கேற்றுக் கல்வி வளர்ச்சிக்கென £ 5 மிலியன் வழங்கின. தபால் மூலமாகவும் கூட்டுறவுக் கல்வி புகட்டப் படுகின்றது. மேலும், 'லோபரவ்' (Loughborough) என்னும் இடத்தில் கூட்டுறவுக் கல்வியை வளர்ப்பதற்கென ஒரு கல்லூரியைத் தொடங்கியுள்ளது இக்கூட்டுறவு இணைப்புச் சங்கம். இக் கல்லூரியில் ஒரே சமயத்தில் 120 மாணவர்கள் உயர் கல்வி பெறுகின்றனர். இவ்விணைப்புச் சங்கத்திற்குத் தேவையான நிதி உதவிகள் உறுப்பினர் சங்கங்களினல் செய்யப்படுகின்றன. இவ்வாறு பெறப்படும் தொகை ஆண்டொன்றுக்கு £ 3.3 இலட்சமாகும்.

இவ்வாறு, இங்கிலாந்தில் கூட்டுறவுக் கல்வியை நன்கு பரப்புவதில் இவ்விணைப்புச் சங்கம் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றது.

விவசாயக் கூட்டுறவு
(Agricultural Co-operation)

இந்நாட்டில் விவசாயக் கூட்டுறவு சமீப காலத்தில் தோன்றியதாகும். உலக நாடுகள் எல்லாவற்றிலும் விவசாயிகள் கடன் பட்டே வாழ்கிருர்கள். ஆனல் 'பிரித்தானிய' நாட்டில் விவசாயிகளுக்குக் கடன் தொல்லைகள் கிடையாது. உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனை யேற்பாடு செய்வதிலும் இவர்கள் இன்னலுறுவதில்லை. எனினும், இவர்களுக்குச் சில தொல்லைகள் இல்லாமலில்லை. விவசாயத்திற்குத் தேவையான கருவிகள், உரங்கள், விதை, கால் நடைத் தீவனம் முதலான பொருள்கள் இவர்களுக்கு எளிதாகத் தேவையான அளவு கிடைக்கவில்லை. இத்தொல்லைகளிலிருந்து விடுபட இந்நாட்டு விவசாயிகள் ஒன்று சேர்ந்து கூட்டுறவுத் 'தேவைச் சங்கங்களை' (Requirement Societies) அமைத்தனர். முதல் கூட்டுறவுச் சங்கம் (Agricultural and Horticultural Association) 1867-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. விவசாயத்திற்குத் தேவையான பொருள்களைக் கொள் முதல் செய்து உறுப்பினர்களுக்கு நியாய விலையில் அளிப்பதையே இச் சங்கம் தன் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. தரமான பொருள்களே கொள்முதல் செய்யப்பட்டன.

இச்சங்கங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வந்தது. கால்நடைத் தீவனத்தை இச்சங்கங்களே நாளடைவில் தயாரிக்கத் தொடங்கின. சில கூட்டுறவுச் சங்கங்கள் தானியங்கள், உருளைக்கிழங்கு, முட்டை, கம்பளி போன்ற பொருள்களுக்கு விற்பனை யேற்பாட்டையும் செய்து வந்தன. சுருங்கக் கூறின் மூன்று வகைச் சங்கங்கள் உருவாகின. அவையாவன :

(i) **தேவைச் சங்கங்கள் :**

உறுப்பினர்களுக்குத் தேவையான விவசாயப் பொருள்களை இவை நியாய விலையில் வழங்கின. மொத்தமாகக் கொள்முதல் செய்யப்படுவதால், பொருள்களின் விலை சற்று குறைந்து காணப் படுகின்றது. சில சங்கங்கள் உறுப்பினர்களின் உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனை யேற்பாட்டையும் செய்து வருகின்றன.

(ii) **விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள் :**

இச்சங்கங்கள் உறுப்பினர்களின் உற்பத்திப்பொருள்களுக்கு விற்பனை யேற்பாட்டைச் செய்து வருகின்றன. ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனியாக விற்பனை யேற்பாடு செய்யப் படுகின்றது. முட்டை, பன்றி இறைச்சி, பால் பண்ணைப் பொருள்கள், கம்பளி போன்ற பொருள்களுக்கு விற்பனை யேற்பாடு இச்சங்கங்களால் செய்யப்படுகின்றது.

(iii) **சேவைச் சங்கங்கள் :**

இச்சங்கங்கள் உறுப்பினர்களுக்கு அவர்களது பணிகளில் சேவை புரிந்து வருகின்றன, கால்நடை வளர்ப்பு, கோழிவளர்ப்பு விதையைச் சுத்திகரித்தல் போன்ற பல காரியங்களில் இச்சங்கங்கள் உறுப்பினர்கட்கு உறுதுணையாக விளங்குகின்றன. பண்ணைக் கட்டிடங்களைக் கட்டும் முறை, விவசாய இயந்திரங்களை இயக்கும் முறை போன்ற தொழில்நுட்ப உதவிகளும் உறுப்பினர்களுக்கு அளிக்கப் படுகின்றன.

இம்மூன்று வகைக் கூட்டுறவுச் சங்கங்களுமே உறுப்பினர்களுக்குப் பேருதவி புரிந்து வருகின்றன.

1965-ஆம் ஆண்டு விவசாயச் சங்கங்கள் எவ்வாறு விளங்கின

என்பதைக் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களைக் கொண்டு எளிதில் அறியலாம்.

விபரம்	தேவைச் சங்கங்கள்	விற்பனை யேற்பாட்டுச் சங்கங்கள்	சேவைச் சங்கங்களும் பிற சங்கங்களும்
சங்கங்களின் எண்ணிக்கை	83	82	779
உறுப்பினர்கள்	0 . 16 மிலியன்	0.19 மிலியன்	0.06 மிலியன்
பங்கு மூலதனம்	£ 13 . 05 ,,	£ 3.00 ,,	£ ·20 ,,
காப்பிருப்புகள்	£ 4 . 00 ,,	£ 1.44 ,,	£ ·16 ,,
ஆண்டுவிற்பனை	£ 145 . 40 ,,	£ 126.00 ,,	£ 6·00 ,,
மொத்த சொத்துக்கள்	£ 34 . 80 ,,	£ 8.63 ,,	£ .74 ,,

இச்சங்கங்களைத் தவிர, 'பொது நோக்குச் சங்கங்கள்' (General Purpose Socs.) தற்போது மிகவும் பிரபலம் அடைந்து வருகின்றன. இச்சங்கங்கள் பெரும்பாலும் நகரங்களிலேயே அமைக்கப்படுகின்றன. இவைகளுக் கருகாமையிலேயே பண்டகங்கள், ஆய்வுக் கூடங்கள், இயந்திரங்களைப் பழுதுபார்க்கும் நிலையங்கள் போன்றவை அமைக்கப் பட்டுள்ளன. 1962-ஆம் ஆண்டு எல்லா விவசாயச் சங்கங்களின் மொத்த விற்பனை £ 223 மிலியனாகும். இதில் £ 114 மிலியன் விவசாயப் பொருள்களை விற்பனை செய்தமையால் பெறப் பட்டதாகும். விற்பனை யேற்பாடு செய்ததன் மூலம் £ 107 மிலியன் இச்சங்கங்களை வந்தடைந்தது. எஞ்சிய தொகை உறுப்பினர்களுக்குச் செய்த சேவைகள் மூலமாகக் கிடைத்ததாகும்.

இங்கிலாந்தின் விவசாயச் சங்கங்கள் 1956-ஆம் ஆண்டு 'விவசாய மத்தியக் கூட்டுறவுச் சங்கம்' என்ற கூட்டமைப்பை உருவாக்கின.

விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றிய புள்ளி விவரங்கள் சேகரித்தல், வெளிநாட்டு ஒப்பந்தங்களைப் பரிசீலித்தல் முதலான பணிகளைக் கவனிப்பதற்கென்றே இக்கூட்டமைப்பு தொடங்கப் பட்டது. சந்தைகளில் ஏற்படும் மாற்றங்களை இக்கூட்டமைப்பு உன்னிப்பாகக் கவனிக்கின்றது. வரிவிதிப்பு சம்பந்தமான விதி முறைகள், வணிகப் பழக்க வழக்கங்கள், அரசாங்க மானியம்

முதலான பல முக்கியப் பிரச்சினைகளுக்கு இக்கூட்டமைப்பே தீர்வு காண்கிறது. 1964-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட விவசாயச் சட்டத்தை (Agricultural and Horticultural Act) உருவாக்கியதில் இக்கூட்டமைப்புக்குப் பெரும் பங்குண்டு. தற்போது, கூட்டுறவுக் கொள்கைகளை நாடெங்கும் பரப்புவதற்கென ஒரு 'பத்திரிகை'யைத் (Farming Business) தொடங்கியுள்ளது இவ்விவசாயக் கூட்டமைப்பு. இக்கூட்டமைப்பு இங்கிலாந்தில் மட்டுமே சேவை புரிந்து வருகின்றது. ஸ்காட்லாந்தில் இயங்கிவரும் விவசாயச் சங்கங்கள் 1905-ஆம் ஆண்டு 'ஸ்காட்லாந்து விவசாய அமைப்புச் சங்கம்' (Scottish Agricultural Organisation Society) என்ற ஒரு கூட்டமைப்பைத் தொடங்கின. இதைப் போன்றே, 1922-ஆம் ஆண்டு 'வேல்ஸ்' விவசாயச் சங்கங்களாலும் ஒரு கூட்டமைப்பு அமைக்கப்பட்டது. ஏறக்குறைய இம்மூன்று கூட்டமைப்புகளுமே (A. C. C. A., S. A. O. S. & W. A. O. S.) ஒரே வித பணிகளையே செய்து வருகின்றன.

இங்கிலாந்து விவசாயச் சங்கங்கள் பொதுவாக, அரசாங்கத்திடமிருந்து நிதி உதவிகளை எதிர்பார்ப்பதே இல்லை. மேலும், நிதி வசதிகளை அளிப்பதற்கென்று மத்திய நிறுவனத்தையும் இச்சங்கங்கள் நிறுவவில்லை. உறுப்பினர்களின் பங்கு மூலதனத்தை இவ்விவசாயச் சங்கங்கள் பெரிதும் நம்பியுள்ளன. உறுப்பினர்கள் மேலும் மேலும் பங்கு மூலதனம் அளிக்கத்தக்க வகையில் ஊக்குவிக்கப் படுகின்றனர்.

தற்போது, இங்கிலாந்தின் விவசாயச் சங்கங்கள் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கத்தின் (C.W.S.) துணையுடன் ஒரு 'விவசாய நிதிக் கூட்டமைப்பை' (Agricultural Finance Federation) உருவாக்கியுள்ளன. இக்கூட்டமைப்பு விவசாயிகளுக்குத் தேவையான அளவு கடனுதவிகள் அளித்து வருகின்றது. விவசாய இயந்திரங்கள், பிற கருவிகள் முதலானவை இக்கடன் தொகை கொண்டு வாங்கப்படுகின்றன.

விவசாயக் கூட்டுறவுச்சங்கங்கள் தங்களுக்குத் தேவையான விவசாயப் பொருள்களைப் பெறுவதற்கெனக் கூட்டமைப்புகளை அமைக்கவில்லை. இச்சங்கங்கள் மொத்த விற்பனைச் சங்கத்துடன் இணைக்கப் பட்டுள்ளன. மொத்த விற்பனைச் சங்கம் (C.W.S.) விவசாய வளர்ச்சிக்கென ஒரு தனிப் பிரிவையே நிர்வகித்து வருகின்றது. 1966-ஆம் ஆண்டு, இவ்விவசாயப் பிரிவின் மொத்த விற்பனை £ 35 மிலியனாகும்.

அரசின் பங்கும் கூட்டுறவு அமைப்புகளின் வளர்ச்சியும்

'பிரித்தானிய' நாட்டில் கூட்டுறவுக் கென்று தனி 'இலாகா' (Department) இல்லை. கூட்டுறவுச் சங்கங்கள் 'தலைமைப் பதிவாளரிடம்' (Chief Registrar) பதிவு செய்யப் படுகின்றன. 1898-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டப்படியும் (Industrial and Provident Societies Act) கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்து கொள்ளப் படலாம். இச்சட்டத்தின் மூலம் துணைச் சங்கங்கள் தோன்றவும் வழி ஏற்பட்டது. இச்சட்டத்தின் விதிப்படி, கூட்டுறவுச் சங்க உறுப்பினர் எவரும் £ 1,000 மதிப்புள்ள பங்குகளுக்கு மேல் வைத்திருக்க இயலாது. உறுப்பினரல்லாதவர்களுக்கும் பண்டங்களை விற்பனை செய்யலாம். கூட்டுறவுச் சங்கங்கள் 'காப்பு நிதி' யை ஏற்படுத்தும்படி கட்டாயப் படுத்தப் படுவதில்லை. 'வருமான மிகுதி' (Surplus) அடிப்படையில் வரித் தொகை அரசிற்குச் செலுத்தப்படுகிறது. 1969-ஆம் ஆண்டிலிருந்து இங்கிலாந்துக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏனைய 'பங்கமைப்பு'களைப் போலவே 15 சதவிகித இலாபத் தொகையை வரியாக வழங்குகின்றன. உறுப்பினர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் செய்திருக்கும் மூலதனத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் பெறும் வட்டித் தொகையைக் கணக்கிட்டு 'வருமான வரி' (Income Tax) விதிக்கப்படுகின்றது.

இங்கிலாந்துக் கூட்டுறவு இயக்கம் அரசாங்க உதவிகளைப் பெற்று திட்டங்களைச் செயல் படுத்துவதில்லை. இத் தன்னியலான இயக்கம் அரசாங்க உதவியின்றிச் சுதந்தரமாக இயங்கும் மக்கள் இயக்கமாகும். அரசிடமிருந்து கடனுதவிகளோ மானியங்களோ கூட்டுறவுச் சங்கங்கள் பெறுவதில்லை. கல்விப் பணியைச் செவ்வனே செய்வதற்கு மட்டும் ஒரு குறிப்பிட்ட தொகை அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது. நிதி உதவிகளைப் பெறாத இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கம், அரசின் தலையீடு ஏதுமின்றிச் சுதந்திரமாக இயங்குகின்றது.

விவசாய இயக்கமும் நுகர்வோர் இயக்கமும்

இவ்விரு இயக்கங்களும் வெவ்வேறு குறிக்கோள்கைகளைக் கொண்டவையாகும். இவ்விரு இயக்கங்களுக்கும் பொதுவான கொள்கைகள் இல்லாதிருந்தாலும், இவையிடையே நெருங்கிய தொடர்பு நிலவுகின்றது. விவசாயக் கூட்டுறவு நுகர்வோர் இயக்கத்திடமிருந்து நல்லாதரவைப் பெறுகின்றது.

இங்கிலாந்தில் விவசாயிகளின் நலன் கருதி இயங்கும் 'தேவைச் சங்கங்கள்' தங்களுக்குத் தேவையான பொருள்களைக் கொள்முதல் செய்வதற்காக மொத்த விற்பனைச் சங்கத்தை (C.W.S.) நாடுகின்றன. ஒரு பக்கத்தில் 'தேவைச் சங்கங்களுக்கு' தேவையான பொருள்களை விற்பனை செய்யும் கூட்டுறவு மொத்த விற்பனைச்சங்கம், மறு புறத்தில் தனக்குத் தேவையான பொருள்களை விவசாயக் கூட்டுறவு விற்பனையேற்பாட்டுச் சங்கங் களிடமிருந்து பெறுகின்றது. இத்தகைய நெருங்கிய தொடர்பை இவ்விரு இயக்கங்களிடையே நாம் கண்கூடாகக் காணமுடி கின்றது'

இங்கிலாந்தின் கூட்டுறவு இயக்கம் தொடக்கத்தில் பல இடர்ப்பாடுகளைக் கண்ணுற்றாலும் சலியா உழைப்பினால் அவைகள் எளிதில் களையப்பட்டன.

இங்கிலாந்தின் கூட்டுறவு இயக்கம் காலமறிந்து தொடங்கப் பட்ட மக்கள் இயக்கமாகும். தாய்க்குத் தன் குழந்தையின் அருமை தெரிவது போல, மக்கள் தங்கள் கண்டு பிடிப்பான கூட்டுறவு இயக்கத்தை அரும்பாடு பட்டு வளர்த்தனர்,

இயற்கையாகவே இங்கிலாந்து நாடு தரமான வாழ்க்கை நிலையைப் பெற்றுள்ள நாடாகும்.

மண்வளம் நிறைந்த இடத்தில் தரமான விதையை விதைத்தது போல, மனவளம் நிறைந்த மக்களிடையே கூட்டுறவுக்கான விதை விதைக்கப்பட்டது. கூட்டுறவு இயக் கத்தின் மூலம் ஏனைய நாடுகளுக்கு முன்னோடியாகவும் விளங்க லாயிற்று இங்கிலாந்து.

அரசியல், பொருளியல், வங்கியல் போன்ற பல துறைக ளிலும் இங்கிலாந்து தனது வெற்றி முத்திரையை அழுத்தமாகப் பதித்துள்ளதை உலகு அறியும். கூட்டுறவு இயக்கத்திலும் இந் நாடு பெரு வெற்றி பெற்று, பிற நாடுகளுக்கு உதாரணமாக விளங்குகின்றது.

3. ஜெர்மானிய நாட்டில் கூட்டுறவு இயக்கம்
(Co-operative Movement in Germany)

முன்னுரை :

உலக வரலாற்றில் ஜெர்மானிய நாட்டிற்கு ஒரு முக்கிய இடமுண்டு. கூட்டுறவு வரலாற்றில் இந்நாட்டிற்குப் பெரும் பங்குண்டு. கூட்டுறவுத் துறையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்தியது இந்நாடேயாகும். இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கம் 'கூட்டுறவுக் கடன் இயக்கம்' (Co-operative Credit Movement) அல்லது 'கூட்டுறவு வங்கி முறை' (Co-op. Banking) என அழைக்கப் படுகின்றது. 19-ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் ஜெர்மன் நாட்டு மக்கள் பட்ட இன்னல்கள் கணக்கிலடங்கா. கிராமப் புறங்களிலும், நகரங்களிலும் வாழ்ந்து வந்த விவசாயிகள் தொழிலாளிகள் முதலானோர் வாழ வழியற்ற நிலையில் தவித்தனர். வாழ்க்கைக்குத் தேவையான குறைந்த வசதிகளைக் கூட அவர்கள் பெற்றிருக்கவில்லை. நாடு முழுவதும் பசி, பஞ்சம், நோய் முதலான துன்பங்களே மலிந்திருந்தன. தேவைப் பொருள்கள் மலிந்து காணப்படவில்லை. விவசாயிகளும், தொழிலாளர்களும் தங்கள் தொழில்களைச் சிறந்த முறையில் செய்வதற்குத் தேவையான நிதி வசதிகளைப் பெற இயலாமல் இன்னலுற்றனர். நிதித்தேவை ஏற்படும் போதெல்லாம் அவர்கள் 'வட்டித் தொழிலர்'களையே (Money Lenders) அணுகினர். வசதியற்ற நிலையில் வாடிக் கிடந்த இந்நாட்டு மக்கள் வட்டித் தொழிலர்களின் கடும் வட்டியினால் மேலும் பாதிக்கப் படலாயினர். இவர்களுக்குத் தேவையான நிதி வசதிகளை அளிக்க வேறு நிறுவனங்களும் அப்போதைய ஜெர்மனியில் இல்லை. நிதி வசதிகளை அளிப்பதில் இவ்வட்டித் தொழிலர்கள் (Jews) முற்றுரிமை பெற்றிருந்தனர். இத்தகைய சூழ்நிலைகளில் வறுமை ஒன்றையே துணைகொண்டு வாழ்ந்து வந்தனர் இந்நாட்டுப் பெருங்குடி மக்கள். சிலந்தி வலையில்

சிக்கிய பூச்சியைப் போல இந் நாட்டு விவசாயிகளும், தொழிலா ளர்களும் வட்டித் தொழிலர்களது பிடியில் சிக்கியிருந்தனர். ஆயிரமாயிரம் குடும்பங்கள் இவர்களால் சீரழிந்தன. சுருங்கக் கூறின், ஜெர்மானிய நாடே நரகமென விளங்கிற்று. இந்நிலையில் தான் கூட்டுறவு இயக்கம் இந்நாட்டில் அடியெடுத்து வைத்தது.

இயக்கத்தின் தூண்கள்:

ஜெர்மானிய நாட்டில் கூட்டுறவு இயக்கம் தோன்றுவதற்குக் காரணமாக விளங்கியவர்கள் 'சூல்ஸ்' (Herr Schulze), 'ரைபீசன் (Herr F.W Raiffeisen). என்ற இருவராவர். உருவாக்கிய இயக் கத்தை முறையாக வளர்த்தவர்களும் இவர்களேயாவர். எனவே, முன்னோடிகளான இவர்களைக் கூட்டுறவு இயக்கத்தின் தூண்கள் என அழைப்பதில் தவறில்லையல்லவா?

சூல்ஸ் (1808—1883) 'டெலிச்' (Delizsch) என்ற நகருக்கு நகரத் தந்தையாகப் (Mayor) பணிபுரிந்து வந்தார். நகரங்களில் வங்கிகள் (Town Banks) தோன்றுவதற்கு இவரே காரணமாக விளங்கினார். இத்தருணத்தில்தான் விவசாயிகளும் தொழிலாளி களும் யூதர்களிடம் கடன் பட்டு வாழ்ந்துவந்தனர். தங்களுக்குத் தேவையான பொருள்களைக் கொள்முதல் செய்வதற்குத் தேவையான நிதிவசதிகளை இவ்வட்டித் தொழிலர்களிடமே பெற்றனர். உற்பத்திப் பொருள்களை இவர்களிடம் ஒப்படைத்து வந்தனர். இதன் விளைவாக, உழைக்கும் தங்களுக்கு உண்ண உணவு இல்லாத நிலை உருவாகியது. இந்நிலையில் இயற் கையின் சீற்றத்தினால் எழுந்த விளைவுகளும், பாதிக்கப்பட்ட மக்களை மேலும் வறுத்தின.

நலிவே கண்டறிந்த மக்களை நல்ல முறையில் வாழ வைப்ப தற்காக 'சூல்ஸ்' எனப்படும் தலை சிறந்த கூட்டுறவாளர் பெரு முயற்சி எடுக்கலானார். இவர் நீதிபதியாகவும் பணி புரிந்து வந்தார். ஏழை மக்களின் வாழ்வை மாற்றியமைக்க விரும்பிய இவர் தனது நீதிபதிப் பதவியைத் துறந்து பொது வாழ்வில் ஈடுபடலானார். இவர் நாட்டில் மலிந்திருந்த பஞ்சம், வறுமை போன்ற இடர்ப்பாடுகளை ஆய்வதற்காக அமைக்கப்பட்டிருந்த குழுவின் (Famine Commission) தலைவராகவும் தொண்டாற்றி வந்தார். தனது நண்பர்களின் உதவியோடு ஒரு ரொட்டி உற்பத்திச் சாலையைத் தொடங்கி ஏழை மக்களுக்கு இலவசமாக ரொட்டி வகைகளை வழங்கி வந்தார். தன்னுதவி, ஒருவருக் கொருவர் உதவி செய்து கொள்ளுதல் (Self help and mutual help) என்ற இரு கொள்கைகளைக் கொண்டே வறுமைப் பேயை

விரட்ட இயலும் என்பதை நன்கு உணர்ந்த இக்கூட்டுறவாளர் இக்கொள்கைகளை அடித்தளமாகக் கொண்ட 1849-ஆம் ஆண்டு, காலணி தயாரிப்பில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களின் நலன் கருதி முதற் கூட்டுறவு அமைப்பைத் தொடங்கினர். உறுப்பினர்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை மொத்த மாகக் கொள்முதல் செய்து தேவையான போது அவர்களுக்கு அளிப்பதையே இக்கூட்டுறவுக் கழகம் கொள்கையாகக் கொண்டி ருந்தது. 1850-ஆம் ஆண்டு, இவர் முதன் முதலில் தனது சொந்த நகரில் ஒரு கூட்டுறவுக் கடன் சங்கத்தை'த் (Credit Soc.) தொடங்கினர். தேவையான நிதிவசதிகளைப் பெற்று கழக உறுப் பினர்களுக்குத் தேவையான தருணங்களில் கடனுதவிகள் அளிப் பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது இக்கூட்டுறவுச் சங்கம். இவ்வாறு தொடங்கப்பட்ட இக்கூட்டுறவுச் சங்கம் நகர மக்களிடையே பெரும் செல்வாக்குப் பெறலாயிற்று. மிகக் குறுகிய காலத்தில், இச்சங்கங்களின் எண்ணிக்கை கணிசமாக உயர லாயிற்று. 1859-ஆம் ஆண்டு இவர் வங்கிகளின் பிரதிநிதிகளை அழைத்து ஒரு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கருத்தரங்கை நடத் தினர். இக்கூட்ட முடிவில், ஜெர்மன் தொழிற்சங்கங்களின் நலனுக்காக 'ஒரு பொது இணைப்புச் சங்கம்' (General Union) அமைக்கப் படவேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டது. இத் தீர்மானம் ஏட்டளவில் நில்லாமல் உடனே செயல் படுத்தவும் பட்டது. இக்கூட்டுறவு அமைப்பின் தலைவராக இவர் தேர்ந் தெடுக்கப்பட்டு, இயற்கை எய்தும் வரை இப்பதவியின் பெருமையை உயர்த்திக் காட்டினர். 1889-ஆம் ஆண்டு. 'புருசியா' நாட்டுக் கூட்டுறவுச் சட்டத்தை இந்நாட்டிற்கும் ஏற்பு டையதாக அமைத்தார். இவர் இயற்கை எய்தும் போது இந் நாட்டில் 1926 வலிமையான கூட்டுறவு வங்கிகள் மக்களுக்குத் தொண்டாற்றி வந்தன.

பொது நல நோக்கம் ஒன்றையே தன் குறிக்கோளாகக் கொண்டிருந்த இவர் தன் முயற்சியில் பெரு வெற்றி கண்டார். இவரது முயற்சியால் தோன்றிய இவ்வங்கிகளே உலக நாடுகள் பலவற்றிற்கும் வழிகாட்டியாக விளங்குகின்றன.

இனி, இவ்வங்கிகளின் சிறப்பியல்புகளைக் காண்போம்.

நோக்கங்கள் (Objects)

'டெலிச்' நகரில் வாழ்ந்த மக்களில் பெரும்பாலோர் கைத்தொழில்களில் ஈடுபட்டிருந்த தொழிலாளிகளேயாவர். இவர்களுக்குத் தேவையான கடன் தொகையை அதிக வட்டிக்குப்

பெற்று வந்தமையால் இவர்களது பொருளாதார நிலை உயரவே யில்லை. இந்நிலையில் இவர்களுக்குக் குறைந்த வட்டிக்குக் கடனுதவிகளை அளிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்த வங்கியை இவர் தொடங்கினார். உறுப்பினர்களுக்கு மட்டுமே கடனுதவிகள் அளிக்கப்பட்டமையால் நகரில் பெரும்பாலோர் உறுப்பினர்களாக விளங்கினர்.

உறுப்பினர் நிலை (Membership)

இவரால் தொடங்கப்பட்ட இவ்வங்கியின் 'செயற்பாட்டுப் பகுதி' (Area of Operation) அளவில் பெரியதாக விளங்கியதால் உறுப்பினர் எண்ணிக்கையும் அதிகமாகவே காணப்பட்டது. சில வங்கிகள் 1000-க்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டிருந்தன. பல் வேறு பகுதிகளில் வாழ்ந்தவர்கள் உறுப்பினர்களாக விளங்கியமையால், உறுப்பினர்களிடையே நெருங்கிய தொடர்பு காணப்படவில்லை.

நிருவாக அமைப்பு :

இவ்வங்கியின் நிருவாகம் மக்களாட்சி முறையில் நடைபெற்று வந்தது. சங்க நடவடிக்கைகள் யாவும் உறுப்பினர்களால் அமைக்கப்பட்ட பொதுமன்றத்தின் ஆணைப்படி நடைபெற்றன. இப்பொது மன்றம் வங்கியின் அன்றாட நிருவாகத்தைக் கவனிப்பதற்கென ஓர் இயக்குநர் அவையையும் தேர்ந்தெடுத்திருந்தது. இவ்வவையில் நிருவாகத் துறையில் நல்ல பயிற்சி பெற்றவர்கள் அங்கம் வகித்தனர். வங்கியின் சிறந்த பணிகளுக்கு இவர்களே மூலகாரணமாக விளங்கினர். செயற்பாடுகளைத் திறம்பட நடத்துவதற்கென, இவ்வங்கி மூன்று பிரிவுகளைக் கொண்டிருந்தது அவையாவன—(i) பணப் பிரிவு; (ii) கணக்கர் துறை ; (iii) பொதுப் பிரிவு. வங்கியின் ஒவ்வொரு செயலும் நன்கு கண்காணிக்கப்பட்டது. கண்காணிப்புப் பணியைச் செவ்வனே செய்வதற்குத் தனியான அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். இச்சங்கங்களுக்கென 'மத்திய வங்கி' (Central Bank) அமைக்கப்படவில்லை. எனினும், ஒரு 'மத்தியக் குழு' அமைக்கப்பட்டிருந்தது.

பொறுப்பு (Liability)

1889-ஆம் ஆண்டுவரை இவ்வங்கிகள் 'வரையறையற்ற பொறுப்பின்' அடிப்படையிலேயே தான் இயங்கி வந்தன. 1889-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் துணை கொண்டு, 'சூல்ஸ்' 'வரையறுக்கப்பட்ட பொறுப்பின்' அடிப்படையில்

வங்கிகளை அமைக்கலானார். இதன் பிறகே இந்நாட்டு மக்கள் பெருமளவில் இவ்வங்கிகளின் பால் ஈடுபாடு கொண்டனர்.

பங்கு மூலதனம்

வங்கியின் நிதி வசதிகள் பங்கு மூலதனத்தைக் கொண்டே பெறப்பட்டது. உறுப்பினராக விரும்பும் நபர் குறைந்தது ஒரு பங்கையாவது பெற வேண்டும். எவருக்கும் ஒரு பங்கிற்கு மேல் அளிக்கப்படவில்லை. பங்கின் விலை அதிகமாக நிருணயிக்கப்பட்டிருந்தது. உறுப்பினர்களிடமிருந்து ஒரு சிறிய தொகை நுழைவுக் கட்டணமாகப் பெறப்பட்டது. பங்கின் விலை உயர்வாக இருப்பின் சிறு தொழில்களை நடத்தும் நபர்கள் உறுப்பினர்களாகச் சேருவதற்குத் தயக்கம் கொள்வர் என்பதை உணர்ந்த இவ்வங்கிகள் உறுப்பினர்களாகச் சேர விரும்பும் நபர்களை ஊக்குவிப்பதற்காக வேறு வழிமுறைகளைக் கையாளத் தொடங்கின. வங்கிகளிடையே பங்குகளின் விலை மாறுபட்டு விளங்கியது. (உதாரணமாக £5-லிருந்து £ 15 வரை பங்குகளின் விலை நிருணயிக்கப்பட்டது). உறுப்பினர்கள் பங்குத் தொகையை தவணை முறையில் அளிக்கவும் அனுமதிக்கப்பட்டனர். நடைமுறை முதலைக் கணிசமாகப் பெறுவதற்காகவே பங்குகளின் விலை அதிக அளவில் நிருணயிக்கப்பட்டது. பங்குத் தொகையை முழுவதும் செலுத்திய உறுப்பினர்களுக்கே ஆண்டு முடிவில் 'இலாப ஈவு' அளிக்கப்பட்டது. எனவே, பெரும்பாலான உறுப்பினர்கள் பங்குத் தொகையை ஒரே தடவையில் செலுத்தி வந்தனர்.

காப்புநிதி (Reserve Fund)

வங்கிகளின் இலாபத் தொகையிலிருந்து எழுப்பப்படும் காப்புநிதி நடைமுறை முதலாகவும் பயன் படுத்தப்பட்டது. பங்கு மூலதனத்தில் 20 சதவிகிதம் இலாபத் தொகையிலிருந்து காப்புநிதிக்கு அளிக்கபபட்டது. கடுமையான நிதிப்பற்ருக்குறை ஏற்படும் போது மட்டுமே இந்நிதி பயன் படுததப்பட்டது. நாளடைவில் இலாபத்தில் 20 சதவிகிதம் காப்பு நிதியாக பாதுகாக்கப்பட்டது. உறுப்பினர்கள் வழங்கும் 'நுழைவுக் கட்டணத் தொகையும்' இக்காப்பு நிதியுடன் ஒன்ருகச் சேர்க்கப்பட்டது.

இவ்வங்கிகள் உறுப்பினர்களிடமிருந்தும், உறுப்பினரல்லாதவர்களிடமிருந்தும் வைப்புத் தொகையைப் பெற்றுவந்தன. 'மாற்றுச் சீட்டு தள்ளுபடி செய்தல்' (Discounting bill of exchange) மூலமாகவும் இவ்வங்கிகள் நிதி வசதிகளைக் கணிசமாகத் திரட்டி விளங்கின.

வங்கிகளின் சாதனைச் சிறப்பு

'சூல்ஸ்' என்ற சிறந்த கூட்டுறவாளர் ஒருவரால் தொடங்கப் பட்ட இவ்வங்கி மாபெரும் சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. இவ் வங்கி காலமறிந்து தொடங்கப்பட்டதாகும்.

வட்டித்தொழிலர்களின் பிடியில்சிக்கியிருந்ததொழிலாளர்கள் பெருமளவில் இவ்வங்கிகளை நாடியதில் வியப்பேதுமில்லை. வட்டித் தொழிலர்கள் பெற்ற வட்டித் தொகை மிக அதிகமாக இருந்ததால் தொழிலாளப் பெருங்குடி மக்கள் இவ்வங்கிகளை விரும்பினர். "வட்டித் தொழிலர்களை அடக்க அவர்களைத் தண்டிப்பதில் பயனில்லை; அவர்கள் தொழிலை மிகச்சிறந்த முறையில் செய்யத்தக்க ஓர் அமைப்பை உருவாக்குவதே சாலச் சிறந்த வழியாகும்" என்று நினைத்த ஜெர்மானிய நாட்டின் தலை சிறந்த கூட்டுறவாளர் அதைச் செயல் படுத்தியும் காட்டினர்.

இவ்வங்கிகளின் எண்ணிக்கை உயர உயரச், சிறு தொழில்களை நடத்தி வந்த தொழிலாளிகள், வணிகர்கன் போன்றோர் பொருளாதாரத் துறையில் வளம் பெறலாயினர். இதையொட்டி, அவர்களது வாழ்க்கை நிலையும் கணிசமாக உயர லாயிற்று.

ரைபீசன் வங்கிகள் (Raiffeisen Banks)

ஜெர்மானிய நாட்டில் கூட்டுறவு இயக்கம் நன்கு வேரூன்றக் காரணமாக இருந்த கூட்டுறவாளர் ரைபீசன் அவர்களேயாவார். 'வேயர் பச்' (Weyer Busch) என்ற நகருக்குத் தந்தையாக விளங் கிய இவர் வறுமையில் வாடிய விவசாயிகளின் துயர் துடைக்கத் தன்னாலான உதவிகளை வழங்கி வந்தார். இவர், ஒருபுறம் வறுமை யில் வாடிய விவசாயிகளையும் மறுபுறம் குருதியைக் குடிக்கும் வட்டித் தொழில்களையும் ஒரு சேரக் கண்டதால் விவசாயிகளைக் காப்பதற்கான திட்டங்களை வகுக்கலானர். அவர் வாழ்ந்த அப் பகுதியில் வறுமையொன்றே மக்களின் ஓரே சொத்தாகவும் உடை மையாகவும் விளங்கியது. வறுமைப் பேய் ஆட்சி செய்து வந்த அப்பகுதியை வளங்கொழிக்கும் பகுதியாக மாற்றம் செய்ய விரும் பிய இவர் அரசாங்கத்தை அணுகி ஏழைகளுக்கு வழங்குவதற்காக தானிய வகைகளைக் கடனுகப் பெற்று அவர்களுக்கு வழங்கினர். போக்கு வரத்து வசதிகளைப் பெருக்குவதிலும் மிகுந்த கவனம் செலுத்தினர். ரொட்டியை உண்பதற்கேற்றவாறு வாட்டி நன்கு தயாரிப்பதற்கென சில அமைப்புகளை உருவாக்கினர். ஏழைகளுக் கென ஒரு குழுவை அமைத்து அதன்மூலம் உண்மையிலேயே

வறுமையில் வாடுபவர்களுக்கு உணவுப் பொருள்களை நண்பர்களின் உதவியுடன் வழங்கினார். இவ்வகைத் தற்காலிக உதவிகள் மூலம் வறுமையை விரட்ட இயலாது என்பதை உணர்ந்திருந்த இவர், வேறு பல திட்டங்களைத் தீட்டத் தொடங்கினார்.

இந்நிலையில் இவர் 'ப்ளாமர்ஸ்பெல்டு' (Flammersfeld) என்ற வேறு நகருக்கு மாற்றலானார். இடம் மாறியதால் இவரது எண்ணங்களும் கொள்கைகளும் மாறவில்லை. 1849-ஆம் ஆண்டு வறுமையில் வாடும் விவசாயிகளுக்கென ஒரு 'கழகத்தை' (Union in Aid of Impoverished Farmers)அமைத்தார். நிதிவசதிகளைப் பெற விரும்பிய விவசாயிகள் இக்கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். அப்பகுதியில் வாழ்ந்த பல செல்வர்களின் உதவியுடன் இக்கழகம் தொடங்கப்பட்டது. இக்கழகம் வெகு விரைவில் வெற்றிக் கொடியை நாட்டியது. இதன் சிறந்த பணிகளின் மூலம் பல விவசாயிகள் யூதர்களிடமிருந்து காப்பாற்றப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து 'ஹெட்டஸ்டார்ப்' (Heddesdorf) என்ற நகரில் ஏழைகளுக்கு நலம் பயக்கும் ஒரு கூட்டுறவுச் சங்கத்தைத் (Heddesdorf Beneficient Soc.) தொடங்கினார். அப்பகுதியில் வாழ்ந்த செல்வந்தர் பலர் இச்சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்து தொகை வைப்பும் செய்தனர். இவ்வைப்புத் தொகைக்கு வட்டிப் பணம் அளிக்கப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட வைப்புத் தொகையைக்கொண்டு தேவை நிரம்பப்பெற்ற விவசாயிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் குறைந்த வட்டிக்குக் கடன் அளிக்கப்பட்டன. தொடங்கப்பட்ட எட்டாண்டுகளுக்குப் பிறகு கணக்குகளை ஆராய்ந்ததில் 'வராக்கடன்கள்' என்ற பிரச்சினையே எழவில்லை. இவ்வங்கியின் 'செயற்குழு' நிருவாகப் பொறுப்புகளைத் திறம்படக் கவனித்துக் கொண்டது. வங்கியின் உறுப்பினர்கள் நேர்மையின் வடிவங்களாக விளங்கினர். இக்கூட்டுறவு வங்கியின் வளர்ச்சிக்கென உழைத்த வேறு சிலரையும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டார். இதைத் தொடர்ந்து, இதன் பெயர் 'ஹெட்டஸ்டார்ப் கடன் இணைப்புச் சங்கம்' என்று மாற்றப்பட்டது. உறுப்பினர்கள் 'எல்லோரும் ஒருவருக்காக, ஒருவர் எல்லோருக்காக' என்ற கூட்டுறவுக் கொள்கையை மனதில் கொண்டு பணிபுரிந்து வந்தனர். இவ்வாறு தொடங்கப்பட்ட வங்கி நாளடைவில் மாபெரும் வளர்ச்சியைப் பெற்றது. 1877-ஆம் ஆண்டு கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்புச் சங்கம் (The Grand Union of Rural Co-op. Socs.) அமைக்கப்பட்டது. நாளடைவில் இவ்வமைப்பு 'ரைபீசன் சங்கம்' (Raiffeisen Union) என அழைக்கப்படலாயிற்று.

நல்லோரை நாடிய மக்களில் சிலர் அவரது எண்ணங்களை ஐயுற்று வந்தனர். அறியாமை காரணமாக எழுந்த சில இன்னல் களைக்கண்டு மனம் கலங்காமல் இவர் பாடுபட்டதனுல்தான் இன்று இவரது பெயர் குன்றின் மேலிட்ட தீபம்போல விளங்குகின்றது. இவரது அரும்பணியினுல் தான் ஜெர்மானிய நாடு உலக நாடுகள் அனைத்திற்குமே கூட்டுறவு வங்கி முறையில் வழிகாட்டியாக விளங்குகின்றது. கூட்டுப் பொறுப்பு, கூட்டு உழைப்பு, நேர்மை ஆகிய மூன்றையுமே இவர் எப்போதும் வற்புறுத்தி வந்தார். இனி, ரைபீசனின் தளரா உழைப்பினுல் எழுந்த கூட்டுறவு அமைப் புகளின் சிறப்பியல்புகளையும் அவைகளின் அமைப்பு முறையையும் காண்போம.

நோக்கங்கள் :

உறுப்பினர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதே முக்கிய நோக்கமாகக் கொண்டு விளங்கின இவரால் அமைக்கப் பட்ட சங்கங்கள். வட்டித் தொழிலர்களின் பிடியிலிருந்து விவ சாயிகளைக் காப்பதற்காக, குறைந்த வட்டிக்குக் கடனுதவிகள் அளிக்கப்பட்டன. உறுப்பினர்களிடையே சிக்கனத்தைத் தோற்று விக்கவும் இச்சங்கங்கள் அரும்பாடுபட்டன. எனவே, சிறுசேமிப் புகள் பெருமளவில் ஊக்குவிக்கப்பட்டன.

உறுப்பினர் நிலை :

கிராம மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காகவே இச்சங்கங்கள் தொடங்கப்பட்டன. பொருளாதாரத் துறையில் மிகவும் பின் தங்கிய நிலையில் வாழ்ந்த விவசாயிகள் அடைமானப் பொருளாகத் தர எதையும் பெற்றிருக்கவில்லை. ஒவ்வொரு கூட்டு றவுச் சங்கமும் ஒரு கிராமத்தின் தேவைகளைக் கவனித்து வந்தது. எனவே, உறுப்பினர் எண்ணிக்கை குறைவாகவே விளங்கியது. எண்ணிக்கை குறைவாக இருந்தமையால் உறுப்பினர்களிடையே நெருங்கிய நல்லுறவு விளங்கியது.

நிருவாக அமைப்பு :

இச்சங்கங்களும் மக்களாட்சி முறையிலேயே நிருவகிக்கப்பட் டன. உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பொதுமன்றம் அமைக்கப் பட்டிருக்கிறது. இப்பொது மன்றம் ஆண்டுதோறும் கூடி, அவ் வாண்டுக்கான திட்ட முறைகளையும், எதிர்காலத் திட்டங்களையும் ஆராய்ந்தன. அன்றாட நிருவாகத்தைக் கவனிப்பதற்கென ஓர் இயக்குநர் அவையும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. நிருவாகத் திற்குத் தேவையான எல்லாத் திட்டங்களையும் இவ்வவையே தீட்டி வந்தது.

பொறுப்பு :

பெரும்பாலான சங்கங்கள் 'வரையறையற்ற பொறுப்பின்' அடிப்படையில்தான் இயங்கி வந்தன. சுமார் 90% சங்கங்கள் இப் பொறுப்பின் கீழ்தான் பணியாற்றி வந்தன. உறுப்பினர்கள் இப் பொறுப்பின் தன்மையறிந்து நடந்து கொண்டனர்.

பங்கு மூலதனம் :

இச்சங்கங்கள் பங்கு மூலதனத்தைப் பெற்றிருக்கவில்லை. பெரும்பாலான விவசாயிகள் இச்சங்கங்களில் உறுப்பினர்களாக விளங்கினர். எனவே, பங்குத் தொகையை வழங்க அவர்கள் வசதியற்று இருந்தனர். எனவே, வைப்புத்தொகையைக் கொண்டே இச்சங்கங்கள் நிதிவசதிகளைப் பெற்று விளங்கின. 1889-ஆம் ஆண்டு ஏற்பட்ட சட்டத்தின்படி எல்லாச் சங்கங்களும் பங்கு மூலதனத்தைப் பெற்றிருக்குமாறு கட்டாயப் படுத்தப்பட்டன. எனவே, ரைபீசன் பங்கு மூலதனத்தைப் பெறுவதற்காக பங்குகளை உறுப்பினர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யத் தொடங்கினார். பங்குத்தொகை மிகவும் குறைவாகவே(Say 5 to 10 German Marks) நிருணயிக்கப்பட்டது.

இச்சங்கங்கள் காப்புநிதியையும் பெற்றிருந்தன. இலாபத்தில் மூன்றின் இரண்டு பங்கு இந்நிதிக்கு ஒதுக்கப்பட்டது. இக்காப்பு நிதித்தொகை உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதில்லை.

மேலும், உறுப்பினர்களிடமிருந்து வைப்புத் தொகையையும் கணிசமாகப் பெற்றிருந்தன இச்சங்கங்கள். 'மாற்றுச் சீட்டு தள்ளுபடி செய்தல்' போன்ற காரியங்களிலும் இவை ஈடுபட்டிருந்தன.

உறுப்பினர்களின் தேவைகளை நன்குணர்ந்து கடனுதவிகள் அளிக்கப்பட்டன. குறைந்த வட்டித்தொகையே உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டது. எனவே, உறுப்பினர்கள் இச்சங்கங்களையே பெரிதும் நாடினர். கடனுதவிகளைத் தவிர வேறு சில காரியங்களிலும் இச்சங்கங்கள் ஈடுபாடு கொண்டிருந்தன.

உறுப்பினர்கள் பெரும்பாலும் விவசாயிகளாதலால், அவர்களுக்குத்தேவையான விவசாயக் கருவிகள், விதை, உரம் முதலான தேவைப் பொருள்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து உரிய நேரத்தில் அவர்களுக்கு அளித்து வந்தன. எனவே, விவசாயிகள் கடனுதவிகள் மட்டுமின்றி, வேறு பல உதவிகளையும் பெற்று வந்தனர். இப்பணிகளே இச்சங்கங்களின் தனிச் சிறப்பாகும்.

'சூல்ஸ்' அமைத்த கூட்டுறவுச் சங்கங்கள் இத்தகைய பணிகளில் ஈடுபடவில்லை.

ரைபீசனின் முயற்சியால் உருவாக்கப்பட்ட இக்கூட்டுறவுச் சங்கங்கள் புரிந்திருக்கும் சாதனைகள் மகத்தானவையாகும். நகர வங்கிகளைப் போல் இச்சங்கங்கள் விவசாயிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மாபெரும் முன்னேற்றத்தை அளித்துள்ளன. மொத்த விவசாயிகளில் 50% தற்போது இச்சங்கங்களில் உறுப்பினர்களாக விளங்குகின்றனர். வட்டித் தொழிலர்களிடமிருந்து எளிய மக்களைக் காப்பாற்றிய பெருமை இச்சங்கங்களையும் சாரும். இது இச்சங்கங்கள் ஆற்றிய தொண்டிலெல்லாம் பெரிய சிறந்த தொண்டாக உயர்ந்து நிற்கின்றது. ஜெர்மனியின் தென் மேற்குப் பகுதியில் இச்சங்கங்கள் பெருமளவில் இயங்கி வருகின்றன. கடனுதவிகள் மட்டுமின்றி, விவசாயத் தொழிலுக்குத் தேவையான பிற பொருள்களையும் இச்சங்கங்கள் அளித்து வருகின்றன. இச்சங்கங்களின் வளர்ச்சியையும், அதன் மூலம் மக்களது பொருளாதார உயர்வையும் கண்ட பிறகே உலக நாடுகள் பலவும் விழிப்புணர்ச்சி பெற்றன.

இனி, ரைபீசன் சங்கங்களுக்கும் சூல்ஸ் வங்கிகளுக்கும் உள்ள தொடர்பினைக் காண்போம்.

ஒப்பீடு காண்டல்
(Comparison between Raiffeisen and Schulze-Deitzsch Banks)

இவ்விரு வங்கிகளுமே அடிப்படையில் ஒரே நோக்கங்களைக் கொண்டவையாகும் எனினும், இவ்விரு வங்கிகளின் செயல் முறை மாறுபட்டு நிற்கின்றது. இவ்விரு கூட்டுறவாளர்களும் தங்கள் பகுதியின் சூழ்நிலைகளுக் கேற்ப இவ்வமைப்புகளை உருவாக்கினர். சூழ்நிலைகளுக் கேற்ப மனிதன் மாறுபடுவது போல், இவ்வமைப்புகளும் மாறுபட்டு விளங்குகின்றன. ரைபீசனின் சங்கங்கள் பெரும்பாலும் கிராமப் புறங்களில் செயல் பட்டு வந்தன. ஆனால், சூல்ஸ் அமைத்த வங்கிகள் நகர்ப் புறங்களில் இயங்கி வந்தன. ரைபீசனின் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களின் பொருளாதார நிலையை மட்டும் உயர்த்தப் பாடுபடவில்லை. மனிதனுக்குத் தேவையான நேர்மை, உழைப்பு, நாணய மதிப்பு போன்ற பிற குணங்களையும் உருவாக்க உழைத்தன. கடனுதவிகள் மட்டுமின்றி, முக்கியப் பொருள்கள் பலவற்றை உறுப்பினர்களுக்கு அளித்து அருந்தொண்டாற்றி வந்தன. இனி, இவ்விரு அமைப்புகளையும் ஒப்பிட்டுக் காண்போம்.

ரைபிசன் முறை (Raiffeisen System)

1. வரையற்ற பொறுப்பின் அடிப்படையில் அமைக்கப் பட்டன.

2. செயற்பாட்டுப்பகுதி குறுகியது. கிராம அளவில் இயங்கின.

3. ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த கிராம மக்களே உறுப்பினர்களாக அனுமதிக்கப்பட்டனர். அதாவது, விவசாயிகள் உறுப்பினர்களாக விளங்கினர்.

4. பங்குகளின் விலை மிகக் குறைவாக நிர்ணயம் செய்யப் பட்டிருந்தது.

5. உறுப்பினர்களின் நிகர சொத்துக்களின் அடிப்படையிலும், அவர்களது நாணய மதிப்பு, நேர்மை, முன் வரலாறு போன்றவைகளின் அடிப்படையிலும் கடனுதவிகள் அளிக்கப்பட்டன.

6. உறுப்பினர்களுக்கு நீண்ட காலக் கடன்களை அளிக்கப்பட்டன. உறுப்பினர்கள் கடன் தொகையைப் பல தவணைகளில் திருப்பிக் கொடுக்க அனுமதிக்கப் பட்டனர்.

7. கடனுதவிகள் பொருள்களின் உற்பத்திக்கு மட்டுமே வழங்கப்பட்டன. பெறப்படும் கடன் தொகை முறையாக உற்

சூல்ஸ் முறை (Schulze System)

1. வரையறுக்கப்பட்ட பொறுப்பின் அடிப்படையில் அமைக்கப் பட்டன.

2. செயற்பாட்டுப் பகுதி பெரியது. பல கிராமங்களுக்கும் பணியாற்றின.

3. பெரும்பாலும் நகரங்களில் வாழ்ந்தோரே உறுப்பினர்களாக விளங்கினர். பல பிரிவுகளைச் சார்ந்த வணிகர்கள், சிறு தொழிலதிபர்கள் போன்றோர் உறுப்பினர்களாக அனுமதிக்கப் பட்டனர்.

4. பங்குகளின் விலை கணிசமான அளவில் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

5. உறுப்பினர்கள் பெற்றிருக்கும் பங்கு மூலதனத்தின் அடிப்படையில் கடனுதவிகள் செய்யப் பட்டன. உறுப்பினர்களது சிறப்பியல்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை.

6. உறுப்பினர்களுக்குக் குறுகிய காலக் கடன்களை வழங்கப் பட்டன (3 மாதங்கள்) உறுப்பினர்கள் கடன் தொகை முழுவதையும் ஒரே முறையில் திருப்பி வழங்க வேண்டும் என்ற விதி முறை பின்பற்றப்பட்டது.

7. உற்பத்தி காலங்களுக்கு மட்டுமே கடன் வசதிகள் உறுப்பினர்களுக்கு அளிக்கப்படுகின்றன. வழங்கப்படும் கடன்

பத்திக்குப் பயன் படுத்தப் படுகின்றதா எனக் கண்காணிக்கப்படுகின்றது.	தொகை உரிய நோக்கத்திற்குப் பயன் படுத்தப் படுகின்றதா எனக் கண்காணிக்கப் படுவதில்லை.
8. இலாப நோக்கம் இல்லையாதலால் உறுப்பினர்களுக்கு இலாப ஈவுத் தொகை வழங்கப்படுவதில்லை.	8. பெறப்படும் இலாபத் தொகையைக் கொண்டு உறுப்பினர்களுக்கு இலாப ஈவுத் தொகை வழங்கப்படுகிறது.
9. உறுப்பினர்களுக்கு கடனுதவிகள் மட்டுமின்றி, பிற உதவிகளும் வழங்கப் படுகின்றன.	9. கடனுதவிகள் மட்டுமே அளிக்கப்படுகின்றன. அதாவது வங்கியத் தொழில் மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது.
10. நிருவாகப் பணிகள் உழைப்பூதியமின்றித் திறமை வாய்ந்தவர்களால் செய்யப் படுகின்றன.	10. நிருவாகப் பணிகள் ஊதியம் பெறுகின்ற அலுவலர்களால் திறம்பட நிறைவேற்றப் படுகின்றன.
11. உறுப்பினர்களின் ஒழுக்கத்திற்கும், நேர்மை, கண்ணியம் போன்ற குணங்களின் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.	11. உறுப்பினர்களின் குணநலன்கள் கவனிக்கப் படுவதில்லை. பொருளாதார முன்னேற்றம் மட்டுமே சிறப்பாகக் கவனிக்கப் படுகிறது.
12. வட்டித் தொழிலர்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட்டனர்.	12. வட்டித் தொழிலர்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட்டனர்.
13. உறுப்பிளர்கள் சிக்கனத்தைக் கடைப் பிடிக்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர்.	13. உறுப்பினர்கள் சிக்கன நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு சிறந்த முறையில் ஊக்குவிக்கப் படுகின்றனர்.

இவ்வாறு, ஜெர்மானிய நாட்டின் இரு கூட்டுறவாளர்களுமே தேவை நிரம்பப் பெற்ற, வசதி குறைந்த ஏழைகளுக்கு உதவுதலையே தங்கள் குறிக்கோளாகக் கொண்டு செயல் பட்டனர். 'சூல்ஸ்' முறையான வணிகக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அடிப்படையாக அமைத்து வங்கிகளைச் சிறப்புற நடத்திக் காட்டினர். ரைபீசன் மனிதாபிமான அடிப்படையில் வங்கிகளை அமைத்து வாழ்க்கையில் பின் தங்கிய மக்களுக்கு அருந்தொண்டாற்றினர்.

இவ்விருவராலும் அமைக்கப்பட்ட இக்கூட்டுறவு அமைப்புகளே உலக நாடுகள் அனைத்திற்கும் கலங்கரை விளக்கமெனத் திகழ்கின்றன.

ஜெர்மனியின் இக்கூட்டுறவுக் கடன் இயக்கம் முதல் உலகப் போரைத் தொடர்ந்து ஏற்பட்ட பணவீக்கத்தின் (Inflation) காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டது. இச்சூழ்நிலையில் உறுப்பினர்களின் வைப்புத் தொகை கணிசமாகக் குறைந்து, உறுப்பினர்களின் கடன் தேவைகள் பெருமளவில் அதிகரித்தன. நிலைமையைக் கட்டுப் படுத்துவதற்காக, புருசியாவின் 'மத்தியக் கூட்டுறவு வங்கி' தலைமை வங்கியாகச் செயல்படத் தொடங்கியது. இதன் சிறப்பான செயற்பாடுகளால் மீண்டும் கூட்டுறவு வங்கிகள் தங்கள் பழைய வலிவான நிலையை 1930-ஆம் ஆண்டு பெற்றன. இந்நாட்டுச் சர்வாதிகாரியாக விளங்கிய 'ஹிட்லர்' காலத்தில், இவ்வங்கிகள் பெருமளவில் வளர்ச்சி பெற்றன. விவசாயிகளுக்குக் கடனுதவிகள் அளிப்பதில் 'வாணிக வங்கிகள்' (Commercial Banks) மிகவும் தயக்கம் காட்டவே, கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளின் நலனில் அக்கறை காட்டலாயின. 1915-ஆம் ஆண்டு கூட்டுறவு வங்கிகளின் எண்ணிக்கை 28,458 ஆகும். 1935-ஆம் ஆண்டு இவைகளின் எண்ணிக்கை 40,713 என உயர்ந்தது. 1940-ஆம் ஆண்டு 38,843 எனக் கணக்கிடப் பட்டுள்ளது.

1945-ஆம் ஆண்டும் அதன் பின்னரும்

போர் வெறி கொண்டு அலைந்த ஹிட்லரின் செயல்களால், ஒன்றாக விளங்கிய நாடு 1945-ஆம் ஆண்டு இரண்டாக (German Democratic Republic and Federal Republic of Germany) உடைந்தது. 'ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு' சோவியத்து நாட்டின் கீழ் வந்தது. எனவே, இங்கு சோவியத்து நாட்டில் பின்பற்றப்படும் கூட்டுப் பண்ணை விவசாயம் (Collective Farming) புகுத்தப்பட்டது. இதையொட்டி விவசாய உற்பத்திச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. ஜெர்மனியின் மற்றொரு பாகத்தில் கூட்டுறவு இயக்கம் நன்கு வளர்ச்சி பெறத் தொடங்கியது. இங்குக் (Federal Republic of Germany) கூட்டுறவு இயக்க வளர்ச்சி, நான்கு வகைக் கூட்டுறவுச் சங்கங்களின் சிறந்த பணிகளால், ஊக்குவிக்கப்பட்டது.

இனி, இப்பகுதியின் கூட்டுறவு இயக்க வளர்ச்சியைக் காண்போம்.

1. கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள்: (Rural Societies)

இப்பகுதியின் கூட்டுறவு இயக்கத்தில் 'கிராமப் பல நோக்குச் சங்கங்களே' (Rural Multi-Purpose Socs.) மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இச்சங்கங்கள் உறுப்பினர்களுக்குத் தேவையான கடனுதவிகள் மட்டுமின்றி, விவசாயத்திற்குத் தேவையான விவசாய இயந்திரங்கள், பிற கருவிகள், விதை, உரம் முதலான பல பொருள்களை நியாய விலைக்கு அளிக்கின்றன. இச்சங்கங்கள் ரைபீசன் அமைத்த சங்கங்களை முன்னோடியாகக் கொண்டு அமைக்கப்பட்டவையாகும். பொருள்களுக்குரிய விற்பனையேற்பாட்டையும் இச்சங்கங்கள் செய்து வருவதால் உறுப்பினர்கள் பல பிரச்சினைகளிலிருந்து விடுபட முடிகின்றது. 1966-ஆம் ஆண்டு இச்சங்கங்களின் எண்ணிக்கை 22,000 ஆகும். உறுப்பினர் எண்ணிக்கை 4·4 மிலியனாகும். பெரும்பாலானச் சங்கங்கள் கிராமப் புறங்களிலேயே அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராமமும், ஏறக்குறைய, இச்சங்கங்களைப் பெற்றிருக்கிறது. 1965-'66 ஆம் ஆண்டு இச்சங்கங்களின் மொத்த விற்பனை சுமார் 42 பிலியன் ரூபாயாகும் (DM 21 Billion).

2. நகர்ப்புறச் சங்கங்கள்: (Urban Socs.)

நகர்ப்புறங்களில், சூல்ஸ் சங்கங்களை முன் மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்ட பல கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. சில்லறை விற்பனையாளர்கள், உண்டிச் சாலை உரிமையாளர்கள், மருத்துவர்கள், மருந்து தயாரிப்பவர்கள் போன்றோர் உறுப்பினர்களாக உள்ளனர். சில்லறை விற்பனையில் ஈடுபட்டிருப்போர் கூட்டுறவு மொத்த விற்பனையில் ஈடுபட்டிருப்பது மேற்கு ஜெர்மனியின் தனிச் சிறப்பாகும். இச்சங்கங்கள் யாவும் ஒரு மத்திய அமைப்பைப் (Edeka) பெற்றுள்ளன. உறுப்பினர் சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் இம்மத்திய அமைப்பின் மூலமே பெறுகின்றன. விவசாயத்தில் ஈடுபடாதவர்களும் கடனுதவிகள் பெறுகின்றனர். கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கும், விற்பனை யேற்பாட்டிற்கும் தனித் தனியாகச் சங்கங்கள் உள்ளன. 1965-'66-ஆம் ஆண்டு, இக்கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த விற்பனை 20 பிலியன் ரூபாயாகும். 1965-ஆம் ஆண்டு இறுதியில் 13,41,000 உறுப்பினர்களைக் கொண்ட 706 'மக்கள் வங்கி'களும் (Peoples' Banks) 15,300 உறுப்பினர்களைக் கொண்ட 33 'கடன் வங்கி'களும் (Credit Banks), 5,90,000 உறுப்பினர்களைக் கொண்ட 16 'சேமிப்பு-கடன் சங்கங்களும்(Rail-Road Employees' Savings and Loan Associations), 3,19,000 உறுப்பினர்களைக்

கொண்ட 21 தபால் ஊழியர்கள் சேமிப்பு-கடன் சங்கங்களும் (Postal Employees' Savings and Loan Associations) இயங்கி வந்தன. கடன் சங்கங்கள் சுமார் 32 பிலியன் ரூபாய் (DM 16 Billion) நடைமுறை முதலாகப் பெற்றுள்ளன.

வணிக வங்கிகள் அளித்துவரும் எல்லா வசதிகளையும் சேவைகளையும் சூல்ஸ், ரைபீசன் வங்கிகள் அளித்து வருகின்றன. உறுப்பினர்களிடையே சிக்கன நடவடிக்கைகள் நன்கு வலியுறுத்தப் படுகின்றன. இவ்வங்கிகளில் உறுப்பினர்கள் தங்கள் சேமிப்புப் பணத்தை வைப்புத் தொகையாக வைத்துள்ளனர். வைப்புத் தொகைக்கு ஒரு கணிசமான தொகை வட்டியாக வழங்கப்படுகின்றது. உறுப்பினர்களின் வீடுகளுக்கும், பண்ணைகளுக்கும் வங்கி ஊழியர்கள் நேரில் சென்று சேமிப்புப் பணத்தைப் பெறுகின்றனர். ஒரு குறிப்பிட்ட இடத்தில் உண்டியல் ஒன்றும் வைக்கப்படுவதால் சிக்கன நடவடிக்கை உறுப்பினர்கள் மனதில் நன்கு பதிகின்றது. ஒவ்வொரு உண்டியலின் மீதும் உறுப்பினரது வங்கிக் கணக்கு எண் குறிக்கப்பட்டுள்ளது. நாள்தோறும் இவ்வுண்டியல் காசு வங்கி ஊழியர் ஒருவரால் எடுக்கப்பட்டுக் கணக்கேடுகளில் குறிக்கப்படுகிறது. வைப்புத் தொகை வைத்திருக்கும் நபர், வங்கியினுல் அளிக்கப்பட்டிருக்கும் 'செல்லுப் புத்தகம்' (Pass Book) மூலம் மேற்கு ஜெர்மனியின் எந்தப் பகுதியில் இயங்கும் வங்கியிடமிருந்தும் தேவையான பணத்தைப் பெறலாம். இது இந்நாட்டின் மற்றெரு தனிச் சிறப்பாகும். இவ்வங்கியின் மூலம் உறுப்பினர்கள் பெரும் பயன் அடைகின்றனர்.

3. **வீடளிப்புச் சங்கங்கள்:** (Housing Societies)

மேற்கு ஜெர்மனியில் இயங்கும் மூன்ருவது வகைச் சங்கங்கள் இவைகளேயாகும். இச்சங்கங்கள் உறுப்பினர்களின் மனம் மகிழும் வண்ணம் வீடுகளைக் கட்டி வழங்குகின்றன. மனைகளை உருவாக்குவதற்குத் தேவையான பணத்தை உறுப்பினர்களிடமிருந்தும் அரசாங்கத்திடமிருந்தும் பெறுகின்றன. பெர்லினில் (Berlin)இச்சங்கங்கள் பெருமளவில் இயங்கி வருகின்றன. மேற்கு ஜெர்மனியில் மிக உயரமாக விளங்கும் ஒரு கட்டடம் ஒரு வீடளிப்புச் சங்கத்திற்கு உரிமையானதாகும். இத்துறையில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு 10 சதவிகிதமாகும்.

4. **நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்:** (Consumers' Societies)

மக்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருள்களை இச்சங்கங்கள் விற்பனை செய்கின்றன. பொருள்களின் தரம்உயர்ந்தும் விலை

குறைந்தும் காணப்படுகிறது. சுமார் 212 நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. உறுப்பினர் எண்ணிக்கை 2·5 மிலியனாகும். இச்சங்கங்களின் விற்பனை 3 பிலியனுக்கும் (DM 4 Billion) அதிகமாக உள்ளது. இச்சங்கங்கள் 8000-க்கும் அதிகமான விற்பனைக் கடைகளைப் பெற்றுள்ளன. 'ஹாம்பர்க்'கில் (Hamburg) இயங்கிவரும் 'உற்பத்தி' (Production) என்ற நுகர்வோர் சங்கமே மிகப்பெரிய சங்கமாகத் திகழ்கிறது. இதன் உறுப்பினர் எண்ணிக்கை 2 இலட்சமாகும்.

கூட்டமைப்புகள்: (Federations)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு வகைக் கூட்டுறவுச் சங்கங்களுமே தங்களின் நலனுக்காகக் கூட்டமைப்புகளைப் பெற்றுள்ளன. தேவையான நிதி வசதிகளைப் பெறும் பொருட்டு, 'தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள்' ஒன்று சேர்ந்து 13 'பிரதேச மத்திய வங்கி'களை (Regional Central Banks) அமைத்துள்ளன. இப்பிரதேச மத்திய வங்கிகள் ஒன்று சேர்ந்து தேசீய அளவில் ஒரு கூட்டமைப்பை (German Co-op. Banks) உருவாக்கியுள்ளன. இவ்வங்கியின் தலைமை அலுவலகம் 'பிராங்பர்ட்' (Frankfurt) என்ற நகரில் இயங்கி வருகின்றது. இவ்வங்கியின் மூலதனத்தில் அரசிற்கும் பங்குண்டு. மொத்த மூலதனத்தில் 15% அரசாங்கத்தைச் சேர்ந்ததாகும். ஜெர்மன் கூட்டுறவுச் சட்டத்தின் விதிமுறைகளின்படி, மாநில அரசுகள் வங்கிகளின் பங்குகளில் 42% வைத்திருக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் 'தணிக்கை' (Audit) காரியங்களுக்காக 12 பிரதேச கூட்டமைப்புகளை உருவாக்கியுள்ளன. கூட்டுறவுச் சட்டத்தின் படி, கூட்டுறவுச் சங்கங்கள் இணைப்புச் சங்கங்களால் தணிக்கை செய்யப்படுவதை அரசு தடுப்பதில்லை. இந்த 12 பிரதேசக் கூட்டமைப்புகள் ஒன்றுகூடி ஒரு தலைமைக் கூட்டமைப்பை (Raiffeisen Federation) உருவாக்கியுள்ளன.

பொதுத் தன்மைகள்

இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கம், பொதுவாக நான்கு வகைக் கூட்டுறவு சங்கங்களைப் பெற்றுள்ளது. இப் பலவகைச் சங்கங்கள் பொதுவான சில அம்சங்களைப் பெற்றுள்ளன. அவை யாவன—

1. அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களும் தன்னுதவி (Self-Help), ஒருவருக்கொருவர் உதவி புரிதல் (Mutual Help) சுயப் பொறுப்பு, சுய நிர்வாகம் போன்ற எல்லாக் கூட்டுறவுக் கொள்

கைகளையும் சிறப்பியல்புகளையும் தவருமல் கொண்டுள்ளன. இக் கொள்கைகளை அடித்தளமாகக் கொண்டு செயல்படுவதால்தான், இவைகள் வெற்றிமேல் வெற்றி பெறுகின்றன.

2. எல்லா வகைக் கூட்டுறவுச் சங்கங்களும் ஒரே கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் இயங்குபவையாகும். இச்சட்டத்தின் விதிமுறைகள் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களையும் கட்டுப்படுத்தவல்லவையாகும்.

3. அரசாங்க அளவில், எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் ஒரே அமைச்சரவையின் கீழ் இயங்கி வருகின்றன (Ministry of Economic Affairs).

4. அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களும் சிறந்த முறையில் ஜெர்மன் கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளதால் தேவையான நிதிவசதிகளை அவ்வப்போது பெற முடிகிறது.

6. கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்களுக்கும் முறையான பயிற்சியையும், கல்வியையும் அளிக்கின்றன.

டாக்டர் ஹாஸ் (Dr. Hass) ஆற்றிய பணி

பரந்து கிடந்த ஜெர்மானிய நாட்டின் எல்லாப் பாகங்களிலும் கூட்டுறவு அமைப்புகளை உருவாக்க ரைபீசன், சூல்ஸ் ஆகிய இருவரைத் தவிர வேறு சிலரும் பெருமுயற்சி எடுத்துக் கொண்டனர். அவர்களுள் ஒருவரே டாக்டர் ஹாஸ் எனப்படும் கூட்டுறவாளர். தொடக்கத்தில் ரைபீசனுக்கு வலக்கையாக விளங்கிய இவர், ரைபீசனின் மதப்பற்றுக் காரணமாக இவரிடமிருந்து பிரிந்து சென்று தனியராக உழைக்கலானுர். ரைபீசனிடமிருந்துதான் பிரிந்து சென்ருரே ஒழிய அவரது கருத்துக்களினின்றும் பிரியவில்லை. இவரும் விவசாயிகளின் நலன் கருதி பல கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கினுர். அவைகள் பெரும்பாலும் ரைபீசனின் அடிச்சுவட்டையே பின்பற்றி அமைக்கப்பட்டவையாகும். இவைகள் பெரும்பாலும் சற்று வசதி நிறைந்த விவசாயிகளுக்கென அமைக்கப்பட்டவையாகும். இச்சங்கங்கள் வாணிகம், வங்கியல் போன்ற பல துறைகளில் பணியாற்றி வந்தன.

இனி இச்சங்கங்களுக்கும் ரைபீசன் சங்கங்களுக்கும் உள்ள வேறுபாடுகளைக் காண்போம்.

1. ரைபீசன் சங்கங்கள் (Credit Socs.) கடன் வழங்குவதுடன் வேறு காரியங்களிலும் உறுப்பினர் நலன் கருதி ஈடுபட்டு வந்தன. எனவே, நிருவாகச் செலவு கணிசமாகக் குறைய வழியேற்பட்டது.

ஹாஸ் கூட்டுறவுச் சங்கங்களும் இதே போல் பணியாற்றி வந்தாலும், வாணிகத்தின் அளவில் விரிவடைந்தால் ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியாகச் சங்கங்கள் அமைக்கப்பட்டன.

2. ரைபீசன் சங்கங்கன் ஒரே மத்திய வங்கியைப் பெற்றிருந்தன. இம்மத்திய வங்கி 13 கிளை அலுவலகங்களை நாடு முழுவதும் பெற்றிருந்தது.

ஹாஸ் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு மத்திய வங்கியையும், 'அளிப்பு-விற்பனை' போன்ற பணிகளுக்கு மற்றொரு சங்கத்தையும் பெற்றிருந்தன. தலைமை வங்கியாக இயங்கி வந்த 'புருசிய மத்திய வங்கி'யையே இக்கூட்டுறவு அமைப்பு பெரிதும் நம்பியிருந்தது.

3. ரைபீசன் கூட்டுறவுச் சங்கங்கள் வசதி குறைந்த சிறு விவசாயிகளின் நலன் கருதி அமைக்கப்பட்டவையாகும். ஆனால், சற்று வசதி நிறைந்த விவசாயிகளுக்காக டாக்டர் ஹாஸ் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கினர். ரைபீசனின் கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்க ஆதரவையும் பெற்று வறுமையில் வாடிக் கிடந்த ஏழை விவசாயிகளுக்குக் கணிசமான உதவிகளை வழங்கின. ஆனால் ஹாஸ் உருவாக்கிய சங்கங்கள் ஏழைகளின் நல்வாழ்விற்காகப் பாடுபடவில்லை.

4. ஹாஸ் கூட்டுறவுச் சங்கங்களிள் பங்குகளின் விலை அதிகமாக நிர்ணயிக்கப்பட்டிருந்ததால் 'வரையறை அற்ற பொறுப்பு' வற்புறுத்தப்படவில்லை. பங்குகளின் விலையில் இரு மடங்கு அல்லது மூன்று மடங்கு என்று கணக்கிடப்படும் பொறுப்பின் அடிப்படையில் (Proportional Liability) இச் சங்கங்கள் இயங்கி வந்தன. ரைபீசன் சங்கங்கள் 'வரையறை அற்ற பொறுப்பின்' அடிப்படையில் இயங்கி வந்தவையாகும்.

5. ரைபீசன் சங்கங்கள் பால் பண்ணைகளை ஏற்று நடத்தவில்லை. ஆனால், வணிகக் காரியங்களையும் ஒரு சேரக் கவனித்து வந்த ஹாஸ் கூட்டுறவுச் சங்கங்கள் இத்தகைய பால் பண்ணைகளைத் தனியாக நடத்தி வந்தன.

ஹாஸ் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்திச் சங்கங்களைத் தனி நிருவாகத்தின் கீழ் நடத்தி வந்தன ஏனெனில்—

(i) அளிப்புச் சங்கங்கள் தொழில் நுட்ப அடிப்படையில் இயங்குபவையாகும். எனவே இச்சங்கங்களின் விவசாயப் பொருள்களை ஆராய்வதற்குத் தொழில் அறிவு தேவைப்படும். கடன் சங்கத்தில் மிகத்திறமையுடன் பணியாற்றும் ஒரு நிர்வாகி அளிப்புச் சங்கத்தில் பயனற்றுப் போவதற்கு வாய்ப்புகள் உண்டு.

(ii) குறைந்த அளவு தொழில்கள் உள்ள சில கிராமங்களில் இருக்கும் கடன் சங்கங்களின் உறுப்பினர்கள் அளிப்புச் சங்கங்களுடன் தொடர்பற்று இருப்பர். இந்நிலையில் அவர்களை 'வரையறையற்ற பொறுப்பு' என்ற இடர்ப்பாட்டில் ஈடுபடுத்துவது முறையாகாது.

(iii) கடன் வழங்கும் சங்கத்தின் செயற்பாட்டுப் பகுதி பெரும்பாலும் ஒரு கிராமமேயாகும். ஆனால், அளிப்புச் சங்கத்தின் (Supply) செயற்பாட்டுப் பகுதி பெரியதாகையால் இவ்விரு சங்கங்களையும் ஒரே குடையில் கொண்டு வருவதற்கு ஹாஸ் விரும்பவில்லை.

இன்றைய நிலை

வறுமையில் வாடிக் கிடந்த ஏழை விவசாயிகளையும், சிறு தொழிலதிபர்களையும் வட்டித் தொழிலர்களிடமிருந்து காப்பாற்றுவதற்காகவே ஜெர்மானிய நாட்டில் கூட்டுறவுக் கடன் இயக்கம் தொடங்கப்பட்டது. கடன் இயக்கமாகத் தோன்றிய இவ்வியக்கம் தற்போது பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு உறுதுணையாய் நிற்கின்ற எல்லாத் துறைகளிலுமே பரந்து நிற்கின்றது குறிப்பாக, கிராமப் புறங்களில் மக்களின் நலன் கருதி கூட்டுறவு இயக்க வளர்ச்சி நன்கு துரிதப்படுத்தப் பட்டுள்ளது. உறுப்பினர்களுக்குத் தேவையான கடனுதவிகளை அளிப்பதோடு, உற்பத்திச் செலவைக் குறைப்பதிலும் கூட்டுறவுச் சங்கங்கள் பேருதவி புரிகின்றன. குடும்பத்திற்குரிய பொருள்களையும், விவசாயத் தொழிலுக்குத் தேவையான பொருள்களையும் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வழங்குகின்றன. உற்பத்திப் பொருள்களுக்குத் தகுந்த முறையில் விற்பனையேற்பாட்டைச் செய்வதிலும் கூட்டுறவுச் சங்கங்கள் கவனம் செலுத்தி வருகின்றன. தற்போது, கூட்டுறவுச் சங்கங்கள் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் எண்ணத்துடன் கூட்டு உற்பத்

தியிலும் இறங்கியுள்ளன. இதன் மூலம் உற்பத்திச் செலவைக் கணிசமாக குறைக்க முடியும் என்ற நம்பிக்கை நிலவுகிறது. நவீன முறையில் சங்கங்களை மாற்றியமைத்து அதன் மூலம் உறுப்பினர் எண்ணிக்கையையும், மொத்த விற்பனையையும் உயர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சிறு சங்கங்களிடையே ஏற்படும் கடும் போட்டியைத் தவிர்ப்பதற்காக 'நிறுவன இணைப்பு' (Amalgamation) முறை பின்பற்றப்படுகிறது. இதன் மூலம், வலிவான மத்திய அமைப்புகள் உருவாக வாய்ப்புகள் பெருகுகின்றன.

நம் நாட்டைப் பொறுத்தவரை, ஜெர்மானிய நாடு 50 ஆண்டுகளுக்கு முன் பெற்றிருந்த இடர்ப்பாடுகளை நாம் தற்போது பெற்றுள்ளோம். அதே சூழ்நிலைகள், ஏறக்குறைய அதே பிரச்சினைகள் நம் நாட்டிலும் நிலவுகின்றன. எனவே, ஜெர்மானிய நாட்டின் கூட்டுறவு இயக்க வெற்றி வரலாற்றை நாம் கூர்ந்து நோக்கி, மனவலிமையுடன் கூட்டுறவு முறையில் உழைத்தோமானால் ஜெர்மனிக்கு ஈடாக உயர்வது திண்ணம்! இதை உணர்ந்து தான், நம் நாட்டுப் பல கூட்டுறவு அமைப்புகள் ரைபீசன் சங்கங்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அமைக்கப் படுகின்றன.

இந்தியாவில் சிறந்த கூட்டுறவு இயக்கத்தை உருவாக்கும் எண்ணத்துடன் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டபோது, 'பிரடெரிக் நிக்கல்சன்' (Mr. Fredrick Nicholson) தயாரித்தளித்த அறிக்கையின் அடிப்படையில்தான் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இவ்வறிஞர், இந்தியாவில் கூட்டுறவுச் சங்கங்கள் ரைபீசன் சங்கங்களை ஒட்டி அமைக்கப் படுவதையே பெரிதும் ஆதரித்தார். தற்போது பல கடன் சங்கங்கள் ஜெர்மானிய நாட்டுச் சங்கங்களை முன்மாதிரியாகக் கொண்டு அமைக்கப் பட்டு வருகின்றன. எனவே, ஜெர்மனியைப் போல் நாம் உயர்வது உறுதி!

இனி, ஜெர்மானிய நாட்டில் இயங்கி வரும் சில கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பை விளக்க அட்டவணையின் (Chart) மூலம் காண்போம்.

I. நகர்ப்புற வங்கியின் பொது அமைப்பு



II. கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு :—



III. மேற்கு ஜெர்மனி கூட்டுறவு இயக்க அமைப்பு :



4. இத்தாலி நாட்டில் கூட்டுறவு இயக்கம்

(Co-operative Movement in Italy)

கூட்டுறவின் தொடக்கம்

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இத்தாலி நாடு ஒரு காலத்தில் உலக நாடுகள் அனைத்திற்குமே வழிகாட்டியாக விளங்கியது. சிறந்த அரசியல் முறை, அரசியல் அமைப்பு போன்றவை இத்தாலி நாடு பிறநாடுகளுக்கு அளித்த நன்கொடைகளாகும். மக்களுக்கும் அரசாங்கத்திற்குமிடையே நல்லதொரு தொடர்பைச் சட்டங்கள் வாயிலாக ஏற்படுத்த முடியும் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டியதே இத்தாலியாகும். அரசியல் துறையில் மட்டுமின்றி, பொருளாதாரத் துறையிலும் இந்நாடு நிகரற்று விளங்கியது. இந்நாட்டு மக்களின் வேலைத்திறன் உலக அரங்கில் ஈடு இணையற்று விளங்கியது. கைத்தொழில்கள் நல்ல வளர்ச்சி பெற்றிருந்தன. உணவுத் துறையில் தன்னிறைவு பெற்றுத் திகழ்ந்தது. அண்டை நாடுகளுக்கு மட்டுமின்றி, அனைத்து நாடுகளுக்கும் வழிகாட்டியாக விளங்கியது இத்தாலி. இது பழங் கதை.

நாளொரு மாற்றம் பெற்றுவரும் உலகில் இத்தாலி நாடு நிரந்தரமாக ஒளிவிடவில்லை. தொடக்கத்தில் மிக வலிவுடன் திகழ்ந்த இத்தாலி பிற்காலத்தில் பெற்ற வளர்ச்சியை இழக்கத் தொடங்கியது. ஏனைய நாடுகள் அறிவியல் துணைகொண்டு மாபெரும் சாதனைகளைச் செய்ய முற்பட்டபோது, இத்தாலி எல்லாத் துறைகளிலும் பழைய வழிமுறைகளையேக் கடைப்பிடித்து வந்தது. விவசாயத்துறை, தொழில் துறை, வாணிபம் போன்றவற்றில் எவ்விதப்புதுமைகளையும், முன்னேற்றக் கருத்துக்களையும் புகுத்தத் தவறிவிட்டது. மேலும், பெற்றிருந்த பல்வகை வளர்ச்சிகளும் நாளடைவில் குறையலாயின. விவசாய உற்பத்தியும், தொழில் வளர்ச்சியும் ஒரு சேரப் :பலவீனமடைந்தன. இதன்

விளைவாக, இந்நாட்டுப் பொருளாதாரமே பாதிக்கப்பட்டது. தொடர்ந்து ஏற்பட்ட இழப்புகளால் உலகப் புகழ்பெற்ற உரோமானியர்கள் வறுமைப் பிடியில் சிக்கினர். இத்தாலி நாடு பொருளாதாரத் துறையில் பின்தங்கி நின்றது. விவசாயிகள், பிற தொழிலாளிகள், ஏனைய மக்கள் நிதிவசதியற்ற நிலையில் உணவு, உடை, இல்லம் போன்ற முக்கியத் தேவைப் பொருள்களுக்கு ஏங்கலாயினர்., தங்களது தொழில்களை ஏற்று நடத்துவதற்குத் தேவையான கடன் வசதிகளை 'வட்டித் தொழிலர்'களிடமிருந்து (Money Lenders) பெறத் தொடங்கினர். உண்மையில் கடன் வசதிகள் என்ற பெயரில் கடன் தொல்லைகளைப் பெறத் தொடங்கினர். சூழ்நிலைகளின் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் வட்டித் தொழிலர்களின் தயவு ஒன்றையே நாடி நின்றனர். ஒவ்வொரு வட்டித் தொழிலரின் இல்லத்திலும் கடன் பெறுவோர் வரிசை நீண்டது. பிரச்சினைகளும் உயர்ந்தன. நிதிவசதிகளுக்குக் 'கேட்பு' அதிகமாக விளங்கியமையால் வட்டித் தொகையும் மிக அதிக அளவில் மக்களிடமிருந்து பெறப்பட்டது. 50-லிருந்து 200 சதவிகிதம் வரை வட்டி விகிதம் வசூலிக்கப்பட்டது. கடன் வசதிகளைப் பெறவிரும்பிய மக்கள் வட்டித் தொகையைக் கண்டு மனங்கலங்கினர். வட்டித் தொகையைத் தவிர வேறு பல கெடு செயல்களினாலும் இந்நாட்டு மக்களின் செல்வம் கணிசமாகக் குறைந்து, பின்பு மறைந்தொழிந்தது.

வட்டித் தொழிலர்களுக்கு இணையாக 'நிலமேலாளர்'களும் (Land Lords) இந்நாட்டுப் பெருங்குடி மக்களை வாட்டி வதைத்தனர். நில'வாரம்' (Rent) மிக அதிக அளவில் நிருணயிக்கப்பட்டிருந்தது. விவசாயப் பணிகளுக்குத் தேவையான விதை, உரம் போன்ற பொருள்களை நிலமேலாளர்களே விவசாயிகளுக்கு வழங்கினர். ஆனால், அறுவடை முடிந்தவுடன் விளைபொருளில் பெரும் பகுதியை (150%) தங்களது நுகர்விற்கென பெற்று வந்தனர். விளைந்ததைக் கொடுத்துவிட்டு, விவசாயிகள் பட்டினியால் வாடினர். இவர்களின் தொல்லைகள், இன்னல்கள் முதலானவை நிலமேலாளர்களுக்கும் வட்டித் தொழிலர்களுக்கும் செல்வமாக மாறின. கால்நடைகளாலும் விவசாயிகள் பேரிழப்பிற்கு ஆளாயினர். 1880-ஆம் ஆண்டு ஏற்பட்ட வியாபார மந்தத்தினால் உற்பத்திப் பொருள்களின் விலை சரியத் தொடங்கியது. நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டமும் பெருமளவில் பெருகியது. இதன் விளைவாகப் பெற்ற கடன் தொகையை விவசாயிகளால் திருப்பித் தர இயலவில்லை. இவர்களது 'நொடிப்பு நிலை' (Insolvency) காரணமாக இவர்களிடம் இருந்த உடைமைப் பொருள்கள்

அனைத்தும் வட்டித் தொழிலர், நிலமேலாளர் போன்றவர்களின் இல்லங்களில் தஞ்சமடைந்தன.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில்தான் இரு ஒளிவிளக்கு கள் இந்நாட்டில் தோன்றின. தாழ்ந்துகிடந்த மக்களை உயர்வுறச் செய்வதற்கு அவர்கள் அல்லும் பகலும் உழைக்கத் தொடங்கினர். 'லுசாட்டி' (Luigi Luzzati), 'உல்லம்பர்க்' (Wollemburg) என்ற இருகூட்டுறவாளர்கள் இந்நாட்டின் விடிவெள்ளியெனத்தோன்றி மக்களின் துன்பத்தை அகற்ற முற்பட்டனர்.

'மிலன்' (Milan) என்ற நகரில் இயங்கிவந்த கல்வி நிறுவனத் தில் லுசாட்டி பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றி வந் தார். இயல்பாகவே பொருளாதாரத்தைப் பயின்றிருந்த இவர் இந்நாட்டுப் பொருளாதாரத்தை உயர்த்த முனைந்ததில் வியப் பேதுமில்லை. விவசாயிகள், பிற தொழில்களில் ஈடுபட்டிருந்தோர் முதலானவர்களின் வறுமை நிலை கண்டு இவர் வாடினார். எண்ண அளவில் நின்றுவிடாமல் மக்களின் துயர் துடைக்க வழிமுறைகளை யும் ஆராயலானார். கூட்டுறவுத் துறையில் உலகெங்கிலும் வெளி யிடப்பட்டிருந்த நூல்களை எல்லாம் கற்கத் தொடங்கினார். வேண் டியதைக் கற்ற இப்பேராசிரியர் வள்ளுவர் வாக்குப்படி அதற்குத் தக்கபடி நடக்கலானார். நூல் அறிவு ஒன்றையே துணையாகக் கொள்ளாமல் 'கூட்டுறவுச் சங்கங்கள்' எவ்வாறு செயல்படுகின் றன என்பதைக் கண்டறியவும் உறுதி பூண்டார். கூட்டுறவுக் கொள்கைகளின்பால் ஈர்க்கப்பட்ட இவர் ஜெர்மானிய நாட்டுக் கூட்டுறவு இயக்கத்தில் பெரும் ஈடுபாடு கொண்டார். கொண்டி ருந்த ஈடுபாடு அவரை அந்நாட்டிற்குக் கொண்டு சென்றது. அந்நாட்டில் நன்கு இயங்கிவந்த கூட்டுறவு இயக்கத்தை நேரடி யாகவே நன்கு ஆராய்ந்தார். 'சூல்ஸ்'முறையில்(Schulze System) அமைந்திருந்த கூட்டுறவுக் கடன் இயக்கமே இவரைப் பெரிதும் கவர்ந்தது. இவரது தீவிர ஆராய்ச்சித் தொடர்ந்தபோது, சூல்ஸ் என்ற கூட்டுறவாளரால் நடத்தப்பட்டு வந்த கூட்டுறவுச் சங்கங்கள் நன்கு வலிமையுடன் திகழ்ந்தன. அச்சங்கங்கள் அப் போது வெற்றிப் பாதையில் சென்று கொண்டிருந்தன. எனவே, லுசாட்டி இக்கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு, நிருவாகம், நிதி வசதிகள், உறுப்பினர் நிலை போன்ற பல முக்கியக் கருத்துக்களை மனதில் நன்கு இருத்திக் கொண்டு உற்சாகத்துடன் தன் தாய் நாடு திரும்பினார். தன் தாய்நாட்டிலும் கூட்டுறவுக் கொள்கைகளை நன்கு பரப்ப வேண்டிய முயற்சிகளை மேற்கொண்டார். வறுமை யில் வாடிய மக்களை வாழவைக்க கூட்டுறவைத் தவிர வேறு எது வும் இருக்கமுடியாது என்பதை நன்குணர்ந்த லுசாட்டி தன் எண்

ணங்களுக்கு உருக்கொடுக்கத் தொடங்கினர். வட்டித்தொழிலர் களிடமிருந்தும் நிலமேலாளர்களிடமிருந்தும் மக்களை விடுவிப்ப தற்காக இவர் பெருமுயற்சிகள் எடுத்துக் கொண்டார். ஜெர்மா னிய நாட்டிலிருந்து திரும்பிய இவர் தொழிற்சாலைகளில் பணி புரிந்து வந்த தொழிலாளர்களிடையே கூட்டுறவு அமைப்புகளை தோற்றுவிக்கத் திட்டங்களைத் தீட்டலானர். தொழிற்சாலைகள் பெரும்பாலும் நகர்ப் புறங்களிலேயே இயங்கி வந்தன. எனவே நிலவிய சூழ்நிலைகளுக்கேற்ப லுசாட்டி வழிமுறைகளை வகுக்கத் தொடங்கினர். இவரது சலியா உழைப்பினுல் பல வியத்தகு மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின. இவரது முயற்சிகளின் பயனுக இத்தாலியக் கூட்டுறவு இயக்கம் இந்நாட்டில் நன்கு வேரூன்றத் தலைப்பட்டது. பின்னர் ஏற்பட்ட கணிசமான வளர்ச் சிக்கு லுசாட்டியின் பணிகள் பெரும்பங்கு வகிக்கின்றன. இவரது பொருளாதார அறிவும், கூட்டுறவுச் சிந்தனையும் பொருளாதார உயர்விற்கு உறுதுணையாக விளங்கின.

லுசாட்டியைப் போலவே 'உல்லம்பர்க்' என்ற சிறந்த கூட்டுற வாளரும் இந்நாட்டுக் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டு வந்தார். செல்வச் சிறப்பு நிறைந்த குடும்பத்தில் உதித்த இவர் முறையாகக் கல்வி கற்றவர். தனது தாய் நாட்டில் மக்கள் பட்ட இன்னல்களைக் கண்ட இவர், தன்னலியன்ற பணிகளைச் செய்ய முற்பட்டார். எண்ணங்களை அவர் அவசர நிலையில் செயல் படுத்த விரும்பவில்லை. வலிவான அடித்தளத்தை நன்கு அமைத்துக் கொண்ட பின்னரே செயல்களில் இறங்கினர். கூட்டுறவு சம்பந்தப்பட்ட நூல்கள் அனைத்தையும் நன்கு கற்றுத் தேர்ந்தார். இவரது கவனத்தை மிகவும் கவர்ந்தவை 'ரைபீசன் வங்கிகளேயாகும். ஜெர்மானிய நாட்டுக் கிராமப் புறங்களில் இயங்கி வந்த இவ்வங்கிகளின்பால் ஈடுபாடு கொண்ட இவர் தன் நாட்டிலும் அது போன்ற வங்கிகளை உருவாக்க விரும்பினர். ஒரு நாட்டின் முதுகெலும்பு அந்நாட்டைச் சார்ந்த கிராமங்களே என்பது இவரது ஆழ்ந்த கருத்தாகும். எனவே இவர் கிராமப் புறங்களில் தான் முதன் முதல் கூட்டுறவு அமைப்புகளை அமைக்க விரும்பினர். அவர் இத்தாலிய நாட்டு விவசாயிகளுடன் ஒரு சேர உழைக்கத் தொடங்கினர். தன்னலமற்ற சேவையில் ஈடுபட்ட இவர் படிப்படியாக நாளடைவில் பெரும் புகழ் பெற்ருர். மக்களிடையே இவருக்குச் செல்வாக்கு பெருகத் தொடங்கியது. பொதுத் தொண்டிலேயே தன் கவனத்தைச் செலுத்தி வந்த இவர் பின்னர் 'அமைச்சவை' யில் (Cabinet) நியமிக்கப் பட்டார். ஒரு சில ஆண்டுகளுக்கு இவர் நிதி அமைச் சராகப் பணிபுரிந்து நாட்டு மக்களுக்குப் பணியாற்றினர்.

இவரது காலத்தில் விவசாயிகள், பிற தொழிலாளர்கள் நன்மைகள் பல பெற்றனர். இவர் கிராமப் புறங்களில் விவசாயி களின் நன்மைக் கெனப் பல கூட்டுறவு வங்கிகளைத் தொடங் கினூர். இச்சங்கங்களின் வாயிலாக விவசாயப் பெருங்குடி மக்கள் கணிசமாகக் கடனுதவிகள் பெற்றனர்.

மக்கள் வங்கிகள்
(People's Banks or Popular Banks)

ஜெர்மானிய நாட்டிலிருந்து திரும்பிய லுசாட்டி 1864-'65 ஆண்டு 'லோடி' (Lodi) என்ற நகரில் முதல் கூட்டுறவுச் சங்கத்தைத் தொடங்கினூர். தன் எண்ணங்கள் யாவிற்கும் புது மெருகு கொடுத்து மக்கள் நலனுக்கு தன் எண்ணங்களைச் செலவிட்டார். இவரது கருத்துக்கள் யாவற்றையும் இவரால் தொடங்கப்பட்ட நட்புரிமைக் கூட்டுறவு சங்கம் (Friendly Society) நன்கு பிரதிபலித்தது. நாளடைவில் இச்சங்கம் கூட்டுறவு வங்கியாக மாறியது. தன் செயல் முறைகளிலும் பெரும் மாற்றங்கள் பெற்றது இக்கூட்டுறவு வங்கி. இன்றும் இக் கூட்டுறவு செயலாற்றி வருகின்றது என்ருல் அதன் அடித் தளத்தின் வலிமையை நாம் எளிதில் அறிந்து கொள்ளலாம். 1866-ஆம் ஆண்டு, இவர் தனது முதல் கூட்டுறவு வங்கியை 'மிலன்' (Milan) என்ற நகரில் தொடங்கினூர். இவ்வங்கியின் அப்போதைய மூலதனம் 700 'லியர்' (Lire) ஆகும். இத்தொகை ராக்டேல் பண்டகசாலையின் (England) தொடக்க மூலதனத்தை (£ 28) ஒத்து காணப்படுகின்றது. இம்மூலதனத்தை லுசாட் டியும் அவரது நெருங்கிய நண்பர்களும் அளித்தனர். உறுப்பினர் களுக்குத் தேவையான கடன் வசதிகளை இவ்வங்கி மிகச் சிறந்த முறையில் அளித்து வந்தது. வங்கியின் நிருவாகமும் சிறந்த முறையில் நடை பெற்றது. இவ்வங்கியின் (Banca Populare) வெற்றியைக் கண்ட எல்லோரும் வியப்பிலாழ்ந்தனர். இதைத் தொடர்ந்து பல கூட்டுறவு வங்கிகள் இத்தாலியில் தோன்ற லாயின. உறுப்பினர்களுக்குத் தக்க தருணங்களில் தாமதமின்றிக் கடன் வசதிகள் அளிக்கப் பட்டமையால் நாடு முழுமையுமே இவ் வங்கிகளின் பால் ஈர்க்கப்பட்டனர். குறிப்பாக விவசாயிகள் இவ் வங்கியை நாடத்தொடங்கினர். எனினும் இவ்வங்கியின் செயற் பாட்டுப் பகுதி நகரவங்கிகளாக விளங்கியமையால் பிரச்சினைகள் பல எழுந்தன. எனினும், நகரங்களில் வாழ்ந்துவந்த தொழிலா ளர்கள் இவ்வங்கியின் மூலம் நன்மை பல பெற்றனர். தற்போது இவ்வங்கியின் வங்கியத் தொழில் மிக வலிமையாகக் காணப்படு

கின்றது. மூன்றில் ஒரு பங்கு வங்கியல் தொழில் இவ்வங்கியினால் நடத்தப்படுகின்றது.

இனி, இவ்வங்கியின் முக்கியச் சிறப்பியல்புகளையும், அம்சங்களையும் ஆராய்வோம்.

1) லுசாட்டியினால் தொடங்கப்பட்ட வங்கிகள் நகரங்களில் வாழ்ந்து வந்தோருக்கு மட்டுமே பயனளித்து வந்தன. பெரிய விவசாயப் பண்ணைகளுக்கு உரிமையாளராக விளங்கியவர்களும் கடனுதவிகள் பெற முடிந்தது. இவ்வங்கியின் உறுப்பினர்கள் பெரும்பாலும் நடுத்தர வகுப்பைச் சார்ந்தவர்களாகவே விளங்கினர் சமுதாயத்தின் கடைநிலையில் வாழந்து வந்த ஏழை மக்கள் உறுப்பினராகும் பொருட்டு இவ்வங்கியை அணுகுவதே இல்லை.

(2) பொதுவாக உறுப்பினர்கள் செல்வச் செழிப்பு நிறைந்தவர்களாகவே காணப்பட்டனர். இவர்களது பொருளாதார நிலையைக் கண்ணுற்ற லுசாட்டி தனது வங்கியை 'வரையறை அற்ற பொறுப்பின்' கீழ் அமைக்கவில்லை. ஏழை மக்கள் நிரம்பிய கழகங்களுக்கே இத்தகைய பொறுப்பு நிலை தேவை எனக் கருதப் பட்டது. ஏனெனில், ஏழை உறுப்பினர்களது உடைமைகள் மிகக் குறைவே. இதையொட்டி அவர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள மாட்டார்கள் என்று கருதப்பட்டது. நடுத்தர வகுப்பைச் சார்ந்த மக்கள் 'வரையறை அற்ற பொறுப்பை' அறவே வெறுத்தனர். இதைத் தொடர்ந்து லுசாட்டி வரையறுக்கப்பட்ட பொறுப்பின் அடிப்படையில் சங்கங்களை அமைக்கத் தொடங்கினார். இச்சூழ்நிலையில் இத்தாலி நாட்டில் கூட்டுறவு இயக்க வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு கூட்டுறவுச் சட்டம் அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டது. இப்புதிய சட்டம் வரையறை அற்ற பொறுப்பு நிலையை அறவே அகற்றியது. எனவே, இச் சட்டத்தைத் தொடர்ந்து கூட்டுறவு வங்கிகள் வரையறுக்கப்பட்ட பொறுப்பின் அடிப்படையில் இயங்கத் தொடங்கின. சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் வாழ்ந்து வந்தோர் இக்கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாகச் சேரத் தொடங்கினர். உறுப்பினர் அனைவருக்கும் ஏற்றத் தாழ்வின்றி அவர்களது தேவைக்கேற்பக் கடனுதவிகள் அளிக்கப்பட்டன. அவர்களது நாணயத்தகுதி நன்கு ஆராயப்பட்ட பின்னரே கடன் தொகை வழங்கப்படலாயிற்று.

(3) பங்குகளின் விலை நிருணயம் ஒரே மாதிரியாகக் காணப் படவில்லை. தனிப்பட்ட வங்கிகள் தங்கள் விருப்பம் போல

சூழ்நிலைகளுக் கேற்பப் பங்குகளின் மதிப்பை நிருணயித்தன. 5-லிருந்து 50 'லையர்' வரை பங்குகளின் மதிப்பு ஏற்றத் தாழ்வுடன் காணப்பட்டது. உறுப்பினர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பங்குகளை வாங்க விரும்பினர். இத்நாலியச் சட்டத்தின்படி ஒவ்வொரு சங்கமும் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் பங்குகளை வெளியிட இயலாமல் வழிமுறைகள் செய்யப்பட்டிருந்தன. அதே போல் ஒவ்வொரு சங்கத்தின் உறுப்பினரும் 5000 லையர் (£ 200) மதிப்புள்ள பங்குகளுக்கு மேல் பெற இயலாது. பொதுவாகக் கூட்டுறவுச் சங்கங்கள் போதுமான பங்கு மூலதனத்தைப் பெற்று விளங்கின்.

(4) நேர்மை நிறைந்தவர்களும் நாணயத் தகுதி உடையவர்களுமே உறுப்பினர்களாக அனுமதிக்கப்பட்டனர். நாணயத் தகுதி நிறைந்த உறுப்பினர்களால் 'வராக் கடன்' என்ற பேச்சிற்கே இடமேற்படவில்லை. உறுப்பினர்களின் நேர்மையில் நம்பிக்கை கொண்ட பொதுமக்களில் பலர் கூட்டுறவு வங்கிகளில் தங்கள் சேமிப்புத் தொகையை 'வைப்புத் தொகை'யாக வழங்கினர். உறுப்பினர்களால்தான் வங்கியின் பெயர் உயரும் என்பதை நன்குணர்ந்திருந்த லுசாட்டி அதற்கேற்றவாறு சிறந்த முறையில் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தார். கீழ்க்கண்ட முறைகளையே சங்கத்தில் அவர் பெரும்பாலும் கடைப்பிடித்து வந்தார்.

(i) தொடக்கத்திலேயே உறுப்பினர்கள் மிகக் கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். தகுதி, திறமை, நாணயம், நன்னடத்தை போன்ற குண நலன்கள் நன்கு ஆராயப்பட்ட பின்பே உறுப்பினராக ஒருவர் அனுமதிக்கப்படுவார்.

(ii) கடன் வசதி பெற்ற உறுப்பினர்கள் தவறுமல், தாமதமின்றிக் கடன் தொகையை உரிய காலத்தில் திருப்பி அளிக்குமாறு வற்புறுத்தப் பட்டனர். எனவே 'வராக் கடன்கள்' எழுவதில்லை.

(iii) சங்கக் கூட்டங்களுக்குத் தவருமல் வருகை தருமாறு உறுப்பினர்கள் வற்புறுத்தப்பட்டனர். இத்தகைய ஏற்பாட்டினுல் சங்க நடவடிக்கைகளில் உறுப்பினர் அனைவரும் ஈடுபாடு கொண்டு உழைத்தனர்.

(iv) சங்க நடவடிக்கைகள் சிறந்த முறையில் கண்காணிக்கப் பட்டன. குறிப்பாக, மிகச்சிறந்த முறையில் கணக்கு வைப்பு முறை

பின்பற்றப்பட்டது. இதன் பயனுகக் கணக்கு வழக்குகளில் தவறுகள் ஏற்படுவது தடுக்கப்பட்டது.

(v) உறுப்பினர்களுக்குக் கடன் வசதிகள் தேவையான போது அளிக்கப்பட்டாலும், உறுப்பினர்களது குண நலன்களையும், உடைமை விவரங்களையும் நன்கு ஆராய்ந்த பிறகே கடன் தொகை வழங்கப்பட்டது. எந்த நோக்கத்தின் அடிப்படையில் கடன் பெறப்படுகிறதோ, அந்நோக்கம் நிறைவேற்றப்படுகின்றதா என்று சங்கத்தால் கண்காணிக்கப் படுகின்றது. எனவே, ஒவ்வொரு கட்டத்திலும் உறுப்பினர்களது பொருளாதார நிலை மேம்பாடடையச் சங்கம் பெருமுயற்சி எடுத்து வந்தது.

(vi) கடன் தொகை அளிக்கப்படுவதற்கு முன்னர், சம்பந்தப்பட்ட உறுப்பினரது பழைய வரலாறு நன்கு ஆராயப்படுகிறது. தொடக்கத்திலிருந்தே உறுப்பினர்களும் சங்கமும் ஒரு சேர உயர்வதற்கு இம்முறை காரணமாக அமைந்தது.

(5) லுசாட்டியின் சங்கங்கள் தங்களுக்குத் தேவையான பெரும்பகுதி நிதிவசதிகளை உறுப்பினர்களின் 'வைப்புத்தொகை' யிலிருந்தே பெற்று வந்தன. நிதி வசதிகளில் தன்னிறைவு பெறத் துடித்த லுசாட்டி தன் உறுப்பினர்களுக்குச் சிக்கனத்தின் அவசியத்தை நன்கு வலியுறுத்தி வந்தார். இதன் பயனுக உறுப்பினர்கள் தங்கள் செலவுகளைக் குறைத்து சேமிப்புத் தொகையை வைப்புத் தொகையாக மாற்றினர்.

(6) இக்கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் மக்களாட்சி முறையில் நிருவகிக்கப்பட்டன. சங்கத்தின் பெரிய அவையாகப் 'பொது மன்றம்' (General Body) இயங்கிவந்தது. சங்கத்தின் உறுப்பினர் அனைவரையும் கொண்டு விளங்கியது இப்பொது மன்றம். அன்றாடக் காரியங்கள் யாவும் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் இயக்குநர்களால் கவனிக்கப்பட்டன. நிருவாக சபையின் உறுப்பினர்கள் யாவரும் ஊதியம் பெருமல் உழைத்தனர். ஏனைய காரியங்கள் சங்கத்தின் ஊழியர்களால் நிறைவேற்றப்பட்டன. நிருவாகச் சபை சங்கத்தின் வளர்ச்சிக்கெனத் திட்டங்களைத் தீட்டி வந்தது. சிறப்புக் காரியங்களைக் கவனிப்பதற்கெனப் பல துணைக் குழுக்களும் நியமிக்கப்பட்டன. சுருங்கக்கூறின், சங்கங்களின் நிருவாகம் மிகச்சிறப்பான முறையில் அமைந்திருந்தது.

(7) கடன் வசதிகள் பொதுவாகக் குறுகிய கால அளவில் தான் அளிக்கப்பட்டன. பெருந்தொகை கடனுக அளிக்கப்பட

வில்லை. கடன் தொகைக்குக் குறைந்த வட்டித் தொகையையே உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டது. கடன் வசதிகள் 'ஆட் பிணை' (Personal Security) அடிப்படையில் அளிக்கப்பட்டன. குறிப்பிட்ட காலத்தில் கடன் தொகையைத் திருப்பித்தர இயலாத உறுப்பினர்களுக்குத் தவணைக்காலம் மேலும் நீட்டித்துத்தரப்பட்டது. பெரும்பாலான கடன்கள் 'மாற்றுச் சீட்டு' (Bill of Exchange) அடிப்படையில் வழங்கப்பட்டன. சங்கத்திற்கு நிதி தேவைப்படும்போது, இருப்பில் இருக்கும் மாற்றுச் சீட்டுகள் இயங்கிவந்த ஏனைய வங்கிகளிடம் தள்ளுபடி செய்து நிலைமை சரி செய்யப்பட்டது. எனவே, நவீன வங்கியியல் தொழிலில் காணப்படும் எல்லா வசதிகளும் இச்சங்கங்களில் சிறப்பாகக் காணப்பட்டன. உறுப்பினர்கள் நேர்மை நிறைந்தவர்களாகக் காணப்பட்டதால் 'வராக் கடன்' என்ற சொல்லுக்கே இடமின்றித் திகழ்ந்தன இச்சங்கங்கள்.

(8) தொடக்கத்திலிருந்தே லுசாட்டி தனது சங்கங்கள் போதிய நிதி வசதிகளைக் கொண்டு விளங்க அரும்பாடுபட்டார். இச்சங்கங்களுக்கு ஆதரவாக மத்திய அமைப்புகள் இயங்குவதை அவர் விரும்பவில்லை. எனவே சங்கங்களின் வளர்ச்சிக்கென மத்திய அமைப்புகள் தொடங்கப்படவில்லை. நாளடைவில் மத்திய அமைப்புகளின் அவசியத்தை நன்குணர்ந்த லுசாட்டி தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டார். எனினும், அப்போது நிலவிய சூழ்நிலைகளின் காரணமாக மத்திய அமைப்புகள் அமைக்கப்படவில்லை. இது இத்தாலியக் கூட்டுறவுக் கடன் இயக்கத்தின் பெரிய குறைபாடாகத் திகழ்ந்தது.

(9) இலாபத்தொகை முழுவதும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படவில்லை. இலாபத்தில் ஒரு கணிசமான பங்கு காப்புநிதியில் பாதுகாக்கப்பட்டது. எனினும் தொடக்கத்தில் உறுப்பினர்களுக்கு வரையறையின்றி 'இலாப ஈவுத்தொகை' வழங்கப்பட்டது. நாளடைவில் இது அடியோடு மாறியது.

லுசாட்டியின் கூட்டுறவு அமைப்புகள் ஜெர்மானிய நாட்டின் சூல்ஸ் கூட்டுறவு அமைப்புகளின் அடிச்சுவட்டில் அமைக்கப்பட்டவையாகும். நேரடியாக ஜெர்மானியச் சங்கங்களின் செயல்முறைகளைக்கண்ணுற்றுத் திரும்பிய லுசாட்டி தனது நாட்டின் சூழ்நிலைகளுக்கேற்பக் கூட்டுறவு வங்கிகளை நகர்ப்புறங்களில் தொடங்கி

ஞர். சூல்ஸ் கூட்டுறவு அமைப்புகளைப் பின்பற்றி லுசாட்டி தனது கூட்டுறவு வங்கிகளை அமைத்திருப்பினும் இவ்விரு வங்கிகளுக்கும் வேறுபாடுகள் இல்லாமலில்லை. இவ்வேறுபாடுகளுக்கு அந்தந்த நாட்டில் நிலவிய சூழ்நிலைகளே காரணமாகும். மக்களின் துயர் துடைக்கவே இவ்விரு அமைப்புகளும் அமைக்கப்பட்டன என்பதில் யாதோர் ஐயமும் எழுவதில்லை. இனி, இவ்விரு கூட்டுறவு அமைப்புகளையும் ஒப்புநோக்குவோம்.

ஒப்புமை காண்டல்:

ஜெர்மானிய நாட்டில் இயங்கிவந்த சூல்ஸ் கூட்டுறவு அமைப்புகளுக்கும் இத்தாலியில் அமைக்கப்பட்ட லுசாட்டி கூட்டுறவு வங்கிகளுக்குமிடையே காணப்படும் வேற்றுமைகளைக் காண்பது மூலம் இவ்விரு அமைப்புகளின் செயற்பாடுகளை நாம் எளிதில் அறிந்து கொள்ள முடியும்.

வேற்றுமைகள்

	சூல்ஸ் வங்கிகள்	லுசாட்டி வங்கிகள்
1. உறுப்பினர் நிலையின் தன்மை	சூல்ஸ் வங்கிகள் ஏழை உறுப்பினர்களைக் கொண்டு தொடங்கப்பட்டன.	லுசாட்டியினல் தொடங்கப்பட்ட மக்கள் வங்கிகள் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்டு விளங்கின. ஏழைமக்களை உறுப்பினர்களாகக். கொள்ள லுசாட்டி வகை செய்யவில்லை.
2. பொறுப்பு	சில வங்கிகள் வரையறுக்கப்பட்ட பொறுப்பின் அடிப்படையில் இயங்கிவந்தன. ஏனைய சங்கங்கள் வரையறை அற்ற பொறுப்பின் கீழ் இயங்கி வந்தன.	லுசாட்டி தனது வங்கிகளை வரைநிலைப் பொறுப்பின் அடிப்படையில் அமைத்தார். உறுப்பினர்கள் போதுமான செல்வச்சிறப்பு நிறைந்தவர்களாக இருந்தமையால் இவ்வாறு அமைக்கப்பட்டன.

	சூல்ஸ் வங்கிகள்	லுசாட்டி வங்கிகள்
3. பங்கு மதிப்பு	இவ்வங்கிகளின் பங்கு மதிப்பு உயர்வாகக் காணப்பட்டது (£ 15 and £ 25). பங்குதொகையைத் தவணை முறைகளில் அளிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. உறுப்பினர்கள் தங்கள் வசதிக்கேற்ப பங்குத் தொகையை வழங்கினர்.	இவ்வங்கிகளின் பங்கு மதிப்பு மிகக் குறைவாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. (£ 1 to £ 2). தவணை முறையில் பங்குத் தொகையை அளிக்க உறுப்பினர்கள் அனுமதிக்கப் பட்டிருந்தாலும் 10 மாதங்களில் வழங்கிட வேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தது.
4. நிருவாகம்	ஊழியர்களும், இயக்குநர்களும் ஊதியம் பெற்றனர்.	நிருவாகத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை. எனவே வட்டி விகிதம் மிகக் குறைவாக நிருணயிக்கப்பட்டது.
5. கடன் வகை	கடன் தொகை பணமாக வழங்கப்பட்டது. ரொக்கக்கடன் வழங்கப்பட்டது.	கடன் தொகை 'மாற்றுச் சீட்டு தள்ளுபடி செய்யும் முறையில்' வழங்கப்பட்டது.
6. கடன் கால அளவு	நீண்டகாலக் கடன்கள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன.	குறுகிய காலக் கடன்களே உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன.
7. கடன் தொகை	பொதுவாக கடன் தொகை அதிகமாக காணப்படுகின்றது. உறுப்பினர்களின் தேவைக்கேற்ப அதிகப் பணம் கடனாக வழங்கப்பட்டது.	உறுப்பினர்களின் தேவைகள் அதிகமாயிருப்பினும் சிறு தொகையே கடனாக வழங்கப்பட்டது.
8 கடன் பெறுவோர்	உறுப்பினர்களுக்கு மட்டுமே கடன் வசதிகள் அளிக்கப்பட்டன.	உறுப்பினரல்லாதாரும் கடன் வசதிகளைப் பெற்றனர்.
9. வட்டி விகிதம்	பொதுவாக சந்தை விகிதத்தைவிட குறைவாகவே பெறப்பட்டது.	சந்தை விகிதமே இவ்வங்கிகளால் பின்பற்றப்பட்டது.

	சூல்ஸ் வங்கிகள்	லுசாட்டி வங்கிகள்
10. செயற்பாட்டுப் பகுதி	ஒவ்வொரு நகரிலும் இவ்வங்கி இயங்கி வந்தது. எனவே நகர அளவே செயற்பாட்டுப் பகுதியாக விளங்கியது.	மாவட்டம் முழுவதும் இவ்வங்கியின் செயற்பாட்டுப்பகுதியாக விளங்கியது எனவே, இவ்வங்கி மாவட்ட அளவில் இயங்கியது.
11. உயர் மட்ட நிதி அமைப்பு	வங்கிகளின் நலனைக் கருதி மத்திய அமைப்புகள் அமைக்கப் பட்டிருந்தன.	மத்திய வங்கிகள் லுசாட்டியினுல் அமைக்கப்படவில்லை.
12. கிராம அமைப்புகளுடன் தொடர்பு	இவ்வங்கிகள் பிற அமைப்புகளுடன் கடும் போட்டியில் ஈடுபட்டிருந்தன. எனவே நெருங்கிய தொடர்பு காணப்படவில்லை.	பிற கூட்டுறவு அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு விளங்கின. கிராமஅமைப்புகளுக்கு பொருளுதவிகளும் வழங்கப்பட்டன.
13. பங்கு ஆதாயம்	வரையறுக்கப்பட்ட தொகையே பங்கு ஆதாயமாக வழங்கப்பட்டது.	குறிப்பிட்ட விகிதத்தில் பங்கு ஆதாயம் வழங்கப்படவில்லை.
14. பங்குகளின் மதிப்பீடு	புது உறுப்பினர்களுக்குப் பங்குகள் வழங்கப்படும்போது பங்குத் தொகை மட்டுமே பெறப்பட்டது. மிகையாகத் தொகை பெறப்படவில்லை.	காப்பு நிதியின் அளவிற்கேற்பச் சில தருணங்களில் பங்குத் தொகையை விட மிகையாக உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டது.
15. ஒற்றுமைக் கொள்கை	அனைத்துச் சங்கங்களும் நல்ல முறையில் ஜெர்மானிய நாட்டில் இணைக்கப்பட்டிருந்தமையால் சிறந்த ஒற்றுமை நிலவியது.	இத்தகைய ஒரு சிறந்த ஒற்றுமை இத்தாலிய கூட்டுறவு அமைப்புகளுக்கிடையே காணப்படவில்லை.

கிராமக் கடன் இயக்கம் :

நகரப் பகுதிகளில் வாழ்ந்து வந்த மக்களுக்குக் கடனுதவிகள் அளிப்பதற்கென லுசாட்டி கூட்டுறவு வங்கிகளை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருக்கையில், கிராமங்களில் வாழ்ந்து வந்தோரின் நலன் கருதிக் கூட்டுறவு அமைப்புகளை உருவாக்க 'உல்லம்பர்க்' என்ற சிறந்த கூட்டுறவாளர் பெருமுயற்சி செய்து வந்தார். 1883-ஆம் ஆண்டு, 'லொரிக்கியா' (Loreggia) என்ற தனது சொந்த ஊரில் முதல் கூட்டுறவு வங்கியை இவர் தொடங்கினர். தொடக்கத்தில் இவரது வங்கி 32 உறுப்பினர்களையே கொண்டு விளங்கியது. தொடக்கத்தில் இவரது வங்கி பங்கு மூலதனத்தைப் பெற்றிருக்கவில்லை. நாளடைவில் நிதிவசதிகளைக் கணிசமாக உயர்த்தும் பொருட்டுப் பங்குகள் (100 each) வெளியிடப்பட்டன. இதன் பின்னர்தான், இவரது வங்கி வெற்றிப் பாதை நோக்கிச் செல்லத் தொடங்கியது. நிதி வசதிகளைப் பெருக்குவதற்குத் திட்டங்களைத் தீட்டியபோதே செலவுகளைக் குறைப்பதற்கான வழிமுறைகளும் தீவிரமாகச் சிந்திக்கப்பட்டன. இதன் விளைவாக வங்கியின் செலவினம் கணிசமாகக் குறையத் தொடங்கியது. இத்தகைய சிறந்த நடவடிக்கைகளின் காரணமாகக் கடன் தொகைக்கு மிகக்குறைந்த வட்டியே வசூலிக்கப்பட்டது. குறைந்த வட்டி விகிதத்தின் ($1\frac{1}{2}\%$) காரணமாக உறுப்பினர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தனர். சிறந்த நிருவாகத்தையும் இவரது வங்கி பெற்றிருந்தது. நாளடைவில் இதைத் தொடர்ந்து பல கூட்டுறவு வங்கிகள் இத்தாலியில் தோன்றின.

இனி, கிராமப் புறங்களில் இயங்கிவந்த வங்கிகளின் முக்கியக் குணங்களையும் தன்மைகளையும் ஆராய்வோம்.

(1) உரிமை வயது வந்த அனைவரும் வங்கியின் உறுப்பினராகச் சேர்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். எனினும், உறுப்பினராக விரும்புவோரின் குணநலன்கள் நன்கு ஆராயப்பட்ட பின்னரே உறுப்பினராவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. செல்வ நிலையை மட்டும் மனதில் கொள்ளாமல் உறுப்பினர்களது நேர்மை, நாணயம் முதலானவற்றையும் நன்கு சீர்தூக்கிப் பார்க்கத் தவறவில்லை இவ்வங்கி. குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள் உறுப்பினர்களாக அனுமதிக்கப்படவில்லை. உறுப்பினர்களது நன்நடத்தையைப் பெரிதும் விரும்பியது உல்லம்பர்க்கினுல் அமைக்கப்பட்டிருந்த கூட்டுறவு வங்கி.

(2) தனி நபர்கள் உறுப்பினர்களாக ஏற்கப்பட்ட பின்பும் அவர்களது நடத்தை நன்கு கண்காணிக்கப்பட்டது. நல்ல

பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ளுமாறு அவர்கள் அறிவுறுத்தப் பட்டனர். கல்வியறிவு நிறைந்த உறுப்பினர்களை வங்கி நன்கு ஊக்குவித்தது. கூட்டுறவுக் கல்வியின் அவசியத்தை நன்குணர்ந் திருந்த இவ்வங்கி உறுப்பினர்களுக்குக் கூட்டுறவுக் கல்வியையும், தகுந்த பயிற்சியையும் சிறந்தமுறையில் அளிக்கத் தவறவில்லை. ஒவ்வொரு துறையிலும் கூட்டுறவுக் கொள்கைகள் கடைப்பிடிக்கப் பட்டன. கடன் வசதிகளை அளிப்பதோடு நில்லாமல், கடன் தொகை முறையாகச் செலவிடப்படுகின்றதா என்பதையும் இவ் வங்கி நன்கு கண்காணித்து வந்தது. நேர்மை நிறைந்த உறுப் பினர்களைக்கொண்டு இவ்வங்கி விளங்கியமையால் கடன் தொகை யைத் திரும்பப் பெறுவதில் பிரச்சினைகள் எழவில்லை. இதன் பயனாக 'வராக் கடன்' வாயிலாக எவ்வித இடர்ப்பாடும் ஏற்பட வில்லை.

(3) நிருவாகச் செலவைக்குறைப்பதிலும் இவ்வங்கிகள் தீவிர கவனம் செலுத்தி வந்தன. ஊதியம் பெறாத நபர்களைக்கொண்டே நிருவாகம் செம்மையாக நடந்துவந்தது. கணக்கு வழக்குகளையும் நிருவாகக் குழுக்களே பெரும்பாலும் கவனித்தமையால் குழுக் கூட்டங்கள் அவ்வப்போது நடத்தப்பட்டன.

(4) உறுப்பினர்கள் சிக்கன நடவடிக்கைகளில் ஈடுபாடு கொள்ள வேண்டும் என்று விரும்பிய இவ்வங்கிகள் உறுப்பினர் களிடமிருந்து 'வைப்புத் தொகை'யையும் பெற்று வந்தன. உறுப் பினர்கள் சேமிப்புப் பழக்கத்தைக் கடைப்பிடிக்கத் தக்கவகையில் மிகச்சிறிய தொகையும் வங்கியினுல் வைப்புத் தொகையாக அனும திக்கப்பட்டது. அரசாங்கத் தபால் நிலையங்களில் வைப்புத் தொகை வைக்கும் வசதிகள் இருந்தும் பெரும்பாலான உறுப்பி னர்கள் இவ்வங்கிகளையே நாடினர். உறுப்பினர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை இவ்வங்கிகள் ஏற்படுத்தியமையால் மிகுந்த செல்வாக்குப் பெற்றன.

(5) உறுப்பினர்களது 'பிணையம்' (Security), கடன் பெறும் நோக்கம், முந்தைய நடவடிக்கைகள் முதலானவற்றை நன்கு ஆராய்ந்த பிறகே கடன் வசதிகள் அளிக்கப்பட்டன. முதலில் எந்த உறுப்பினருக்கும் மூன்று மாதக் கடன் வசதியே அளிக்கப் பட்டது. கடன் பெறும் நோக்கம் உறுப்பினரால் நிறைவேற்றப் படுகிறதா என்பதும் நன்கு கண்காணிக்கப்பட்டது. கடன் தொகை தவணைமுறைகளில் திரும்பப் பெறப்பட்டது. குறிப்பிட்ட கால வரையறைக்குள் கடனைச் செலுத்த இயலாதவர்களுக்கு தவ ணைக் காலம் நீட்டித்துத் தரப்பட்டது. கடன் தொகையின் பேரில்

நியாயமான வட்டி விகிதமே (பொதுவாக 6%) கணக்கிடப் பட்டது.

(6) இலாபத்தொகை முழுவதும் காப்பு நிதியாகப் பாதுகாக் கப்பட்டது. உறுப்பினர்களுக்குப் பங்கு ஆதாயம்] இலாபத் தொகையிலிருந்து வழங்கப்படவில்லே.

(7) அரசியல், மதம் ஆகிய இருதுறைகளிலும் இவ்வங்கிகள் நேர்மை தவருத நடுநிலேமைக் கொள்கைகளேக் கடைப்பிடித்து வந்தன. அரசாங்கத்திடமிருந்து உதவித் தொகையைக்கூட இவ்வங்கிகள் பெறவில்லே. இவ்வங்கிகளின் நிருவாகத்தில் அரசின் தலேயீடும் இல்லாமலிருந்ததால், இவ்வங்கிகள் தடை யின்றி வளர்ந்தன.

லுசாட்டி, உல்லம்பர்க் ஆகியோரின் வங்கிகள் மதம், அரசியல் தொடர்பற்று இயங்கிவந்தன என்ருலும் நாளடைவில் கூட்டுறவுத் துறையில் பல அடிப்படையில் இயங்கி வந்த வேறு சில அமைப்பு கள் தொடர்பு கொள்ளத்தொடங்கின. அரசியல், பொருளாதாரத் துறைகளில் தங்கள் இலக்கிணே எட்டிப் பிடிக்கவே இவைகள் கூட்டுறவு இயக்கத்தை நாடின.

1890-ஆம்ஆண்டு கிருத்துவ மதத்தின் ஒரு பிரிவான கத்தோ லிக்கர்கள் தங்கள் நலன் கருதி முதல் கூட்டுறவு வங்கியைத் தொடங்கினர். இவ்வங்கியின் வெற்றியைத் தொடர்ந்து பல வங்கிகள் தோன்றலாயின. 1922-ஆம் ஆண்டு இவ்வங்கிகளின் எண்ணிக்கை 3,500 ஆகும். இக்கத்தோலிக்கக் கூட்டுறவு வங்கி களின் பங்கு மதிப்பு சிறிய தொகையாகவே நிர்ணயிக்கப்பட்டி ருந்தது. நிர்வாகக் குழுக்களில் அங்கம் வகித்தோர் ஊதியம் பெருமல் உழைத்தனர். உறுப்பினர் அனேவரும் கடனுதவிகள் பெற அனுமதிக்கப்பட்டனர். கடன் தொகையாக உறுப்பி னர்கள் £ 20-க்கு மேல் பெற இயலாமல் கட்டுப்பாடு விதிக்கப் பட்டிருந்தது. நாளடைவில் இது £ 40 ஆக உயர்த்தப்பட்டது. குறிப்பிட்ட கால வரையறைக்குள் கடனேத் திரும்பப் பெற வழி முறைகள் செய்யப்பட்டிருந்தன. அவ்வாறு குறிப்பிட்ட காலத்தில் கடன் தொகையைச் செலுத்துபவர்களுக்கு வட்டித் தொகையில் சலுகைகள் காட்டப்பட்டன. இதன் காரணமாகக் கடன் பெற்ற உறுப்பினர்கள் நாணயத் தகுதி மிகுந்தவர்களாகக் காணப்பட்ட னர். இச்சங்கங்களின் கணக்கேடுகளில் 'வராக் கடன்' என்ற சொல்லே அதிகமாக எழுதப்படவில்லே. உறுப்பினர்களுக்கு இலாபத் தொகையிலிருந்து பங்கு ஆதாயம் வழங்கப்படவில்லே,

இலாபத் தொகை முழுவதும் காப்புநிதியாக மாற்றப்பட்டது. சில தருணங்களில் இலாபத் தொகை வங்கி உறுப்பினர்களின் நல்வாழ்விற்கெனச் செலவிடப்பட்டது.

இவைகளில் சில சங்கங்கள் உறுப்பினர்களுக்குத் தேவையான முக்கியப் பொருள்களைக் கொள்முதல் செய்து விநியோகித்தது மட்டுமின்றி, உறுப்பினர்களது விளை பொருள்களுக்கு விற்பனையேற்பாட்டையும் செய்துவந்தன. இத்தாலியின் பல அரசியல் கட்சிகளும் கூட்டுறவுத்துறையில் ஈடுபடத் தொடங்கின. சமதருமவாதிகள் (Socialists), குடியரசுக் கொள்கையாளர்கள் (Republicans), வல்லாண்மைக் கட்சியாளர்கள் (Fascists) போன்ற பல வகைக் கட்சியாளர்கள் தங்கள் தங்களுக்குக்கென்றுக் கூட்டுறவுக் கழகங்களை அமைக்கலாயினர். பல சமயங்களில் ஓரே பகுதியில் பல கழகங்கள் இயங்கி வந்தன. இதன் விளைவாகக் கடும் போட்டி உருவாகத் தொடங்கியது. சங்கங்களிடையே ஏற்பட்ட கடும் போட்டியை இடைநிலையர்கள் நன்கு பயன் படுத்திக்கொண்டனர். போட்டியின் காரணமாகப் பல கூட்டுறவு அமைப்புகள் பேரிழப்பிற்கு ஆளாயின.

வல்லாண்மைக் கட்சியின் (1922'—45) வளர்ச்சிப் பணிகள் :

இக்கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் கூட்டுறவு இயக்கத்தில் பல புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டன. முந்தைய அரசாங்கம் அளித்து வந்த சலுகைகள் அடியோடு நிறுத்தப்பட்டன. கூட்டுறவுகளுக்கு அளிக்கப் பட்டிருந்த கடன் தொகை உடனே திரும்பப் பெறப்பட்டது. கூட்டுறவு இயக்கத்தில் அரசியல் கட்சிகள் தலையிடா வண்ணம் நிலைமைகள் உருவாக்கப் பட்டன. தேசீய அளவில் இயங்கி வந்த தேசீய அமைப்பு கலைக்கப்பட்டது. இது போன்ற பல நடவடிக்கைகளின் காரணமாகக் கூட்டுறவு இயக்கம் அடியோடு மாற்றியமைக்கப்பட்டது. கீழ்க் கண்ட முறைகளில் இயக்கத்தை மாற்றியமைக்கத்தக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

(i) இயங்கி வந்த பல சிறு கழகங்கள் ஒன்று சேர்ந்து அளவில் பெரிய கூட்டுறவுச் சங்கங்களென (Fascist Socs.) உருவாக்குதல்.

(ii) சங்கங்களின் செயல்முறைகளை அரசு தகுந்த முறையில் கட்டுப்படுத்துதல் அல்லது கண்காணித்தல்,

இத்தகைய அரசு ஆணைகளால் இத்தாலி நாட்டில் இயங்கி வந்த கூட்டுறவு அமைப்புகளில் மட்டுமின்றி, ஆற்றி வந்த பணிகளிலும் மாற்றம் ஏற்பட்டன. மாற்றியமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் ஒன்று சேர்ந்து ஒரு தேசீய அமைப்பை (Fascist National Organisation or Ente) உருவாக்கின. இத்தேசீய அமைப்பின் பணிகள் பலதரப் பட்டவையாகும்.

(i) மத்தியக் கூட்டுறவு நிலையங்களின் பணிகளை முறையாக ஒழுங்கு படுத்தல் அல்லது நெறிப்படுத்தல் ;

(ii) புதிய கூட்டுறவு அமைப்புகளைத் தோற்றுவித்தல் ;

(iii) சங்கங்களிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதில் 'இசைவுத் தீர்ப்பாளராகப்' (Arbitrator) பணியாற்றுதல் ;

(iv) கூட்டுறவுக் கல்வியையும் பயிற்சியையும் நன்கு பரப்புதல் ;

(v) இணைக்கப்பட்டிருந்தச் சங்கங்களின் கணக்கு வழக்குகளைத் 'தணிக்கை' செய்தல்;

(vi) கூட்டுறவு வளர்ச்சிக்குத் தேவையான எல்லாப் புள்ளி விவரங்களையும் சேகரித்தல்;

(vii) அன்றாட நடவடிக்கைகளிலும் செயல் முறைகளிலும் தவறு நேரா வண்ணம் சங்கங்களை அவ்வப்போது கண் காணித்தல்.

இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாகக் கூட்டுறவு இயக்கம் அடியோடு அரசாங்கத்தின் கருவியாக மாறியது. இதன் விளைவாகக் கூட்டுறவின் சில அடிப்படைக் கொள்கைகள் புறக்கணிக்கப்பட்டன. அரசாங்கத்தின் எண்ணத்திற்கேற்பக் கூட்டுறவு அமைப்புகள் இயங்கலாயின. இவ்வாறு இவர்களது இரும்புப் பிடியில் சிக்கியிருந்த இத்தாலியக் கூட்டுறவு இயக்கம் 1944-ஆம் ஆண்டு இவர்களது ஆட்சி முடிவுற்ற போது விடுதலை பெற்றது. கலைக்கப்பட்டிருந்த தேசீய அமைப்புகள் மீண்டும் 1945-ஆம் ஆண்டில் புத்துயிர் பெற்றன. தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களும் பெருமளவு முன்னேறத் தொடங்கின. 20 ஆண்டு காலம் வல்லாண்மைக் கட்சியிடம் சிக்கியிருந்த காரணத்தால்,

கூட்டுறவு இயக்கம் உடனே தன் பழைய பொலிவைப் பெற இயலவில்லை. குறிப்பாக, இயக்கத்தைச் சிறந்த முறையில் நடத்திச் செல்லவல்ல பயிற்சி பெற்ற கூட்டுறவாளர்கள் காணப்படவில்லை. மேலும், நேர்மைத் திறனற்ற பல நபர்கள் கூட்டுறவு இயக்கத்தில் குடிபுகுந்திருந்தமையால் எண்ணங்கள் எளிதில் ஈடேறவில்லை.

இக்குறைபாடுகளை அடியோடு களைவதற்கென 1946-ஆம் ஆண்டு ஒரு 'கூட்டுறவு பொது இயக்குநரகம்' (General Directorate of Co-operation) அமைக்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளை நன்கு கண்காணிப்பதற்கு இவ் வியக்குநரகம் வழி முறைகள் வகுத்தது. இதன் விளைவாகச் சங்கங் களின் திறமை உயரலாயிற்று. 1947-ஆம் ஆண்டு கூட்டுறவுக் கழகங்களின் செயல்களைக் கட்டுப்படுத்தத்தக்க வகையில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. கூட்டுறவுத் துறை தொழிலாளர் நல இலாகாவின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. இதையொட்டி, ஒரு 'மத்தியக் கூட்டுறவுச் செயற் குழு' (Central Co-op. Commission) அமைக்கப்பட்டது. இக்குழுவில் 20 நபர்கள் அங்கம் வகித்தனர். பெரும்பாலும் உறுப்பினர்கள் அரசாங்க அலுவலர் களாகவே விளங்கினர். உறுப்பினர்களில் 10 பேர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளாவர். இச்செயற்குழு இயங்கிவந்த எல்லாச் சங்கங்களையும் நன்கு ஆராய்ந்து மலிந்து காணப்பட்ட குறைபாடுகளை நீக்க ஆலோசனைகளை வழங்கத் தொடங்கியது. ஆண்டு முடிவில் அனைத்துச் சங்கங்களின் கணக்கு வழக்குகள் தணிக்கை செய்யப்பட்டன. தணிக்கை பெரும்பாலும் கூட்டுறவுச் சங்கங்களினாலும், கண்காணிப்புச் சங்கங்களினாலும் செய்யப் பட்டது. இதன் காரணமாக எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் கூட்டுறவுத் தணிக்கை அமைப்புடன் இணைந்து காணப்பட்டன. உறுப்பினர்கள் பெற்றிருக்க வேண்டிய குறைந்த பட்ச தகுதி களைச் சட்டம் வரையறுத்துக் காட்டியது. ஒவ்வொரு சங்கமும் ஒன்பது நபர்களையாவது உறுப்பினர்களாகப் பெற்றிருக்க வேண்டும் என்று விதிமுறை வகுக்கப்பட்டது. தொழிலாளர் ஒப்பந்தச் சங்கங்களில் (Labour Contract Socs.) குறைந்த பட்ச உறுப்பினர் எண்ணிக்கை 25 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது, நுகர்வோர் சங்கங்களின் குறைந்த அளவு உறுப்பினர் எண்ணிக்கை 50 ஆகும். சங்கத்தின் பங்கு 500 'லையருக்கு' (Lire) குறையாமலிருத்தலவசியம். சங்கத்தின் உறுப்பினர் எவரும் 2,50,000 லையர் (£ 10, 000) மதிப்புள்ள பங்குகளுக்கு மேல் வைத்திருக்க இயலாது. இவ்வாறு வல்லாண்மைக் கட்சியினால்

சீரழிந்த இத்தாலி நாட்டுக் கூட்டுறவு இயக்கம் புதிய ஆட்சியில் மீண்டும் புத்தொளி பெறலாயிற்று,

புதிய ஆட்சியின் திறமையான நடவடிக்கைகளால் கூட்டுறவு இயக்கம் இத்தாலியில் நன்கு வேரூன்றத் தொடங்கியது. நாள் தோறும் இவ்வியக்கம் புது மெருகு பெற்று வலிமையுடன் விளங்கலாயிற்று. எனினும் சில பிரச்சினைகள், இடர்ப்பாடுகள் இவ்வியக்கத்தில் இல்லாமலில்லை.

தற்போதைய நிலையில் இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கம் இரு பெரும் பிரிவுகளாகக் காணப்படுகின்றன; 1947-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட 'தேசீயக் கூட்டுறவு அமைப்பு' (National League of Co-operation) 3 மிலியன் உறுப்பினர்களைக் கொண்ட 10,641 கூட்டுறவுக் கழகங்களை இணைப்புச் சங்கங்களாகப் பெற்றுள்ளது. இதற்கு இணையாக இயங்கி வரும் 'இத்தாலியக் கூட்டுறவு கூட்டிணைப்பு' (Italian Co-op. Confederation) 1.8 மிலியன் உறுப்பினர்களைக் கொண்ட 8,635 சங்கங்களைப் பெற்றுள்ளது. இவற்றிற்கிடையே ஒரு நல்லுறவு காணப்படவில்லை. இதன் காரணமாக இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கம் போதிய வளர்ச்சியைப் பெற இயலவில்லை.

கூட்டுறவு இயக்கத்தை வழி நடத்திச் செல்ல தகுதி வாய்ந்த பயிற்சி பெற்ற கூட்டுறவாளர்களின் எண்ணிக்கை குறைந்து காணப்படுவதால் வளர்ச்சி தடைப்படலாயிற்று. தற்போது இந்நிலையை மாற்றியமைக்கத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பல பயிற்சிக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இயக்க வளர்ச்சிக்கு நிதிப்பற்றுக் குறையும் பெரியதொரு தடையாக விளங்குகின்றது. போதிய நிதிவசதிகளைப் பெருக்குவதற்காகப் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. நிதி வசதிகளைக் கூட்டுறவுக் கழகங்களுக்கு வழங்கும் பொருட்டு 2.5 மிலியன் லயரைக் கொண்ட ஒரு சிறப்புப்பிரிவு 'தேசீயத் தொழிலாளர் வங்கி'யினல் (National Labour Bank) தொடங்கப் பட்டுள்ளது' 1953-ஆம் ஆண்டு இறுதியில் இச்சிறப்புப்பிரிவு கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கணிசமான கடன் உதவிகளை (1.7 Million Lire) வழங்கியுள்ளது. இவ்வங்கியைத் தவிர 'தேசீய முன்னுள் படைவீரர் அமைப்பு'ம் (National Ex-Soldiers Organisation) கடனுதவிகள் (0.35 மிலியன்) அளித்து வருகின்றன. இருப்பினும் இப்பிரச்சினை அறவே அகற்றப்பட்டு

விடவில்லை. இந் நாட்டுக் கூட்டுறவு இயக்க வளர்ச்சியைக் கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் மூலம் அறியலாம்.

சங்க வகை	சங்க எண்ணிக்கை 1953	சங்க எண்ணிக்கை 1956
1. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்	3410	4170
2. தொழிலாளர், உற்பத்தியாளர் சங்கங்கள்	4619	5762
3 விவசாயச் சங்கங்கள்	2318	3301
4. கட்டிடச் சங்கங்கள்	4350	8465

ஏனைய கூட்டுறவு அமைப்புகளும் நன்கு வளர்ச்சி பெற்று வருகின்றன. 1962-ஆம் ஆண்டு இத்தாலியில் இயங்கி வந்த கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 18,791 ஆகும். இச்சங் கங்களின் உறுப்பினர் எண்ணிக்கை சுமார் 4·5 மிலியனாகும். ஒரு நோக்குக் கூட்டுறவுக் கழகங்களும், பல நோக்குக் கூட்டுறவு அமைப்புகளும் கணிசமாகத் தொடங்கப்பட்டுள்ளன. பெரும் பாலும் கூட்டுறவுச் சங்கங்கள் வணிகத் துறையில்தான் தங்கள் கவனத்தைச் செலுத்தி வருகின்றன. பால், குடிவகைகள் (குறிப் பாக ஓயின் (Wine) போன்ற பொருள்களின் விற்பனைத் துறையில் தான் பெரும்பாலானச் சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. இப்பொருள் களின் மொத்த உற்பத்தியில் 30 சதவிகிதம் இச்சங்கங்களால் கையாளப்படுகிறது. சமீப காலமாக, ஆலிவ் பொருள்கள் (Olive Products), இறைச்சி, முட்டை போன்ற பொருள்களுக்கெனப் பல உற்பத்திச் சங்கங்கள், விற்பனை யேற்பாட்டுச் சங்கங்கள், பொருள்களைப் பக்குவப் படுத்தத் தக்க கூட்டுறவு அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. காய்கறி வகைகள், உணவுப் பொருள்கள் முதலானவற்றிற்கும் தனிச்சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கால்நடை வளர்ப்புச் சங்கங்களும் கணிசமாக இயங்கி வரு கின்றன.

பலவகைக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்கெனக் கூட்ட மைப்புகளையும் பெற்றுள்ளன. உதாரணமாக, ஓயின் உற்பத்தி யாளர் சங்கக் கூட்டிணைப்பு (Italian Federation of Wine Producers Co-operatives), பால் பண்ணைச் சங்கங்களின் கூட்டி ணைப்பு (National Federation of Co-op. Dairies), காய்கறி, பழவகை விற்பனைச் சங்கங்களின் கூட்டிணைப்பு ஆகிய பல கூட்டி ணைப்புகள் இத்தாலியின் கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்தி வருகின்றன. இக்கூட்டமைப்புகள் யாவும் ‘இத்தாலியக் கூட்டு றவுப்பெருங் கூட்டிணைப்பின்’ (C.C.I.)உறுப்பினர்களாக விளங்கு

கின்றன. எனவே, ஒவ்வொரு மட்டத்திலும் கூட்டுறவு அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இவையாவும் ஒரு சங்கிலித் தொடர் போல் காட்சியளிக்கின்றன.

தொழிலாளர் சங்கங்கள் (Labour Socs.)

இத்தொழிலாளர் சங்கங்கள் இத்தாலியின் தனிச் சிறப்பு வாய்ந்தவையாகும். உலகக் கூட்டுறவு அரங்கில் இத்தாலிக்கு ஒரு சிறப்பிடத்தைப் பெற்றுத் தந்தவை இச்சங்கங்களே! இத்தகைய அமைப்புகளை அமைத்து உலக நாடுகளுக்கு இத்தாலி ஒரு வழிகாட்டியாக விளங்குகிறது.

19-ம் நூற்றுண்டின் இடையில் ஏற்பட்ட வியாபார மந்தத்தின் காரணமாக இந்நாட்டுப் பொருளாதாரம் மிகவும் சீர்கேடடையத் தொடங்கியது. இம்மந்த நிலை காரணமாக பல்வேறு பொருள்களின் உற்பத்தியாளர்கள் தங்களது செயல்களைச் சுருக்கிக் கொண்டனர். இதன் விளைவாக, வேலை வாய்ப்புக்களை இழந்த தொழிலாளப் பெருமக்கள் தொடர்ந்து பல இன்னல்களுக்கு ஆளாயினர். அவர்களது வருமானம் மிகவும் குறைந்து காணப்பட்டது. மேலும், இவர்களுக்கு வேலை வாய்ப்புகளை அளித்த ஒப்பந்தக்காரர்கள் இவர்களது குறைந்த வருவாயில் பங்கு பெற்றனர். ஒப்பந்தக்காரர்களின் பிடியில் சிக்குண்டு தவித்த தொழிலாளர்கள் செய்வதறியாது திகைத்தனர்.

தொழிலாளர்களின் துயர்துடைக்கப் பல திட்டங்கள் தீட்டப்பட்டன. ஒப்பந்தக்காரர்களின் பிடியிலிருந்து விடுபடக் கூட்டுறவுக் கொள்கைகளே அவர்களுக்கு கைலாகு கொடுத்தன. தொழிலாளர்கள் ஒன்றுசேர்ந்து ஒருகூட்டுறவு அமைப்பை உருவாக்கித் தங்களது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண விழைந்தனர். தங்களிடமிருந்த சிறு தொகையை ஒன்ருகச் சேர்த்து இத்தகைய கூட்டுறவுச்சங்கங்களை உருவாக்கித் தாங்களே ஒப்பந்தக்காரர்களாகவும் பணியாற்றத் திட்டங்களைத் தீட்டலாயினர். அதாவது நேரடியாக தாங்களே வேலை ஒப்பந்தங்களைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யத் தொடங்கினர். இவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு 'மஜினி' (Mazzini) என்ற தொழிலாளர் அரும்பாடுபட்டார். அவரது முயற்சிகளின் பலனுகத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கலாயின. இடைநிலையர்களும் அகற்றப்படலாயினர். 1883-ஆம் ஆண்டு முதல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் 'தொழிலாளர் பொதுச்சங்கம்'(General Association of Workers) 'பேரசியன்டி' (Braceianti) என்பவரால் தொடங்கப்பட்டது. தொடக்கத்தில் இச்சங்கம் போதிய உறுப்பினர்களைக் கொண்டு

இயங்காவிடினும் நாளடைவில் உறுப்பினர் எண்ணிக்கை கணிசமாக உயரலாயிற்று. மிகக்குறைந்த காலத்திற்குள் இச்சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை 303-ஆக உயர்ந்தது. பலவகைத் தொழிலாளர்களும் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக விளங்கினர். கட்டிட ஒப்பந்தங்களையும், பிற ஒப்பந்தங்களையும் நேரடியாகப் பெற்று உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்புகளை அளிப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு விளங்கியது இக்கூட்டுறவுத் தொழிலாளர் சங்கம். தொடக்க நிலையில் போதிய நிதிவசதி அற்ற காரணத்தினால் சிறு சிறு ஒப்பந்தங்களையே இவர்களால் பெறமுடிந்தது. நாளடைவில் இவர்களது பணிகள் பெருமளவில் விரிவடைந்தன. இத்தாலியில் கட்டிடங்களை எழுப்ப இயலாது என்று ஒதுக்கப்பட்ட பகுதிகளில் கூட மிக வலிமையான கட்டிடங்களை மிக அழகாக உருவாக்கி வரலாற்றில் ஒரு தனி இடத்தைப் பிடித்தது இக்கூட்டுறவுத் தொழிலாளர் சங்கம். குறிப்பாக இத்தாலியின் ஒரு பகுதியான 'ஒஸ்டியா'வில் (Ostia) பல பிரம்மாண்டமான கட்டிடங்களைக் கட்டி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது இச்சங்கம். மனித சக்தி சாதனைகளைப் புரிவதில் விந்தையேதுமில்லை! இக்கூட்டுறவுத் தொழிலாளர் சங்கம் 'தேசீயக் கூட்டுறவுச் சங்கத்துடன்' (Lega Nazionale Delle Co-operative) நாளடைவில் இணைந்தது. 'ரோமன் லிடோ' என்று இன்றும் அழைக்கப்படும் இத்தாலியின் மிகச்சிறந்த பகுதி 1883-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தொழிலாளர் சங்கத்தினால் உருவானதேயாகும்.

1886-ஆம் ஆண்டு கட்டிடத் தொழிலாளர்களுக்கென மேலும் கூட்டுறவு அமைப்பு (Masons and Labourers Co-operative of Ceggio) தொடங்கப்பட்டது. 1897-ஆம் ஆண்டு 'மிலன்' (Milan) நகரில் ஒரு தொழிலாளர் சங்கம் உருவாக்கப்பட்டது. இச்சங்கங்களுக்கும் பிரச்சினைகள் எழாமலில்லை. தனியார் துறையில் இயங்கி வந்த ஒப்பந்தக்காரர்கள் இவர்களுக்குக் கடும் போட்டியை உருவாக்கினர். நிதிப்பற்றுக்குறை, உறுப்பினர்களின் நாணயமற்ற செயல், பொறுப்பின்மை முதலான பிரச்சினைகளையும் இச்சங்கங்கள் சமாளிக்க வேண்டியிருந்தன. ஆயினும் இவ்விடர்ப்பாடுகளால் இச்சங்கங்கள் மறைந்துவிடவில்லை. அவ்வப்போது அரசாங்க ஆதரவு கணிசமாகக் கிடைத்தமையால் பிரச்சினைகளை நீக்கி இச்சங்கங்கள் வெற்றி நடை போட்டன. லுசாட்டி, உல்லம்பர்க் ஆகிய இருவரும் அமைச்சரவையில் இருக்கும்போது இச்சங்கங்கள் பல வசதிகளைப் பெற்றன,

தொழிலாளர் கூட்டுறவு அமைப்பு தேவையான சலுகைகளை அரசாங்கத்திடமிருந்து பெறுவதிலும் பல இன்னல்களை ஏற்க

வேண்டியிருந்தது. நாளடைவில் அரசாங்கக் கட்டிடங்களைக் கட்டுதலுக்கான ஒப்பந்தங்களையும் பெற்றது. இதற்கான சட்டம் அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டது.

இச்சட்டத்தின் பயனாக அரசாங்கக் கட்டிட ஒப்பந்தங்கள் இச் சங்கங்களுக்கு 'அளிப்பு முனைவு' பெறாமலேயே வழங்கப்படுவதற்கு வழி முறைகள் ஏற்பட்டன. (பொதுவாக அரசாங்கத் துறையில் அளிப்பு முனைவு (Tender) பெற்ற பின்பே ஒப்பந்தங்கள் அளிக்கப்படும்). 1900-ஆம் ஆண்டு இத்தாலியில் இயங்கி வந்த இச்சங்கங்களின் எண்ணிக்கை 600 ஆகும். நாளடைவில் இச்சங்கங்கள் தங்களுக்கென்று ஒரு கூட்டிணைப்பை விரும்பின. இதையொட்டி 1903-ஆம் ஆண்டு மிலன் நகரில் இச்சங்கங்களின் கூட்டிணைப்பு (Federation) உருவாக்கப்பட்டது. 1904-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 'லுசாட்டிச் சட்டம்' (Luzzati Act) இச்சங்கங்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக விளங்கியது. இச்சங்கங்களைத் தவிர சில விவசாயச் சங்கங்களும் ஒப்பந்தங் களைப் பெற்றன. 1909-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் பயனாக பெரிய ஒப்பந்தங்களைப் பெறும்போது கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்று சேர்ந்து 'கூட்டமைப்புக்'களை (Consortium) உருவாக்கத் தொடங்கின. முதல் உலகப் போர் தொடங்கிய போது இச்சங்கங்களின் வளர்ச்சி தடைப் பட்டாலும் நாளடைவில் மீண்டும் வலிமையுடன் திகழலாயின. 1921-ஆம் ஆண்டு இயங்கி வந்த கூட்டுறவுத் தொழிலாளர் சங்கங்களின் எண்ணிக்கை சுமார் 8,830 ஆகும். இத்தாலி நாட்டை வல்லாண்மைக் கட்சி ஆட்சி செய்து வந்த போது இச்சங்கங்கள் பெருமளவு வளர்ச்சிக் குன்றிக் காணப்பட்டன. பல சங்கங்கள் கலைக்கப்பட்டன. மத்திய அமைப்புகளும் மறைந்தன. அரசு அளித்து வந்த ஆதரவும், சலுகைகளும் அடியோடு நிறுத்தப்பட்டன. எனினும் இவ்வியக்கம் அடியோடு மறைந்து விடவில்லை. புதிய ஆட்சியில் இழந்த வளர்ச்சியை மீண்டும் பெற்றது. இரண்டாம் உலகப் போர் தொடங்கிய போதும் இச் சங்கங்களின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டது. எழுந்த இடர்ப்பாடுகள் எண்ணிக்கையில் அதிகமாகக் காணப்பட்டன. திறமை வாய்ந்த இயக்குநர்கள் இல்லாமையால் நிருவாகம் சீர் கெட்டது. போதிய நிதிவசதிகளையும் இச்சங்கங்கள் பெற்றிருக்க வில்லை. எனினும், அரசாங்க அரவணைப்பில் இச்சங்கங்கள் உயிர் பிழைத்தன. 1954-ஆம் ஆண்டு 60 மிலியன் லயர் வரை உள்ள ஒப்பந்தங்களை இச்சங்கங்கள் பெறுவதற்கு அனுமதி வழங் கப்பட்டது. சங்கங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட கூட்

டிணைப்புகளுக்கு 300 மிலியன் லயர் வரை அனுமதி அளிக்கப் பட்டது. 1956-ஆம் ஆண்டு 60,000 உறுப்பினர்களைக் கொண்ட 15,000 தொழிலாளர் சங்கங்கள் இந் நாட்டில் பணியாற்றி வந்தன. 30,000 மிலியன் லயர் மதிப்புள்ள ஒப்பந்தங்கள் வெற்றி கரமாக இச்சங்கங்களால் இதே ஆண்டு நிறைவேற்றப்பட்டன. 4000 மிலியன் லயர் மதிப்புள்ள கருவிகளை இச்சங்கங்கள் பெற்றிருந்தன. தற்போது இச்சங்கங்களின் கருவிகள் மிக மதிப்பு வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன.

இனி, இச்சங்கங்கள் என்ன பணியாற்றுகின்றன என்பதைக் காண்போம்.

கட்டிடக் கலையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதலையே தங்கள் நோக்கமாகக் கொண்டு விளங்கின இச்சங்கங்கள். எனவே சாலைகள் அமைத்தல், கட்டிடங்கள் சமைத்தல், கழிவு நீர்ப்பாதைகளைக்கட்டல் போன்ற பல துறைகளில் ஒப்பந்தங்களைப் பெற்று சிறப்புடன் அவற்றை நிறைவேற்றி வந்தன. சிறு சிறு பாலங்களும் இச்சங்கங்களால் கட்டப்படுகின்றன. சிறந்த முறையில் ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்காகப் பல வல்லுனர்களை நியமித்துள்ளன இச்சங்கங்கள். இவர்கள் ஒப்பந்தங்களை நன்கு அறிந்து கொண்ட பின்னரே ஆக்க வேலைகளில் ஈடுபடுகின்றனர். கட்டிடங்களைத் தொடங்குவதற்கு முன்னர்ச் சரியான அளவு முறைகள் இவ்வல்லுணர்களால் ஆராயப்படுகின்றன. ஒப்பந்தத்தை நிறைவேற்ற உறுதுணையாக விளங்கும் வேலையாட்களுக்குக் (உறுப்பினர்கள்) கூலி அல்லது ஊதியம் தொடக்கத்திலேயே நிருணயம் செய்யப் படுகிறது. அதன் பிறகே பணி தொடங்கப் படுகிறது,

சராசரியாக 15 உறுப்பினர்களைக் கொண்ட குழுமங்கள் முதலில் அமைக்கப்படுகின்றது. சிறந்த கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு குழுமத்திற்கும் ஒரு தலைவர் நியமிக்கப் படுகிறார். அவருக்குக் கூலியைத் தவிர ஒரு சிறு தொகை (0.5% of the Wages Paid) மிகையூதியமாக வழங்கப்படும். எல்லாக் காரியங்களையும் ஒரு 'பொது இயக்குநர்' (General Director) சிறப்புறக் கவனித்துக் கொள்கிறார், 'வேலைப் பகுப்பு' முறை சிறந்த முறையில் கையாளப்படுகின்றது.

எல்லா உறுப்பினர்களுக்கும் ஏற்றத் தாழ்வின்றி அவர்களது திறமைக் கேற்பப் பணிகள் இடப்படுகின்றன. தேவை ஏற்படும் போது, உறுப்பினரல்லாதாரின் உழைப்பும் பயன் படுத்தப்

படுகின்றது, ஒப்பந்தங்களின் மதிப்பு கணிசமாக உயர்ந்து காணப்படுகையில் இந்நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

ஏனைய கூட்டுறவுச் சங்கங்களைப் போலவே தொழிலாளர் சங்கங்களும் மக்களாட்சி முறையில்தான் நிருவாகத்தைப் பெற்றுள்ளன. பொது மன்ற உறுப்பினர்களால் சிறு நிருவாகக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. அன்றாட நிருவாகக் காரியங்களை இக்குழுக்கள் நிறைவேற்றுகின்றன.

உறுப்பினர் நிலையிலும் இச்சங்கங்கள் பிற சங்கங்களை ஒத்தே விளங்குகின்றன. 1947–ஆம் ஆண்டு நிறைவேற்றப் பட்டச் சட்டத்தின்படி ஒவ்வொரு சங்கமும் குறைந்த பட்சம் 25 உறுப்பினர்களையாவது பெற்றிருத்தலவசியம் என்ற விதிமுறை வகுக்கப்பட்டது. சில தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் 25 நபர் களுக்கும் குறைவான உறுப்பினர்களைக் கொண்டும் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு தொடங்கப்படுமுன் அரசின் முன் அனுமதி பெறுதல் வேண்டும். ஆனால், தொழிலாளர் சங்கம் எக்காரணத்தைக் கொண்டும் 9 உறுப்பினர்களுக்குக் குறைவாகப் பெற்றிருத்தல் கூடாது. பொதுவாகப் பங்கின் மதிப்பு 50 லயர் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர் ஒவ்வொருவரும் 2,50,000 லயர் மதிப்புள்ள பங்குகளுக்கு மேல் பெற்றிருத்தல் இயலாது. இச்சங்கங்கள் நிதி வசதிகளில் தன்னிறைவு பெற்றுத் திகழ்கின்றன. தவிர்க்க இயலாத ஒரு சில சமயங்களில் மட்டுமே கடன் வசதிகள் பெறப்படுகின்றன. பங்கு மூலதனமும் உறுப் பினர்களின் வைப்புத் தொகையுமே இவர்களது நடைமுறை முதலாகப் பயன்படுகின்றன.

ஆண்டு இறுதியில், இலாபத் தொகை முழுவதுமே உறுப் பினர்களுக்குப் பங்கு ஆதாயமாக வழங்கப்படுவதில்லை. ஒரு சிறு தொகையே உறுப்பினர்களுக்கு இலாப ஈவுத் தொகையாக அளிக் கப்படுகின்றது. இலாபத்தின் பெரும் பகுதி உறுப்பினர்களின் நலனுக்காகவே செலவிடப்படுகின்றது. ஆக்கவேலையில் ஈடுபட்டி ருக்கும் தொழிலாளிகள் விபத்து காரணமாகப் பாதிக்கப்பட்டால் தகுந்த நட்ட ஈடு எனும் நிறையீடு (Compensation) அளிக்கப்படு வதற்கென இலாபத்தில் சரிபாதி பாதுகாக்கப்படுகின்றது. வயது முதிர்ந்து உழைக்கத் திறனற்ற உறுப்பினர்களுக்கு இலாபத்தின் ஒரு பகுதி உதவிப் பணமாக வழங்கப்படுகின்றது. இவ்வாறு உறுப்பினர்களின் நன்மைக்கெனப் பல நிதிகள் உருவாக்கப்படுகின்றன. எஞ்சியுள்ள தொகை உறுப்பினர் களுக்குப் பங்கு ஆதாயமாக வழங்கப்படுகிறது. இலாப ஈவுத்

தொகை உறுப்பினர்கள் பெறும் ஊதிய அடிப்படையில் வழங்கப் படுகின்றது.

கூட்டிணைப்புகள் (Federations)

இன்னலுற்ற மக்கள் ஒன்று கூடிக் கூட்டுறவு அமைப்புகளை உருவாக்குவது போல, மக்களால் அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் நலன் கருதிக் கூட்டிணைப்புகளை உருவாக்கு கின்றன. கூட்டிணைப்பின் வாயிலாக ஒரே மாதிரியான திட்டங்கள் ஏற்றத் தாழ்வின்றி வகுக்கப்படுகின்றன. கூட்டிணைப் புகளின் மூலம் போதிய நிதி வசதிகளையும் உறுப்பினர்களாக விளங்கும் கூட்டுறவு அமைப்புகள் பெற வாய்ப்புகள் ஏற்படு கின்றன. ஒவ்வொரு பகுதியிலும் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களின் செயற்பாடுகளின் அடிப்படையில் ஒன்று கூடிக் கூட்டிணைப்புகளை உருவாக்குகின்றன. ஒவ்வொரு சங்கமும் தனது பங்கு மூலதனத்தில் 20 சத விகிதத்தைக் கூட்டிணைப்பின் பங்குகளில் முதலீடு செய்கின்றன. ஒவ்வொரு நூறு உறுப்பினர் களுக்கும் மேலும் ஒரு பங்கு சங்கத்தால் வாங்கப்படுகிறது. இம் முறையினால் அளவில் பெரிய சங்கங்கள் நன்கு ஊக்குவிக்கப்படு கின்றன. இணைப்புச் சங்கத்தின் பங்கு மதிப்பு பொதுவாக 100 லயர் என நிருணயிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களினால் உருவாக்கப்பட்டிருக்கும் இக் கூட்டிணைப்புகள் யாவும் ஒன்று சேர்ந்து ஒரு தேசீய அமைப்பு உருவாக உறுதுணையாக விளங்குகின்றன. அனைத்துத் தொழி லாளர் சங்கங்களுக்கும் இத்தேசீய அமைப்பு தலைமைச் சங்கமாகத் திகழ்கின்றது. எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பொதுவான திட்டங்கள் இத்தேசீய அமைப்பின் மூலமாகத்தான் தீட்டப்படு கின்றன. திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் இது ஏனைய சங்கங்களுக்கு ஆலோசனைகளும், ஆதரவும் அளிக்கின்றது. இச் சங்கங்களின் சார்பாக அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவதும் இத்தேசீய அமைப்பேயாகும். சங்கங்களின் பிரச் சினைகளைத் தீர்த்துவைப்பதும் இத்தலைமைக் கூட்டுறவுச் சங்கமே யாகும். எனவே, இத்தலைமை அமைப்பு உறுப்பினர்களாக விளங்கும் கூட்டிணைப்புகளுக்கும், பிற கூட்டுறவுத் தொழிலாளர் சங்கங்களுக்கும் உற்ற துணையாக விளங்குகின்றது.

இத்தாலியின் இவ்வியக்கம் உலக நாடுகள் அனைத்திற்கும் வழிகாட்டியாக விளங்குகிறது. சில தருணங்களில் ஒப்பந்தத் தொகை மிக அதிகமாக இருப்பின் தனி ஒரு சங்கத்தினால் அதை வெற்றிகரமாக நிறைவேற்ற இயலாது. எனவே, கூட்டுறவுச்

சங்கங்கள்யாவும் ஒன்றுசேர்ந்து'கூட்டமைப்பு'களை(Consortiums) உருவாக்குகின்றன. இது, பொதுவாகத் தற்காலிக உடன்பாடே யாகும். ஒப்பந்தப்பணி நிறைவேறியவுடன் இக்கூட்டமைப்பு கலைக்கப்பட்டுவிடும். இத்தகையக் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுறவு இத்தாலி நாட்டுத் தொழிலாளர் இயக்கத்தின் தனிச் சிறப்பாகும். கூட்டமைப்பின் காரணமாகப் போதிய நிதிவசதி, தொழில் நுட்ப அறிவு, தேவையான விலையுயர்ந்த இயந்திரங்கள் முதலானவை எளிதாகச் சேகரிக்கப்படுகின்றன. ஒப்பந்தத்தில் கண்டுள்ளபடி பணிகள் வெற்றிகரமாகத் தாமதமின்றி நிறைவேற் றப்படுவதற்கு இக்கூட்டமைப்புகளே காரணமாகும். இவ்வாறு கூட்டமைப்பு உருவாகியதற்கு அரசின் தூண்டுதலே காரண மாகும். உறுப்பினர்களாக விளங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் 'பொறுப்பு நிலை'யும் சிறந்த முறையில் தொடக்கத்திலேயே தீர்மானிக்கப்பட்டுவிடுகிறது.

ஒவ்வொரு கூட்டமைப்பும் 5 தொழிலாளர் சங்கங்களையாவது உறுப்பினர்களாகப் பெற்றிருக்க வேண்டும். உறுப்பினர்களின் எண்ணிக்கை 250 ஆகும். கூட்டமைப்பு அளிக்கப்படுவதற்கு முன்னர் இத்தகைய அமைப்பை விரும்பும் கூட்டுறவுச் சங்கங்கள் தொழிலாளர் நல இலாகாவிடமிருந்து முன் அனுமதி பெறுதல் வேண்டும். ஒவ்வோர் உறுப்பினர் சங்கமும் குறைந்தது 25,000 லயர் மதிப்புள்ள பங்குகளைக் கூட்டமைப்பிடமிருந்து பெறவேண் டும். கூட்டமைப்பின் மூலதனம் 2,50,000 லயருக்குக் குறைவாக இருத்தலாகாது. பொதுத்துறை, தனியார் துறை ஆகிய இரு துறைகளிலுமிருந்தும் ஒப்பந்தங்கள் பெறப்படுகின்றன. வேலைப் பகுப்பு முறையில், மொத்தப் பணிகள் யாவும் உறுப்பினர் சங்கங் களுக்குப் பகிர்ந்தளிக்கப் படுகின்றன. இவ்வாறு அளிக்கப் படுகையில் ஏற்றத்தாழ்வுகள் கடைப்பிடிக்கப்படவில்லை. ஒவ்வோர் உறுப்பினர் சங்கமும் தன்பணியைச் செவ்வனே செய்ய ஊக்கம் அளிக்கப்படுகின்றது. பல விலையுயர்ந்த இயந்திரங் களையும், கட்டிடக் கருவிகளையும் இக்கூட்டமைப்பு பெற்றிருப்ப தால் பணிகள் எளிதாக நிறைவேற்றப்படுகின்றன. பணிகளை நிறைவேற்றுவதில், உறுப்பினர் சங்கங்களுக்கு இக்கூட்டமைப்பு அவ்வப்போது ஆலோசனைகளை வழங்கி வருகின்றது. இதன் காரணமாக உறுப்பினர்களின் வேலைச்சுமை கணிசமாகக் குறைய வாய்ப்பேற்படுகின்றது. பணிகள் நிறைவேற்றப்படும்போது இக்கூட்டமைப்பு உறுப்பினர் சங்கங்களை மிகச் சிறந்த முறையில் கண்காணித்து வருகின்றது. எனவே, தரமான செயல்களே உறுப்பினர்களால் செய்யப்படுகின்றன. சங்கங்களிடையே நல்ல தொடர்பும், நல்லுறவும் ஏற்பட இக்கூட்டமைப்பு பெரிதும்

உதவியாக உள்ளது. இக்கூட்டமைப்புத் தற்காலிகமாக இயங்கினாலும் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஒரு நெருங்கிய, நிரந்தரமான தொடர்பை ஏற்படுத்துவதில் மிகுந்த அக்கறை காட்டுகின்றன. அரசாங்கமும் இதற்கு ஆதரவு நல்கத் தவறுவதில்லை.

பொதுவாக, இச்சங்கங்கள் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன என்ற நிலை தற்போது இருப்பினும் சில பிரச்சினைகளும் இல்லாமலில்லை. இனி அவற்றைக் காண்போம்.

முதலாவதாகச் சில சமயங்களில் இத்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதிப் பற்றுக்குறை பெரியதொரு பிரச்சினையாக உள்ளது. ஒப்பந்தங்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றிக் கொடுப்பதை இப்பிரச்சினை பெரிதும் பாதிக்கின்றது. எனவே இச்சங்கங்களின் வளர்ச்சிக்குத் தடையாக நிதிப் பற்றுக் குறை விளங்குகின்றது. பெரிய ஒப்பந்தங்களை ஏற்றவுடன் இச் சங்கங்கள் பணியை உடனே தொடர இயலவில்லை. ஏனென்றால் இவைகளின் பெரும்பகுதிச் செல்வம் ஏனைய ஒப்பந்தங்களில் முடங்கிக் கிடப்பதால், புதிய பணியைத் தொடர இயலவில்லை. குறுகிய காலங்களுக்கென நிதிவசதிகளை இச்சங்கங்கள் பெற இயலவில்லை. இயங்கிவரும் வங்கிகள் எல்லாத் தருணங்களிலும் இச்சங்கங்களுக்கு ஆதரவுக் கரம் அளிக்க இயலவில்லை. இந்நிலையை மாற்றத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இரண்டாவதாக, இத்தாலியின் இச்சங்கங்கள் பெரும்பாலும் அரசாங்க ஒப்பந்தங்களையே நம்பியுள்ளன. அரசு ஒப்பந்தங்கள் இச்சங்கங்களினால் அமைக்கப்படும் 'கூட்டமைப்பு' (Consortium) மூலம் நிறைவேற்றப்படுகின்றன. இச்சங்கங்கள் பெறும் இலாபத்திற்கு அரசு ஒப்பந்தங்களே காரணமாகும். அரசு ஒப்பந்தங்கள் இல்லாத சமயங்களில் இச்சங்கங்கள் பெறும் இன்னல்கள் கணக்கிலடங்கா. உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதையே நோக்கமாகக் கொண்டு இயங்கிவரும் இச்சங்கங்கள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்ற இயலாமல் தவிக்கின்றன. இச்சூழ்நிலைகளில் காப்பு நிதியிலிருந்து உறுப்பினர்களுக்கு உதவிப்பணம் வழங்கப்படுகின்றது.

மூன்றாவதாகச் சில சமயங்களில் உறுப்பினர்கள் நேர்மை தவறியவர்களாகக் காணப்படுகின்றனர். தங்களை வாழவைக்கும் சங்கங்களை முறையற்ற செய்கைகளால் வீழவைக்கின்றனர். சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க

இயலாத சூழ்நிலைகளில் சில உறுப்பினர்கள் தனியார் துறையில் இயங்கிவரும் ஒப்பந்தக்காரர்களுடன் இரகசிய ஒப்பந்தங்களைச் செய்து கொள்கின்றனர். இத்தகைய பொறுப்பற்ற உறுப்பினர்களால் கூட்டுறவுத் தொழிலாளர் சங்கங்கள் சில தருணங்களில் இன்னலுறுகின்றன. தனியார் துறையில் இயங்கிவரும் ஒப்பந்தக்காரர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளும் உறுப்பினர்கள் மீண்டும் சங்கத்தை வேலை நாடிச் செல்வதில்லை. சங்கங்கள் இத்தகைய உறுப்பினர்களைப் புதிய ஒப்பந்தங்கள் பெறும் போது அழைத்தாலும் அவர்கள் திரும்புவதில்லை. எனவே, சங்கத்தின் அரவணைப்பில் பயிற்சி பெற்ற சிறந்த தொழிலாளிகள் பிற ஒப்பந்தக்காரர்களுக்குச் சிரமமின்றிக் கிடைக்கின்றனர்.

இத்தகைய நிலையை மாற்றியமைக்கக் கூட்டுறவுத் தொழிலாளர் சங்கங்கள் தீவிரத் திட்டங்களை வகுத்து அவற்றைச் சிறப்பான முறையில் செயல்படுத்தியும் வருகின்றன. பெரிய ஒப்பந்தங்களை விரைவாக நிறைவேற்றிக் கொடுப்பதில் தீவிரக் கவனம் செலுத்தப்படுகின்றது. பொதுத் துறையில் மட்டுமின்றித் தனியார் துறையிலும் பெரிய ஒப்பந்தங்களைப் பெறுவதற்கென இச்சங்கங்கள் பெருமுயற்சி செய்து, தற்போது முயற்சிகளில் வெற்றியும் கண்டு வருகின்றன. உறுப்பினர்களுக்குப் போதிய கல்வியையும், பயிற்சியையும் இச்சங்கங்கள் தற்போது அளித்து வருகின்றன. சீரான நிர்வாகத்தினால் பெரும்பாலும் இச்சங்கங்கள் இலாபத்தையே அடைந்து வருகின்றன.

கூட்டுறவு விவசாயச் சங்கங்கள்

வேளாண்மைத் துறையிலும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விவசாயப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கோடு கூட்டுறவு முறையில் விவசாயத் தொழில் பல இடங்களில் நடத்தப்படுகின்றது. கூட்டுறவு விவசாயச் சங்கங்கள் இருவகையாக விளங்குகின்றன.

(i) தனியார் விவசாயம் ;

(ii) கூட்டு விவசாயம்.

தனியார் விவசாய முறையில், மொத்த நிலமும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக் கேற்றவாறு பிரிக்கப்பட்டு அனைவருக்கும் வழங்கப்படுகிறது. ஆண் பெண் ஆகிய இரு பாலாரும் இச்சங்கங்களில் உறுப்பினராக அனுமதிக்கப்படுகின்றனர். தேவை

யான நிலம் உறுப்பினர்க் கேற்றவாறு குத்தகைக்குப் பெறப்படுகின்றது. நிலத்திற்குரிய வாரம் பயிர் செய்துவரும் உறுப்பினர்களால் சங்கத்திடம் வழங்கப்படுகின்றது.

கூட்டு விவசாய முறையில் உறுப்பினர்களுக்குத் தனியாகத் துண்டு நிலங்கள் வழங்கப்படுவதில்லை. அனைவரும் கூட்டாகப் பயிர்த் தொழிலில் ஈடுபடவேண்டும். அறுவடைக்குப் பின்னர், உற்பத்தித் தானியங்கள் யாவும் ஒன்றாகக் குவிக்கப்பட்டு விற்பனைக்குத் தயார் செய்யப்படுகின்றன. இத்தகைய கூட்டு விவசாய முறையைச் செவ்வனே செயல்படுத்துவதற்கெனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. இச்சங்கங்களின் முக்கிய நோக்கங்களாவன :

(i) விவசாயக் காரியங்கள் அனைத்தையும் மேற்கொள்ளல்;

(ii) உறுப்பினர்களுக்குத் தேவையான எல்லா விவசாயக் கருவிகளையும் கொள்முதல் செய்து விநியோகம் செய்தல் ;

(iii) உறுப்பினர்களின் வேளாண்மைப் பணியை முன்னேற்றத் தக்க வகையில் நிதிவசதிகளைப் பெருக்குதல் ;

(iv) உறுப்பினர்களது கொள்முதல், விற்பனைக் காரியங்களில் உறுதுணையாகச் செயல்படுதல் ;

(v) உறுப்பினர்களது நிலைக்கேற்ப இல்லங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் ;

(vi) உறுப்பினர்களின் குண நலன்களை மேம்பாடு அடையச் செய்தல் ;

(vii) உறுப்பினர்களின் பொருளாதார நிலை உயரப் பாடுபடுதல்.

இத்தகைய உயரிய நோக்கங்களைக் கொண்டு இச்சங்க செயல்படுவதால் மக்கள் மனதில் இவை நீங்கா வண் உள்ளன.

கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள், கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்கள் முதலான கூட்டுறவு அமைப்புக இத்தாலி நாட்டில் இயங்கி வருகின்றன.

வரலாற்றுப் புகழ் நிறைந்த இத்தாலி நாடு கூட்டு துறையிலும் தனது வெற்றி முத்திரையை அழுத்தமாகப் துள்ளது. தொழிலாளர்கள் நிரம்பிய நம் நாடு இத்தாலி கூட்டுறவுத் தொழிலாளர் சங்கங்களைப் பின்பற்றுதல் நலம்,

5. சுவீடன் நாட்டில் கூட்டுறவு இயக்கம்

(Co-operative Movement in Sweden)

முன்னுரை

டென்மார்க்கைப் போலவே சுவீடனும் கூட்டுறவு முறையில் முன்னேறிய நாடாகும். கூட்டுறவுக் கொள்கைகள் வாயிலாக முன்னேற்றமடைந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு எவ்விதத்திலும் குறையாமல் வளர்ச்சி பெற்ற நாடே சுவீடன். இத்தகைய வியத்தகு முன்னேற்றத்தைக் கண்டதால், அனைத்துலக நாடுகளின் கவனமும் சுவீடன்பால் திரும்பியதில் விந்தையேதுமில்லை. மற்ற ஐரோப்பிய நாடுகளைப் போலவே சுவீடனும் 7.9 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட சிறிய நாடாகும்.

'ஸ்காண்டிநேவியன் நாடுகளில்' (Scandinavian Countries) ஒன்றாகத் திகழ்வதுதான் சுவீடன். டென்மார்க், நார்வே ஏனைய இரு நாடுகளாகும். இவ்விரு நாடுகளைவிடப் பரப்பளவில் பெரிய நாடாகும் இது. இதன் பரப்பளவு 173,035 சதுர மைல்களாகும். இந்தியாவைப் போலவே சுவீடனும் விவசாயத்தையே பெரிதும் நம்பி இருந்தது. மொத்தப் பரப்பளவில் மூன்றில் இரண்டு பகுதி வேளாண்மைக்கே பயன்படுத்தப்பட்டது. மக்கள் தொகையில் 75 சதவிகிதம் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முன் பாதி வரை விவசாய நாடாகவே விளங்கியது இந்நாடு. விளை நிலத்தில் 52 சதவிகிதம் வனங்களின் வளர்ச்சிக்கும், 9 சதவிகிதம் உழவுத் தொழிலுக்கும், 3 சதவிகிதம் புல்வெளிகள் வளர்ச்சிக்கும் பயன்படுத்தப்பட்டது.

கூட்டுறவு இயக்கத்தின் தொடக்கம்

1860-ஆம் ஆண்டுக்கும் 1870-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில்தான் சுவீடனில் கூட்டுறவு இயக்கம் வேரூன்றத்

தொடங்கியது, விவசாய நாடாகவே வெகு நாள் விளங்கி வந்த சுவீடன் இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற் புரட்சியின் (Industrial Revolution) காரணமாக பல மாற்றங்களைப் பெறத் தொடங்கியது. இத்தொழிற்புரட்சியே சுவீடன் நாட்டுப் பொருளாதாரத் துறையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இதன் பயனாகப் பல 'பேரளவுத் தொழில்கள்' (Large-Scale Industries) இந் நாட்டில் தோன்றின. விவசாயத்தின்பால் மக்கள் கொண்டிருந்த கவனமும், ஈடுபாடும் தொழில் துறையில் திரும்பியதன் காரணமாக விவசாய நாடாகத் திகழ்ந்து வந்த சுவீடன் தொழில் வளம் நிறைந்த நாடாக மாறத் தொடங்கியது. வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருந்த 75 சதவிகித மக்கள் 24 சதவிகிதமாகக் குறைந்தனர். இயந்திரங்கள் மூலமாக உற்பத்தியைப் பெருக்க வல்ல தொழில்களில் ஈடுபட்டிருந்தோர் எண்ணிக்கை கணிசமாக உயரலாயிற்று. இயற்கைச் செல்வங்கள் பலவும் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக விளங்கின. எனவே இங்கிலாந்து நாட்டின் பொருளாதாரத்தையே மாற்றியமைத்த தொழிற் புரட்சியே சுவீடனிலும் பல வியத்தகு பொருளாதார மாற்றங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தது என்பதில் எவருக்கும் ஐயமில்லை. மண்ணையே நம்பி வாழ்ந்த சுவீடன் மக்களைப் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவவல்ல தொழில் துறையில் ஈடுபாடு கொள்ளச் செய்த பெருமை இத் தொழிற் புரட்சியையே சாரும்.

நாட்டில் தொழில்வளம் பெருகும்போது வேறு சில இடர்ப் பாடுகளும் ஏற்படுவது இயற்கை. பெரும்பாலான விவசாயிகள் தொழிற்சாலைகளில் உழைக்கும் தொழிலாளிகளாக மாறினர். அவர்கள் தங்களுக்குத் தேவையான பண்டங்களைப் பெறுவதில் பல இன்னல்களைக் கடக்க வேண்டியிருந்தது. அப்பண்டங்களை நியாய விலையில் பெற இயலாமல் அவர்கள் தவித்தனர். அதிக இலாபத்தை அடைவதையே தங்கள் குறிக்கோளாகக் கொண்ட தனிப்பட்ட வணிகர்களும் தொழிற்சாலை உரிமையாளர்களும் ஒன்று சேர்ந்து 'தொழில் திரட்டுகளை' (Pools) அமைத்து அவர்களே பொருள்களின் விலைகளையும் அதிக அளவில் நிருணயித்தனர். இத்தொழில் திரட்டுகளின் மூலம் பண்டங்களைப் பெற்று, வியாபாரம் செய்துவந்த மொத்த வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளும் பண்டங்களின் விலைகளைக் கணிசமாக உயர்த்தவே, தொழிலாளிகள் அதிக விலை கொடுத்துப் பண்டங்களைப் பெற இயலாமல் துயருறத் தொடங்கினர். தனிப்பட்ட முதலாளிகளின் இலாப நோக்கத்திற்குத் தொழிலாளிகள் பலியாகினர்,

இவ்வகை இன்னல்களால் சூழப்பட்ட அத்தொழிலாளிகள் தங்களின் துயர்களைத் துடைப்பதற்காகவும், சுரண்டலில் இருந்து தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வதற்காகவும் வழிமுறைகளை ஆராயத் தொடங்கினர். இந்நிலையில்தான், இங்கிலாந்து நாட்டில் 'ராக்டேல் (Rochdale) என்னும் இடத்தில் 28 நெசவாளர்கள் தோற்றுவிக்கப்பட்ட பண்டகசாலையைப் பற்றியும், அதன் வெற்றிகரமான செயல் முறையைப் பற்றியும் சுவீடன் நாட்டுத் தொழிலாளிகள் கேள்வியுற ஆரம்பித்தனர். ராக்டேல் 'முன்னோடிகளையே' (Rochdale Pioneers) தங்கள் வழி காட்டியாகக் கொண்டு அவர்களின் அடிச்சுவட்டையே பின்பற்றவும் தொடங்கினர்.

1850-ஆம் ஆண்டு, முதல் கூட்டுறவு அமைப்பு சுவீடன் நாட்டில் தோற்றுவிக்கப்பட்டது. தொடக்கத்தில் மாவட்ட அளவில் அமைக்கப்பட்ட இக்கூட்டுறவு நிறுவனம் தொழிலாளி களுக்குத் தேவையான பண்டங்களைக் கொள்முதல் செய்து அவற்றை அவர்களுக்கு நியாய விலையில் விற்கத் தொடங்கியது. இதைத் தொடர்ந்து 1867-ஆம் ஆண்டு இதே நோக்கோடு மற்றுமொரு கூட்டுறவுப் பண்டகசாலை 'டிரால்ஹட்டன்' (Trollhattan) என்ற இடத்தில் தொடங்கப்பட்டது. இன்றும் இக்கூட்டுறவுப் பண்டகசாலை செவ்வனே செயலாற்றி வருகின்றது. இதன் பின்னர்தான் சுவீடன் நாட்டுக் கூட்டுறவு இயக்கம் மறுமலர்ச்சி பெற்றது. எண்ணிக்கையில் அதிகமாகக் கூட்டுறவுச் சங்கங்களும் செயலாற்றத் தொடங்கின. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களின் மூலம் சுவீடன் நாட்டின் 'நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின்' (Consumers' Co-operative Societies) வளர்ச்சியை நாம் நன்கு அறியலாம்.

	1957	1961	1964	1969
சங்கங்களின் எண்ணிக்கை ...	678	522	365	246
உறுப்பினர்களின் எண்ணிக்கை (மிலியனில்) ...	1·10	1·20	1·29	1·53
விற்பனைப் பிரிவு களின் எண் ணிக்கை ...	7,633	6,330	4,479	2,901
மொத்த விற்பனை (மிலியனில்) ...	2,783	3,643	4,700	7,237
பணி புரிந்தோர் எண்ணிக்கை	—	41,600	40,000	35,000

இங்கிலாந்தைப் போலவே சுவீடனும் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கையை உயர்த்தாமல் செயலாற்றி வந்த சங்கங்களை ஒன்று சேர்த்து ஓர் ஐக்கிய அமைப்பு உருவாக்குவதிலேயே தன் கவனத்தைச் செலுத்தியது. இதன் விளைவாக, 1957–ஆம் ஆண்டு 7633 விற்பனைப் பிரிவுகளாக விளங்கிய கூட்டுறவுச் சங்கங்கள் 2901 ஆக 1969-ஆம் ஆண்டு குறைந்தன. எனினும் இச்சங்கங்களின் அளவு, தரம் முதலானவை பெருமளவில் உயர்ந்தன. 'தொழில் ஐக்கியம்' (Amalgamation) வாயிலாக நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செவ்வனே மாற்றியமைக்கப் பட்டுச் சீரிய முறையில் செயல்படவும் தொடங்கின. கூட்டுறவுச் சங்கங்களின் அளவு விரிவாக்கப்பட்டமையால் இத்துறையில் வல்லுநர்களாக விளங்கிய கூட்டுறவாளர்களின் உதவியும் எளிதில் கிட்டியது.

தற்போது இந்நாட்டில் 2·8 மிலியன் குடும்பங்களே உள்ளன என்றாலும் அதில் 1·53 மிலியன் குடும்பங்கள் 'நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளில்' உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர்களில் பெரும்பாலோர் மாத வருமானம் பெற்று வாழ்ந்து வரும் தொழிலாளிகளேயாவர். எனவே இந்நாட்டின் கூட்டுறவு இயக்கம் நகரப் பகுதிகளிலேயே முதலில் தொடக்கம் பெற்றது.

இக்கூட்டுறவுச் சங்கங்கள் அளவில் வேறுபட்டு விளங்கின. ஒரு சில சங்கங்கள் குறைந்த உறுப்பினர்களைக் கொண்டு செயலாற்றி வருகையில் 'ஸ்டாக்ஹோம்' (Stockholm) என்ற நகரில் இயங்கிவரும் கூட்டுறவுச் சங்கம் உலகிலேயே பெரியதொரு கூட்டுறவுச் சங்கமாகச் செயலாற்றி வருகின்றது. இதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 23 இலட்சத்திற்கும் அதிகமாகும். 1967-ஆம் ஆண்டில், இக்கூட்டுறவுச் சங்கம் 460 விற்பனைப் பிரிவுகளை நகரில் பெற்றிருந்தது. அவ்விற்பனைப் பிரிவுகள் 1000 மிலியன் 'குரோனர்' (Kroner) மதிப்பிற்கு விற்பனை செய்தன என்றால் இக்கூட்டுறவுச் சங்கத்தின் வெற்றியை நாம் எளிதில் புரிந்து கொள்ள முடியும். மேலும் இந்த ஸ்டாக்ஹோம் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் ஒரு பெரிய 'பல பிரிவுப் பண்டகசாலையையும்' (Departmental Stores) நடத்தி வருகின்றது. இதுமட்டுமின்றி 15 உண்டிச்சாலைகளுக்கும் (Restaurants), 2 பெரிய ரொட்டிக் கிடங்குகளுக்கும் (Bakeries), ஓர் இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலைக்கும் உரிமை கொண்டாடி மகிழ்கின்றது இக்கூட்டுறவுச் சங்கம்.

மதுவகைகள் தயாரிக்கும் சில தொழிற்சாலைகளையும் நடத்தி வருகின்றது இக்கூட்டுறவுச் சங்கம். ஏறக்குறைய 10,000 தொழி

லாளிகள் இச்சங்கத்தில் பணிபுரிந்து வருகின்றனர் என்ருல் இச்சங்கத்தின் அளவை நாம் எளிதில் கணக்கிட்டுவிட முடியும்.

தற்போது சுவீடனில் 2,901 கூட்டுறவு விற்பனைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. அவற்றுள் 2180 நாமே பொருள்களை தேர்ந்தெடுத்துக் கொள்ளும் முறையில் அமைந்த கடைகளும், 156 'பல பிரிவுப் பண்டகசாலைகளும்' (Departmental Stores) 168 'பேரங்காடிகளும்' (Super Markets) குறிப்பிடத்தக்கன வாகும். இவை மட்டுமின்றி, 92 'உணவு விடுதிகளும்' (Restaurants) இச்சங்கத்தின் பராமரிப்பிலும், கண்காணிப்பிலும் நடைபெற்று வருகின்றன. இந்நாட்டில் இயங்கிவரும் நாமே பொருள்களை தேர்ந்தெடுத்துக்கொள்ளும் முறையில் அமைந்த கடைகள் (Self-Service Shops) தனிச்சிறப்பு வாய்ந்தவையாகும். சுவீடனில் உள்ள மொத்தக்கடைகளில் 50% கூட்டுறவுச் சங்கங்களினுலேயே நடத்தப்படுகின்றன.

கூட்டுறவுக் கொள்கைகளைத் தன்னுள் கொண்டு செயலாற்றி வரும் இவ்விற்பனைப் பிரிவுகளின் விற்பனை ஆண்டுதோறும் உயர்ந்து கொண்டே வருகின்றது. 1964-ஆம் ஆண்டு ஒரு விற்பனைப் பிரிவின் மொத்த விற்பனை 1·3 மிலியன் குரோனராகும். 1969-ஆண்டு மொத்த விற்பனை 32·5 மிலியனுக உள்ளது என்பதைக் காணும்போது கூட்டுறவு இயக்கத்தின் வலிமையை நாம் கண்கூடாகக் காணமுடிகின்றது. ஓர் உறுப்பினரின் சராசரிக் கொள்முதல் ஆண்டுக்கு 4717 குரோனராகும். இதே ஆண்டில்தான் மொத்தச் சில்லறை வியாபாரத்தில் 20 சதவிகிதமும், உணவுப் பொருள் வணிகத்தில் 26 சதவிகிதமும் கூட்டுறவுச் சங்கங்களால் வியாபாரம் செய்யப்படுகின்றன என கணக்கிடப் பட்டுள்ளது. விற்பனை கணிசமான அளவில் நடைபெறுவதால் கூட்டுறவுச் சங்கங்களின் நிதிநிலையும் மகிழ்ச்சி தருவதாகவே உள்ளது. சங்கத்தின் அளவும், அது தொண்டாற்றி வரும் பிரதேச அளவும் அதிகமாவதால் நன்மை பெறுவோர் எண்ணிக் கையும் நன்கு உயர்ந்து வருகின்றது. சுவீடன் நாட்டுப் பெருங் குடிமக்கள் தங்களுக்குத் தேவையான பண்டங்களையும், பிற பொருள்களையும் இக்கூட்டுறவு நுகர்வோர் சங்கங்கள் வாயிலாக நியாய விலையில் பெறுகின்றனர். இனி சுவீடன் நாட்டில் செவ்வனே செயல்பட்டு வந்த நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கியமான சிறப்பு அம்சங்களைக் காண்போம்.

சுவீடனின் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பு அம்சங்கள்

1. சங்கத்தின் பங்கை (Share) வாங்குவதன் மூலம் எவரும் சங்கத்தின் உறுப்பினராகச் செயலாற்ற முடியும். பொதுவாக, ஒரு பங்கின் மதிப்பு 150 'குரோனராக' உள்ளது. எனவே சங்கத்தின் உறுப்பினர்களில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடோ அல்லது உறுப்பினராவதற்குக் கடுமையான விதி முறைகளோ நடைமுறையில் இல்லை. சங்கத்தின் மூலம் நன்மை பெற விரும்பும் எவரும் எளிதில் உறுப்பினராவதற்கு வழிமுறைகள் நன்கு வகுக்கப்பட்டுள்ளன.

2. பொதுவாக, உறுப்பினர்களாகும் மக்கள் தொடக்கத்திலேயே பங்கு மூலதனத்தை (Share Capital) ரொக்கமாகச் சங்கத்திற்கு அளிப்பதில்லை. அவர்கள் தங்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் சங்கத்திடமிருந்து ஆண்டு முழுவதும் கொள்முதல் செய்து கொள்வார்கள். ஆண்டு இறுதியில் அவர்கள் சங்கத்திடமிருந்து 'இலாப ஈவு'த் தொகையைக் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு வழங்கப்படும் 'இலாப ஈவு' (Dividend) உறுப்பினர்கள் சங்கத்திடமிருந்து செய்யும் கொள்முதலின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படும். கொள்முதல் அதிகரித்தால் உறுப்பினர்கள் பெறும் இலாப ஈவுத் தொகையும் உயரும். ஆனால் இந்த இலாப ஈவுத் தொகை ரொக்கமாக உறுப்பினர்கட்கு ஆண்டு இறுதியில் வழங்கப்படுவதில்லை. ரொக்கத்திற்குப் பதிலாக அதே மதிப்பிற்குச் சங்கத்தின் பங்குகள் உறுப்பினர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

3. இவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் பங்கு முதலுக்கு இலாப ஈவுத்தொகை அளிப்பதில்லை. இதற்குப் பதிலாகக், குறைந்த சதவிகித வட்டித் தொகை இப்பங்குதாரர்களுக்கு வழங்கப்படுகின்றது. பொதுவாக, 5 சதவிகித வட்டியே அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இதுவே உயர்ந்த அளவு வட்டியாகும்.

பங்குதாரர்களுக்கு வட்டி வழங்கப்பட்டதும், எஞ்சியிருக்கும் இலாபத் தொகையில் 15 சதவிகிதம் 'காப்பு நிதி'க்கென (Reserve Fund) ஒதுக்கப்படுகின்றது. மீதமுள்ள இலாபத் தொகை கொள்முதல் அடிப்படையில் கணக்கிடப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.

4. இக்கூட்டுறவு நுகர்வோர் சங்கங்களிலேயே 'குடும்பச் சேமிப்புக் கணக்கு' (Family Savings Account) என்ற நலம்

பயக்கவல்லதொரு கணக்கு முறையும் உறுப்பினர்களின் எதிர் கால நல் வாழ்வுக்கென நடத்தப்பட்டு வந்தது. உறுப்பினர் ஒருவரின் நல்வாழ்வு மட்டுமின்றி, அவரது குடும்பம் முழுவதும் இக்கணக்கு முறை மூலம் நன்மை பெற எளிதில் வழிவகுக்கப் பட்டது. இலாப ஈவுத் தொகையின் ஒரு பகுதி உறுப்பினர் களின் குடும்பச் சேமிப்புக்கணக்கில் வரவு வைக்கப்பட்டு, இவ்வாறு சேமிக்கப்படும் தொகை உறுப்பினர்களின் அறுப தாவது வயதில் திருப்பிக் கொடுக்கப்படும். உறுப்பினர்களின் தேவைகள் அதிகமாகி அவர்கள் இன்னலுறும் போதும், உறுப் பினர்கள் சங்கம் இயங்கிவரும் இடத்தை விட்டுப் பிரிந்து செல்லும் போதும் இச்சேமிப்புத் தொகை திருப்பித் தரப்படு கின்றது.

5. சிறிய கூட்டுறவுப் பண்டகசாலைகளில் 'பொதுமன்றமே' (General Body) தலைமை அதிகாரியாகத் திகழ்கின்றது. இப் பொதுமன்றமே பண்டகசாலையைத் திறம்பட நடத்துவதற்கென ஒரு 'நிருவாகக் குழு'வையும் (Managing Committee) நியமிக் கின்றது. இவ்வாறு நியமிக்கப்படும் நிருவாகக் குழுவின் முக்கிய வேலைகள் இரண்டேயாகும். நிருவாகத்தைத் திறம்பட நடத்திச் செல்லவல்ல நிருவாகியைத் தேர்ந்தெடுத்து நியமித்தலும், அவரது பணிகளைச் சிறப்பான முறையில் கண்காணித்தலுமே இக்குழுவின் முக்கியப் பணிகளாகும்.

6. அளவில் பெரிய கூட்டுறவுச் சங்கங்கள் பிரதேசவாரி யாகப் பிரிக்கப்பட்டு நிருவகிக்கப்படுகின்றன. கூட்டுறவுக் கடை களின் எண்ணிக்கையைப் போலவே இவைகளின் நிர்வாகத் திறனும் உயர்ந்து காணப்படுகின்றது. உறுப்பினர்கள் ஒன்று கூடி ஒரு நிர்வாகக் குழுவை மாவட்ட ரீதியில் அமைக்கின்றனர். மேலும், பிரதேச அடிப்படையில் 'பொதுச் சபை'யில் (General Assembly) அங்கம் வகிக்குமாறு ஒரு பிரதிநிதியும் உறுப்பினர் களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். உள்ளூர் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்ட ரீதியில் அமைக்கப்பட்டுள்ள நிருவாகக் குழுவினால் நிருவகிக்கப்படுகின்றன. பிரதேச அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து ஒரு பொதுச் சபையை உருவாக்குகின்றனர். இப்பொதுச்சபை உறுப்பினர்கள் ஒரு நிர்வாக ஆலோசனைக் குழுவினை அமைக்கின்றனர். இந்த ஆலோசனைக்குழு 15-லிருந்து 20 உறுப்பினர்களைக் கொண்டு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் வெற்றிக்காகப் பாடுபடு கின்றது. மாதமொரு முறை கூடும் இந்த ஆலோசனை குழுவின் முக்கியப் பணி 'இயக்குநர் அவையை' (Board of Directors)

நியமித்தலும் அதன் பணிகளைக் கண்காணித்தலுமேயாகும். இவ்வவையின் உறுப்பினர்கள் சம்பளம் பெறும் அலுவலர்களே ஆவர். ஆலோசனைக் குழுவின் உத்தரவுப்படிச் செயலாற்றுவதே இவர்களின் கடமையாகும்.

7. இக்கூட்டுறவுப் பண்டகசாலைகள் தாங்கள் விற்பனை செய்யும் பொருள்களுக்கு, கொள்ளை இலாபத்தைக் கருதாமல் நியாயமான அளவில் விலைகளை நிருணயிக்கின்றன. எனினும், 3 சதவிகித இலாப ஈவுத் தொகையை உறுப்பினர்களுக்கு வழங்கும் வகையில், குறைந்த அளவு இலாப நோக்கோடு, பொருள்களின் விலைகள் நிருணயம் செய்யப்படுகின்றன. எனவே, இக்கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களின் நன்மையை மனதில் கொண்டே விலை நிருணயம் செய்கின்றன.

8. இக்கூட்டுறவுப் பண்டகசாலைகள் உறுப்பினர்களுக்குக் கடன் விற்பனை செய்வதில்லை. ரொக்க விற்பனையே ஊக்குவிக்கப் படுகின்றது. இதன் பயனாக 'வராக் கடன்' (Bad Debts) பிரச்சினையே எழுவதில்லை. எனவே கூட்டுறவு அமைப்புகளின் நிதி நிலையும் உறுப்பினர்களால் பாதிக்கப்படுவதில்லை. உறுப்பினர்கள் தங்களின் தேவைப் பொருள்களை வாங்குவதற்கு ரொக்கமற்று இருப்பின், அவர்கள் 'உள்ளூர்ச் சேமிப்பு வங்கி' (Local Savings Bank) மூலம் கடன் பெற்றுத் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடிகின்றது.

இத்துணை வலிமையான சிறப்பு அம்சங்களைத் தங்கள் கொள்கைகளாகக் கொண்டு இயங்கிவரும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் வெற்றி பெறுவதில் வியப்பேதுமில்லை.

தொடக்கத்தில் சுவீடனின் துய்ப்போர் கூட்டுறவு இயக்கம் தனிப்பட்ட வணிகர்களும், ஆலை உரிமையாளர்களும் ஒன்று சேர்ந்து அமைத்த தொழில் திரட்டுகளுடன் கடுமையான போட்டியில் ஈடுபட வேண்டியிருந்தது. இலாப நோக்கை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இயங்கி வந்த இத்தொழில் திரட்டுகளின் முன்னால் சேவை செய்யும் எண்ணத்துடன் செயலாற்றி வந்த கூட்டுறவுச் சங்கங்கள் வலிமையுடன் செயல்பட இயலவில்லை. இந்நிலையில்தான் சுவீடனில் 'கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம்' (Co-operative wholesale Society) தோற்றுவிக்கப்பட்டது. இனி இக்கூட்டுறவு அமைப்பைப் பற்றி ஆராய்வோம்.

I. 'கோ ஆப்பரேட்டிவ் ஃபார்பன்டெட்' (Co-operative Farbundet)

சுவீடனின் துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கியப் பொருள்களின் விலைகள் ஓர் அளவிற்கு மேல் உயராவண்ணம் தகுந்த நடவடிக்கைகளை உறுப்பினர்களின் நலனுக்காகவும், நாட்டின் நலனுக்காகவும் எடுக்கத் தொடங்கவே பிரச்சினைகள் பல தோன்றலாயின. குறிப்பாகத் தனிப்பட்ட வணிகர்களால் நடத்தப்பட்டு வந்த தொழில் திரட்டுகளுடன் கடுமையான போட்டி ஏற்படலாயிற்று. இச்சூழ்நிலையில் தான் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆதரவு அளிப்பதற்காகவும், நல்ல முறையில் வலிமை வழங்குவதற்காகவும் ஒரு கூட்டுறவு அமைப்பு 1899–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இக்கூட்டுறவு அமைப்பே 'கூட்டுறவு ஃபார்பன்டெட்' (Co-operative Farbundet) என வழங்கப்பட்டது. சுவீடன் நாட்டுக் கூட்டுறவுச் சங்கமும், மொத்த விற்பனைச் சங்கமும் இவ்வாறு அழைக்கப்படுகின்றன.

முதல் ஐந்து வருடங்களுக்கு இக்கூட்டுறவு அமைப்பு வணிகத் துறையில் ஈடுபடவில்லை. நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தைப் பலப்படுத்துவதிலும், மேலும் பல கூட்டுறவுப் பண்டக சாலைகளைத் தோற்றுவிப்பதிலுமே தன் முழுக்கவனத்தையும் செலுத்தி வந்தது. இவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆலோசனைகள் வழங்கும் ஓர் ஆலோசனைச் சபையாகவே செயல் பட்டு வந்தது. 1904-ஆம் ஆண்டுதான் அதன் செயல் முறையில் திருப்பம் ஏற்பட்டது. இவ்வாண்டின் தொடக்கத்திலிருந்துதான் முக்கியப் பண்டங்களின் விற்பனையையும் ஏற்றது. இதைத் தொடர்ந்து, உற்பத்தித்துறையிலும் இது படிப்படியாக ஈடு படத் தொடங்கியது.

தொடக்கத்தில், இக்கூட்டுறவு அமைப்பு (K.F.) தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குத் தேவையான பண்டங்களைத் தேவையான அளவிற்கு நியாய விலையில் அளித்து வந்தது. எனவே, தனியார் கம்பெனிகளிடமிருந்து பல முகமைகளைப் (Agencies) பெற்று நல்ல முறையில் பண்டங்களை விற்பனை செய்துவந்தது. இவ்வாறு குறுகிய அளவில் செயலாற்றி வந்த இக்கூட்டுறவு அமைப்பு (K.F.) நாளடைவில் ஒரு சிறந்த மொத்த விற்பனைச் சங்கமாக உருமாறியது.

இதைத் தொடர்ந்தே இக்கூட்டுறவு அமைப்பு உற்பத்தித் துறையிலும் தன் கவனத்தைச் செலுத்தத் தொடங்கியது. இத்

துறையில் ஈடுபடத் தொடங்கியதற்கு முக்கியமான இரண்டு காரணங்கள்—(1) உற்பத்தித் துறையில் ஈடுபடுவதால் கிடைக்கும் இலாபத் தொகை; (2) தனிப்பட்ட உற்பத்தியாளர்களின் அளவுக்கதிகமான கொள்ளை இலாபம்.

நாட்டிற்கும், உறுப்பினர்களுக்கும் சேவை செய்தலே இக்கூட்டுறவு அமைப்பின் முக்கியக் குறிக்கோள் ஆயினும் அச்சேவையைத் தொடர்ந்து செய்வதற்குப் போதிய நிதியைப் பெறுவது அவசியமாகும். எனவே நிதிநிலையைக் கணிசமாக உயர்த்துவதற்கு இக்கூட்டுறவு அமைப்பு உற்பத்திச் செயல்களையும் ஏற்கத் துணிந்ததில் விந்தை ஏதுமில்லை.

தனிப்பட்ட உற்பத்தியாளர்கள் எப்போதும் இலாப வேட்டையையே எண்ணி இருப்பதால் அவர்களுக்கும் சேவை நோக்கத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லாமற் போகிறது. இத்தகைய உற்பத்தியாளர்கள் எப்போதும் உற்பத்தி அளவைக் கட்டுப் படுத்துவதிலும், விலையை உயர் மட்டத்தில் நிருணயிப்பதிலுமே தங்கள் முழுக் கவனத்தையும், உழைப்பையும் செலுத்துவதன் காரணமாக நுகர்வோர் மிகவும் பாதிக்கப்படுவது திண்ணம். குறிப்பாகத் 'தேவை நெகிழ்ச்சி' (Elasticity of Demand) குறைந்த அவசியப் பண்டங்களின் விற்பனையில், பெரும்பாலும் 'விற்போர் சந்தை' (Sellers' Market) காணப்படுவதால் துய்ப்போர் அவர்களது தேவைப் பொருள்களை அதிக விலை கொடுத்தே வாங்க வேண்டியிருக்கும். நுகர்வோர் ஒன்று கூடிப் பொருள்களின் விலை ஏற்றத்தை எதிர்ப்பதற்கும், தடுப்பதற்கும் கூட்டுறவு அமைப்பு பெரிதும் உதவக் கூடியதொன்றாகும். இப்பணியையே சுவீடன் 'மொத்த விற்பனைச் சங்கம்' (K.F.) செய்யத் தொடங்கியது. இதன் பயனாகத் தனிப்பட்ட வணிகர்களின் 'விற்பனை முற்றுரிமை' (Monopoly) முறியடிக்கப்பட்டது.

மொத்த விற்பனைப் பணிகள்
(Wholesale Activities)

சுவீடனின் மொத்த விற்பனைச் சங்கம் (K.F.) தொடக்கத்தில் குறைந்த அளவிலேயே மொத்த விற்பனைப் பணியைத் தொடங்கினாலும் நாளடைவில் பேரளவில் வியாபாரம் செய்யத் தொடங்கியது. தற்போது மொத்த விற்பனைப் பணிகள் சுமார் நாற்பது விற்பனைப் பிரிவுகள் மூலம் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு விற்பனைப் பிரிவும் குறிப்பிட்ட பண்டங்களை நியாய விலைக்கு விற்பனை செய்கின்றது. ஒவ்வொரு பிரிவுக்கும் தனியாக ஒரு

தலைமை அதிகாரி செயல் படுவதால் விற்பனை சீரிய முறையில் செய்யப்படுகின்றது. நிருவாகம் முழுவதும் அத்தலைமை அதிகாரியின் நேரடிப் பார்வையில் நடைபெறுவதாலும், அதிக அதிகாரங்கள் அத்தலைமைப் பதவிக்கு அளிக்கப்பட்டிருப்ப தாலும் ஒவ்வொரு விற்பனைப் பிரிவும் எளிதில் செம்மையாகச் செயல்பட இயலுகின்றது.

ஒவ்வொரு விற்பனைப் பிரிவும் ஒரு சில குறிப்பிட்ட பண்டங் களையே விற்பனை செய்வதால் இங்கு நாம் 'சிறப்பீடுபாட்டை'க் (Specialisation) காண முடிகின்றது. மொத்த விற்பனைப் பிரிவு களும் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியும் ஓர் இயக்குநரின் நேரடிப் பார்வையில் இயங்கி வருகின்றது. ஒவ்வொரு பகுதியின் இயக்குநரும் (Director) விற்பனைப் பிரிவு களுக்கும் மத்திய நிர்வாக அவைக்கும் இடையே இணைப்புப் பாலமாகச் செயல்பட்டு வருகின்றனர். வார மொரு முறை அவையின் கூட்டம் நடத்தப்படுகின்றது. இக்கூட்டத்தில் விற்பனைப் பிரிவுகளின் வளர்ச்சி, அவைகளின் நிதி நிலை, வளர்ச்சியைக் குன்றச் செய்யும் பிரச்சினை மிகுந்த இடர்ப்பாடுகள் முதலானவை விளக்கமாக விவாதிக்கப்பட்டு அவைகளை நீக்கும் வழிமுறைகளும் தீர்மானிக்கப்படுகின்றன. இறுதியில், ஒவ்வொரு பிரிவின் வளர்ச்சியும் 'குறிப்பு' (Progress Sheet) வடிவில் தயாரிக்கப்பட்டுப் பிற பிரிவுகளுக்கு அனுப்பப்படுவதால் பிரிவு களுக்கிடையே விற்பனை செய்வதில் போட்டி ஏற்பட்டு, மொத்த விற்பனை உயர்வதற்கு வழி செய்யப்படுகின்றது. அளவான போட்டி எத்துறையிலும் தேவைதானே !

இக்கூட்டுறவுச் சங்கத்தின் (K.F.) தலைமை அலுவலகம் 'ஸ்டாக்ஹோம்' (Stockholm) நகரில் செயல்பட்டு வருகின்றது என்றாலும் கொள்முதல் செய்யப்பட்ட சரக்குகளைப் 'பிரதேச பண்டகங்களில்' (Regional Warehouses) பத்திரப்படுத்தி வைக்கின்றது. இவ்வகைப் பண்டகங்கள் நாடு முழுவதும் அமைக்கப்பட்டு நல்ல முறையில் நிருவகிக்கப்படுகின்றன. தற்போது 22 பண்டகங்கள் சுவீடன் நாட்டின் பல பகுதிகளில் செயலாற்றி வருகின்றன. சரக்குகளை எளிதில் வாடகை வண்டி களிலிருந்து இறக்குவதற்கும், பிறகு அவற்றை வெளியே அனுப் புவதற்கும் தக்கவாறு இப்பண்டகங்கள் நிர்மாணிக்கப்படு கின்றன. துறைமுகங்களிடமிருந்து நேரடியாகவும், பிற அளிப் பாளர்களிடமிருந்தும் (Suppliers) சரக்குகளைப் பெற்று நல்ல முறையில் இப்பண்டகங்கள் பத்திரப்படுத்தி வைக்கின்றன. இப் பண்டகங்கள் நவீன முறையில் பல வசதிகளைக் கொண்டதாக

அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பண்டத்திற்கும் தனியான இடம் இப்பண்டகங்களில் ஒதுக்கப்பட்டுள்ளது. குறுகிய காலத்தில் அழியக்கூடிய பொருள்களை நல்ல முறையில் பாதுகாப்பதற்கெனக் குளிர் சாதன வசதிகளைக் கொண்ட தனி அறைகளும் இப்பண்டகங்களில் உள்ளன. சரக்குகளை நல்ல முறையில் கட்டிப் பாதுகாப்பதற்குத் தனிப்பிரிவுகளும் (Packing Section) இப்பண்டகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. தானாகவே இயங்கும் இயந்திரங்கள் மூலம் இப்பணி செவ்வனே செய்யப்படுகின்றது. இது மட்டுமின்றி மற்றக் காரியங்களும் இயந்திரங்கள் துணை கொண்டு நடைபெறுவதால் காலம் விரயம் செய்யப்படாமல் காக்கப்படுகின்றது.

'தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள்' (Primary Co-op. Socs.) பெரும்பாலும் தங்கள் விற்பனைக்குத் தேவையான எல்லாப் பண்டங்களையும் நேரடியாகவே பண்டகங்களிடமிருந்து கொள்முதல் செய்து கொள்கின்றன. இம்முறையால் காலதாமதமின்றிப் பொருள்களைப் பெற இயலுகின்றது. ஒரு கூட்டுறவு சங்கத்திடமிருந்து தேவையான பொருள்களைக் கொள்முதல் செய்வதற்காக ஆணையைப் (Order) பெற்றவுடன், இப்பண்டகம் அப்பொருள்களின் இருப்புநிலையைக் 'கணக்கிடும் கருவி' (Computer) மூலம் அறிந்து உடனே தாமதமின்றி அவற்றை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்கின்றது. இவ்வாறு அனுப்பப்படும் சரக்குகளுக்குப் பட்டியலும் (Invoice) கணக்கிடும் கருவி மூலம் தயாரிக்கப்பட்டுச் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கத்திற்கு அனுப்பப்படுகின்றது. சரக்குகள் நல்ல முறையில் மரப்பெட்டிகளில் நிரப்பப்பட்டு மோட்டார் வாகனங்கள் மூலமாக அனுப்பப்படுகின்றன.

இம்மொத்த விற்பனைச் சங்கம் (K.F.) நியாயமான விலைகளையே தான் விற்பனை செய்யும் பொருள்களுக்கு நிருணயம் செய்கிறது. 'இலாப நோக்கம்' குறைந்த அளவில் கணக்கிடப்பட்டாலும், 'கொள்ளை இலாபம்' அறவே கைவிடப்பட்டுள்ளது. பொருள்களைப் பெறும் கூட்டுறவு சங்கங்கள் பொருள்களின் அடக்க விலையுடன் (Cost Price), சத்தம் (Freight), பண்டகச் செலவு (Cost of Warehouse), பொருள்கள் பண்டகங்களில் தங்கி இருந்த காலத்திற்கு வட்டி போன்ற செலவுகளையும் சேர்த்துக் கொடுக்கவேண்டும். இதன் மூலம் பெறும் ரொக்கத் தொகையைக் கொண்டே மொத்த விற்பனைச் சங்கம் கொள்முதலின் அடிப்படையில் வாங்குபவர்களுக்கு ஒரு சதவிகித (1%) இலாப ஈவுத்தொகை வழங்குகின்றது. இதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

1956-ஆம் ஆண்டில் மட்டும் கூட்டுறவுச் சங்கங்களினுல் கொள்முதல் செய்யப்பட்ட பண்டங்களின் மொத்த மதிப்பு 935 மிலியன் 'குரோனர்'களாகும். 1969-ஆம் ஆண்டு மொத்த விற்பனை 4,156 மிலியன் குரோனர்களாக உயர்ந்துள்ளது என்ருல் சுவீடன் நாட்டுக் கூட்டுறவு இயக்க வளர்ச்சியை நாம் எளிதில் அறிந்து கொள்ளலாம். கூட்டுறவுச் சங்கங்களும், மற்ற பண்டக சாலைகளும் இம்மொத்த விற்பனைச் சங்கத்திடமிருந்து தான் கொள்முதல் செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தப் படுவதில்லை. எனினும் கொள்முதல் இந்தக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திடமிருந்தே செய்யப்படுவதற்குப் பொருள்களின் நியாய விலையே காரணமாகும். கணிசமான அளவிற்குப் பல்வேறு பண்டங்கள் இக்கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உதாரணமாக, 1969-ஆம் ஆண்டில் மட்டும் 518 மிலியன் குரோனர் மதிப்புள்ள பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்ருல் இச்சங்கத்தின் பெருமையையும், சிறப்பையும் நாம் எளிதில் உணர்ந்து கொள்ளலாம். இனி இச்சங்கம் எவ்வாறு உற்பத்தித் துறையிலும் சிறந்து விளங்குகிறது என்பதை ஆராய்வோம்.

உற்பத்தித் துறையில் இச்சங்கத்தின் பணிகள் (Production Activities)

குறைந்த அளவு இலாபத்தைப் பெறுவதற்காகவும், தனிப்பட்டவர்களின் விற்பனை முற்றுரிமையை முறியடிப்பதற்காகவுமே இக்கூட்டுறவு மொத்த விற்பனைச்சங்கம் (K.F.) உற்பத்தித் துறையிலும் நுழைந்தது. சுவீடனின் இக்கூட்டுறவுச் சங்கம் நூற்றுக்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்களை நிருவகித்து வருகின்றது. அவைகளில் பெரும்பாலானவை 'கூட்டுப் பங்கு' கம்பெனிகளாகும். இக்கம்பெனிகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான, போதுமான பங்குகளை இக்கூட்டுறவு அமைப்பு பெற்றிருப்பதால் அக்கம்பெனிகளை எளிதில் இது அடக்கியாள முடிகின்றது. மொத்தக் கூட்டுறவுச் சில்லறை விற்பனையில் 33 சதவிகிதப் பொருள்கள் இக்கூட்டுறவுச் சங்கத்தினுல் உற்பத்தி செய்யப்பட்டவை ஆகும். இக்கூட்டுறவுச் சங்கத்தின் மொத்த விற்பனையில் 35% மற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

தற்போது சுவீடனின் இக்கூட்டுறவுச் சங்கம் சுமார் நாற்பது தொழிற்சாலைகளை நிருவகித்து வருகின்றது. தனிப்பட்ட

குறிப்பு : ஒரு ரூபாய்=1,08 சுவீடன் குரோனர்.

வணிகர்களின் தொழிற் திரட்டுகளையும், வணிகச் சேர்க்கையையும் ஒழிப்பதே இதன் குறிக்கோளாக இருந்தது. ஏனெனில், அவசியமான பண்டங்கள் அதிக விலைக்கே இத்தனிப்பட்ட வணிகர்களால் விற்கப்பட்டன. உதாரணமாகச் செயற்கை முறையில் வெண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஒன்று கூடி ஒரு வலிமையான தொழில் திரட்டை உருவாக்கிக் கொண்டு உற்பத்திப் பொருளான செயற்கை வெண்ணெயை (Margarine) அதிக விலைக்கு விற்று வந்தனர். இவர்களுக்குப் போட்டியாக இக்கூட்டுறவுச் சங்கம் (K.F.) 1909-ஆம் ஆண்டு அளவில் சிறிய ஒரு செயற்கை வெண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை விலைக்குப் பெற்று நல்ல முறையில் நடத்தத் தொடங்கியது. தனிப்பட்டவர்களின் தொழில்திரட்டு 1911-ஆம் ஆண்டு மறைந்து போயிற்று. 1914-ஆம் ஆண்டு இத்தொழிற்சாலையும் கைவிடப்பட்டது. இதன் பிறகு 1921-ஆம் ஆண்டுவரை வேறு எந்தத் தொழிலையும் இக்கூட்டுறவுச் சங்கம் ஏற்றுக் கொள்ளவும் இல்லை-புதிதாகத் தொடங்கவும் இல்லை. 1921-ஆம் ஆண்டுக்குப் பின்னர் தான், இக்கூட்டுறவுச் சங்கம் தன் கவனத்தை உற்பத்தித் துறையில் முழுவதும் செலுத்தத் தொடங்கியது. பல்வேறு உற்பத்திப் பணிகளையும் மேற்கொள்ளத் தொடங்கியது. 1920-ஆம் ஆண்டு மீண்டும் ஒரு தொழிற்திரட்டு செயற்கை வெண்ணெய் உற்பத்தியில் தோன்றியது. வெண்ணெய் விலையும் அதிகமாக இருக்கவே, இக்கூட்டுறவுச் சங்கம் இதை எதிர்த்து முறியடிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் 1921-ஆம் ஆண்டு இக்கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான ஒரு தொழிற்சாலை தொடங்கப்பட்டது. நவீன கருவிகள் பலவற்றையும் பெற்றுத்திகழ்ந்தது இந்த வெண்ணெய்த் தொழிற்சாலை. தற்போது சுவீடன் நாட்டிலேயே பெரிய தொழிற்சாலையாகத் திகழ்வது இந்தச் செயற்கை வெண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையாகும். அளவில் மட்டுமின்றி, தரமான வெண்ணெய் தயாரிப்பிலும் இச்சங்கமே முதலாவதாகத் திகழ்கிறது. சில்லறை வியாபாரம் செய்துவந்த கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்குத் தேவையான வெண்ணெயைத் தனியார் நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்வதை விடுத்து இக்கூட்டுறவுச் சங்கம் நடத்தி வந்த தொழிற்சாலையிடமிருந்தே பெறத் தொடங்கின. இதன் விளைவாக, வெண்ணெய் விலை குறையத் தொடங்கியது. செயற்கை வெண்ணெய் உற்பத்திக்குத் தேவையான தாவர எண்ணெய் வகைகள் அதிக அளவு தேவைப்படவே, இச்சங்கம் 1931-ஆம் ஆண்டு தனியொரு தொழிற்சாலையைத் தொடங்கியது. மாவுப் பொருட்களின் விலையும் தனிப்பட்ட முதலாளிகள்

உருவாக்கிய தொழில் திரட்டுகளால் அதிக அளவில் நிருணயிக்கப்பட்டிருந்தது. இதனுல் பாதிக்கப்பட்டோர் நுகர்வோரே. இவர்களது இன்னல்களைக்களைவதையே தன் குறிக்கோளாகக் கொண்ட சுவீடனின் இக்கூட்டுறவுச் சங்கம் இப்பிரச்சினைக்கும் தீர்வு கண்டது. இவ்விரு துறைகளில் பெற்ற வெற்றி ஏனைய உற்பத்தித் துறையிலும் இச்சங்கம் ஈடுபடுவதற்கான ஊக்கத்தையும், துணிவையும் அளித்தது.

தானியங்கள் மூலம் பலவகை மாவுப் பொருள்கள் தயாரித்தல் (Flour Milling), ரொட்டி தயாரித்தல், உணவுப் பொருட்களைப் பக்குவப்படுத்தித் தகர அடைப்புகளில் அடைத்து விற்பனை செய்தல் (Canning), இறைச்சி தயாரித்தல், காலணிகள் தயாரித்தல், இரப்பர் டயர் தயாரித்தல், இடுபணக் கணக்குப் பொறி தயாரித்தல் (Cash Registers), மின் விளக்கு தயாரித்தல், பீங்கான் பொருட்கள் தயாரித்தல் (Ceramics), நார்ப் பொருட்கள் தயாரித்தல் (Fibres), ஆடை தயாரித்தல், (Clothing), தையற் பொறி உற்பத்தி செய்தல், சலவைத் தூள் தயாரித்தல், உரங்கள் தயாரித்தல் (Fertilisers), மெருகு ஏற்றப் பயன்படும் தேய்ப்புப் பொருள் தயாரித்தல் (Polish), காற்றுறிஞ்சுதல் மூலம் தூசகற்றும் பொறி தயாரித்தல் (Vaccum Cleaners) போன்ற பலவகைத் தொழில்களிலும் இக்கூட்டுறவுச் சங்கம் ஈடுபட்டுப் பெரு வெற்றியைப் பெறத் தொடங்கியது.

சுவீடன் நாட்டு மக்கள் அதிகமாகத் தொல்லையுற்றுப் புகார் செய்தது மின்சார விளக்குகளைப் பற்றியேயாகும். மின்சார விளக்குகளின் நன்மைகளை முழுவதும் நன்குணர்ந்திருந்த சுவீடன் மக்கள் அவைகளின் விலை ஏற்றத்தினுல் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தனர். மின்சார விளக்குகளின் உற்பத்தி, அனைத்து நாடுகள் ஒன்று சேர்ந்து அமைத்த தொழில் திரட்டின் கண்காணிப்பில் இருந்தமையால் விலை ஏற்றம் தவிர்க்க முடியாததொன்ருக இருந்தது. இரண்டு தொழிற்சாலைகள் (ஜெர்மானிய நாட்டைச் சார்ந்தவை) சுவீடன் நாட்டில் இயங்கிவந்த தொழிற்சாலையுடன் ஒன்று சேர்ந்து கொள்ளை இலாபமடைவதையே குறிக்கோளாகக் கொண்டு மின்சார விளக்குகளை விற்பனை செய்துவந்தன. ஒவ்வோர் ஆண்டும் சுவீடனில் உற்பத்தி செய்துவந்த தொழிற்சாலையின் செலவுத் தொகை கணிசமாக உயர்ந்து வந்ததால் இலாபத்தின் பெரும் பகுதி ஜெர்மானிய நாட்டிற்கு ஏற்றுமதியாகி வந்தது. விளக்குகளின் விலையும் அதிகமாக இருந்ததால், தீவிரச் சிந்தனைக்குப் பின்னர் ஓரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதென இக்கூட்டுறவு

சங்கம் 1928-ஆம் ஆண்டு தீர்மானித்தது. தொழிற்சாலை கட்டுவதற்கெனத் திட்டங்களும் தீட்டப்பட்டன. 1934-ஆம் ஆண்டு முதன்முதலாக 'லூமா மின்சார விளக்குத் தொழிற்சாலை' (Luma Lamp Factory) தோற்றுவிக்கப்பட்டது, இதைத் தொடர்ந்து மேலும் ஒரு தொழிற்சாலை 'ஓஸ்லோ' (Oslo) என்ற நகரில் ஆரம்பிக்கப்பட்டது. லூமா மின்விளக்குத் தொழிற்சாலைதான் உலகிலேயே முதன் முதலாக சர்வதேச நாடுகளால் கூட்டுறவு அடிப்படையில் அமைக்கப்பட்டதாகும். இத்தொழிற்சாலை சுவீடன், டென்மார்க், நார்வே, பின்லாந்து (Finland) என்ற நான்கு நாடுகளின் மத்தியக் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்பின் கீழ் இயங்கியது. உற்பத்தி செய்யப்பட்ட மின்விளக்குகள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தனிப்பட்டவர்களால் நடத்தப் பட்ட தொழில் திரட்டும் விலையைக் குறைக்க வேண்டியதாயிற்று. மக்களின் பிரச்சினையும் ஒரு வழியாகத் தீர்ந்தது.

சுவீடனில் மட்டுமின்றி, அண்டை நாடுகளிலும் இம்மின் விளக்குகளுக்கு அதிகக் 'கேட்பு' (Demand) இருந்தமையால், அந்நாடுகளுக்கும் இவ்விளக்குகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. குறிப்பாக, இங்கிலாந்தில் சுவீடனின் மின்விளக்குகளுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. மேலும் இரு மின்விளக்குத் தொழிற் சாலைகள் 'கிளாஸ்கோ' (Glasgow) 'ஓஸ்லோ' (Oslo) என்னும் நகர்களில் அமைக்கப்பட்டன. இவைமட்டுமின்றி, இக்கூட்டுறவுச் சங்கம் 3 காகித ஆலைகளையும், ஒரு பீங்கான் தொழிற்சாலையையும் திறம்பட நடத்தி வந்தது. துய்ப்போரின் நலன் கருதி ஒரு 'சேமிப்பு வங்கி'யையும் (Savings Bank) நடத்திவந்தது.

இவ்வாறாக, தனியார் துறையில் மலிந்து காணப்பட்ட கொள்ளை இலாப வேட்டை போன்ற குறைகளைக் களைவதற்காக இச்சங்கம் உற்பத்தித் துறையிலும், விநியோகத் துறையிலும் ஒரு சேரச்செயலாற்றி வந்தமையால் நாடு நலம்பெறத் தொடங் கியது. பொருள்களின் விலை குறைந்தும், தரம் உயர்ந்தும் காணப்பட்டமையால், இக்கூட்டுறவு அமைப்பு (K. F.) நல்லோர் எல்லோராலும் பாராட்டப்பட்டது. 1969-ஆம் ஆண்டில் மட்டும் 2654 மிலியன் குரோனர் மதிப்புள்ள பொருள்கள் இக்கூட்டுறவு அமைப்பின் கண்காணிப்பில் உற்பத்தி செய்யப்பட்டன.

உற்பத்தித் துறை, விநியோகத்துறை ஆகிய இரண்டிலும் ஒரு சேரச் செயலாற்றி வந்த இக்கூட்டுறவு அமைப்பு வேறுபல செயல்களிலும் ஈடுபட்டுச் செவ்வனே சேவை செய்து வந்தது. இனி அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்,

காப்புறுதித் தொண்டு

இக்கூட்டுறவுச் சங்கம் 'காப்புறுதித் தொண்டும்' (Insurance) பேரளவில் ஏற்று நலம் பயக்கத்தக்க முறையில் நடத்திவந்தது. பெரும்பாலும், இச்சங்கத்தின் துணைச் சங்கங்களாலேயே இக் காப்புறுதி வணிகம் நிறைவேற்றப்பட்டு வந்தது. 1908-ஆம் ஆண்டு 'சாமர்பெட்' (Samerbete) என்னும் இடத்தில் தொழிலாளிகளின் நலனுக்காக ஒரு பொதுக் காப்புறுதிச் சங்கம் (General Insurance Society) தோற்றுவிக்கப்பட்டது, இதைத் தொடர்ந்து 1914-ஆம் ஆண்டு 'போல்கெட்' (Folket) என்னும் இடத்தில் மேலும் ஒரு காப்புறுதிச் சங்கம் உருவானது. இது ஓர் 'ஆயுள் காப்புறுதிச் சங்கமாக'ச் செயல்படத் தொடங்கியது. 1949-ஆம் ஆண்டு மேலும் ஒரு சங்கம் இதே துறையில் தோற்றுவிக்கப் பட்டது.

இக்காப்புறுதிச் சங்கங்கள் வெவ்வேறு துறையில் செயற் பட்டுவந்தாலும், ஒரே நேரடி நிருவாகத்தின் கீழ்ச் செயலாற்றி வந்தன. ஆண்டுக்காண்டு இவைகள் பெற்றுவந்த 'கட்டணத் தொகையும் (Premium) உயர்ந்து வந்தமையால் காப்புறுதி வணிகம் சிறப்புடன் வளரத்தலைப்பட்டது.

கூட்டுறவுக் கல்வியின் வளர்ச்சி

தொண்டாற்றி வந்த பல்வகைக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் கூட்டுறவுக் கல்வியின் அவசியத்தையும், நன்மையையும் சரிவர உணர்ந்து செயல்படாமையால், சுவீடனின் இக் கூட்டுறவுச் சங்கம் (K. F.) கூட்டுறவுக் கல்வியை நன்கு நாட்டு மக்களிடையே பரப்புவதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கத் தலைப்பட்டது. துண்டு அறிக்கைகள் மூலம் கூட்டுறவுக் கொள்கைகள் எங்கும் பரவத் தொடங்கின. 'நாம்' (We) என்ற பெயரில் ஒரு வாரப் பத்திரிகை வெளியிடப் படுகிறது. நாட்டின் கூட்டுறவுத் துறையில் ஏற்படும் எல்லாப் புதிய மாற்றங்களும், செயல் முறைகளும் இப்பத்திரிகையில் வெளியிடப்படுவதால், மக்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆற்றிவரும் பணியை அவ்வப்போது நன்கு உணர வாய்ப்பு ஏற்பட்டது. 4.3 இலட்சம் பிரதிகள் வாரந்தோறும் விற்பனையாகின்றன. பொருளாதார முன்னேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்டு இப்பத்திரிகை செயலாற்றி வருகின்றது. இதுவன்றி, 'கூட்டுறவாளர்' (The Co-operator) என்ற பத்திரிகையும் மாதமிருமுறை வெளியிடப்படுகின்றது. குறிப்பாகக், கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றிவரும் அதிகாரிகளுக்கும், உறுப்பினர்கட்கும் வழி காட்டியாகத் திகழ்கின்றது இப்பத்திரிகை.

பல நூலகங்களும் இச்சங்கத்தால் நடத்தப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் சுமார் 300 புதிய நூல்கள் இச்சங்கத்தால் வெளியிடப்படுகின்றன. இச்சங்கத்தின் மத்திய நூலகத்தில் சுமார் ஓர் இலட்சத்திற்கும் அதிகமான பொருளாதார நூல்கள் உள்ளன. மேலும் கூட்டுறவுக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தும் பொருட்டு, பல திரைப்படங்களும் இச்சங்கத்தால் உருவாக்கப்படுகின்றன. இத்திரைப்படங்கள் துணைச்சங்கங்களுக்கு வாடகைக்கு வழங்கப்படுகின்றன. திரைப்படக் கருவிகளும் இச்சங்கங்கட்கு வழங்கப்படுவதால், இச்சங்க உறுப்பினர்கள் கூட்டுறவுக் கொள்கைகளை நன்கு உணர முடிகின்றது. குடும்பப் பெண்களுக்கென ஒரு சிறப்புப் பிரிவும் (Special Department for Housewives) இச்சங்கத்தால் தொடங்கப் பட்டுள்ளது. இப்பிரிவு பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பெரிதும் தொண்டாற்றி வருகின்றது.

கூட்டுறவுக் கல்வியின் வளர்ச்சிக்கென, இக்கூட்டுறவுச் சங்கம் ஒரு பெரிய கல்லூரியையும் நடத்தி வருகின்றது (Var Gard College). சுமார் 150 பலவகைப் பாடப் பிரிவுகள் இக்கல்லூரியில் உள்ளன. 3000-க்கும் அதிகமான மாணவர்கள் கூட்டுறவுப் பயிற்சியை ஆண்டுதோறும் இக்கல்லூரியின் மூலம் பெறுகின்றனர். இக்கல்லூரியின் தலையாய நோக்கம், கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தகுதியான அதிகாரிகளை உருவாக்குவதேயாகும், தபால் கல்வி மூலமாகவும், கூட்டுறவுக் கொள்கைகள் நாடு முழுவதும் பரப்பப் படுகின்றன. அனுபவமும், அறிவும் நிறைந்த ஆசிரியர்கள் இக்கல்லூரியில் பணிபுரிவதால், இக்கல்லூரி பல்வகையிலும் சிறப்பாகத் தொண்டாற்றி வருகின்றது, இக்கல்லூரி 1924-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டதாகும்.

சோதனை ஆய்வுக்கூடங்கள்
(Test Laboratories)

சுவீடனின் இக்கூட்டுறவுச் சங்கம் தரமான பொருள்களையே உறுப்பினர்கட்கு விற்பனை செய்துவருகின்றது. விற்பனைக்கு முன்னர், ஒவ்வொரு பொருளின் தரமும் நல்ல பல சோதனைகளுக்கு உட்பட்டு, அதன் தரம் நிர்ணயிக்கப்படுகின்றது. பொருளின் தரம் குறைந்து காணப்படின், அப்பொருள்கள் விற்பனை செய்யப்படுவதில்லை. பொருள்களின் தரத்தை நன்கு ஆராயும் பொருட்டுப் பல ஆய்வுக்கூடங்கள், இயங்கிவருகின்றன. 'உணவுச் சோதனை ஆய்வுக்கூடம்' (Food Test Laboratory) 'துணி ஆய்வுக்கூடம்' (Textile Laboratory) போன்றவை

அவைகளுள் குறிப்பிடத்தக்கவையாகும். விற்பனை பொருள்களின் தரம் நன்கு ஆராயப்படுவதால், அவைகளை நுகர்வோர் மெத்த மகிழ்ச்சி அடைகின்றனர். கூட்டுறவின்பால் ஈடுபாடும் நம்பிக்கையும் கொள்கின்றனர்.

கூட்டுறவுச் சங்கமும் வேலை வாய்ப்பும்

சுவீடனின் பெருமை மிக்க இக்கூட்டுறவுச் சங்கம் வேலை வாய்ப்புக்களையும் கணிசமாக உயர்த்தி வருகின்றது. இச்சங்கத்தில் பணியாற்றி வரும் தொழிலாளிகளின் எண்ணிக்கை ஆண்டு தோறும் உயர்ந்து வருகின்றது. 1968–ஆம் ஆண்டு இச்சங்கத்தின் கீழ்ப் பணிபுரிந்தோர் எண்ணிக்கை 22,000 என கணக்கிடப் பட்டுள்ளது. எல்லாத் தேவையான வசதிகளையும் தொழிலாளிகளுக்கு இக்கூட்டுறவுச் சங்கம் வழங்கி உள்ளதால் தொழிலாளிகளிடையே அமைதியான சூழ்நிலை எப்போதும் நிலவுகிறது. இக்கூட்டுறவுச் சங்கத்திற்கும் தொழிலாளிகளுக்கு மிடையே எப்போதும் பிணக்கு ஏற்படுவதில்லையாதலால், இச்சங்கத்தின் பணி சாதாரணமாகத் தடைப்படுவதில்லை. சுவீடனில் '8 மணி நேர வேலை முறை' 1919–ஆம் ஆண்டுதான் சட்டத்தின் துணை கொண்டு நடைமுறைக்கு வந்தது. ஆனால், இம்முறையை 1906-ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்தே இக்கூட்டுறவுச் சங்கம் கடைப் பிடிக்கத் தொடங்கியது. 1907-ஆம் ஆண்டு முதல், வேறு பல புரட்சித் திட்டங்கள் தொழிலாளர் நலன் கருதி வகுக்கப் பட்டன. வாரத்தில் இரண்டு நாள் விடுமுறை அனுசரிக்கப் பட்டது. சுவீடன் அரசிற்கே இக்கூட்டுறவுச் சங்கம் வழிகாட்டி யாகத் திகழ்ந்தது. தொழிலாளிகளின் பிரச்சினைகள் அவ்வப் போது நன்கு ஆராயப்பட்டு அவைகட்கு தீர்வும் காணப்பட்டது. பணியாளர்களின் தேவைக்கேற்ப ஊதியம் வழங்கப்பட்டமையால் அவர்களது வாழ்க்கைத் தரம் உயர்ந்தே காணப்படுகின்றது.

கூட்டுறவுச் சங்கத்தின் அமைப்பு

இச்சங்கத்தின் தலைமைக் காரியாலயம், சுவீடனின் தலைநகரா கிய 'ஸ்டாக்ஹோமில்' (Stockholm) உள்ளது. முன் கண்ட வாறு பொருள்களின் மொத்த விற்பனை நாற்பது விற்பனைப் பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவும் ஒரு தகுதி வாய்ந்த அதிகாரியின் கீழ் செயல்பட்டு வருகின்றது. நிரம்ப அதிகாரங்கள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. மொத்த விற்பனைப் பிரிவுகளும் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியும் ஓர் இயக்குநரின் நேரடிக் கண்காணிப்பில் செயல்பட்டு வருகின்றது. மேலும் இக்கூட்டுறவுச் சங்கம் 12

சேமிப்புக் கிடங்குகளையும் நாட்டில் பல்வேறு பகுதிகளில் பெற்றுள்ளது. எனவே பொருள்களை வேண்டி நிற்கும் உறுப்பினர்கள், தங்களுக்கு அருகாமையில் உள்ள கிடங்கிலிருந்து வெகு எளிதில் பொருள்களைக் கொள்முதல் செய்து கொள்கின்றனர். இக்கூட்டுறவுச் சங்கம், 24 மாவட்டங்களைத் தன் தொண்டுக்கரங்கள் கொண்டு அணைத்துச் செல்கின்றது. மாவட்டக் குழுக்களும் (District Committees) அமைக்கப்பட்டுள்ளமையால் நிர்வாகம் செவ்வனே நடைபெற முடிகின்றது. உயர் மட்ட அளவில் ஒரு தேசிய அமைப்பும் (National Congress) உள்ளது.

இச்சங்கத்தின் வெற்றிக்கு முதற் காரணம் அதன் வலிவான நிதி நிலையேயாகும். 1969-ஆம் ஆண்டு சுமார் 500 மிலியன் குரோனர்களை இச்சங்கம் நிதியாகப் பெற்றிருந்தது. அதே ஆண்டில் இச்சங்கத்தின் 'கடன் மூலதனம்' (Loan Capital) 1450 மிலியன் குரோனர்களாகவும், 'நிலையான சொத்துக்கள்' (Fixed Assets) 2034 குரோனர்களாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் மொத்தச் சொத்துக்களின் மதிப்பு 2450 குரோனர்களாகும். இத்தகைய வலிவான நிதி நிலையைக் கொண்டே இக்கூட்டுறவுச் சங்கம் எத்துறையிலும் அச்சமின்றி, தயக்கமின்றி ஈடுபட்டு வெற்றி கொள்ள முடிகின்றது.

இனி இக்கூட்டுறவுச் சங்கத்தின் (K. F.) வெற்றிக்கான காரணங்களை ஆராய்வோம் :

1. சில்லரை வணிக அமைப்புகளுக்கும், மொத்த வணிக அமைப்புகளுக்குமிடையே நல்ல ஒற்றுமை நிலவி வந்தது. உற்பத்தியாளர் சங்கங்கள், துய்ப்போர் சங்கங்களுடன் நல்லுறவு கொண்டிருந்தமையால் தனிப்பட்ட வணிகர்களின் 'இலாப வேட்டை' நசுக்கப்பட்டது. இவ்வகைச் சங்கங்களின் வளர்ச்சிக்கென ஓர் 'இணைப்புக் குழுவும்' (Joint Committee) ஏற்படுத்தப்பட்டது. இவ்விரு சங்கங்களும் தங்களுக்குள் சில உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டன. அதன்படி, உற்பத்திச் சங்கங்கள் சில்லறை வணிகத்தில் ஈடுபட இயலாமற் போயிற்று. துய்ப்போர் சங்கங்கள் உற்பத்தித் துறையிலும், மொத்த விற்பனைத் துறையிலும் ஈடுபட முடியா வண்ணம் தடை செய்யப்பட்டது. இதன் காரணமாக, ஒன்றுக்கொன்று இணைந்தே வளர்ந்து பேரியக்கமாக மாறிற்று. கூட்டுறவுக் கல்வியும் தழைத்து வளர்ந்தமையால் வெற்றி எளிதில் கிட்டியது,

2. இக்கூட்டுறவுச் சங்கம் உற்பத்தித் துறையிலும் விநியோகத் துறையிலும் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தியமையால் வெற்றி எளிதில் கிட்டியது. பொருள்களின் தரம் உயர்ந்தும், அவைகளின் விலை குறைந்தும் காணப்பட்டமையால் இக்கூட்டுறவுச் சங்கம் மக்களிடையே செல்வாக்குப் பெற்றதில் வியப்பேதுமில்லை.

3. எவ்வகை வணிகத்திற்கும் நிதி நிலை சரிவர அமையாவிடில் வெற்றி எளிதில் கிட்டுவதில்லை. இக்கூட்டுறவுச் சங்கத்தின் வலிவான நிதி நிலையே அதன் வெற்றிக்குப் பெரும் காரணமாக உள்ளது. இச்சங்கத்தின் மூலதனம், நிலையான சொத்துக்கள் பற்றி நாம் ஏற்கனவே ஆராய்ந்துள்ளோம். அப்புள்ளி விவரங்களை இங்கு நாம் நினைவு கூர்ந்தால் இச்சங்கத்தின் வெற்றி பற்றி வியப்புக்கொள்ள இடமேயில்லை.

4. இக்கூட்டுறவுச் சங்கம் திறமை மிக்க, அனுபவம் நிறைந்த நபர்களையே அதிகாரிகளாக நியமிப்பதால் முறையான நிருவாகம் ஏற்பட வழி செய்யப்படுகின்றது. முறையான நிருவாகம், தரமான விற்பனைப் பொருள்கள், நியாயமான விலை, அரசின் கணிசமான உதவிகள் போன்றவையே இக்கூட்டுறவுச் சங்கத்தின் வெற்றிக்கு மூலகாரணங்களாக உள்ளன.

இக்கூட்டுறவுச் சங்கம், தனது பணிகளை சுவீடன் நாட்டின் எல்லைகளுக்குள் மட்டும் முடக்கிக் கொள்ளவில்லை. பின்தங்கிய எல்லா நாடுகட்கும் உதவும் பொருட்டுப் பல திறப்பட்ட செயல் முறைகளிலும் இக்கூட்டுறவுச் சங்கம் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக இச்சங்கம் இந்தியாவின் முன்னேற்றத்தில் பெரும் ஈடுபாடு கொண்டுள்ளது.

தில்லியில் மத்தியக் கல்விக் கூடம்
(Education Centre in Delhi)

பின்தங்கிய தென்கிழக்கு ஆசிய நாடுகட்குக் கூட்டுறவு முறையில் பலவகை உதவிகளை வழங்கும் பொருட்டு இக்கூட்டுறவுச் சங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 1960-ஆம் ஆண்டு, சுவீடனின் இக்கூட்டுறவுச் சங்கம் இந்தியாவின் தலைநகராகிய 'தில்லி'யில் ஒரு மத்தியக் கல்விக் கூடத்தை நிறுவியது. அதே ஆண்டில் 'சர்வதேசக் கூட்டுறவுச் சங்கம்' (International Co-operative Alliance) நம் தலைநகரில் ஒரு 'பிரதேச அலுவலகத்தை'யும் (Regional Office) தோற்றுவித்தது. 1963-ஆம் ஆண்டில் இரு அமைப்புகளும் ஒன்றாக இணைந்தன.

இவ்வலுவலகத்தின் மொத்தச் செலவில் மூன்றில் இரண்டு பாகத்தை இக்கூட்டுறவுச் சங்கம் (K. F.) ஏற்றுக் கொள்கின்றது. நிபுணர்களின் கூட்டங்கள் (Experts Conferences), பிராந்திய கருத்தரங்குகள் (Regional Seminars), தேசீய கருத்தரங்குகள் (National Seminars) மாதர் நிகழ்ச்சிகள் (Women's Programmes) போன்றவை இக்கல்விக் கூடத்தால் தவருமல் நடத்தப்படு கின்றன. ஆண்டு தோறும் மூன்று நபர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு அவர்கள் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட வசதிகள் பல செய்து தரப்படுகின்றன. பெண்களுக்கெனக் கருத்தரங்குகள் நடத்தப்படுவதால் ஆண்களைப் போலவே பெண்களும் கூட்டுறவுத் துறையில் பங்கு பெற முடிகின்றது.

பல நாடுகளின் கூட்டுறவு இயக்கங்கள் சுவீடனின் இக் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து தார்மீக உணர்வின் அடிப் படையில் பொருளாதார உதவிகள், தொழில் நுட்ப அறிவுரைகள் போன்ற பல வசதிகளைப் பெறுகின்றன. வளர்ந்து வரும் உலக நல்லுறவுக்கு இக்கூட்டுறவுச் சங்கம் உரமாகத் திகழ்கின்றது. இக்கூட்டுறவுச் சங்கத்தின் தூண்டுதலின் பேரில் பல நாடுகளுக் கிடையே வியாபார ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்டு, இரு நாடு களின் வளர்ச்சியும் ஊக்குவிக்கப்படுகின்றன.

எனவே, சுவீடனின் இக்கூட்டுறவுச் சங்கம் சுவீடனை மட்டு மின்றி பின்தங்கிய எல்லா நாடுகளுக்கும் நேசக்கரம் கொடுத்து பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவதற்குப் பாடுபடுகின்றது. இவ்வழியில் அனைத்துலக நாடுகளும் செயலாற்றினுல், உலகம் முழுவதுமே பொருளாதாரப் பிரச்சினையிலிருந்து விடுபட இயலும் என்ற கருத்துக்கு ஒப்பற்ற உதாரணமாக, ஒளி விளக் காகத் திகழ்கிறது சுவீடனின் இக்கூட்டுறவுச் சங்கம்.

இனி சுவீடனின் துய்ப்போர் கூட்டுறவு இயக்கத்தின் சிறப் பியல்புகளைக் (Special Features) காண்போம் :

1. இக்கூட்டுறவு இயக்கம் மிகவும் கட்டுக் கோப்பாக அமைந்துள்ளது. எல்லாக் கூட்டுறவுச் சங்கங்கட்கும் தனித்தனி யாக குறிக்கோள்களும், கொள்கைகளும் வகுக்கப் பட்டுள்ளன. அனைத்துச் சங்கங்களுக்கும் தலைமையாக மொத்த விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் (K.F.) விளங்குகின்றது. இது பல்வகைப் பண்டங்களை உற்பத்தி செய்யும் 'உற்பத்தியாளர் சங்கமாக'வும் திகழ்வதால், எளிதில் ஏனைய கூட்டுறவு அமைப்புகளை நிருவகிக்க இயலுகின்றது. இத்தகைய வலிவான, கட்டுக் கோப்பான

கூட்டுறவு இயக்கத்தை உலகில் வேறு எந்த நாடும் பெற்றிருக்க வில்லை,

2. மேலும், இக்கூட்டுறவு இயக்கம் பலதரப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே நல்ல வலுவான ஒற்றுமையைப் பெற்றிருப்ப தால் நிர்வாகச் சிக்கல் ஏதுமின்றி ஒரே சீராகச் செயல்படமுடி கின்றது. தலைமைக் கூட்டுறவுச் சங்கத்திற்கும், உள்ளூர்க் கூட்டுறவுச் சங்கங்களுக்குமிடையே நிலவும் கட்டுப்பாடான ஒற்றுமை (Solidarity) சுவீடனின் தனிச்சிறப்பாகும்.

3. எத்துணைக் கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றினாலும், மக்கள் கூட்டுறவுக் கொள்கைகளைச் சரிவர அறிந்து கொள்ளா விடில் அவை சிறப்புடன் செயல்பட இயலாது என்பதை நன்கு அறிந்திருந்த சுவீடனின் கூட்டுறவுச் சங்கம் கூட்டுறவுக் கொள்கைகளின் சிறப்பியல்புகளைச் செவ்வனே பரப்புவதிலும் நாட்டங்கொண்டு அதற்கென விரிவான திட்டங்களையும் தீட்டியது—வெற்றியும் கண்டது.

4. வணிகத்தின் வெற்றி அதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் களின் திறமையைப் பொறுத்துள்ளது. எனவே தகுதி வாய்ந்த அதிகாரிகளையும் ஏனைய தொழிலாளிகளையும் நியமிப்பதில் சுவீடனின் துய்ப்போர் கூட்டுறவு இயக்கம் ஏனைய நாடுகளுக்கு வழிகாட்டியாகத் திகழ்கின்றது. இவ்வியக்கத்தின் வெற்றி அதில் பணியாற்றி வரும் தொழிலாளர்களால் ஏற்படுவதாகும்.

5. கடைசியாக, இக்கூட்டுறவு இயக்கம் நகர்ப்புற மக்களால் தோற்றுவிக்கப்பட்டமையால் தடையேதுமின்றி வளர்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. பொதுவாக, மாத வருமானத்தையே நம்பி வாழும் நடுத்தர வகுப்பு மக்கள் தரமான பொருள்களை நியாய விலையில் வாங்குவதற்கே முயல்வார்கள். இதன் விளைவாக, அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களையே அணுகத் தலைப்பட்ட மையால் சுவீடனின் துய்ப்போர் கூட்டுறவு இயக்கம் பெருமளவில் வளரத் தொடங்கியது. இக்கூட்டுறவு இயக்கத்தின் மொத்த உறுப்பினர்களில் 17 சதவிகிதமே கிராமப் புறங்களிலிருந்து வந்துள்ளமையால், இவ்வியக்கத்தின் வளர்ச்சியை நாம் எளிதில் எடை போட்டுவிட இயலும்.

இனி, சுவீடனின் விவசாயக் கூட்டுறவு இயக்கத்தின் தோற்றம், வளர்ச்சி, தற்போதைய நிலை ஆகியவற்றைக் காண்போம் :

II. விவசாயக் கூட்டுறவு இயக்கம்
(Co-operative Agricultural Movement)

மேல் எழுந்த வாரியாகக் காண்கையில் சுவீடன் ஒரு விவசாய நாடாக விளங்கினாலும், மொத்த மக்கள் தொகையில் 10 சதவிகிதமே வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். தொழில் வளம் நிறைந்த நாடாக சுவீடன் இன்று திகழ்ந்தாலும், இன்றும் விவசாயம் இங்கு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. இந்நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்துவதில் விவசாயத்தின் பங்கும் கணிசமாகவே உள்ளது. நாட்டு வருமானத்தில் விவசாயத்தின் பங்கு 23 சதவிகிதமாகும்.

சுவீடனில் தொழிற் கூட்டுறவு தோன்றும் போது கடமை உணர்வு நிறைந்த இந்நாட்டு மக்கள் சோம்பி இருந்திடவில்லை. விவசாயத் தொழிலையும் கண்போலக் காத்து வந்தனர். தொழில் வளம் பெருகுமுன் சுமார் 60 சதவிகித மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர். ஏனைய தொழில்கள் வளர வளர விவசாயத்தில் ஈடுபட்டிருந்தோர் எண்ணிக்கை கணிசமாகக் குறையலாயிற்று. எனினும் விவசாயத் தொழில் அறவே அற்றுப் போய் விடவில்லை. நவீன விவசாயக் கருவிகள், தரமான விதைகள், உரங்கள் போன்ற முக்கியப் பொருள்கள் கொண்டு தேவைக்கு அதிகமான .விவசாயப் பொருள்கள் உற்பத்தி செய்யும் திறனை இந்நாட்டு மக்கள் பெற்றுள்ளனர். மொத்தப் பரப்பளவில் 10 சதவிகித நிலமே பயிரிடுதலுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்நிலத்தில் 50 சதவிகிதம் வனங்களின் வளர்ச்சிக்குப் பயன்படுகிறது. எஞ்சிய நிலமே வேளாண்மைக்குப் பயன்படுத்தப் படுகிறது. பெரும்பாலும் விவசாயப் பண்ணைகள் அளவில் சிறியனவாகவே உள்ளன. நில உரிமையாளர்களே எல்லாக் காரியங்களையும் கவனித்துக் கொள்கின்றனர். மொத்த தொழிலாளர்களில் 15 சதவிகிதமே விவசாயத் தொழிலில் கூலிக்கு அமர்த்திக் கொள்ளப்படுகின்றனர். சுவீடனின் மொத்த விவசாய வருமானத்தில் 40 சதவிகிதம் பாலிலிருந்தும், பால் பண்டங்களிலிருந்தும் பெறப்படுகின்றது. இதே அளவு வருமானம் பிராணிகளின் இறைச்சி விற்பனை மூலம் பெறப்படுகின்றது. எனவே இங்கு கால்நடைகளின் தீவன உற்பத்தியும் கணிசமாக உயர்ந்துள்ளது.

கூட்டுறவு இயக்கமே இந்நாட்டில் முதன்முதலில் விவசாயத் துறையில்தான் தோன்றியது. பேரளவு உற்பத்தியின் எல்லா நன்மைகளையும் பெறும் பொருட்டு, விவசாயிகள் கூட்டுறவுக்

கொள்கைகளைக் கையாளத் தொடங்கினர். இதன் பின்னர்தான், எல்லாத் துறைகளிலும் கூட்டுறவுக் கொள்கைகள் கையாளப் பட்டுப் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வழி வகுக்கப் பட்டது.

1870-ஆம் ஆண்டில்தான், முதல் கூட்டுறவு விவசாயச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அதன் பெயர் 'கூட்டுறவுப் பாற் பண்ணை' (Co-operative Dairy) என்பதாகும். வெகு விரைவில் இதைத் தொடர்ந்து, பல கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயப் பொருள்களை முறையாக விற்பனை செய்யும் பொருட்டுத் தோற்று விக்கப்பட்டன. முதல் உலகப் போருக்குப் பின்னர்தான் விவசாயக் கூட்டுறவு இயக்கம் முறையாக முழுவதுமாக வளர லாயிற்று. விவசாயத்திற்குத் தேவையான எல்லாப் பொருள் களுமே கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப் படலாயின. தற்போது, கீழ்மட்டத்தில் உள்ளூர்க் கூட்டுறவுச் சங்கங்களும், உயர் மட்டத்தில் தேசீயக் கூட்டுறவு அமைப்புகளும் இயங்கி வருகின்றன. இவை இரண்டையும் இணைக்கும் பாலமாகப் பல கூட்டிணைப்புகளும் (Federations) உள்ளன.

பொது விவசாயச் சங்கம்
(The General Agricultural Society)

தொடக்கத்தில் இச்சங்கம் ஏனைய கூட்டுறவுச் சங்கங்களுடன் எவ்விதத் தொடர்பும் இல்லாமலே இயங்கி வந்தது. மெள்ள மெள்ளக் கூட்டுறவுத் துறையிலும் இச்சங்கம் ஈடுபடத் தொடங் கியது. விவசாயிகளும், விவசாயச் சங்கங்களுமே தொடக்கத்தில் இப்பொது விவசாயச் சங்கத்தின் உறுப்பினர்களாக விளங் கினர். பின்னர், உறுப்பினர்கள் யாவரும் ஒருமித்த மனத்துடன் பொருளாதாரப் பிரச்சினைகளைக் களைவதிலும், உற்பத்திப் பண்டங்களைச் சரியான முறையில் விற்பனை செய்வதிலும், சங்கத்தின் நிதி நிலையை உயர்த்துவதிலும் முழு மூச்சுடன் ஈடு படலாயினர். கூட்டுறவுச் சங்கங்களிடையே நிலவும் போட்டி மனப்பான்மை கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு உகந்ததன்று என்பதை நன்கு புரிந்து கொண்ட இச்சங்க உறுப்பினர்கள் இப்போட்டியைத் தவிர்ப்பதில் தங்கள் கவனத்தைச் செலுத்த லாயினர். சிதறுண்டு கிடக்கும் சிறு சிறு கூட்டுறவுச் சங்கங்களை ஒன்று சேர்த்து, பெரியதொரு கூட்டுறவுச் சங்கத்தை அமைப்ப தற்குத் திட்டங்கள் தீட்டினர். இவர்களது திட்டத்திற்கு வழி காட்டியாகத் திகழ்ந்ததே, "துய்ப்போர் மத்தியக் கூட்டுறவு அமைப்பு" ஆகும். (K.F.) உலக நாடுகளில் சுவீடனின்

நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் சிறப்புற விளங்குவதற்கு இக் கூட்டுறவு அமைப்பே காரணமாகும் என்பதை நன்கு புரிந்து கொண்ட இம்மத்திய விவசாயச் சங்கம் அது போன்ற மத்தியக் கூட்டுறவு அமைப்பை விவசாயத் துறையிலும் உருவாக்க முயற்சிகள் எடுக்கலாயிற்று. அதன் பயனாகச் சிதறிக் கிடந்த 'விவசாய உற்பத்தியாளர் சங்கங்கள்' (Agricultural Producers' Societies) ஒரு குடையின் கீழ் ஒன்று சேர்க்கப்பட்டு 'தேசியக் கழகங்களாக' (National Associations) மாற்றியமைக்கப்பட்டன. இக்கூட்டிணைப்புகளே (Federations) சுவீடனின் விவசாய வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக விளங்கலாயின. இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட ஐக்கிய அமைப்புகள் மூலமாக சுவீடனின் 'பொது விவசாயச் சங்கம்'' தொடர்ந்து தொண்டாற்றத் தலைப்பட்டது. இனி, இக்கூட்டிணைப்புகளைப் பற்றி ஆராய்வோம்.

சுவீடனில் 13 வகைக் கூட்டுறவு விவசாயச் சங்கங்கள் தொண்டாற்றி வருகின்றன. அவையாவன—

1. சுவீடனின் பாற் பண்ணைகள் சங்கம் (Swedish Dairies Association)

2. சுவீடன் விவசாயிகளின் இறைச்சி விற்பனையேற்பாட்டுச் சங்கம் (Swedish Farmers' Meat Marketing Association)

3. சுவீடன் விவசாயிகளின் கொள்முதல், விற்பனைச் சங்கங்கள் (Swedish Farmers' selling and purchasing Association)

4. சுவீடன் முட்டை, கோழி இறைச்சி விற்பனை யேற்பாட்டுச் சங்கம் (Swedis' Eggs and Poultry Marketing Association)

5. சுவீடன் வன உரிமையாளர்கள் சங்கம் (Swedish Forest Owners Association)

6, கிராமக் கடன் வழங்கும் சங்கங்களின் ஐக்கிய அமைப்பு (Association of Rural Credit Societies)

7. சுவீடன் பொது அடைமான வங்கி (General Mortgage Bank of Sweden)

8. சுவீடன் எண்ணெய் விதை பயிரிடுவோர் சங்கம் Swedish Oil Seeds Growers' Assooiation)

9. சுவீடனின் காய்ச்சி வடிக்கும் தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்கம் (Swedish Distillers Association)

10. உரோம உற்பத்தியாளர் சங்கம் (Swedish Fur Breeders Association)

11. மாவுப் பண்டங்கள் உற்பத்தியாளர் சங்கம் (Swedish Starch Producers' Association)

12. சணல் உற்பத்தியாளர் சங்கம் (Swedish Flax and Hemp Growers' Association)

13. கால்நடை வளர்ப்புச் சங்கம் (Association for Swedish Live-stock Breeding and Production)

மேற் கூறியுள்ள 13 விவசாயச் சங்கங்களும், 'சுவீடனின் குடியானவர் சங்கங்களின் கூட்டிணைப்பின்', (Federation of Swedish Farmers' Associations) கீழ் இயங்கி வருகின்றன. ஐக்கிய அமைப்புகள் மாவட்டச் சங்கங்களையும், மாவட்டச் சங்கங்கள் உள்ளூர்ச் சங்கங்களையும் உறுப்பினர்களாகப் பெற்றுள்ளன. 1930-ஆம் ஆண்டில் ஏற்பட்ட வியாபார மந்தமும், தேக்க நிலையும் இக்கூட்டுறவு அமைப்புகளைப் பாதிப்பினும், இக்கூட்டுறவுக் கூட்டமைப்புகள் சலியா உழைப்பினால் தப்பிப் பிழைத்து, தழைத்தோங்கி வளர்ந்தன. கடன் வழங்குத் துறை, இறைச்சி விற்பனை, பால் பண்டங்கள் உற்பத்தி, முதலானவை ஒரு சேர இங்கு வளரலாயின. இனி அவற்றுள் சிலவற்றைக் காண்போம் :

1. பாற் பண்ணைகள் (Dairies) :

சுவீடனில், சுமார் 235,000 குடியானவர்கள் பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். அரசு ஆதரவுடன் இவர்கள் 233 பால் வழங்கும் சங்கங்களையும், 396 பாற் பண்ணைகளையும் தோற்றுவித்துள்ளனர். இக்கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்று சேர்ந்து 16 பிரதேசக் கூட்டிணைப்புகளை உருவாக்கி உள்ளன. இக்கூட்டிணைப்புகள் (Regional Federations) சுவீடனின் பாற் பண்ணைச் சங்கங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. சுவீடனின் பொருளாதார வளர்ச்சியில் இக்கூட்டுறவுப் பாற் பண்ணைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. இந்நாட்டின் பெரிய தொழிலே பாற் பண்ணைகளாகும். விநியோகமாகும் மொத்தப் பாலில் 98 சதவிகிதம் கூட்டுறவுப் பாற் பண்ணைகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றது

என்ருல் இவ்வியக்கத்தின் வலிவை நாம் எளிதில் உணரலாம். இக்கூட்டுறவுச் சங்கங்கள் குடியானவர்களிடமிருந்து பாலை நேரடியாகச் சேகரித்து அதைக் கவனமாகப் பக்குவப் படுத்து கின்றன. பாலைச் சேகரிப்பதற்கென்று சுமார் 4090 மோட்டார் வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. நாடு முழுவதுமுள்ள எல்லாக் குடியானவர்களிடமிருந்தும் பால் சேகரிக்கப் படுகின்றது. இவ்வாறு சேகரிக்கப்படும் பாலில் சுமார் 25 சதவிகிதம் நன்கு தரம் உயர்த்தப்பட்டு மக்கள் நுகர்வுக்காக விநியோகம் செய்யப்படுகின்றது. சுமார் 25 சதவிகிதம் வெண்ணெய் தயாரிப்பிற்கும், சுமார் 10 சதவிகிதம் பாலேடு (Cream) தயாரிப்பதற்கும், எஞ்சியுள்ள பால் 'பாலாடைக் கட்டி' (Cheese), பால் பவுடர் தயாரிப்பதற்கும், பயன்படுகின்றது. உற்பத்தியாகும் மொத்தப் பாலில் 98 சதவிகிதம் இக்கூட்டுறவுச் சங்கங்களுக்கே வழங்கப்படுகின்றது. பல அண்டை நாடுகளுக்கும் பால் பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எனவே, இக்கூட்டுறவுப் பாற் பண்ணைகள் அந்நிய செலாவணி ஈட்டுவதற்கும் உறு துணையாக விளங்குகின்றன.

2. கூட்டுறவு இறைச்சி விற்பனையேற்பாடு (Co-operative Meat Marketing):

இறைச்சி விற்பனையும் இந்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த வல்லதாகவே உள்ளது. இவ்விற்பனை மூலம் குடியானவர்கள் நல்ல வருமானத்தைப் பெற்று வளமாக வாழ்கின்றனர். இவர்களது மொத்த வருமானத்தில் சுமார் 25% இறைச்சி விற்பனை மூலம் பெறப்படுகின்றது. கால்நடைகளின் விற்பனையும், பன்றி இறைச்சி விற்பனையும் இவர்களது முக்கிய வியாபாரமாக உள்ளது. சுமார் 223,000 குடியானவர்கள் ஒன்றுகூடி 21 இறைச்சி விற்பனை யேற்பாடடுச் சங்கங்களை உருவாக்கியுள்ளனர். இச்சங்கங்கள் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய 'இறைச்சி விற்பனையேற்பாட்டுச் சங்கத்தை' (Meat Marketing Association) உருவாக்கியுள்ளன. கால்நடைகளின் இறைச்சியை மொத்த விற்பனை செய்வதே இச்சங்கங்களின் முக்கியப் பணியாகும். 1933-ஆம் ஆண்டு, இறைச்சி உற்பத்தி செய்வதற்கென்றே அரசு உதவியுடன் ஒரு தேசிய அமைப்பு (National Slaughter House) உருவாக்கப்பட்டது. பக்குவப்படுத்தப்பட்ட இறைச்சியை விற்பனைக் கேற்றவாறு தனித் தனியாக கட்டி வைப்பதற்காக பல கூட்டுறவுச் சங்கங்கள் (Packing Societies) அமைக்கப்பட்டன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் மொத்த இறைச்சியில் 80 சதவிகிதத்தை கையாளுகின்றன. இவ்விறைச்சியின் மொத்த மதிப்பு சுமார்

1031 குரோனர்களாகும். இக்கூட்டுறவுக் கூட்டிணைப்புகள் இறைச்சியின் தேவைக்கேற்ப அங்காடிகளில் பணி புரிகின்றன. தேவை (Demand) குறைந்த இடங்களில் விற்பனையைக் குறைத்தும், கேட்பு அதிகமாக இருக்குமிடங்களில் தேவையான அளவு விநியோகம் செய்வதும் இறைச்சியின் அங்காடி விலையை ஓரே சீராக வைத்துக் கொள்கின்றன இக்கூட்டுறவுச் சங்கங்கள். குறிப்பாகப் பன்றி இறைச்சிக்கு நல்ல சந்தை உள்ளது. சமீப காலமாகத் தயாராகும் பலவகை இறைச்சிகள் அயல் நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இறைச்சிகளின் தரத்திற்கேற்ப விலைகள் குறிக்கப் படுகின்றன. சங்கங்களுக்கென முறையான விதி முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இத்துறையின் வளர்ச்சிக்கெனத் தனியார் அமைப்புகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு ஆராய்ச்சிகள் பலவற்றைச் செய்து வருகின்றன இக்கூட்டுறவுச் சங்கங்கள்.

3. **முட்டை விற்பனைச் சங்கங்கள்** (Egg Societies) :

தற்போது 18 முட்டை விற்பனைச் சங்கங்கள் சுவீடனில் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 53,000 எனக் கணக்கிடப் பட்டுள்ளது. மொத்த முட்டை விற்பனையில் 65 சதவிகிதம் இக்கூட்டுறவுச் சங்கங்களால் விற்பனை செய்யப்படுகின்றது. 1932-ஆம் ஆண்டு 'முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் (Swedish Egg Producers' Association) அமைக்கப்பட்டது. இத்தலைமைச் சங்கத்தின் கீழ் 'முட்டை சேகரிக்கும் சங்கங்கள்' (Egg Collecting Societies), முட்டைகளின் தரம்படி அவைகளை பிரிப்பதற்கென்று இயங்கி வந்த சங்கங்கள் (Egg sorting and grading Societies), இயங்கி வந்தன. தரம் பிரிக்கப்பட்ட முட்டைகளின் மேல் சங்கத்தின் முத்திரையும் இடப்படுகிறது. இக்கூட்டுறவு அமைப்பு ஒரு பெரிய 'முட்டை உலர்த்தும் தொழிற்சாலை'யையும் (Egg Drying Factory) பெற்றுள்ளது. தொடர்ந்து முட்டைகளை சேகரித்து, விற்பனை செய்து மக்களுக்குத் தொண்டாற்றும் நோக்கோடு இக்கூட்டுறவு அமைப்புகள் பல கோழிப் பண்ணைகளையும் நடத்தி வருகின்றன. தேவைக்கு அதிகமான முட்டைகள் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் அந்நியச் செலாவணியும் கணிசமாக ஈட்டப்படுகின்றது.

4. **கூட்டுறவுக் கொள்முதல், விற்பனைச் சங்கங்கள்** (Co-operative Sale and Purchase Societies) :

இன்றைய கணக்குப்படி, சுவீடனில் 21 'கொள்முதல் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள்' பணியாற்றி வருகின்றன.

இவைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை சுமார் 145,000 ஆகும். இச்சங்கங்கள் ஒன்றுகூடி ஓர் ஐக்கிய அமைப்பை (S. L. R.) உருவாக்கி உள்ளன. இக்கூட்டமைப்பின் முக்கியப் பணி உற்பத்திப் பொருளுக்கு விற்பனையேற்பாடு செய்தலும், விவசாயத்திற்குத் தேவையான பொருள்களை கொள்முதல் செய்து விநியோகிப்பதுமேயாகும். பல்வகைத் தானியங்கள், தரமான விதைகள், உருளைக்கிழங்கு, கால்நடைத் தீவனம் போன்ற பல தேவைக்குகந்த பண்டங்கள் இச்சங்கங்களால் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. மீதமுள்ள பண்டங்கள் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்யப்படுகின்றன. ஏற்றுமதியாகும் மொத்தத் தானியத்தில் 90 சதவிகிதம் இச்சங்கங்கள் மூலமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இச்சங்கங்களுக்கு உரிமையான பல கிடங்குகளும் உள்ளதால், சேகரிக்கப்படும் தானிய வகைகள் நல்ல முறையில் பாதுகாக்கப் படுகின்றன. பல நவீன வசதிகளைக் கொண்டு விளங்குகின்றன இக்கூட்டுறவுக் கிடங்குகள். சிறந்த உரங்கள், எரிபொருள், எண்ணெய் வகைகள், இரசாயனப் பொருள்கள், கட்டிடக் கலைக்குத் தேவையான முக்கியப் பொருள்கள் முதலானவற்றையும் இக்கூட்டிணைப்புகள் விற்பனை செய்து வருகின்றன. தேவைப் படும் மொத்தக் கோதுமை மாவில் (Wheat Flour) 35 சதவிகிதம் இக்கூட்டுறவு அமைப்பு மூலமாகவே விற்பனை செய்யப்படுகின்றது. ஆடுமாடுகள், கோழிகள், குதிரைகள், பன்றி முதலான பிராணிகட்குத் தேவையான, தகுதியான தீவனங்களை உற்பத்தி செய்யும் பல தொழிற்சாலைகளையும் இந்த அமைப்புகள் பெற்றிருக்கின்றன. விவசாயத்திற்குத் தேவையான கருவிகளை உற்பத்தி செய்வதற்கென்று சொந்தமான இயந்திரத் தொழிற்சாலையையும் இக்கூட்டுறவு அமைப்பு பெற்றுள்ளது. ஆண்டுதோறும் சுமார் 1655 குரோனர் மதிப்புள்ள பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இவ்வாறாக, இக்கூட்டுறவு ஐக்கிய அமைப்புகள் பல வகையிலும் குடியானவர்கட்கு உறுதுணையாக விளங்குகின்றன.

5. **வன உரிமையாளர் சங்கம்** (Swedish Forest Owners Assn.) :

மொத்த நிலப்பரப்பில் 56 சதவிகிதம் வனங்களின் வளர்ச்சிக்காகவும், பராமரிப்பிற்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. ஆண்டுதோறும் தச்சு வேலைக்கும், வீடு கட்டவும் பயன்படும் மரங்கள் ஏராளமான அளவில் (50 Million Cubic Meters of Timber) வெட்டப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. பெரும் பாலான காடுகள் தனிப்பட்ட குடியானவர்களது உடைமையாக இருப்பதால் இயற்கையாக எழும் இடர்ப்பாடுகள் எழத்

தொடங்கின. காடுகளைச் சிறப்பாக நிருவகிக்கவும் இயலாமல், வெட்டப்படும் பல்வகை மரங்களுக்கு முறையான விற்பனையேற்பாடு செய்யவும் திறனின்றி பேரிழப்புக்கு ஆளாகித் தவித்தனர். மேலும் மரங்களைத் தேவை அதிகமாக இருக்கும் விற்பனைச் சந்தைகளுக்குக் கொண்டு செல்வதிலும் தொல்லைகள் பல இருந்தன. போக்குவரத்துச் செலவும் அதிகமாக இருந்ததால் குடியானவர்கள் செய்வதறியாது திகைத்தனர்.

6·5 மிலியன் 'எக்டேர்' (Hectare)* பரப்பளவுள்ள வன நிலங்களைப் பெற்றிருந்த 130,000 வன உரிமையாளர்கள் தங்களின் நன்மைக்காக 23 'வன உரிமையாளர் சங்கங்களை' (Forest Owners Associations) அமைத்தனர். அவர்கள் வழங்கும் மூலதனம் அவர்களது வனங்களின் அளவைக் கொண்டு கணக்கிடப்பட்டுச் சங்கங்களால் பெறப்பட்டது. பெரும்பாலும் இத்தொகை மரவிற்பனைத் தொகையிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. இச்சங்கங்களின் முக்கியப் பணிகள் பல இருப்பினும், அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

முதலாவதாக, உறுப்பினர்களின் மரங்களுக்கு இலாபம் தரத்தக்க வகையில் விற்பனையேற்பாடு செய்வதற்கு இச்சங்கங்கள் பேருதவி புரிகின்றன. 'கேட்பு' அதிகமாகவுள்ள அங்காடிகளைத் தேர்ந்தெடுத்து, தரமான மரங்களை அங்கு நல்ல, நியாயமான விலைக்கு விற்பனை செய்கின்றன இக்கூட்டுறவுச் சங்கங்கள்.

இரண்டாவதாக, வனங்கள் மூலம் கிடைக்கும் இரப்பர், தேன் முதலான விலையுயர்ந்த பொருள்களை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து உறுப்பினர்களுக்கும், நாட்டிற்கும் ஒருசேரத் தொண்டாற்றி வருகின்றன இக்கூட்டுறவுச் சங்கங்கள். இதன் மூலம், கணிசமான அந்நியச் செலாவணி இந்நாட்டிற்குக் கிடைக்கின்றது.

கடைசியாக, அங்காடிகளில் ஏற்படும் மாற்றங்களை நன்கு கண்காணித்து உறுப்பினர்களுக்கு அவ்வப்போது வணிக ரீதியில் அறிவுரைகள் வழங்கி வருகின்றன இக்கூட்டுறவு அமைப்புகள். எவ்வகை மரங்களுக்குத் தேவை அதிகமாக உள்ளது, தேவைப்படும் மரங்களின் தன்மைகள், தரம் போன்ற முக்கியச் செய்தி விபரங்கள் தவறாமல் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படுவதால் சந்தை நிலைக்கேற்ப உறுப்பினர்கள் செயல்பட இயலு

* குறிப்பு: 1 எக்டேர் = 10,000 சதுரமீட்டர் அல்லது 100 ஏக்கர்

கின்றது. இக்கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்கட்கு உதவும் பொருட்டு, பல மரம் அறுக்கும் தொழிற்சாலைகளையும் (Saw Mills) பெற்றுள்ளன. மரச்சாமான்கள் தயாரிக்கும் பல தொழிற்சாலைகளையும் நடத்தி வருகின்றன இக்கூட்டுறவுச் சங்கங்கள்.

இக்கூட்டுறவு அமைப்புகள் ஒன்றுசேர்ந்து ஒரு தேசிய அமைப்பை (Federation of Swedish Forest Owners Associations—S. S. R.) உருவாக்கி உள்ளன. விற்பனைத் துறையிலும், ஏற்றுமதித் துறையிலும் இத்தேசிய அமைப்பு ஏனைய கூட்டுறவு சங்கங்களுக்கு உறுதுணையாக உள்ளது. இவ்வமைப்பு கூட்டுறவுக் கொள்கைகளைப் பரப்பும் வகையில் "கூட்டுறவு (விவசாயப்) பண்ணை பத்திரிகை" (Co-operative Farm Journal) என்ற வார இதழையும் வெளியிடுகிறது. வாரந்தோறும் 2,50,000 பிரதிகள் விற்பனையாகின்றது என்றால் மக்களின் ஆர்வத்தை நாம் எளிதில் அறிந்துகொள்ள முடிகின்றதல்லவா? இதுவன்றி, "வன உரிமையாளர்கள்" (Forest Owners) என்ற மாதப் பத்திரிகையும் உறுப்பினர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளும் நோக்கோடு இத்தேசியக் கூட்டுறவு அமைப்பால் வெளியிடப்படுகின்றது. மேலும், இக்கூட்டுறவுச் சங்கங்கள் 7 அளவில் பெரிய காகிதத் தொழிற்சாலைகளையும் நடத்தி வருவதால் சுவீடனின் காகித உற்பத்தியும் கணிசமாக உயர்ந்துள்ளதில் வியப்பேதுமில்லை.

6. **கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள்** (Co-operative Credit Associations) :

பொதுவாகக் கடன் வாங்குபவர்களே விவசாயிகளெனக் கருதப்படுவதை நாம் நன்கறிவோம். பெரும்பாலும், கடன் வழங்குபவர்களையே பெரிதும் நம்பி வாழவேண்டியுள்ளது இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர் நிலை. இதற்கு சுவீடனும் விதிவிலக்கல்ல. தொடக்கத்தில், விவசாயத்தில் ஈடுபட்டிருந்தோரின் இன்னல்களைக் களையும்பொருட்டே கூட்டுறவு அமைப்புகள் இந்நாட்டில் தோற்றுவிக்கப்பட்டன. எனவே, இந்நாட்டில் கூட்டுறவு இயக்கம் தோன்றுவதற்கே விவசாயமே காரணமாக அமைந்திருந்தது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

விவசாயிகளின் நிதிநிலையைச் சீர்ப்படுத்துவதற்கென்று சுவீடனில் பல கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள் அமைக்கப்பட்டன. ஜெர்மானிய நாட்டு 'ரைபீசன்' சங்கங்களை (Raiffeisen) வழிகாட்டியாகக் கொண்டு இங்கு கடன் வழங்கும் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. விவசாயிகளுக்குத் தேவையான குறுகிய கால (Short Term), மத்தியகாலக் (Medium Term) கடன்

வசதிகள் இக்கூட்டுறவுச் சங்கங்களால் செய்து தரப்படுகின்றன நீண்டகாலக் (Long Term) கடன் வசதிகளை நில அடைமான வங்கிகள் (Land Mortgage Banks) கவனித்துக்கொள்கின்றன ஆனால் தற்போது, நீண்டகாலக் கடன் வசதிகளும் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்களால் குடியானவர்களுக்குச் செய்து தரப் படுகின்றன.

1,73,000 குடியானவர்கள் ஒன்று சேர்ந்து தங்களுக்குத் தேவையான குறுகியகால, மத்திய காலக் கடன் வசதிகளைப் பெறுவதற்காக 572 'கிராமக் கடன் வழங்கும் சங்கங்களைக்' (Rnral Credit Societies) கூட்டுறவு அடிப்படையில் அமைத்துள்ளனர். இச்சங்கங்கள் 12 'மத்தியக் கடன் வழங்கும் சங்கங்களுடன்' (Central Credit Societies) இணைக்கப்பட்டுள்ளன. எல்லாச் சங்கங்களுக்கும் தலைமையாக ஓர் ஐக்கிய அமைப்பு தேசிய அளவில் அமைக்கப்பட்டுள்ளதால் சீரான நிருவாகம் ஏற்பட்டுள்ளது.

நீண்டகாலக் கடன் வசதிகளுக்காக, 10 நில அடைமான வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கூட்டுறவு அமைப்புகள் யாவும் 'பொது அடைமான வங்கியின்' (General Mortgage Bank of Sweden) கீழ்ப் பணியாற்றி வருகின்றன. இச்சங்கங்கள் வழங்கியுள்ள மொத்தக் கடன் மதிப்பு 2 பிலியன் குரோனர்களுக்கும் அதிகமாக உள்ளது. சுவீடன் அரசும் இக்கூட்டுறவுச் சங்கங்களுக்கும், வங்கிகளுக்கும் தேவையான அளவு நிதிஉதவி செய்து வருகின்றது. மொத்த நிர்வாகச் செலவில் கணிசமான ஒரு பகுதியை அரசு ஏற்றுக்கொள்வதால் இக்கூட்டுறவு அமைப்புகளின் பளு பெருமளவில் குறைகிறது.

1930-ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான், கூட்டுறவுக் கடன் வழங்கும் இயக்கம் சுவீடனில் பெருமளவில் வளரத் தொடங்கியது. இவ்வாண்டில்தான் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்களின் ஐக்கிய அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்தக் கூட்டுறவு ஐக்கிய அமைப்பு தேசிய அளவில் செயல்படுகின்றது. அரசு உத்தரவாதத்துடன் பத்திரங்களை சந்தையில் வெளியிட்டு நிதி சேகரிக்கின்றது இக்கூட்டுறவு அமைப்பு. சேகரிக்கப்பட்ட நிதி விவசாயிகளுக்குக் கடன் தொகையாக நிலத்தின்பேரில் வழங்கப்படுகின்றது. சுமார் 50,000 விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடன் தொகையைப் பெற்றிருக்கின்றனர். 1964-ஆம் ஆண்டுக் கணக்குப்படி வரவேண்டிய கடன்களின் (Outstanding Loans) மொத்த மதிப்பு 1500 மிலியன் குரோனர்களாகும். தற்போது, கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள்

வெளி நிறுவனங்களிடமிருந்து பெறும் நிதி உதவியைப் பெரிதும் குறைத்துக் கொண்டுள்ளன.

இக்கூட்டுறவுச் சங்கங்களும், வங்கிகளுமே சுவீடனின் விவசாயத் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தின என்ருல் அது மிகையாகாது. விவசாயிகள் பெற்ற உதவிகளும் கணக்கிலடங்கா.

இவையன்றி, வேறுபல கூட்டுறவுச் சங்கங்களும் பல்வேறு துறையில் சுவீடனில் தோற்றுவிக்கப்பட்டன. குறிப்பாக, 1934-ஆம் ஆண்டு 'தேசிய பழ உற்பத்தியாளர்கள் சங்கம்' (National Association of Fruit Growers) அமைக்கப்பட்டது. பல கிராமக் கனி விற்பனைச் சங்கங்களும் உருவாக்கப்பட்டன. இதுவன்றி, எண்ணெய் விதை பயிரிடுவோர் சங்கம், காய்ச்சி வடிக்கும் தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்கம், உரோம உற்பத்தியாளர் சங்கம், சணல் உற்பத்தியாளர் சங்கம் போன்றவைகளும் சுவீடனின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக விளங்கின.

தேசியக் குடியானவர்கள் சங்கம்
(National Union of Swedish Farmers)

1890-ஆம் ஆண்டுக்கு முன்னரே குடியானவர்கட்குத் தேவையான உரங்கள், விதைகள், விவசாயக் கருவிகள் முதலானவற்றை விநியோகம் செய்வதற்காகப் பல விவசாயச் சங்கங்கள் கூட்டுறவு அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டன. இச்சங்கங்கள் யாவும் ஒன்றுகூடி 1905-ஆம் ஆண்டில் ஒரு தேசிய அமைப்பை விவசாயிகளின் நன்மைக்காக அமைத்தன. அதுமுதல் விவசாயிகளின் பிரச்சினைகள், குறைகள் பெருமளவில் குறையத் தொடங்கின. 1939-ஆம் ஆண்டில் இக்கூட்டுறவு அமைப்பு மொத்த வணிகத்தில் 35 சதவிகிதத்தைக் கைப்பற்றியது. விவசாயத்திற்குக் கால்நடைகள் பெரிதும் தேவையாதலால், பல கால்நடைச் சங்கங்களும், கால்நடைத் தீவன உற்பத்திச் சங்கங்களும் உருவாக்கப்பட்டன. இத்தேசிய சங்கம் தானியங்களின் விற்பனையேற்பாட்டைச் சிறந்த முறையில் கவனித்துக்கொண்டது. மேலும் இறைச்சி உற்பத்தியும் நன்கு ஊக்குவிக்கப்பட்டு ஏற்றுமதியும் செய்யப்பட்டது. சுவீடன் விவசாயிகளும் நலம் பல பெறத் தொடங்கினர்,

III. கூட்டுறவு மனை இயக்கம் (Co-operative Housing Movement)

ஒரு நாட்டின் முன்னேற்றம், மக்களின் வாழ்க்கைத்தரம் முதலியவை மக்களது உணவு, உடை, வீடு என்ற மூன்றைக் கொண்டே கணக்கிடப்படுகின்றது என்பதை நாம் நன்கறிவோம். முதல் இரு துறைகளிலும் பெரு வெற்றி ஈட்டிய சுவீடனின் கூட்டுறவு இயக்கம் மூன்றுவது தேவையைப் பெருக்குவதில் ஈடுபட்டது என்பதில் விந்தையேதுமில்லை.

மனை வழங்கும் சங்கங்கள் முதன் முதலில் 1917-ஆம் ஆண்டு 'ஸ்டாக்ஹோமிலும்' (Stockholm), கோத்தன்பர்க்'கிலும் (Gothenburg) அமைக்கப்பட்டன. ஆனால், இச்சங்கங்கள் கூட்டுறவு முறையில் அமைந்தவை அல்ல. இச்சங்கங்களே மனைகளைக் கட்டி முடித்துத் தங்கள் உறுப்பினர்களுக்கு விற்பனை செய்து வந்தன. இம்முறையில் 'ஊகவாணிகம்' ஏற்படுவதற்குவாய்ப்புகள் இருந்தமையால் இச்சங்கங்கள் தொடர்ந்து செயல்பட இயலாமற் போயிற்று. ஆனால் இச்சங்கங்களே பின்னர் அமைந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னேடியாகத் திகழ்ந்தன. இதன் பின்னர்தான், 'கூட்டுறவுக் குடியிருப்போர் சங்கங்கள்' (Tenants' Co-operative Societies) தோன்றின. இச்சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களுக்காகவே வீடுகள் கட்டி அவர்களுக்கு வழங்கின. வீட்டின் முழு உரிமையும் சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு வழங்கப்பட்டது. 1922-ஆம் ஆண்டு 'தேசியக் குடியிருப்போர் சங்கம்' (Tenants' National Union) அமைக்கப்பட்டது. இச்சங்கத்தின் முக்கியக் குறிக்கோள் 'நிலமேலாளர்'களிடமிருந்து (Land Lord) குடியிருப்போரைப் பாதுகாத்தலேயாகும். ஆனால் இந்நிலை நீண்டநாள் நீடிக்கவில்லை. குடியிருப்போர் தங்களுக்கென்று சொந்தமான இல்லங்கள் கட்டிக்கொள்ளும்வரை இப்பிரச்சினை அகலாது என்பதை நன்கு புரிந்துகொண்ட இத்தேசியச் சங்கம் அவர்கட்கு மனைகள் வழங்கு முறையைத் தீவிரமாகச் சிந்திக்கலாயிற்று. இதன் விளைவாக 1923-ஆம் ஆண்டு ஒரு புதிய மனை வழங்கு அமைப்பு 'குடியிருப்போர் சேமிப்பு மனை கட்டும் சங்கம்' (Tenants' Saving and Building Society) என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்டது. நாளடைவில் சுவீடனின் எல்லா நகரங்களிலும் இச்சங்கங்கள் தோன்றலாயின. 1924–ஆம் ஆண்டு இச்சங்கங்கள் ஒன்று சேர்ந்து ஒரு மத்திய சங்கத்தை உருவாக்கின. இம்மத்திய சங்கம் பல பிரிவுகளைக் கொண்டு விளங்கியது. இச்சங்கம் மாநில அரசு அதிகாரிகளுடனும், நகராட்சி அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு மனைகள் கட்டுதற்குத்

தேவையான காலி நிலங்களைப் பெற்றது. குடியிருப்போர்களுக்கிடையே சேமிப்புப் பழக்கத்தை நன்கு பரப்பியது இம்மத்திய சங்கமே.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், சுவீடன் வீட்டு வசதி வாரியத்தின் கடமைகள் அதிகரித்தன. தற்போது சுமார் 30 சதவிகித கட்டடங்கள் இவ்வாரியத்தின் மூலம் கட்டப்படுகின்றன. குடியிருப்போர் நலன் கருதி ஒரு சேமிப்பு வங்கியும் நடத்தப்படுகின்றது. இதன்மூலம், மத்தியச் சங்கத்துடன் இணைந்துள்ள எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் தேவையான நிதிவசதியைத் தேவையானபொழுது பெற்றுக்கொள்ள இயலுகின்றது. சங்கங்களின் உறுப்பினர்களும் இச்சங்கங்கள் மூலம் தரமான வீடுகளைப் பெற்றுத் தங்களது தலையாய தேவையைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர். சுவீடன் அரசாங்கமும் இவ்வியக்கத்துக்குப் பேருதவி செய்து வருகின்றது. குறிப்பாக, நிதி உதவி அரசாங்கத்தால் செய்யப்படுகின்றது.

சுவீடன் கூட்டிணைப்பு (Swedish Federation)

சுவீடனின் இக்கூட்டிணைப்புகள் தனித்தன்மை வாய்ந்தவையாகும். விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்கு அமைக்கப்பட்ட எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் ஒன்றுக இணைந்து "சுவீடன் விவசாயிகளின் கூட்டிணைப்பு" என்ற ஓர் ஐக்கிய அமைப்பை உருவாக்கியுள்ளன. இக்கூட்டிணைப்பின் முக்கியக் குறிக்கோள்களாவன :

1. விவசாயிகளின் நலனைப் பராமரித்தல் ;
2. விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் நிருவாகத்தைச் சீர்ப்படுத்திச் செம்மைப் படுத்துவது ;
3. நிரந்தரக் கூட்டுறவை விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே தோற்றுவித்துக் காத்தல் ;
4. உறுப்பினர்களின் நலன் கருதி இலாபகரமான, நியாயமான வாணிபத்தை மேற்கொள்ளல்.

இக்கூட்டிணைப்பு மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்கள் யாவையும் முறையாகச் செயல்படுத்தப் பெரிதும் உதவிற்று. சுவீடனின் இக்கூட்டிணைப்பு சட்ட நுணுக்கங்கள் நன்கு அறிந்த நிபுணர்களைக் கொண்டு ஒரு சட்டப் பிரிவையும்

நடத்தி வருகின்றது. ஆலோசனைகள் வழங்குவதிலும், கூட்டுறவுச் சங்கங்களின் வழக்குகளை வெற்றிகரமாக நடத்துவதிலும் இச் சட்டப் பிரிவு மிகவும் உறுதுணையாக உள்ளது.

இக்கூட்டிணைப்பின் 'வரி விதிப்புப் பகுதி' (Taxation Department) அவ்வப்போது இணைந்துள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆலோசனை வழங்கி வருவதால் வரிவிதிப்புப் பிரச்சினைகள் பெருமளவில் தீர்க்கப்படுகின்றன.

பொருள்களின் 'விற்பனையேற்பாடுப் பகுதி' அவ்வப்போது சந்தை நிலை பற்றியும், ஏற்பட்டு வரும் மாற்றங்கள் பற்றியும் புள்ளி விபரங்களுடன் செய்திகளை வெளியிடுவதால் கூட்டுறவுச் சங்கங்கள் மாற்றங்களுக்கேற்பச் செயல்பட முடிகின்றது.

இக்கூட்டிணைப்பின் 'கொள்முதல் பகுதி' இணைந்துள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்யும் பொருட்டுத் தரமான தொழில் இயந்திரங்களையும், மேசை, நாற்காலி போன்ற தட்டுமுட்டுப் பொருள்களையும் கொள்முதல் செய்து நியாய விலைக்கு விற்பனை செய்கின்றன.

இக்கூட்டிணைப்பு சிறந்த 'கணக்கு வைப்பு முறையை'யும் கடைப்பிடித்து வருகின்றது. இதற்கென்று தனியாக ஓர் அலுவலகமே (Bureau) இயங்கி வருகின்றது. வரிவிதிப்பு அலுவலகத்திற்குத் தேவையான எல்லா அறிக்கைகளும் இந்த அலுவலகமே தயாரிக்கின்றது. இக்கணக்குப் பகுதி 41 தனியான அலுவலகங்களைப் பெற்றுள்ளது என்றால் இப்பகுதியின் அளவை நாம் எளிதில் அறிந்துகொள்ள முடிகின்றதல்லவா?

சுவிடனின் இக்கூட்டிணைப்பு மக்களுக்குக் கூட்டுறவுக் கல்வியையும், பயிற்சி முறைகளையும் போதிப்பதில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. விவசாயிகளுக்கென்று கூட்டுறவுப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. பொருளாதாரம், வனங்களின் வளர்ச்சி, விவசாய முன்னேற்றம் போன்ற முக்கியமான பாடப் பிரிவுகள் நடத்தப்படுகின்றன. தபால் மூலமாகவும் கூட்டுறவுக் கொள்கைகள் போதிக்கப் படுகின்றன விவசாயிகளைக் கொண்டு பல சிறந்த கருத்தரங்குகளும் நடத்தப்படுகின்றன. 1946-ஆம் ஆண்டு, சுவீடனின் இக்கூட்டமைப்பு கணக்கு வைப்பிற்கென்றும், தணிக்கை செய்யும் பொருட்டும் தனியாக ஓர் அலுவலகத்தைத் (The Auditing and Accounting Bureau Ltd.) தோற்றுவித்தது.

1941-ஆம் ஆண்டு ஓர் அலுவலகத்தை இயந்திர நிபுணர்களையும், கட்டட நிபுணர்களையும் கொண்டு தொடங்கியது. இக் கூட்டுறவு ஐக்கிய அமைப்பு. இதனுடன் இணைந்திருக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவ்வப்போது தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகின்றது இவ்வலுவலகம்.

இதுவன்றி, 'விவசாயப் பொருளாதார ஆராய்ச்சி மன்றம்' ஒன்றையும் இக்கூட்டமைப்பு தொடங்கியுள்ளது. இம்மன்றம் (Agricultural Economics Research Institute) விவசாயப் பிரச்சினைகளையும். வன வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் பல்வேறு இடர்ப்பாடுகளையும் நன்கு ஆராய்ந்து, அவற்றைக் களைவதற்கு ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றது.

இவ்வாறாக, சுவீடனின் கூட்டுறவு இயக்கம் பல துறைகளிலும் பெரு வெற்றியை ஈட்டி, இன்று வலிமையான இயக்கமாகத் திகழ்கின்றது. இந்நாட்டின் கூட்டுறவு இயக்கத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். அவையாவன :

1. துய்ப்போர் கூட்டுறவு இயக்கம் (Consumers' Co-operative Movement)

2. விவசாயக் கூட்டுறவு இயக்கம் (Agricultural Co-operative Movement)

3. கூட்டுறவு வீட்டு வசதி இயக்கம் (Housing Co-operative Movement)

இவையன்றிக் 'கூட்டுறவு கடன் வழங்கு இயக்கமும்' சுவீடனில் குறிப்பிடத்தக்கதாகும். கூட்டுறவுக் காப்புறுதி வணிகம் (Co-operative Insurance) துய்ப்போர் கூட்டுறவு இயக்கத்துடன் இணைந்ததொன்றாகும். இவ்வியக்கங்களின் வெற்றிக்குக் காரணம் முறையாகப் போதிக்கப்பட்ட கூட்டுறவுக் கல்வியேயாகும்.

இனி, சுவீடனின் இரு பெரும் இயக்கங்களிடையே விளங்கி வந்த நெருங்கிய தொடர்பினைப் பற்றி ஆராய்வோம்.

துய்ப்போர் கூட்டுறவிற்கும் உற்பத்தியாளர் கூட்டுறவிற்கும் இடையே நிலவிய தொடர்பு குறிப்பிடத்தக்கதொன்றாகும். இரு இயக்கங்களுமே திடமான அடிப்படையில் தோன்றி இயங்கி வந்தமையால் ஒன்றை ஒன்று இழப்புக்கு ஆளாக்கிக் கொள்ள நேரவில்லை.

தொடக்கத்தில், 'துய்ப்போர் கூட்டுறவு'ப் பண்டங்களை உறுப்பினர்களுக்கு விநியோகம் மட்டுமே செய்துவந்தது. ஆனால், மெள்ள மெள்ளப் பண்டங்களின் உற்பத்தித் துறையிலும் ஈடுபடத் தொடங்கியது. தொடக்கத்தில் பண்டங்களைச் சேகரிப்பதிலும், பக்குவப்படுத்திப் பாதுகாப்பதிலும் கவனத்தைச் செலுத்தி வந்த 'உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்' நாளடைவில் விநியோகத் துறையிலும் இறங்கத் தொடங்கவே பிரச்சினைகள் பல எழலாயின. தேவையற்ற இப்போட்டியைத் தவிர்ப்பதற்காக இவ்விரு இயக்கத் தலைவர்களும் ஒன்றுகூடி ஒப்பந்தங்கள் சிலவற்றை உருவாக்கி நிலைமையைச் சீராக்கினர். அதன்படி, இரு இயக்கங்களின் செயல் முறைகளுக்கு எல்லைகள் வகுக்கப்பட்டன. அவைகள் ஈடுபட்டிருந்த பல்வேறு துறைகளும் போட்டியைத் தவிர்க்கும் வகையில் மாற்றியமைக்கப்பட்டன. இனி, உருவாக்கப்பட்ட ஒப்பந்தங்களினால் ஏற்பட்ட விளைவுகளை ஆராய்வோம்.

முதலாவதாக, 'உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்' சில்லறை வணிகத்தில் ஈடுபடமுடியாமல் தடை செய்யப்பட்டன. பால் பண்ணைகள், இறைச்சிக் கடைகள் போன்றவையும் நடத்த இயலாமல் தடைசெய்யப்பட்டன. இதே போன்று, 'துய்ப்போர் கூட்டுறவுக் கழகங்கள்' பால் பண்ணைகள், இறைச்சிக் கொட்டில்கள் போன்றவையும் நடத்த முடியாமல் தடைசெய்யப்பட்டது. எனினும், இறைச்சியைப் பக்குவப் படுத்துவதில் இரு இயக்கங்களுமே ஈடுபட ஒப்பந்தத்தில் வழி செய்யப்பட்டிருந்தது.

இரண்டாவதாகப் பொருள்களின் தரமும், விலையும் சந்தை நிலையை ஒத்து இருக்குமேயானால், சுவீடனின் 'மத்தியக் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம்' (K. F.), கூட்டுறவு விற்பனை யேற்பாட்டுச் சங்கங்களிடமிருந்தே பொருள்களைக் கொள்முதல் செய்ய வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டது.

தரமான விதைகள், உரங்கள் போன்ற சில பொருள்கள் இருவகைச் சங்கங்களினாலும் விற்பனை செய்யப்பட்டமையால், இரு இயக்கங்களுக்கும் தனித்தனியாக அங்காடிகள் பிரிக்கப் பட்டன. இதன் விளைவாக, ஒரே அங்காடியில் இரு இயக்கங் க்ளுக்கிடையே ஏற்படும் மோதல் தவிர்க்கப்பட்டது.

இவ்வாறு, இரு இயக்கங்களுமே செம்மையாகப் பணி புரிந் தமையால்தான் சுவீடன் வெகுவேகமாகப் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் காண முடிந்தது.

வெற்றியின் இரகசியம்

இதுவரை, இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கத்தின் தோற்றம், அதன் வளர்ச்சி, தற்போதைய நிலை ஆகியவற்றைஆராய்ந்தோம். குறுகிய காலத்தில் இவ்வியக்கம் பெற்றிருக்கும் வளர்ச்சியைப் பாராட்டாத உலக நாடுகளே இல்லை. இதற்கு இணையான நாடுகளும் மிகக் குறைவே. இனி இவ்வியக்கம் ஈட்டியுள்ள வெற்றிக்கான காரணங்களைக் காண்போம்.

1. திட்டமான, திடமான கொள்கைகளைக் கொண்டே இவ்வியக்கம் தொடங்கப்பட்டது. திட்டமிட்டுத் தொடங்கும் எந்த இயக்கமும் வெற்றி பெறுதல் திண்ணம் என்ற வாக்கிற்கு சுவீடன் நல்லதோர் எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது.

2. இந்நாட்டின் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே நெருங்கியதொடர்பும், நல்லுறவும் காணப்படுகின்றது. அவை யாவும் தொடர்பற்றுத் தனித்து நிற்கவில்லை. ஒவ்வொரு துறையிலும் ஒரு மத்திய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இத்தகைய நல்ல தொடர்பும், கூட்டுறவும் இருப்பதினால்தான் வெற்றி இவ்வியக்கத்தை நாடி வருகின்றது.

3. இவ்வியக்கத்தில் பணிபுரியும் அனைவரும் நிரம்பப் பயிற்சி பெற்றவர்களாகவும், திறமை மிக்கவர்களாகவும் விளங்குவதால், முறையான நிர்வாகம் ஏற்படுகின்றது. முறையான நிர்வாகம் வெற்றியின் முதற்படியல்லவா !

4. விற்பனைப் பொருள்களின் விலைகள் நியாயமான முறையில் கட்டுப்படுத்தப்படுவதால், மக்களின் ஆதரவு கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிரம்ப உள்ளது. மக்களின் ஆதரவு தொடர்ந்து இருக்குமானால் வெற்றியும் உறுதிதானே !

5. இந்நாட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் ரொக்க விற்பனை (Cash Sales) மட்டுமே செய்வதால் இழப்பு ஏற்படுவதில்லை.

6. இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கம் வலிவான நிதி நிலையைப் பெற்றிருப்பதால் வெற்றி எளிதில் கிட்டியது.

7. சுவீடனில் துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நல்ல ஒற்றுமை நிலவுகின்றது. உதாரணமாக, இவ்விரு கூட்டுறவுகளுமே இணைந்து ஒரு சுண்ணும்புத் தொழிற்சாலையையும், கால்நடைத்

தீவன உற்பத்தித் தொழிற்சாலையையும் நடத்தி வருகின்றன என்றால் நிலவுகின்ற நல்லுறவை நாம் எளிதில் புரிந்து கொள்ள லாம்.

8. நிழல் பட்டு நிலம் தேய்வதில்லை. அதுபோல, அளவான போட்டி வாணிபத்தை வளர்ச்சி அடையச் செய்யுமேயல்லாமல் அழித்து விடாது. இதை நன்குணர்ந்திருந்த சுவீடன் கூட்டுற வாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே அளவான போட்டியை ஊக்குவித்து, நாட்டின் பொருளாதார நிலையையே உயர்த்தினர்.

இவ்வாறு, தொடக்கம் முதல் விவசாய நாடாகத் திகழ்ந்த சுவீடன், மெள்ள மெள்ளத் தொழில்வளம் நிறைந்த நாடாகவும் மாறத் தொடங்கியது. நாட்டின் பொருளாதார முன்னேற்றம், மக்களின் உயர்ந்த வாழ்க்கைத் தரம் போன்றவை கூட்டுறவுக் கொள்கைகளின் மூலம் ஏற்படுத்தப்பட்டன. விவசாயமும், மற்ற பல்வேறு தொழில் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்ட மையால் எடுத்த கருமம் எளிதில் முடிந்தது.

எத்தகைய பின் தங்கிய நாடும், கூட்டுறவுக் கொள்கைகளைச் சரிவர உணர்ந்து செயல்படுமானால் வியத்தகு பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவது திண்ணம். இதற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்வதுதான் இன்றைய சுவீடன். இந்நாட்டின் முன்னேற்றம் பிற நாடுகளுக்கு வழிகாட்டியாகும். தன் நிலையை மட்டும் உயர்த்திக் கொள்ளாமல், பிற நாடுகளின் முன்னேற்றத் தையும் கருத்தில் கொண்டு செயல்படும் நாடு சுவீடன். இவ்வாறு, இந்நாடு செயல்படுவதற்கு உறுதுணையாக இருப்பது இந் நாட்டின் வலிமையானக் கூட்டுறவு இயக்கமாகும்.

6. டென்மார்க்கில் கூட்டுறவு இயக்ம்.

(Co-operative movement in Denmark)

டென்மார்க்கைப் பற்றி:

டென்மார்க் 17,000 சதுரமைல் பரப்பளவுள்ள ஒரு சிறிய நாடாகும். இதன் மக்கள் தொகை 46 இலட்சமாகும். இச்சிறிய நாடு போதிய இயற்கைச் சாதனங்களைப் பெற்றிருக்கவில்லை. தொழில் வளம் பெருகுவதற்குத் தேவையான நிலக்கரி, இரும்பு, உலோகங்கள், எண்ணெய், பருத்தி. இதர மூலப் பொருட்கள் இந்நாட்டில் காணப்படாமையால் தொழில் துறையில் இந்நாடு போதிய வளர்ச்சியைப் பெறவில்லை. குறைந்த அளவு இயற்கைச் செல்வங்களைக் கொண்ட இந்நாடு மண்வளம் கொழித்து விளங்குவதால், வேளாண்மைத் தொழிலில் சிறந்து விளங்குகின்றது. மொத்த நிலப்பரப்பில் 75 சதவிகிதம் பயிரிடத்தக்க நிலமாக விளங்குகின்றது. ஆண்டு தோறும் பொழிகின்ற 'மழையளவு' (Rainfall) சுமார் 30 அங்குலமாகும். இந்நாட்டில் ஆண்டு தோறும் மழை பரவலாகப் பெய்கின்றது. கிராமப்புறங்கள் மேடு பள்ளங்கள் இன்றிச் சமமாக விளங்குகின்றன. எனவே, விவசாயம் இந்நாட்டில் நன்கு நடைபெறுகின்றது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயமே உற்ற துணையாக விளங்குகின்றது. இயந்திரத் தொழில்கள் முறையாக வளர்ச்சி பெறவில்லையாதலால், தொழில் பொருள்கள் யாவும் இந்நாட்டில் இறக்குமதி செய்யப்படுகின்றன- எனினும், 'தொழில் பொருள்க'ளின் (Industrial Prodncts) இறக்குமதியை டென்மார்க் விவசாயப் பொருள்களின் ஏற்றுமதி ஈடுசெய்து விடுகின்றது. தற்போது ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களில் 50% டென்மார்க்கின் விவசாயப் பொருள்களேயாகும். விவசாயத் தொழில் டென்மார்க்கில் முக்கியத் தொழிலாகக் கருதப்படினும், மொத்த மக்கள் தொகையில் 25 சதவிகிதமே இத்தொழிலில் ஈடு

பட்டுள்ளனர். எஞ்சியுள்ள 75 சதவிகித மக்கள் கைத் தொழில்கள், இயந்திரத் தொழில்கள், வணிகம், போக்குவரத்துத் தொழில் முதலானவற்றில் ஈடுபட்டு நாட்டுயர்விற்கு நாளும் உழைக்கின்றனர். டென்மார்க் வாணிபக் கப்பல்கள் அயல்நாடு களுக்குப் பொருள்களைக் கொண்டு செல்வதால் ஒரு கணிசமான தொகையை அந்நியச் செலாவணியாக ஈட்டுகின்றன.

ஜனநாயகக் கூட்டுறவுக் கொள்கைகளைச் சிறந்த முறையில் விவசாயத்தில் கடைப்பிடித்தமையால்தான், இந்நாட்டு விவசாயம் உலக நாடுகளிடையே பெரும் பெயர் பெற்று விளங்குகின்றது. இதையொட்டியே, சின்னஞ்சிறிய நாடாகிய டென்மார்க், 'கூட்டுறவு டென்மார்க்' (Co-operative Denmark) என்று சிறப்புப் பெயர் பெற்றுத் திகழ்கின்றது. இத்தகைய விவசாய முன்னேற்றத்தை இந்நாடு ஒரு நாளில் பெற்றிடவில்லை. விவசாயத் துறையில் எழுந்த சமூகப் பொருளாதாரப் பிரச்சினை களுக்குத் தீர்வு கண்ட பின்னரே, இத்தொழில் செழித்து வளர லாயிற்று.

இன்றும் டென்மார்க்கே விவசாயத் துறையில் உலக நாடு களுக்கு 'வழி காட்டி'யாக (Torch-Bearer) விளங்குகின்றது. டென்மார்க்கில் இயற்கையாக ஏற்பட்ட பொருளாதார வளர்ச் சியில் ஒரு பகுதியே கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பான வளர்ச்சி யாகும். டென்மார்க் கூட்டுறவு இயக்கம் ஒரு தனிச் சிறப்புடன் விளங்குவதற்குக் காரணம், இவ்வியக்கம் மக்களால் தொடங்கப் பட்டதாகும். ஏனைய நாடுகளில் இவ்வியக்கம் அரசாங்கத்தாலோ அல்லது கூட்டுறவுக் கொள்கைகளில் நம்பிக்கையுள்ள தனி நபர்களாலோ தொடங்கப்பட்டுள்ளது. ஆனால் டென்மார்க் கூட்டுறவு இயக்கம் மக்களால், மக்களின் நன்மைக்காகத் தொடங் கப்பட்டதாகும். எனவேதான் டென்மார்க் கூட்டுறவு இயக்கம் 'மக்கள் இயக்க'மாகக் கருதப்படுகின்றது. இந்நாட்டில் கூட்டுறவு இயக்கம் வலிமையுடன் திகழ்வதற்கு இரு காரணங்களை எடுத்துக் கூறலாம். அவையாவன—

(i) சிறந்த கல்வி முறை (Good Educational System) ;

(ii) ஒரே அளவுகளைக் கொண்ட 'கைப்பற்று நிலம்' (Holding).

சிறந்த கல்வி முறையை அமைத்த பெருமை டென்மார்க்கின் அரசாங்கத்தையே சாரும். இந்நாட்டின் பொருளாதார வளர்ச் சிக்கு முதற் காரணம், அந்நாட்டு மக்களின் கல்வி வளர்ச்சி!

1814-ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே கட்டாயக் கல்வி புகட்டப்பட்டது. இதன் பயனாகச் சாதாரண மக்களும் கல்வியறிவு பெற்று விளங்குகின்றனர். இன்றும் நாம் கிராமப் புறங்களில் பல உயர்நிலைப் பள்ளிகள், விவசாயப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் முதலானவற்றைக் காண முடிகின்றது. பெண்களுக்கென்றும் சில பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன (Rural Schools). குடும்பப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத்தக்க வகையில் பெண்களுக்கு இப்பள்ளிகள் மூலம் பயிற்சி அளிக்கப் படுகின்றது. மக்கள் உயர்நிலைப் பள்ளிகளும் (Folk High Schools), விவசாயப் பள்ளிகளும் பொதுக் கல்வியையும், தொழில் கல்வியையும் மக்களுக்குப் போதிக்கின்றன. மக்களின் அறிவு வளர்ச்சிக்கு இப்பள்ளிகளே 'நாற்றங்கால்க'ளாக (Hot Beds) விளங்குகின்றன. கூட்டுறவுக் கொள்கைகளைச் சரிவர உணர்ந்து, அவ்வியக்கத்தைத் தொடங்கத்தக்க வகையில் இப்பள்ளிகள் தொடக்கத்தில் சூழ்நிலைகளை உருவாக்கின. டென்மார்க்கின் கிராமங்களில் பணியாற்றி வந்த விவசாயிகளின் கழகங்களும் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கின. பள்ளிகளைத் தவிர, ஒரு 'கூட்டுறவுக் கல்லூரியும்' சிறந்த முறையில் இயங்கி வந்தது. இத்தகைய நடவடிக்கைகளால், கல்வியறிவு நிறைந்த கிராம மக்களைக் கொண்டு விளங்குகின்றது இன்றைய டென்மார்க். உலக நாடுகளில் ஏற்படும் மாற்றங்களையும், நடைபெறும் நிகழ்ச்சிகளையும் இம்மக்கள் தவறாமல் கவனிக்கின்றனர், கல்வியறிவின் காரணமாக, விவசாயிகள் தங்கள் நலன்களை எவ்வாறு தகுந்த முறையில் பாதுகாத்துக் கொள்வது என்பதை நன்கு உணர்ந்துள்ளனர். இதன் விளைவாக உருவாகியவையே விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களாகும்.

டென்மார்க்கில் கூட்டுறவு இயக்கம் உருவானதற்கு அந் நாட்டின் ஒரே மாதிரியான நில அமைப்பும் ஒரு காரணமாகும். விவசாயிகளின் கைப்பற்று நிலம் மிகப் பெரிய அளவு உள்ளதாகவோ அல்லது மிகச் சிறியதாகவோ இல்லாமல் நடுத்தர அளவு உள்ளதாக விளங்குகின்றது. இத்தகைய விவசாயப் பண்ணைகள் ஐரோப்பாவில் வேறு எங்கும் இல்லை என உறுதியாகக் கூறலாம். இத்தகைய விவசாயப் பண்ணைகள் அமைவதற்கு அரசாங்கமும் உறுதுணையாக விளங்கிற்று. 1650-ஆம் ஆண்டிலிருந்தே டென்மார்க் அரசு பல நிலச் சட்டங்களை விவசாயிகளின் நலன் கருதி இயற்றி வந்தது. இச்சட்டங்கள் பெரும் விவசாயிகள் சிறிய விவசாயிகளை அழித்து விடாமல்

பாதுகாத்தன. முதலில், அளவில் பெரிதாக விளங்கிய கைப்பற்று நிலம் பல சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. ஆயுட்காலம் வரை விவசாயம் செய்வதற்கு அவர்களுக்கு உரிமையும் வழங்கப்பட்டது. இதன் விளைவாக விவசாயப் பண்ணைகளின் எண்ணிக்கை கணிசமாக உயரத் தொடங்கியது.

விவசாயிகளுக்குத் தேவையான கடன் வசதிகளும் அரசாங் கத்தால் அளிக்கப்பட்டன. இவ்வாறு வழங்கப்பட்ட நிதிவசதி களைக் கொண்டு, இவ்விவசாயிகள் தங்கள் குத்தகை நிலங்களுக்கு உரிமையாளர்களாக மாறினர். முதல் உலகப் போருக்கு முன்னரே, மொத்த விவசாயிகளில் 94% நடுத்தரப் பண்ணை களுக்கு உரிமையாளர்களாக விளங்கினர். பிரிக்கப்பட்ட பண்ணை நிலங்கள் மேலும் பிரிக்கப்பட முடியாமல் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இதை யொட்டி, 1925-ஆம் ஆண்டில் ஒரு நிலச்சட்டம் விவசாயிகளின் நலன் கருதி நிறைவேற்றப்பட்டது. பெரிய பண்ணைகள் தங்கள் நிலங்களை விற்க அனுமதிக்கப் பட்டன. ஆனால் 18-லிருந்து 25 ஏக்கர் நிலத்தைப் பெற்றிருக்கும் பண்ணைகள் தங்கள் நிலத்தை விற்கமுடியாமல் தடை செய்யப் பட்டன. நிலத்தின் தரத்தைப் பொறுத்தே பண்ணைகளின் செயற்பாடுகள் அமைந்திருத்தன. இவ்வாறு, நடுத்தர விவசாயப் பண்ணைகளின் எண்ணிக்கை உயர்ந்தமைக்கு டென்மார்க் அரசாங்கத்தின் தலையீடே பெரும் காரணமாகத் திகழ்கின்றது. இத்தகைய பண்ணைகளின் அமைப்பால் சமுதாயத்தில் விவசா யிகள் வேறுபாடின்றி வாழமுடிகின்றது. சமூக வளர்ச்சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் விவசாயிகள் தங்கள் முழு உழைப் பையும் நல்கத் தொடங்கினர். எனவே, டென்மார்க்கில் கூட்டுறவு இயக்கம் தோன்றியதற்குச் சிறந்த கல்வி முறை, நடுத்தர விவசாயப் பண்ணைகள் ஆகியவையே முக்கியக் காரணங்களாகக் கருதப்படுகின்றன.

டென்மார்க் ஒரு விவசாய நாடாகும். மக்களில் ஒரு கணிச மான பகுதி விவசாயத்தில் ஈடுபட்டுள்ளதால், இத் தொழிலில் நவீன விவசாய முறைகள் கையாளப்படுகின்றன. ஆனால், போதிய நிதி வசதிகளை இவர்கள் பெற்றிருக்கவில்லையாதலால் நவீன விவசாயக் கருவிகளை இவர்கள் பெற இயலாமல் தவித் தனர்.

விவசாயிகளின் துயர் துடைக்க, டென்மார்க் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியது. அவைகளுள் சிலவற்றைக் காண்போம்.

1. விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடன் வசதிகள் அளிப்ப தற்காக ஒரு நிதி (Loan Fund) அமைக்கப்பட்டது. ஆண்டு தோறும் இந்த நிதி அமைப்பிற்கு 2 மிலியன் குரோனர் அளிக் கப்பட்டது. இதன் மூலம் விவசாயிகள் தங்களுக்குத் தேவையான நிலத்தைக் கொள்முதல் செய்து கொண்டனர். நிலவளர்ச்சிக் கெனவும் கடன் வசதிகள் அளிக்கப்பட்டன.

2. அதிக அளவு நிலம் வைத்திருந்தவர்களிடமிருந்து அரசாங்கம் நிலத்தைப் பெற்று, நிலமற்றவர்களுக்குப் பகிர்ந்த ளித்தது.

3. சிறந்த விவசாயிகளுக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன. எனவே, சிறந்த முறையில் விவசாயம் செய்வதற்கு இது ஒரு தூண்டுகோலாக இருந்தது (நம் நாட்டிலும் இது போன்ற ஊக்கம் அளிப்பது குறிப்பிடத்தக்கது)

4. நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழும் விவசாயிகள் முறையாகக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வதற்கென இலவசச்சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

5. சிறு விவசாயிகளுக்கு டென்மார்க் அரசாங்கம் 'பொறுப்புறுதி' (Guarantee) அளித்து வந்ததால், அவர்கள் 'ஜட்லேண்டு கூட்டுறவுக்கடன் சங்கத்திடமிருந்து' (Jutland Co-op. Credit Association) கடன் வசதிகளைப் பெற முடிந்தது.

டென்மார்க் விவசாயிகளே முதன் முதலில் விவசாயத்தில் நவீன கருவிகளைப் பயன்படுத்தி அனைத்துலக நாடுகளுக்கும் வழி காட்டினர். விலை அதிகமான விவசாய இயந்திரங்களை வாங்குவதற்கு அவர்களது பொருளாதார நிலை போதுமான தாக இல்லையாதலால் கூட்டுறவு அமைப்புகளை நாடினர். இதைத் தொடர்ந்து விவசாயத் தொழிலையும் கூட்டுறவு முறையில் செய்யத் தொடங்கினர். விடாமுயற்சி, சிறந்த அறிவுத் திறன் போன்ற பல அரும் பெரும் குணங்களை டென்மார்க் மக்கள் பெற்றிருந்தமையால் முயற்சிகள் முழுதும் வெற்றி பெற்றன. இவ்வாறு தோற்றம் கண்ட கூட்டுறவு இயக்கம் கொள்முதல், விற்பனை, கடன் வழங்குதல் போன்ற பல துறைகளிலும் ஈடுபட்டு அனைவருக்கும் ஆதரவாக விளங்கியது. இவ்வியக்கத்தின் கீழ்ப் பால் பண்ணைகள், நுகர்வோர் பண்டகசாலைகள், 'காப்பீடுக் கழகங்கள்', முட்டை விற்பனையேற்பாட்டுக் கழகங்கள் முத லானவை இயங்கி வந்தன. பல துறைகளில் இவ்வியக்கம் இயங்

கிலும், பால் பண்ணைகள் மூலமே பெரு வெற்றியை ஈட்டியுள்ளது. பால் பண்ணை என்றதுமே டென்மார்க் என்று சொல்லுமளவுக்கு இந்நாடு உயர்வு பெறலாயிற்று.

பால் பண்ணைத் தொழிலின் தொடக்கம்

பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கம் வரை டென்மார்க் தானிய வகைகளையே பெருமளவில் ஏற்றுமதி செய்து தன் பொருளாதாரத்தை உயர்த்தி வந்தது. 1864-ஆம் ஆண்டு ஏற்பட்ட போரின் காரணமாக, டென்மார்க்கின் பொருளாதார நிலை மிகவும் பாதிக்கப்பட்டது. டென்மார்க்கைச் சேர்ந்த இரு வளமான மாநிலங்கள் (Schleswig and Holstein) போரின் முடிவில் 'புருசியா' (Prussia) என்ற நாடால் கைப்பற்றப்பட்டன. இதன் விளைவாக, டென்மார்க்கின் எதிர்காலமே இருண்டு காணப்பட்டது. மேலும், ஜெர்மனியுடன் கொண்டிருந்த வாணிபத் தொடர்பு அறவே அழிந்து போயிற்று. ஏனெனில் 'புருசியா' ஜெர்மனியின் ஒரு பகுதியாக விளங்கியதால், போருக்குப் பின்னர் டென்மார்க் தனது உற்பத்திப் பொருளான தானிய வகைகளை ஜெர்மனிக்கு ஏற்றுமதி செய்ய இயலவில்லை.

இந்நிலையில், உற்பத்திப் பொருளான தானிய வகைகளை ஏற்றுமதி செய்யத் தகுந்த சந்தையினை டென்மார்க் பெற்றிருக்கவில்லை. எனவே, டென்மார்க் அங்காடிகளிலேயே தானியங்கள் விற்பனை செய்யப்பட்டமையால், அவைகளின் விலை வீழ்ச்சி அடைந்தது. 'அளிப்பு' (Supply) அதிகரித்தால், பொருள்களின் விலை குறையத்தானே செய்யும்? எனவே, தானிய உற்பத்தியாளர்கள் செய்வதறியாது திகைத்தனர். அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்தும் இழந்த சந்தையை மீண்டும் பெறவே முடியவில்லை.

பாதிக்கப்பட்ட பொருளாதார நிலையை எவ்வாறு சீர்படுத்துவது என்று டென்மார்க் மக்கள் தீவிரமாகச் சிந்திக்கலாயினர். துன்பங்கள் சூழும்போது அறிவுத்திறன் அவர்களுக்கு நன்கு கைலாகு கொடுத்தது. டென்மார்க்கின் பொருளாதார உயர்வுக்கென பல வழி முறைகள் சிந்திக்கப்பட்டன. விவசாயத் தொழிலை சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றியமைக்க உறுதி பூண்டனர். தானிய உற்பத்தியைச் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு, பால் பண்ணைத் தொழிலை அவர்கள் தேர்ந்தெடுத்தனர். மேலும், இத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட பன்றி இறைச்சித் தொழில், முட்டை விற்பனை போன்ற வேறு பல தொழில்களையும் கூட்டுறவு

அடிப்படையில் அமைக்கலாயினர். இப்பொருள்களுக்கு இங்கிலாந்தில் 'தேவை' அதிகமாக இருந்ததால், டென்மார்க் இத்தொழிலில் தீவிரக் கவனம் செலுத்தத் தொடங்கியது. சிறந்த கூட்டுறவு அமைப்பால் திட்டங்கள் சிறந்த முறையில் செயல் படுத்தப்பட்டன. தானியங்களை உற்பத்தி செய்து வந்த டென்மார்க், பால், வெண்ணெய், பன்றி இறைச்சி, முட்டை போன்ற பல பொருள்களை உற்பத்தி செய்யத் தொடங்கியது. விலை குறைந்த தானிய வகைகளைப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யத் தொடங்கியது. இத்தானிய வகைகள் ஆடுமாடுகள் வளர்ப்பதற்கு நன்கு பயன்படுத்தப்பட்டன. நாளடைவில், டென்மார்க்கின் முக்கிய ஏற்றுமதிப் பொருளாக 'வெண்ணெய்' (Butter) விளங்கலாயிற்று. பொருளாதாரத்தின் ஒரு கதவு மூடும்போது மற்றொரு கதவு திறக்கின்றது. மூடிய கதவையே பார்த்துப் பெருமூச்சு விடும் நாடாக இல்லாமல், டென்மார்க் திறந்திருந்த வேறு கதவை உடனே பார்க்கத் தொடங்கியது. டென்மார்க்கைப் பொறுத்தவரையில், போரினால் ஏற்பட்ட அழிவுத்திறன் ஆக்கத்திறனைத் தூண்டியது (Destruction Boosted up Construction).

பால் பண்ணைத் தொழிலுக்குத் தேவையான கால்நடைத் தீவனமும் டென்மார்க்கினால் உற்பத்தி செய்யப்பட்டது. கால் நடைகளின் எண்ணிக்கையும் கணிசமாக உயரலாயிற்று. இத்தகைய மாற்றம், டென்மார்க்கின் பொருளாதாரத்தையே மாற்றியமைத்தது என்பதில் எவருக்கும் ஐயமில்லை. பால் பண்ணைத் தொழிலில் பல்வேறு நவீனக் கருவிகள் கையாளப்பட்டன. 1878-ஆம் ஆண்டு, டென்மார்க் பொறியமைப்பாளர் (L. C. Nielsen) ஒருவரால் பாலிலிருந்து 'பாலேட்டை'ப் (Cream) பிரித்தெடுக்கக்கூடிய ஒரு நவீன இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பின்னர்தான், பால் பண்ணைத் தொழிலில் ஒரு திருப்பம் ஏற்படத் தொடங்கியது.

முதல் கூட்டுறவுப் பால் பண்ணை, 1882-ஆம் ஆண்டு 'ஆண்டர்சென்' (Stilling Andersen) என்பவரின் துணை கொண்டு நிறுவப்பட்டது, அதுமுதல், பால் பண்ணைத் தொழில் செழித்து வளரலாயிற்று. ஆண்டுதோறும் இத்தொழிலில் டென்மார்க் பெற்றுவந்த வளர்ச்சியைக் அடுத்தப் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அட்டவணையைக் கொண்டு அறியலாம்.

கொடுக்கப்பட்டிருக்கும் அட்டவணையைக் கூர்ந்து நோக்குவோமானால், தற்போது பால் பண்ணைகளின் எண்ணிக்கை

	1881	1898	1914	1935	1964
மொத்தக் கூட்டுறவுச் சங்கங்கள்	0	1029	1168	1404	858
தனியார் பால் பண்ணைகள்	—	266	319	328	193
பண்ணையின் பசுக்கள் எண்ணிக்கை (10,000)	899	1067	1310	1675	1370
ஒரு பசுவின் மூலம் கிடைக்கக்கூடிய பால் அளவு (கிலோ)	—	1991	2658	3078	3804
வெண்ணெயின் சதவிகிதம்	—	3.30	3,50	3.64	4,23
மொத்த பால்உற்பத்தி (1000 மெட்ரிக் டன்)	1391	2156	3500	5156	5210
மொத்த வெண்ணெய் உற்பத்தி (1000 மெட்ரிக் டன்)	49	84	117	173	155
மொத்த வெண்ணெய் ஏற்றுமதி (1000 மெட்ரிக் டன்)	12	73	104	138	103
மொத்த பாலடைக் கட்டி உற்பத்தி (1000 மெட்ரிக் டன்)	—	—	16	29	123
மொத்த பாலடைக் கட்டி (Cheese) ஏற்றுமதி (1000 மெட்ரிக் டன்)	—	1	0.5	1	81

குறைந்து வருவது நன்கு தெரியும். டென்மார்க் மக்கள் பண்ணைகளின் எண்ணிக்கையில் அதிகக் கவனம் செலுத்தாமல், உற்பத்தி செய்யப்படும் பால், பால் பொருள்கள் முதலானவற்றிலேயே அதிகக் கவனம் செலுத்துகின்றனர். 1967–ஆம் ஆண்டு பால் பண்ணைகளின் எண்ணிக்கை 630-ஆக குறைந்துள்ளது. பால்

பண்ணைகளில் உறுப்பினர்களாக விளங்கியவர்களின் எண்ணிக்கை 1967-ஆம் ஆண்டு 1.3 இலட்சமாகும். 1955-ஆம் ஆண்டு 1966 மிலியன் குரோனராக இருந்த மொத்த விற்பனை 1967-ஆம் ஆண்டில் 2420 மிலியன் குரோனராக உயர்ந்துள்ளது.

19-ஆம் நூற்றுண்டின் இறுதியில், டென்மார்க் கோதுமைக்குப் பதிலாக வெண்ணெய், பன்றி இறைச்சி, முட்டை போன்ற பொருள்களையே ஏற்றுமதி செய்து வந்தது. எனினும், தானிய உற்பத்தியை அடியோடு கைவிட்டு விடவில்லை. உண்மையில் தானிய உற்பத்தி அதிகரிக்கத் தொடங்கியது. ஏற்றுமதி செய்ய இயலாவிடினும், சிலவகைத் தானியங்கள் கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தப்பட்டன. பால் பண்ணைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு பொருள்களும் இறைச்சி, முட்டை போன்ற பொருள்களும் கணிசமாக ஏற்றுமதி செய்யப்பட்டன. 1875-ஆம் ஆண்டிற்கும் 1930-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில்தான் பால் பொருள்களின் உற்பத்தி பெருமளவில் உயரத் தொடங்கியது. தானிய உற்பத்தியும் ஒருசேர உயர்ந்தது எல்லோராலும் பாராட்டப்பட்டது. இவ்வாறு, இழந்த சந்தைகளை டென்மார்க் வேறு ஏற்றுமதிப் பொருள்கள் மூலம் மீண்டும் தன் வசம் மீட்டுக்கொண்டது.

பால் பண்ணைத் தொழில் பெருகியதால், இத்தொழிலில் கிடைத்த 'இடை விளைவுப் பொருள்'கள் (By-Products) மூலம் 'பன்றி இறைச்சித் தொழில்' (Bacon Industry) நன்கு வளரத் தொடங்கியது. வெண்ணெய் எடுக்கப்பட்ட பால் (Skimmed Milk) பன்றிகளுக்கு சத்துள்ள உணவாக அளிக்கப்பட்டதால், பால் பண்ணைகளுடன் ஒரு சேரப் பன்றி இறைச்சித் தொழிலும் நன்கு வளர்ச்சி பெறலாயிற்று. இங்கிலாந்து நாட்டில் பன்றி இறைச்சிக்கு அதிகத் தேவை இருந்தது. 1888-ஆம் ஆண்டில் ஜெர்மானிய நாடு பன்றி இறைச்சி இறக்குமதியை அடியோடு நிறுத்திவிடவே, டென்மார்க் மக்கள் தங்களின் நலன் கருதித் தாங்களே பல கூட்டுறவு அமைப்புகளை உருவாக்கி அவற்றின் மூலம் பன்றி இறைச்சியை அதிக அளவில் இங்கிலாந்து நாட்டிற்கு ஏற்றுமதி செய்யலாயினர். இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்வதற்கென்ற பல கூட்டுறவுப் பன்றி இறைச்சித் தொழிற்சாலைகளை அமைத்தனர். இவ்வாறு, டென்மார்க் கூட்டுறவு இயக்கம் ஒன்றன்பின் ஒன்ருகப் பல துறைகளிலும் ஈடுபட்டு வெற்றிகளைக் குவிக்கத் தொடங்கியது.

பால் பண்ணைத் தொழிலும் கூட்டுறவும்

டென்மார்க் விவசாயிகள் கூட்டுறவுப் பால் பண்ணைத் துறையில் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளனர் என்றால் அதற்கு அவர்களது விடாமுயற்சியும், சலியா உழைப்புமே காரணங்களாகும். காலமறிந்து செயல் படுவதில் அவர்களுக்கு நிகர் அவர்களே! கூட்டுறவுக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டே கூட்டுறவுப் பால் பண்ணைகள் தொடங்கப்பட்டன. 1882-ஆம் ஆண்டில்தான்; முதல் கூட்டுறவுப் பால் பண்ணை தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஆண்டுதோறும் புதிய புதிய பால் பண்ணைகள் தோன்றலாயின. இனி, இப் பண்ணைகளின் கொள்கைகளை ஆராய்வோம்.

1. பால் உற்பத்தியாளர் அனைவரும் உறுப்பினராக அனுமதிக்கப்பட்டனர். உறுப்பினர்கள் பங்கு மூலதனமோ அல்லது நுழைவுக் கட்டணமோ செலுத்த வேண்டியதில்லை.

2. உறுப்பினர்கள் எல்லையற்ற அல்லது 'வரையறையற்ற பொறுப்பின்' கீழ் (Unlimited Liability) பணியாற்ற வேண்டும்.

3. தங்கள் சொந்த நுகர்விற்குத் தேவையான பாலை எடுத்துக்கொண்டு, எஞ்சியுள்ள பால் முழுவதையும் பால் பண்ணையிடம் ஒப்படைக்க வேண்டும்.

4. 'கூட்டுத் தனித்தனிப் பொறுப்பின்' (Joint and several Liability) அடிப்படையில் கூட்டுறவுப் பால் பண்ணைக்குத் தேவையான மூலதனம் கடன் வசதிகள் மூலம் எழுப்பப்பட்டது.

5. உறுப்பினர்களின் பால் 'அளிப்புக்கு' ஏற்ப விற்பனைத் தொகை சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இம்முறை பின்பு கைவிடப்பட்டு, பாலின் தரத்திற்கேற்பத் தொகை வழங்கப் பட்டது.

6. இப்பண்ணைகளின் தலைமை அமைப்பாகப் 'பொது அவை' (General Assembly) இயங்கி வந்தது. இவ்வவையின் உறுப்பினர்களுக்கு ஓட்டுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

7. பண்ணையின் அன்றாட நிர்வாகத்திற்கென ஒரு நிர்வாகக் குழுவும் பொது அவையால் தேர்ந்தெடுக்கப்படும்.

8. உறுப்பினர்களில் ஒருவர் நிர்வாகியாகத் தேர்ந்தெடுக்கப் படுவார். அவருக்கு ஒரு குறிப்பிட்ட தொகை மாத வருமானமாக

வழங்கப்படுகிறது. இது தவிர, அவர் அளிக்கும் பாலின் தரத்திற்கேற்ப விற்பனைத் தொகையில் ஒரு பங்கும் அளிக்கப்படும்.

தற்போது இயங்கும் எல்லாப் பால் பண்ணைகளும் இக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டே பணியாற்றி வருகின்றன. டென்மார்க் இத்துறையில் பெற்ற வெற்றியைக் கண்ட பின்னரே, ஏனைய நாடுகள் பால் பண்ணைகளை அமைக்கத் தொடங்கின. மொத்தப் பால் உற்பத்தியில் 90 சதவிகிதத்திற்கும் அதிகமான பாலை இக்கூட்டுறவுப் பண்ணைகள் கையாளுகின்றன.

பண்ணையின் அமைப்பும் அதன் பணியும்

ஒரு கூட்டுறவுப் பால் பண்ணையின் 'செயற்பாட்டு எல்லை,' (Area of Operation) மிகவும் சிறியதாகும். உறுப்பினர்களிடமிருந்து காலையிலும் மாலையிலும் எளிதாகப் பாலைப் பெறத் தக்க வகையில் பண்ணையின் இருப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது. பாலை, பண்ணையிடம் எளிதாக ஒப்படைப்பதில் போக்கு வரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு பால் பண்ணையும் நான்கு அறைகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. பண்ணையின் மத்தியில் உள்ள நீண்ட அறையில் உறுப்பினர்களிடமிருந்து பால் பெறப்படுகின்றது. இரண்டாவது அறையில் தயாராகும் வெண்ணெயும், மூன்றும் அறையில் பாலடைக் கட்டியும் பாதுகாத்து வைக்கப்படுகின்றன. நான்காம் அறை இயந்திரங்களைக் கொண்டதாக விளங்குகின்றது.

உறுப்பினர் ஒவ்வொருவரும் பால் பண்ணையுடன் ஓர் உடன் படிக்கை செய்து கொள்கின்றனர். அவ்வுடன்படிக்கையின்படி, தங்கள் உற்பத்திப் பொருளான பால் முழுவதையும் பண்ணையிடம் தவருமல் அளித்துவிட வேண்டும். தங்கள் குடும்பத்திற்குத் தேவையான பாலை அவர்கள் கொண்டு செல்ல அனுமதிக்கப் படுகின்றனர். இவ்வுடன்படிக்கையின்மூலம் உறுப்பினர்கள் யாவரும் தங்கள் உற்பத்திப் பொருளான பாலை ஒரு சில ஆண்டுகளுக்கு (உடன்படிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது போல்) பண்ணையிடம் அளிக்கின்றனர். உறுப்பினர்களுக்கு அவ்வப்போது முன்பணமும் அளிக்கப்படுகின்றது. பாலின் தரத்தை அடிப்படையாகக் கொண்டே விலைகள் நிருணயிக்கப் படுகின்றன.

உறுப்பினர்களிடமிருந்து பால் சேகரிக்கப்பட்டவுடன், இயந்திரங்களின் துணை கொண்டு தயாரிப்புத் தொழில் தொடங்குகின்றது. பண்ணை ஒவ்வொன்றும் நவீன இயந்திரங்களைக்

கொண்டுள்ளது. பணியாளர்களும் இத்துறையில் நன்கு பயிற்சி பெற்றவர்களாக உள்ளனர். இயந்திரங்களின் உதவியால் பாலிலிருந்து வெண்ணெய் பிரித்தெடுக்கப்பட்டு, பிறகு பிரித்தெடுக்கப்பட்ட வெண்ணெய் தனியறையில் பாதுகாக்கப் படுகின்றது.

வெண்ணெய் எடுக்கப்பட்ட பால் உறுப்பினர்களுக்கே திருப்பித் தரப்படுகின்றது. ஏனெனில், அது கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தப் படுகின்றது. பண்ணையின் நிருவாகி பயிற்சி நிறைந்த பணியாளர்களின் உதவியுடன் தன் காரியங்களைச் செவ்வனே செய்து வருகின்றார். சிறந்த பணியாளர்களை உருவாக்கும் நோக்கத்துடன் பல பள்ளிகளும் அமைக்கப்பட்டுள்ளன. உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் மொத்தப் பாலில் 95% வெண்ணெய் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்றது. சுமார் 3% பால் அருகாமையிலுள்ள நகரங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது. எஞ்சியுள்ள பாலைக் கொண்டு பாலேடுக்கட்டி தயாரிக்கப் படுகின்றது.

உள்ளூரில் இயங்கும் ஒவ்வொரு கூட்டுறவுச்சங்கமும் சொந்தமான 'வெண்ணெய்—பாலேடுக்கட்டி தயாரிக்கும் நிறுவனத்தை'ப் (Creamery) பெற்றுள்ளது. இந்நிறுவனத்தின் நிருவாகத்திற்கென ஒரு 'இயக்குனர் அவை' உறுப்பினர்களால் அமைக்கப் படுகின்றது, இவ்வவை இத்தொழிற்சாலையைத் திறம்பட நடத்துவதற்கென ஒரு திறமை வாய்ந்த நிருவாகியை நியமிக்கின்றது. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் சராசரியாக 150 உறுப்பினர்களையும் 1000 பசுக்களையும் கொண்டு விளங்குகின்றது.

உறுப்பினர்களுக்கு அவர்கள் அளிக்கும் பாலின் தரத்திற்கேற்ப விற்பனைத் தொகை பகிர்ந்தளிக்கப் படுகின்றது. வெண்ணெய் எடுக்கப்பட்ட பால் உறுப்பினர்களுக்கே திருப்பி அளிக்கப்படுவதால், அதற்கேற்பத் தொகை வழங்கப்படும். உறுப்பினர்களுக்கு அவ்வப்போது பண உதவிகளும் இச்சங்கத்தால் செய்யப் படுகின்றது. உறுப்பினர்களுக்கு ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. கால்நடைகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளும் அளிக்கப்படுகின்றன. கால்நடை வளர்ப்பு பற்றி உறுப்பினர்களுக்கு அறிவுரைகள் அளிக்கப்படுகின்றன.

அடித்தளத்தில் இயங்கி வரும் கூட்டுறவுப் பால் சங்கங்கள் யாவும் ஒன்று சேர்ந்து 24 பிரதேச பால் பண்ணைச் சங்கங்களை உருவாக்கியுள்ளன. இவ்வாறு உருவாக்கப்பட்ட 24 பிரதேச

அமைப்புகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து தேசிய அளவில் ஒரு கூட்டிணைப்பை (Federation of Danish Dairy Associations) உருவாக்கியுள்ளன. இதன் தனிச்சிறப்பு யாதெனில், தனியார் துறையில் இயங்கும் பால் பண்ணைகளும் இத்தேசிய அமைப்புடன் இணைக்கப்கட்டுள்ளதேயாகும். தொடக்க நிலையில் பணியாற்றும் தனியார் பால் பண்ணைகளும் 24 பிரதேச கூட்டிணைப்புகளை உருவாக்கியுள்ளன. தனியார் பால் பண்ணைகளும், அவைகளின் கூட்டிணைப்புகளும் இத்தேசியக் கூட்டிணைப்பில் உறுப்பினர்களாக விளங்குகின்றன. தனியார் பால் பண்ணைகள் இயங்குவதால், அளவான போட்டி அங்காடிகளில் ஏற்பட வாய்ப்பேற்படுகின்றது. பொருளாதார முன்னேற்றத்திற்கு அளவான போட்டி தேவைதானே!

தேசியக்கூட்டிணைப்பு (National Federation) உறுப்பினர்களாக விளங்கும் எல்லாக் கூட்டுறவுப் பால் பண்ணைகளையும் நன்கு கண்காணிக்கின்றது. பால், பால் சம்பந்தப்பட்ட பொருள்களின் உற்பத்தியை எவ்வாறு அதிகரிப்பது என்பது போன்ற பிரச்சினைகளில் தீர்வுகாண இத்தேசியக் கூட்டிணைப்பு பெரிதும் உறுதுணையாக விளங்குகின்றது. கூட்டிணைப்பின் நிர்வாகம் முழுமையும் ஒரு பொது அவையின் (General Assembly) பால் உள்ளது. இவ்வவையின் உறுப்பினர்கள் கூட்டிணைப்பின் உறுப்பினர்களால் இரகசிய ஓட்டெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 'ஒருவருக்கு ஒரு வாக்கு' என்ற கொள்கை இங்கு நல்ல முறையில் கடைப்பிடிக்கப்படுகின்றது. தீட்டப்படும் திட்டங்களைச் சிறந்த முறையில் செயல் படுத்துவதற்கென ஒரு 'செயலாட்சிக் குழு'வும் (Executive Committee) நியமிக்கப்பட்டுள்ளது.

பால் பொருள்களின் விற்பனை

தயாரிக்கப்படும் பால் பொருள்களில் 70% பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களில் வெண்ணெய், பாலேடுக்கட்டி. பால் பவுடர், பாலேடு (Cream) முதலானவை முக்கியமானவையாகும். விற்பனைத் துறையில் 'இடை நிலையர்கள்' (Middlemen) ஈடுபடா வண்ணம் வழி முறைகள் செய்யப்பட்டுள்ளன. ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களில் பெரும்பகுதி இங்கிலாந்து நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. எஞ்சியுள்ள 30% பால் பொருள்கள் டென்மார்க் அங்காடிகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

பால் பொருள்கள் அவைகளின் தரம், மதிப்பு போன்றவைகளின் அடிப்படையில் விற்பனை செய்யப்படுகின்றன. வெண்ணெயின் தரம், அளவு முதலானவை பாதிக்கப்படாத வகையில் விற்பனைக்கேற்றவாறு தனித்தனியாகக் கட்டப்படுகின்றன. வியாபாரக் குறியும் பால் பொருள்களின்மேல் இடப்படுகின்றது.

இப்பொருள்களின் விற்பனையேற்பாட்டைக் கவனிப்பதற்கென்று பல கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கூட்டமைப்புகளே விற்பனைத் துறையில் இடைநிலையர்கள் புகாவண்ணம் பாதுகாக்கின்றன. இக்கூட்டமைப்புகள் மூலம் விற்பனை செய்யப்படுவதால் விளையும் நன்மைகள் பல. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்—

1. பொருள்களை விற்பனைக்குத் தயாராக இக்கூட்டமைப்புகள் குறைந்த செலவில் தனித்தனியாகக் கட்டி வைக்கின்றன.

2. எல்லாப் பொருள்களும் அவைகளின் தரத்திற்கேற்பப் பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

3. விற்பனைத் துறையில் போட்டி தவிர்க்கப்படுவதால் விலைகள் ஏற்றத்தாழ்வின்றி நிருணயிக்கப்படுகின்றன.

4. இடைநிலையர்கள் அகற்றப்படுவதால் இலாபம் முழுமையும் கூட்டுறவுச் சங்கங்களையே சேர்கின்றது.

5. 'விற்பனையேற்பாடு முகவர்கள்' (Marketing Agents) அகற்றப்படுவதால் விநியோகத் துறையில் ஏற்படும் செலவுகள் கணிசமாகக் குறைகின்றன.

6. அங்காடிகளில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி அவ்வப்போது, உறுப்பினர்களாக விளங்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செய்திகள் தருகின்றன இக்கூட்டமைப்புகள்.

7. பொருள்களின் தரத்தைக் குறிக்கும் வகையில் 'வியாபாரக் குறி' பயன்படுத்தப்படுவதால் விற்பனை எளிதாக்கப்படுகின்றது.

வெண்ணெய் ஏற்றுமதி செய்யப்படுமுன் இக்கூட்டமைப்புகளால் நன்கு சோதனை செய்யப்படுகின்றது. தரத்தை நன்கு சோதனை செய்வதற்கென்று அரசாங்கம் சில விதி முறைகளை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு வெண்ணெயின் தரம் நன்கு

பாதுகாக்கப்படுவதால்தான், இதன் விற்பனை பிறநாடுகளில் ஒவ்வோர் ஆண்டும் உயர்ந்து வருகின்றது. இங்கிலாந்து டென் மார்க் வெண்ணெய், இதர பால் பொருள்களை மிகவும் விரும்புவ தற்கு இப்பொருள்களின் தரமே காரணமாகும். டென்மார்ச் வெண்ணெயின் வியாபாரக் குறியைக் (Lur Brand) கண்ட வுடனே, அதன் தரத்தைப் பற்றி எவரும் ஐயப்பாடு கொள்வ தில்லை. இத்துணை அளவிற்கு, டென்மார்க் பால் பொருள்கள் எல்லோரது நம்பிக்கையையும் பெற்றுள்ளன.

டென்மார்க் பால் பண்ணைகள் தங்களது உற்பத்திப் பொருளான வெண்ணெயை இங்கிலாந்து சில்லறை வணிகர் களுக்கு வாரந்தோறும் டென்மார்க்கில் பணிபுரியும் வெண்ணெய் வணிகர்கள் மூலம் அனுப்பி வைக்கின்றன. பெரும்பாலும் கப்பல்கள் மூலமாகவே வெண்ணெய், இதர பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. டென்மார்க்கில் பணி புரிந்து வரும் வெண்ணெய் வணிகர்களை மூன்று வகைகளாகப் பிரிக்க லாம், அவையாவன—

(1) கூட்டுறவு வெண்ணெய் ஏற்றுமதிச் சங்கம் (Co-op. Butter Export Association);

(2) இங்கிலாந்து மொத்த விற்பனைச் சங்கங்கள் (English Wholesale Societies)

(3) டென்மார்க் வெண்ணெய் வியாபாரிகள் (Danish Butter Merchants)

இம்மூன்று வகைச் சங்கங்களும், வெண்ணெய் ஏற்றுமதிச் சங்கம்' (Butter Export Association) என்ற கூட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன. இக்கூட்டமைப்பே டென்மார்க்கின் வெண்ணெய் விற்பனைக்குப் பெரிதும் பாடுபடுவதாகும். இறக்கு மதி செய்யும் நாடுகளில் நிலவும் விலைகளுக்கேற்ப இத்தேசியக் கூட்டமைப்பு 'விற்பனை விலை'யை (Selling Price) நிருணயிக் கின்றது கூட்டமைப்பிற்கு ஆதரவாக ஒரு சில 'வாரியங்களும்' (Boards) அமைக்கப்பட்டுள்ளன. தேசிய கூட்டமைப்பு, வாரி யங்கள் ஆகிய அமைப்புகளில் இறக்குமதி செய்யும் நாடுகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கின்றனர். புதிய அங்காடிகளைப் பெறுவதற்கென பல புதிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படு கின்றன. ஏற்றுமதியை அதிகரிப்பதற்காகச் செய்முறை விளக் கங்கள் (Demonstrations), விளம்பரங்கள், உணவுப் பொருட் காட்சிகள் முதலியவை நடத்தப்படுகின்றன.

டென்மார்க் அங்காடிகளில் விற்கப்படும் வெண்ணெய் முதலான பால் பொருள்களின் விலைகள் 'டென்மார்க் விற்பனை முற்றுரிமைக் குழுவி'னால் (Danish Monopoly Commission) நிருணயிக்கப்படுகின்றன. இக்குழுவினால் விதிக்கப்படும் எல்லா விதிமுறைகளுக்கும், கூட்டுறவுப் பால் பண்ணைகள் கட்டுப் பட்டுச் சிறந்த முறையில் பணியாற்றுகின்றன. பொதுவாக, உள்ளூர் அங்காடிகளில் சற்று அதிக விலைக்கே இப்பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

1903-ஆம் ஆண்டு, ஒரு சிறப்பு வியாபாரக்குறி (Lur Brand) விற்பனைத் துறையில் புதிதாகப் புகுத்தப்பட்டது. வெண்ணெயின் தரம் அறிய பல சோதனைகள் அரசாங்கத்தின் விதிமுறைகளுக் கேற்ப நடத்தப்படுகின்றன. இத்துறையில் அரசாங்கத்தின் தீர் மானமே முடிவாகக் கருதப்படுகின்றது. பாலேடுக்கட்டியின் தர மும் இது போலவே சோதனை செய்யப்பட்டபின்பே ஏற்றுமதி செய்யப்படுகின்றது. தரம் உயர ஏற்றுமதியும் உயரலாயிற்று.

1964-ஆம் ஆண்டு, 'டென்மார்க் பால் பண்ணைச் சங்கம்' (Dairy Society Denmark) என்றதொரு கூட்டுறவு அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதிச் சங்கங்கள், இதர பால் பண்ணைகள் முதலானவை இக்கூட்டிணைப்புச் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. கூட்டுறவுப் பால்பண்ணை வியாபாரத்தில் உற்பத்தியையும் விற்பனையேற்பாட்டையும் ஒரு சேர இணைப்ப தற்கு இக்கூட்டிணைப்பு உறுதுணையாக விளங்குகிறது.

வெற்றிக்கான காரணங்கள் :

டென்மார்க்கின் கூட்டுறவுப் பால் பண்ணைத் தொழில் அடைந் திருக்கும் பெருவெற்றிக்கான காரணங்களை இனி ஆராய்வோம்.

1. டென்மார்க்கின் கூட்டுறவு இயக்கம் 'தன்னியலான இயக்கமாகும்' (Voluntary Movement). இந்நாட்டில் கூட்டுறவு இயக்கம் மக்களால் தொடங்கப்பட்ட 'மக்கள் இயக்கமாகும்'. அரசாங்கத்தினாலோ அல்லது அரசின் தூண்டுதலினாலோ இவ் வியக்கம் இங்கு தொடங்கப்படவில்லை. எனவே, இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கத்தில் அரசின் தலையீடு ஏதும் இல்லை. மக்களால் தொடங்கப்பட்ட இயக்கம் வெற்றி பெறுதல் இயற்கை தானே!

2. கூட்டுறவுப் பால் பண்ணைகள் 'வரையறுப் பொறுப்பின்' (Unlimited Liability) அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாகச் செல்வச் செழிப்பு வாய்ந்த உறுப்பினர்கள் பலர் இப் பால்பண்ணைகளின் உயர்விற்கு உழைத்தனர். இதன் விளைவாக, பால் பண்ணைகளின் நிதி நிலையும் கணிசமாக உயரலாயிற்று.

3. தகுதி வாய்ந்த உறுப்பினர்களைக் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் விளங்கியதால், முறையான நிருவாகம் எளிதாக ஏற்பட்டது. நிறுவனத்தின் வெற்றி நிருவாகத்தைப் பொறுத்ததல்லவா ?

4. கீழ்மட்டத்தில் உள்ளூர்க் கூட்டுறவுச் சங்கங்களும், உயர் மட்டத்தில் கூட்டிணைப்பும் சிறந்த முறையில் அமைக்கப்பட்டு எல்லாக் கூட்டுறவு அமைப்புகளுக்குமிடையே நல்லதோர் இணைப்பு டென்மார்க்கில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய இணைப்பே டென்மார்க் பால் பண்ணைத் தொழிலில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியது.

5. நவீன இயந்திரங்களை உற்பத்தித் துறையில் பயன்படுத்துவதால் உற்பத்திச் செலவு மிகவும் குறைக்கப்படுகின்றது. உற்பத்திப் பொருள்களின் தரமும் இவ்வியந்திரங்களினால் கணிசமாக உயர்த்தப்படுகின்றது. இப்பண்ணைகளில் பணிபுரியும் பணியாளர்கள் நல்ல முறையில் பயிற்சி பெற்றவர்களாக விளங்குவதால் திட்டங்கள் யாவும் சீரிய முறையில் செயல்படுத்தப்படுகின்றன. பல விவசாயக் கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளதால் உறுப்பினர்கள் தகுந்த முறையில் தொழில் கல்வியும் பெறுகின்றனர்.

6. டென்மார்க் பால் பண்ணைத் தொழில் பன்றி இறைச்சித் தொழிலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதால், இரு தொழில்களுமே நன்கு வளர்ச்சியடைகின்றன. உலகில் வேறு எந்த நாட்டிலும் இத்தகைய தொழில் தொடர்பு காணப்படவில்லை. வெண்ணெய் எடுக்கப்பட்ட பால் பன்றி இறைச்சித் தொழிலுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

7. உற்பத்தித் துறையில் மட்டும் கவனம் செலுத்தாமல், விற்பனைத் துறையிலும் மிகுந்த கவனம் செலுத்தப்படுகின்றது, இடைநிலையர்களின் செயல்கள் அறவே அகற்றப்படுவதால், இலாபத் தொகை முழுவதும் கூட்டுறவுச் சங்கங்களையே சேர்கின்றது.

மேற்கூறிய காரணங்கள் மட்டுமின்றி, கையாளப்பட்ட வேறு சில முறைகளும் வெற்றிக்கான காரணங்களாக அமைந்துள்ளன.

விற்பனைத் தொகையில் ஒரு கணிசமான பகுதி 'காப்பு நிதிக்'கு (Reserve Fund) அளிக்கப்படுகின்றது. எஞ்சியுள்ள தொகை, உறுப்பினர்களுக்கு அவர்கள் அளித்த பாலின் தரத்தின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப் படுகின்றது.

பால் பண்ணைக்குத் தேவையான மூலதனம் வங்கிகளிட மிருந்து கடன் தொகையாக பெறப்படுகின்றது. நடைமுதல் தொகை உறுப்பினர்களின் 'வைப்புத் தொகை'யின் (Deposit) வாயிலாக இச்சங்கங்கள் பெறுகின்றன. இவ்வைப்புத் தொகைக்கு ஒரு குறிப்பிட்ட தொகை வட்டியாக வழங்கப்படுகின்றது. உறுப் பினர்களிடமிருந்து நுழைவுக் கட்டணமோ அல்லது பங்கு மூலதனமோ இச்சங்கங்கள் பெறுவதில்லை.

பால் பண்ணைகளுக்கு உறுப்பினர்கள் தங்கள் உற்பத்திப் பொருளான பால் முழுவதையும் வழங்குவதால், பால் பற்றுக் குறை எழுவதே இல்லை. உறுப்பினர்கள் தவறாமல் பால் வழங்கு வதற்கென ஒப்பந்தங்கள் இச்சங்கங்களால் செய்து கொள்ளப் படுகின்றன. குடும்ப நுகர்விற்குத் தேவையான அளவு பால் உறுப்பினர்களால் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. ஒப்பந் தங்களை மீறும் உறுப்பினர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படு கிறார்கள்.

சுருங்கக்கூறின், போதுமான நிதி வசதிகள், முறையான நிர் வாகம், உறுப்பினர்களின் சலியா உழைப்பு, அரசாங்கத்தின் ஆதரவு முதலானவையே டென்மார்க் பால் பண்ணைத் தொழிலை வெற்றிப் பாதையில் வழி நடாத்திச் சென்றன.

பன்றி இறைச்சித் தொழில்
(Bacon Industry)

டென்மார்க் பன்றி இறைச்சி, முட்டை ஏற்றுமதித் தொழிற் சாலைகள் பால் பண்ணைத் தொழிலை ஒட்டியே வளர்ந்தவை யாகும். இவ்விரு தொழில்களும் பால் பண்ணைத் தொழிலின் 'துணைத் தொழில்'களாகும் (Subsidiary Industries). பால் பண்ணைகளின் வளர்ச்சி அதிகரிக்கவே, பன்றி இறைச்சித் தொழிலும் தானே வளர்ந்தது. ஏனெனில், வெண்ணெய் எடுக் கப்பட்ட பால் பன்றிகளுக்குச் சத்துள்ள உணவாகக் கொடுக்கப்

பட்டது. சில வகை தானியங்களும் உணவாகப் பயன்படுத்தப் பட்டன. தானிய வகைகளைக் கொண்டு கோழிப் பண்ணைகளும் ஒரு சேரத் தொடங்கப்பட்டன. இதன் விளைவாக, பால் பண்ணைகள். பன்றி இறைச்சித் தொழிற்சாலைகள், கோழிப் பண்ணைகள் டென்மார்க்கின் முக்கியத் தொழில்களாக விளங்க லாயின.

டென்மார்க் குடியானவர்கள பால் பண்ணைகளுடன் 'பன்றித் தொழுவங்'களையும் (Piggeries) தொடங்கினர். வெண்ணெய் பிரிக்கப்பட்ட பாலை இப்பன்றிகளுக்குச் சத்துள்ள உணவாகக் கொடுக்கத் தொடங்கியதால் இத்தொழுவங்கள் நன்கு வளர்ச்சி பெறலாயின.

பால் பண்ணைத் தொழில் வளர வளரப் பன்றிகளின் எண் ணிக்கையும் அதிக அளவில் பெருகின. 1885-ஆம் ஆண்டு வரை பன்றிகள் ஜெர்மானிய நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஜெர்மானிய நாடு அப்பன்றிகளைக் கொன்று இங்கிலாந்து நாட் டிற்கு தரமான இறைச்சியை ஏற்றுமதி செய்து வந்தது. மிகவும் குறைந்த அளவில்தான் டென்மார்க் பன்றி இறைச்சியை இங்கி லாந்து நாட்டிற்கு ஏற்றுமதி செய்தது. பன்றி இறைச்சி தயாரிப் பதும் ஏற்றுமதிசெய்வதும் தனியார் துறையில் இயங்கிவந்த வணி கர்களின் கைகளில்தான் இருந்தன. எனவே, விற்பனையின் மூலம் கிடைத்த இலாபத்தில் பெரும் பகுதி இடை நிலையர்களால் பறிக் கப்பட்டு வந்தது. இடைநிலையர்களின் ஓர் ஆண்டு இலாபத் தொகை 30,000 குரோனர் எனக் கணக்கிடப்பட்டது. இச்சூழ் நிலையில்தான், கூட்டுறவு முறையில் 'இறைச்சிக் கொட்டில்' (Slaughter-House) அமைப்பதற்கான எண்ணம் பிறந்தது. விரைவிலேயே எண்ணம் செயல்படுத்தப்பட்டது. 1887-ஆம் ஆண்டில்தான் முதல் பன்றி இறைச்சித் தொழிற்சாலை 'ஹார் சென்ஸ்' (Horsens) என்ற இடத்தில் தொடங்கப்பட்டது.

தொடக்கத்தில் செல்வச் சிறப்பு வாய்ந்த தனிப்பட்ட 'தசை வாணிகர்'களிடமிருந்து (Butchers) இக்கூட்டுறவுத் தொழிற் சாலைகள் கடும் போட்டியைச் சமாளிக்கவேண்டியிருந்தது. எனவே, இப்போட்டியை வலிவுடன் எதிர்கொள்வதற்கெனக் கூட்டிணைப்புகளை உருவாக்கத் தொடங்கின இச்சங்கங்கள். ஒற்றுமையே வலிமை (In Unity there is Strength) என்ற கொள்கையின் அடிப்படையில் செயலாற்றத் தொடங்கியதால், தனியார் துறையில் இயங்கி வந்த வணிகர்கள் தாங்களாகவே கூட்டுறவு அமைப்புகளிடம் சரணடைந்தனர். 1888-ஆம் ஆண்டி

லிருந்து ஜெர்மனி பன்றிகளை இறக்குமதி செய்வதை அடியோடு நிறுத்தவே, மேலும் பல புதிய பன்றி இறைச்சித் தொழிற் சாலைகள் தோன்றின. இச்சங்கங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை பெருமளவில் உயர்ந்தது. இத்தொழிற்சாலைகளில் செய்யப்பட்டிருந்த மூலதனமும் கணிசமாக அதிகரிக்கத் தொடங்கியது. நிதி வசதிகள் அதிகமாகத் தேவைப்பட்டபோது கடன்கள் எழுப்பப்பட்டன. இச்சங்கங்களில் உறுப்பினர்களின் பொறுப்புடைமை 'வரைநிலைப் பொறுப்பாக' விளங்கியது.

உலகப் போரின்போது இத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்தது. ஏனெனில், போரின் காரணமாக இறைச்சியின் விலை நன்கு உயர்ந்திருந்ததால், இத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் புதிய ஊக்கம் பெற்றனர். மொத்தப் பன்றி இறைச்சியில் 85% இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. டென்மார்க்கில் விற்பனைத் துறையில் இடைநிலையர்கள் அறவே அகற்றப்பட்டுள்ளனர். ஏற்றுமதியாகும் இறைச்சியில் பெரும் பகுதி ஏற்றுமதிச் சங்கங்களினால் செய்யப்படுகின்றது. சில கூட்டுறவுப் பன்றி இறைச்சிச் சங்கங்கள் ஒன்று கூடி ஓர் ஏற்றுமதிச் சங்கத்தையும் கூட்டமைப்பு முறையில் (Danish Co-op. Bacon Trading Company) உருவாக்கியுள்ளன. டென்மார்க்கில் உற்பத்தி செய்யப்படும் மொத்தப் பன்றி இறைச்சியில் 88% சதவிகிதம் இச்சங்கத்தினால் கையாளப்படுகின்றது.

இனி, டென்மார்க்கில் இப்பன்றி இறைச்சித் தொழிற்சாலைகளின் வளர்ச்சியைக் காண்போம்.

ஆண்டுகள்	உறுப்பினர் எண்ணிக்கை (ஆயிரங்களில்)	சங்கங்கள் எண்ணிக்கை	மொத்த விற்பனை (மிலியனில்)
1939	194	70	5,534 குரோனர்
1945	198	71	5,813 ,,
1946	202	71	5,934 ,,
1947	203	73	7,076 ,,
1948	204	73	7,307 ,,
1949	206	75	10,562 ,,
1955	—	62	2,292 ,,

1967-ஆம் ஆண்டில், இத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 61 ஆகும். இறைச்சிக்கெனக் கொல்லப்படும் பன்றிகளில் 89% இக்கூட்டுறவுத் தொழிற்சாலைகளால் கையாளப்படுகின்றது. 1967-ஆம் ஆண்டின் மொத்த விற்பனை 5,000 மிலியன் குரோனராகும். (Rs. 500 Crores). சில கூட்டுறவுச் சங்கங்கள் 'எலும்புத் தூள் உரம்' தயாரிக்கும் தொழிற்சாலைகளையும் (Bone-Meal Factories) உணவுப் பொருள்களைத் தகர அடைப்புக்களில் வைத்தடைக்கும் தொழிற்சாலைகளையும் (Canneries), கால்நடைகளின் கொழுப்பு நெய் சுத்திகரிப்புச் சாலைகளையும் (Fat Refineries) நடத்தி வருகின்றன.

கிராமங்களில் இயங்கி வரும் கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் ஒன்று சேர்ந்து, ஒரு தேசியக் கூட்டமைப்பைக் கூட்டுறவுப் பன்றி இறைச்சித் தொழிற்சாலைகளின் (National Federation of Danish Co-op. Bacon Factories) நலன் கருதி அமைத்துள்ளன. இத்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் தேவைக்கேற்ப நிதி வசதிகளையும் அளித்து வருகின்றது. பன்றி வளர்ப்பு பற்றியும் அவ்வப்போது ஆலோசனைகள் அளிக்கப்படுகின்றன.

வழக்கமாய் உறுப்பினர்கள் 'கூட்டுத் தனித் தனிப் பொறுப்பின்' கீழ்ப் பணிபுரிந்து வருகின்றனர். வேறுபாடின்றி, அனைவரும் உறுப்பினர்களாக அனுமதிக்கப் படுகின்றனர். தற்போது, டென்மார்க் பன்றி இறைச்சித் தொழிற்சாலைகள் குளிர் பதன வசதிகளைக் கொண்ட அறைகளையும் உருவாக்கி வருகின்றன.

கூட்டுறவு முட்டை ஏற்றுமதிச் சங்கம்
(Co-op. Egg Export Association)

டென்மார்க்கின் முக்கிய விவசாய ஏற்றுமதிப் பொருள்களில் முட்டையும் ஒன்றாகும். டென்மார்க்கில் முட்டை வியாபாரம் சென்ற நூற்றாண்டின் இறுதியிலிருந்துதான் வளர்ச்சி பெறத் தொடங்கியது. ஏற்றுமதியாகும் மொத்த எண்ணிக்கையில் 90% இங்கிலாந்து நாட்டிற்கு அனுப்பப்படுகின்றது. 1946-ஆம் ஆண்டு, 11 மிலியன் கிலோ எடையுள்ள முட்டைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. பெரும்பாலும், தனி வணிகர்களே ஏற்றுமதியைச் செய்து வந்தனர். அவர்கள் முட்டைகளின் தரத்தில் போதுமான கவனம் செலுத்தவில்லை. 1895-ஆம் ஆண்டு, 'கூட்டுறவு முட்டை ஏற்றுமதிச் சங்கம்' அமைக்கப்பட்டது. இச்சங்கம் முட்டைகளை நன்கு தரம் பிரித்து; அவைகளில் டென்

மார்க்கின் 'வியாபாரக் குறியை' இட்டு நல்ல முறையில் ஏற்றுமதி செய்யத் தொடங்கியது. முட்டைகளின் தரத்திற்கேற்பக் கோழிப் பண்ணைகளை நடத்தி வரும் குடியானவர்களுக்கு விற்பனைத் தொகை வழங்கப்படுகின்றது. தரமான முட்டைகளை ஏற்றுமதி செய்வதால், டென்மார்க் முட்டைகளுக்கு இங்கிலாந்தில் நல்ல கிராக்கி உள்ளது,

1937-ஆம் ஆண்டு, மொத்தப் பறவைகளின் (கோழி, வாத்து போன்றவை) எண்ணிக்கை 33 மிலியனாகும். 1960-ஆம் ஆண்டு டென்மார்க்கில் 7 ஏற்றுமதிச் சங்கங்கள் இயங்கி வந்தன. இவை யாவும் 'டென்மார்க் கூட்டுறவு முட்டை ஏற்றுமதிச்சங்கம்'(Danish Co-op. Egg Export Association) என்ற கூட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன. 1960-ஆம் ஆண்டு ஏற்றுமதி செய்யப்பட்ட முட்டைகளின் மொத்த மதிப்பு 176 மிலியன் குரோனராகும். 1962-ஆம் ஆண்டில் மொத்த விற்பனை 156 மிலியன் குரோனராகவும், 1967-ஆம் ஆண்டில் 100 மிலியன் குரோனராகவும், குறைந்துள்ளது. எனினும், முட்டை ஏற்றுமதி மூலமும் டென்மார்க் தன் பொருளாதார நிலையை நன்கு உயர்த்தி வருகின்றது என்பதில் ஐயமில்லை.

கூட்டுறவு அளிப்புச் சங்கங்கள் (Supply Societies)

கூட்டுறவு விற்பனையேற்பாட்டினால் விளைந்த நன்மைகளைக் கண்ட டென்மார்க் மக்கள், தங்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் பெறுவதற்கென 'அளிப்புச் சங்கங்களையும்' நிறுவத் தொடங்கினர். இதன் விளைவாகக் கூட்டுறவு அளிப்புச் சங்கங்கள் பெருமளவில் வளர்ச்சி பெறத் தொடங்கின. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சங்கம் அமைக்கப்பட்டது. இவ்வாறு அமைக்கப்பட்ட சுமார் 880 சங்கங்கள் ஒன்றுகூடி, ஒரு 'மத்திய அமைப்பை' (United Co-op. Supply Association) உருவாக்கின. குடியானவர்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் விற்பனை செய்யத் தொடங்கியது இம்மத்திய அமைப்பு. இம்மத்திய அமைப்பு டென்மார்க்கின் தலைநகரான 'கோப்பன்ஹேகன்' (Copenhagen) என்ற நகரில் ஒரு 'மொத்த விற்பனைப் பண்டகசாலையைப்' (Wholesale Store) பெற்றுள்ளது. இவ்வியக்கத்தின் வளர்ச்சிக்கென ஒரு வாரப் பத்திரிகையையும் நடத்தி வருகின்றது இம்மத்தியச் சங்கம். கால்நடைத் தீவனத்தைக் குடியானவர்களுக்கு அளிப்பதற்கென்று பல கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தப்படுகின்றன. இவை தவிர, 'நிலக்கரி கொள்

முதல் சங்கங்களும்' (Coal Purchasing Societies) உறுப்பினர்களின் நலன் கருதி அமைக்கப்பட்டுள்ளன. 'உரக் கொள்முதல் சங்கங்களும் டென்மார்க்கில் நிறுவப்பட்டன. பால் பண்ணைகள் பெருகியதால் கால்நடைத் தீவனம் பெருமளவில் டென்மார்க்கில் தேவைப்பட்டது. பிண்ணுக்கு (Oil Cake), மக்காச்சோளம் (Maize) போன்ற கால் நடைத் தீவனப் பொருள்கள் தனியார் துறையில் இயங்கி வந்த வணிகர்களிடமிருந்தே கொள்முதல் செய்யப்பட்டு வந்தன. இலாபத்தையே குறிக்கோளாகக் கொண்டிருந்த அவ்வணிகர்கள் பொருள்களின் தரத்தைப் பற்றிக் கவலை கொள்ளவே இல்லை. இந்நிலையில், இப்பொருள்களின் தரத்தைக் காப்பதற்கென 1898-ஆம் ஆண்டு ஒரு சட்டம் இயற்றப்பட்டது, எனினும், நிலைமை சீராகவில்லை. இச்சூழ்நிலையில்தான், விவசாயிகள் ஒன்று சேர்ந்து கூட்டுறவு அளிப்புச் சங்கங்களை அமைத்தனர். இதன் பின்னர்தான், தரமான கால்நடைத் தீவனப் பொருள்கள் கிடைக்கலாயின.

தனிப்பட்ட குடியானவர்கள் ஒன்று சேர்ந்து 'கூட்டுறவு கொள்முதல் கூட்டிணைப்பு' (Co-op. Purchase Federation) என்ற அமைப்பை ஏற்படுத்தினர். இக்கூட்டிணைப்பின் மூலம் தரமான விதைகள், எரு, கால்நடைத் தீவனம் போன்ற பல முக்கியப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. குடியானவர்களிடமிருந்து முட்டை, பழவகைகள், காய்கறி வகைகள், வெண்ணெய் போன்ற பொருள்களை இக்கூட்டிணைப்பு கொள்முதல் செய்கின்றது. சுமார் 4000 நபர்களை உறுப்பினர்களாக கொண்டு விளங்குகின்றது இக்கூட்டமைப்பு. பண்ணைப் பொருள்கள் யாவும் கூட்டுறவு முறையில் விற்பனை செய்யப்படுவது போல பண்ணைகளுக்குத் தேவையான பொருள்கள் கூட்டுறவு முறையில் கொள்முதல் செய்யப்படுகின்றன. விற்பனைத் துறை, கொள்முதல் துறை ஆகிய இரு துறைகளிலுமே கூட்டுறவு அமைப்புகள் இயங்குவதால் குடியானவர்கள் பிரச்சினையற்று வாழ்கின்றனர்,

இனி, டென்மார்க்கில் இயங்கி வரும் கூட்டுறவு நுகர்வோர் சங்கங்களைக் காண்போம். ஏனைய கூட்டுறவுச் சங்கங்களைப் போலவே, கூட்டுறவு நுகர்வோர் சங்கங்களும் டென்மார்க்கின் பொருளாதாரத்தைக் கணிசமாக உயர்த்தி வருகின்றன. இச்சங்கங்கள் மூலம் டென்மார்க் மக்கள் பெற்றுவரும் நன்மைகள் கணக்கிலடங்கா,

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

இங்கிலாந்தைச் சேர்ந்த 'ராக்டேல் முன்னோடிகள்' அமைத்த கூட்டுறவுப் பண்டகசாலையைக் கண்ட டென்மார்க் சமூக ஊழியர் ஒருவர் (H. C. Sonne) டென்மார்க்கிலும் முதன் முதலாகக் கூட்டுறவு அமைப்பொன்றை அமைக்க முயற்சி எடுக்கலானார். 'திஸ்டெட்' (Thisted) என்ற இடத்தில் வாழ்ந்து வந்த பலருடன் கலந்து பேசி, அவர்களின் ஆதரவுடன் 1886-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாள் 'திஸ்டெட் தொழிலாளர் சங்கம்' என்ற கூட்டுறவு அமைப்பைத் தொடங்கினார். இப்பண்டக சாலையின் மொத்த விற்பனை கணிசமாக உயரத் தொடங்கவே, ஒரு நூல் நிலையமும், படிக்கும் அறைகளும் அமைக்கப்பட்டன. தொழிலாள உறுப்பினர்களுக்கு மருத்துவ வசதிகளும் அளிக்கப் பட்டன. இப்பண்டகசாலை பெற்ற பெரு வெற்றியைக் கண்ட ஏனைய பகுதி மக்கள் தங்கள் நலன் கருதிப் பல கூட்டுறவுப் பண்டகசாலைகளை அமைக்கத் தொடங்கினர். 1871-ஆம் ஆண்டு இப்பண்டகசாலைகளின் எண்ணிக்கை 86-ஆகவும், 1874-ஆம் ஆண்டு 119-ஆகவும் உயர்ந்தது. நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் தனியார் துறையுடன் கடும் போட்டியில் ஈடுபட்டாலும், முடிவில் தனியார் துறையை வெற்றி கொண்டது கூட்டுறவு இயக்கம்.

1. கூட்டுறவு சில்லறை விற்பனைச் சங்கங்கள் (Retail Societies) :

1968-ஆம் ஆண்டில் 1787 சில்லறை விற்பனைச் சங்கங்கள் 8.7 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்டு டென்மார்க்கில் இயங்கி வந்தன. இச்சங்கங்களே தற்போது பெருமளவில் இயங்கிவரும் விற்பனை அமைப்பாகும். மொத்தக் குடும்பங்களில் 50% இச்சங்கங் களினால் பெருநன்மைகள் பெறுகின்றனர். 1966-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், இச்சங்கங்கள் யாவும் ஒன்று கூடி ஓர் ஐக்கிய அமைப்பை (Amalgamation) 'டென்மார்க் நுகர்வோர் சங்கம்' (Denmark's Consumer Society) என்ற பெயரில் அமைத்தன. பெரும்பாலான சங்கங்கள் அளவில் சிறியனவாகவும், ஒரே ஒரு பண்டகசாலையைப் பெற்றும் விளங்கின. இதற்கு விதி விலக்காகக் 'கோப்பன்ஹேகனில்' இயங்கி வரும் நுகர்வோர் சங்கம் 4 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்டு விளங்குகின்றது.

இச்சங்கத்திற்குச் சொந்தமான கடைகள் நகரில் மட்டும் 400 என கணக்கிடப்பட்டுள்ளன. இவை தவிர, பல சிறப்பு அங்காடி களும் நடத்தப்படுகின்றன. 1963-ஆம் ஆண்டு நுகர்வோர் கூட்டுறவுக் கடைகளின் மொத்த விற்பனை சுமார் 3670 மில்லியன்

குரோனராகும். மொத்தச் சில்லறை வணிகத்தில் 14% இக் கூட்டுறவுக் கடைகளினால் கையாளப்படுகின்றது.

கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம் (Wholesale Society)

1869-ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே சில்லறை விற்பனைச் சங்கங்கள் யாவும் ஒரு மொத்த விற்பனைச் சங்கத்தை (F.D.B.) அமைத்தன. அனைத்துக் கூட்டுறவுத் தொடக்கச் சங்கங்களும் இம்மொத்த விற்பனைச் சங்கத்துடன் சிறந்த முறையில் இணைக்கப்பட்டுள்ளன. இச்சங்கத்தின் முக்கிய நோக்கம் உறுப்பினர்களுக்குப் பல துறைகளிலும் உதவி அளிப்பதேயாகும். உறுப்பினர்களாக விளங்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான பொருள்களை இச்சங்கம் கொள்முதல் செய்தோ அல்லது உற்பத்தி செய்தோ விநியோகம் செய்கின்றது. உறுப்பினர் சங்கங்களுக்கு 'வாக்குரிமை' இருப்பதால் மொத்த விற்பனைச் சங்கத்தின் திட்டங்கள் முறையாக வகுக்கப்படுகின்றன. ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒரு 'வாக்கு' (Vote) அளிக்கப்பட்டுள்ளது. மொத்த விற்பனைச் சங்கத்திடமிருந்து 1,00,000 குரோனர் மதிப்புள்ள பொருள்களைக் கொள்முதல் செய்திருக்கும் (கடந்த ஆண்டில்) எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்படுகின்றது. இதன் மூலம், 2000 உறுப்பினர்களைக் கொண்ட 'பொதுமன்றம்' (General Body) அமைக்கப்பட்டுள்ளது. இயக்குநர் அவையைத் தேர்ந்தெடுப்பதற்கென மொத்தப் பகுதியும் 31 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தொடக்கச் சங்கங்களின் உறுப்பினர்கள் இரண்டாண்டுகளுக்கொருமுறை கூடி, மாவட்ட அளவில் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கின்றனர். மாவட்டப் பிரதிநிதிகள் ஒன்றுகூடி ஒரு 'சபையை', அமைக்கின்றனர். இவ்வவையின் மூலமே 'இயக்குநர் அவை' தேர்ந்தெடுக்கப்படுகின்றது. வியாபார சம்பந்தமான எல்லாக் காரியங்களும், மாவட்டப் பிரதிநிதிகளின் உதவியுடன் இயங்குநர் அவையால் நிறைவேற்றப்படுகின்றன. நிருவாகம் செம்மையாக நடைபெற இந்த இயக்குநர் அவையே காரணமாகும்.

டென்மார்க்கின் இம்மொத்தவிற்பனைச் சங்கம் (F.D.B.) நாட்டின் பல்வேறு இடங்களில் பண்டகங்களைப் பெற்றுள்ளது. தற்போது, ஏழு பிரதேச 'பண்டகங்கள்' (Ware Houses) இம்மொத்தவிற்பனைச் சங்கத்திற்கு உரிமையானவையாக உள்ளன. அந்தந்தப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் கூட்டுறவுச்

சங்கங்களுக்குத் தேவையான பொருள்களைத் தாமதமின்றி விநியோகம் செய்வதற்கு இந்த ஏற்பாடு மிகவும் உறுதுணையாக விளங்குகின்றது மிகச் சிறந்த முறையில் பொருள்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. 1968-ஆம் ஆண்டு, இம் 'மொத்த விற்பனைச்சங்கத்தின்' மொத்தவிற்பனை 2000 மிலியன் குரோனரர்கும். மொத்த விற்பனையில் 82% உணவுப் பொருட்களாகும். உணவுப் பொருள்களின் தரம் நன்கு நிர்ணயிக்கப்பட்ட பின்பே, அவைகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. தரத்தைச் சோதனை செய்வதற்கெனப் பல ஆய்வுக் கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. தரத்தைச் சோதிப்பதற்கென ஒரு 'சமையலறை'யும் அமைக்கப்பட்டுள்ளது. வாரத்திற்கொரு முறை கூட்டுறவுச் சங்கங்களின் தேவைக்கேற்ப பொருள்கள் விநியோகிக்கப்படுகின்தன. பண்டகசாலைகளில் குழப்பம் ஏற்படாமலிருப்பதற்கென இரவு நேரங்களில் பொருள்கள் மோட்டார் வாகனங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றன. எனவே, பகல் நேரங்களில் விற்பனை பாதிக்கப் படுவதில்லை. இம்மொத்த விற்பனைச் சங்கம் எப்பொழுதும் செலவுகளைக் குறைப்பதில் தீவிரக் கவனம் செலுத்தி வருகின்றது. செயற்பாடுகளில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் காரணமாகச் செலவுத் தொகையின் சதவிகிதம் கணிசமாகக் குறைந்து வருகின்றது. 1964-ஆம் ஆண்டு, 24% எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 1968-ஆம் ஆண்டு, செலவுத்தொகை 13%-ஆகக் குறைந்துள்ளது.

மொத்த விற்பனைச் சங்கத்தால் விற்பனை செய்யப்படும் பொருள்களில் நான்கில் ஒரு பங்கு இச்சங்கத்திற்குச் சொந்தமான 20 தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இத் தொழிற்சாலைகளில் பெரியது 'காப்பிக் கொட்டை பக்குவப் படுத்தும் தொழிற்சாலை'யேயாகும். இதர தொழிற்சாலைகள் கயிறு, இனிப்பு வகைகள், சோப்பு, புகையிலை, ஆடைகள், மதுவகைகள், ரொட்டி வகைகள், தட்டுமுட்டுப் பொருள்கள், எண்ணெய் வகைகள் நறுமணச் சரக்குகள் (Spices) முதலானவற்றை உற்பத்தி செய்கின்றன.

இம்மொத்த விற்பனைச் சங்கம் உறுப்பினர்களாக விளங்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவ்வப்போது தேவையான ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றது. குறிப்பாகப், புதிய கடைகளை அமைப்பதில் இதன் 'கட்டடக்கலைப் பிரிவு' உறுப்பினர்களுக்குச் கிறந்த முறையில் ஆலோசனைகளை அளிக்கின்றது. மேலும், புதிய பண்டகசாலைகளை அமைப்பதற்குத் தகுந்த இடங்

களைத் தேர்ந்தெடுப்பதற்கென ஒரு 'தேசியச்சுற்றாய்வு' (National Survey) இச்சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிய கடைகள் அமைவதற்கென இச்சங்கம் நிதிவசதிகளையும் அளித்து வருகின்றது. 1969-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை, புதிய கடைகள் அமைப்பதற்கென 102 மிலியன் குரோனர் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு இம்மொத்த விற்பனைச் சங்கம் 'தணிக்கை' செய்வதிலும் உதவி வருகின்றது. தற்போது மொத்தக் கூட்டுறவுச் சங்கங்களில் 34% இவ்வசதியைப் பெற்றுள்ளன.

இவ்வாறு, டென்மார்க்கின் மொத்த விற்பனைச் சங்கம் ஏனைய நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உற்ற நண்பனாக விளங்குகின்றது.

விவசாயத் துறையில் இயங்கி வரும் பிற கூட்டுறவுச் சங்கங்கள்

டென்மார்க் ஒரு விவசாய நாடாகையால், கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயத்துறை முழுவதுமே பரவி அமைக்கப்பட்டுள்ளன. இதன் பயனாகக், கிராமங்களில் வாழும் மக்கள் எளிதாகத் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்றனர். பால் பண்ணைத் தொழில், பன்றி இறைச்சித் தொழில், முட்டை விற்பனைத் தொழில் ஆகிய மூன்று முக்கியத் தொழில்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக நன்மைகள் வந்தடைகின்றன. இவையன்றி, டென்மார்க் விவசாயத் துறையில் வேறு பல கூட்டுறவுச் சங்கங்களும் சேவை புரிந்து வருகின்றன. அவை யாவன—

1. கால்நடைக் கூட்டுறவுச் சங்கங்கள் (Cattle Societies) :

டென்மார்க் பால்பண்ணைத் தொழிலின் வெற்றி அந்நாட்டுப் பசுக்களையே பொறுத்திருக்கின்றது. எனவே, கால்நடைகளின் வளர்ப்புக்கென (Breeding) இச்சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பால் பண்ணைத் தொழில் டென்மார்க்கின் முதுகெலும்பாகத் திகழ்வதால், கால்நடைகளை உறுப்பினர்கள் நன்கு பராமரிப்பதற்கு இச்சங்கங்கள் பெரிதும் உறுதுணையாக விளங்குகின்றன. கால்நடைகளின் வளர்ப்பு முறை, இனப் பெருக்கம் போன்ற துறைகளில் உறுப்பினர்களுக்கு இச்சங்கங்கள் ஆலோசனைகள் வழங்குகின்றன. கால்நடைகளைச் சார்ந்துள்ள பிரச்சினைகளை இனி ஆராய்வோம்.

முதலாவதாக, ஆடுமாடுகளின் வளர்ப்பு முறை உறுப்பினர்களுக்குப் பெரும் பிரச்சினையாக உள்ளது.

இரண்டாவதாக, பராமரிக்கத்தக்க வகையில் பசுக்கள் பால் தருகின்றனவா என்று பாலின் தரம், அதன் அளவு முதலானவற்றைச் சோதனை செய்தல் எளிதான காரியமன்று.

மூன்றாவதாக, உற்பத்தி செய்யப்பட்ட பாலுக்கு நல்ல விலையை நிருணயம் செய்தலும் ஒரு பிரச்சினையே! நான்காவதாக, ஆடு மாடுகள் நோய்களின் காரணமாகவும், விபத்துக்கள் காரணமாகவும் பாதிக்கப்படலாம். எனவே, அவைகளைக் 'காப்பீடு' செய்தல் அவசியமாகின்றது.

இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகப் பல வழிமுறைகள் தீவிரமாகச் சிந்திக்கப்பட்டன. அதன் பயனாக எழுந்தவையே பிற கூட்டுறவுச் சங்கங்கள்.

2. பசு தேர்வாய்வுச் சங்கங்கள் (Cow Testing Associations):

இச்சங்கங்களின் உதவியுடன் உறுப்பினர்கள் பசுக்களின் பராமரிப்புக் கலையை நன்கு அறிந்து கொள்கின்றனர். ஒரு குறிப்பிட்ட பசு பராமரிக்கத்தக்கதா என்பதை இச்சங்கம் மூலம் அறிந்துகொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இக்காரியத்தை நன்கு 'திறனாய்வு' செய்வதற்கென ஒரு பயிற்சி பெற்ற பணியாளர் (Controller) நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வதிகாரி நன்கு பசுக்களைச் சோதனை செய்து உறுப்பினர்களுக்கு அறிவுரைகள் வழங்குவார். ஆனால் வழங்கப்படும் ஆலோசனைகள் உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற கட்டாயமில்லை. இச்சங்கத்தின் செலவை உறுப்பினர்களே ஏற்றுக்கொள்கின்றனர். இவ்வகைச் சங்கங்கள் டென்மார்க்கில் பெரு வெற்றி பெற்றுள்ளன. இத்தகைய சங்கம் முதன் முதலில் 1895-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. நாளடைவில் இச்சங்கங்களின் எண்ணிக்கை கணிசமாக உயரலாயிற்று. இச்சங்கங்களுக்கு டென்மார்க் அரசாங்கம் 'உதவித் தொகை'யும் (Subsidy) அவ்வப்போது அளித்து வருகின்றது.

3. கால்நடை முன்னேற்றச் சங்கங்கள் (Bull Clubs):

இக்கூட்டுறவுச் சங்கங்களும் விவசாயத் துறையில் பெரும் பங்கு வகிக்கின்றன. இச்சங்கங்கள் (Bull Clubs) உறுப்பினர்களின் பசுக்களின் மூலம் சிறந்த கால்நடைகளைத் தோற்றுவிக்கப் பாடுபடுகின்றன. தரமான கால்நடைகள் இச்சங்கங்கள் மூலமாகத்தான் உருவாக்கப்படுகின்றன. இதையொட்டிச், சிறந்த 'விடை எருதுகளை' (Bulls) இச்சங்கங்கள் பெற்றுள்ளன. உறுப்பினர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. 1902-ஆம் ஆண்டிலிருந்து இச்சங்கங்கள் அதிகரிக்கத் தொடங்கின. உறுப்பினர்கள் எண்ணிக்கையும் கணிசமாக உயரலாயிற்று.

4. கால்நடைக் காப்புறுதிச் சங்கங்கள் (Cattle Insurance Socs.) :

டென்மார்க்கில் இவ்வகைச் சங்கங்கள் நன்கு வளர்ச்சி பெறவே இல்லை. ஏனெனில், தனியார் துறையில் இயங்கி வந்த 'காப்பீடுக் கம்பெனிகள்' பெற்று வந்த 'முனைமத்திற்கும்' கூட்டுறவுச் சங்கங்கள் வசூலித்த 'முனைமத்திற்கும்' (Premium) வேறுபாடு இல்லையாதலால், குடியானவர்கள் தனியார் பங்கமைப்புகளையே நாடினர்.

மேலும், இத்துறையில் 'நட்டஅச்சம்' (Risks) அதிகமாதலால், கூட்டுறவுச் சங்கங்கள் கால்நடைகளுக்குக் காப்புறுதி வழங்குவதில் தயக்கம் காட்டின.

தற்போது, இச்சங்கங்கள் கணிசமாக வளர்ச்சி பெற்று வருகின்றன. அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

டென்மார்க்கில் வளர்ச்சி பெற்றுள்ள பிற கூட்டுறவுச் சங்கங்களாவன—

(i) கூட்டுறவு இறைச்சிக் கொட்டில் நிலையங்கள் (Co-op. Slaughter Houses);

(ii) கூட்டுறவுக் கால்நடை விற்பனைச் சங்கங்கள் (Co-op, Cattle Sale Societies);

(iii) கூட்டுறவு விதை அளிப்புச் சங்கங்கள் (Co-op. Seed Supply Societies);

(iv) கூட்டுறவுப் பழ உற்பத்தியாளர் சங்கங்கள் (Fruit Growers Co-op. Associations);

(v) கூட்டுறவுக் கால்நடைத் தீவனச் சங்கங்கள் (Co-op. Feeding-Stuff Societies);

(vi) கூட்டுறவு உரக் கொள்முதல் சங்கம் (Co-op. Fertilizer Purchase Society).

விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி

டென்மார்க் விவசாயத் தொழில் தற்போது நன்கு வளர்ச்சி பெற்று விளங்குகின்றது. இதன் வளர்ச்சிக்கு முக்கியக் காரணம் கூட்டுறவுச் சங்கங்களேயாகும். விற்பனைத்துறை, கொள்முதல்

துறை, உற்பத்தித்துறை ஆகிய எல்லாத் துறைகளிலுமே கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பால் பொருள்கள், பன்றி இறைச்சி, முட்டை உற்பத்தி முதலானவை சிறப்புடன் வளர்ந்தமைக்கு கூட்டுறவுச் சங்கங்களே தலையாய காரணங்களாகும். டென்மார்க்கில் மீன் பிடிப்புத் தொழிலும் மக்களால் நடத்தப்படுகின்றது. இத்தொழிலின் வளர்ச்சிக்கெனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களின் சிறந்த பணிகளினுல்தான், டென்மார்க்கின் பொருளாதாரம் இன்று கண்டோர் வியக்கும் வண்ணம் உயர்ந்து காணப்படுகின்றது. இனி பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியைப் புள்ளி விவரங்கள் மூலம் காண்போம்:

டென்மார்க் விவசாயக் கூட்டுறவு சங்கங்களின் நிலை (1966):

கூட்டுறவுச் சங்கத்தின் வகை	சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர் எண்ணிக்கை	மொத்த விற்பனை (மிலியன் குரோனில்)
கூட்டுறவுப் பால் பண்ணைகள்	910	1,40,000	2,155
வெண்ணெய் ஏற்றுமதிச் சங்கங்கள்	9	668	604
பாலேடுக்கட்டி ஏற்றுமதிச் சங்கங்கள்	1	98	67
கூட்டுறவுப் பன்றி இறைச்சித் தொழிற்சாலைகள்	62	1,65,000	2,995
முட்டை ஏற்றுமதிச் சங்கங்கள்	1480	45,000	176
கால்நடை ஏற்றுமதிச் சங்கங்கள்	21	38,000	180
கால்நடை விற்பனைச் சங்கங்கள்	58	1,15,000	307
கூட்டுறவு இறைச்சிக் கொட்டில்கள்	4	80,000	120
கால்நடைத் தீவனக் கொள் முதல் சங்கங்கள்	1753	1,02,000	808
உரக் கொள்முதல் சங்கங்கள்	1550	60,000	183
பழவிற்பனை யேற்பாட்டுச் சங்கங்கள்	6	1,557	12
மீன் விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள்	37	1,418	80

டென்மார்க் கூட்டுறவுப் பால் பண்ணைகள் மொத்தப் பால் உற்பத்தியில் 91% கையாள்கின்றன.

வெண்ணெய் ஏற்றுமதியில் 65% 'கூட்டுறவு வெண்ணெய் ஏற்றுமதிச் சங்கங்'களினால் செய்யப்படுகின்றது,

மொத்த முட்டை ஏற்றுமதியில் 36% கூட்டுறவுச் சங்கங் களினால் செய்யப்படுகின்றது.

தேவைப்படும் மொத்தக் கால்நடைத் தீவனத்தில் 53% கூட்டுறவுச் சங்கங்களினால் விநியோகிக்கப்படுகின்றது.

கூட்டுறவு இறைச்சிக் கொட்டில்களில்தான் இறைச்சிக் கென்று கொல்லப்படும் கால்நடைகளில் 90% கொல்லப்படுகிறது.

மொத்த 'இறைச்சி, கால்நடை ஏற்றுமதியில் 42% கூட்டுறவுச் சங்கங்களினால் கையாளப்படுகின்றது.

டென்மார்க்கில் கூட்டுறவு வியாபாரம் ஒவ்வொருவருக்கும் 216 டாலர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது உலகிலேயே இது அதிகமாகும். (அமெரிக்கா—129 டாலர்; கனடா—142 டாலர்).

கூட்டுறவுக் கடன் சங்கங்கள்
(Credit Associations)

டென்மார்க் ஒரு விவசாய நாடாகையால், குடியானவர்கட்கு நிதிவசதிகள் அவ்வப்போது தேவைப்பட்டன என்பதில் விந்தையேதுமில்லை. ஆனால் விவசாயிகளின் குறுகிய காலக் கடன் வசதிகளை நாடவில்லை. பால் பண்ணைத் தொழிற்சாலை களிலும், முட்டை ஏற்றுமதிச் சங்கங்களிலும் உறுப்பினர்களுக்கு அவ்வப்போது அவர்களது உற்பத்திப் பொருள்களின் தரத்திற் கேற்பத் தொகை வழங்கப்படுவதால், அவர்கள் தங்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் தடையின்றி கொள் முதல் செய்து வந்தனர். கூட்டுறவுச் சங்கங்களும் தேவை யான நிதிவசதிகளை 'வணிக வங்கிகளிடமிருந்து' (Commercial Banks) எளிதாகப் பெற்று வந்தன. 18-ஆம் நூற் ருண்டின் இறுதியிலிருந்து அரசாங்கமும் விவசாயிகளின் நலன் கருதிக் கடன் வசதிகளை (Credit Facilities) அளிக்கத் தொடங் கியது. எனவே, டென்மார்க்கின் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் முறையாக வளர்ச்சி பெறவில்லை.

1898-ஆம் ஆண்டு, விவசாயிகளுக்குக் குறுகியகால கடன் வசதிகளை அளிப்பதற்கெனக் 'கூட்டுறவுக் கடன் சங்கங்கள்'

(Loan Societies) அமைக்கப்பட்டன. 1913-ஆம் ஆண்டு இச் சங்கங்களின் எண்ணிக்கை 168-ஆக உயர்ந்தது. 1914-ஆம் ஆண்டு ஏற்பட்ட போரின் விளைவாக, விவசாயப் பொருள்களின் விலை பன்மடங்கு அதிகரிக்கத் தொடங்கியது. இதன் விளைவாகப் பல கடன் சங்கங்கள் மூடப்பட்டன. கொடுக்கப்பட்டிருந்த கடன்கள் திருப்பிப் பெறப்பட்டன.

1914-ஆம் ஆண்டு, மீண்டும் கடன் வழங்கும் அமைப்புகளைக் கூட்டுறவு அடிப்படையில் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக, 'டென்மார்க் கூட்டுறவு வங்கி, (Co-op. Bank of Denmark) தொடங்கப்பட்டது. 'வரையறையற்ற பொறுப்பின்' அடிப்படையில் பல 'கூட்டுறவுக் கடன் சங்கங்கள்' கிராமப்புறங்களில் 1915-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டன. இச்சங்கங்கள் உறுப்பினர்களிடமிருந்து வைப்புத் தொகையைப் பெற்று அவர்களுக்குச் சிக்கன நடவடிக்கைகளைக் கற்பித்தன. உறுப்பினர்களுக்கு அவ்வப்போது கடன் வசதிகளையும் அளிக்கத் தொடங்கின. சிறந்த நிர்வாகத்தினால் கிடைக்கும் இலாபத் தொகை 'காப்பு நிதியில்' பாதுகாக்கப்படுகின்றது. தொடக்கத்தில் டென்மார்க் கூட்டுறவு வங்கியின் நேரடிப் பார்வையில் இயங்கி வந்த இக்கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 1921-ஆம் ஆண்டிலிருந்து அவ்வங்கியின் தொடர்பை அறவே அகற்றின. இக்கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஒன்று சேர்ந்து, இணைப்புச் சங்கங்களை உருவாக்கிக்கொண்டன.

டென்மார்க்கில் இயங்கிவரும் டென்மார்க் கூட்டுறவு வங்கி' ஒரு முக்கிய நிறுவனமாக இன்றும் கருதப்படுகின்றது. இக் கூட்டுறவு வங்கியின் கிளை அலுவலகங்கள் நாடு முழுவதும் பரவி நிற்கின்றன. பெயரளவில் இவ்வங்கி 'கூட்டுறவு' என்ற சொல்லைக் கொண்டு விளங்கினாலும், கூட்டுறவுச் சங்கங்களுடன் கடும் போட்டியிலும் ஈடுபடுகின்றது. இவ்வங்கியின் மூலதனத்தில் மூன்றில் இரண்டு பங்கு கூட்டுறவு நிறுவனங்களைச் சேர்ந்ததாகும். தனி நபர்களுக்கும், கூட்டுறவு நிறுவனங்களுக்கும் இக் கூட்டுறவு வங்கி கடன் வசதிகளை அளிக்கின்றது. இவ்வங்கியின் வட்டி விகிதம் சற்று உயர்வாகக் காணப்படுகின்றது.

விவசாயிகளின் நிதித் தேவைகளை நிறைவு செய்வதற்காக 1850-ஆம் ஆண்டிலேயே கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. 1850-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் நாள், டென்மார்க் அரசாங்கம் ஒரு சிறப்புச் சட்டத்தை நிறைவேற்றியது. இச்சட்டத்தின் பயனாக, விவசாயிகள் தங்களுக்குத் தேவை

யான கடன் வசதிகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாகப் பெறுவதற்கு வழிமுறைகள் செய்யப்பட்டன. அதன்படி, நீண்டகாலக் கடன் வசதிகளை விவசாயிகளுக்கு அளிப்பதற்கெனக் கணிசமான கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அமைக்கப்பட்டன. இச்சங்கங்கள் மூலம் குறைந்த அளவு நிலத்தைப் பெற்றிருந்த விவசாயிகளும், அளவில் பெரிய பண்ணைகளின் உரிமையாளர்களாக விளங்கிய நில மேலாளர்களும் ஒரு சேர நன்மை பெற்றனர். தேவையான நிலத்தைப் பெறுவதில் சிறு விவசாயிகளுக்கும், நில முன்னேற்றத்திற்குத் தேவையான கடன் வசதிகளை அளிப்பதன் மூலம் நில மேலாளர்கட்கும் இச்சங்கங்கள் பெரிதும் உறுதுணையாக விளங்கின.

இக்கூட்டுறவுக் கடன் சங்கங்கள் (Danish Mortgage Credit Associations) 'புருசியா' நாட்டில் அமைக்கப்பட்டிருந்த சங்கங்களை (Prussian Model of Landschaften) மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்டன. பெரும்பாலும் இக்கடன் சங்கங்கள் டென்மார்க் அரசாங்கத்தின் கண்காணிப்பில் இயங்கி வந்தன. இச்சங்கங்கள் பங்கு மூலதனத்தைப் பெற்றிருக்கவில்லை. தங்களுக்குத் தேவையான நிதி வசதிகளை 'கடனீட்டுப் பத்திர' விற்பனை (Debentures) மூலம் இச்சங்கங்கள் பெறுகின்றன. உறுப்பினர்களுக்கு மட்டுமே கடன் வசதிகள் அளிக்கப்படுகின்றன. உறுப்பினர்களிடமிருந்து 'வைப்புத் தொகை'யை இச்சங்கங்கள் பெறுவதில்லை. நிலத்தின் மொத்த மதிப்பில் 60% வரை உறுப்பினர்களுக்குக் கடன் வசதிகள் அளிக்கப்படுகின்றன. உறுப்பினர்களது விவசாயச் சொத்துக்களின் அடிப்படையில்தான் கடன் வழங்கப்படுகின்றது. உறுப்பினர்கள் இவ்வாறு பெறும் கடன் தொகையை 45-லிருந்து 60 ஆண்டுகளுக்குள் திருப்பி அளித்து விடவேண்டும் என்ற கட்டுப்பாடு உள்ளது. கடன் வசதிகளை நாடும் உறுப்பினர்களுக்கு, கடன் தொகை பணமாக அளிக்கப்படுவதில்லை; 'பத்திரமாக (Bond) அளிக்கப்படுகின்றது. இப்பத்திரங்கள் 'மத்திய நிலவள வங்கி'யிடம் உறுப்பினர்களால் விற்பனை செய்யப்படுவதால், உறுப்பினர்கள் கடன் தொகையைப் பணமாகப் பெறுகின்றனர். இவ்வாறு விற்பனை செய்வதில், உறுப்பினர்களுக்கு உதவி புரிகின்றன இக்கூட்டுறவுக் கடன் சங்கங்கள். இக்கூட்டு நிறுவனங்கள் உறுப்பினர்களின் நலன் கருதிப் பணி புரிபவையாகும்; இலாப நோக்கம் கொண்டு இயங்குபவை அல்ல. இவ்வாறு வழங்கப்படும் கடன் தொகையைக் கொண்டு உறுப்பினர்கள் விவசாயத்திற்குத் தேவையான நிலத்தையும், கட்டடங்களையும் சிறந்த முறையில் மேம்படுத்துகின்றனர். இலாபத்தின் பெரும் பகுதி 'காப்பு நிதி'யில் பாது

காக்கப்படுகின்றது. இந்நிதி ஒரு குறிப்பிட்ட தொகையைத் தாண்டியவுடன், கடன் வசதிகளைப் பெற்றிருக்கும் உறுப்பினர்களுக்கு 'மேலூதியப் பங்குகள்' (Bonus Shares) அளிக்கப்படுகின்றன. விவசாய வளர்ச்சிக்கென வழங்கப்படும் மொத்தக் கடன் வசதிகளில் 70% இக்கூட்டுறவுச் சங்கங்களினால் அளிக்கப்படுகின்றது.

கூட்டுறவு நில அடைமானச் சங்கங்கள் இருவகைப்படும். முதல்வகை அடைமானச் சங்கங்கள் (First Mortgage Associations), இரண்டாம் வகை அடைமானச் சங்கங்கள் (Second Mortgage Associations).

இருவகைச் சங்கங்களும் பொதுவாக ஒரே பணிகளில்தான் ஈடுபட்டுள்ளன. முதல் வகை அடைமானச் சங்கங்கள் 1897-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டவையாகும். இரண்டாம் வகைச் சங்கங்கள் நிலத்தின் மொத்த மதிப்பில் 75% வரை உறுப்பினர்களுக்குக் கடன் வழங்குகின்றன, வட்டி விகிதம் 4½% அல்லது 5% என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1880-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் சிறு நில உரிமையாளர்களுக்குக் கடன் வசதிகள் அளிப்பதற்கெனக் 'கடன் சங்கங்கள்' அமைக்கப்பட்டன. இக்கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு நிதி வசதிகளை அளிப்பதற்கும், அவைகளை நன்கு கண்காணிப்பதற்கும் 1906-ஆம் ஆண்டு 'டென்மார்க் அடைமான வங்கி' (Denmark Mortgage Bank) தொடங்கப்பட்டது. இவ்வங்கியின் தேவைக்கேற்ப டென்மார்க் அரசாங்கம் அவ்வப்போது நிதி உதவிகள் நல்கியது. குடியானவர்களுக்கு மட்டுமின்றி, இதர வணிகர்களுக்கும் இவ்வங்கி கடன் வசதிகளை அளித்து வந்தது. தொடக்கத்தில் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் நிருவாகச் செலவு கணிசமாக உயர்ந்திருந்தாலும், உறுப்பினர்களது நல்லாதரவின் துணைகொண்டு நாளடைவில் நிருவாகச் செலவு குறைக்கப்பட்டது.

கூட்டுறவுக் கடன் சங்கங்களைத் தவிர, 'சேமிப்பு வங்கி'களும் டென்மார்க்கில் முக்கிய நிறுவனங்களாக விளங்குகின்றன. உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் 'வைப்புத் தொகை'யைக் கொண்டு விவசாய வளர்ச்சிக்கென நிதி வசதிகள் அளிக்கப்படுகின்றன. பெரும்பாலும் சொத்துக்களின்பேரில்தான் கடன் வழங்கப்படுகின்றது. அதாவது, உறுப்பினர்களுக்குப் 'பிணைக் கடன்'களே (Secured Loans) அளிக்கப்படுகின்றன. வட்டி விகிதம் மிகவும் குறைவாகக் கணக்கிடப்படுகின்றது. இலாபத்

தொகை முழுவதும் 'காப்பு நிதி'யாகப் பாதுகாக்கப் படுகின்றது. தற்போது, இவ்வங்கிகள் வலிமைமிக்க நிறுவனங்களாக விளங்கு கின்றன.

கூட்டுறவுக் கடன் வழங்குத் துறையில், 1925-ஆம் ஆண்டு ஒரு 'கூட்டுறவு வங்கி' (Andels Banken) அமைக்கப்பட்டது. இவ்வங்கியின் பெரும்பாலான உறுப்பினர்கள் பிற கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களேயாவர். இவ்வங்கி 'பங்கமைப்புச் சட்டத்தின்' (Companies Act) கீழ்ப் பதிவு செய்யப்பட்டுள்ளது. உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது. 'ஒருவருக்கு ஒரு வாக்கு' என்ற கூட்டுறவுக் கொள்கை இவ்வங்கியில் கடைப்பிடிக்கப்படுகின்றது. இவ்வங்கியின் நிர்வாகம் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் 'இயக்குநர் அவை' மூலம் நடைபெறுகின்றது. ஒரு குறிப்பிட்ட தொகையே 'இலாப ஈவாக' (Dividend) உறுப்பினர்களுக்கு வழங்கப்படு கின்றது. உறுப்பினர்களுக்கு ஆண்டுதோறும் இலாபத் தொகையிலிருந்து 'மேலூதியமும்' வழங்கப்படுகின்றது. எனவே, டென்மார்க்கின் இக்கூட்டுறவு வங்கி ஏனைய வாணிக வங்கிக ளினின்றும் பல செயல்களில் மாறுபட்டு விளங்குகின்றது.

தனியார் துறையில் இயங்கும் வணிகர்களுக்கும் கடன் வசதிகள் அளிக்கப்படுகின்றன. அளிக்கப்படும் கடன் வசதி களில் 43% கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றது. பெரும்பாலும் குறுகியகாலக் கடன்களே வழங்கப்படுகின்றன. கடன் பெறும் நபர்கள் இரண்டாண்டுகளுக்குள் கடன் தொகையைத் திருப்பி அளிக்கவேண்டும். வட்டிவிகிதம் 8-லிருந்து 10 சதவிகிதம் என விளங்குகின்றது. இவ்வங்கி 'கடன் விண்ணப்பங்களை'த் (Loan Applications) தீவிரமாகப் பரிசீலனை செய்யாவிடினும், 'வராக் கடன்'கள் (Bad Debts) அதிகமாக எழுவதில்லை. 'வைப்புத் தொகை' வைத்திருக்கும் உறுப்பினர் களுக்கு மட்டுமே கடன் வசதிகள் அளிக்கப்படுகின்றன. உறுப் பினர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகை 'மேல்வரைப் பற்று கீவே' (Overdrafts) அளிக்கப்படுகின்றன. உறுப்பினர்களின் நலன் ஒன்றையே கருதிச் செயலாற்றுவதால், தற்போது இவ் வங்கி வலிமையுடன் திகழ்கின்றது.

டென்மார்க் கூட்டிணைப்புகள் (Federations)

டென்மார்க்கில் இயங்கி வரும் எல்லாக் கூட்டுறவுச் சங்கங் களும் கூட்டிணைப்புகளைப் பெற்றுள்ளன. கூட்டுறவுச் சங்கங்களை வழிநடத்திச் செல்பவை இக்கூட்டிணைப்புகளே!

டென்மார்க் பால் பண்ணைச் சங்கங்கள் 1912-ஆம் ஆண்டு தங்களுக்குச் சொந்தமான 'கூட்டமைப்பை' (Danish Dairy Associations) அமைத்தன. அரசாங்கத்துடனும், தனியார் நிறுவனங்களுடனும் இக்கூட்டமைப்பு தொடர்பு கொண்டு கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கென அயராது உழைக்கின்றது. உற்பத்தி, கொள்முதல், விற்பனை போன்ற எல்லாத் துறைகளிலும் உறுப்பினர்களின் சார்பாக இக்கூட்டிணைப்பு பணியாற்றி வருகின்றது. பொருள்களின் விலைகளை நிர்ணயம் செய்வது இக்கூட்டமைப்பேயாகும். இக்கூட்டமைப்பின்கீழ் ஆலோசகர்கள், தணிக்கையாளர்கள் முதலான தகுதி வாய்ந்த பணியாளர்கள் இருப்பதால், கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த முறையில் வழிநடத்திச் செல்லப்படுகின்றன.

டென்மார்க்கில் பணிபுரிந்துவரும் 9 'வெண்ணெய் ஏற்றுமதிச் சங்கங்கள்' 1918-ஆம் ஆண்டு தங்களின் நலன் கருதி ஒரு கூட்டிணைப்பை உருவாக்கின. இவ்வாறு உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு, ஏற்றுமதிச் சங்கங்களின் சார்பாக அயல்நாட்டு வணிகர்களுடன் செயல் தொடர்பு கொண்டு, இலாபம் தரத்தக்க வகையில் பணியாற்றி வருகின்றது.

'பாலேடுக் கட்டி ஏற்றுமதிச் சங்கங்கள் 1948-ஆம் ஆண்டு விற்பனையை அதிகரிக்கும் நோக்கோடு ஒரு கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன.

1897-ஆம் ஆண்டு, கூட்டுறவுப் பன்றி இறைச்சித் தொழிற்சாலைகள் இறைச்சியின் தரம், விற்பனை முதலானவற்றை உயர்த்துவதற்கென ஒரு கூட்டமைப்பை உருவாக்கின. இக்கூட்டமைப்பு போக்குவரத்து வசதிகளை அதிகரிப்பதில் கவனம் செலுத்தியதால், உறுப்பினர்களாகத் திகழும் பன்றி இறைச்சித் தொழிற்சாலைகள் நன்மைகள் பல பெறத் தொடங்கின.

'முட்டை ஏற்றுமதிக் கூட்டிணைப்பு' 1895-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அயல்நாட்டு அங்காடிகளில் முட்டை விற்பனையை அதிகரிப்பதற்காக இது அமைக்கப்பட்டது.

தற்போது, டென்மார்க்கில் 36 கூட்டிணைப்புகள் எல்லா வகைக் கூட்டுறவுச் சங்கங்களின் முன்னேற்றத்திற்கெனப் பணியாற்றி வருகின்றன. இக்கூட்டமைப்புகளின் உயர்மட்டத்தில், வலிமை வாய்ந்த இரு அமைப்புகள் இயங்கி வருகின்றன. அவை யாவன—

(i) 'மத்தியக் கூட்டுறவுக் குழு' (The Central Co.-op. Committee);

(ii) நகர்சார்ந்த கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்புச் சங்கம் (The Union of Urban Co-op. Societies).

டென்மார்க்கில் இயங்கி வரும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்கள், பெரும்பாலும் இக்கூட்டுறவுத் தலைமைச் சங்கங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவ்விரு அமைப்புகளுடன் இணையாமல் தனித்துச் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களும் டென்மார்க்கில் உள்ளன. இவ்விரு தலைமைச் சங்கங்களும் 'பன்னாட்டுக் கூட்டுறவு ஒன்றிப்பு' (International Co-op. Alliance) இணைக்கப்பட்டுள்ளன.

'மத்தியக் கூட்டுறவுக் குழு' 1899-ஆம் ஆண்டு, 23 கூட்டிணைப்புகளைக் கொண்டு அமைக்கப்பட்டது. நுகர்வோர் கூட்டிணைப்புகள், உற்பத்தியாளர் கூட்டிணைப்புகள் போன்றவை இதனுடன் இணைந்துள்ளன. இக்கூட்டிணைப்புகளின் வளர்ச்சிக்கெனத் திட்டங்களைத் தீட்டுவது இம்மத்தியக் கூட்டுறவுக் குழுவேயாகும்.

'நகர் சார்ந்த சங்கங்களின் இணைப்புச் சங்கம்' 1922-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதாகும். நகர்ப்புறங்களில் தொழிலாளர்களால் தொடங்கப்பட்டு, வளர்ச்சியடைந்துள்ள கூட்டுறவுச் சங்கங்கள் இவ்விணைப்புச் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

டென்மார்க் கூட்டுறவு இயக்கம் நன்கு வளர்ச்சி அடைந்ததற்கு முக்கியக் காரணம் கூட்டுறவுச் சங்கங்களால் அமைக்கப்பட்ட கூட்டிணைப்புகளே!

நகர்சார்ந்த கூட்டுறவுச் சங்கங்கள் (Urban Societies)

டென்மார்க்கின் பெரிய நகரங்களிலும் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

(i) **கூட்டுறவு ரொட்டித் தொழிற்சாலைகள் (Co-op. Bakeries):**

தற்போது, சுமார் 40 கூட்டுறவுச் சங்கங்கள் டென்மார்க்கின் பல நகரங்களில் பணியாற்றி வருகின்றன. தனியார் துறையில் இயங்கி வந்த ரொட்டித் தொழிற்சாலைகள் தரமற்ற ரொட்டி

வகைகளை அதிக விலையில் விற்று வந்தனர். இத்தகைய இலாப வேட்டையைக் களைவதற்காகவே, கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. கூட்டுறவு தொழிற் சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தரமான ரொட்டி வகைகள் நியாய விலைக்கு விற்கப் படுகின்றன. உறுப்பினர்களுக்குமட்டுமின்றி, பொது மக்களுக்கும் உற்பத்திப் பொருளான ரொட்டி வகைகள் விற்பனை செய்யப்படு கின்றன. கூட்டுறவுப் பண்டகசாலைகள் மூலமாகவும், தனியார் கடைகள் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. மக்களின் இல்லங்களில் நேரடியாகவும் ரொட்டி வகைகள் விற்பனை செய்யப் படுகின்றன. இவ்விற்பனைக்கென்று மோட்டார் வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

(ii) கூட்டுறவுக் கட்டிடக் கழகங்கள் (Building Societies)

இக்கூட்டுறவுச் சங்கங்கள் கட்டிடக் கலையில் ஈடுபட்டுள்ளவர் களாலும், மரவேலை செய்பவர்களாலும் அமைக்கப்பட்டுள்ளன. பொது மக்களுக்குத் தேவையான கட்டிடங்களை இக்கூட்டுறவுச் சங்கங்கள் ஒப்பந்தத்தின் அடிப்படையில் கட்டி அவர்களுக்கு வழங்குகின்றன. இச்சங்கங்களுக்கு டென்மார்க் அரசாங்கம் நிதி உதவிகள் அளிப்பதில்லை. தனியார் துறையுடன் இக்கூட்டுறவுச் சங்கங்கள் கடும் போட்டியில் ஈடுபட வேண்டிய சூழ்நிலைகளில் தான் இயங்கி வருகின்றன. தற்போது, சுமார் 80 கட்டிடக் கழகங்கள் டென்மார்க்கில் பணி புரிந்து வருகின்றன. இச் சங்கங்கள் ஒரு கூட்டமைப்பையும் அமைத்துள்ளன.

(iii) ஆக்கவளமுடைய கூட்டுறவுச் சங்கங்கள் (Productive Socs.):

தையற்கலையை வளர்ப்பதற்கென்றும், காலணிகளின் வளர்ச் சிக்கெனவும் பல கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மதுவகைகளைத் தயாரிப்பதற்கென்று பல தொழிற்சாலைகள் கூட்டுறவு முறையில் தொடங்கப்பட்டுள்ளன. உண்டிச் சாலைகள், எரிபொருள் விற்பனை நிலையங்கள் போன்றவையும் கூட்டுறவு முறையில் நடத்தப்படுகின்றன. இவ்வாறு, எல்லாத்துறைகளிலும் கூட்டுறவுக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்படுவதால்தான் டென் மார்க் 'கூட்டுறவு டென்மார்க்' என்ற சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது.

கூட்டுறவுக் கல்வி (Co-op. Education)

உறுப்பினர்கள் கூட்டுறவுக் கொள்கைகளை நன்கு புரிந்து கொள்ளும் பொருட்டுக் கூட்டுறவுக் கல்வி டென்மார்க்கில் நன்கு பரப்பப்படுகின்றது. தொடக்கத்திலிருந்தே கூட்டுறவுக் கல்விக்கு

டென்மார்க்கில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுவருகின்றது. கிராமங்களில் கூட்டுறவு உயர்நிலைப்பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வப்போது கூட்டுறவுக் கருத்தரங்குகள் நடத்தப் படுகின்றன. உறுப்பினர்களின் கருத்தறிய மாநாடுகளும் நடத்தப் படுகின்றன. தேவையான சமயங்களில் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. 1932-ஆம் ஆண்டு, 'டென்மார்க் கூட்டுறவுக் கல்லூரி' 'மிடல் போர்ட்' (Middel Fort) என்ற இடத்தில் தொடங்கப்பட்டது. சிறந்த பணியாளர்களை உருவாக்கும் நோக்கோடு பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. தபால் மூலமாகவும் கூட்டுறவுக் கல்வி போதிக்கப் படுகின்றது.

டென்மார்க் அரசாங்கமும் கூட்டுறவுச் சங்கங்களும்

டென்மார்க் அரசு கூட்டுறவுச் சங்கங்களைப் பெருமளவு ஊக்குவிப்பதுமில்லை; அவைகளின் வளர்ச்சியைத்தடை செய்வதுமில்லை. டென்மார்க்கில் கூட்டுறவு இயக்கம் மக்களால் தொடங்கப்பட்டதாகும். அவ்வப்போது, அரசு தேவையான உதவிகளை அளிக்கத் தயங்குவதில்லை. சங்கங்கள் பதிவு செய்துகொள்ளும் படி கட்டாயப் படுத்தப்படுவதில்லை. கூட்டுறவுச் சங்கங்களைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை டென்மார்க் அரசாங்கம் பெருமளவில் இயற்றுவதில்லை. காப்புறுதிக் கழகங்கள், கடன் சங்கங்கள் போன்றவை சட்டங்களினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. 'வைப்புத் தொகை' பெறும் கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கை அரசாங்கம் கவனிக்கத் தவறுவதில்லை.

டென்மார்க் கூட்டுறவு இயக்கத்தின் தனிச் சிறப்புகள்

டென்மார்க் கூட்டுறவு இயக்கத்தில் காணப்படும் பல சிறப்பியல்புகளே அவ்வியக்கத்தின் பெருவெற்றிக்கான காரணங்களாக அமைந்துள்ளன. இனி, இவ்வியக்கத்தின் சிறப்பியல்புகளைக் காண்போம்.

(i) டென்மார்க் கூட்டுறவு இயக்கம் 'தன்னியலான இயக்கமாகும்' (Voluntary). இந்நாட்டின் பெருங்குடிமக்கள், சூழ்ந்திருந்த இன்னல்களிலிருந்து விடுபடுவதற்காக இவ்வியக்கத்தை தாங்களாகவே தொடங்கினர். எத்திசையிலிருந்தும் தூண்டுதல் அளிக்கப்படவில்லை. இயற்கையின் அரவணைப்பில் வளரும் காடுகள் போல, இவ்வியக்கம் மக்களின் உழைப்பினால், அறிவுத் திறனால் நன்கு வளர்ச்சி பெறத் தொடங்கியது.

(ii) இவ்வியக்கம் மக்களால் தொடங்கப்பட்டதாகும். எனவே இந்நாட்டு மக்கள் பற்றுறுதிக் கோட்பாடுகளைக் கொண்டவர்களாக விளங்கினர். நாள்தோறும் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கெனத் தங்கள் நல்லாதரவையும், உழைப்பையும் நல்கினர். இயல்பாகவே நற்குணங்கள் கொண்டவர்களாக டென்மார்க் மக்கள் விளங்குவதால், தீட்டிய திட்டங்கள் யாவும் சிறந்த முறையில் செயல் படுத்தப்பட்டன. வெற்றி இவ்வியக்கத்தை நாடி வந்தமைக்கு மனவளம் நிறைந்த மக்களே காரணமாகும்.

(iii) டென்மார்க் கூட்டுறவு இயக்கம் அரசாங்கத்தின் உதவிகளை நாடுவதில்லை. அரசின் தலையீடு இல்லையாதலால், கூட்டுறவுச் சங்கங்கள் தன்னிச்சையாக வளர்ச்சி பெறலாயின. இக்கூட்டுறவு இயக்கம் கல்வியறிவு நிறைந்த மக்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. கூட்டுறவுக் கல்வி எல்லா மட்டங்களிலும் நன்கு பரப்பப்பட்டது. முறையான கல்வி நிறைவான வளர்ச்சியைத் தந்தது!

(iv) டென்மார்க் கூட்டுறவு இயக்கம் 'சிறப்புத் தேர்ச்சி முறையை (Specialisation) நன்கு கடைப்பிடித்து வருகின்றது. கொள்முதல், உற்பத்தி,விற்பனை போன்ற பல துறைகளில் வெவ்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சங்கத்தின் பணியும் சிறந்த முறையில் வரையறுக்கப்பட்டுள்ளது. பணிகள் குறைந்த நிலையில், எல்லாச் சங்கங்களும் சிறப்பாகப் பணியாற்றத் தொடங்கின.

(v) டென்மார்க் கூட்டுறவுச் சங்கங்கள் தேசிய அமைப்பின் கீழ் இயங்குபவையாகும். இவைகள் தேசியக் கூட்டமைப்புகளுடன் இணைக்கப்பட்டிருந்தாலும், இக்கூட்டமைப்புகள் சங்கங்களின் நிருவாகத்தில் தலையிடுவதில்லை. சங்கங்களின் நலனை இக்கூட்டிணைப்புகள் நன்கு பாதுகாக்கின்றன. எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பொதுவாக இருக்கும் பிரச்சினைகளுக்கு இக்கூட்டிணைப்புகள் தீர்வு காணுகின்றன. சுருங்கக் கூறின், டென்மார்க் கூட்டுறவு இயக்கம் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தன்னிச்சையாக இயங்கும் உரிமையை அளித்துள்ளது. எனவே, உரிமைகள் ஒரு முகப்படுத்தப்படாமல் பரவலாக்கப்பட்டுள்ளன. இதனால், கூட்டுறவுச் சங்கங்கள் சுதந்தரமாகச் செயல்பட முடிகின்றது.

(vi) டென்மார்க் அரசு கூட்டுறவு இயக்கத்திற்குத் தனிச் சலுகைகள் அளிப்பதில்லை, கூட்டுறவுச் சங்கங்கள் வளர்ச்சி

பெறுவது போலவே, தனியார் துறையிலும் வளர்ச்சிக் கேற்ற சூழ்நிலைகள் டென்மார்க்கில் நிலவின. கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கெனத், தனியார் துறை அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படவில்லை. எனவே, இரு துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டது; போட்டியும் ஏற்பட்டது. அளவான போட்டி பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவைதானே! தனியார் துறையின் வளர்ச்சியை மிஞ்சுவதற்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் பல திட்டங்களைத் தீட்டின; நடவடிக்கைகளை எடுத்தன. முயற்சி திருவினையாக்கியது!

(vii) இக்கூட்டுறவு இயக்கத்தில் உறுப்பினர்கள் தங்கள் விருப்பப்படி செயலாற்ற அனுமதிக்கப் பட்டாலும், சில செயல்களில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, பால் பண்ணைச் சங்கங்களின் உறுப்பினர்கள் தங்கள் உற்பத்திப் பொருளான பால் முழுவதையும் (குடும்ப நுகர்விற்கு எடுத்துக் கொண்டபின்) சங்கத்திடம் ஒப்பந்தத்தின்படி ஒப்படைக்க வேண்டும். இது போன்ற விதிமுறைகள், பன்றி இறைச்சித் தொழிற்சாலைகளிலும், முட்டை ஏற்றுமதிச் சங்கங்களிலும் கடைப்பிடிக்கப்படுகின்றன. இத்தகைய கட்டுப்பாடுகளினால் கூட்டுறவுச் சங்கங்கள் தேவையான உற்பத்திப் பொருள்களைத் தடையின்றி, தாமதமின்றிப் பெறுகின்றன. இதையொட்டி ஏற்படுவதே இவ்வியக்கத்தின் வெற்றியாகும்.

(viii) கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நிதியும் (Finance) அரசாங்கத்தால் அளிக்கப்படுவதில்லை. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நிதிவசதிகள் பல வழிகளில், பல நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்றன.

(1) 'புருசியா' நாட்டில் அமைக்கப்பட்டுள்ள சங்கங்களை மாதிரியாகக் கொண்டு பல கூட்டுறவு வங்கிகள் டென்மார்க்கில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வங்கிகள் உறுப்பினர்களுக்கும், இதர கூட்டுறவு நிறுவனங்களுக்கும் கடன் வசதிகள் அளிக்கின்றன.

(2) 'தேசிய கூட்டுறவு வங்கி' நாடு முழுவதும் பல கிளை அலுவலகங்களைக் கொண்டு விளங்குகின்றது. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான குறுகிய காலக் கடன் வசதிகளை இத் தேசிய வங்கி வழங்குகின்றது.

(3) தனியார் துறையில் இயங்கும் வணிகர்களின் வங்கிகளும் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வசதிகள் அளிக்கின்றன.

(4) மத்திய மொத்த விற்பனைச் சங்கங்களும் தங்களது உறுப்பினர்களாக விளங்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதிவசதிகள் அளிக்கின்றன.

இத்தகைய சிறந்த நிதியேற்பாட்டு முறையே டென்மார்க் கூட்டுறவு இயக்கத்தை வெற்றி நோக்கி வழி நடத்திச் செல்கின்றது.

(ix) சிறந்த நிர்வாகத்தைக் கொண்டு விளங்குகின்றது டென்மார்க் கூட்டுறவு இயக்கம். பொருள்களின் தரம் நன்கு சோதனை செய்யப்பட்ட பின்னரே, விற்பனை செய்யப்படுகின்றன. நிர்வாகம் முழுமையும் 'இயக்குநர் அவை'யின் கைகளில்உள்ளது.

(x) டென்மார்க் கூட்டுறவு இயக்கம் நல்லதொரு கட்டுக்கோப்பான இயக்கமாகும். எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் நல்ல முறையில் இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மட்டத்திலும், 'செயற்பாட்டுப் பகுதிக்' கேற்ப சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சங்கங்களிடையே நல்லுறவு நிலவுகின்றது. உதாரணமாக, டென்மார்க் பால் பண்ணைத் தொழிலுடன் பன்றி இறைச்சித் தொழில் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இது டென்மார்க் கூட்டுறவு இயக்கத்தின் தனிச் சிறப்பாகும்.

(xi) உறுப்பினர்களின் தேவைக்கேற்பக் குறுகிய காலக் கடன்களும், கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நீண்ட காலக் கடன்களும் டென்மார்க்கில் வழங்கப்படுகின்றன. இத்தகைய சிறப்பான கடன் வழங்கும் முறை டென்மார்க் கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும்.

(xii) பன்றி இறைச்சி, பால் பொருள்கள் முதலானவை சிறந்த முறையில் கூட்டுறவுச் சங்கங்களினால் விற்பனை செய்யப்படுகின்றன. இச்சங்கங்களுடன் தொடர்புள்ள கூட்டுறவுக் கால்நடைச் சங்கங்களும், காப்புறுதிச் சங்கங்களும், கால்நடை முன்னேற்றச் சங்கங்களும் டென்மார்க்கில் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய முன்னேற்றத்தை நாம் வேறு எங்கும் காண்பது அரிதாக உள்ளது.

(xiii) கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன, நவீனக் கருவிகளை பயன்படுத்துவது பற்றி சங்க உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுவதும் இவ்வியக்கத்தின் தனிச்சிறப்பாகும்.

இத்தகைய சிறப்பியல்புகளைக் கொண்டு விளங்குவதால்தான், டென்மார்க் கூட்டுறவு இயக்கம் ஆல்போல் வளர்ந்துள்ளது.

வெற்றிக்கான காரணங்கள்

டென்மார்க் கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பியல்புகள் யாவும் வெற்றிக்கான காரணங்களாயினும், நாம் சில நேரடிக் காரணங்களைக் காண்போம்.

'சர் ஜான் ரசல்' (Sir John Russel) என்ற சிறந்த கூட்டுறவாளர் இயக்கத்தின் வெற்றிக்கான காரணங்களை மிக அழகாகச் சுருக்கமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

1. டென்மார்க் கிராமப்புறங்களில் வாழும் மக்கள் ஒரே தன்மை வாய்ந்தவர்களாக விளங்குகின்றனர். அவர்களிடையே சாதி, மத வேறுபாடுகள் இல்லை. எனவே. எண்ணங்கள் எளிதாக ஈடேறுகின்றன.

2. குடியானவர்கள் யாவரும் கல்வியறிவு நிறைந்தவர்களாக விளங்குகின்றனர்.

3. கிராமங்களில் கூட்டுறவுக் கல்வியை நன்கு பரப்புவதற்கெனப் பல தொடக்கப் பள்ளிகளையும், உயர் நிலைப் பள்ளிகளையும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

4. டென்மார்க் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களின் உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனையேற்பாட்டைமட்டும் செய்வதில்லை. குடும்பத்திற்குத் தேவையான பொருள்களையும், பண்ணைக்குத் தேவையான பொருள்களையும் ஒரு சேரக் கொள்முதல் செய்து உறுப்பினர்களுக்கு விற்பனை செய்கின்றன. உறுப்பினர்களுக்குக் கடன் வசதிகளையும் வழங்குகின்றன. அவ்வப்போது ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றன இக் கூட்டுறவுச் சங்கங்கள்.

5. டென்மார்க் மக்கள் நல்ல உழைப்புத்திறன் நிறைந்தவர்களாக விளங்குகின்றனர். 'பிற நாடுகளைப்போல நாமும் உயர் நிலையை எய்த வேண்டும்' என்ற ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் உழைக்கின்றனர்.

6. அரசாங்கமும் அவ்வப்போது கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான உதவிகளை அளித்து வருகின்றது,

சீரான நிருவாக அமைப்பு ஏற்பட்டுள்ளதால், அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களைத் தீவிரமாகக் கண்காணிப்பதில்லை.

வெற்றிக்கான காரணங்கள் பலவாக இருப்பினும், குறிப்பாக டென்மார்க் மக்களின் மனவளமே கூட்டுறவு இயக்கத்தை வெற்றி நோக்கி வழிநடத்திச் செல்கிறது.

நாம் பெற வேண்டியவை

டென்மார்க்கில் நிலவிய, நிலவும் சூழ்நிலைகள் இந்தியாவில் இல்லையாயினும் டென்மார்க்கைக்கண்டு நாம் கற்கவேண்டியவை ஏராளம். டென்மார்க், கூட்டுறவுக் கொள்கைகளை விவசாய உற்பத்தி, விற்பனையேற்பாடு ஆகிய இரு துறைகளிலுமே நன்கு கடைப்பிடிக்கின்றது. இந்தியாவில் சிறு நிலங்களைப் பெற்றுள்ள விவசாயிகளே எண்ணிக்கையில் அதிகமாக உள்ளனர். இந்தியாவில் நவீனக் கருவிகள் பெருமளவில் பயன்படுத்தப்படவில்லை. இலாபத்தில் ஒரு கணிசமான பகுதி இடை நிலையர்களால் கைப்பற்றப்படுகின்றது. எனவே, டென்மார்க்கைப்போலவே நாமும் சிறு நில உரிமையாளர்களது பிரச்சினைகளை முதலில் களைய வேண்டும். உற்பத்தித் துறையும், விற்பனையேற்பாட்டுத் துறையும் ஒருசேரக் கவனிக்கப்படவேண்டும்.

டென்மார்க் தொடக்கத்தில் தானிய வகைகளையே உற்பத்தி செய்து வந்தன. நாளடைவில் தானிய ஏற்றுமதி பாதிக்கப் பட்டதால். தாமதமின்றி வேறு பல தொழில்கள் தொடங்கப் பட்டன. குறிப்பாகப், பால் பண்ணைத் தொழில், பன்றி இறைச்சித் தொழில் முதலானவை தொடங்கப்பட்டன. இந்த வரலாறு, இந்தியாவிற்கு நல்லதொரு பாடமாக விளங்குகின்றது. இந்தியாவில் புல்வெளிப் பகுதிகள் கணிசமாக உள்ளதால், இத்தகைய துணைத் தொழில்கள் தொடங்கப்படவேண்டும்.

டென்மார்க்கைப் போலவே இந்தியாவிலும் ஆடு மாடுகளின் எண்ணிக்கை உயர்ந்தே காணப்படுகின்றது. எனினும், இந்தியாவின் கால்நடைப் பிராணிகள் வலிமை குறைந்தவையாக உள்ளன. மேலும், பலவித நோய்களால் ஆடு மாடுகள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. டென்மார்க்கில் இருப்பதைப்போல, இந்தியாவிலும் கால்நடை வளர்ப்புச் சங்கங்கள், கால்நடைக் காப்புறுதிக் கழகங்கள் முதலானவை பெருமளவில் தோன்றிட வேண்டும்.

டென்மார்க்கின் பெரு வெற்றிக்குக் காரணம் அந்நாட்டு மக்களின் கல்வியறிவே காரணமாகும். கிராமங்களிலும், நகரங்

களிலும் பல கூட்டுறவுப் பள்ளிகள் டென்மார்க்கில் நடத்தப்படு கின்றன. இம்முறையை நாமும் நன்கு பின்பற்றினுல் வெற்றி பெறுவது உறுதி.

எதிர்ப்பட்ட இன்னல்களைக் கண்டு மனங்கலங்காமல், புதிய முறைகளைக் கையாண்டு தன் பொருளாதார நிலையை உயர்த்தி யுள்ள நாடு டென்மார்க்காகும். கூட்டுறவுக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்படாத துறைகளே டென்மார்க்கில் இல்லை. மண் வளம் கொண்ட டென்மார்க் மனவளம் நிறைந்த மக்களையும் கொண்டு விளங்குகின்றது. இச்சூழ்நிலையில் வெற்றிகள் குவிக்கப் படுகின்றன. டென்மார்க் இன்று உலக நாடுகளுக்குக் 'கூட்டுறவு டென்மார்க்காக' விளங்குகின்றது.

7. சீன நாட்டில் கூட்டுறவு இயக்கம்
(Co-operative movement in China)

முன்னுரை

சீன நாட்டில் கூட்டுறவு இயக்கம் தோன்றியதே ஒரு சுவை நிறைந்த வரலாறு ஆகும். இந்நாட்டில் தொடக்கத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்ட வெள்ளம், பஞ்சம், உள்நாட்டுக் குழப்பம் போன்ற பல பிரச்சினைகளினால் பொருளாதார நிலை மிகவும் பாதிக்கப்பட்டது. இயற்கையின் சீற்றத்துடன் செயற்கை விளைவுகளும் சேர்ந்தமையால் மக்களின் இன்னல்கள் பன்மடங்காய்ப் பெருகலாயிற்று, வாழ்க்கைக்குத் தேவையான குறைந்த வசதிகளைக்கூடப் பெற இயலாமல் மக்கள் வறுமை நோயினால் பீடிக்கப்பட்டனர். இந்தியாவைப் போலவே சீனாவும் ஒரு விவசாய நாடாகும். இயற்கையாக எழுந்த இன்னல்களின் காரணமாக விவசாயத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டது. ஜப்பானுடன் ஏற்பட்ட போரினால் இந்நாட்டின் வளம் கொழித்த எல்லாத் துறைகளிலுமே கடை நிலை அடைந்தன.

இப்பிரச்சினைகளுக்கெல்லாம் மாமருந்தாகக் கூட்டுறவு இந்நாட்டில் குடியேறியது. இவ்வாறு சீன நாட்டில் இடம் பிடித்த கூட்டுறவு நாளடைவில் நல்லதொரு வளர்ச்சியைப் பெற்றது. இதன் வளர்ச்சி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கே வழி கோலியது. கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரை சீனாவும் இந்தியாவைப்போன்ற நாடுகளை ஒத்தே உள்ளது. ஏறக்குறைய இந்தியாவில் நிலவிய சூழ்நிலைகளைப்போலவே சீனாவிலும் நிலவியது ஒருபுறம் இருக்க, மறுபுறம் கூட்டுறவு இயக்கம் இவ்விரு நாடுகளிலும் அரசாங்கத்தால் மக்களின் நலன் கருதித் தோற்றுவிக்கப்பட்டதாகும். ஆனால், சீனாவில் இவ்வியக்கம் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. தற்போது சீனா அரசியல் கொள்கை

களில் மட்டுமின்றி சமூகம், பொருளாதாரம் போன்ற அனைத்துத் துறைகளிலுமே அடியோடு மாற்றம் கொண்டு அல்லது மாற்றம் கண்டு விளங்குகிறது. இன்றைய சீன பொருளாதாரத் துறையில் கணிசமாக உயர்ந்து காணப்படுவதற்கு அந்நாட்டில் கூட்டுறவு இயக்கம் பெற்ற வளர்ச்சியே முக்கியக் காரணமாகும். இவ்வியக்க வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக விளங்குகிறது இந்நாட்டு அரசியலமைப்பு.

கூட்டுறவு வரலாறு

அண்மைக் காலத்தில்தான் சீனவில் கூட்டுறவு இயக்கம் வேரூன்றத் தொடங்கியதென்றாலும், இவ்வியக்க வளர்ச்சிக்கான தேசியத் திட்டம் 1912-ஆம் ஆண்டு 'சன்யாட்சென்' அவர்களால் 'சீனக் குடியரசு' நிறுவப்பட்டபோதே தீட்டப்பட்டது. கூட்டுறவு இயக்கத்திற்கான விதையைச் சீன மண்ணில் முதல் முதல் விதைத்தவர் இத்தலைவரேயாவார். இவர் அரசாங்கப் பொறுப்பை ஏற்றவுடன் நாட்டில் மலிந்து கிடந்த வறுமையை விரட்டக் கூட்டுறவுக் கொள்கைகளையே பெரிதும் நாடினர். எடுக்கப்பட்ட முயற்சிகளின் விளைவாக, 1919-ஆம் ஆண்டு 'ஷாங்கை தேசியக் கூட்டுறவுச் சேமிப்பு வங்கி' (Shanghai National Co-op. Savings Bank) பேராசிரியர் [4]ஹிஸி' (Hsieh) என்பவரால் தொடங்கப்பட்டது. ஏனைய நாடுகளில் கூட்டுறவினல் ஏற்பட்டிருந்த நல் விளைவுகளை இவர் உன்னிப்பாகக் கவனித்து அதன்படி தன் தாய் நாட்டுக் கூட்டுறவு இயக்கத்தை மாற்றியமைக்க அரும்பாடு பட்டு வந்தார். கூட்டுறவுக் கொள்கைகளை மக்களிடையே நன்கு பரப்பும் பொருட்டு ஒரு வாரப் பத்திரிகையையும் நடத்தினர். இவ்வங்கி தொடங்கிய மூன்றாண்டுகளுக்குள் பல கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. இவைகள் இந்தியாவில் தொடங்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களையே ஒத்து இருந்தன. 1921-ஆம் ஆண்டு ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாக நாடு முழுமையுமே பெரிதும் பாதிக்கப்பட்டது. குறிப்பாக விவசாயிகள் பேரிழப்புக்கு ஆளாயினர். இவ்வறட்சி நிலையில், எங்கும் பயிர்கள் சேதமடைந்ததால் உண்ண உணவின்றி மக்கள் தவிக்கலாயினர். சீன நாட்டில் வாழ்ந்துவந்த அயல்நாட்டுக்காரர்களும், பிற நாட்டவரும் பசியால் வாடிய சீனமக்களுக்கு உணவுப் பொருள்களை வழங்கினர். உணவுப் பொருள்களை வழங்கிய அயல்நாட்டார் கூட்டுறவுக் கடன் சங்கங்களை அமைக்குமாறு ஆலோசனையையும் வழங்கினர். இதையொட்டிப் பல கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. 1922-ஆம் ஆண்டு இறுதியில் 1200 கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தொடங்கப்பட்டன. எனினும்,

கணிசமான வளர்ச்சி ஏற்படவில்லை. 1922-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட 'பஞ்ச நிவாரண ஆணைக்குழு' (Chinese International Famine Relief Commission) கூட்டுறவு இயக்கத்திற்குப் புத்துணர்வை ஊட்டியது. 1922-ஆம் ஆண்டிற்குப் பின்னர் தான் சீனக் கூட்டுறவு இயக்கம் வேகமாக வளரத் தொடங்கியது. இவ்வாணைக்குழு நாட்டில் நிலவிய சூழ்நிலைகளை நன்கு ஆராய்ந்து, முடிவில் 1921-ஆம் ஆண்டு தன் அறிக்கையைச் சமர்ப்பித்தது. நாட்டில் மலிந்து கிடந்த வறுமையையும் பசியையும் போக்குவதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று பரிந்துரைக்கப்பட்டது.

இவ்வாணைக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று பல 'விவசாயிகள் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்' வட சீனுவில் அமைக்கப் பட்டன. ஜெர்மன் நாட்டில் இயங்கி வந்த ரைபீசன் சங்கங்களை மாதிரியாகக் கொண்டு இச்சங்கங்கள் அமைக்கப்பட்டன. விவசாயிகளுக்குத் தேவையான நிதிவசதிகளையும், விவசாயக் கருவிகள், உரம், விதை போன்ற முக்கியப் பொருள்களை இச் சங்கங்கள் விநியோகம் செய்துவந்தன. பஞ்ச நிவாரணக் குழுவின் துணையுடன் 'நான்கிங் பல்கலைக் கழகம்' (University of Nanking) பழ உற்பத்தியாளர்களின் நலன் கருதி 'பெங்கென் கூட்டுறவுக் கடன் சங்கம்' (Fengken Co-op. Credit Society) அமைக்கப்பட்டது. இச்சங்கம் பஞ்ச நிவாரணக் குழுவிலிருந்தும், விவசாயிகளின் வங்கி, சீனுவின் 'தலைமை வங்கி' (Bank of China) முதலான வங்கிகளிடமிருந்தும் நிதி வசதிகளைப் பெற்றது. இவ் வங்கிகள் கூட்டுறவு அடிப்படையில் இயங்கியவையல்ல. 1927-ஆம் ஆண்டு, பேராசிரியர் 'ஹிஸி' கூட்டுறவுச் சங்கங்களைத் தேசிய அளவில் அமைப்பதற்கான திட்டத்தை வகுத்தார். அப்போதைய அரசாங்கம் இத்திட்டத்தை அங்கீகரித்ததென்றாலும், போதிய நிதி வசதிகளற்ற நிலையில் இத்திட்டத்தைச் செயல்படுத்த இயல வில்லை. 1927-ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து மாநில அரசுகள் கிராமப்புறங்களில் கூட்டுறவுச் சங்கங்களை அமைப் பதில் அக்கறை காட்டலாயின. ஒவ்வொரு பகுதியிலும் கூட்டுறவு வளர்ச்சிக்கென ஒரு குழு அமைக்கப்பட்டது. கூட்டுறவுத் துறையில் வல்லுனர்களாக விளங்கியவர்களே இக்குழுவில் உறுப் பினர்களாக விளங்கினர். இது தவிர, அரசாங்கத்திலுல் ஓர் அலுவலகமும் கூட்டுறவு வளர்ச்சிக்கென அமைக்கப்பட்டி ருந்தது. இவ்விரு அமைப்புகளுமே விவசாயிகளுக்குத் தேவை யான நிதிவசதிகளைப் பெருக்குவதில் கவனம் செலுத்தி வந்தன. வணிக வங்கிகளால் குறைந்த வட்டிக்குக் கடனுதவிகள் அளிக்

கப்பட்டன. 1928–ஆம் ஆண்டு ஒரு கூட்டுறவு இணைப்புச் சங்கம் தொடங்கப்பட்டது. 1931-ஆம் ஆண்டு 'யாங்ட்ஸி' (Yangtse) ஆறில் ஏற்பட்ட பெரும் வெள்ளப் பெருக்கால் விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டனர். ஆனால் இச்சூழ்நிலையில்தான், சீனாவில் கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவு தொடங்கப்பட்டன. வெள்ளப் பெருக்கையொட்டிச் சுமார் 2000 கூட்டுறவுச் சங்கங்கள் உடனடியாகத் தொடங்கப்பட்டன. இச்சங்கங்கள் 'பதிவு' பெறுவதற்கு முன்பாகவே விவசாயிகளுக்குக் கடனுதவிகளை அளிக்கத் தொடங்கின. 1931-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசின் முழு ஆதரவும் கிடைக்கத்தக்க வகையில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து சீன அரசு கூட்டுறவு இயக்கத்தின் முன்னேற்றத்தில் பெரும் பங்கு கொள்ளத் தொடங்கியது. 1935-ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து கூட்டுறவு இயக்கம் சீனாவில் நன்கு வேரூன்றி நிற்கத் தலைப்பட்டது.

1938-ஆம் ஆண்டு இறுதியில் சுமார் 64000 பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் சீனாவில் இயங்கி வந்தன. சீனாவின் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கென ஓர் ஆலோசகரைச் சர்வதேச சங்கம் (League of Nations) நியமித்தது. தொடக்கத்திலிருந்தே கிராமப் பகுதிகளில்தான் கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவில் அமைக்கப்பட்டன. சீனாவின் கூட்டுறவு இயக்கம் உண்மையில் ஒரு விவசாய இயக்கமாகும். நகர்ப்புறங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவில் அமைக்கப்படவில்லை. வடபகுதியில் ஏற்பட்டுவந்த பஞ்சம், வெள்ளம் போன்ற பிரச்சினைகளின் காரணமாக எழுந்ததே சீனாவின் கூட்டுறவு இயக்கம். இந்நிலையில் சீனாவில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்புகளும் மக்களின் இன்னல்களைக் கணிசமாகப் பெருக்கி வந்தன.

1935-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் மூலம், சீனாவின் கூட்டுறவு இயக்கம் நன்கு சீர்படுத்தப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்கள் நான்கு பிரிவுகளாக அவைகளின் திறமையான செயற்பாடுகளின் அடிப்படையில் பிரிக்கப்பட்டன. நான்காம் தரக் கூட்டுறவுச் சங்கங்கள் ('D' Class) கலைக்கப்பட்டன. இதன் விளைவாகச் சங்கங்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்தது. 'கியாங்சு' (Kiangsu) மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவில் குறையத் தொடங்கின. 1936-ஆம் ஆண்டு சீனாவில் இயங்கி வந்த சங்கங்களின் எண்ணிக்கை 37000 ஆகும். 1937-ஆம் ஆண்டு இவ்வெண்ணிக்கை 47000 ஆக உயர்ந்தது. இதன் பின்னர்க் கூட்டுறவுச் சங்கங்கள்

நாடு முழுவதும் அமைக்கப்படலாயின. 1949-ஆம் ஆண்டு, சங்கங்களின் எண்ணிக்கை சுமார் 1,85,000 ஆகும். கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 75,850 எனவும், உற்பத்திச் சங்கங்கள், நுகர்வோர் சங்கங்கள் முறையே 31,430, 23,050 எனவும் கணக்கிடப்பட்டுள்ளன. விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள் 18,500 ஆகும். சுமார் 9250 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் (Iudus-Cos.) 1949-ஆம் ஆண்டு சீனவில் இயங்கிவந்தன. எனவே, கடனுதவிகள் அளிப்பது மட்டுமின்றி, வேறு பல துறைகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபடலாயின. அவைகளின் வளர்ச்சியைப் புள்ளி விவரங்கள் மூலம் பார்ப்போம்.

ஆண்டு	சங்கங்களின் எண்ணிக்கை (ஆயிரத்தில்)	சென்ற ஆண்டு உயர்வு %	உறுப்பினர் எண்ணிக்கை (மிலியனில்)	ஒரு சங்கத்தின் உறுப்பினர்கள்	சென்ற ஆண்டைவி உயர்வு %
1936	37	—	—	—	—
1937	47	27.1	2.1	44.1	—
1938	64.5	37.2	3.1	48·1	7.6
1939	91	41.1	4.4	48.4	0.6
1940	120	—	6.0	50.0	3.3
	சுதந்திர சீனு:				
1941	107	—	5.9	55.1	10.2
1944	160	—	15.3	95.7	73.7

1936-ஆம் ஆண்டு கூட்டுறவு வங்கிகள் தேசிய, மாநில கிராம வங்கிகள் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. இவ் வங்கிகள் அரசாங்கத்திடமிருந்து நிதிவசதிகளைப் பெற்று உறுப்பினர்களுக்குக் கடனுதவிகள் அளித்துவந்தன. ஒவ்வொரு வங்கியும் குறைந்தது 60 உறுப்பினர்களையாவது பெற்றிருக்க வேண்டுமென விதிமுறை வகுக்கப்பட்டது. ஒவ்வோர் உறுப்பினரும் ஒரு பங்கையாவது பெற்றிருக்க வேண்டும். பங்கின் மதிப்பில் நாலில் ஒரு பங்கினை உறுப்பினர் தொடக்கத்திலேயே செலுத்தியாக வேண்டும். எஞ்சியுள்ள பங்குத் தொகை தவணை முறையில் அளிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட பொறுப்பின் அடிப்படையில் வங்கிகள் நடைபெற்றன. காப்புநிதிக்கு இலாபத்தில் ஒரு பங்கு ஒதுக்கப்படுமுன்பே உறுப்பினர்களுக்குப் பங்கு ஆதாயம் வழங்கப்பட்டது. இது ஒரு தனிச் சிறப்பாகும். கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உறுப்பினர்களாக இருப்போர் கூட்டுறவு வங்கியிடமிருந்து கடன் பெற வழிமுறைகள் செய்யப்பட்டிருந்தன. உறுப்பினர்களின் நாணய

மதிப்பை நன்கு ஆராய்ந்து பார்த்த பிறகே, வங்கிகள் கடனுதவிகள் செய்கின்றன. கடன் பெறும் தொகை முறையாக செலவிடப்பட வேண்டும் என்பதிலும் வங்கிகள் மிகவும் அக்கறை காட்டின.

1937-ஆம் ஆண்டு சீன நாட்டிற்குச் சில புதிய பிரச்சினைகள் தோன்றின. ஜப்பானுடன் ஏற்பட்ட போரின் விளைவாக, நுகர்வோர் சங்கங்களும், உற்பத்தியாளர் சங்கங்களும் பெருமளவில் அமைக்கப்பட்டன. போரின் முடிவில் சீனாவின் கடற்கரைப் பகுதிகள் ஜப்பான் கைவசம் சென்றன. இதன் விளைவாகக் கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்திருந்த மக்கள் வீடிழந்து மத்திய சீனாவிற்கு அகதிகளாக குடியேறினர். இவர்களில் பெரும்பாலோர் தொழில் துறையில் பணிபுரிந்தவர்களாவர். கடற்கரைப் பகுதிகளைக் கைப்பற்றிய ஜப்பான், சீனாவின் பெரிய தொழிற்சாலைகளைத் தரைமட்டமாக்கினர். எனவே, பொருளாதாரப் பிரச்சினைகள் சீனாவை வாட்டத் தொடங்கின. மேலும், அகதிகளாகக் குடியேறிய மக்களை எவ்வாறு வாழவைப்பது என்ற பிரச்சினையில் சீனநாடு தத்தளித்தது. இந்நிலையில், அரசாங்கத்திற்கு எழுந்த முக்கியப் பிரச்சினைகளாவன—

(1) அகதிகளாகக் குடியேறிய கடற்கரைப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ;

(2) சீனாவின் போர்ப்படைக்குத் தேவையான பொருள்களை விநியோகம் செய்தல் ;

(3) பொது மக்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருள்களை அளித்தல்.

தாமதமின்றி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அகதிகளாகக் குடியேறியவர்களுக்கெனக் கூட்டுறவு அமைப்புகள் அமைக்கப்படலாயின. அவர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கென்று ஒரு ‘குழு’ (Shanghai Promotion Committee) அமைக்கப்பட்டது. நிலைமையைத் தீர ஆராய்ந்த இக்குழு, தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கான ஆலோசனைகளை வழங்கியது. அகதிகளை வாழவைப்பதற்கு மட்டுமின்றி, போர்ப் படைக்குத் தேவையான ஆயுதங்களையும் இத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உற்பத்தி செய்ய வழிமுறைகள் செய்யப்பட்டன. எனவே, ஜப்பான் நாட்டினால் எழுந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்காகவும், சீனாவின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காகவும் தொழிற்

கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்படலாயின. நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கென அமைக்கப்பட்ட 'குழு'வே (Shanghai Committee) தற்போது 'இண்டஸ்கோ' (Indusco) என அழைக்கப்படுகின்றது. 1938-ஆம் ஆண்டு இவ்வகைச் சங்கங்களின் எண்ணிக்கை சுமார் 350 ஆகும். சுரங்கவேலை, காலணி தயாரித்தல், கனரகத் தொழில்கள், ஆடை தயாரித்தல், உணவுப் பொருள்களைத் தயாரித்தல், காகிதம் தயாரித்தல் போன்ற பல உற்பத்தித் துறைகளில் இச்சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. இச் சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கை சுமார் 4,300 ஆகும். பங்கு மூலதனம் 1·2 இலட்சமாகும் (Chinese Dollars).

1937-ஆம் ஆண்டுக்குப் பின்

1937-ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் கடன் வழங்கும் துறையைத் தவிர, பிற துறைகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபடலாயின. சங்கங்களின் எண்ணிக்கை பெருமளவில் உயரத் தொடங்கினாலும், அவைகளின் சேவைகள் நாட்டு மக்கள் அனைவருக்கும் பயன்படவில்லை. சங்கங்களின் வளர்ச்சி எதிர்பார்த்த அளவிற்கு ஏற்படவில்லை. இவ்வுண்மையைக் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் அட்டவணையைக் கொண்டு அறியலாம்.

செயற்கடமை	சதவிகிதம் 1940	சங்கங்கள் எண்ணிக்கை 1944
1. கடன் வழங்குதல்	87	41.2
2. விவசாய உற்பத்தி	8.7	16.8
3. தொழில் உற்பத்தி	—	5.0
4. அளிப்பு	0.4	8.7
5. விற்பனையேற்பாடு	2.0	10.6
6. நுகர்வோர் அமைப்பு	1.4	13.0
7. பிற சங்கங்கள்	0.5	4.7

1938-ஆம் ஆண்டு ஒரு 'மத்தியக் கூட்டுறவுப் பொது நிருவாக அமைப்பு' (Central Co-op. Administration) தொடங்கப்பட்டது. கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்காகவே இவ்வமைப்பு அரசாங்கத்தால் அமைக்கப்பட்டது. கூட்டுறவுக் கல்வியைப் பரப்புவதற்காகவும், கூட்டுறவுப் பயிற்சியை மக்களுக்கு அளிப்பதற்காகவும் நடவடிக்கைகள் எடுக்கப்படலாயின. கூட்டுறவுக் கொள்முதல், விற்பனைச் சங்கங்களை அமைப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1939-ஆம்

ஆண்டு கூட்டுறவு பயிற்சி அளிப்பதற்காக ஒரு 'மத்தியப் பயிற்சி மன்றம்' தொடங்கப்பட்டது. இதன் மூலம் கூட்டுறவுத் துறையில் பணி புரிந்துவந்த ஊழியர்கள் பெரும் பயன் அடையத் தொடங்கினர். ஒரு 'தேசிய மொத்த விற்பனைக் கூட்டுறவு முகமை' (National Wholesale Co-op. Agency) தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், நுகர்வோர் சங்கங்களுக்கும் உறுதுணையாக விளங்கும் வகையில் தொடங்கப்பட்டது. இவ்வமைப்பின் கிளை அலுவலகங்கள் நாடு முழுதும் தொடங்கப்பட்டன. 1940-ஆம் ஆண்டு செயற் திட்டங்களை வகுப்பதற்கென ஒரு கூட்டுறவு அமைப்பு (Co-op. League of China) தொடங்கப்பட்டது. கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்களை முறையாகச் சீர் படுத்துவதற்காக 1940-ஆம் ஆண்டில் ஒரு சட்டமும் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் மூலம் கிராமங்களில் பல நோக்குச் சங்கங்கள் உருவாக வழிமுறைகள் ஏற்படலாயின. மாவட்ட அளவில் 'கூட்டுறவுப் பலநோக்கு மாவட்டச் சங்கமும்' (Multi-Purpose District Soc.) 'பல நோக்குக் கூட்டுறவு இணைப்புச் சங்கமும்' (Multi-Purpose Co-op. Union) தொடங்கப்பட்டன. ஒவ்வொரு பல நோக்குக் கூட்டுறவு இணைப்புச் சங்கமும் 40 மாவட்டங்களின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வந்தது. பல நோக்குச் சங்கங்கள் உற்பத்தி, கொள்முதல், விற்பனையேற்பாடு போன்ற பல துறைகளில் பணியாற்றி வந்தன. சீனுவில் பத்துக் குடும்பங்களைக் கொண்ட அமைப்பிற்குச் 'சியா' (Chia) என்றும், 100 குடும்பங்கள் கொண்ட அமைப்புக்கு 'பாவொஸ்' (Paos) என்றும் பெயர் வழங்கப்படுகிறது. இவ்வமைப்புகளுக்கு நன்மை பயக்கின்ற வகையில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. 1951-ஆம் ஆண்டு சீனுவின் மொத்தக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 42,425. உறுப்பினர் எண்ணிக்கை 51 மிலியனுகும். இதர விவரங்கள்—'விவசாய அளிப்பு-விற்பனை யேற்பாட்டுச் சங்கங்கள்' 86·7%.

கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு முறை
(Structure)

சீனக் கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு முறை ஏறக்குறைய பிற நாடுகளைப் போலவே விளங்குகின்றன. உயர் மட்டத்தில் 'சீனக் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்பு' (All China Federation of Co-operatives) இயங்கி வருகின்றது. 1950-ஆம் ஆண்டு இக்கூட்டமைப்பு தொடங்கப்பட்டது. அடித்தளத்தில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இடைநிலையில் மாநில, பிரதேசக் கூட்டமைப்புகள் இயங்கி வருகின்றன.

கூட்டமைப்புகளின் பணிகள் பலதிறப்பட்டவையாகும். உறுப்பினர் சங்கங்களின் செயல்களை ஒருமுகப்படுத்துவதே கூட்டமைப்புகளின் முக்கியப் பணியாகும்.

கிராம அளிப்பு-விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள்

1937-ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே சீனாவின் கூட்டுறவு இயக்கம் விரைவாக வளர்ச்சி பெறலாயிற்று. உறுப்பினர் எண்ணிக்கை, பங்கு மூலதனம் போன்றவை கணிசமாக உயரலாயின. கடன் வழங்குவது மட்டுமின்றி உறுப்பினர்களின் தேவைக்கேற்பப் பிற துறைகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்றத் தொடங்கின. இன்று உலகிலேயே பெரிய இயக்கமாகத் திகழ்வது சீனாவின் கூட்டுறவு இயக்கமேயாகும். நாட்டின் பெரும்பாலான கூட்டுறவாளர்கள் கிராமக் கூட்டுறவு விற்பனையேற்பாட்டுச் சங்கங்களின் உறுப்பினர்களாக உள்ளனர். 1949-ஆம் ஆண்டு 10·75 மிலியன் உறுப்பினர்களைக் கொண்டிருந்த இச்சங்கங்கள் 95 மிலியனாக 1952-ஆம் ஆண்டு உறுப்பினர் பட்டியலை தயாரித்துள்ளன. உறுப்பினர் எண்ணிக்கை உயர்விற்கு நிலச் சீர்திருத்தமே காரணமாகும். விற்பனையேற்பாடு, அளிப்பு, நுகர்வோர் சங்கங்களில் உறுப்பினர்களாக விளங்கியவர்களின் எண்ணிக்கை 153 மிலியனிலிருந்து (1953) 170 மிலியனாக (1954) உயர்ந்தது.

நகரங்களுக்கும் கிராமங்களுக்குமிடையே நடைபெற்ற வணிகத்தைச் சிறப்புற அமைப்பதற்கு இக்கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவில் உதவின. உணவுப் பொருள்களின் சீரான விநியோகம், விவசாய உற்பத்திப் பெருக்கம் போன்ற பல பணிகளில் இச்சங்கங்கள் செவ்வனே செயல்படுகின்றன. கிராம மக்களிடையே கூட்டுறவுக் கல்வியைப் பரப்புவதிலும் இச்சங்கங்கள் தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. உணவுத் தானியங்கள், பருத்தி, பட்டு, புகையிலை, கம்பளி, ஏற்றுமதிப் பொருள்கள் முதலான பல முக்கியப் பொருள்களைக் கொள்முதல் செய்து, அதன்மூலம் பருத்தி ஆடைகள், உப்பு, நிலக்கரி, உரங்கள், நுகர்வுப் பொருள்கள் போன்றவற்றைப் பெறுவதில் இச்சங்கங்கள் அரும்பணியாற்றி வருகின்றன. 1952-ஆம் ஆண்டு, அரசாங்கத்தின் விவசாயப் பொருள்களின் கொள்முதலில் 70 சதவிகிதம் இச்சங்கங்களினால் கொள்முதல் செய்யப்பட்டவையாகும். இச்சங்கங்கள் பல துணைத் தொழில்களையும் நடத்தி வருகின்றன.

இச்சங்கங்கள் நான்கு அமைப்புகள் மூலம் பொருள்களைக் கையாளுகின்றன. (i) அரசாங்கப் பண்டகசாலைகள்; (ii) மொத்த விற்பனைச் சங்கங்கள்; (iii) உள்ளூர் அங்காடிகள்; (iv) உற்பத்தியாளர் சங்கங்கள். இச்சங்கங்களின் வளர்ச்சியைப் புள்ளி விவரங்கள் மூலம் காண்போம். (1951—54)

விபரம்	1951	1952 [1950-100]	1953	1954
கொள்முதல்	341	775	1,124	1,585
சில்லறை விற்பனை	214	617	1,010	1,768
நுகர்வோர் பொருள் விற்பனை	—	100	169	—
விவசாயப் பொருள் விற்பனை	—	100	156	—

1955-ஆம் ஆண்டு இறுதியில் கிராம மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இச்சங்கங்களின் உறுப்பினர்களாக விளங்கினர். குடியானவர்களுக்குத் தேவையான பொருள்களில் 80% இச்சங்கங்களால் விற்பனை செய்யப்பட்டன. விவசாயப் பொருள்களின் குறிப்பாக பருத்தி, தானிய வகைகளின் விற்பனையேற்பாட்டை இவைகள் சிறப்புறக் கவனித்துக் கொள்கின்றன.

தரமான விதைகள், உரங்கள் போன்றவற்றையும் இச் சங்கங்கள் விவசாய உறுப்பினர்களுக்கு அளிக்கின்றன. அடித் தளத்தில் இயங்கினும், உயர் பணிகளைச் செய்வது இச் சங்கங்களே.

கூட்டுறவுக் கல்வியை நன்கு பரப்புவதன்மூலம் இச்சங்கங்கள் உறுப்பினர்களுக்கு அருந்தொண்டாற்றி வருகின்றன. பயிர்களின் தரத்தை உயர்த்துவதில் இச்சங்கங்கள் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றன. கிராமப்புறங்களில் இயங்கிவரும் 'மக்கள் வங்கி'களில் (Peoples Bank) இச்சங்கங்கள் பெரும் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. 1952-ஆம் ஆண்டு, கிராமக் கடன் சங்கங்களின் எண்ணிக்கை 19,525,559 ஆகும். 1956-ஆம் ஆண்டு ஜூலை மாத இறுதியில் மொத்தக் குடியானவர்களில் 77 சதவிகிதம் இச்சங்கங்களின் உறுப்பினர்களாக விளங்கினர்.

நகர நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

சீனாவின் கூட்டுறவு இயக்க வரலாற்றில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு கணிசமாகக் காணப்படுகின்றது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவில் அதிகரித்தன. 1952-ஆம் ஆண்டு இறுதியில் 130 நகரங்களில், 30 மாகாணக் கூட்டமைப்புகள், 1,32,000 சில்லறை விற்பனைக் கடைகள், 5000 மொத்த விற்பனைக் கடைகள், 3000 பதப்படுத்தும் தொழிற்சாலைகள் (Processing Factories) ஆகியவை இயங்கி வந்தன. இவைகளின் உறுப்பினர் எண்ணிக்கை 10 மிலியனுக்கும் அதிகமாகக் காணப்பட்டது. மக்களின் நலன் கருதிப் பொருள்கள் சந்தை விலையைக்காட்டிலும் குறைந்த விலைக்கு விற்கப்பட்டன. எனவே நாளடைவில் மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றுத் துரிதமாக வளரத் தொடங்கின.

கூட்டுறவு முறையில் பல தொழிற்சாலைகளை இச்சங்கங்கள் பெற்றிருந்தமையால் உற்பத்திச் செலவு கணிசமாகக் குறைந்து காணப்பட்டது. இதன் காரணமாக இச்சங்கங்கள் மக்கள் மகிழும் வண்ணம் நியாய விலையில் பொருள்களை விற்க முடிந்தது. தரமான பொருள்களே விற்பனை செய்யப்படுகின்றன. எனவே மக்களின் தேவையறிந்து இச்சங்கங்கள் தொண்டாற்றுகின்றன.

தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் (Indus—Cos.)

சீனு—ஜப்பான் போருக்குப் பின்னர், கைத்தொழில்களில் ஈடுபட்டிருந்த கடற்கரைப் பகுதிகளைச் சார்ந்த மக்களைக் கொண்டு சிறு சிறு தொழிற்சாலைகளை திறம்பட நிர்மாணித்து, சீனப் படைக்குத் தேவையான பல்வேறு போர்க் கருவிகளைத் தயாரிப்பதற்குத் திட்டம் வகுக்கப்பட்டது. ஒவ்வொரு குடிமகனின் பிரச்சினைகளையும் தனித்தனியாகத் தீர்ப்பது என்பது இயலாத காரியம் என்பதை நன்குணர்ந்து அதற்கேற்ற முறையில் வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கத் தொடங்கியது சீன அரசு. திட்டங்களை முறையாக செயல் படுத்தவும் வழிமுறைகள் ஆராயப்பட்டன.

உற்பத்தித் துறையில் நிரம்ப தேர்ச்சி பெற்ற மக்களைக் கொண்டு இக்கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டமையால் முயற்சிகள் எளிதில் பலனளிக்கத் தொடங்கின. போரினால் பாதிக்கப்பட்ட தொழிலாளப் பெருங்குடி மக்கள் இக்கூட்டுறவுச் சங்கங்களினால் மறுவாழ்வு பெறத் தொடங்கினர்.

'வூ' (C.F.Wu) என்ற ஒரு சிறந்த கூட்டுறவாளர் இத்திட்டத்தை நன்கு ஆராய்ந்து தொழிற்சாலைகள் தொடங்கப்படுவதற்கு வழிவகுத்தார். மக்களின் துயர் துடைக்கக் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதே ஒரே வழி என எல்லோராலும் வற்புறுத்தப்பட்டது. உறுப்பினர்களைக் கொண்டே சங்கங்கள் நடத்தப்

படுவதற்கும் தீர்மானங்கள் போடப்பட்டன. பிரித்தானிய நாட்டுத் தூதுவரும் நாட்டின் தலைவராக விளங்கிய 'ஷியாங்கே ஷேக்கி'டம் (Chiangkai-Shek) தொழிற் கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றி நன்கு விரிவாக எடுத்துக் கூறினர். 1938–ஆம் ஆண்டு கூட்டுறவுத் தொழிற் சங்கங்களின் வளர்ச்சிக்கென ஒரு கூட்டுறவுக் கழகம் அமைக்கப்பட்டது.

'ஹூ' கொல்லர்களின் நல்வாழ்விற்கென ஒரு தொழிற்சாலையைக் கூட்டுறவு அடிப்படையில் முதன் முதலில் தொடங்கினர். அக்கூட்டுறவாளரும் அவர்களுடனேயே வாழ்ந்து, உழைத்துச் சங்கத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். இச்சங்கம் 9 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. அவர்கள் அனைவருமே கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்து அகதிகளாகக் குடியேறியவர்களாவர். தொடக்கத்தில் அவர்களுக்கு £ 20 முதலீடாகக் கொடுக்கப்பட்டது. 14 மாதங்களில் இக்கூட்டுறவுச் சங்கம் இக்கடன் தொகையை வட்டியுடன் திருப்பி அளிக்கத்தக்க வகையில் செவ்வனே செயல்படலாயிற்று. இதைத் தொடர்ந்து 30 உறுப்பினர்களைக் கொண்ட தொழிற் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட்டது. இவ்வுறுப்பினர்கள் வலை பின்னும் தொழிலில் சிறந்தவர்களாக விளங்கினர். இவர்கள் பின்னல் வேலைக்குத் தேவையான இயந்திரங்களை முதலில் அமைத்தனர். எல்லோரும் ஒன்றாக உழைக்கும் வகையில் ஒரு தொழிற்சாலையும் உருவாக்கப்பட்டது. இவ்வியந்திரங்களை அவர்கள் கடற்கரைப் பகுதிகளை விட்டு வெளியேறும் போது எடுத்து வந்தனர்.

இவ்விரு சங்கங்களைத் தொடர்ந்து, சோப்பு, மெழுகுவர்த்தி செய்பவர்கள், அச்சுக்கலையில் ஈடுபட்டிருந்தவர்கள் முதலான பல்வேறு தொழிலாளர்களின் நலன் கருதிப் பல கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. நெசவாளர்களுக்கெனத் தனிப்பட்ட தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. இச்சங்கங்களைக் கொண்டு படைவீரர்களுக்குத் தேவையான கம்பளிப் போர்வைகள் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டன. இத்தொழிற்சாலைகளுக்குத் தேவையான எல்லாக் கருவிகளையும் (Looms) மரவேலை செய்பவர்களைக் கொண்டு இயங்கி வந்த கூட்டுறவுச் சங்கங்கள் அளித்துவந்தன.

1932–ஆம் ஆண்டு சீனாவில் இத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் 350-க்கும் அதிகமாக இயங்கி வந்தன. இத்தொழிற்சாலைகளில் மக்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. மொத்தச் சங்கங்களில் 50%

நெசவாளர்களுக்கென அமைக்கப்பட்ட சங்கங்களாகும். தோல் பொருள்கள், உலோகப் பாத்திரங்கள், சுரங்கத் தொழில் இரசாயனப் பொருள்கள், உணவுப் பொருள்கள், காகிதம் போன்ற பல்வேறு பொருள்கள் இச்சங்கங்களினுல் உற்பத்தி செய்யப்பட்டன. இவைகளின் மொத்த உறுப்பினர்கள் 4300 எனவும் அச்சங்கங்கள் 1.2 இலட்சம் சீன டாலர்களை மூலதன மாகப் பெற்றுள்ளன என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

இச்சங்கங்கள் நாளடைவில் நன்கு வளரத் தலைப்பட்ட வுடன், சீன அரசு இத்தொழிற்சாலைகளைப் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றம் செய்ய விரும்பியது. கனரக இயந்திரத் தொழில்கள் யாவும் நாட்டின் உற்பத்திக்கு மாற்றப்பட்டன. அவைகளைச் சுற்றி சாதாரண இயந்திரங்களைக் கொண்டு இயங்கி வந்த தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. கூட்டுறவுப் போக்குவரத்துச் சங்கங்களும் தொடங்கப்பட்டன. இயந்தி ரங்களை வெவ்வேறு இடங்களுக்குக் கொண்டு செல்ல இச்சங் கங்கள் பேருதவி புரிந்தன. மூன்ருவது மண்டலப் பகுதி (Zone) 'கொரில்லா தொழிற்சங்கங்களை'க் (Guerilla Industrial Societies) கொண்டு அமைக்கப்பட்டது. முன்னணியில் நிற்கும் சீனப்படைகளுக்கு ஆதரவாக இச்சங்கங்கள் இரகசியமாகப் பணி யாற்றி வந்தன. பெரும்பாலும் எல்லையோரப் பகுதிகளில்தான் இவைகள் இயங்கி வந்தன. இச்சங்கங்கள் கொரில்லாப் படைவீரர் களுக்குத் தேவையான ஆயுதங்களை அவ்வப்போது அளித்து வந்தன.

1942-ஆம் ஆண்டு இச்சங்கங்களின் எண்ணிக்கை 1950 ஆகும். உறுப்பினர்களின் எண்ணக்கை 22,680 எனக் கணக் கிடப்பட்டுள்ளது. இச்சங்கங்களின் பங்கு மூலதனம் 45.5 சீன டாலர்களாகும். ஒவ்வொரு மாதமும் 240 இலட்சம் டாலர் மதிப் புள்ள பல்வேறு பொருள்களை இச்சங்கங்கள் உற்பத்தி செய்து நாட்டின் பொருளாதாரத்தைக் கணிசமாக உயர்த்தி வரத் தொடங்கின. இனி, இச்சங்கங்களுக்கு சீன அரசு எவ்வாறு நல்லாதரவு நல்கியது எனக் காண்போம்.

அரசாங்க ஆதரவு

1942-ஆம் ஆண்டிற்குப் பின்னர் பொருள்களின் விலை கணிசமாக உயரலாயிற்று. எனவே, இத்தொழிற் சங்கங்கள் பொருள்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான மூலப் பொருள்களில் அதிக முதலீடு செய்ய வேண்டியதாயிற்று. ஆனுல், நிதிவசதிகளைக் கணிசமாகப் பெற்றிராத இச்சங்கங்கள் போதுமான முதலீடுகளைச் செய்ய இயலவில்லை. சீன அரசு

நாட்டில் விளைந்த பருத்தி முழுவதையும் கொள்முதல் செய்து வந்தமையால் இச்சங்கங்கள் செய்வதறியாது திகைத்தன. ஆடை வகைகளின் உற்பத்தி பெருமளவில் (சுமார் 40%) குறையத் தொடங்கியது. எனவே, சீன அரசு இக்கட்டான சூழ்நிலையிலிருந்து இக்கூட்டுறவுத் தொழிற்சங்கங்களை விடுவிப்பதற்கென நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியது. ஒரு 'மத்தியத் தலைமைக் காரியாலயம்' 'சங்கிங்' (Chungking) என்ற இடத்தில் சீன அரசாங்கத்தால் அமைக்கப்பட்டது. இம்மத்திய அமைப்புக் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்குப் பாடுபடுவதையே தன் தலையாய நோக்கமாகக் கொண்டு இயங்கி வந்தது. அரசின் ஆதரவும் கணிசமாக இருந்தமையால் எண்ணங்கள் எளிதில் ஈடேறலாயின. இம்மத்திய அமைப்பு 7 பிரதேசத் தலைமை அலுவலகங்களைப் பெற்றிருந்தது, இவ்வலுவலகங்கள் நாடு முழுமைக்கும் பணியாற்றிவந்தன. மாநிலங்களில் பல கிடங்குகளும் தொடங்கப்பட்டுள்ளன. பிரதேசத் தலைமை அலுவலக நேரடிப் பார்வையில் இக்கிடங்குகள் (Depots) இயங்கி வருகின்றன. மத்தியத் தலைமை அலுவலகத்தின் முக்கியப் பணிகளாவன :

(1) புதிய கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதில் இத்தலைமை அலுவலகம் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றது. இச்சங்கங்களுக்குத் தேவையான நிதிவசதிகளையும் இவ்வலுவலகம் ஏற்பாடு செய்கின்றது. இச்சங்கங்களுக்குத் தேவையான இயந்திரங்களையும், பிற கருவிகளையும் இவ்வலுவலகம் பெற்றுத் தருகின்றது.

(2) பல இடங்களில் பயிற்சி நிலையங்களை இவ்வமைப்பு ஏற்படுத்தியுள்ளது. ஆண் பெண் இரு பாலாருக்கும் முறையான பயிற்சி அளிக்கப்படுகின்றது. பயிற்சி பெற்றவர்களே தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக அனுமதிக்கப்பட்டனர்.

(3) இவ்வமைப்பு அரசிடமிருப்து 5 மிலியன் டாலர்களைப் பெற்றுச் சங்கங்களுக்குத் தேவையான நிதிவசதிகளை அளிக்கின்றது.

(4) சங்கங்களினால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் பெரும்பாலும் இவ்வலுவலக வாயிலாக அரசாங்கத்தால் கொள்முதல் செய்யப்படுகின்றன.

சங்கங்களின் அமைப்பு (Constitution of Societies)

ஒவ்வொரு தொழிற் கூட்டுறவுச் சங்கமும் தனியாக இயங்கும் அமைப்பாகும். சங்கங்களின் உறுப்பினர்கள் கூட்டாக உற்பத்தியில் ஈடுபடுகின்றனர்.

I. ஒவ்வொரு சங்கமும் குறைந்தது 7 உறுப்பினர்களைக் கொண்டு விளங்க வேண்டும். தொழிலாளிகள் அனைவரும் உறுப்பினர்களாக அனுமதிக்கப் படுகின்றனர். ஆனால் சங்கங்களின் செயல் முறைகளை அவர்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும். அவர்கள் போதிய பயிற்சி பெற்றவர்களாகவும் இருத்தலவசியம்.

(1) உறுப்பினர்கள் யாவரும் சங்கங்களின் விதிமுறைகளின் படி உரிமை வயதினராக (Age of Majority) இருக்க வேண்டும்

(2) உறுப்பினர்களாகப் பணியாற்றுகின்றவர்கள் நன்னடத்தை உள்ளவர்களாகவும், நாணயம் நிறைந்தவர்களாகவும் விளங்குகின்தனர். பொதுவாக அவர்களின் குண நலன்கள் நன்கு ஆராயப்படுகின்றன.

(3) உறுப்பினர்கள் பெரும்பாலும் 'நொடிப்பு நிலையர்' களாக (Bankrupt) இருப்பதில்லை.

(4) சங்கத்தின் செயற்பாட்டுப் பகுதியில் உறுப்பினர்கள் வாழ்கின்றனர். ஒன்றுக்கு மேற்பட்ட சங்கத்தில் எவரும் உறுப்பினராக அனுமதிக்கப் படுவதில்லை.

II. ஒவ்வோர் உறுப்பினரும் குறைந்தது 2 டாலர் மதிப்புள்ள பங்கைப் பெற்றிருக்க வேண்டும். உறுப்பினர் எவரும் சங்கத்தின் மொத்த 'ஒப்பிய பங்கு'களில் (Subscribed Shares) 1/15 பாகத்திற்கு மேல் பெற இயலாது.

III. உறுப்பினர்களது 'பொறுப்பு' வரையறுக்கப்பட்டுள்ளதாகும். சங்கத்திற்கு இழப்பு ஏற்படும் போது ஒவ்வோர் உறுப்பினரும் இழப்பைச் சரி செய்ய (20 times of Share value) தமது பங்கு மதிப்பைப் போன்று இருபது மடங்கு தொகையளவுக்குப் பொறுப்பேற்க வேண்டும்.

IV. சங்கத்தின் இயக்குநர் அவை எல்லா உறுப்பினர்களையும் கொண்டு விளங்கும் பொதுமன்றத்தால் நியமிக்கப்படு

கின்றது. ஓவ்வோர் உறுப்பினருக்கும் ஒரு வாக்கு மட்டுமே அளிக்கப்படுகின்றது. அன்றாட நிர்வாகத்திற்கென மேலாண்மைக்குழுவும் நியமிக்கப்படுகின்றது. பொதுவாக இக்குழுவின் உறுப்பினர்கள் பொது மன்றத்தால் தேர்தல் வழி நியமிக்கப்படுகின்றனர். ஆண்டுக்கொரு முறை சங்கத்தின் பொதுக் கூட்டம் (General Meeting) தவருமல் நடத்தப்படுகின்றது. இக்கூட்ட ஏற்பாட்டை இயக்குநர் அவை செய்கின்றது. இயக்குநர்களுக்கு ஊதியம் வழங்கப்படுவதில்லை.

V. உறுப்பினர்கள் யாவரும் சங்கங்களின் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளிகளேயாவர். உழைப்பிற்கேற்ற ஊதியம் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. உற்பத்திப் பொருள்களின் தரமும் நன்கு பரிசீலனை செய்யப்படுகின்றது. பல உறுப்பினர்கள் சங்கங்கள் வழங்கும் மூலப் பொருள்களைக் கொண்டு தங்கள் இல்லங்களிலேயே பொருள்களை உற்பத்தி செய்கின்றனர். பொருள்களின் உற்பத்தி முடிவடைந்தவுடன் அவர்கள் அப்பொருள்களைச் சங்கங்களிடம் தவருமல் ஒப்படைத்திட வேண்டும்.

VI. ஆண்டு இறுதியில் இலாபத்தொகை 'தகைமை முறை'யின் (Principle of Equity) அடிப்படையில் உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. பங்குதாரர்களுக்குப் பெருமளவு 'இலாப ஈவுத் தொகை' வழங்கப்படுவதில்லை. பங்கு மூலதனத்திற்குக் குறைந்த வட்டித்தொகையே அளிக்கப்படுகின்றது. எஞ்சியுள்ள இலாபத் தொகை கீழ்க்கண்டவாறு பிரிக்கப்படுகின்றது.

பொதுக் காப்பு நிதிக்கு (General Reserve Fund) இலாபத்தில் 20% ஒதுக்கப்படுகின்றது.

பொதுநல நிதிக்கு 10% ஒதுக்கீடு செய்யப்படுகின்றது; உறுப்பினர்களுக்கு மேலூதியமாக 10% வழங்கப்படுகின்றது. தொழில் வளர்ச்சி நிதிக்கு 10% அளிக்கப்படுகின்றது.

இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டபின் எஞ்சியுள்ள இலாபத் தொகை உறுப்பினர்களுக்கும், உறுப்பினரல்லாதவர்களுக்கும் அவர்கள் பெறும் ஊதிய அடிப்படையில் பிரித்தளிக்கப்படுகின்றது.

கூட்டமைப்புகள்

தொடக்கத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள்களைத் தாங்களாகவே கொள்முதல் செய்து

வந்தன. உற்பத்திப் பொருள்களைத் தாங்களாகவே சந்தைகளில் விற்பனையும் செய்து வந்தன. 1930-ஆம் ஆண்டு 30 சங்கங்கள் ஒன்றுசேர்ந்து கூட்டுக் கொள்முதல், விற்பனை போன்ற பணிகளைச் செய்யவல்ல ஒரு கூட்டமைப்பை உருவாக்கின. இதைத் தொடர்ந்து பல கூட்டமைப்புகள் தோன்றின. பிரதேச அடிப்படையிலும், தொழில்கள் அடிப்படையிலும் இக்கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டன. தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றுகூடி மாவட்டக் கூட்டமைப்புகளை (County Unions) உருவாக்குகின்றன. இம்மாவட்ட அமைப்புகள் மாநிலக் கூட்டமைப்பை ஏற்படுத்துகின்றன. இவற்றிற்கெல்லாம் ஒரு தலைமைக் கூட்டுறவுச் சங்கமும் (All-China Federation of Co-operatives) உருவாக்கப்பட்டுள்ளது. இத்தேசீயக் கூட்டுறவு அமைப்பு 1950-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கூட்டமைப்புகள் உறுப்பினர் சங்கங்களுக்குப் பேருதவி புரிந்து வருகின்றன.

புதிய சீனாவில் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

சீனாவில் புதிய ஆட்சி ஏற்பட்ட பின்னர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மிகச் சிறந்த முறையில் மாற்றியமைக்கப்பட்டன. வலிமை குறைந்த பல கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்பட்டன. கடைப்பிடிக்கப்பட்டுவந்த விதிமுறைகள் மாற்றியமைக்கப்பட்டன. புதிய ஆட்சியின்கீழ் இச்சங்கங்கள் புதிய முறைகளைப் பின்பற்ற வேண்டிய சூழ்நிலைகள் உருவாகின. அவற்றிற்கான ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டன. கிராமப் புறங்களில் இயங்கிவந்த விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள் பெருமளவில் மாற்றியமைக்கப்பட்டன. இச்சங்கங்களின் எண்ணிக்கையும் வெகு விரைவில் உயரத் தொடங்கியது. இச்சங்கங்களின் முக்கியப் பணிகளாவன—

(i) உறுப்பினர்களின் உற்பத்திப் பொருள்களான தானியம், பருத்தி, சணல், முதலானவற்றிற்கு சிறந்த முறையில் விற்பனையேற்பாட்டைச் செய்தலே இச்சங்கங்களின் முக்கியப் பணியாகும். கைத்தொழில் பொருள்களுக்கும் விற்பனையேற்பாடு செய்யப்பட்டது.

(ii) உறுப்பினர்களுக்குத் தேவையான விவசாயக் கருவிகள், விதை, உரங்கள் போன்றவையும் வழங்கப்பட்டன. அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன.

(iii) அரசாங்கத்திற்குச் சொந்தமான கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொருள்களை வழங்குவதில் சலுகைகள் காட்டப்பட்டன.

விவசாயப் பொருள்களும், நுகர்வுப் பொருள்களும் குறைந்த விலையில் இச்சங்கங்களுக்கு விற்பனை செய்யப்பட்டன.

(iv) குறைந்த வட்டிக்கு இக்கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனுதவிகள் வழங்கப்பட்டன.

(v) வரிவிதிப்பில் இச்சங்கங்களுக்கு 20% தள்ளுபடி செய்யப்பட்டது. இச்சலுகை இதர வாணிகச் சங்கங்களுக்கு அளிக்கப்படவில்லை.

(vi) இச்சங்கங்கள் காப்பீடு வசதிகளைப் பெறுவதிலும் சலுகைகள் காட்டப்பட்டன. இச்சங்கங்களிடமிருந்து குறைந்த 'முனைமத் தொகையே' (Premium) காப்பீடுச் சங்கங்கள் பெற்றன. இவ்வாறு இச்சங்கங்கள் பெற்றுள்ள சலுகைகளைக் கொண்டு தங்கள் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுகின்றன,

இந்நாட்டைப் பொதுவுடைமைக் கட்சி கைப்பற்றியவுடன் குடிசைத் தொழில்களுக்கும், சிற்றளவுத் தொழில்களும் (Small Scale Industries) பெருமளவு ஊக்கம் அளிக்கப்பட்டது. இத்தொழில்கள் கூட்டுறவு முறையில் மாற்றியமைக்கப்பட்டன. துரிதமாகச் செயல்பட்டு வந்த அரசாங்கத்துடன் இச்சங்கங்களும் ஈடு கொடுத்து முன்னேறின. 1950–ஆம் ஆண்டு இச்சங்கங்களின் எண்ணிக்கை 311 ஆகும். 1951-ஆம் ஆண்டு இத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 1321 ஆக உயர்ந்தது. உறுப்பினர் எண்ணிக்கை 264,000 ஆகும். 400 மிலியன் 'உவான்' (400 Million Yuan) மதிப்புள்ள பல பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. 1953-ஆம் ஆண்டு இச்சங்கங்களின் எண்ணிக்கை 4813 ஆக உயர்ந்தது. உறுப்பினர் எண்ணிக்கை 3 இலட்சமாகும். 1957-ஆம் ஆண்டு, மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 இலட்சத்திற்கும் அதிகமாகக் காணப்படுகின்றது.

காலணி தயாரித்தல், தச்சு வேலை புரிதல், ஆடை நெய்தல், தையற்கலை போன்ற பல துறைகளில் இச்சங்கங்கள் ஈடுபட்டு வந்தன. கூட்டாக மூலப் பொருள்களைக் கொள்முதல் செய்வதற்கென இச்சங்கங்கள் தொழிலாளர்களால் தொடங்கப்பட்டன. உற்பத்திக்குத் தேவையான இயந்திரக் கருவிகளும் கூட்டாகவே வாங்கப்பட்டன. சங்கங்களின் ஆலோசனைப்படியே பொருள்கள் சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டன. உற்பத்திச் செலவைக் கணிசமாகக் குறைத்தல், உற்பத்தி முறைகளில் பல முன்னேற்ற

வழிகளைக் கடைப்பிடித்தல், விற்பனையைப் பெருக்குதல் போன்ற நோக்கங்களைக் கொண்டு இச்சங்கங்கள் செயலாற்றி வந்தன. சங்கத்தின் வருமானம் முழுவதும் உறுப்பினர்களின் உழைப்பிற் கேற்றவாறு பகிர்ந்தளிக்கப்பட்டது. உறுப்பினரல்லாதவர்களின் உழைப்பு சங்கங்களுக்குத் தேவைப்பட்டால் முதலில் அவர்கள் உறுப்பினர்களாக மாற்றப்படுகின்றனர். அதன் பிறகே அவர் களது திறமையும், செயலும் சங்கத்தினால் பெறப்படுகின்றன. பொதுவாக, உறுப்பினர் எல்லோரும் கூட்டுறவுத் தொழிற் சாலையில்தான் உழைக்கின்றனர்.

சீன அரசு இச்சங்கங்களுக்கு எல்லாவித உதவிகளையும் அளித்து வருகின்றது. சங்கங்களுக்குத் தேவையான இயந்தி ரங்கள், கருவிகள் போன்றவை குறைந்த விலையில் அரசாங்கத் திற்குச் சொந்தமான தொழிற்சாலைகளினால் விற்பனை செய்யப்படு கின்றன. உற்பத்தித் துறையில் அவ்வப்போது ஆலோசனைகள் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றன. நிருவாகப் பொறுப்பிலும் அரசாங்கம் தன் பல்வகையில் உதவி செய்கிறது. இச்சங்கங் களுக்குத் தேவையான கடன் வசதிகளை அரசாங்க வங்கிகள் குறைந்த வட்டி வீதத்தில் வழங்கி வருகின்றன. வரி விதிப்பிலும் இச்சங்கங்களுக்குத் தனிச் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

சீனாவில் இயங்கி வந்த 'கூட்டுறவுக் கைத்தொழில் சங்கங்கள்' மூன்று வகைப்படும். அவையாவன—

(i) உற்பத்தியாளர் குழுமம் (Producers Team)

அளிப்புச் சங்கங்கள், விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள், நுகர்வோர் சங்கங்கள் ஆகியவை துணையுடன் இவ்வுற்பத்தி யாளர் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. இச்சங்கங்கள் கூட்டாக மூலப்பொருள்களைக் கொள்முதல் செய்து உற்பத்திப் பணிகளில் ஈடுபடுகின்றன. உற்பத்தியான பொருள்கள் அரசாங்க வாணிகச் சங்கங்களிடம் விற்பனை செய்யப்படுகின்றன. பொருள்களை விற்பனைக்கேற்றவாறு பக்குவப்படுத்தும் பணி யிலும் ஈடுபடுகின்றன. ஒவ்வொரு குழுமமும் மிகக் குறைந்த உறுப்பினர்களையே கொண்டுள்ளன. சிறு தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள், கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ளோர், குடும்பத் தலைவர்கள் ஆகிய திறமை வாய்ந்த நபர்களே இச் சங்கங்களில் உறுப்பினர்களாக விளங்குகின்றனர். வெவ்வேறு இடங்களில் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இக் குழுமங்களின் பணிகளால் இடைநிலையர்களின் சுரண்டல் அறவே அகற்றப்படுகின்றது. கூட்டுறவுத் தொழிற் சங்கங்

களுடன் இக்குழுமங்கள் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. அங்காடி விலைகளுக்கேற்பப் பொருள்கள் விற்பனை செய்யப்படு கின்றன. அமைப்பில் இவ்வுற்பத்தியாளர் குழுமங்கள் பழமை யாக விளங்கினாலும் நவீன முறையில் பணியாற்றி வருகின்றன. இன்றும், இவ்வமைப்புகள் சீனாவில் பெருமளவில் இயங்கி வரு கின்றன.

(ii) அளிப்பு—விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள்

கைத்தொழில்களில் நல்ல பயிற்சி பெற்றவர்களே இச்சங்கங் களில் உறுப்பினர்களாக விளங்குகின்றனர். உறுப்பினர்கள் பல குழுமங்களாகப் பிரிக்கப்படுகின்றனர். எல்லோரும் கூட்டுறவு முறையில் உற்பத்திப் பணியில் ஈடுபடுகின்றனர். உறுப்பினர்கள் பலராக விளங்கினாலும், உற்பத்தித் துறையில் இவர்கள் ஒரு முகமாகவே ஈடுபடுகின்றனர். இச்சங்கங்கள் அரசாங்க வணிகச் சங்கங்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. இச் சங்கங்கள் மூலப்பொருள்களைக் கூட்டாகக் கொள்முதல் செய்து உறுப்பினர்களுக்கு வழங்குகின்றன. பொருள்களைப் பக்குவப் படுத்தும் பணியிலும் ஒப்பந்தங்களின் அடிப்படையில் ஈடுபடு கின்றன. தொழிற்சாலை உரிமையாளர்கள், கைத்தொழிலில் ஈடு பட்டிருப்போர் போன்றவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண் டிருந்தாலும், உற்பத்திக்குப் பயன்படும் இயந்திரங்கள், கருவிகள் போன்றவை இச்சங்கங்களுக்குச் சொந்தமானவை அல்ல. சங்கங்களின் நிகர இலாபத்தொகை உறுப்பினர்களுக்குப் பகிர்ந் தளிக்கப்படுவதில்லை. இலாபத் தொகை காப்பு நிதியாகப் பாதுகாக்கப்படுகின்றது. இந்நிதியைக் கொண்டு உற்பத்திக்குத் தேவையான இயந்திரங்கள், உற்பத்திக் கருவிகள் போன்றவை பெறப்படுகின்றன. இச்சங்கங்கள் கூட்டுறவு இயக்கத்தின் திருப்பு முனையாக இயங்கி வந்தன,

இச்சங்கங்கள் யாவும் தன்னியலான அமைப்புகளாகும். பொருள்களின் தரத்தையும் இச்சங்கங்கள் நன்கு உயர்த்தி வரு கின்றன. 1952-ஆம் ஆண்டு முதல் இச்சங்கங்கள் கணிசமாக வளர்ச்சி பெறத் தொடங்கின.

(iii) உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் (Producers' Co-operatives)

இவைகள் நன்கு வளர்ச்சியடைந்த கூட்டுறவுச் சங்கங்க ளாகும். இச்சங்கங்களில் தொழிற்சாலை உரிமையாளர்கள், குடும்பங்களிலுள்ள எல்லா நபர்கள், பிற தனி நபர்கள், ஏனை யோர் உறுப்பினர்களாக விளங்குகின்றனர். இவர்கள் அனை

வரும் சங்கத்திற்குச் சொந்தமான தொழிற்சாலைகளில் பணி புரிகின்றனர். இல்லங்களில் பொருள்கள் உற்பத்தி செய்யப் படுவதில்லை. உற்பத்திப் பணிகள் யாவும் 'வேலைப் பகுப்பு' (Division of Labour) முறையில் நிறைவேற்றப்படுகின்றன. உறுப்பினர்களது திறமைக்கும் உழைப்பிற்கும் ஏற்றவாறு உற்பத்திப் பணிகள் அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப் படுகின்றன. இச்சங்கங்களுக்கு உறுதுணையாக அளிப்புச் சங்கங்கள், விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள், துய்ப்போர் சங்கங்கள் போன்றவை விளங்குகின்றன. அரசாங்க ஆதரவும் இச்சங்கங்களுக்கு அவ்வப் போது கிடைத்து வருகின்றது. மூலப் பொருள்கள் மொத்த மாகக் கொள்முதல் செய்யப்படுகின்றன. உறுப்பினர்களுக்குப் போதிய பயிற்சியும் அளிக்கப்படுவதால், அவர்கள் அனைவருமே கட்டுப்பாடுடன் நடந்துகொள்கின்றனர். காகிதம், இரப்பர், நெருப்புப்பெட்டி, சருக்கரை, மருந்து வகைகள், தட்டுமுட்டுப் பொருள்கள், விவசாயக் கருவிகள் போன்றவை இச்சங்கங்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன.

சீனாவில் இக்கூட்டுறவுக் கைத்தொழில் சங்கங்கள் தங்களது சீரிய பணிகளின் காரணமாக மாபெரும் வெற்றியைப் பெற் றுள்ளன. இச்சங்கங்கள் வேலை பகுப்பு முறையில் தொழி லாளிகளை ஈடுபடுத்தியுள்ளன. விரிவாக்கப்பட்ட உற்பத்திப் பணிகளின் காரணமாக வேலை வாய்ப்புகள் பெருகத் தலைப்பட்டன. இலாபத் தொகை நல்ல முறையில் பயன்படுத்தப் படுகின்றது. மிகச் சிறந்த முறையில் மூலப் பொருள்கள் உற் பத்திக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. அரசாங்க ஆதரவும் கணிசமாக இருப்பதால் இத்தகைய சங்கங்களின் திட்டங்கள் யாவும் எளிதில் நிறைவேறுகின்றன. உறுப்பினர்கள் போதிய பயிற்சி பெறுவதால் இவர்களிடையே ஒரு சிறந்த கட்டுப்பாடு நிலவுகின்றது. பொருள்களின் தரமும் நன்கு பாது காக்கப்படுவதால் நுகர்வோர் மெத்த மனநிறைவடைகின்றனர்.

வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள்

வெகு காலத்திற்கு முன்பாகவே விவசாயக் கூட்டுறவு இயக்கம் தொடங்கப்பட்டிருந்தாலும், 1951-ஆம் ஆண்டிலிருந்து தான் சீனாவில் நன்கு வளர்ச்சி பெறத் தொடங்கியது. பொது வுடைமைக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர்தான் பல புரட்சிகரமான மாற்றங்கள் வேளாண்மைத் துறையில் ஏற் பட்டன. விவசாய வளர்ச்சிக்கெனப் பல கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. வளர்ச்சி குறைந்த அண்டை நாடுகள் சீன

விவசாய முறையை நன்கு கவனிக்கத் தொடங்கியவுடன், இந் நாட்டு விவசாயச் சங்கங்கள் உலகப் புகழ் பெற்றன.

விவசாய வளர்ச்சிக்கெனப் பல நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டன. 1952-ஆம் ஆண்டு, நில மேலாளர்களின் உடைமையாக விளங்கி வந்த நிலங்கள் யாவும் உழைக்கும் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. மொத்த மக்கள் தொகையுடன் (500 மிலியன்) நில அளவை ஒப்பிட்டுப் பார்க்கையில் ஒவ்வொருவருக்கும் மிகக் குறைந்த அளவு நிலமே கிடைத்தது. துண்டு நிலங்களில் விவசாயம் வெற்றிபெற இயல வில்லை. உற்பத்தியைப் பெருக்கவல்ல இயந்திரங்களை விவ சாயிகள் தங்கள் துண்டு நிலங்களில் பயன்படுத்த முடியவில்லை. மேலும், அவர்கள் நவீன விவசாய முறைகளை நன்கு அறிந்தி ருக்கவில்லை. இதன் விளைவாக, விவசாய உற்பத்தி பெருகவே இல்லை. இதைக் கண்ணுற்ற பொதுவுடைமை அரசு விவசாயி களின் துண்டு நிலங்களைக் கொண்டு பல 'மக்கள் மன்றங்களை' (People's Communes) அமைத்தன. இவ்வமைப்புகளின் நன்மைகள் நன்கு விளக்கப்பட்டன.

(1) நில அளவு கணிசமாக உயர்ந்தது. துண்டு நிலங்கள் யாவும் பல்வேறு மன்றங்களாகச் சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றி யமைக்கப்பட்டன. இதன் விளைவாக, விவசாயத்திற்குத் தேவை யான அளவு நிலங்களைக் கொண்ட பண்ணைகள் உருவாகின.

(2) உறுப்பினர்களது ஏனைய உடைமைகளும் ஒன்ருகச் சேர்க்கப்பட்டு நில வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டன.

(3) பண்ணைகளின் அளவு கணிசமாக உயர்ந்தமையால் விவசாய இயந்திரங்கள் பெருமளவு பயன்படுத்தப்பட்டன.

(4) பொதுவுடைமை ஆட்சியின்கீழ் பொதுவுடைமைக் கருத் துக்களைக் கொண்ட பண்ணைகளாக அவைகள் விளங்கலாயின.

(5) தொழில்வளம் நிறைந்த நாடாகச் சீனு வெகு விரைவில் மாறியதால், நகரங்களில் வாழ்ந்து வந்த தொழிலாளர்களுக்கு உணவு தானியங்கள் பெருமளவு தேவைப்பட்டன. இத் தேவையை இப்பண்ணைகளே நிறைவேற்றி வந்தன.

(6) விவசாய வளர்ச்சிக்கெனத் தீட்டப்படும் திட்டங்கள் தனியார் விவசாய முறையில் பெருமளவு வெற்றி காண்பதில்லை.

ஆனால், வளர்ச்சித் திட்டங்கள் யாவும் இப்பண்ணைகளில் பெரு வெற்றி பெற்றன,

(7) இத்தகைய கூட்டுப் பண்ணைகளினால் பொதுவுடைமைக் கட்சி நன்கு வலிமை பெறலாயிற்று.

(8) நாடு முழுமைக்கும் இம்மக்கள் மன்றங்களே அடிப்படை அமைப்புகளாக விளங்கின. இம்மாற்றம் மூலம் மக்கள் யாவரும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபடத் தொடங்கினர். விவசாயிகள் யாவரும் நாட்டின் பொது நிருவாகத்தின்கீழ் பணி புரியவேண்டிய சூழ்நிலை உருவாகியது. மாநில அளவில் பல மன்றங்கள் அமைக்கப்பட்டன. அவற்றிடையே நெருங்கிய தொடர்பும் காணப்பட்டது.

(9) இம்மாற்றம் காரணமாகவே நாட்டின் பொருளாதார வளர்ச்சி கணிசமாக உயரலாயிற்று. நாட்டின் உடைமையாக இம்மன்றங்கள் விளங்கியமையால் அரசாங்கத்தின் திட்டங்கள் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டன. விவசாயிகளும் தங்கள் தொல்லைகளிலிருந்து விடுபட்டு; இப்புரட்சிகரமான மக்கள் மன்றங்களை முழு மனதுடன் ஆதரிக்கத் தொடங்கினர். பொது வுடைமைக் கட்சியின் எண்ணங்களும் எளிதில் ஈடேறலாயின.

கூட்டுப் பண்ணை விவசாய முறையைத் தொடங்க விரும்பிய சீன அரசு தன் திட்டங்களை மக்கள் எதிர்க்கா வண்ணம் மெள்ள மெள்ள செயல்படுத்தத் தொடங்கியது. இத்தகைய விவசாய வளர்ச்சிக்கானத் திட்டங்கள் படிப்படியாக மக்களிடையே செல்வாக்குப் பெற்றன. இனி, சீன அரசு எவ்வாறு தன் திட்டங்களை மக்களிடையே படிப்படியாகப் புகுத்தி வெற்றி பெற்றது என்பதைக் காண்போம்.

(1) ஒருவருக்கொருவர் உதவிக் குழுமங்கள் (Mutual-Aid Teams)

தொடக்கத்தில் மிக எளிதான அமைப்புகளே இந்நாட்டு விவசாய வளர்ச்சிக்கென அமைக்கப்பட்டன. ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழ்ந்து வந்த விவசாயிகள் இக்குழுமங்களை அமைத்தனர். அவர்கள் தங்கள் நிலங்களில் தனித்தனியாக விவசாயம் செய்து உற்பத்திப் பொருள்களை அவர்களது விருப்பம்போல் விற்பனை செய்து வந்தனர். விற்பனை செய்ய விரும்பாத விவசாயிகள் தங்களது சொந்த உபயோகத்திற்கு வைத்துக்கொண்டனர். இருப்பினும், ஒரு சில காரியங்கள் கூட்டாகச் செய்யப்பட்டன. சில செயற்பாடுகளில் கூட்டு முயற்சியே வெற்றி

யளிக்கும் என்பதை உணர்ந்திருந்த அவர்கள் சூழ்நிலைகளுக்கேற்ப கூட்டாகப் பணி புரிந்து வந்தனர். உதாரணமாக, நிலங்களை உழுவதிலும், விதை விதைத்தலிலும் அவர்கள் கூட்டாகப் பணி புரிந்தனர். மேலும், களை நீக்கல், அறுவடை செய்தல் போன்ற முக்கியப் பணிகளிலும் கூட்டாக உழைத்தனர். நிலங்கள் யாவும் ஒன்ருகச் சேர்க்கப்படாவிடினும், விவசாயக் கருவிகள், இயந்திரங்கள் போன்றவை ஒன்று சேர்க்கப்பட்டு பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன. உறுப்பினர்கள் தங்கள் நில வளர்ச்சிக்கே உழைத்தாலும், சிறிய அளவே கூட்டுறவு முறையைக் கடைப்பிடித்தும் பெரிதளவு பயனடைந்தனர். இம்முறையினுல் பொருள்களின் உற்பத்தி கணிசமாக உயரலாயிற்று. கால்நடைகளும் எல்லோர் நன்மைக்காகவும் பயன்படுத்தப் பட்டன. ஓரளவு நவீன விவசாய முறைகள் கையாளப்பட்டதால், விவசாயத் துறையில் பெருமளவு முன்னேற்றங்கள் ஏற்படலாயின. பின்னுல் அமைக்கப்பட்ட அமைப்புகளுக்கு இக்குழுமங்களே முன்னேடியாகத் திகழ்ந்தன. ஒருவருக்கொருவர் உதவிச்சங்கங்கள் மூன்று வகையாக விளங்கின. உறுப்பினர்கள் தங்கள் தகுதிக்கேற்பக் கூட்டாக உழைத்தனர்.

(i) தற்காலிகச் சங்கம் (Temporary Association)

ஏழு அல்லது எட்டு குடும்பங்கள் ஒன்று சேர்ந்து இவ்வகைச் சங்கத்தை அமைக்கின்றன. தொடக்கத்தில் இத்தகைய சங்கங்கள் சீனுவின் பல பகுதிகளில் இயங்கி வந்தன. விவசாயத் தொழிலில் சில சமயங்களில் இச்சங்க உறுப்பினர்கள் கூட்டாகப் பணியாற்றி தங்களை உயர்த்திக் கொண்டனர். 1953-ஆம் ஆண்டு மொத்த விவசாயக் குடும்பங்களில் 70% இச்சங்கங்களில் உறுப்பினர்களாக விளங்கின.

(ii) ஆண்டுகாலச் சங்கம் (Annual Association)

ஆறு அல்லது ஏழு விவசாயக் குடும்பங்கள் ஒன்றுசேர்ந்து இச்சங்கங்களை உருவாக்கினர். சில தருணங்களில் இச்சங்கம் 20 குடும்பங்களையும் பெற்றிருந்தது. இக்குடும்பங்கள் ஒருவருக்கொருவர் உதவிகளை நல்கி வந்தமையால் அனைவரது வளர்ச்சியும் தடையின்றி உருவாகியது. வேலைப் பகுப்பு முறையில் அனைவரும் உழைத்து வந்தனர், விவசாயத் தொழிலைத் தவிர, பிற தொழில்களிலும் இவ்வகைச் சங்கங்கள் இயங்கி வந்தன. ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்வதற்குத் தகுந்த முறையில் (Ad Hoc Basis) தற்காலிகத் திட்டங்கள் தீட்டப்பட்டுச் சிறப்பாகச் செயல்படுத்தப் பட்டன. 1950-ஆம் ஆண்டு மொத்தக் குடும்பங்களில் 3 விழுக்காடு இச்சங்கங்களில் உறுப்பினர்களாக விளங்கின, 1952-ஆம்

ஆண்டு 25 சதவிகிதமாக உயர்ந்து காணப்படுகின்றது. வட சீனாவில் மொத்தக் குடும்பங்களில் 60% எனவும், வடமேற்கு சீனாவில் 70% எனவும் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

(iii) பகுதிக் கூட்டு விவசாய உற்பத்தியாளர் சங்கங்கள் (Partially Collective Agricultural Producers Co-operatives)

இச்சங்கங்களில் ஓரளவு தனியார் விவசாயமும், கூட்டு விவசாயமும் கலந்து காணப்படுகின்றன. உறுப்பினர்களது உடைமைகள், உழைப்பு, உற்பத்திச் சாதனங்கள் முதலானவை தனித்தன்மையை இழக்காவண்ணம் பொது முன்னேற்றத்திற்கெனப் பயன்படுத்தப்பட்டன. தொடக்கத்தில் இச்சங்கங்களில் பத்திலிருந்து இருபது குடும்பங்கள் வரை உறுப்பினர்களாக விளங்கின. இருப்பினும், பெரும்பாலான சங்கங்கள் மிகக் குறைவான குடும்பங்களையே உறுப்பினர்களாகப் பெற்றிருந்தன. ஒவ்வொரு சங்கமும் சராசரி 80 ஏக்கர் நிலத்தைப் பெற்றிருந்தது. ஒரு சில சங்கங்கள் 480-லிருந்து 625 ஏக்கர்களைப் பெற்றிருந்தன. இச்சங்கங்கள் சிறப்பாக நிருவகிக்கப்பட்டு வந்தன. இச்சங்கங்களே பின்னால் அமைந்த வலிவான விவசாயக் கூட்டுறவு இயக்கத்திற்கு அடித்தளமாக அமைந்தன. சீன அரசு எவ்வாறு படிப்படியாகப் பொது விவசாய முறைகளை மக்களிடையே தோற்றுவித்தது என்பதைக் அடுத்தப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைக் கொண்டு அறியலாம்.

1953-ஆம் ஆண்டு 'பகுதிக் கூட்டுப் பண்ணைகளை ஊக்குவிப்பதற்கெனத் தீர்மானங்கள் போடப்பட்டன.

இவ்வாறு, முதல் கட்டத்திலேயே சீனா வியத்தகு முறையில் வளர்ச்சி பெற்றது. இதைத் தொடர்ந்து விவசாய உற்பத்தியாளர் சங்கங்கள் தொடங்கப்பட்டன.

விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் (Agricultural Producers' Co-operatives)

இச்சங்கங்களின் உறுப்பினர்கள், உழைப்பு, விவசாயக் கருவிகள், கால்நடைகள் முதலானவற்றை ஒன்றுசேர்ப்பதுமட்டுமின்றி, தங்களது நிலங்களையும் ஒன்று சேர்த்து உழைத்தனர். தங்களால் இயன்ற நிதிகளையும் ஒன்றாக உருவாக்கினர். சில முக்கிய விவசாயக் கருவிகளை இச்சங்கம் பெற்றிருந்தது. உறுப்பினர்களின் உபயோகத்திற்குப் பயன்பட்டன. நில உரிமை பொதுவாக்கப்படாமல் உறுப்பினர்களிடமே இருந்தது. உறுப்

உற்பத்தி வகை	பண்ணையின் வகை	உரிமை வகை
I தனிப்பட்ட உற்பத்தி	(1) தனியார் பண்ணை — ஒவ்வொரு குடும்பமும் தனித் தனியாக விவசாயம் செய்து வந்தன.	
	(2) 3-லிருந்து ஐந்து குடும்பங்கள் குறைந்த அளவுக் கூட்டு முயற்சியில் ஈடுபட்டன. ஒருவருக்கொருவர் உதவிகளைப் பரிமாறிக் கொண்டனர். சொத்துக்கள் பொதுவாக்கப் படவில்லை.	தனியார் சொத்துரிமை
II ஒருவருக் கொருவர் உதவி அடிப்படையில் உற்பத்தி	(3) தனிப்பட்ட விவசாயப் பண்ணைகள் ஓர் ஆண்டுக்கெனத் திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டன. 6-லிருந்து 7 குடும்பங்கள் உறுப்பினர்களாக விளங்கின.	
	(4) 20-லிருந்து 40 குடும்பங்கள் ஒன்று சேர்ந்து தங்கள் உழைப்பு, உடைமைகள் முதலானவற்றை பொது முன்னேற்றத்திற்கு பயன்படுத்தின. சொத்துரிமையை அவர்களே பெற்றிருந்தனர்.	பகுதிக் கூட்டுச் சொத்துரிமை
III உற்பத்தியில் கூட்டுறவு	(5) கூட்டுப் பண்ணைகள்—100 குடும்பங்கள் அவற்றிற்கு மேலான குடும்பங்கள் பொது உயர்விற்கு உழைத்தன.	கூட்டுச் சொத்துரிமை

பினர்களது நில அளவு அடிப்படையில் வருமானம் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஏறக்குறைய இச்சங்கங்கள் இந்தியாவில் இயங்கும் 'கூட்டுப் பண்ணை விவசாயச் சங்கங்களை' (Joint Farming) ஒத்துள்ளன. 1955-ஆம் ஆண்டு இறுதியில் இவ்வகைச் சங்கங்களின் எண்ணிக்கை 2 மிலியனையும் தாண்டியது. உறுப்

பினர் எண்ணிக்கை 70 மிலியனாகும். இச்சங்கங்களின் வெற்றி சீனாவின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக அமைந்தது.

3. சமதர்மப் பண்ணைகள் (Socialist Farms)

விவசாய உற்பத்தியாளர் சங்கங்கள் நாளடைவில் சமதர்மப் பண்ணைகளாக மாற்றப்பட்டன. இச்சங்கங்களிடம் உறுப்பினர்கள் தங்கள் நிலங்களையும் பொது முன்னேற்றத்தை மனதில் கொண்டு அளித்துவிடுகின்றனர். இதன் மூலம், இயற்கையின் அளிப்பான நிலம் எல்லோருக்கும் உடைமையாக மாறியது. தனியார் சொத்துரிமை என்ற சொல்லுக்கே இடமின்றி இச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. சங்கத்தைச் சேர்ந்த நிலம் முழுமையும் எல்லோர் நன்மைக்காகவும் பயன்படுத்தப்பட்டது. 1958-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின் மூலம் முதல் சமதர்மச் சங்கம் தொடங்கப்பட்டது. இயங்கிவந்த எல்லா விவசாய உற்பத்தியாளர் சங்கங்களும் ஒன்றுசேர்ந்து இவ்வகைச் சங்கங்களாக மாற்றப்பட்டன. நிலங்கள் யாவும் சங்கத்திற்கு உடைமையாக மாறின. வீடுகளின் பின்புறம் அமைந்திருந்த தோட்டங்களும் இச்சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இச்சங்கங்கள் மிகப் பெரிய செயற்பாட்டுப் பகுதியைப் பெற்றுள்ளன. 'ஹிசியாங்' (Hsiang) என்ற பகுதியில் இருந்த கிராமங்கள் யாவும் ஒரு 'மக்கள் சங்கத்தின்' கீழ்க் கொண்டு வரப்பட்டன. ஒவ்வொரு சங்கமும் சராசரியாக 4797 குடும்பங்களை உறுப்பினர்களாக பெற்றுள்ளன. உறுப்பினர்களின் எண்ணிக்கை 300,000-க்கும் அதிகமாகக் காணப்படுகின்றது. இச்சங்கங்கள் தங்கள் பகுதிகளில் உள்ள நிலத்தைமட்டுமின்றி, பிற தொழில்களையும் ஏற்று நடத்துகின்றன. உறுப்பினர்களின் நலனைக் கருதி உறுப்பினர்களின் குழந்தைகள் கல்வி கற்கத் தக்க வகையில் பள்ளிகளையும் தொடங்கியுள்ளன. இச்சங்கங்களின் பல்வேறு பணிகள் 'பீகிங் மக்கள் தினசரியில்' (Peking People's Daily) நன்கு விளக்கப்பட்டது. இச்சங்கங்களின் முக்கியப் பணி விவசாய உற்பத்தியைப் பெருக்குவதேயாகும். விவசாயம் தவிர, தொழில்கள், வணிகம், கல்வி, நாட்டுப் பாதுகாப்பு போன்ற பல்வேறு துறைகளில் இச்சங்கங்கள் அருந்தொண்டாற்றி வருகின்றன. அரசியல், பொருளாதார, கலாச்சாரப் பணிகள் மட்டுமின்றி, நாட்டுப் பாதுகாப்பிற்கும் சீனாவில் இயங்கும் இச் சங்கங்கள் உறுதுணையாக விளங்குகின்றன. உணவுத் துறையில் சீனா தன்னிறைவு பெறுவதற்கு இச்சங்கங்கள் பல திட்டங்களைத் தீட்டிச் சிறப்பான முறையில் அவற்றைச் செயல்படுத்தியும் வருகின்றன, உறுப்பினர்களுக்கு அவ்வப்போது

விவசாயத் தொழிலில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. பொதுவாக, இச்சங்கங்களே விவசாயத்தில் ஆணிவேராகத் திகழ்கின்றன.

சீனாவின் இக்கூட்டுச் சங்கம் பெரியதோர் அமைப்பாகத் திகழ்கின்றது. சோவியத்து நாட்டில் இயங்கி வரும் 'கோல்கோஸ்' (Kolkhoz) அமைப்பைவிட இது அளவில் பெரிய கூட்டு அமைப்பாகும். இச்சங்கத்தின் உறுப்பினர்கள் ஊதியம் பெறும் தொழிலாளிகளாக மட்டும் திகழவில்லை. ஊதியத்தைத் தவிர, உறுப்பினர்களுக்கு உண்டியும் அளிக்கப்படுகின்றது. உண்டி வழங்குவதில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படவில்லை, உணவு வகைகள் உறுப்பினர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. உழைப்பின் தன்மையை உயர்த்தும் நோக்கோடு தகுதி வாய்ந்த உறுப்பினர்களுக்கு மேலூதியமும் வழங்கப்படுகிறது. பண்ணைகளின் நிர்வாகம் மிகச் சிறந்த முறையில் நடத்தப்படுகின்றது. உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் குறைந்த அளவு பணிகளே அளிக்கப்படுகின்றன. உற்பத்தித் துறையில் மூலப் பொருள்கள் சேதப் படுத்தப்படுவதில்லை. எனவே, உற்பத்திச் செலவு கணிசமாகக் குறைக்கப்படுகின்றது. தேவையை நிறைவேற்றுவதற்காக மாற்றியமைக்கப்பட்ட விவசாயத் தொழில் நாளடைவில் இலாபம் தரத்தக்கத் தொழிலாக மாறியது. அறிவியல் துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் விவசாய வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டன. விவசாயத்தில் பொறுக்கு விதைகள், தரமான உரங்கள், சிறந்த விவசாயக் கருவிகள் முதலானவையே பயன்படுத்தப் படுகின்றன. விளைபயிர்கள் பூச்சிகளிலிருந்தும் சிறந்த முறையில் பாதுகாக்கப் படுகின்றன. எல்லாப் பண்ணைகளும் போதிய நீர்ப்பாசன வசதிகளையும் பெற்றுள்ளன. இத்தகைய நடவடிக்கைகளால் விவசாய உற்பத்தி பெருமளவு உயரத் தொடங்கியது. பண்ணைகளின் நிருவாகத்தைச் சங்கங்களே மேற்கொண்டுள்ளன. அரசாங்க ஊழியர்கள் இச்சங்கங்களிலும் உழைக்கின்றனர். நிர்வாக அவையின் கட்டளைகளுக்கேற்ப இவர்கள் பணியாற்றுகின்றனர்.

1958-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்ட முதல் சங்கத்தின் (Commune) பெயர் 'ஸ்புட்னிக்' (Sputnik) எனப்படும். இச்சங்கம் 27 விவசாய உற்பத்தியாளர் சங்கங்களைக் கொண்டு விளங்கியது. உறுப்பினர் எண்ணிக்கை 9000 குடும்பங்களாகும். இதே ஆண்டில் செப்டம்பர் மாதம் சங்கங்களின் எண்ணிக்கை 23,397-ஆக பெருகியது. உறுப்பினர் எண்ணிக்கை 112 மில்லியனாகும். இச்சங்கங்களின் வளர்ச்சியைக் கொண்டே நாம் சில

உண்மைகளை உணர முடிகின்றது. அரசாங்க ஆணைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்குமிடையே தோன்றிய சங்கங்களாகும். இவை அரசாங்க ஆணைகளுக்கும், விதிகளுக்கும் இந்நாட்டு மக்கள் தலை வணங்கினர். இதன் பயனாக எழுந்தவையே இச்சங்கங்களாகும்.

இச்சங்கங்களின் செயல் முறைகளைக் காணும்போது ஒன்றை நாம் எளிதில் புரிந்து கொள்ளலாம். கூட்டுறவுக் கொள்கைகள் இந்நாட்டில் மக்கள்மேல் கட்டாயப்படுத்தித் திணிக்கப்பட்டுள்ளன என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிகின்றது. 'உற்பத்தியாளர் சங்கங்கள் அடியோடு அகற்றப்பட்டன' என்பதை இந்நாட்டுப் பிரபல பத்திரிகையே 1958-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் தேதி வெளியிட்டுள்ளது. இச்சங்கங்கள் கலைக்கப்பட்ட பின்பே சமதர்ம அமைப்புகள் அமைக்கப்பட்டன. இந்நாட்டில் கூட்டுறவு என்ற பெயரில் வேறு ஓர் அமைப்பை உருவாக்கியுள்ளனர். 'கூட்டுறவு' என்ற சொல்லுக்கும்' 'கட்டாயப்படுத்தல்' என்ற சொல்லுக்கும் இடைவெளி மிக அதிகம் என்பதை நாம் நன்கு அறிவோம்.

சீனக் கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பியல்புகள்

இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கம் பெற்றிருக்கும் சிறப்பியல்புகளே இவ்வியக்கம் பெற்றிருக்கும் வெற்றிக்கான காரணங்களாகவும் விளங்குகின்றன.

பொதுவுடைமைக் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர்தான் விவசாயத் துறையில் வியத்தகு மாற்றங்கள் ஏற்பட்டன. கூட்டுறவு விவசாயச் சங்கங்கள் அமைக்கப்பட்ட பின்னரே உலக அரங்கில் சீனா ஒரு நிரந்தர இடத்தைப் பிடித்தது. விவசாயத்தைப் போலவே பிற தொழில்களும் கூட்டுறவு முறையில் நன்கு வளரலாயின. இனி இவ்வியக்கத்தின் சிறப்பியல்புகளைக் காண்போம்.

(1) தொடக்கம் முதலே சீனா ஒரு விவசாய நாடாகவே விளங்குகின்றது. 1937-ஆம் ஆண்டு முதல் தொழில் துறையிலும் கணிசமாக வளரத் தொடங்கியது. இரு வளர்ச்சிகளுக்குமே கூட்டுறவு உறுதுணையாக நின்றது.

(2) இந்நாட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களிடமிருந்து பங்குத் தொகையை மட்டும் பெறுகின்றன. மிகக் குறைவான சங்கங்களே உறுப்பினர்களிடமிருந்து வைப்புத் தொகையைப் பெறுகின்றன. தங்களுக்குத் தேவையான நிதி

வசதிகளை விவசாய வங்கிகள், சீன வங்கி, வணிக வங்கிகள் முதலான அமைப்புகளிடமிருந்தே பெறுகின்றன.

(3) வெளியார் எவரும் கூட்டுறவுச் சங்கங்களைத் தணிக்கை செய்வதில்லை. கணக்கு வைப்பு முறையைக் கூட்டுறவுச் சங்கங்களே மேற்பார்வையிடுகின்றன.

(4) உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் கடமைகளை உணர்ந்து பொறுப்புடன் நடந்து கொள்கின்றனர். இவ்வியக்கத்தின் வெற்றிக்கு இதுவே அடிப்படைக் காரணமாகும். 'திட்டங்கள் யாவும் மக்களுக்கு' என்பதை இந்நாட்டு மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர். இல்லையேல் உணரவைக்கப்படுகின்றனர். உறுப்பினர்களது உழைப்பு சிறந்த முறையில் ஆக்க வேலைக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

(5) விவசாயின் பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து அதற்கேற்ற முறையில் இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நாட்டுப் பெருந் தலைவர்கள் விவசாயக் குடியில் தோன்றியவர்களாவர். எனவே, விவசாயத் தொழிலில் எழும் இடர்ப்பாடுகளை அவர்கள் இயல்பாகவே உணர்ந்திருந்தனர். பிற தொழில்கள் புறக்கணிக்கப்படவில்லை.

(6) பொறுக்கு விதைகள், தரமான உரங்கள், நவீன விவசாயக் கருவிகள் பரவலாகக் கூட்டுறவுச் சங்கங்களால் பயன்படுத்தப்பட்டன. உற்பத்திக்குத் தேவையான சாதனங்கள் யாவும் மிகச் சிறந்த முறையில் உபயோகப்படுத்தப்பட்டன.

(7) விவசாயப் பொருள்களின் விலை சந்தைகளில் ஒரு சீராக விளங்குகின்றது. எனவே, நுகர்வோர் பெருமளவு நன்மை பெறுகின்றனர்.

(8) கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு முறையான கல்வியறிவு தேவை என்பதை நன்குணர்ந்த சீனு பல விவசாயப் பள்ளிகளையும், கல்லூரிகளையும் தொடங்கின. உறுப்பினர்கள் இக்கல்வி நிறுவனங்களின் வாயிலாக உயர்ந்த கல்வியைப் பெற்றனர்.

(9) இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கம் அரசாங்கத்தின் அரவணைப்பில் வளர்ச்சி பெற்றதொன்றாகும். இவ்வியக்கத்தில் அரசாங்கத்தின் தலையீடு அதிகமாகவே உள்ளது. கட்டுப்பாடும்

அதற்கேற்ற ஆதரவும் இந்நாட்டுக் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கின.

(10) கடைசியாக, இச்சங்கங்களின் நிருவாகம் மிகச் சிறந்த முறையில் நடத்தப்படுகின்றது. சங்க நிர்வாகத்தில் பொதுவாகத் தவறுகள் நடைபெறுவதில்லை. உறுப்பினர்களுக்கு உழைப்பிற் கேற்ற ஊதியம் கொடுக்கப்படுவதுடன் இலவச உணவும் அளிக்கப்படுகின்றது. தகுதி வாய்ந்த உறுப்பினர்களுக்கு மேலூதியமும் (Bonus) அளிக்கப்படுகின்றது.

8. சோவியத்து நாட்டில் கூட்டுறவு இயக்கம்
(Co-operation in U. S. S. R.)

வரலாற்றுப் பின்னணி

உலகில் உள்ள எல்லா நாடுகளையும்விட, நிலப்பரப்பில் மிகப் பெரிய நாடு ரஷ்யாவாகும். உலக மொத்த நிலப்பரப்பில் ஆறில் ஒரு பங்கு கொண்ட அந்நாடு, ஆசியா, ஐரோப்பா ஆகிய இரு கண்டங்களிலும் தடையேதுமின்றி நன்கு பரவியுள்ளது. இது சுமார் எண்பத்தாறு இலட்சம் சதுர மைல் கொண்டது. மிகமிகக் குளிர்ந்த பகுதியிலிருந்து, ஓரே தட்ப வெப்ப நிலையில் உள்ள பகுதிகள் வரை இந்நாட்டில் உள்ளன. நிலப்பரப்பில் பெரிய நாடாக விளங்கினாலும், அளவான மக்கள் தொகையே பெற்றுள்ள நாடாகும் இது.

சோவியத்து நாடு பதினைந்து மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதில் ரஷ்யப் பகுதி ஒரு தனி மாநிலமாகும். இதுவே மிகவும் பழமையான மாநிலமாகும். 60 இலட்சம் சதுரமைல் பரப்பளவுள்ள இந்தப் பகுதிக்கு, 'ஐக்கிய சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசு நாடுகள்' (Union of Soviet Socialist Republics) என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்பகுதியின் மக்கள் தொகை கணிசமாக உயர்ந்தே உள்ளது. சோவியத் நாட்டு நிலப்பரப்பில் முக்கால் பங்குக்கு மேலும், மக்கள் எண்ணிக்கையில் பாதிக்கு மேலும் இங்குதான் வாழ்கின்றனர். எனவே, மற்ற மாநிலங்கள் யாவும் மிகச் சிறியனவாகவே கருதப்படுகின்றன.

ஏனைய ஐரோப்பிய நாடுகளைப்போலவே சோவியத்து நாடும் பழமை மிக்கதாகும். இதை ஆண்டு வந்த மன்னர்கள் 'ஜார்' எனப்பட்டனர். 1712-ஆம் ஆண்டு வரை மாஸ்கோதான்

(Moscow) ரஷ்யாவிற்குத் தலைநகராக விளங்கி வந்தது. அதன் பின், தலைநகரை ரஷ்ய மன்னர்களில் புகழ்பெற்ற பீட்டர் மகா சக்கரவர்த்தி, வேறொரு நகருக்கு மாற்றி, அந்நகருக்கு 'பீட்ரோ கிராட்' என்று பெயர் இட்டார். 1917-ஆம் ஆண்டு மாபெரும் புரட்சி ஏற்பட்டு, போல்ஷ்விக் கட்சி (Bolshevik Party) நிர்வா கத்தைக் கைப்பற்றியபோது. மீண்டும் தலைநகரமாக மாஸ்கோ மாற்றப்பட்டது.

சோவியத்துக் குடியரசின் மாநிலங்கள் யாவும் ஒன்று சேர்ந்து, எல்லாவற்றிற்கும் பொதுவான ஒரு மத்திய அரசை உருவாக்கி உள்ளன. முறையான நிருவாகம் காரணமாக நாட்டு நடப்பு செம்மையாக அமைந்துள்ளது. முதன் முதலாக மார்க்ஸ் தத்துவ அடிப்படையில் கம்யூனிஸப் பாணியில் அர சாங்கம் ஏற்பட்டது ரஷ்யாவில்தான். புரட்சிக்குப் பின்னர், கம்யூனிஸ்ட் அரசாங்கம் உருவாக்கப்பட்டது. எனினும், மற்ற நாடுகளுக்கும் ரஷ்யாவிற்கும் தொடர்ந்து பல போர்கள், பிணக் குகள் ஏற்பட்டுக்கொண்டேயிருந்தன. இப்பிரச்சினைகளிலிருந்து விடுபடவே பல ஆண்டுகள் ஆயின. அதன் பின்னர்தான், பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டமிட்டு, பல்வேறு நட வடிக்கைகள் அங்கு எடுக்கப்பட்டன.

கம்யூனிஸ சித்தாந்தத்தை உலகிற்கு அளித்தவர் 'கார்ல் மார்க்ஸ்' என்றாலும், அதை நடைமுறைக்குக் கொண்டுவரப் புதியதொரு வழியை முறையாக வகுத்து, வெற்றி கண்டவர் லெனின்தான். இன்றும் சோவியத்து நாட்டின் தந்தையாக மக்களால் கொண்டாடப்படுகிறார் லெனின். ஏசுநாதர், புத்தர், முகம்மது போன்ற மதத் தலைவர்களை எவ்வாறு அந்தந்த மதத் தினர் போற்றிக் கொண்டாடுகின்றனரோ, அதேபோலத்தான் இன்றைக்கு கம்யூனிஸ சித்தாந்தத்தில் நம்பிக்கை கொண்ட மக்கள், லெனினைக் காண்கிறார்கள். 'லெனின்' சொன்ன பல் வேறு கருத்துக்கள்தான் சமுதாயத்தின் அடிப்படைக் கருத்துக் களாக இன்று கம்யூனிஸ நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக் கின்றன. இக்கருத்துக்களுக்கு விளக்கம் கொடுப்பதில் வேறு பாடுகள் இருக்கலாம்; மதக் கோட்பாடுகளுக்கு விளக்கம் கொடுப்பதில் வேறுபாடுகள் இருப்பதுபோல, எல்லா மக்களும் லெனினைத்தான் தங்களுடைய ஆதிகர்த்தாவாகக் கொள்கிறார்கள். முகம்மதியர்களுக்கு 'மெக்கா' எவ்வளவு உயர்வானதோ, அதே போல் கம்யூனிஸ சித்தாந்தத்தில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு ரஷ்யா ஒரு மெக்காவாக விளங்குகின்றது. புதிய ஆட்சி ஏற்பட்ட பின்னர்தான், தொழில், விவசாயம், கட்டடம் ஆகிய துறைகளில்

பல வியத்தகு முன்னேற்றங்கள் ஏற்படலாயின. இத்துறைகளின் மூலம் ஏற்பட்டுள்ள நவீன சாதனங்கள், பொறி இயல், தொழில் நுட்ப அறிவு முதலானவற்றைக் கொண்டு பல்வேறு பொருள் களின் உற்பத்தியும் உயரலாயிற்று. விவசாயமும், தொழில் களும் ஒருசேர வளர அரசு சகல நடவடிக்கைகளையும் எடுக்க லாயிற்று.

ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் போலவே. சோவியத்து நாடும் கூட்டுறவுத் துறையில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ள நாடாகும். பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில்தான் கூட்டுறவு இயக்கம் இந்நாட்டில் தொடங்கப்பட்டது. 'ராக்டேல் முன்னேடிகள்' இங்கிலாந்தில் கூட்டுறவு முறையில் புரிந்த சாதனைகளைக் கண்ட பின்னரே இந்நாட்டில் கூட்டுறவுக் கொள்கைகள் வேரூன்றத் தொடங்கின. 1864-ஆம் ஆண்டில் தான் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கான முதல் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இதைத் தொடர்ந்து, கூட்டுறவுப் பண்டகசாலைகளும், கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்களும் அமைக்கப்பட்டன. எனினும், அப்போதிருந்த ஏகாதிபத்திய அரசு (Imperial Government) ஜனநாயகக் கொள்கைகளில் நம்பிக்கை கொண்டிருக்க வில்லையாகையால் 1905-ஆம் ஆண்டு வரை கூட்டுறவு இயக்கம் வளர்ச்சி அடையவே இல்லை. 1914-ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்துதான் இவ்வியக்கம் புத்துயிர் பெற்றுக் கூட்டுறவு அமைப்புகள் எல்லாத் துறைகளிலும் உருவாக்கப்பட்டன. குறிப்பாக, 'நுகர்வோர் பண்டகசாலைகள்' (Consumers' Stores) பெருமளவில் அமைக்கப்பட்டன.

1917-ஆம் ஆண்டு ஏற்பட்ட புரட்சியின்போது (Great Revolution), தொழிலாளிகள் அனைவரும் கூட்டுறவுக் கட்டடங்களைக் கைப்பற்றினர். தொழிலாளிகளை முறையாக வழி நடத்தி வந்த லெனின் (Lenin), கூட்டுறவுச் சங்கங்களின் பெருமை உணர்ந்து அவற்றை மேலும் ஊக்குவிக்கத் தொடங்கினர். அதன் பின்னர்தான், கூட்டுறவு அமைப்புகள் இந் நாட்டின் எல்லாத் துறைகளிலும் உருவாக்கப்பட்டு அரசின் நேரடிக் கண்காணிப்பில் முறையாகச் செயற்படத் தொடங்கின. இந்நாடு ஒரு மாறுபட்ட அரசைக் கொண்டு விளங்கினாலும், கூட்டுறவு இயக்க வளர்ச்சியைப் பொறுத்த மட்டில் ஏனைய ஜனநாயக நாடுகளைப் போலவே சிறந்து விளங்குகின்றது.

உலகில் உள்ள ஏனைய நாடுகள் பெற்றிராத சில சிறப்பியல்புகளைச் சோவியத்து நாடு பெற்றுள்ளது. இச்

சிறப்பியல்புகள் அனைத்தும் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக விளங்கின. இனி அவற்றை ஆராய்வோம்.

1. சோவியத்து நாடு சுமார் 86 இலட்சம் சதுரமைல் பரப்பளவு கொண்ட மிகப் பெரிய நாடாகும். அமெரிக்க ஐக்கிய நாட்டைக் காட்டிலும் இரு மடங்கு பெரிய நாடாகும் இது. எனவே, கூட்டுறவின் ஒவ்வொரு துறையிலும் ஆயிரக்கணக்கான உள்ளூர்க் கூட்டுறவுச் சங்கங்கள் (Local Societies) அமைக்கப் பட்டுள்ளன. இதன் விளைவாக, நிருவாகத் தொல்லைகள் பல ஏற்படலாயின. இப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு, பிரதேச வாரியாகக் கூட்டுறவுச் சங்கங்கள் பிரிக்கப்பட்டுச் சிறத்த கண்காணிப்பிலும், பராமரிப்பிலும் நிர்வகிக்கப் படலாயின. முறையான நிர்வாகத்தின் பொருட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் பல மட்டங்களில் முறையாகப் பிரித்து அமைக்கப்பட்டன. எனினும், எல்லாப் பிரிவுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நெருங்கிய நொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதால், கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் ஒரு சங்கிலித் தொடர் போல் காட்சியளிக்கின்றன. தேசிய, பிரதேச, மாவட்ட அளவில் மட்டுமின்றி உள்ளூர் அளவிலும் பல்வேறு கூட்டுறவு அமைப்புகள் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளன. எனவே, நிருவாகம் செவ்வனே நடைபெறுகிறது.

2. இந்நாட்டில் அரசியல் அமைப்பின்படி நாட்டிலுள்ள அனைத்து சொத்துக்களும் அரசாங்கத்தைச் சேர்ந்தவையாகும். தனி உடைமை என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை. ஆனால், கூட்டுறவு அமைப்புகள் பொதுச் சொத்துக்களில் அரசுடன் சேர்ந்து உரிமை கொண்டாட அனுமதிக்கப்பட்டுள்ளன. இவ்வகையில், கூட்டுறவு அமைப்புகளுக்குப் பெரிதும் பெருமை அளிக்கின்ற ஒரே நாடு சோவியத்து நாடேயாகும், இதன் விளைவாகக் கூட்டுறவு இயக்கம் வெகு வேகத்தில் வளரலாயிற்று.

3. பொதுவுடைமைத் தத்துவத்தைக் கொண்ட கூட்டுறவு இயக்கம் சோவியத்து நாட்டில் விரைவாக முன்னேறியதில் வியப்பேதுமில்லை. ஜனநாயக நாடுகளில், பொதுவாகச் செல்வந்தர்களின் செய்கைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுத் தவிக்கும் ஏழை மக்களால்தான் கூட்டுறவு இயக்கம் தொடங்கப் பட்டு வளர்ச்சி பெறும். ஆனால், சோவியத்து நாட்டில் நாட்டு மக்கள் அனைவரின் முன்னேற்றம் கருதிக் கூட்டுறவு இயக்கம் நாடு முழுமைக்கும் அரசு ஆதரவுடன் தொடங்கப்பட்டது. 'கார்ல் மார்க்ஸ்', ''மக்களின் ஏழ்மை நிலையைக் களையக் கூட்டுறவு

இயக்கம் நாடு முழுவதிலும் பரவி இருப்பதுடன் மட்டுமின்றி, அரசு ஆதரவையும் பெற்றிருக்க வேண்டும்'' என்று கூறியுள்ளார். இக்கருத்து இங்கு செவ்வனே கையாளப்பட்டமையால், வெற்றி எளிதில் கிட்டியது.

4. 1921-ஆம் ஆண்டு ஏற்பட்ட 'உள்நாட்டுப் போர்' (Civil War) சோவியத்து நாட்டின் பொருளாதாரத்தை மிகவும் சீர்குலைத்தது. இப் போரினால் இந்நாடு மிகவும் பின்தங்கிய நாடாக மாறியது. விவசாயமும், தொழில் துறையும் ஒரு சேரச் சீர்கேடு அடைந்தன. தனியார் துறைமூலம் இவைகள் வளம் பெற முடியாது என்பதை உணர்ந்து, பொதுவுடைமைக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியவுடன் குடிமக்களின் நலன் கருதிக் கூட்டுறவு இயக்கத்தைப் பெரிதும் ஊக்குவிக்கத் தொடங்கியது.

5. 1923-ஆம் ஆண்டு நாட்டு முன்னேற்றத்திற்கெனப் பல திட்டங்கள் தீட்டப்படலாயின. கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக் கெனவும் சிறந்த திட்டங்கள் தீட்டப்பட்டமையால் கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவில் தொடங்கப்பட்டன. விவசாயத் துறையிலும், தொழில் துறையிலும் தொடங்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் பெரும் பங்கு பெற்றன. இந் நாட்டின் திட்டங்களைக் கண்ட பிறகே, உலக நாடுகள் பலவும் திட்டங்கள் தீட்டலாயின.

எனவே, சோவியத்து நாட்டின் கூட்டுறவு இயக்கம் முறையாக வளர்ந்தமைக்கு அந்நாட்டின் சிறப்பியல்புகள், அரசியல் சூழ்நிலைகள் போன்றவையே நேரடிக் காரணங்களாக உள்ளன. இந் நாட்டில் தோன்றிய பிரச்சனைகள் யாவற்றிற்கும் கூட்டுறவு முறையிலேயே தீர்வு காணப்பட்டமையால் பொருளாதார முன்னேற்றம் தடையின்றி ஏற்பட்டது. இதன் பயனாகக் கூட்டுறவு இயக்கமும் செழித்து வளரலாயிற்று. இனி, சோவியத்து நாட்டின் கூட்டுறவு இயக்கம் எவ்வாறு வளர்ச்சி பெற்றது என்பதைக் காண்போம்.

கூட்டுறவு இயக்க வளர்ச்சி வரலாறு

இந் நாட்டின் கூட்டுறவு இயக்க வரலாறு அரசியல் வரலாறுடன் பின்னிப் படர்ந்தே வளர்ந்துள்ளது. ஜார் (Czar) மன்னர்கள் ஆட்சிக் காலத்திலேயே கூட்டுறவு இயக்கம் தொடங்கப்பட்டாலும் முறையாக வளர்ச்சி பெறவில்லை. முடியாட்சியில் இவ்வியக்கம் எவ்வித உதவிகளையும் பெற முடிய வில்லை. முதல் உலகப் போர் வரை இந்நாடு மிகவும் பின்தங்கிய

நிலையிலேயே இருந்தது. நாடு முழுவதையும் ஏழ்மையே கோலோச்சி வந்தது. மக்களில் பெரும்பாலோர் கல்வி யறிவு அற்ற விவசாயிகளாதலால் நாட்டின் பொருளாதாரம் மிகவும் சீரழியலாயிற்று, நவீன விவசாய முறைகளை இவர்கள் அறியாதவர்களாகையால் உற்பத்தி உயர்வதற்குப் பதிலாகக் குறையலாயிற்று. போக்குவரத்து வசதிகளும் போதுமானதாக இல்லையாதலால், உணவுத் தானியங்கள் தேவைப்படும் இடங்களுக்குக் கொண்டு செல்லவும் இயலவில்லை. நாடு முழுவதும் பஞ்சமும், பசியும் தலைவிரித்தாடியது. இதன் விளைவாக, வாழப் பிறந்த மக்கள் வகையறியாது மாளத் தொடங்கினர். நகரங்களில் வாழ்ந்து வந்த தொழிலாளிகளும் இவர்களைப் போலவே வறுமையின் கொடிய கரங்களில் சிக்கித் தவித்தனர். தோன்றிய இடர்ப்பாடுகளோ ஏராளம். ஆனால், இவற்றைக் களைய யாதொரு நடவடிக்கையும் உடனே எடுக்கப்படவில்லை.

இத் தருணத்தில்தான், 1864-ஆம் ஆண்டு ‘கூட்டுறவுக் கடன் சங்கங்கள்’ (Co-operative Credit Societies) விவசாயிகளுக்கு உதவும் பொருட்டுத் தொடங்கப்பட்டன. ராக்டேல் முன்னோடிகளை மாதிரியாகக் கொண்டு சில ‘நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்’ (Consumers' Societies) 1865-ஆம் ஆண்டு அரசு அனுமதியுடன் தொடங்கப்பட்டன. இதன் பின்னர்தான், இந் நாட்டில் கூட்டுறவு இயக்கம் வேரூன்றத் தலைப்பட்டது.

எனினும், அரசாங்கம் கூட்டுறவு அமைப்புகளுக்கு யாதோர் ஆதரவையும், ஊக்கத்தையும் அளிக்கவே இல்லை. ஆதரவு அளிக்காதது மட்டுமின்றி, கூட்டுறவு அமைப்புகளை மிகவும் அதைரியப்படுத்தியமையால் கூட்டுறவுச் சங்கங்கள் எண்ணிக்கையில் உயரவே இல்லை. சென்ற நூற்றாண்டின் இறுதிவரை கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் குறைவாகவே இயங்கி வந்தன. அவைகளில் ‘விவசாயக் கூட்டுறவுக் கடன் சங்கங்களே’ எண்ணிக்கையில் அதிகமாக இருந்தன. இதே நிலை 1905-ஆம் ஆண்டு வரை நீடித்தது. இத்தருணத்தில்தான் இந்நாட்டிற்கும் ஜப்பானுக்கும் போர் மூண்டது. இப்போர் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்தது என்றாலும் கூட்டுறவு இயக்கத்திற்கு ஒரு நல்ல வளர்ச்சியையும், முக்கியத்துவத்தையும் கொடுத்தது என்பது ஒரு மறுக்க முடியாத உண்மை. போர்க் காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் உணவுத் துறையில் அரசாங்கத்திற்குப் பெருமளவில் கைலாகு கொடுத்தன. மேலும், வெண்ணெய்க் கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவில் தொடங்கப்பட்டுப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவிற்கு வலிவு அடைந்தன. இவ்

வெண்ணெய்க் கூட்டுறவுச் சங்கங்களுடன் பல கூட்டுறவுப் பண்டகசாலைகளும் ஒருங்கே தொடங்கப்பட்டன. தொடக்கத்திலிருந்தே ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் மக்களுக்கு நலன் பயக்கும் பல பணிகளில் செயற்பட்டு வந்தன. 1914-ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே கூட்டுறவு இயக்கம் நன்கு நிலைபெறத் தொடங்கியது.

இந்நாட்டில் ஏற்பட்ட புரட்சிக்குப் (Russian Revolution) பின்னர்தான், கூட்டுறவு இயக்கம் முழு வளர்ச்சியைப் பெற்று பொலிவுடன் திகழலாயிற்று. 1917-ஆம் ஆண்டு, மொத்தக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 54,500 ஆகும். அவை யாவன :

1. கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 16,500
(Co-op. Credit Societies)
2. கூட்டுறவு விவசாயச் சங்கங்கள் 8,000
(Co-op. Agricultural Societies)
3. நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள்...25,000
(Consumers' Co-op. Stores)
4. உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 4,500
5. பிற கூட்டுறவுச் சங்கங்கள் 500

பெரும் புரட்சிக்குப் பின்னர் ஆட்சியைக் கைப்பற்றிய பொது உடைமைக் கட்சி, நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் எண்ணத்துடன் கூட்டுறவு இயக்கத்தின்பால் தீவிரக்கவனம் செலுத்தத் தொடங்கியது. எனினும், சூழ்நிலைகள் புதிய அரசிற்குச் சாதகமாக இல்லாததால் பிரச்சினைகளின் எண்ணிக்கை உயரலாயிற்று. உணவுப் பொருள்களின் பற்றுக் குறை மக்களை வாட்டிற்று. ஏனைய தேவைப் பொருட்களும் கிடைக்காமல் மக்கள் பெரும் இன்னலுக்குள்ளானார்கள். எனவே, தேவைப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும், முறையான விநியோக ஏற்பாட்டை உருவாக்குவதற்காகவும் திட்டங்கள் சீரிய முறையில் தீட்டப்பட்டன. திட்டங்களின் முதற்படியாக, தொழில்கள் அனைத்தும் நாட்டுடமையாக்கப்பட்டன. தேவைக்கதிகமான பண்ணைப் பொருள்களை அரசாங்கம் கட்டாயப் படுத்திப் பெற்றது. உற்பத்திப் பொருட்களை முறையாக விநியோகம் செய்வதற்காகக் கூட்டுறவுப் பண்டகசாலைகளை 'முகவர்களாக' (Agents) அரசு பயன்படுத்திக்

கொண்டது. வயது வந்த எல்லோரும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொண்டனர். இதற்கு அரசின் தூண்டுதலே காரணமாக இருந்தது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் நாடு முழுமைக்கும் சேவை புரியத்தக்க வகையில் மாற்றியமைக்கப்பட்டன. இக்கூட்டுறவுச் சங்கங்களை முறையாக நிருவகிப்பதற்காக ஒரு தேசிய அமைப்பு (The National Union of Consumers' Societies or Centrosoyus) உருவாக்கப்பட்டது. இந்தேசிய நிறுவனம் அரசாங்கத்தின் ஆணைக்கேற்பப் பணியாற்றி வந்தது. எனவே உறுப்பினர்கள் நிருவாக உரிமையை அறவே இழந்தனர். அரசாங்கத்தின் ஆணைப்படி, கூட்டுறவுப் பண்டகசாலைகள் நகரங்களுக்குத் தேவையான விவசாயப் பொருள்களை கிராமங்களிலிருந்தும், கிராமங்களுக்குத் தேவையான இயந்திரத் தொழில் சம்பந்தமான பொருள்களை நகரங்களிலிருந்தும் முறையாக விநியோகம் செய்து வந்தன. இச்சிறந்த ஏற்பாட்டிலும் பிரச்சினை எழாமலில்லை. நகரங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை கல்வியறிவு குறைந்த விவசாயிகளிடமிருந்து எளிதாக பெற இயலவில்லை. இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு அரசாங்கம் ஒரு 'புதிய பொருளாதாரக் கொள்கையை' (New Economic Policy) வகுத்து, பழைய உற்பத்தி, விநியோக முறைகளை அடியோடு மாற்றியமைக்க விரும்பியது. இத்தருணத்தில்தான், நகரங்களில் தொழிற் பெருக்கம் ஏற்பட்டு, தொழிலாளிகளின் எண்ணிக்கை பெருமளவில் உயரலாயிற்று இத்தொழிலாளர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை அளிக்கவும், தொழிற்சாலைகளுக்குத் தேவையான 'கச்சாப் பொருட்களை' (Raw Materials) விநியோகம் செய்வதற்கும் அரசு தீவிர நடவடிக்கை எடுக்கலாயிற்று.

சோவியத்து நாடு முதன் முதலில் திட்ட அடிப்படையில் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்தபோது, தங்களுக்கு வேண்டிய எல்லா இயந்திரங்களையும் தாங்களாகவே செய்து கொள்ளக்கூடிய ஆற்றலைப் பெறுவதற்கு முதலிடம் கொடுத்தனர். அதையொட்டி, உருக்கு முதலிய உலோகங்கள் செய்யக் கூடிய கனரகத் தொழில்களை முதலில் ஆரம்பித்தனர். அடுத்து அந்த உலோகங்களை உபயோகப்படுத்தி, இயந்திரங்கள் உருவாக்குவதற்கான தொழில்கள் தொடங்கப்பட்டன. இவற்றிற்கே முழுக்கவனத்தையும், சக்தியையும் செலுத்த வேண்டி இருந்த காரணத்தால், மக்களது அன்றாடத் தேவைக்கான பொருள்களை உற்பத்தி செய்து கொள்ள அவர்களால் முடியவில்லை. குறிப்பாக, நகரங்களில் வாழ்ந்து வந்த தொழிலாளிகளுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் கிடைக்கவில்லை.

தொழில்களுக்குத் தேவையான கச்சாப் பொருள்களும் தேவையான அளவு கிடைக்கவில்லை.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு, விவசாயத்தில் கூட்டுப் பண்ணை முறை கூட்டுறவு அடிப்படையில் புகுத்தப் பட்டது. இதன் விளைவாக, நிலங்கள் யாவும் அரசாங்கத்திற்குச் சொந்தமாயின. தனி நபர்களால் நடத்தபப்ட்டு வந்த விவசா யத்தொழில் கூட்டுறவு முறையில் நடக்க வழி வகுக்கப்பட்டது. இதன் பயனாகக் கூட்டுறவுக் கொள்கைகள் விவசாயத் துறையிலும் கையாளப்பட்டு பெரு வெற்றி பெற்றன. கூட்டுப் பண்ணைகள் அமைந்ததை ஒட்டிக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், விற்பனையேற் பாட்டுச் சங்கங்கள், கூட்டுறவு அளிப்புச் சங்கங்கள் (Supply Societies), நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவைகளும் பெருமளவில் தொடங்கப்பட்டன. பொருள்களின் விநியோக ஏற்பாடு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களினால் கவனிக்கப்பட்ட மையால், திட்டகாலத்தில் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் நாடு முழுவதும் விரைவாக நன்கு பரவி வளர்ச்சி பெற்றது. இதற்குப் பின்னர்தான், சோவியத்து நாட்டில் பொருளாதார வளர்ச்சி கணிசமாக ஏற்படலாயிற்று.

திட்டங்களை நல்ல முறையில் நிபுணர்கள் ஒன்றுகூடி வகுத்து விட்டாலும் கூட, அத்திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு மக்களைத்தான் சார்கிறது என்பதை நன்கு புரிந்த சோவியத்து அரசாங்கம் அக்கருத்தை மக்களும் புரிந்து கொண்டு செய லாற்றுமாறு சூழ்நிலைகளை உருவாக்கியது. ஒவ்வொரு திட்டத் தையும் 'மக்கள் திட்ட'மாக்குவதற்கான வழிமுறைகளைச் சோவி யத்து அரசு கூட்டுறவு மூலம் வகுத்தது. இதன் விளைவாகக் கூட்டுறவு இயக்கமும் செழித்து வளரலாயிற்று.

இனி, சோவியத்து நாட்டின் பல்வேறு கூட்டுறவு அமைப் புகளை ஆராய்வோம். இந்நாட்டின் பொருளாதாரத் தேவைகளுக் கேற்ப, கூட்டுறவு அமைப்புகள் பல வடிவங்களில் 1860-ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே உருவாகத் தொடங்கின. அவ்வமைப்புகளைக் கொண்டு நாம் இந்நாட்டின் கூட்டுறவு இயக்க வரலாற்றை எளிதில் அறிந்து கொள்ள முடியும்.

சோவியத்து நாட்டின் கூட்டுறவு அமைப்புகள்

இப்பொதுவுடமை நாட்டின் கூட்டுறவு அமைப்புகள் அவ்வப்போது நிலவிய சூழ்நிலைகளுக்கேற்ப தோன்றியவை யாகும். அவையாவன:

(1) தொழிலாளர் அமைப்புகள் (Labour Artels)

(2) விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் (Agricultural Societies)

(3) கடன் வழங்கும் சங்கங்கள் (Credit and Loan giving Societies)

(4) கூட்டுறவு இணைப்புச் சங்கங்கள் (Co-operative Unions)

(5) நுகர்வோர் கூட்டுறவுச்சங்கங்கள்(Consumers' Societies)

1. தொழிலாளர் அமைப்புகள் :

இக்கூட்டுறவு அமைப்புகளே சோவியத்து நாட்டின் பழமையான கூட்டுறவுச் செயல்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. கூட்டுறவுக் கொள்கைகள் முதன் முதலில் இவ்வமைப்புகள் மூலமாகத்தான் இந்நாட்டில் குடிபுகுந்தன. தொழிலாளிகள் தங்கள் நலன் கருதி உருவாக்கியவையே இவ்வமைப்புக்களாகும். 19-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்தே தொழிலாளிகள் முதலாளிகளின் கொடுமைக்கு ஆளாகித் தவித்தனர். தங்களது உழைப்புக் கேற்ற ஊதியம் பெறுவதற்காகவே தொழிலாளிகள் இவ்வமைப்புகளை நாடினர். இனி, இக்கூட்டுறவு அமைப்பை எவ்வாறு சோவியத்துச் சட்டம் வரையறுத்துள்ளது என்பதைக் காண்போம்.

"உறுப்பினர்களின் கூட்டுப் பொறுப்பின் அடிப்படையில் கூட்டாகக் கணக்கு வைத்துக் கொள்வதன் மூலம் சில தொழில்களை நடத்துவதற்காகவோ அல்லது தனி நபர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவோ அமைக்கப்படும் கூட்டு நிறுவனமே ஆர்ட்டல் (Artel) எனப்படும்".

("An Artel is an Association formed to carry on certain Industries or render Personal services on the Joint responsibility of the members of the Artel and on their Joint account").

எனவே, தொடக்கத்தில் ஒன்று சேரக்கூடிய பல துறைத் தொழிலாளிகள் ஒன்றுகூடி தங்களுக்குள் ஓர் அமைப்பைக் கூட்டுறவு அடிப்படையில் உருவாக்கி, அதன் மூலம் தங்களது உழைப்பைத் தகுந்த ஊதியத்திற்கு நல்கினர். அதாவது, தங்களது உழைப்பிற்கேற்ற ஊதியத்தை இக்கூட்டுறவு அமைப்பின் மூலம் பெற்றனர். எனவே, தொழிலாளிகளின் நலன்

முதலாளிகளின் இலாப நோக்குக்குப் பலியாகாமல் இக்கூட்டுறவு அமைப்புகளால் பாதுகாக்கப்பட்டது. தொடக்கத்தில் மரவேலை செய்வோர், கட்டட வேலை செய்வோர், கைத்தொழில்களில் ஈடு பட்டவர்கள், முதலான தொழிலாளிகளே இவ்வமைப்புகளைத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கோடு உருவாக்கினர். இத்தொழிலாளிகளின் உழைப்பை நாடுவோர், முதலில் இக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரைச் சந்தித்து ஊதியத்தை நிருணயம் செய்து கொள்ள வேண்டும். அதன் பிறகே, தொழி லாளிகள் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் பணியைத் தொடங்கு வார்கள். இக்கூட்டுறவு அமைப்புகள் உறுப்பினர்களிடமிருந்தும், வெளியார்களிடமிருந்தும் கடன் பெற்று, உறுப்பினர்களின் நலனுக்காகச் சில தொழில்களையும் சிறப்புற நடத்தி வந்தன. இத்தகைய திட்டமிட்ட நடவடிக்கைகளால் தொழிலாளிகளின் வாழ்க்கை நிலை மேடுபள்ளமின்றி, ஒரேசீராக அமைந்ததில் வியப் பேதுமில்லை. ஆனால், தொடக்கத்தில் வெற்றி நடை போட்ட இக் கூட்டுறவு அமைப்புகள் தொடர்ந்து வெற்றி பெற இயலவில்லை. சோவியத்து நாட்டில் 'பேரளவுத் தொழில்'களும் (Large-Scale Industries) 'கனரகத் தொழில்'களும் (Heavy Industries) வேகமாக வளர்ந்தமையால் இவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் தன் வலிவையும், முக்கியத்துவத்தையும் மெள்ள மெள்ள இழக்க லாயின. 'கைத்தொழில் கூட்டுறவு அமைப்புகள்' (Handicrafts Artels) இவ்வகையில் மிகவும் பெயர் பெற்றவையாகும். அவற்றுள் சில, இன்றும் சோவியத்து நாட்டில் நிலை பெற்று உள்ளன.

2. விவசாயக்கூட்டுறவுச் சங்கங்கள் (Agricultural Societies)

விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் பத்தொன்பதாம் நூற் றாண்டின் இறுதியில் விவசாயிகளால் அமைக்கப்பட்டன. இச் சங்கங்களுக்கும் கூட்டுப் பண்ணைகளுக்கும் (Collective Farms) நிரம்ப வேறுபாடு உண்டு. விவசாயிகள் தங்களைச் சூழ்ந்திருந்த பிரச்சினைகளைக் களையும் பொருட்டே இச்சங்கங்களை உருவாக் கினர். விவசாயத்திற்குத் தேவையான பொருள்களை இவர்களால் இலாபகரமாகக் கொள்முதல் செய்ய முடியவில்லை. எனவே, உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது. இதுமட்டுமின்றி, விளை பொருள்களை இவர்களால் முறையாக விற்பனை செய்யவும் இயல வில்லை. இச்சூழ்நிலையில்தான், விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. இச்சங்கங்களின் பணிகளாவன:

(1) விவசாயத்திற்குத் தேவையான தரமான விதைகள், உரங்கள், விவசாயக் கருவிகள் போன்றவற்றை மொத்தமாகக்

கொள்முதல் செய்து, உறுப்பினர்களுக்குத் தேவையான அளவு அளித்தல்;

(2) உறுப்பினர்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருள் களைக் கொள்முதல் செய்து, முறையாக விற்பனை செய்தல் ;

(3) உறுப்பினர்களது விளைபொருளுக்கு முறையான விற்பனையேற்பாடு செய்தல்.

இச்சங்கங்கள் அமைக்கப்படும்போது, நிலம் தனிப்பட்டவர் களுக்குச் சொந்தமானதாகவே இருந்தது. எனவே உறுப் பினர்கள் யாவரும் தங்கள் விளை பொருளை இச்சங்கங்கள் மூல மாகவே விற்பனை செய்து வந்தனர். ஏனைய நாடுகளில் இயங்கி வந்த 'விவசாயிகள் கூட்டுறவு விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள்' (Farmers' Co-operative Marketing Societies) போலவே இச் சங்கங்களும் சோவியத்து நாட்டில் பணியாற்றி வந்தன. ஆனால், இச்சங்கங்கள் உறுப்பினர்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் கொள்முதல் செய்து விநியோகம் செய்தமை யால், தொடக்கத்திலிருந்தே உற்பத்தியாளர் சங்கங்களுக்கும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது.

1895-ஆம் ஆண்டு, வெண்ணெய் உற்பத்தியாளர்கள் தங்கள் நலன் கருதி இவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத் தனர். முதன் முதலில் இச்சங்கங்கள் 'சைபீரியா'வில் (Siberia) அமைக்கப்பட்டன. 'ட்ரான்ஸ்—சைபீரியன் ரயில் மார்க்கம்' (Trans-Siberian Railway) உண்டானபின், வெண்ணெய் வாணி பத்தில் கடும் போட்டி ஏற்படலாயிற்று. இக்கடும் போட்டியி லிருந்து தங்களைக் காத்துக்கொள்ளும் பொருட்டே, வெண் ணெய் வியாபாரிகள் இக்கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தனர். இவற்றைத் தொடர்ந்து, இச்சங்கங்களின் எண்ணிக்கை விரை வாக உயரலாயிற்று. 1908-ஆம் ஆண்டு, சைபீரியாவின் பால் பண்ணைச் சங்கங்களின் இணைப்புச் சங்கம் (Union of Siberian Cremery Association) அமைக்கப்பட்டது. இத்தலைமைச் சங்கத்தின் 'நடைமுறை விதி'களின்படி (Articles), உறுப்பினர் களாக விளங்கும் எல்லாச் சங்கங்களும் தங்களின் உற்பத்திப் பொருளான வெண்ணெயைத் தலைமைச் சங்கத்திற்கே விற்பனை செய்ய வேண்டும். இதுமட்டுமின்றி, தங்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் கூட்டாக இச்சங்கத்தின் கூட்டுறவுப் பண்டகசாலைகளிலிருந்தே கொள்முதல் செய்ய வேண்டும்,

இன்றும், இச்சங்கம் சோவியத்து நாட்டில் வலிமை வாய்ந்த அமைப்பாக விளங்குகின்றது. இவ்விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் கல்வித் துறையிலும், ஆராய்ச்சித் துறையிலும் பெரும் பொறுப்புகளை வகித்து வந்தன. மேலும், விவசாயத்திற்குத் தேவையான இயந்திரங்களையும், மற்ற கருவிகளையும் உறுப்பினர்களுக்கு வாடகைக்குக் கொடுத்து உதவின. இனி, இச்சங்கங்களின் வளர்ச்சியைக் காண்போம்.

ஆண்டு	சங்கங்களின் எண்ணிக்கை
1876	175
1901	268
1913	3,000
1917	6,000

இச்சங்கங்களின் வளர்ச்சிக்குக் காரணம், சோவியத்து நாட்டில் நிலவிய சூழ்நிலையே. விவசாயிகள் சுமார் 33 சதவிகித நிலத்தையே பெற்றிருந்தனர். எனவே அவர்களது நிலப் பசி உச்சகட்டத்தில் இருந்தது. விவசாய உற்பத்தியும் பெருமளவில் குறைந்ததால், விவசாயிகள் பல இன்னல்களுக்குள்ளானார்கள். விவசாயிகளின் சீர்கேடு நாட்டின் பொருளாதாரத்தையே மிகவும் பாதித்தது. இத்தகைய பொருளாதார இடர்ப்பாடுகளை களையும் பொருட்டே, இக்கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவில் தொடங்கப் பட்டன.

கொள்கைப் பிடிப்பு நிறைந்த இக்கூட்டுறவுச் சங்கங்களால் விவசாயிகளின் இன்னல்கள் பெருமளவில் குறைந்தன. விவசாயத்திற்குத் தேவையான எல்லாப் பொருள்களும் இக்கூட்டுறவுச் சங்கங்களால் விநியோகிக்கப்பட்டன. எனவே, விவசாயிகள் தங்களுக்குத் தேவையானப் பொருள்களைக் குறைந்த விலையில், தேவையான அளவு பெற முடிந்தது. விவசாயப் பொருள்கள் மட்டுமின்றி, ஏனைய தேவைப் பொருள்களும் முறையாக விற்பனை செய்யப்பட்டமையால், உறுப்பினர்கள் நிம்மதியாக வாழ முடிந்தது. விளை பொருளுக்குத் தகுந்த சந்தையை (Market) கண்டுபிடிக்கும் பணியையும் இக்கூட்டுறவுச் சங்கமே மேற்கொண்டதால், விவசாயிகளின் இன்னல்கள் பெரிதும் குறையலாயின. உறுப்பினர்கள் யாவரும் தங்கள் உற்பத்திப் பொருளைக் கூட்டுறவுச் சங்கத்திடமே அளித்து விடுகின்றனர். இக்கூட்டுறவுச் சங்கம் தகுந்த முறையில் விற்பனையேற்பாடு செய்து உறுப்பினர்களுக்கு உதவுகின்றது.

இவ்வாறு, விவசாயிகளின் பிரச்சினைகள் இக்கூட்டுறவுச் சங்கங்களால் நிவர்த்திக்கப் படுவதால், விவசாயிகள் தொல்லை ஏதுமின்றி விவசாயத்தில் ஈடுபட வழியேற்படுகின்றது. இதன் பயனாக, விவசாய உற்பத்தியும் கணிசமாக உயர வாய்ப்பு உண்டாக்கப் படுகின்றது. எனவே, இவ்வகைக் கூட்டுறவு விவசாயச் சங்கங்கள் இந்நாட்டின் வரலாற்றில் நீங்கா இடம் பெற்றுள்ளன என்பதை எவரும் மறுக்க இயலாது.

3. கூட்டுறவுக் கடன் சங்கங்கள் (Credit Societies)

ரஷ்யப் புரட்சிக்கு முன்னர் இயங்கி வந்த கூட்டுறவு அமைப்புகளில் 'கூட்டுறவுக் கடன் சங்கங்கள்' மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். விவசாயிகள் போதிய நிதிவசதியின்றி அதிக வட்டிக்குப் பணத்தைப் பெற்று வந்தனர். சீர்கேடு அடைந்து கீழ்நிலையில் இருந்த அவர்களது பொருளாதார நிலை அதிக வட்டியினால் மேலும் பாதிக்கப்பட்டது. விதைகள், உரங்கள் போன்ற தேவைப் பொருள்களை வாங்குவதற்கு இவர்கள் போதிய நிதிவசதியின்றி அல்லலுற்றனர். விளைபொருளைத் தகுந்த முறையில் விற்பனை செய்வதற்கும் அவர்கள் நிதிவசதியைப் பெற்றிருக்கவில்லை. இந்நிலையை மாற்றியமைக்கவே, கூட்டுறவுக் கடன் சங்கங்கள் இந்நாட்டில் உருவாக்கப்பட்டன.

இக்கூட்டுறவுச்சங்கங்களால் விவசாயிகள் பெற்ற நன்மைகள் பல. விவசாயிகள் இச்சங்கங்களில் உறுப்பினர்களாக மாறவே, உறுப்பினர்களின் நலன் கருதிக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பல நல்ல நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கின. உறுப்பினர்களுக்குச் சேமிப்பின் நன்மைகளையும், சிக்கனத்தின் பெருமைகளையும் முறையாகப் போதித்தன. இச்சங்கங்கள் சிக்கன நடவடிக்கைகளை உறுப்பினர்கள் முறையாகப் பயின்றமையால், அவர்களது பொருளாதார நிலை சற்று முன்னேற்றம் கண்டது. மேலும், உறுப்பினர்களது தேவைக்கேற்ப நிதி வசதிகளும் இக்கூட்டுறவுச் சங்கங்களால் அளிக்கப்பட்டமையால், பொறுக்கு விதைகள், தரமான உரங்கள், விவசாயக் கருவிகள் போன்ற தேவைப் பொருள்களை உறுப்பினர்கள் எளிதாகக் கொள்முதல் செய்ய முடிந்தது. இக்கூட்டுறவுக் கடன் சங்கங்கள் இரு வகைப் படும்.

1. கடன், சேமிப்புச் சங்கங்கள் (Loan and Savings Society)
2. கூட்டுறவுக் கடன் சங்கங்கள் (Credit Associations)

'கடன், சேமிப்புச் சங்கங்கள்' முதலில் உருவாக்கப்பட்டிருந்தாலும், அவைகள் வெற்றிகரமாகத் தொண்டாற்ற இயலவில்லை. இச்சங்கங்கள் உறுப்பினர்களிடமிருந்தே 'பங்கு மூலதனத்தைப்' (Share Capital) பெற்று வந்தன. ஆனால், விவசாயிகள் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கி இருந்தமையால் ஒரு சிறு தொகையைக்கூட அவர்களால் சங்கத்திற்கு அளிக்க முடியவில்லை. பொருள் வசதி படைத்த விவசாயிகள் வாழ்ந்து வந்த ஒருசில கிராமங்களில் மட்டுமே இக்கூட்டுறவுச் சங்கங்கள் இயங்க முடிந்தன.

இச்சங்கங்களில் மலிந்து கிடந்த குறைபாடுகளின் காரணமாக, 'கூட்டுறவுக் கடன் சங்கங்கள்' (Credit Associations) மாற்று அமைப்புகளாக அமைக்கப்பட்டன. இச்சங்கங்களின் உறுப்பினர்கள் 'பங்கு மூலதனம்' அளிக்கவேண்டியதில்லையாதலால் உறுப்பினர்கள் மிக்க மகிழ்ச்சி கொண்டனர். இச்சங்கங்கள் தங்களுக்குத் தேவையான நிதியை 'மாநில வங்கி' (State Bank) மூலம் கடனாகப் பெற்று வந்தன. நாளடைவில், உறுப்பினர்கள் தங்களிடமிருந்த தொகையை 'வைப்புக்' கணக்கில் (Deposit) இச்சங்கங்களிடம் அளிக்கத் தொடங்கினர். இவ்வாறு நல்ல நிதிநிலையைப் பெற்ற இக்கூட்டுறவுக் கடன் சங்கங்கள் உறுப்பினர்களுக்குத் தேவையான தொகையைக் கடனாக வழங்கி வந்தன. இதன்மூலம், விவசாயத் தொழிலுக்கு ஏற்றம் உண்டாகத் தொடங்கியது. சில சமயங்களில், கூட்டுறவுச் சங்கங்களே உறுப்பினர்களின் சார்பாக விதைகள், உரங்கள், இயந்திரக் கருவிகள் முதலானவற்றைக் கொள்முதல் செய்து உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்து வந்தன. 1905-ஆம் ஆண்டு, சோவியத்து நாட்டில் 1400 கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தொண்டாற்றி வந்தன. 1917-ஆம் ஆண்டில் (புரட்சி ஏற்பட்டபோது) சுமார் 15,000 கடன் சங்கங்கள் இயங்கி வந்தன என்றால் இச்சங்கங்களின் பெரு வளர்ச்சியை நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம். 1905-ஆம் ஆண்டுக்குப் பின்னர், அரசாங்கம் தன் முழு ஆதரவையும் இக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு நல்கி வந்தமையால், இச்சங்கங்கள் விரைவில் முன்னேறலாயின. உறுப்பினர்களது நிதிப் பற்றாக்குறை இச்சங்கங்களால் ஈடு செய்யப்பட்டமையால், உறுப்பினர்களது பிரச்சினைகள் பெருமளவில் குறையலாயின. குறிப்பாக, வேளாண்மைத்தொழிலில் ஈடுபட்டிருந்தோர் மிகவும் நன்மை பெறலாயினர். விவசாயத் தொழிலில் பெரும் மாற்றங்களைச் செய்த பெருமை இச்சங்கங்களைச் சாரும். விவசாயிகள் நலன் பெற்றமையால், விவசாயமும் வளம்பெறத் தொடங்கியது.

கூட்டுறவு இணைப்புச் சங்கங்கள்

இச் சங்கங்கள் தொடக்கத்தில் தோன்றியவை அல்ல, எல்லாத் துறைகளிலும் கூட்டுறவு அமைப்புகள் ஏற்பட்ட பின்னரே, இவ்விணைப்புச் சங்கங்கள் தோன்றலாயின. கடன் வழங்கும் சங்கங்கள், விவசாயச் சங்கங்கள், நுகர்வோர் சங்கங்கள் போன்ற அனைத்துச் சங்கங்களின் வளர்ச்சிக்கு இவ்விணைப்புச் சங்கங்கள் பெரிதும் உதவின. ஒவ்வொரு துறையிலும் தனித் தனியாக இயங்கி வந்த கூட்டுறவுச் சங்கங்களை ஒருமுகமாக நெறிப்படுத்தி, அவற்றை அத்துறைகளின் தன்மைக்கேற்ப உயர் மட்ட அமைப்புகளுடன் இணைப்பதில் இச்சங்கங்கள் பெரிதும் பாடுபட்டன. இதன் மூலம், கூட்டுறவுச் சங்கங்களிடையே சீரான நிர்வாகமும், சிறந்த கட்டுப்பாடும் ஏற்பட்டன. சங்கங்களிடையே ஏற்பட்ட நல்லுறவு, கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் உரமாக அமைந்தது. தோன்றிய நல்லுறவுச்கு இவ்விணைப்புச் சங்கங்களே காரணமாகும்.

மாவட்ட அளவில் பல கூட்டுறவு இணைப்புச் சங்கங்கள், சோவியத்து நாட்டில் அமைக்கப்பட்டன. 'மாவட்ட அமைப்புகள்' (District Organisations) மட்டுமின்றி, 'மத்திய அமைப்புகள்,' (Central Organisations) பலவும் தொடங்கப் பட்டன. இவ்வகையில், 'நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்புச் சங்கம்' (The All Russian Union of Consumrs' Co-operatives) சோவியத்து நாட்டில் இன்றும் சிறந்து விளங்கு கின்றது.

இக்கூட்டுறவு இணைப்புச் சங்கங்கள் பெரும்பாலும் 'ஜார் மன்னர்கள்' நாட்டை ஆண்ட பொழுதே தோன்றியவையாகும். இம் முடியாட்சி கூட்டுறவு இயக்கத்திற்கு எவ்வித ஆதரவும் அளிக்கவில்லையாகையால், இணைப்புச் சங்கங்கள் பெருகவில்லை. நேரடியாக இச்சங்கங்களுடன் பகை இல்லையாயினும், அரசாங்கத்தின் ஆதரவு இல்லையாதலால் வளர்ச்சி எதிர்பார்த்த அளவில் ஏற்படவில்லை. ஆதரவு இல்லையேல் வளர்ச்சி குன்றத்தானே செய்யும்? புரட்சிக்குப் பின்னரே இச்சங்கங்கள் வலிமையுடன் வளரத் தொடங்கின.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

இங்கிலாந்தை முன்னோடியாகக் கொண்டே, சோவியத்து நாட்டில் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் தொடங்கப்பட்டது. 'ராக்டேல் முன்னோடிகளால்' அமைக்கப்பட்ட கூட்டுறவுப்பண்டக

சாலையின் பெரு வெற்றியைக் கண்ட சோவியத்து நாடும் கொள்கை அளவில் ஈர்க்கப்பட்டு, அதன் விளைவாக நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் தொடங்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கான முயற்சிகளும், நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

சிறந்த கொள்கைகளுடனும், நோக்கங்களுடனும் இக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டாலும், 1890-ஆம் ஆண்டு வரை கணிசமான வளர்ச்சியைப் பெறவில்லை. அரசின் முறையான ஆதரவு இல்லாததே வளர்ச்சிக் குறைவின் காரணமாகும். 1891-ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து இக்கூட்டுறவு நுகர்வோர் சங்கங்கள் பெருமளவில் வளரலாயின. இவ்வாண்டின் தொடக்கத்தில்தான், தேவைப் பொருள்களின் விலைகள் பெருமளவில் உயரலாயின. விலைகள் மிகவும் உயர்ந்தது மட்டுமின்றி, தேவைப் பொருள்கள் 'கருப்பு (கள்ள)ச் சந்தை' (Black Market) மூலம் விற்பனை செய்யப்பட்டு வந்தன. எனவே, தேவைப் பொருள்களின் விற்பனையை முறையாக மாற்றியமைக்கும் பொருட்டும், பொருள்களின் விலைகளை முறையாகக் கட்டுப்படுத்துவதற்காகவும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்க ஆதரவுடன் எண்ணிக்கையில் அதிகமாக அமைக்கப் பட்டன. இவை மூலம், தேவைப் பொருள்களை மக்கள் நியாய விலைக்குப் பெற முடிந்தது. இவ்வாறு, மெள்ள வளர்ந்து வந்த 'நுகர்வோர் கூட்டுறவு இயக்கம்' ஜப்பானுடன் ஏற்பட்ட போரின் போது (1906-1911) பெருவளர்ச்சி பெறத் தொடங்கியது. போரின் போது இயல்பாக எழும் பற்றாக்குறைப் பிரச்சினை சோவியத்து நாட்டிலும் ஏற்படவே, மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும், பொருளாதார இடர்ப்பாடுகளை களைவதற்காகவும், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவில் தொடங்கப்பட்டன. சிறந்த கொள்கைகளைக் கொண்டு இச் சங்கங்கள் பணிபுரிந்தமையால், வெற்றி எளிதில் கிட்டியது. இக் கூட்டுறவுச் சங்கங்களில் பெரும்பாலானவை கிராமப் பகுதிகளில் தான் முதன் முதலில் தொடங்கப்பட்டன. இதைத் தொடர்ந்தே நகர்ப்புறங்களில் இவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப் பட்டன. பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் பொருள்களின் விலைகளை முறையாகக் கட்டுப்படுத்துவதில் தங்களது முழுக் கவனத்தையும் செலுத்தியதால், மக்கள் பெருமகிழ்ச்சி கொண்டனர். இச்சங்கங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவும் பெரு வெற்றி பெற்றமையால், விலைவாசிகள் முறையாகக்

கட்டுப்படுத்தப்பட்டன. சோவியத்து நாட்டின் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த புரட்சி ஏற்பட்ட 1917-ஆம் ஆண்டில், சுமார் 25,000 நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வந்தன. அக்டோபர் புரட்சிக்குப் பின்னர்தான், சோவியத்து நாட்டின் நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தில் பல வியத்தகு மாற்றங்கள் ஏற்படலாயின. 1865-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இக் கூட்டுறவுச் சங்கங்கள் 1917-ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் முழுமை பெற்றன என்று உறுதியாகக் கூறலாம். நுகர்வோரின் நலன் கருதித் தொடங்கப்பட்ட இக்கூட்டுறவுச் சங்கங்கள் முறையாக ஒன்றுகூடி 'கூட்டிணைப்பு'களையும் (Federations) உருவாக்கிக் கொண்டன. இக்கூட்டிணைப்புகளால், கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம் முறையாக சீர்பட்டது என்று சொல்லலாம். மேலும் சங்கங்களிடையே நிலவிய நல்லுறவுக்கு இக்கூட்டமைப்புகளே வித்திட்டன. இவ்வாறு அமைக்கப்பட்ட சோவியத்து நாட்டின் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்பே 'சென்ட்ரோசோயஸ்' (Centrosoyus) எனப்பெயர் பெற்றது. இக்கூட்டமைப்புகள் சோவியத்து நாட்டின் கூட்டுறவு இயக்கத்தைச் செவ்வனே சீர்படுத்தத் தொடங்கின. இவ்வமைப்புகள் 'மத்திய அமைப்புகளாகவும்' பணியாற்றி யமையால் இயங்கி வந்த அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களும் சிறந்த கண்காணிப்பில் வளரத் தொடங்கின. குறிப்பாக, அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் இந்நாட்டின் கூட்டுறவு இயக்கம் வலிமையுடன் வளரலாயிற்று. புரட்சிக்குப் பின்னர் அமைந்த அரசு, இக்கூட்டுறவுப் பண்டகசாலைகளை இன்றியமையாப் பொருள்களை மக்களுக்கு முறையாக விநியோகம் செய்யவல்ல 'பதிலி'களாகப் (Agencies) பயன்படுத்தத் தொடங்கியது. அரசின் ஆணைக்கேற்பச் செயற்படவேண்டிய சூழ்நிலை உருவாகியதால், இந்நாட்டின் கூட்டுறவு இயக்கம் தனது தனித் தன்மையையும், சுதந்திர அமைப்பையும் இழக்கவேண்டியதாயிற்று. உறுப்பினர்கள் தங்கள் கருத்தைக்கூடத் தெரிவிக்க முடியாதவாறு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. அரசின் ஆணைகளால் உறுப்பினர்கள் யாவரும் 'நாவடக்கம்' பெற்றனர். அரசின் ஆணைகள் நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாக வளர்ந்ததால், கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி தடைப்பட்டது. இதைக் கண்கூடாகக் கண்ட சோவியத்து நாட்டின் அரசு, கூட்டுறவு இயக்கம் நன்கு செழித்து வளர வேண்டுமானால் அதை அழுத்திக் கொண்டிருக்கும் பெரும்பாரம் என்ற தீவிரக் கட்டுப்பாட்டு முறைகள் நீக்கப்பட வேண்டும் என்ற பேருண்மையை நன்கு உணர்ந்து கட்டுப்பாடுகளை மெள்ள

மெள்ளத் தளர்த்தத் தொடங்கியது. இதன் பயனாகப் 'புதிய பொருளாதாரக் கைக்கோளின்' (New Economic Policy) கீழ்க் கூட்டுறவு இயக்கம் புரட்சிக்கு முன்னர் இருந்தது போலவே எல்லா உரிமைகளையும் பெற்றுச் சுதந்தரமாக செயற்படத் தொடங்கியது. அரசின் தலையீடு குறைந்து, ஆதரவு பெருகியமையால் புதிய இரத்தம் பாய்ச்சப்பட்டுச் செழித்து வளர வாய்ப்பு ஏற்பட்டது. குறிப்பாக, முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1928-'32) நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் வெகு வேகமாக முன்னேறத் தொடங்கியது. 1932-ஆம் ஆண்டு 'தனியார் வணிகம்' அறவே ஒழிக்கப்பட்டமையால், இவ்வியக்கத்தின் பணிகள் பெருமளவில் அதிகரித்தன.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் இவ்வியக்கம் நன்கு வளர்ந்து வந்தாலும், மீண்டும் அரசின் தலையீடு ஏற்பட்டது. தனியார் துறை அறவே அகற்றப்பட்டதால், மக்களின் நலன் கருதிக், கூட்டுறவு இயக்கத்தைத் தகுந்த முறையில் வழிநடத்திச் செல்ல திட்டங்களை வகுக்கத் தொடங்கியது அரசு. கிராமப்புற மக்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் முறையாக விநியோகிக்கும் பொறுப்பு நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தின் மீது சுமத்தப்பட்டது. 1935-ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து இப்பெரும் பணியைப் பாங்குடன் செய்து வந்தது இக்கூட்டுறவு இயக்கம். நகர்ப்புறங்களிலும் அரசாங்கப் பண்டகசாலைகள், கடைகள் முதலானவை தொடங்கப்பட்டு மக்களின் அன்றாடத் தேவைகள் முறையாக நிறைவேற்றப்பட்டன. 1946-ஆம் ஆண்டில்தான், இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கத்தில் ஒரு நல்ல திருப்பம் ஏற்பட்டது. அரசின் வேண்டுகோளுக்கேற்ப, நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் நகர்ப்புறங்களிலும், தொழிலாளர் குடியிருப்புகளிலும் (Workers' Settlements) பல பண்டகசாலைகளை நிறுவி மக்களுக்குப் பெருந் தொண்டாற்றத் தொடங்கியது. 'சிறுதுளி பெரு வெள்ளம்' என்ற பழமொழிக்கேற்ப இக்கூட்டுறவு இயக்கம் தனிப்பட்ட பல பண்டகசாலைகளைக் கிராமங்களிலும், நகர்களிலும் நிறுவி ஆலமரம் போல் வலிவுடன் வளரலாயிற்று. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்கள் மூலம் இக்கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியை நாம் எளிதில் அறிந்து கொள்ள இயலும்.

ஆண்டு (Year)	சங்கங்களின் எண்ணிக்கை (No. of Societies)	உறுப்பினர் எண்ணிக்கை (Menbership)
1917	25,000	7·0 மிலியன்
1926	40,000	12·4 மிலியன்
1929	72,000	22·6 மிலியன்
1957	70,000	33·4 மிலியன்
1966	16,200	53.0 மிலியன்
1970	16,000	59.0 மிலியன்

சோவியத்து நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் பெரும் பங்கு பெற்றுள்ளது. நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் கிராமங்களிலும், நகர்களிலும் ஒரு சேரப் பணிபுரிந்து வரத்தொடங்கியதால் மக்கள் எளிதில் தங்கள் தேவைப் பொருள்களைப் பெற்று நல்வாழ்வு பெற்றனர். 'கிடைப்பருமை' (Scarcity) நிறைந்த பொருள்கள் நியாய விலைக்கு விற்பனை செய்யப்பட்டமையால் 'கள்ளச் சந்தை' அறவே ஒழிந்தது. தொழிலாளர் குடியிருப்புகளிலும் பண்டகசாலைகள் பல இயங்கி வந்தமையால், தொழிலாளர் வாழ்க்கைத் தரம் உயர்ந்து, அவர்களது உற்பத்தித் திறனும் அதிகரித்தது. இரண்டாம் ஐந்தாண்டு திட்ட காலத்திலிருந்து அரசின் கண்காணிப்பில் நுகர்வோர் கூட்டுறவியக்கம் செயற்பட வேண்டியிருந்தாலும், அதன் உரிமைகளும், தனித் தன்மையும், சுதந்திரச் செயல் முறைகளும் நசுக்கப்படவில்லை. எனவே, இவ்வியக்கத்தின் வளர்ச்சி எள்ளளவும் பாதிக்கப்படவில்லை. வணிகம் முழுமையும் அரசின் கைகளில் இருந்தாலும், நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகவே திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. எனவே, இவ்வியக்கத்தின் வளர்ச்சி குறைவின்றி நிறைவு பெற்றது. அரசின் ஆதரவு கிடைத்து வந்தமையால், இச்சங்கங்களுக்கு பிரச்சினைகள் எழவில்லை. எழுந்த பிரச்சினைகட்கும் எளிதில் தீர்வுகாணப்பட்டது. நாள்தோறும், கூட்டுறவுப் பண்டகசாலைகள், கடைகள் போன்றவை தோன்றிய வண்ணமாகவே இருந்தன.

1970-ஆம் ஆண்டில், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 3,70,000 கடைகளைப் பெற்றிருந்தன. 1969-ஆம் ஆண்டின் மொத்த விற்பனை 43,000 மிலியன் 'ரூபிளையும்' (Rouble) தாண்டியுள்ளது. இக்கூட்டுறவுக் கடைகளின் மொத்த விற்பனை சோவியத்துநாட்டின் சில்லறை வணிகத்தில் 30 சதவிகிதம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இக்கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுப்

பண்ணைகளிலும் (Collective Farms), அரசாங்கப் பண்ணைகளிலும் (State Farms), மக்களின் நலன் கருதி 'உண்டிச் சாலை'களையும் (Restaurants), 'சிற்றுண்டிச் சாலை'களையும் (Canteens) பெருமளவில் தொடங்கியுள்ளன. தற்போது, சுமார் 70,000 பொது உணவு விடுதிகளை இக்கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தி வருகின்றன என்றால், தொழிலாளர்களிடத்தில் அரசும், கூட்டுறவு இயக்கமும் கொண்டுள்ள பற்று எளிதில் விளங்கும். இல்லங்களில் உணவு தயாரிக்கும் தாய்மார்களின் நலன் கருதியே இத்தகைய உண்டிச் சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இதன் பயனாகப் பெண்மணிகளின் சிரமங்கள் பெருமளவில் குறைய வழியேற்பட்டது.

இக்கூட்டுறவுப் பண்டகசாலைகள் சுமார் 42,000 உணவுப் பொருள்களைப் பதப்படுத்தவல்ல தொழிற்சாலைகளையும் பெற்றுள்ளது. இவை மூலம் பதப்படுத்தப்பட்ட இறைச்சி, மது வகைகள், உலர்த்தப்பட்ட பழ, காய்கறி வகைகள், முதலானவை தயாரிக்கப்படுகின்றன. மேலும், பழவகைகள் தகர அடைப்புகளில் அடைக்கப்பட்டு முறையாக விற்பனையும் செய்யப்படுகின்றன. 1965-ஆம் ஆண்டில் இப்பண்டகசாலைகளின் 'மொத்த உற்பத்தி' (Total Output) 2,300 மிலியன் ரூபிள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவை மட்டுமின்றி. 14,000 ரொட்டி உற்பத்திச் சாலைகளையும் நடத்தி வருகின்றன இக்கூட்டுறவுப் பண்டகசாலைகள். எனவே, மக்களின் எல்லாத் தேவைப் பொருள்களும் இக்கூட்டுறவுப் பண்டகசாலைகளால் முறையாக விநியோகம் செய்யப்படுகின்றன.

மேலும், அரசாங்கத்தின் சார்பில் கூட்டுப் பண்ணைகளிலிருந்து முக்கிய விவசாயப் பொருள்களையும் இக்கூட்டுறவுப் பண்டகசாலைகள் கொள்முதல் செய்துவருகின்றன. கூட்டுறவு முறையில் விவசாயத்தைச் செய்துவரும் விவசாயிகளிடமிருந்தும் எஞ்சிய விளைபொருளை இக்கூட்டுறவுப் பண்டகசாலைகள் கொள்முதல் செய்வதால், விற்பனை செய்வதற்காக அவர்கள் எதிர்கொள்ளும் செலவுகள் கணிசமாகக் குறைகின்றன. சந்தைச் செலவுகளும் குறைகின்றன. இதனால் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளோர் வாழ்க்கைத் தரம் உயர வழியேற்பபடது.

உலகிலேயே உறுப்பினர் எண்ணிக்கையிலும், வணிகத்தின் அளவிலும், சோவியத்து நாட்டின் நுகர்வோர் கூட்டுறவு இயக்கமே முன்னணியில் நிற்கின்றது. முறையான திட்டங்களும், அவற்றிற்கேற்ற செயல்முறைகளும், உயர்ந்த நோக்கங்களும்,

மக்களின் சலியா உழைப்புமே சோவியத்து நாட்டை வெற்றிப் பாதையில் நடத்திச் சென்றன. நகர்ப்புறங்களில் இயங்கிவந்த கூட்டுறவுப் பண்டகசாலைகள் 'கார்போஸ்' (Gorpos) எனவும், கிராமப் புறங்களில் இயங்கியவை 'செல்போஸ்' (Selpos) எனவும், தொழிலாளர் குடியிருப்புகளில் இயங்கியவை 'ரேப் கூப்ஸ்' (Rab Koops) எனவும் வழங்கப்படுகின்றன. ஏனைய நாட்டுப் பண்டகசாலைகளைப் போலவே சோவியத்து நாட்டின் பண்டக சாலைகளும் இயங்கி வருகின்றன.

பண்டக சாலைகளின் நிர்வாக அமைப்பு

சோவியத்து நாட்டின் நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தின் வெற்றியே அதன் முறையான அமைப்பால் விளைந்ததாகும். நிர்வாக இயந்திரம் செவ்வனே செயலாற்றுமாறு பண்டக சாலைகள் பல மட்டங்களில் முறையாகத் தொடங்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. அடித் தளத்தில், 'கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள்' (Rural Consumer Societies or Selpos) அமைக்கப் பட்டுள்ளன. இக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு அடுத்த மட்டத்தில், 'மாவட்ட நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்' (District Consumers' Co-op. Unions) இயங்கி வருகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் 'பிரதேச நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங் களுடன்' (Regional Consumers' Co-op. Unions) இணைக்கப் பட்டுள்ளன. இப்பிரதேசக் கூட்டுறவுச் சங்கங்கள் யாவும், அடுத்த மட்டத்தில் இயங்கிவரும் குடியரசு 'நுகர்வோர் கூட்டு றவுச் சங்கங்களுடன்' (Republic Consumers' Co-op. Unions) சிறந்த முறையில் இணைக்கப்பட்டுள்ளன. மேலே குறிப்பிடப் பட்டுள்ள அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தலைமை அமைப்பாக 'சென்ட்ரோ சோயஸ்' (Centro Soyus) என்ற கூட்ட மைப்பு விளங்குகின்றது. இத் தலைமைக் கூட்டமைப்பின் கண் காணிப்பிலும், பராமரிப்பிலும்தான் ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் தொண்டாற்றி வருகின்றன. இக்கூட்டமைப்பிற்குக் 'குடியரசு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்' தங்கள் பிரதிநிதிகளை முறையாகத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கின்றன. ஆனால் ருஷ்யக் கூட்டமைப்பின் பிரதேச நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் பிரதிநிதிகளை நேரடியாகவே தேர்வு செய்து அனுப்பி வைக்கின்றன. எனவே, சோவியத்து நாட்டின் அனைத்துக் கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளும் இக்கூட்ட மைப்பில் அங்கம் வகிக்கின்றனர். இதுகாறும் விளக்கிவந்த நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தின் நிர்வாக அமைப்பை எளிய முறையில் இனிக் காண்போம்:

சென்ட்ரோ சோயஸ் (Centro Soyus)

↓

15 குடியரசு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

↓

114 பிரதேச நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

↓

2,500 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

↓

16,000 கிராம நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்.

சோவியத்து நாட்டின் அவ்வப் பகுதிகளின் தன்மைக்கேற்ப நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் முறையாக அமைக்கப்பட்டு, அவை ஒவ்வொன்றுக்குமிடையே சிறந்ததோர் இணைப்பும் உருவாக்கப்பட்டிருப்பதால் நிருவாக இயந்திரம் எளிதில் சுழல முடிகின்றது. ஒரு குளத்தில் எறியப்படுகின்ற கல்லால் ஏற்படும் அலைகள் எவ்வாறு ஓரே சமயத்தில் எல்லாக் கரைகளையும் அடையுமோ அதே போன்று, ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் எதாவது ஒரு சிறு மாற்றம் ஏற்பட்டாலும் அம்மாற்றம் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களிலும் ஏற்படும் வகையில் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் பாங்குடன் அமைக்கப்பட்டுள்ளது. இதுமட்டுமின்றி, ஒவ்வொரு மட்டத்திலும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளதால் மக்களின் தேவைகள் எளிதாக நிறைவேற வாய்ப்புகள் உள்ளன. இச் சிறந்த நிருவாக அமைப்பின் காரணமாக அரசாங்கத்தின் கண்காணிப்புப் பணி பெருமளவில் குறைந்தது. இதன் விளைவாக, அரசின் தலையீடும் குறையவே, கூட்டுறவுச் சங்கங்கள் சுதந்திரமாகத் தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக் கொண்டு இயங்கி வருகின்றன.

இனி இம்மத்தியக் கூட்டமைப்பின் பணிகளை ஆராய்வோம். அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இது தலைமைச் சங்கமாக விளங்குவதால் இதன் பணிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இயங்கி வரும் கூட்டுறவுச் சங்கங்களை முறையாக நெறிப்படுத்தி, வழிநடத்திச் செல்வது இக்கூட்டமைப்பேயாகும். எனவே, இதன் பணிகளை ஆராய்வது நமது கடமையாகும்.

மத்தியக் கூட்டமைப்பின் பணிகள் (Functions of Centro Soyus):

1. இம்மத்தியத் தலைமைச் சங்கம் சில முக்கியப் பொருள்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து, நியாய விலையில் இதன் கீழ்ப் பணிபுரிந்துவரும் பல்வேறு கூட்டுறவுப் பண்டகசாலை களுக்கு விற்பனை செய்து வருகின்றது. எனவே இக்கூட்டுறவுப் பண்டகசாலைகள் தட்டுப்பாடின்றி முக்கியப் பொருள்களை நியாய விலையில் இக்கூட்டமைப்பின் மூலம் பெற்று, அவைகளைத் தங்கள் உறுப்பினர்களுக்கு முறையாக விற்பனை செய்கின்றன. உறுப் பினர்களின் நல்வாழ்வே இப்பண்டகசாலைகளின் குறிக்கோளாக விளங்குவதால் 'இலாப வேட்டை' என்ற சொல்லுக்கே இடமின்றிப் போகின்றது.

2. வணிகத் துறையில், இதன் கீழ் இயங்கி வரும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நடைமுறை விதிகளைக் கற்பிக்கின்றது. விவசாயப் பொருள்களைக் கொள்முதல் செய்யும் முறை, நுகர்வோர் தேவைப் பொருள்களின் உற்பத்தி முறை, நிலையான சொத்துக்களின் மேல் முதலீடு செய்யும் முறை, போன்ற தலையாய பணிகளில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு பற்றியும் இத்தலைமைக் கூட்டமைப்பு கற்பிக்கின்றது. முக்கியப் பொருள்களைக் கொள்முதல் செய்து, கூட்டுறவுப் பண்டகசாலை களுக்கு விநியோகம் செய்வதற்கென்றே இத்தலைமைக் கூட்ட மைப்பு ஆறு சிறப்புப் பிரிவுகளையும் கொண்டுள்ளது. எனவே, கொள்முதல் செய்வதும், கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு விநியோகம் செய்வதும் இக்கூட்டமைப்பிற்கு எளிதான காரியங் களாகின்றன. சிறந்த முறையில் பண்டகசாலைகள் இயங்க, விதி முறைகள் வகுக்கப்படுகின்றன.

3. இயங்கி வரும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுறைக் கணக்குகளை இக்கூட்டமைப்பு முறையாகக் கண் காணிப்பதும், சோதனையிடுவதும் முக்கியப் பணியாகக் கருதப் படுகின்றது. கணக்குகளில் உள்ள தவறுகளை நீக்குவதற்கும், கணக்கு வைப்பு முறையைச் சீர்ப்படுத்துவதற்கும் தேவையான ஆணைகள் இக்கூட்டமைப்பால் பிறப்பிக்கப்படுகின்றன. இத் துணிக்கை முறையால், கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகள் முறையாக எழுதப்பட்டு, தவறுகள் நடைபெறா வண்ணம் தடுக்கப் படுகின்றன. முறையான கணக்கு வைப்பு முறைதானே முன்னேற் றத்தை அளக்கும் அளவுகோல்!

4. கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குத் தேவையான முக்கியப் பொருள்களை இக்கூட்டமைப்பு வழங்குவதால், அச்சங்கங்களின் சார்பாக அப்பொருள்களை உற்பத்தி செய்யும் பல்வேறு நிறுவனங்களுடன் இம்மத்தியக் கூட்டமைப்பு தொடர்பு கொண்டு ஒப்பந்தங்களையும், உடன்படிக்கைகளையும் உருவாக்குகின்றது, எனவே, கூட்டுறவுச் சங்கங்களின் பளு நிறைந்த பல வேலைகளை இக்கூட்டமைப்பு ஏற்றுக் கொள்வதால், காரியங்கள் யாவும் செம்மையாக நடைபெற வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

5. இயங்கிவரும் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அவ்வப்போது அறிவுரைகளை இக்கூட்டமைப்பு வழங்கிவருகின்றது. எனவே, இக்கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல், விற்பனை போன்ற பல துறைகளிலும் செவ்வனே செயற்பட முடிகின்றது. மேலும், பொருள்களின் விலையை ஒரு மாறுபாடு அற்ற கைக்கோளின் அடிப்படையில் இக்கூட்டமைப்பு நிருணயம் செய்கின்றது. எனவே, கூட்டுறவுப் பண்டகசாலைகள் தங்கள் விருப்பம் போல் விலையை நிருணயம் செய்வதென்பது இயலாத செயலாயிற்று. எல்லாப் பகுதி மக்களும் பொருள்களை மாறுபாடு அற்ற நியாய விலையில் பெற்றனர். இக்குறிப்பிட்ட பணிதான் இம்மத்தியக் கூட்டமைப்பின் பெருமையை மிகவும் உயர்த்தக் காரணமாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

6. கூட்டுறவுப் பண்டகசாலைகளின் வெற்றி, அவைகளில் பணிபுரிவோரின் உழைப்பையும், திறமையையும் பொறுத்துத் தான் அமையும் என்பதை நன்குணர்ந்திருந்த இத்தலைமைக் கூட்டமைப்பு திறனுள்ள கூட்டுறவாளர்களை ஆக்க செய்யவல்ல பல கல்வி நிறுவனங்களைத் தொடங்கியுள்ளன. முறையான கூட்டுறவுக் கல்வியைப் புகட்டுவதன் மூலமே, தகுதியும், திறமையும் வாய்ந்த பணியாளர்களை உருவாக்க முடியும் என்ற உண்மையைப் புரிந்து கொண்டிருக்கும் இவ்வமைப்பு தற்போது நான்கு உயர் நிலைக் கூட்டுறவுப் பள்ளிகளையும், 111 தொழில் நுட்பப் பள்ளிகளையும், 103 தொழிற்பயிற்சிப் பள்ளிகளையும் நடத்தி வருகின்றது. மேலும், தகுதி வாய்ந்தவர்களையே உரிய பதவிகளில் இக்கூட்டமைப்பு நியமித்தது. இதன் விளைவாக, நிருவாகமும் சிறப்பாக நடைபெறலாயிற்று.

7. ஒருவருக்கொருவர் எண்ணங்களையும், நோக்கங்களையும் பரிமாறிக் கொண்டால்தான் முன்னேறுவதற்குண்டான வாய்ப்புகள் பெருகும் என்பதை உணர்ந்திருக்கும் இத்தலைமைக் கூட்டமைப்பு கருத்துப் பரிமாற்றத்திற்குத் தேவையான வழிமுறை

களையும் வகுத்தே உள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்டு மாநாடுகளும், கருத்தரங்குகளும் நடத்தப்படுகின்றன. இதன் விளைவாகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே நிலவும் நல்லுறவு மேலும் வலுப்படுகின்றது. சங்கங்களின் பொதுப் பிரச்சினைகட்குத் தீர்வு காணப்படுகின்றது. சங்கங்களுக்கிடையே நிலவும் கருத்து வேறுபாடுகள் அல்லது மாறுபாடுகள் களையப்பட்டு, நல்லுறவும் தொடர்பும் எந்நாளும் நிலைத்திருக்கத் தக்க வகையில் சூழ்நிலைகள் உருவாக்கப்படுகின்றன. இது இக் கூட்டமைப்பின் தலையாய பணிகளில் ஒன்றாகும்.

8. இம்மத்தியக் கூட்டமைப்பே சோவியத்து நாட்டின் கூட்டுறவு இயக்கத்திற்குப் பிரதிநிதியாக விளங்குகின்றது. அரசாங்கத்திற்கும், கூட்டுறவு இயக்கத்திற்குமிடையே நல்லுறவுப் பாலமாக விளங்குவது இக்கூட்டமைப்பேயாகும். அரசின் ஆணைகளைச் செவ்வனே செயற்படுத்துவதற்கும், கூட்டுறவு இயக்கத்தின் உரிமைக் குரலையும், கோரிக்கைகளையும் அரசிற்கு எடுத்தியம்புவதற்கும் இக்கூட்டமைப்பு உறுதுணையாக விளங்குகின்றது.

இத்தகைய பணிகளைச் செவ்வனே செய்வதற்கென இம் மத்தியக் கூட்டமைப்பு ஒரு 'நிருவாக அவை'யையும் (Board of Management), ஓர் 'இயக்குநர் அவை'யையும் (Board of Directors) ஏற்படுத்தியுள்ளது. இவ்விரு 'அவை'களும் இம்மத்தியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

பதினாறு வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் கிராமக் கூட்டுறவுப் பண்டகசாலைகளில் உறுப்பினர்களாக அனுமதிக்கப்படுகின்றனர். உறுப்பினர்களின் நலன் கருதியே இக்கூட்டுறவுப் பண்டகசாலைகள் தொடங்கப்படினும், முக்கியத் தேவைப் பொருள்கள் உறுப்பினர்கட்கும், உறுப்பினரல்லாதாருக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. இதனால், கிராமம் முழுவதும் நன்மை பெறுகின்றது. உறுப்பினராக விரும்பும் ஒவ்வொரு நபரும் 'நுழைவுக் கட்டணம்' (Entrance Fees) செலுத்திய பின்னர், கூட்டுறவுப் பண்டகசாலை வெளியிடும் 'பங்குகளில்' (Shares) ஒன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நுழைவுக் கட்டணமும், பங்குகள் விற்பனை மூலம் கிடைக்கும் தொகையும் ஒவ்வொரு கூட்டுறவுப் பண்டகசாலையின் நிதி நிலையை உயர்த்த உதவுகின்றது. இப்பண்டகசாலைகள் சொத்துக்கள் பேரில் முதலீடு செய்ய விரும்பும் தருணத்தில், தேவையான பொருளுதவியை 'மாநில வங்கி'யிடமிருந்தும் (State

Bank), 'சிறப்புக் கூட்டுறவு வங்கி'யிடமிருந்தும் (Special Co-op. Bank) பெறுகின்றன. எனவே, 'மூலதன முதலீடு'களையும் (Capital Investments) இப்பண்டகசாலைகள் எளிதாகச் செய்து கொள்கின்றன. பொதுவாக, இக்கூட்டுறவுப் பண்டகசாலைகள் நிதிவசதியைப் பெருக்கக் 'கடன்கள்' (Loans) எழுப்புவதில்லை. உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் சலியா உழைப்பினுலும், நேர்மையான நடத்தையினுலும் கூட்டுறவுப் பண்டகசாலையின் தூண்களாக விளங்குகின்றனர். கிடைப்பருமை பொருள்களும் இவர்களது தேவைக்கேற்ப நியாய விலையில் பெறுவதால், பண்டகசாலையின் முன்னேற்றத்திற்கு இவர்கள் தங்கள் உழைப்பையும், ஆதரவையும் நல்கிய வண்ணமே உள்ளனர். உறுப்பினரல்லாதாரும் தேவைப் பொருள்களைப் பெற முடிவதால் இவர்களது ஆதரவும் கணிசமாக உள்ளது.

வணிகத்தின் இலாபமும், இழப்பும் அது நிருவகிக்கப்படும் தன்மையைப் பொறுத்தே அமையும். கிராமப் பண்டகசாலைகள் ஒவ்வொன்றும் முறையாக, ஓரே சீராக நிருவகிக்கப்படுகின்றன. கூட்டுறவுப் பண்டகசாலையின் நிர்வாகத்திற்கென அப்பண்டகசாலையின் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு 'பொதுச் சபை' (General Body) அமைக்கப்படுகின்றது. இச்சபையே பண்டகசாலையின் உயர் மட்டத்தில் இயங்கும் நிருவாக அமைப்பாகும். உறுப்பினர்கள் தங்கள் நலனை இச்சபையின் மூலமாகத்தான் பாதுகாத்துக் கொள்கின்றனர். தங்கள் கருத்துக்களை வெளியிடுவதும் இச்சபையின் மூலமாகத்தான் செய்கின்றனர். உறுப்பினர்களுக்கு உற்ற துணையாக விளங்குவது இச்சபையே. அனைத்து உறுப்பினர்களையும் கொண்ட இப்பொதுச் சபை முறையான நிருவாகத்தை நேரடியாகச் செய்ய இயலாதென்பதால், ஒரு 'நிருவாக அவை'யையும், ஒரு 'தணிக்கைக் குழு'வையும் (Auditing Committee) தேர்ந்தெடுக்கின்றது. இவ்விரு அமைப்புகளும் சிறந்த நிருவாகத்திற்கான திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செவ்வனே செயற்படுத்துகின்றன. நிருவாக அவையில் மூன்று அல்லது ஏழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றனர். இவ்வுறுப்பினர்கள் பொதுச்சபையின் ஆணைகளுக்கும், திட்டங்களுக்கும் எவ்விதக் குறைபாடும் தோன்ருவண்ணம் பணிபுரிகின்றனர். தீட்டப்படும் திட்டங்களைச் செயற்படுத்துவது இந்த நிருவாக அவையேயாகும். சுருங்கக்கூறின். பொதுச்சபையின் எண்ணங்களையும், கருத்துக்களையும் பிரதிபலிப்பது இதுவேயாகும். நடைமுறையில் இருக்கும் கணக்கு வைப்பு முறையை நெறிப்படுத்துவதற்கும், கொடுக்கல் வாங்கல்

பிரச்சினைகளை முறையாகத் தணிக்கை செய்வதற்கும் 'தணிக்கைக் குழு' மிகவும் உறுதுணையாக விளங்குகின்றது. இக்குழு மூன்று அல்லது ஐந்து உறுப்பினர்களைக் கொண்டு செயலாற்றி வருகின்றது.

இம்மத்தியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளடங்கிய உயர்மட்ட சபை (Congress of Representatives) நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூடித் திட்டங்களை வகுக்கின்றது. 'இயக்குநர் அவைக்கும் (Board of Directors) 'தணிக்கைக் குழு'விற்கும் ஆதரவாகச் சில 'ஆலோசனை சபை'களும் (Councils) அமைக்கப் படுகின்றன.

தனியார் துறையிலிருந்து வணிகத்தை விடுவித்து, விவசாயி களின் வசதிகளைப் பெருக்குவதையே குறிக்கோளாகக் கொண் டுள்ளன சோவியத்து நாட்டின் நுகர்வோர் கூட்டுறவுச்சங்கங்கள். எனவே, இச்சங்கங்கள் கூட்டுறவு முறையில் பண்டகசாலைகள் (Stores) உண்டிச்சாலைகள் (Restaurants) போன்றவற்றைத் தொடங்கியுள்ளன. இறைச்சி, மாவுப் பொருள்கள், காய்கனிகள், காலணிகள், குடிவகைகள், இசைக் கருவிகள் போன்ற பல தரப் பட்ட பொருள்களை இச்சங்கங்கள் விற்பனை செய்து வருகின்றன. இத்தேவைப் பொருள்களைப் பெரும்பாலும் மாவட்ட இணைப்புச் சங்கங்கள் விநியோகம் செய்கின்றன. இம்மாவட்ட அமைப்புகள் பிரதேசக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும், தேசிய அளவில் இயங்கும் கூட்டுறவு அமைப்புக்களிடமிருந்தும் இப்பொருள்களைக் கொள்முதல் செய்து கிராமக் கூட்டுறவு பண்டகசாலைகட்கு விநி யோகம் செய்கின்றன. அரசாங்க நிறுவனங்களிடமிருந்தும், உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும் கணிசமாகத் தேவைப் பொருள்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. கூட்டுப் பண்ணைகளும் இத்துறையில் தங்கள் பங்கைச் செவ்வனே செய் கின்றன. வணிகச் செயல்கள் மட்டுமின்றி, இக்கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயப் பொருள்களையும் கொள்முதல் செய்து வேளாண்மைக்குப் பெரிதும் உதவுகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் பாற் பண்ணைகள், பழத் தோட்டங்கள் போன்ற வற்றையும் நடத்தி வருகின்றன. உறுப்பினர்களின் தேவைக் கேற்ப முட்டை, பால், பழவகைகள் போன்றவை நியாய விலையில் விற்பனை செய்யப்படுவதால் சங்கங்களும், உறுப்பினர்களும் ஒரு சேர உயர வழி ஏற்படுகின்றது. எனவே, இக்கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் அரசிற்குப் பண்டகசாலைகளாகப் பணிபுரிந்து வருகின்றன என்பதில் ஐயமில்லை.

'சென்ட்ரோசோயஸ்' என்ற மத்தியக் கூட்டமைப்பு சோவியத்து நாட்டின் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குக் கடனுதவி அளிப்பதில்லை. எனவே, இப்பண்டகசாலைகள் தங்களுக்குத் தேவையான நிதிவசதிகளை மாநில வங்கியிடமிருந்தும், கூட்டுறவு வங்கிகளிடமிருந்தும் (Co-op. Banks) பெறுகின்றன. பெரும்பாலான கூட்டுறவு பண்டகசாலைகள் தங்களுக்கு உரிமையான கட்டடங்களிலேயே வணிகத்தை நடத்தி வருகின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், கூட்டுறவுப் பண்டகசாலைகளின் எண்ணிக்கை பெருமளவில் உயர்ந்தது. இப்போருக்குப் பின்னர்தான், கூட்டுறவுப் பண்டகசாலைகள் கட்டடப் பொருள்கள், பெட்ரோல் (Petrol), தையற்பொறி (Sewing Machine), வானொலி (Radio), மோட்டார் வாகனங்கள், போன்ற பலவகைத் தொழில்கள் சம்பந்தப்பட்ட பொருள்களை விற்பனை செய்யத் தொடங்கின.

இவ்வாறு, இக்கூட்டுறவுப் பண்டகசாலைகள் சோவியத்து நாட்டின் குடியானவர்களைப் பொருளாதார ரீதியில் உயர்த்த எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து, அவற்றில் வெற்றியும் கண்டன. முடியாட்சியில் இன்னலுற்ற இந்நாட்டு மக்கள், புரட்சிக்குப் பின்னர் அமைந்த அல்லது அமைக்கப்பட்ட புது ஆட்சியின் கீழ் புது வாழ்வு பெற்றனர். கைக்கடியாரம், மருத்துவத்திற்குத் தேவையான கருவிகள், இசைக் கருவிகள் போன்றவை மக்களால் உபயோகப்படுத்தப்பட்டன. நான்காம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1946-'50) மட்டும் 90,000 புதிய வணிக அமைப்புகள் நுகர்வோர் கூட்டுறவுத்துறையில் அமைக்கப்பட்டன. 'நுகர்வோர் கூட்டுறவுப் பண்ணை'களும் (Consumers' Co-op. Farms) பெருமளவில் தேவைப் பொருள்களைக் கொள்முதல் செய்யலாயின. தொழில் துறையிலும் இக்கூட்டுறவு இயக்கத்திற்குப் பெருமதிப்பு ஏற்படத் தொடங்கியது. எனவே, இக்கூட்டுறவுப் பண்டகசாலைகள் நாடு நலம் பெறவும், மக்களின் வீடுகள் வளம் பெறவும் நல்ல பல பணிகளைச் செய்து வருகின்றன.

இக்கூட்டுறவு நுகர்வோர் சங்கங்களின் நிருவாகம் அச்சங்கங்களின் 'தலைவர்'களைப் பொறுத்தே அமைந்துள்ளது. இச்சங்கங்களின் தலைவர் (President) தேர்தல் மிகவும் சுவை மிகுந்ததாகும். நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தை முறையாக வழிநடத்திச் செல்லவல்ல நபர்களையே தங்கள் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கின்றன இச்சங்கங்கள். தகுதியும், திறமையும் வாய்ந்தவர்களே அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தலைவர்களாகத் தேர்தல்

மூலம் நியமிக்கப்படுகின்றனர். இனி, தலைவர் தேர்தல் எவ்வாறு நடைபெறுகின்றது என்பதைக் காண்போம்.

இத்தேர்தல் சமயத்தில், உயர்மட்டக் கூட்டுறவு அமைப்பு தகுதிவாய்ந்த சில நபர்களை முதலில் தேர்வு செய்து அவர்களது பெயர்களைக் கொண்டப் பட்டியலைக் கூட்டுறவுச் சங்கத்திடம் அளிக்கின்றது இப் 'பெயர்ப் பட்டியலைக்' (Panel) கொண்டு, ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் இரகசிய ஓட்டுப் பதிவு மூலம் தங்கள் தங்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். உயர்மட்டக் கூட்டுறவு அமைப்பு விரும்பாத, அனுமதி பெறாத எவரும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள். தேர்தலில் ஏதேனும் தவறு நடைபெற்றிருந்தால், மறு தேர்தல் மீண்டும் நடத்தப்படுவதற்கு வழிமுறைகள் செய்யப்பட்டுள்ளன.

கூட்டுறவுப் பண்டகசாலையின் சிறப்பியல்புகள்

1. இப்பண்டகசாலைகள் குடும்ப வாழ்க்கைக்குத் தேவையான முக்கியப் பொருள்களைமட்டும் விற்பனை செய்வதில்லை. கூட்டுறவுப் பண்ணைகட்குத் தேவையான பொறுக்கு விதைகள், உரங்கள், விவசாயக் கருவிகள், போன்றவற்றையும் விற்பனை செய்து வரு கின்றன. இயந்திரங்களைப் பழுது பார்க்கும் கடைகளையும் (Repair Shops), முடியலங்காரக் கடைகளையும், சலவை நிலையங்களையும் நடத்திவருகின்றன. இப்பண்டகசாலைகள். இவையன்றி, போக்கு வரத்து வசதிகளையும் 'தொழிற் பள்ளி'களையும் (Vocational Schools), பொழுதுபோக்கு வசதிகளையும் இப்பண்டகசாலைகள் பெருமளவில் கவனித்து, ஆவன செய்கின்றன.

2. 'ரொக்க விற்பனை' (Cash Sales) மட்டுமின்றி, கடன் முறையிலும் பொருள்கள் உறுப்பினர்கட்கு அளிக்கப்படுகின்றன. எனினும், இத்தகைய 'கடன் விற்பனை' (Credit Sale) ஒரு குறிப் பிட்ட அளவே அனுமதிக்கப்படுகிறது. எனவே, கடன் விற்பனை ஊக்குவிக்கப்படுவதில்லை. பங்குதாரர்களாகிய உறுப்பினர் கட்குக் 'கொள்முதல் வெகுமதி' (Purchase Bonus) அளிக்கப் படுவதில்லை. பொருள்களின் அடக்க விலையின்மேல் மிகக் குறைந்த அளவிற்கு இலாபத்தை வைத்து விற்பனை செய்யப்படு கின்றது. உறுப்பினர்கட்குக் கொள்முதல் வெகுமதி அளிக்கப் படாவிடினும், 'இலாப ஈவு'த் (Dividend) தொகை வழங்கப்படு கின்றது.

பண்டகசாலைகளின் நிதிநிலை

ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு குறிப்பிட்ட தொகையைப் பங்கு மூலதனமாக வழங்க வேண்டும். இதுமட்டுமின்றி, நுழைவுக் கட்டணமும் வசூலிக்கப்படுகின்றது. பங்குதாரர் பண்டகசாலையிலிருந்து விலக விரும்பினால் பங்குப் பணம் முழுவதும் திருப்பித் தரப்படுகின்றது. பங்குதாரர் தன் இருப்பிடத்தை மாற்றிக்கொண்டால், அவரது பங்குத் தொகை அவர் புதிதாகக் குடியேறும் இடத்திலுள்ள பண்டகசாலைக்கு 'மாற்றம்' (Transfer) செய்ய வழி செய்யப் பட்டுள்ளது. 1970–ஆம் ஆண்டில் மொத்த உறுப்பினர்களின் பங்கு மூலதனம் 650 மிலியன் ரூபிள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இப்பண்டகசாலைகளின் இலாபத் தொகை முறையாகச் செலவழிக்கப்படுகின்றது. இலாபத்தின் ஒரு பங்கு 'அடிப்படை நிதி கணக்கில்' (Basic Fund) வரவு வைக்கப்படுகின்றது. நுழைவுக் கட்டணத் தொகையும் இக்கணக்கில்தான் வரவு வைக்கப்படுகின்றது. பிற பண்டகசாலைகள் தற்காலிகமாக நிதி உதவிகளைக் கோரும்போது, இதிலிருந்துதான் நிதி உதவி அளிக்கப்படுகின்றது. இலாபத்தில் ஒரு பகுதி உறுப்பினர்கட்கு இலாப ஈவுத் தொகையாக அளிக்கப்படுகின்றது.

எஞ்சியுள்ள இலாபத் தொகை 'மூலதன முதலீட்டு நிதி (Capital Investment Fund), பொதுநல நிதி (Welfare Fund), கல்வி, பயிற்சி நிதி (Education and Training Fund) பரிசு நிதி (Prize Fund) போன்றவற்றில் வரவு வைக்கப்படுகின்றது. 1970-ஆம் ஆண்டில் இப்பலதரப்பட்ட நிதிகளின் மொத்த மதிப்பு 10,000 மிலியன் ரூபிகளாகும். மொத்தக் கூட்டுறவு நிதியில் இது 92 சதவிகிதமாகும்.

சோவியத்து நாட்டின் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் 114 கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளிகளை நிர்வகித்து வருகின்றது. இவை மூலம், ஆடை தயாரிப்போர், ரொட்டி தயாரிப்போர், இறைச்சித் தொழிலில் ஈடுபட்டுள்ளோர், முதலானவர்கள் பயிற்சி பெறுகின்றனர். இப்பள்ளிகளைப் பிரதேச இணைப்புச் சங்கங்கள் முறையாக நிர்வகித்து வருகின்றன. இச்சங்கங்கள் பயிற்சிப் பள்ளிகளுக்குத் தேவையான நிதி உதவிகளையும் அளித்து வருகின்றன. 1958-ஆம் ஆண்டிற்கும் 1965-ஆம் ஆண்டிற்கும் உள்ள இடைப்பட்ட காலத்தில் மட்டும், 1,16,000 தொழிலாளிகள் இப்பள்ளிகள் மூலம் பயிற்சி பெற்றுள்ளனர். இவைமட்டுமின்றி

கூட்டுறவுக் கல்விக்கெனக் கல்லூரிகளையும் நடத்தி வருகின்றது சோவியத்து நாட்டின் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம்.

உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

தொழில் வளம் பெருகுவதற்காக, சோவியத்து நாட்டில் கைத்தொழில்களும் (Handicrafts) சிற்றளவுத் தொழில்களும் (Small-scale Industries) தொடக்கத்திலிருந்தே மிகவும் ஊக்குவிக்கப்பட்டன. 1932-ஆம் ஆண்டிலிருந்து சோவியத்து அரசு வேலை வாய்ப்புகளைப் பெருக்கும் எண்ணத்துடன் பல கூட்டுறவு அமைப்புகளைத் தொழில் துறையிலும் உருவாக்க முயற்சிகள் மேற்கொண்டது. அதன் பயனாக, 1937-ஆம் ஆண்டில் சுமார் 15,000 'தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்' (Industrial Co-op. Societies) பணிபுரிந்து வந்தன. உறுப்பினர் எண்ணிக்கை இரண்டு இலட்சமாகும்.

இவற்றுள் சில கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்புக் குறைபாடு உள்ள நபர்களுக்காகத் தொடங்கப்பட்டவையாகும். ஆண்டு தோறும் இத்தொழிற் சங்கங்களின் உற்பத்தித் திறன் உயர்ந்தே வந்தது. சோவியத்து நாட்டின் பொருளாதார உயர்விற்கு இச் சங்கங்களும் காரணமாகும். போர்க் காலத்தில் இச்சங்கங்கள் பெரிதும் வளர்ச்சி பெறலாயின. ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் இச்சங்கங்கள் நன்கு வளரத் தொடங்கின. ஒவ்வோர் ஆண்டும் இத்தொழிற் சங்கங்கள் உற்பத்தி செய்ய வேண்டிய பொருள்களின் அளவு நிர்ணயிக்கப்படும். உதாரணமாக, 1942-ஆம் ஆண்டிற்கு 5,500,000 கரண்டிகள், 2,500,000 கத்திகள், சுமார் 4,000,000 முட்கரண்டிகள். 45 மிலியன் கெஜம் பருத்தித்துணி, 24 மிலியன் காலணிகள், 72 மிலியன் ரூபிள் மதிப்புள்ள தட்டு முட்டுப் பொருள்கள் முதலானவை உற்பத்தி செய்யப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டு, நிறைவேற்றவும்பட்டது. 1945-ஆம் ஆண்டின் உற்பத்திப் பங்கு 10,000,000 காலணிகள், 17,500,000 காலுறைகள், 75,000,000 கரண்டிகள், 8,000 டன் எடையுள்ள சோப்பு வகைகள், 175,000,000 ரூபிள் மதிப்புள்ள தட்டுமுட்டுப்பொருள்கள் எனத்தீர்மானிக்கப்பட்டது. திட்டங்கள் எண்ணியபடி செயலாக்கவும்பட்டன. இத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் 'இன்காப்ஸ்' (Incops) என அழைக்கப்படுகின்றன. இச்சங்கங்களின் உறுப்பினர்கள் உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள்களைச் சங்கங்களிடமிருந்து பெற்று, உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைச் சங்கங்கள் மூலமாகவே விற்பனை செய்து வருகின்றனர். உற்பத்தி செய்யப்படும் பொருள்களின்

பெரும் பகுதி அரசாங்கத்திற்கும், மத்தியக் கூட்டமைப்பிற்கும் (Centro Soyus) விற்பனை செய்யப்படுகின்றன. உறுப்பினர்கட்குத் தொழில் நுட்பக் கருத்துக்களும் போதிக்கப்படுகின்றன. நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்திற்கும், உற்பத்தியாளர் கூட்டுறவு இயக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பும், நல்லுறவும் நிலவுவதால் எண்ணியவை எண்ணியவாங்கு நடைபெறுகின்றன.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்
(Fishermen's Co-operatives)

சோவியத்து நாட்டின் மீனவர் சங்கங்கள் தனித்தன்மை வாய்த்தவையாகும். மீனவர்கள் அனைவரும் (96%) இக்கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக விளங்குகின்றனர். 1936-ஆம் ஆண்டு 830 உள்ளூர்ச் சங்கங்கள் 'கடல் மீனவர்'கட்காக (Sea Fishermen) இயங்கி வந்தன. ஏனைய மீனவர்களுக்காக 810 கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்றி வந்தன, இக்கூட்டுறவுச் சங்கங்கள் மீன் பிடிப்பிற்குத் தேவையான விசைப்படகுகள், தரமான மீன் வலைகள், போன்றவற்றை உறுப்பினர்களுக்கு அளித்து அவர்களை நல்ல முறையில் ஊக்குவிக்கத் தொடங்கின. மீனவர்கள் பிடித்துவரும் பல்வகை மீன்களை முறையாக விற்பனை செய்வதற்கும் இக்கூட்டுறவுச் சங்கங்கள் பெரிதும் உறுதுணையாக விளங்குகின்றன. மீன் இறைச்சி தயாரித்தல், மீன் வளர்ப்பு முறை, மீன் உணவை முறையாகப் பதப்படுத்துதல், போன்ற முக்கியப் பணிகளும் மீனவர்களின் நலன் கருதி இக்கூட்டுறவுச் சங்கங்களால் மேற்கொள்ளப்பட்டன. இச்சங்கங்கள் மீன்களின் விற்பனையைக் கருதி தல்ல திட்டங்களைத் தீட்டி, செயற்பட்டு வரந் தொடங்கின. எனினும், இவைகள் 'விற்பனையேற்பாடு அமைப்புக'ளைப் பெற்றிருக்க வில்லை. விற்பனைத்துறையில் அரசாங்கம் இச்சங்கங்களுக்குப் பெரிதும் உறுதுணையாக விளங்கின. இச்சங்கங்கள் மீனவர்களுக்கு உணவுப் பொருள் களையும் விற்பனை செய்து வருகின்றன. மீன் இறைச்சி தயாரிக்கும் பல தொழிற்சாலைகளை அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங் களின் உதவியோடு நடத்தி வருகின்றது. உடனே விற்பனை செய்ய இயலாதபோது, எஞ்சியுள்ள மீன்களை நன்கு பாதுகாப் பதற்கெனக் குளிர்சாதன வசதிகளைக் கொண்ட பல கிடங்கு களையும் இக்கூட்டுறவுச் சங்கங்கள் பெற்றிருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நிதி வசதிகளை அரசாங்கமே அளித்து வருகின்றது. இக்கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் இணைப்புச் சங்கங்கள் மூலம் மத்தியக் கூட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன.

வேளாண்மைக் கூட்டுறவு
(Agricultural Co-operation)

சோவியத்து நாடு ஒரு விவசாய நாடாகும். அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் இந்நாடு பெருமளவில் தொழில் வளம் பெற்ற போதிலும், மக்கட் தொகையில் 66 சதவிகிதம் விவசாயத்தையே பெரிதும் நம்பி கிராமப் புறங்களில் வாழ்ந்து வந்தனர். ஜார் மன்னர்களால் இந்நாடு ஆளப்படுகையில், விவசாயம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. மொத்த விளைநிலத்தில் மூன்றில் இரண்டு பங்கு நிலச்சுவாந்தார்கள் உரிமையாக இருந்தது. அவர்கள் முறையாக வேளாண்மைத் தொழிலில் ஈடுபாடு கொள்ளாமையால், விவசாயப் பொருள் களின் உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. குடியானவர் களில் பெரும்பாலோர் விளை நிலமற்ற நிலையில் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் தேவைக்கேற்ப விவசாயக் கருவி களும், விவசாயத்திற்குப் பெரிதும் தேவையான கால்நடைப் பிராணிகளும் அளிக்கப்படவில்லை. எனவே, அவர்களது உழைப்பு முழுமையும் எண்ணிக்கையில் குறைந்த நிலப் பிரபுக்களை உயர்த்தவே பயன்பட்டது, குடியானவர்களின் வாழ்க்கை நிலையும், விவசாயத்தின் நிலையும் ஒரு சேரப் பின்தங்கியே இருந்தன.

ஆனால் அக்டோபர் புரட்சிக்குப் பின்னர், விவசாயத் துறையில் பல புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்படலாயின. புரட்சிக்குப்பின் அமைந்த அரசு விவசாயிகளின் முன்னேற்றத் திற்கெனப் பல திட்டங்களைத் தீட்டிச் செயற்படத் தொடங்கியது. எனினும், நிலப் பிரபுக்களின் கீழ் சிக்குண்டு கிடந்தமையால், விவசாயிகள் தன்னம்பிக்கையிழந்து காணப்பட்டனர். எனவே, தொடக்கத்தில் அரசின் திட்டங்கள் யாவும் முழுமையாகப் பலன் அளிக்கவில்லை. இந்நிலையில்தான், விவசாய முன்னேற்றத்திற் கெனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. இந்நாட்டில் புரட்சி ஏற்பட்ட காலத்திலேயே சுமார் 8,000 கொள்முதல், விற்பனையேற்பாடு, விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வந்தன. இவையன்றி, சுமார் 5000 தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் பணிபுரிந்து வந்தன. புரட்சிக்குப் பின்னர், தொழி லாளர்களின் அரசு நிலமற்ற ஏழைக் குடியானவர்கட்கு 381·2 மிலியன் ஏக்கர் நிலத்தை வழங்கயது. மேலும், அவர்கள் விவசாயத்தை நன்கு செய்யும் பொருட்டு விதைகள், உரங்கள், விவசாயக் கருவிகள், கடனுதவிகள் போன்றவற்றையும் வழங்கத் தொடங்கியது. எனவே, வறுமையில் வாடிக்கிடந்த குடியான

வர்கள் உற்சாகத்துடன் விவசாயத்தில் ஈடுபடலாயினர். இந்நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரின் காரணமாக, விவசாய உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டது. எனவே, உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கோடு கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவில் அமைக்கப்பட்டன. 1921-ஆம் ஆண்டில் தனிப்பட்ட குடியானவர்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இது மட்டுமின்றி, வேறுபல 'தீர்ப்பாணை'களும் (Decree) விவசாயக் கூட்டுறவு இயக்கத்தை நன்கு வலுப்படுத்தின. இதன் விளைவாக, சோவியத்து நாட்டு விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்பு உருவாகியது. தாழ்ந்துகிடந்த உற்பத்தித் திறனை உயர்த்துவதற்குப் பல்வேறு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. எனினும், மக்களிடையே மலிந்து காணப்பட்ட அறிவீனமும், வறுமையும், உயர்விற்குப் பெரிதும் தடையாக இருந்தன. எனவே, விவசாயத்தைப் பேரளவு முறையில் நடத்துவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன. புதிய பொருளாதாரத் திட்டத்தின் படி, விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வழங்குத்துறை, விற்பனையேற்பாட்டுத் துறை, கொள்முதல் துறை போன்றவற்றில் பல மாறுதல்களைச் செய்து பெருமளவில் உற்பத்தித் திறனை உயர்த்தத் தொடங்கின. இருப்பினும், உற்பத்தி உயர்வதற்குப் பதிலாகக் குறையத் தொடங்கியது. அப்பொழுது புரட்சி அரசின் ஆட்சிப் பொறுப்பில் இருந்த 'ஸ்டாலின்' (Stalin) முன்னேற்றத்திற்கான வழிமுறைகளைத் தீவிரமாக வகுக்கத் தொடங்கினர்.

விவசாயம் சரியாக வளராத நிலையில் கிராமப் பொருளாதாரமே சீர்குலைந்திருந்தது. இந்நிலையில்தான், கூட்டுப்பண்ணை விவசாயம் சோவியத்து நாட்டில் விடிவெள்ளியாகத் தோன்றியது. இக்கூட்டுப்பண்ணை விவசாயத்தில் 'உற்பத்திச் சாதனங்கள்' (Means of Production), உழைப்பு முதலானவை அனைவரின் நலன் கருதிப் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டன. இதன் பிறகே, சோவியத்து நாட்டின் விவசாயத்தில் மறுமலர்ச்சி ஏற்படத் தொடங்கியது. எனவே, பொதுவுடைமைக் கட்சியின் கொள்கை அடிப்படையில் இங்குக் கூட்டுப்பண்ணை விவசாயம் தோன்றவில்லை. மக்களின் அறியாமை, வறுமை, போதிய வசதியின்மை, போன்ற குறைபாடுகளால் சோவியத்து நாட்டின் பொருளாதாரம் மிகவும் சீர்குலைந்திருந்தது. இந்நிலையில், 'கூட்டுப்பண்ணை விவசாயமே' (Collective Farming) விவசாய வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கியது. இக்கருத்தையே

கூட்டுறவுத் துறையில் வல்லுநராக விளங்கிய ஆசிரியர் ஒருவரும் (Dr. Fay) சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார்.

தனியார் விவசாயம் (Individual Farming) எதிர்பாராத மாற்றத்திற்கு ஆளாகியதால், தொடக்கத்தில் விவசாயிகள் கூட்டுப்பண்ணை விவசாயத்தில் பெருமளவு ஈடுபாடு கொள்ள வில்லை. எனவே, விவசாயிகள் நலன் கருதிக் கூட்டுப்பண்ணை விவசாயம் அவர்கள் மேல் திணிக்கப்பட்டது. விவசாயிகள் கூட்டுப்பண்ணை விவசாயத்தில் ஈடுபாடுகொள்ளத்தக்க வகையில் அரசாங்கத்தால் கட்டாயப்படுத்தப்பட்டனர். நோய்வாய்பட்ட குழந்தைக்கு மருந்தைக் கட்டாயப்படுத்திக் கொடுப்பது போல், வறுமை நோயிலிருந்து விவசாயிகளை விடுவிப்பதற்காகச் சோவியத்து அரசாங்கம் கூட்டுப்பண்ணை விவசாயத்தை அவர் களிடையே கட்டாயப்படுத்தியது. சிதறிக்கிடந்த துண்டு நிலங்களை முறையாக ஒன்று சேர்த்துக் கூட்டுப்பண்ணை விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. தனியார் விவசாயம் மூலம் போதிய வருவாய் பெற இயலாமல் தவித்த விவசாயப் பெருங்குடி மக்கள் கூட்டுப்பண்ணை விவசாய முறையில் கணிசமாக ஊதியம் பெறலாயினர். ஊதிய உயர்வினால் அவர்கள் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது மட்டுமின்றி, நாட்டின் பொருளாதாரமே உயர்வு பெறலாயிற்று.

எனவே, விவசாயப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கு வதற்காகவும், விவசாயிகளின் இன்னல்களைக் களைவதற்கும் கைக் கொள்ளப்பட்டதே கூட்டுப் பண்ணை விவசாயமாகும். நவீன முறையில் விவசாயத்தை நடத்துவதற்கும், விஞ்ஞானக் கருவிகளை இத்துறையில் ஈடுபடுத்துவதற்கும் கூட்டுப் பண்ணை விவசாயம் ஏற்றதொரு அமைப்பாக விளங்கியது. இதன் விளைவாக, இக் கூட்டுப் பண்ணைகள் சோவியத்து நாட்டின் திட்டமிட்ட பொரு ளாதார அமைப்பில் பெரும் பங்கு பெற்றுள்ளன. விவசாயத் துறையில் தீட்டப்படும் திட்டங்களைச் செவ்வனே செயற்படுத்து பவை இக்கூட்டுப் பண்ணைகளேயாகும். இப்பண்ணைகளின் பெரு வெற்றியைக் கண்ட ஏனைய உலக நாடுகள், கூட்டுறவுக் கொள்கைகளின் தரங்குறையாத் தன்மைகளை நன்கு உணரத் தலைப்பட்டன. இத்துறையில், சோவியத்து நாடே ஏனைய நாடு கட்கு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் திகழ்கின்றது.

பிற நாடுகளில் பின்பற்றப்படும் கூட்டுறவு விவசாயத்திற்கும் சோவியத்து நாட்டின் கூட்டுப்பண்ணை விவசாயத்திற்கும் நிரம்ப வேறுபாடு உள்ளது. சோவியத்து நாட்டில் விளை நிலம் யாவும்

அரசாங்கத்திற்குச் சொந்தமானதாகும். இவ்வாறு தேசியமய மாக்கப்பட்டுள்ள விளை நிலம், விவசாயிகளின் பொது உழைப்பில் எல்லோரின் நலனுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. தனியார் உரிமை என்ற சொல்லே இங்கு எழுவதில்லை. எனவே, குடியான வர்கள் அனைவரும் தங்கள் உடைமைகளை ஒன்று சேர்த்து ஒரு பொது நிருவாகத்தின் கீழ் விவசாயத் தொழிலை நடத்தி வருகின் றனர். முறையான நிருவாகத்திற்கென, உறுப்பினர்களால் தேர்தல் மூலம் ஒரு நிர்வாகக் குழு அமைக்கப்படுகின்றது. விளை பொருள் முழுவதும் அரசாங்கத்திற்குச் சொந்தமாகும். உற் பத்திச் சாதனங்களும், விவசாயக் கருவிகளும் அரசிற்குச் சொந்த மானவையாகும். விவசாயத்திற்குப் பயன்படும் கால்நடைகளும் அரசிற்கு உரியவையாகும். எனவே, விவசாயத் துறை முழு வதுமே அரசாங்கத்தினுல் கூட்டுப்பண்ணைகள் மூலம் கண் காணிக்கப் படுகின்றது. இனி, இக்கூட்டுப்பண்ணைகளை விளக்க மாக ஆராய்வோம்.

கூட்டுப் பண்ணைகள்

சோவியத்து நாட்டின் இக்கூட்டுப்பண்ணைகள் 'கோல் கோசு' (Kolkhozy) என வழங்கப்படுகின்றன. புரட்சிக்குப் பின்னர், திட்ட அடிப்படையில் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. உருக்கு முதலான உலோகங்களைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய கனரகத் தொழில்களை முதலில் தொடங்கியது இந்நாடு. இவற்றிற்கே முழுக் கவனத்தையும், சக்தியையும் செலுத்தவேண்டி இருந்த காரணத்தால், மக்க ளுடைய அன்றாடத் தேவைப் பொருள்களையும், உணவுப் பொருள்களையும் உற்பத்தி செய்ய இயலவில்லை. உள்நாட்டுப் போரின் காரணமாகவும் உற்பத்தித் திறன் மிகவும் குறைந் திருந்தது. விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் மிகவும் பின்தங்கி இருந்தது. இப்பிரச்சினைகட்கெல்லாம் கூட்டுப் பண்ணை விவ சாயமே அருமருந்தாக விளங்கியது.

இதன்படி விவசாயம் தனிப்பட்ட முறையில் நடைபெறுமல், ஒரு கிராமத்தில் இருக்கும் மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து கூட்டுப் பண்ணைகள் அமைத்து விவசாயத் தொழிலை நடத்து கின்றனர். கிராம மக்கள் தங்கள் நிலங்களை இப்பண்ணை களின் கீழ்க் கொண்டுவந்து விவசாயத்தை நடத்துவதால் விளையும் நன்மைகள் எல்லோருக்கும் முறையாகப் போய்ச் சேர் கின்றன. மொத்த நிலத்தில், ஒரு பகுதி மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்தப்படுகின்றது. கால்நடைகளுக்குத் தேவையான

தீவனமும் பயிர் செய்யப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட பகுதி காடாக வைக்கப்பட்டுள்ளது. காய்கறி உற்பத்தியும், பால் பண்ணையும் கவனிக்கப்படுகின்றன. குளிர் காலத்தில் காய்கறி உற்பத்தி செய்வதற்குக் கண்ணாடி வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. வெள்ளைப் பன்றி, கரும் பன்றி போன்ற பலவிதப் பன்றிகளையும் வளர்க்கின்றன இப்பண்ணைகள். கோழிகளும் இப்பண்ணைகளில் வளர்க்கப்படுகின்றன. முட்டைக்காகவும் இறைச்சிக்காகவும் அவை பயன்படுகின்றன.

சோவியத்து நாட்டில் விளைநிலம், விளை பொருள், உற்பத்திச் சாதனங்கள், விவசாயக் கருவிகள் போன்றவை அரசாங்கத்திற்குச் சொந்தமானவையாகும். பண்ணைகளில் இயந்திர சக்திதான் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. பண்ணைகளுக்குச் சொந்தமாக மோட்டார் வாகனங்களும், உழும் இயந்திரங்களும் உள்ளன. சில வேலைகளுக்காகக் குதிரைகளும் பயன்படுத்தப் படுகின்றன.

கிராமப் பகுதிகளில் சொந்தமாக வீடு கட்டிக்கொள்ள மக்கள் அனுமதிக்கப் படுகிறார்கள். சிறு வீடுகளாக இருந்தாலும், எல்லா வசதிகளைக் கொண்ட வீடாக ஒவ்வொரு விவசாயியும் கட்டிக் கொள்ள அனுமதி வழங்கப்படுகின்றது. இப்பண்ணைகளில் வேலை செய்யாது வேறு பல தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களும் கிராமங்களில் வாழ்கின்றனர். குடும்பத்தில் இருப்பவர்கள் அனைவருமே விவசாயத்தில் ஈடுபடுவதில்லை. இக்கூட்டுப் பண்ணைகள் இந்த அளவிற்கு வெற்றிகரமாக நடைபெறுவதற்கு முன்பாக எத்தனை சிரமங்கள், தடைகள், சிக்கலான பிரச்சினைகள் குறுக்கிட்டிருக்கின்றன என்பதை இந்நாட்டு வரலாற்றிலேயே காணலாம். பல சமயங்களில் தீவிரமான அடக்குமுறைகளைக் கையாள வேண்டிருந்திருக்கிறது! கூட்டுப்பண்ணை முறைகளை ஒப்புக் கொள்ளாதவர்கள் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார்கள்.

நிலம் எல்லோருக்கும் பொதுவானதாகும் என்ற எண்ணம் ஏற்படுவது எளிதான செயலன்று. தனக்கென்று சொந்தமான சொத்துக்களைப் பெற முயல்வது மனித மனத்தின் இயல்பு. எனவே, ஒவ்வொரு குடியிருப்பு வீட்டிற்கும் சேர்ந்தாற்போல் சுமார் அரை ஏக்கர் நிலம் அந்தந்த குடும்பங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அது அக்குடும்பத்தின் தனிச் சொத்தாகும். அதில் அக்குடும்பத்தார் தங்கள் விருப்பம்போல் விளைவித்துக் கொள்ளலாம். இத்தனி உரிமைபெற்ற நிலங்களில் நல்ல விளைச்சலைப் பெற அவர்கள் முயல்கின்றனர். குடும்ப உபயோகத்திற்கெனக் கால்

நடைகளும் அவர்களால் வளர்க்கப்படுகின்றன. காய்கறிகள், பழவகைகள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு, 'விலைக் கட்டுப்பாடற்ற மாஸ்கோ சந்தை'யில் விற்கப்படுகின்றன.

இத்தனை ஆண்டுக்காலம் பொதுவுடைமை அடிப்படையில் வளர்ந்தும், தனி உரிமை எண்ணங்கள், உணர்ச்சிகள் அடியோடு நீங்கவில்லை என்பது, சிந்தனைக்குரிய செய்தியாகும்.

கூட்டுப் பண்ணைகளைத் தவிர அரசாங்கத்தால் நடத்தப்படும் 'அரசாங்கப்பண்ணை'களும் (State Farms) சோவியத்து நாட்டில் உள்ளன. இக்கூட்டுப் பண்ணை விவசாயம் தற்போது இந்நாடு முழுவதிலும் கையாளப்படுகின்றது. அக்டோபர் புரட்சிக்கு முன்னர், சுமார் 30,000 குடியானவர்கள் மொத்த நிலத்தில் சரி பாதியை விவசாயத் தொழிலுக்குப் பயன்படுத்தி வந்தனர். அவர்களது சராசரிக் 'கைப்பற்று நிலம்' (Holding) சுமார் 8,000 ஏக்கர்களாகும். எஞ்சிய விவசாயிகள் தங்கள் நிலத்தில் மிகப் பழைமையான முறைகளிலேயே விவசாயம் செய்து வந்தனர். புரட்சிக்குப் பின்னர் அமைந்த அரசாங்கம், நிலப் பிரபுக்களிடமிருந்து அவர்களுக்குச் சொந்தமாக விளங்கிய எல்லா நிலங்களையும் 'நிறையீடு' (Compensation) அளிக்காமலேயே கைப்பற்றியது. இவ்வாறு 'பறிமுதல்' (Confiscation) செய்யப்பட்ட நிலங்கள் யாவும் 'குலாக்' (Kulaks) எனப்படும் வசதி நிறைந்த நடுத்தர விவசாயிகளால் 'கைப்பற்றுகை' (Seizure) செய்யப்பட்டன. இதன் விளைவாக, கடைநிலை விவசாயிகள் எப்பலனும் அடையவில்லை. எனவே, சிறு விவசாயிகள் 'போல்ஷிவிக்ஸ்' (Bolsheviks) துணையுடன் போராடத் தொடங்கினர். இப் போராட்டமே உள்நாட்டுப் போராக உருவெடுத்தது. இப் போராட்டத்தின் விளைவாக, எல்லா நிலங்களும் தேசிய மயமாக்கப்பட்டு, எல்லோருக்கும் சமமாகப் பிரித்தளிக்கப்பட்டன.

விளை நிலங்கள் யாவும் 'நாட்டுடைமை' ஆக்கப்பட்ட பின்னரும் பிரச்சினைகள் எழாமலில்லை. அரசாங்கப் பண்ணைகளைத் தவிர, ஏனைய விவசாயப் பண்ணைகள் பழைய முறையில் விவசாயம் செய்து வந்தமையால் உற்பத்தித் திறன் உயரவில்லை. விவசாயிகள் நவீன முறையில் விவசாயம் செய்வதற்குத் தேவையான இயந்திர சாதனங்களையும், அவற்றைக் கொள்முதல் செய்வதற்குத் தேவையான மூலதனத்தையும் பெற்றிருக்கவில்லை. இந் நிலையை மாற்றியமைப்பதற்காக அரசாங்கம் கூட்டுப்பண்ணைகளுக்குத் தேவையான நிதி உதவிகளையும் செய்யத் தொடங்கியது. இதையொட்டி 1000 மிலியன் ரூபிளைக் கொண்ட ஒரு

'சிறப்பு நிதி' (Special Fund) அமைக்கப்பட்டது. இதன்மூலம், பண்ணைகளுக்குத் தேவையான நிதி உதவிகள் 'மானியமாகவும்' (Grant) கடனாகவும் வழங்கப்பட்டன. விவசாயத்திற்குத் தேவையான விவசாய இயந்திரங்களும் அளிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து, சோவியத்து நாடு முழுவதும் விவசாயிகள் கூட்டுப் பண்ணைகளை அமைக்கத் தொடங்கினர். 1918-ஆம் ஆண்டு ஜூலை மாத இறுதியில் 350 கூட்டுப் பண்ணைகள் இயங்கி வந்தன. 1919-ஆம் ஆண்டு இப்பண்ணைகளின் எண்ணிக்கை 6,200 ஆகும். 1920-ஆம் ஆண்டு இப்பண்ணைகளின் எண்ணிக்கை 10,500 என கணக்கிடப்பட்டுள்ளது 1920-ஆம் ஆண்டில், இப் பண்ணைகளின்கீழ்க் கொண்டுவரப்பட்டிருந்த நிலத்தின் அளவு 2.8 மிலியன் ஏக்கர்களாகும். அரசாங்கத்தின் ஆதரவு தொடர்ந்து அளிக்கப்பட்டமையால், இப்பண்ணைகளின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்தே வந்துள்ளது. 1950-ஆம் ஆண்டு 2,54,000 பண்ணைகள் சோவியத்து நாட்டில் இயங்கி வந்தன. 1950-ஆம் ஆண்டுக்குப் பின்னர் விவசாய உற்பத்தியை மேலும் பெருக்குவதற்காகச் சிறு சிறு கூட்டுப் பண்ணைகள் ஒன்று சேர்ந்து சில பெரிய கூட்டுப் பண்ணைகளை உருவாக்கத் தொடங்கின. ஆனால் இத்தகைய 'இணைப்பு' (Integration) அரசாங்கத்தால் கட்டாயப்படுத்தப்படவில்லை. 1952-ஆம் ஆண்டு ஒவ்வொரு கூட்டுப் பண்ணையிலும் சராசரியாக 208 குடும்பங்கள் அங்கம் வகித்திருந்தன. 1967-ஆம் ஆண்டு, இக்குடும்பங்களின் எண்ணிக்கை 418 ஆகும். இதன்மூலம் கூட்டுப் பண்ணைகளுக்கு மக்களிடையே இருந்த, இருந்து வரும் செல்வாக்கை நாம் எளிதில் புரிந்துகொள்ளலாம். பண்ணைகளின் விளை நிலத்தின் சராசரி அளவும் 1,300 'ஹெக்டேரிலிருந்து' 2,800 ஆக உயர்ந்துள்ளது. இப்பண்ணைகளில் கால்நடைகளும் வளர்க்கப்படுகின்றன. 1952-ஆம் ஆண்டு கால்நடைகளின் எண்ணிக்கை (ஒரு பண்ணையைச் சேர்ந்த ஆடுமாடுகள்) 313 ஆகும். 1967-ஆம் ஆண்டு, கால்நடைகளின் எண்ணிக்கை, 1,092 என உயர்ந்து காணப்படுகின்றது. கூட்டுப்பண்ணை விவசாயத்திற்குத் தேவையான இயந்திரக் கருவிகளை சோவியத்து அரசாங்கம் 'உழும் இயந்திர நிலையங்கள்' (Machine Tractor Stations) மூலம் அளிக்கின்றது. அரசாங்கப் பண்ணைகளிலும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இப்பண்ணைகளின் நிருவாகம் அரசின் நேரடிப் பார்வையில் உள்ளது. அரசாங்கப் பண்ணைகள் 'சொர்கோசி' (Sorkozy) என அழைக்கப்படுகின்றன.

பண்ணைகளின் தேவைக்கேற்ப இயந்திரங்களை அளிக்கும் நிலையங்கள் (M. T. S.) சோவியத்து நாடு முழுவதும் அமைக்கப்

பட்டுள்ளன. பண்ணைகட்கு இவை ஆற்றும் சேவைகளுக்கும், பணிகட்கும் பதிலாக விளைபொருளில் ஒரு பகுதி நிலையங்கட்கு அளிக்கப்படுகின்றது. 1958-ஆம் ஆண்டு 8,400 நிலையங்கள் இந்நாட்டில் தொண்டாற்றி வந்தன. இந்நிலையங்களில் பணி புரிந்தோரின் எண்ணிக்கை 1·25 மிலியனாகும். 1958-ஆம் ஆண்டில், இயந்திரங்களில் பெரும்பாலானவை கூட்டுப் பண்ணைகளுக்கு இந்நிலையங்களினால் விற்பனை செய்யப்பட்டன. இன்றும், இந்நிலையங்கள் சோவியத்து நாட்டில் நிலை பெற்றுள்ளன. விவசாய இயந்திரக் கருவிகளைப் பழுதுபார்த்துக் கொடுப்பதன் மூலம் கூட்டுப் பண்ணைகட்குப் பேருதவி புரிந்து வருகின்றன. இயந்திரங்களுக்குத் தேவையான பாகங்களையும் இந்நிலையங்கள் விற்பனை செய்து வருகின்றன. உலகப் போருக்குப் முன்னர், 6,647 நிலையங்கள் செயலாற்றி வந்தன. அப்பொழுது, 4,96,000 உழும் இயந்திரங்களையும், 1,40,000 அறுவடைக் கருவிகளையும் இந்நிலையங்கள் பெற்றிருந்தன. தற்போது, முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் முறையில் பல மாறுதல்கள் இந்நிலையங்களில் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையங்கள் அரசிற்கும், கூட்டுப் பண்ணைகட்கும் இடையே நல்லுறவுப் பாலமாகப் பணிபுரிகின்றன. பண்ணைகளை நடத்தும் பொறுப்பில் இந்நிலையங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. ஒவ்வொரு இயந்திர நிலையமும் முப்பதிலிருந்து நாற்பது பண்ணைகட்குப் பணிபுரிந்து வருகின்றது. உழும் இயந்திரங்கள், அறுவடை இயந்திரங்கள் போன்றவற்றை இவை முறையாகப் பழுது பார்த்து பண்ணைகளுக்கு உறுதுணையாக விளங்குகின்றன. பண்ணைகளின் 'செயற்பாடு'களில் (Operations) சுமார் 80 சதவிகிதம் இயந்திரங்களைக் கொண்டே நடைபெறுகின்றது. 1968-ஆம் ஆண்டில், இக்கூட்டுப் பண்ணைகள் 1·7 மிலியன் உழும் இயந்திரங்களையும், 0·55 மிலியன் அறுவடை இயந்திரங்களையும், ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மோட்டார் வாகனங்களையும், இதர இயந்திரக் கருவிகளையும் பெற்றிருந்தன. போருக்குப் பின்னர் உழும் இயந்திரங்களின் எண்ணிக்கைப் பெருக்கம் 220% என கணக்கிடப்பட்டுள்ளது. விவசாய உற்பத்தி பிரமிக்கத்தக்க வகையில் உயரலாயிற்று. 1913-ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு ஆராய்கையில் 'உற்பத்தி மடங்குச் சுட்டு எண்' எவ்வாறு தொடர்ந்து உயர்ந்து வந்துள்ளது என்பது தெரியவரும்.

ஆண்டு	உற்பத்தி மடங்குச் சுட்டு எண் (Index Number)
1940	140
1945	86
1950	140
1960	224
1965	252
1967	276

விவசாயத்திற்கு தேவையான இயந்திரங்களைப் பண்ணைகளுக்கு வாடகைக்கு வழங்கவில்லை இந்நிலையங்கள். அதற்கு மாருகப் பண்ணைகளுடன் நீண்ட கால 'ஒப்பந்தங்கள்' (Contracts) செய்துக் கொண்டன. இதைத் தவிர, அறுவடை செய்யும் முறை, விதைகளை முறையாக விதைக்கும் முறை, போன்றவையும் இப் பண்ணைகளுக்கு இந்நிலையங்களால் போதிக்கப்பட்டன. தொழில் நிருவாகப் பிரச்சினைகளுக்கு முறையாக இந்நிலையங்களால் தீர்வு காணப்படுகின்றன. இயந்திரங்களை இயக்கும் முறையை இப் பண்ணையைச் சேர்ந்தவர்களுக்கு இந்நிலையங்கள் கற்பிக்கின்றன. தகுந்த பயிற்சி அளிக்கப்படுவதால், இயந்திரங்கள் நீண்ட நாள் உழைக்கின்றன. பண்ணைகளுக்குப் பயிரிடும் முறையை நன்கு போதிக்கின்றன இந்நிலையங்கள். சுருங்கக் கூறின், இந் நிலையங்கள் (M. T. S.) பண்ணைகட்குப் பாதுகாப்பு அரணுகவும், அரசிற்குப் 'பதிலி'யாகவும் (Agency) பணிபுரிந்து வருகின்றன.

பண்ணைகளின் நிருவாகம்

சோவியத்து நாட்டின் கூட்டுப்பண்ணைகள் ஜனநாயக ரீதியில் நிருவாகத்தை நடத்தி வருகின்றன, கூட்டுப் பண்ணையைச் சேர்ந்த உறுப்பினர் யாவரும் ஒன்றுகூடி ஒரு 'பொதுச் சபை'யை (General Body) அமைத்துள்ளனர். முக்கியத் திட்ட முடிவுகளை இப்பொது சபையே எடுக்கின்றது. இப்பொதுச் சபையின் உறுப்பினர்களைக் கொண்டே ஓர் இயக்குநர் அவையும் அமைக்கப்படுகின்றது. இவ்வவையின் தலைவரும் (Chairman) தேர்தல் மூலம் நியமிக்கப்படுகின்ருர். நிருவாகப் பொறுப்புகளை இயக்குநர் அவை, தலைவரின் துணை கொண்டு செவ்வனே செய்கின்றது. கூட்டுப்பண்ணையின் நிருவாகப் பொறுப்பு முழுமையும் இயக்குநர் அவையின் கைகளில் தான் உள்ளது. தலைவருக்குத் துணையாக ஒரு துணைத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்படுகின்ருர்; உறுப்பினர்கள் செய்ய வேண்டிய பணிகளை இயக்குநர் அவை முன்னேற்பாடாக

வகுத்துக் கொள்கின்றது. உறுப்பினர்களுக்கு அவர்களது உழைப்பிற்கேற்ற ஊதியமும் வழங்கப்படுகின்றது. 'இத்தாலியத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களில்' செய்யப்படுவது போலவே, சோவியத்து நாட்டிலும் கூட்டுப்பண்ணையைச் சார்ந்த உறுப்பினர்கள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு 'பிரிவு'ம் ஒரு குறிப்பிட்ட வேலையையே செய்கின்றது. இத்'தொழிலாளர் பிரிவின்' உறுப்பினர் எண்ணிக்கை பண்ணையின் அளவைப் பொறுத்தே அமைகின்றது, பொதுவாக, முப்பதிலிருந்து எண்பது வரை ஒவ்வொரு தொழிலாளர் பிரிவும் உறுப்பினர்களைப் பெற்றுள்ளது. இப்பிரிவுகளின் தலைவர்கள் இயக்குநர் அவையால் நியமிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு பிரிவின் தலைவரும், ஆற்ற வேண்டிய பணிகளைத் தொழிலாளர்களின் தகுதிக்கேற்பப் பிரித்துச் சூழ்நிலைகளுக்கேற்ப அவற்றைச் செயற்படுத்துவதில் மிகுந்த கவனம் செலுத்தத்தக்க வகையில் வழிமுறைகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வப்போது உழைப்பாளிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். அவர்களின் வேலைத் திறனும், உற்பத்திப் பொருளின் தரமும் நன்கு கண்காணிக்கப்படுகின்றன.

சோவியத்து நாட்டின் இத்தகைய தொழிலாளர் பிரிவுகள் மூன்று வகைப்படும். அவையாவன :

1. நிலத் தொழிலாளர் படை (Field Brigade)
2. உழும் இயந்திரத் தொழிலாளர் படை (Tractor Brigade)
3. பால் பண்ணைத் தொழிலாளர் படை (Dairy Brigade)

ஒவ்வொரு தொழிலாளர் படையும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஆற்ற வேண்டிய பணிகளை, இயக்குநர் அவை நன்கு ஆராய்ந்து அதன்படி ஆணைகளைப்பிறப்பிக்கின்றது. செய்யப்பட வேண்டிய வேலைகளில் ஒவ்வொரு தொழிலாளர் படையின் 'பங்கு'ம் (Quota) தீவிர ஆலோசனைக்குப்பிறகே நிருணயம் செய்யப்படுகின்றது. எனவே, தொழிலாளிகளின் ஆற்றல், ஆற்றப்படவேண்டிய பணியின் தன்மை, பயன்படுத்தப்பட வேண்டிய கருவிகள், நிலத்தின் தன்மை, பயிரிடப்பட வேண்டிய பயிர்களின் தன்மைகள், போன்றவை நன்கு ஆராயப்பட்ட பின்பே தொழிலாளர் படையின் பங்கு நிருணயம் செய்யப்படுகிறது. உற்பத்தியின் அளவு மட்டுமின்றி, உற்பத்தித் தரமும் ஒரு சேரக் கண்காணிக்கப்படுகின்றன. அதன் அடிப்படையில் தான், தொழிலாளிகளுக்கு ஊதியம் வழங்கப்படுகின்றது.

விவசாயிகள் ஒவ்வொருவரும் ஒரு வேலை நாளில் செய்யும் சராசரி வேலையைக் கொண்டே ஊதியம் வழங்கப்படுகின்றது. ஒரு நாளில் ஒரு விவசாயியால் செய்யப்படும் சராசரி வேலையை அடிப்படையாகக் கொண்டுதான் ஊதியம் கணக்கிடப்பட்டு, விவசாயிகளின் வேலைத்திறனும் எடை போடப்படுகின்றது. 'திறமை நிறைந்த வேலை'களுக்கு (Skilled Job) 1.5 அல்லது 2 வேலை நாள் அளவு திட்டமும் (Units), 'திறமை குறைந்த வேலை'களுக்கு (Unskilled Jobs) வேலை அளவுத் திட்டம் 0·5 அல்லது 0·75 எனவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு, நிர்ணயிக்கப்பட்ட வேலை அளவைவிட அதிகமாக உற்பத்தி செய்யும் உறுப்பினருக்கு அதற்கேற்ற ஊதியம் வழங்கப் படும். உறுப்பினர்கள் பண்ணைகளில் வேலை செய்வதைப் பொறுத்து, வேலையின் தரத்தையும், அளவையும் அனுசரித்தே ஊதியம் அளிக்கப்படுகின்றது. தற்போது, இவ்வாறு ஊதியம் வழங்கு முறையை விடுத்து அரசாங்கப் பண்ணைகளில் உறுப் பினர்களுக்கு வழங்கப்படுவது போல் ஓர் 'உத்தரவாதத்தொகை' (Guaranteed Amount) ஊதியமாக மாதந்தோறும் வழங்கப் படுகிறது. இனி, கூட்டுப்பண்ணைகளின் விளைபொருள் எவ்வாறு விநியோகிக்கப்படுகிறது என்பதைக் காண்பாம்.

விளைபொருள் விநியோகம்

கூட்டுப்பண்ணையின் மொத்த வருட வருமானம் மிகச் சிறந்த முறையில் விநியோகம் செய்யப்படுகின்றது. எனவே, சோவியத்து அரசும், பண்ணை உறுப்பினர்களும் ஒரு சேர நன்மை பெறுகின்றனர்.

விளைபொருளின் ஒருபகுதி விதைக்காகவும், கால்நடைகளின் தீவனத்திற்காகவும் பாதுகாத்து வைத்துக் கொள்ளப்படு கின்றன. இதன் மூலம், அடுத்த ஆண்டு விவசாயத்திற்கும் முன்கூட்டியே ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிடுகின்றன.

வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் அரசிற்கு வரியாகச் செலுத்தப்படுகின்றது, மொத்த உற்பத்தியின் பேரிலும், வருமானத்தின் பேரிலும் வரிகள் விதிக்கப்படுகின்றன. இது தவிர, கிராமத்தில் குழந்தைகள் விளையாடும் பூங்காக்கள், உடல் நல நிலையங்கள், ஓய்வு விடுதிகள், நூல் நிலையங்கள், நாடகத் திரைப்பட அரங்குகள், முதலிய வசதிகளுக்காகவும் வரு மானத்தில் ஒரு பகுதி ஒதுக்கப்படுகிறது. பண்ணையில் விளையக் கூடிய பயிர், கால்நடை, இயந்திரங்கள் முதலியவற்றிற்குக் 'காப்புறுதி' (Insurance) பெறுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படு

கின்றன. வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதி சேமிப்பு நிதிக்காகவும், 'கடன் தீர்ப்பு நிதி'க்காகவும் (Sinking Fund) ஒதுக்கப்படுகிறது. விளைபொருளில் ஒரு கணிசமான பகுதியை அரசாங்கமே கொள்முதல் செய்து கொள்கின்றது. உதாரணமாக, பால் பண்ணையைப் பார்ப்போம். உற்பத்தியாகின்ற பாலில் என்பது சதவிகிதத்தை அரசிற்கு முன்பே நிருணயிக்கப்பட்ட விலை விகிதப்படி அப்பண்ணை விற்று விடவேண்டும். இதைப் போலவே, காய்கறிகளில் சரிபகுதியையும், இறைச்சியில் தொண்ணூற்றைம்பது சதவிகிதத்தையும் அரசாங்கத்திற்கு இப்பண்ணைகள் விற்பனை செய்து விடுகின்றன. வருமானத்தில் ஒரு கணிசமான தொகை கூட்டுறவுப் பள்ளிகளை நடத்துவதற்கும், கருத்தரங்குகள் ஏற்பாடு செய்வதற்கும் ஒதுக்கப்படுகிறது. மேலும், வருமானத்தின் மூலம் அரசிடமிருந்து பெற்ற கடன் தொகையும் திருப்பி அளிக்கப்படுகின்றது,

எஞ்சியுள்ள வருமானத்தில் உழும் இயந்திர நிலையங்கட்குச் சேர வேண்டிய தொகையும் அளிக்கப்படுகின்றது. இந்நிலையங்கள், இயந்திரங்களைப் பழுது பார்ப்பதிலும், விவசாய நடவடிக்கைகளுக்கு உறுதுணையாகவும் செயலாற்றுவதால் இத்தொகை வழங்கப்படுகின்றது. இதன் பிறகு, எஞ்சியுள்ள விளைபொருள்கள் சந்தைகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

கடைசியாக, எஞ்சியுள்ள வருமானந் தொகையைப் பண்ணையில் பணியாற்றுகின்ற உறுப்பினர்களுக்கு ஊதியமாக வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அரசாங்கப் பண்ணைகளில் மாதாந்தரச் சம்பளம்போட்டுப் பணியாளர்கட்குக் கொடுத்து விடுகின்றார்கள். பொதுவாகத் தொழில் துறையில் வேலை செய்கின்றவர்களுக்கும் விவசாயத் துறையில் வேலை செய்கின்றவர்களுக்கும் ஒரே மாத வருமானம்தான் கொடுக்கப்படுகின்றது. அவ்வாறில்லை யென்றால், அதை எப்படி பொதுவுடைமைச் சமுதாயம் என அழைப்பது ?

கூட்டுப் பண்ணைகளால் விளையும் நன்மைகள்

கூட்டுறவுக் கொள்கைகளினால் விளையும் நன்மைகள் யாவும் சோவியத்து நாட்டின் கூட்டுப் பண்ணைகளால் விளைகின்றன. கூட்டுறவுக் கொள்கைகளை உள்ளடக்கி அதன்படி செயலாற்றுவதினால்தான் இத்தகைய வியத்தகு நன்மைகள் ஏற்பட்டுள்ளன. விவசாயமே ஒரு நாட்டின் முதுகெலும்பு என்பதை நன்குணர்ந்திருக்கும் சோவியத்து நாடு, கூட்டுப் பண்ணைகள் மூலம்

நாட்டின் பொருளாதாரத்தையே மாற்றியமைத்துள்ளது. இனி, கூட்டுப் பண்ணைகளினுல் ஏற்பட்டுள்ள நன்மைகளை ஆராய் வோம்.

1. கூட்டுப் பண்ணை விவசாயத்தில், விவசாயம் பேரளவு முறையில் செய்யப்படுகின்றது. இதனுல் விவசாயம் பெயரளவில் செய்யப்படாமல், பேரளவு உற்பத்தி முறையில் செவ்வனே செய்யப்பட்டு, அதன் மூலம் விளையும் எல்லா நன்மைகளையும் பெற வாய்ப்பு ஏற்படுகின்றது. பண்ணையின் கீழ்க் கொண்டு வரப்படும் நிலத்தின் அளவு கணிசமாகப் பெரிதாக இருப்பதால், அறிவியல் துணைகொண்டு விவசாயத்தைச் செய்ய இயலு கின்றது நவீன கருவிகளை இதன் மூலம் பயிர்த் தொழிலில் பயன் படுத்த முடிகின்றது. எனவே, விவசாயப் பொருள்களின் உற்பத்தி கணிசமாக உயர வாய்ப்பு ஏற்படுகின்றது.

2. உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் அவர்களது வேலைத் தரத்தையும், வேலை அளவையும் பொறுத்து அமை வதால், உறுப்பினர்கள் யாவரும் தங்கள் முழு உழைப்பையும் சற்றும் சிதருமல் பண்ணைகளின் முன்னேற்றத்திற்கு அளிக்கத் தயங்குவதில்லை. எனவே, விவசாயிகளின் உற்பத்தித் திறனும் நன்கு உயர முடிகின்றது.

3. சிறந்த நீர்ப்பாசன முறைகளைக் கொண்டு, வளமை குறைந்த நிலங்களும் வேளாண்மைக்குத் தக்கபடி மாற்றியமைக் கப்படுகின்றன. நவீன முறைகளைக் கொண்டு இந்நிலங்களும் பயிரிடப்படுவதால், விவசாய உற்பத்தி நன்கு பெருகலாயிற்று.

4. வேளாண்மை வெற்றிக்குப் 'பொறுக்கு விதை'களும், உரங்களும் முக்கிய காரணங்களாதலால், கூட்டுப் பண்ணைகள் இவற்றிலும் மிகுந்த கவனம் செலுத்துகின்றன. கழிவுப் பொருள் களின் மூலம் சிறந்த 'எரு' (Manure) தயாரிக்கப்பட்டு, விளை நிலத்தின் செழுமை அதிகரிக்கப்படுகின்றது. நவீன 'உரவகை' களும் (Fertilisers) உற்பத்திப் பெருக்கத்திற்கு உறுதுணையாக விளங்குகின்றன.

5. கூட்டு முயற்சிகளின் காரணமாகப் பயிர்கள் எவ்வித நோயினுலும் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படுகின்றன. பயிர்களை அழிக்கும் பூச்சிகளைத் தகுந்த மருந்துகளைக் கொண்டு அழிப்பதால், விவசாய உற்பத்தி பாதிக்கப் படுவதில்லை.

6. கூட்டுப் பண்ணையில் கால் நடைத் தீவனமும் பயிர் செய் யப்படுவதால் கால்நடைகளின் நலனும் கவனிக்கப்படுகின்றது.

சிறந்த கால்நடைப் பிராணிகளால் விவசாயத்தில் எழும் பிரச்சினைகள் எளிதாகக் களையப்படுகின்றன.

7, பண்ணையின்வெற்றி உறுப்பினர்களின் வெற்றியல்லவா? பண்ணையின் வருமானம் உயர்வதால், உறுப்பினர்களின் ஊதியமும் கணிசமாக உயருகின்றது. தேவைக்கேற்ற ஊதியம் வழங்கப்படுவதால், உறுப்பினர்கள் பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்து விடுபட முடிகின்றது. எனவே, உறுப்பினர்கள் யாவரும் பண்ணையின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்கின்றனர். அவர்கள் தங்கள் சலியா உழைப்பை நல்குவதில் தயங்குவதேயில்லை. பண்ணையின் வெற்றிக்கு இவர்கள் பாடுபடுவதால், வெற்றி இவர்களைத் தேடி வருகின்றது.

மேற்கூறியுள்ள நன்மைகளைக் கண்ட சோவியத்து மக்கள் கூட்டுப் பண்ணைகள்பால் பெரிதும் ஈடுபாடு கொண்டதில் வியப்பேதுமில்லை. 20 மிலியன் குடியானவர் குடும்பங்கள் 2,45,000 கூட்டுப் பண்ணைகளை அமைத்து வேளாண்மைத் தொழிலை வளப்படுத்தி வாழ்கின்றனர். மொத்த விளை நிலத்தில் 94 சதவிகிதம் இப்பண்ணைகளின் கீழ் உள்ளன. 1958-ஆம் ஆண்டு இப்பண்ணைகளின் எண்ணிக்கை 2,54,000 ஆகும். ஆனால், 1953-ஆம் ஆண்டு சிறு பண்ணைகளை ஒன்று சேர்த்து மாற்றியமைத்ததன் விளைவாக, எண்ணிக்கை 94,000 எனக் குறைந்தது. கூட்டுப் பண்ணைகளைத் தவிர அரசாங்கப் பண்ணைகளும், 'உழும் இயந்திர நிலையங்களும்' பெருமளவில் தொடங்கப் பட்டன. ஒவ்வொரு குடும்ப வருமானமும் கணிசமாக உயரலாயிற்று. வருமானம் தானிய அடிப்படையில்தான் நிர்ணயிக்கப் படுகின்றது. 1932-ஆம் ஆண்டில் 0.6 டன் என விளங்கிய தானிய வருமானம் 1937-ஆம் ஆண்டு 1.7 டன்னாக உயர்ந்தது. அதாவது, 1932-ஆம் ஆண்டு 106.2 ரூபிகளாகத் திகழ்ந்த குடும்ப வருவாய் 1937-ல் 348.1 ரூபிள் என உயரலாயிற்று. வருவாய் பெருகியதால் வசதிகளும் பெருகத் தொடங்கின.

கூட்டுப்பண்ணைகளின் தோற்றத்திற்குப் பிறகு, சோவியத்து நாட்டில் இயங்கி வந்த 'விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்' இப்பண்ணைகளுடன் ஐக்கியமாகிவிட்டன. போதுமான நிதி வசதிகளைப் பண்ணைகள் பெற்றிருந்தமையால், 'கூட்டுறவுக் கடன் சங்கங்கள்' தேவையற்ற நிலையில் அறவே மறைந்தன. 1930-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் மூலம் (Credit Reform Act of 1930) குறுகிய காலக் கடன் அரசு வங்கியிடமிருந்தும், நீண்ட காலக் கடன் 'சிறப்புக்

கூட்டுறவு' வங்கிகளிடமிருந்தும் பெற வழிமுறைகள் செய்யப் பட்டன.

கூட்டுப் பண்ணைகளின் குறைபாடுகள்

சோவியத்துக் கூட்டுப் பண்ணைகள் பெரு வெற்றி பெற்று வலிவுடன் திகழ்ந்தன என்றாலும், சில பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. எனினும், இக்குறைபாடுகள் எண் ணிக்கையில் குறையவே இனி, அவற்றைக் காண்போம்.

1. கூட்டுப்பண்ணைகள் அமைக்கப்பட்டதன் விளைவாகச்சில விவசாயப் பொருள்கள், பால் முதலியவை பெருமளவு உற்பத் தியில் உயர்ந்தன. எனினும், இறைச்சி, வெண்ணெய், பால், முட்டை, காய்கறிவகைகள் முதலியவைகள் மக்களுக்கு மிகவும் தேவைப்பட்டதால், இவற்றின் உற்பத்தியை உயர்த்துவதற்கு வழிமுறைகள் ஆராயப்பட்டன. தொழிலாளிகள் தொடக்கத்தில் முறையாக ஊக்குவிக்கப்படவில்லையாதலால், அவர்கள் இயந்திரத் தொழில்கள் நிறைந்திருந்த பகுதிகள் நோக்கிச் செல்லத் தொடங்கினர். தொழில்கள் நிறைந்த பகுதிகளில் வருவாய் உயர்ந்து காணப்பட்டதாலும், வாழ்க்கை நிலை நன்கு இருந்தமையாலும், கிராமங்களில் வாழ்ந்து வந்த குடியானவர் களில் பெரும்பாலோர் அப்பகுதிகளை மிகவும் விரும்பினர். இதன் விளைவாகக் கூட்டுப் பண்ணைகளின் உயர்விற்குத் தங்கள் சலியா உழைப்பை நல்க வல்ல தொழிலாளிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்தது.

2. சோவியத்து நாட்டின் கூட்டுப் பண்ணைகள் அரசாங் கத்தின் விருப்பத்திற்கேற்ப அமைக்கப்பட்டவையாகும். விவசா யிகள் தங்கள் நல் வாழ்வு கருதித் தாங்களே அமைத்துக் கொள்ள வில்லை. மக்களே தங்கள் தேவைகளை உணர்ந்து செயற்படாத வரையில் கூட்டுறவு இயக்கம் வளர்வதெப்படி? கூட்டுறவு இயக்கம் என்பது மக்கள் இயக்கமல்லவா! அரசின் ஆணைகளைக் கண்ட வசதி நிறைந்த விவசாயிகள் பலர் தங்களது ஆடு மாடுகளைக் கொன்று இறைச்சி விற்பனை செய்தனர். இதன் விளைவாகப் பால் பொருள்களின் உற்பத்தி மிகவும் குறைந்தது.

3. விவசாயப் பொருள்களின் விலைகள் மிகவும் குறைவாக இருந்தமையால், பொருள்களின் உற்பத்தி உயரவே இல்லை. விலைகளின் வீழ்ச்சி காரணமாக, நுகர்வோர் பலனடைந்தாலும் உற்பத்தியாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

4. பண்ணைகளில் பணிபுரிந்தோர் முறையாகக் கூட்டுப் பண்ணை விவசாய முறையில் பயிற்சி பெற்றிருக்கவில்லையாதலால் விவசாயத்தில் வளர்ச்சி ஏற்படவில்லை. பெரும்பாலான பண்ணை களின் தலைவர்கள் நல்ல பயிற்சியைப் பெற்றிருக்கவில்லை.

5. பண்ணைகளின் தலைவர்கள் முறையாகத் தேர்ந்தெடுக்கப் படவில்லை. தலைவர் தேர்தல் பெயரளவில்தான் நடைபெற்று வந்தது. அரசின் ஆதரவு பெற்றவர்களே தலைவர்களாக நியமிக் கப்பட்டனர். எனவே, உறுப்பினர்கள் தங்கள் 'வாக்கைத்' (Vote) தங்கள் விருப்பப்படி பதிவு செய்ய இயலவில்லை. சில சமயங்களில், பண்ணைத் தலைவர்கள் தவறான முறையில் பொரு ளீட்டவும் தொடங்கியதால் நிலைமை மேலும் சீர்க்கேடு அடையத் தொடங்கியது.

6. பெரும்பாலான பண்ணைகள் நவீன முறைகளைக் கொண்டு விவசாயம் செய்யத் தயக்கம் காட்டின. இயந்திரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. எனவே, வசதிகள் இருந்தும் வளம் ஏற்படவில்லை.

அத்தருணத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த காலஞ் சென்ற திரு. குருஷ்சேவ் அவர்கள், கூட்டுப் பண்ணைகளின் இன்னல்களுக்கும், இடர்ப்பாடுகளுக்கும் இரண்டாம் உலகப் போரே காரணமாகும் என்று சுட்டிக் காட்டியுள்ளார். இரண் டாம் உலகப் போரின் காரணமாக எழுந்த பிரச்சினைகள் கூட்டுப் பண்ணைகளின் வளர்ச்சியை மிகவும் பாதித்தன. கல்வியறிவு நிறைந்த, திறமை வாய்ந்த உறுப்பினர்கள் பலர் கூட்டுப் பண்ணைகளை உதறி விட்டுப் பிற தொழில்களில் ஈடுபாடு கொண் டனர். இதன் விளைவாகப் பண்ணைகளின் நிர்வாகம் கல்வியறிவு அற்ற, பயிற்சி பெறாத உறுப்பினர்களின் கைகளில் விழுந்தது. முறையற்ற நிர்வாகம் பண்ணைகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் தடையாக இருந்தது.

தீர்வழி நடவடிக்கைகள் (Remedial Measures)

கூட்டுப்பண்ணைகளில் நிலவிய குறைபாடுகளைக் களைவதற்கு கீழ்க்கண்ட வழிமுறைகள் வலியுறுத்தப்பட்டன.

1. உறுப்பினர்களை மகிழ்விக்கத்தக்க வகையில் அவர்களின் திறமைக் கேற்ப ஊதியத்தை உயர்த்தி அவர்களது பொருளா தார நிலையைச் செவ்வனே மாற்றி அமைத்தல்.

2. அரசிற்குக் கூட்டுப் பண்ணை அளிக்கும் விளைபொருளின் அளவைக் குறைத்தல் (இதன் மூலம் பெருமளவு விளைபொருளை விற்க வழி ஏற்படும்).

3. கூட்டுப் பண்ணைகள் அரசிற்குச் செலுத்திவந்த வரிகளைக் குறைத்தல்.

4. விவசாய உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் ஊதியத்தில் நிலவிய ஏற்றத் தாழ்வுகளைக் கணிசமாகக் குறைத்தல்.

5. உறுப்பினர்கள் கூட்டுப் பண்ணைக்குச் 'செலுத்த வேண்டிய கடன் தொகை'யை (Outstanding Debt) ரத்து செய்தல்.

6. கால்நடை வளர்ப்பு, காய்கறிவகைகள், பழவகைகள் போன்றவற்றின் உற்பத்தியை ஊக்குவித்தல்.

7. உறுப்பினர்களின் நலன் கருதி வேலை வாய்ப்புகளைக் கணிசமாகப் பெருக்குதல்.

8. உறுப்பினர்களின் பொறுப்பை அவர்கட்கு உணர்த்தி, அவர்களது உழைப்பை ஊக்குவித்தல்.

9. உழும் இயந்திர நிலையங்களை (M.T.S.) நவீன முறையில் சூழ்நிலைக் கேற்ப மாற்றியமைத்தல்.

10. விவசாயம், தொழில் துறை, வணிகம் போன்றவற்றில் பணிபுரிந்து வரும் உறுப்பினர்களுக்கு முறையான பயிற்சி அளித்தல்.

11. நவீன விவசாயக் கருவிகளின் உபயோகத்தை அதிகரித்தல்.

12. கூட்டுப் பண்ணை அங்காடிகள், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் முதலானவற்றின் துணை கொண்டு விவசாய விற்பனையேற்பாட்டை மாற்றியமைத்தல்.

13. அளவில் பெரிய கூட்டுப் பண்ணைகளுக்கு கடன் வசதிகள், இயத்திர அளிப்பு போன்றவற்றைத் தேவையான அளவிற்கு அளித்து ஊக்குவித்தல்.

14. உற்பத்தியாளர் சங்கங்கள், நுகர்வோர் சங்கங்கள் ஆகிய கூட்டுறவு அமைப்புகள் மூலம் கிராமங்களில் வாழும் மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துதல்.

இந்நடவடிக்கைகள் மூலம் கூட்டுப் பண்ணைகளில் நிலவிய குறைபாடுகளைக் களைய முடியும் என்பதையுணர்ந்த சோவியத்து நாடு, இந்நடவடிக்கைகளை நடைமுறைக்குக் கொணர்ந்து அம் முயற்சியில் வெற்றியும் கண்டது. விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக உழும் இயந்திர நிலையங்களை அடியோடு மாற்றியமைக்க விரும்பிய சோவியத்து நாடு அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

தீவிர திட்டங்களைச் செயற்படுத்தியும் சோவியத்து நாடு விவசாய உற்பத்தியில் உயர்வு காண முடியவில்லை. 1940-ஆம் ஆண்டிற்கும் 1952-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட பன்னிரண்டு ஆண்டுகளில் விவசாய உற்பத்தி 12 சதவிகிதமே உயர்ந்து காணப்பட்டது. ஸ்டாலின் மறைவிற்குப் பிறகு விவசாயத் துறையில் பல மாற்றங்கள் செய்யப்படலாயின. 1958-ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து விவசாயத் துறையில் பல புரட்சிகரமான முன்னேற்றத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. 1958-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் நாள், உழும் இயந்திர நிலையங்களை (M.T.S.) அறவே அகற்றுவதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டது. இது மட்டுமின்றிக் கூட்டுப் பண்ணைகள் விளைபொருளின் ஒரு கணிசமான பகுதியை அரசிற்கு வழங்கும் முறையும் அகற்றப்படத் தக்க வகையில் சட்டம் இயற்றப்பட்டது. விளைபொருள்களின் விலை நிர்ணயம் புதிய முறையில் மாற்றியமைக்கப்பட்டது, இவ்விரு நடவடிக்கைகளும் விவசாயத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியது மட்டுமின்றி, அரசிற்கும் கூட்டுப் பண்ணைகளுக்கும் அதுவரை இருந்து வந்த தொடர்பைப் புதிய முறையில் மாற்றியமைத்தன.

1958-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி, விவசாயக் கருவிகள் கூட்டுப் பண்ணைகளுக்கு நேரடியாகவே விற்பனை செய்யப்பட ஏற்பாடுகள் செய்யப்படும். உழும் இயந்திர நிலையங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் கூட்டுப் பண்ணைகளுக்கு மாற்றப்படுவர். இந்நிலையங்கள் இயந்திரங்களைப் பழுது பார்க்கும் நிலையங்களாக (Repair Technical Stations) மாற்றியமைக்கப்படும். இது மட்டுமின்றி, இந்நிலையங்கள் (R.T.S.) எரிபொருள் (Fuel), உரங்கள், இயந்திர பாகங்கள் முதலானவற்றின் விற்பனைத் துறையில் 'பதிலி'க

ளாகவும் செயற்பட வழிமுறைகள் வகுக்கப்பட்டன. மேலும், சாலைகள் அமைத்தல், நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குதல் போன்றவற்றிலும் இந்நிலையங்கள் பங்கேற்கத் திட்டங்கள் தீட்டப்பட்டன. சிறு சிறு பண்ணைகளை ஒன்று சேர்த்து அளவில் பெரிய பண்ணைகள் உருவாக்கப்பட்டமையால், பண்ணைகளின் பொருளாதார நிலை வலிவுடன் விளங்கலாயிற்று. எனவே, உழும் இயந்திர நிலையங்களை அகற்றி, உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. உற்பத்திச் செலவு கணிசமாகக் குறைந்தால், பொருள்களின் விலைப் பட்டியல் மகிழ்ச்சி அளிக்குமல்லவா? விவசாயத்திற்குத் தேவையான இயந்திரங்கள் கூட்டுப்பண்ணைகளுக்குக் கடன் அடிப்படையிலும் விற்பனை செய்யப்பட்டன.

ஒவ்வொரு கூட்டுறவுப் பண்ணையும் விளைபொருளின் ஒரு கணிசமான பகுதியை முன்பே நிருணயிக்கப்பட்ட விலை விகிதப் படி அரசிற்கு விற்க வேண்டும். இது ஒரு கட்டாய விற்பனை யாகும். உற்பத்தியைப் பெருக்குவதற்காக, 1958-ஆம் ஆண்டு இக் கட்டாய விற்பனை முறை மாற்றியமைக்கப்பட்டது.

புதிய திட்டத்தின்படி, கூட்டுப் பண்ணைகள் தங்கள் விளை பொருள்களை நிருணயம் செய்யப்பட்ட விலை விகிதத்தில், பிரதே சங்களின் (Zones) தன்மைக் கேற்ப அரசிற்கு விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்படும். இப்புதிய திட்டத்தினால், கூட்டுப் பண்ணைகள் தங்கள் விருப்பம் போல் விவசாயம் செய்ய வழி ஏற் படுகின்றது. இலாபம் தரத்தக்க பயிர்களைக் கூட்டுப் பண்ணைகள் பயிரிட வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

இம்மாற்றம் ஏற்படுவதற்கு முன்னர், கூட்டுப் பண்ணைகள் தங்கள் விளைபொருள்களை அரசிற்கு மிகக் குறைந்த விலைக்கு விற்று வந்தன. இவ்வாறு குறைந்த அளவில் நிருணயிக்கப்பட் டிருந்த விலை, உற்பத்திச் செலவைக்கூட சரி செய்ய இயலாத நிலையில் இருந்தது. எனவே, இலாபத்திற்குப் பதில் இழப்பே ஏற்பட்டது. ஆனால் புதிய திட்டத்தின்படி, விவசாயிகளின் கட்டாய விற்பனை முறை சிறந்த வகையில் மாற்றம் செய்யப் பட்டது.

இம்மாற்றங்களுக்குப் பிறகே சோவியத்து நாட்டின் விவசா யத்தில் பல நல்ல திருப்பங்கள் ஏற்பட்டன. பால், இறைச்சி, காய் கறிவகைகள், பழவகைகள், முட்டை போன்றவற்றின் உற்பத்தி கணிசமாக உயரலாயிற்று. விவசாயிகளின் ஊதியமும்

உயர்ந்தது. இவர்களது வாழ்வு மலர, அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கலாயிற்று. சுருங்கக் கூறின், விவசாயம் செழித்து வளர்ந்தமையால் நாட்டின் பொருளாதாரம் எளிதில் உயர் நிலையை அடைந்தது. திட்டமிட்ட செய்கைகள், முறையான நிர்வாகம், அரசின் ஆதரவு ஆகிய இம்மூன்றுமே சோவியத்து நாட்டின் விவசாயத்தை வளர்த்தன.

கூட்டுப்பண்ணையும் கூட்டுறவுப்பண்ணையும்
(Collective Farming vs. Co-operative Farming)

இதுவரை, கூட்டுப்பண்ணைகள் எவ்வாறு சோவியத்துப் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு பெற்றுள்ளன என்பதைக் கண்டோம். இரண்டாம் உலகப் போரின் போது இப்பண்ணைகள் ஆற்றிய அரும்பணிகள் அளவிட முடியாதவையாகும். இப்பொதுவுடமை நாட்டின் முதுகெலும்பாக இப்பண்ணைகள் விளங்கியது மட்டுமின்றி, படைநிதிக்கு பல மிலியன் டன் தானியங்களையும் நன்கொடையாக நல்கியது. மேலும் போருக்குத் தேவையான விமானங்கள், ஏவுகணைகள் போன்றவற்றைத் தயாரிப்பதற்கும் உறுதுணையாக விளங்கின.

சோவியத்து நாட்டின் இக் 'கூட்டுப்பண்ணைகள்' ஏனைய ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் இயங்கி வரும் 'கூட்டுறவுப் பண்ணை'களிலிருந்து வேறுபட்டே நிற்கின்றன. சோவியத்து நாட்டுக் கூட்டுப் பண்ணைகளில் அரசின் தலையீடு அதிகம். ஓரளவிற்கே இப்பண்ணைகள் தங்கள் விருப்பப்படி இயங்க இயலும். இந்நாட்டில் அரசாங்கத்தின் 'பதிலி'களாகவே இப்பண்ணைகள் தொண்டாற்றி வருகின்றன. விவசாயத் துறையில் அரசாங்கம் உருவாக்கும் திட்டங்களை முறையாகச் செயற்படுத்துவதற்கு உறுதுணையாக விளங்குகின்றன இப் பண்ணைகள். எனவே, இப்பண்ணைகள் தங்கள் விருப்பப்படி இயங்குவதென்பது இயலாத காரியமாகும். சோவியத்து நாடு இப்பண்ணைகளைக் கூட்டுறவு முறையில் இயங்கும் கூட்டுறவுப் பண்ணைகளெனக் கூறினாலும், இக்கூற்று விவாதத்திற்குரிய பிரச்சினையாகும். எனினும், ஒரு சில கோணங்களிலிருந்து பார்க்கையில், இப்பண்ணைகள் சில கூட்டுறவுக் கொள்கைகளைப் பிரதிபலிக்கத்தான் செய்கின்றன. இப்பண்ணைகளின் சிறப்பியல்புகளை ஆராய்ந்தால் இந்த உண்மை எளிதில் விளங்கும்.

1. கூட்டுறவுச் சங்கங்களைப் போலவே, இப்பண்ணைகள் ஆண் பெண் இரு பாலாரையும் உறுப்பினர்களாக

அனுமதிக்கின்றன. எனவே, விவசாயிகள் தங்கள்விருப்பம்போல் உறுப்பினராவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். எவர் ஒருவர் தன் நிலத்தையும், ஏனைய உடமைகளையும் பண்ணையிடம் ஒப்படைத்துக் கூட்டுப் பொறுப்பின்கீழ் உழைக்க விரும்புகிருரோ அவர் எளிதில் உறுப்பினராக முடியும். மற்றைய நாடுகளின் கூட்டுறவு அமைப்புகளில் எவரும் உறுப்பினராவதற்குரிய உரிமை (Right) வழங்கப்பட்டுள்ளது. ஆனல், சோவியத்து மக்களோ உறுப்பினராவதற்குரிய ‘சிறப்புரிமை’யைப் (Privilege) பெற்றுள்ளனர்.

2. இந்நாட்டின் கூட்டுப்பண்ணைகள் ஏனைய கூட்டுறவு அமைப்புகளைப் போலவே ஜனநாயக முறையில் நிருவகிக்கப்படுகின்றன. எல்லா உறுப்பினர்களையும் கொண்ட ‘பொதுச் சபை’ ‘இயக்குநர் அவை’யைத் தேர்தல் மூலம் நியமித்து நேர்மையான நிர்வாகத்திற்கு வழி செய்கின்றது. எனவே நிர்வாகத் துறையிலும் இக்கூட்டுப்பண்ணைகள் கூட்டுறவு அமைப்புகளை ஒத்தே நிற்கின்றன.

3. கூட்டுறவு அமைப்புகளைப் போலவே, இக்கூட்டுப் பண்ணைகளும் உறுப்பினர்களின் வேலைக்கேற்ப ஊதியம் வழங்குகின்றன.

இச்சிறப்பியல்புகளைக் கொண்டு, நாம் சோவியத்து நாட்டின் கூட்டுப்பண்ணைகள் கூட்டுறவு பண்ணைகளே என்ற ஒரு முடிவிற்கு வருதல் இயலாது. ஏனெனில், இப்பண்ணைகள் வேறு சில கொள்கைகளில் மாறுபட்டு நிற்கின்றன. இனி, அவற்றை ஆராய்வோம்.

முதலாவதாக, இப்பண்ணைகள் அரசாங்கத்தால் நடத்தப்படும் ‘பதிலி’களேயாகும். நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இப்பண்ணைகள் அரசாங்கத்தால் ஆளப்படுவையாகும். இப்பண்ணைகளின் ‘செயலாட்சி’ (Management) அரசாங்கத்தின் கைகளில்தான் உள்ளது. உதாரணமாக, உற்பத்தி செய்யப்பட வேண்டிய விளை பொருள்கள், உற்பத்தி செய்யும் முறை போன்றவை அரசாங்கத்திஞல்தான் தீர்மானிக்கப்படுகின்றன. இத்தீர்மானங்களைச் செயற்படுத்துவதற்கே இப்பண்ணைகள் கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றன. எனவே, இப்பண்ணைகளில் சொந்த விருப்பத்திற்கு இடமே இல்லை, இதன் விளைவாக, உறுப்பினர்களின் உற்சாகம், அவர்களது கருத்துக்கள், முதலானவை நசுக்கப்படுகின்றன. உறுப்பினர்களது சுதந்திரத்திற்கு அரசாங்கம் பெரியதொரு தடையாக

உள்ளது. இக்கோணத்தில் கூட்டுப்பண்ணைகளைப் பார்த்தால், அவை எவ்வாறு கூட்டுறவு அமைப்புகளிலிருந்து வேறுபட்டு நிற்கின்றன என்பது விளங்கும். ஆனால், தற்போது சோவியத்து நாட்டில் இக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. இக்கூட்டுப் பண்ணைகள் தங்கள் விருப்பப்படி பயிரிட அனுமதிக்கப்படு கின்றன. கட்டாய விற்பனை முறையும் செவ்வனே மாற்றி யமைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாகச் சிறந்த நன்மைகள் ஏற்பட்டு வருகின்றன. கூட்டுப்பண்ணைகளுக்கும் கூட்டுறவுப் பண்ணைகளுக்குமிடையே உள்ள இடைவெளி குறைந்து வருகின்றது.

இரண்டாவதாக, நிலமுள்ள விவசாயிகள் பண்ணைகளில் உறுப்பினர்களாகச் சேருவதற்குரிய சூழ்நிலை உருவாக்கப்படு கின்றது. உறுப்பினராவதற்கு யாரேனும் மறுத்தால் கடுந் தண்டனைக்குள்ளாக வேண்டி இருப்பதால், விவசாயிகள் தண்டனைகளிலிருந்து தப்புவதற்குக் கூட்டுபண்ணைகளை நாடு கின்றனர். மறைமுகமாக விவசாயிகள் உறுப்பினர்களாகுமாறு கட்டாயப் படுத்தப்படுகின்றனர். 'கூட்டுறவு' (Co-operation) 'கட்டாயப் படுத்துதல்' (Compulsion) ஆகிய இரு சொற்களும் எதிரிடையானவை அல்லவா?

மூன்றாவதாக, இக்கூட்டுப்பண்ணைகளின் வெற்றிக்கு அரசாங்கத்தின் ஆதரவே காரணமாகும். இப்பண்ணைகளுக்குத் தேவையான, நிதி வசதிகள் வங்கிகளாலும், 'காப்புறுதிப் பங்கமைப்பு'களாலும் (Insurance Companies) அளிக்கப்படு கின்றன. மேலும், இப்பண்ணைகளை முறையாக வழி நடத்திச் செல்வதில் 'உழும் இயந்திர நிலையங்களும்' (M. T. S.) பெரும் பங்கு பெற்றுள்ளன. பண்ணையின் தலைவர் பெரும்பாலும் அரசாங்கத்தின் விருப்பத்திற்கேற்ப நியமிக்கப்படுகின்றார். எனவே, தலைவர் தேர்தல் பெயரளவில் நடத்தப்படும் ஒரு சடங்கேயாகும். இந்நிலையில், இப்பண்ணைகளைக் கூட்டுறவு அமைப்புகளுடன் ஒத்திட்டுப் பார்ப்பது மிகவும் கடினமான காரியமாகும்.

ஒரு சில சிறப்பியல்புகளால் கூட்டுறவு அமைப்புகள் போல் விளங்கும் சோவியத்து நாட்டின் கூட்டுப்பண்ணைகள் உண்மையில் கூட்டுறவு அமைப்புகளாகா.

கூட்டுப்பண்ணை விவசாயமும் இந்தியாவும்

சோவியத்து நாட்டைப் போலவே இந்தியாவும் ஒரு விவசாய நாடாகும். நம்மில் பெரும்பாலோர் விவசாயத்தையே

நம்பி வாழ்கின்றனர். மக்கள் தொகையோ நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக உயர்ந்து வருகின்றது. விவசாயத் தொழில் 'குறைந்து செல் விளைவு விதி' (Law of Diminishing Returns) கீழ் இயங்குவதாகும். இதன்படி, ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தைக் கொண்டு ஓரளவிற்கு மேல் மகசூலை அதிகரிக்க முடியாது என்ற உண்மையை நாம் எளிதில் அறிந்து கொள்ளலாம். மக்கள் தொகை 'இரட்டிப்பு வீதத்தில்' (Geometric Ratio) பெருகி வருகையில், உணவுப் பெருக்கம் ஒற்றை வீதத்தில் இருக்கின்றது (Arithmetic Ratio). இந் நிலையில், இன்னல்கள் எழுவது இயற்கையே! கூட்டுறவு விவசாயத்தின் மூலம் உணவு உற்பத்தியைக் கணிசமாகப் பெருக்க இயலும் என்பதையுணர்ந்துள்ள நம்நாடு அதற்கான வழி முறைகளில் திட்டங்களைத் தீட்டி செயற்பட்டு வருகின்றது. சோவியத்து நாட்டைப் போலவே நாமும் கூட்டுப்பண்ணைகளை அமைத்தால் என்ன?

தற்போதைய சூழ்நிலையில் கூட்டுப்பண்ணை விவசாயம் நம் நாட்டிற்கு ஏற்றதன்று. நிலம் இயற்கை வழங்கிய சீதனம் என்பதால் அது எல்லோருக்கும் பொது என்ற எண்ணம் ஏற்படுவது எளிதல்ல. குடியானவன் ஒவ்வொருவனும் தன் நிலத்தில் ஆழமான பற்று வைத்துள்ளான். இதை மாற்றுவதென்பது எளிதான காரியமன்று. சோவியத்து நாட்டில் இப் பண்ணைகள் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு முன்பாக எத்தனை இடர்ப்பாடுகள், சிக்கலான பிரச்சினைகள், தோல்விகள் குறுக்கிட்டிருக்கின்றன என்பதை அந்நாட்டு வரலாற்றிலேயே காணலாம். பண்ணைகளில் சேர மறுத்தோர் சிறைக்கு அனுப்பப் பட்டனர். பல தருணங்களில் தீவிர அடக்குமுறை கையாளப் பட்டது. எனவே, சோவியத்து மக்கள் தாங்களாகவே இக் கூட்டுப்பண்ணைகளை அமைத்துக் கொள்ளவில்லை. மக்களின் நலன் கருதி, அரசாங்கத்தால் அமைக்கப்பட்டவையே இக்கூட்டுப் பண்ணைகள்.

சோவியத்து நாடு, பொதுவுடைமைக் கொள்கை அடிப் படையில், 'மார்க்ஸ்' தத்துவத்தை ஒட்டி, ஒரு வித சர்வாதிகாரப் போக்கில் இயங்கும் நாடு. ஆனால் நம் நாடோ, மக்களாட்சி முறையில் இயங்குவது. இங்குத் தனி உரிமை உணர்ச்சிகள் மதிக் கப்படுகின்றன. இந்த அரசியல் அமைப்புடன் திட்ட அடிப்படையில் வளர்ந்துவரும் முதல் நாடு இந்தியாதான் என உறுதியுடன் கூறலாம். ஒவ்வொரு மனிதனும் நம் நாட்டு அரசியலமைப்பின்

மூலம் தகுந்த பாதுகாப்பைப் பெற்றிருப்பதால், கூட்டுப்பண்ணை களை இங்கு அமைப்பது இயலாத காரியமாகும். எனவே, சோவியத்து நாட்டை நாம் கூட்டுப்பண்ணை விவசாய முறையில் பின்பற்ற இயலாத நிலையில் உள்ளோம். மேலும், கூட்டுப் பண்ணைகள் சோவியத்து நாட்டில் வெற்றி பெற்றமைக்குக் காரணம் அரசின் ஆதரவேயாகும். பண்ணைகளுக்குத் தேவை யான கடன் வசதிகள், காப்புறுதி, இயந்திரங்கள் முதலான வற்றை அரசாங்கமே ஏற்பாடு செய்து வருகின்றன. இத்துணை அளவு ஆதரவை நம் அரசாங்கம் அளிப்பதென்பது எளிதான காரியமல்ல. மேலும், சோவியத்து நாட்டில் மக்கள் அனைவரும் விவசாயத்தையே நம்பி வாழவில்லை. பல்வேறு இயந்திரத் தொழில்களிலும் கணிசமாக உழைக்கின்றனர். ஆனால், நம் நாடு தொழில்கள் பெருகாத நிலையில் மண்ணையே நம்பி வாழ வேண்டியுள்ளது. இந்நிலையில் கூட்டுபண்ணைகளை அமைப்ப தெப்படி?

நாம் பெற வேண்டிய பாடம்

முறையான திட்டங்கள் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு அடிகோலியது முதன் முதலில் சோவியத்து நாட்டில்தான், பல ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி, அந்நாட்டுப் பெருங்குடி மக்கள் புதிய பொருளாதார அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர். நம் நாட்டிலும் திட்ட அடிப்படையில்தான் பொருளாதார அமைப்பை உருவாக்கத் தொடங்கியுள்ளோம். எனினும், இவ்விரு நாடுகளுக்கும் அடிப்படையான வேறுபாடுகள் நிரம்ப உண்டு.

சோவியத்து நாடு 'மார்க்ஸ்' சித்தாந்தத்தை ஒட்டி, சர்வாதி காரப் போக்கில் இயங்கும் நாடாகத் திகழ்கின்றது. ஆனால் நம் நாடோ, ஒரு நாடாளு மன்றத்தைத் தேர்தல் மூலம் உருவாக்கி மக்களாட்சி அடிப்படையில் முன்னேறத் தொடங்கி யிருக்கும் நாடாகும். இத்தகைய அடிப்படை வேறுபாடு இருப்பினும், திட்டம் வகுக்கும் முறைகளில் அதிக மாறுதல் இல்லை. திட்டங் களை நிறைவேற்றுவதில்தான் வேறுபாடுகள் உள்ளன. நமது நாட்டில் 'திட்டக்குழு' (Planning Commission) நாடு முழுமைக்கும் சேர்த்து பணியாற்றி வருகின்றது. சில மாநிலங் களில் திட்டக் குழுக்களிருப்பினும் மாநிலங்களுக்கெனத் திட்டங்களை வகுப்பது மத்தியத் திட்டக் குழுவேயாகும். ஆனால், சோவியத்து நாட்டில் நாடு முழுமைக்கும் ஒரு திட்டக் குழு இருப்பது மட்டுமின்றி, ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்

தனியாக திட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சோவியத்து நாட்டில் தீவிர ஆலோசனைகளுக்குப் பிறகே, .முடிவுகள் எடுக்கப் படுகின்றன. தொடக்கத்தில் அனைத்துத் திட்டங்களும் ஐந்தாண்டுத் திட்டங்களாகவே வகுக்கப்பட்டன. பிறகு, இருபது ஆண்டுகளில் என்னென்ன நிறைவேற்றப்பட வேண்டு மென்பதை நீண்ட காலக் கணிக்கில் தீர்மானித்துக் கொண்டு, அந்தத் தீர்மானங்களின் அடிப்படையில் ஏழு ஆண்டுகளுக்கான திட்டம் வகுக்கப்பட்டது. திட்டங்கள் வகுக்கப்படும் போதும், அவை நிறைவேற்றப்படும் போதும் மக்கள் சோவியத்து நாட்டில் பங்கு கொள்கிறார்கள், இதைப் பின்பற்றித்தான், திட்டம் வகுக்கின்ற காலத்திலும் மக்கள் அதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்ற ஏற்பாட்டை நம் நாட்டிலும் செய்துள்ளோம். எனவே, திட்டங்கள் யாவும் 'மக்கள் திட்டங்களாக'த் தற்போது கருதப்படுகின்றன. இனி, சோவியத்து நாட்டிலிருந்து நாம் கற்க வேண்டியவற்றைச் சுருக்கமாகக் காண்போம்.

பொதுவுடைமைக் கொள்கையின் அடிப்படை யில், உற்பத்திச் சாதனங்கள் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாக இருக்கலாகாது. எனவே, விவசாயம். தொழில்கள், வணிகம் ஆகிய எல்லாத் துறைகளுமே அரசாங்கத்தின் உடைமை ஆக்கப்பட்டன. தொடக்கத்தில் எண்ணற்ற இடையூறுகள் ஏற்படவே செய்தன. புதிய முறைகள் கையாளப்படும்போது, பிரச்சினைகள் எழுவது இயற்கை. இருப்பினும், முன்வைத்த காலை பின் வைக்காமல் தொடர்ந்து செயலாற்றி வந்தமையால் சோவியத்து நாடு வெற்றி பெற முடிந்தது.

சோவியத்து நாட்டைப் போலவே நாமும் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை முறையாகத் தீட்டி நிறைவேற்றி விட்டோம். எனினும், பொருளாதார நிலை கணிசமாக உயர வில்லை. திட்டங்களை நிறைவேற்றும் போது மக்களின் ஈடுபாடும். ஆதரவும் கணிசமாக இல்லாததே இதற்குக் காரணம். எனவே, சோவியத்து நாட்டை முன்னோடியாகக் கொண்டு கொள்கைப் பிடிப்புடன் திட்டங்களை நிறைவேற்றுவது அவசியம். நான்காம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அதற்கான வழி முறைகள் ஆராயப்பட்டுச் செய்யப்படுகின்றன.

இந்தியாவைப் போலவே சோவியத்து நாடும் ஒரு விவசாய நாடாகும். எனினும், அந்நாடு பிறதொழில்களைப் புறக்கணித்து விடவில்லை. புரட்சிக்குப் பின்னர், விவசாயமும், தொழில் துறையும் ஒருசேர வளரலாயிற்று. இன்று இரு துறைகளிலுமே

உயர்ந்து நிற்கின்றது. உழவும் தொழிலும் இரு கண்களெனத் திகழ்கின்றன. அறிவியல் துறையில் சோவியத்து நாடு முன்னணியில் நிற்கின்றது என்றால் அதற்குக் காரணம் அந்நாட்டு மக்களின் சலியா உழைப்பேயாகும். இன்றைய இந்தியா போதுமான அளவு தொழில் வளம் பெற்றிருக்கவில்லையாதலால், தொழில் துறையை நாம் உடனே உயர்த்தும் நிலைக்கு ஆளாகியுள்ளோம். எனவே, இப்பொதுவுடமை நாட்டின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வேளாண்மைத் தொழிலையும், பிறதொழில்களையும் ஒரு சேர உயர்த்த முயற்சிகள் எடுத்தாக வேண்டும். அம்முயற்சிகள் ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் எடுக்கப்படுவதால், மக்கள் தங்கள் ஒத்துழைப்பை நல்ல முறையில் நல்க வேண்டும். சோவியத்து நாட்டைப் போலவே இந்தியாவும் இராணுவ பலத்தைப் போதுமான அளவு பெற்றாக வேண்டும், தற்போது நிலவும் சூழ்நிலைகளில் இது மிகவும் அவசியமானதொன்றாகும்.

சோவியத்து நாட்டின் பொருளாதார உயர்விற்கு 'நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்' பெரிதும் உதவியாக விளங்கின. குறிப்பாக, கிராமங்களின் வாழ்க்கைத் தரம் இச் சங்கங்களால் மிகவும் உயர்ந்தது. இந்தியா கிராமங்கள் நிறைந்த நாடாகையால் சோவியத்து நாட்டைப் பின்பற்றி, நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தை மேலும் நன்கு பலப்படுத்திடல் வேண்டும்.

இச்சங்கங்கள் மட்டுமின்றி, கூட்டுறவுப் பண்டகசாலைகளையும் கிராமப் புறங்களில் கணிசமாகத் தொடங்கிட வேண்டும். கூட்டுறவுப் பண்டகசாலைகள் மூலம்தான் கிராம மக்கள் கூட்டுறவுக் கொள்கைகளை நன்கு புரிந்து, கடைப்பிடிக்கத் தொடங்குவார்கள். இக்காரியத்திலும் நாம் சோவியத்து நாட்டைப் பின்பற்றுதல் அவசியம்.

சோவியத்து நாடு கைத்தொழில்களுக்கும் கூட்டுறவு அமைப்புகளை உருவாக்கி, அத்தொழில்களில் ஈடுபட்டிருந்தோரின் பொருளாதார நிலையை உயர்த்தியுள்ளது. இத்துறையிலும் இந்தியா சோவியத்து நாட்டைப் பின்பற்றிச் செயற்பட்டால், கிராமக் கைத்தொழில்கள் பெருகுவதோடல்லாமல் கிராமப் பொருளாதாரமும் சீர்படும்.

9. அயர்லாந்தில் கூட்டுறவு
(Co-operation in Ireland)

வரலாற்றுப் பின்னணி

டென்மார்க்கைப் போலவே அயர்லாந்தும் ஒரு விவசாய நாடாகும். சூழ்நிலைகள் ஏறக்குறைய ஒரே தன்மை வாய்ந்தன வாகவே உள்ளன. ஆயினும், அயர்லாந்தில் ஆடு மாடுகள் வளர்ப்பதற்கும், பால் பண்ணைகள் நடத்துவதற்கும் தேவையான சூழ்நிலைகள் நிரம்ப உள்ளன. இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி விவசாயப் பொருள்களையே நம்பியுள்ளது. உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருள்களை ஏற்றுமதி செய்து அயர் லாந்து நலமுடன் திகழ்கின்றது. மொத்த ஏற்றுமதியில் ஒரு கணிசமான பகுதி இங்கிலாந்து நாட்டிற்குச் செல்கின்றது.

1922-ஆம் ஆண்டு வரை ஒரே நாடாக ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழ் விளங்கிய அயர்லாந்து, பிறகு 'வட அயர்லாந்து' (Northern Ireland), 'சுதந்தர அயர்லாந்து' (Irish Free State) என இரண்டாகப் பிரிந்தது. சுதந்தர அயர் லாந்து மொத்தப் பரப்பளவில் ஆறில் ஐந்து பகுதியைப் பெற்று வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டது. மக்கள் தொகையில் 51% உழவுத் தொழிலில் ஈடுபட்டனர். புல்வெளிகள் நிறைந்த நாடாகையால் இங்கு ஆடு மாடுகள் வளர்க்கவும், பால் பண்ணைகள் நடத்தவும் எளிதாக முடிகின்றது.

வட அயர்லாந்து சுதந்தர அயர்லாந்தைவிட வளமான நாடாகும். மக்கள் தொகையில் 15% வேளாண்மையில் ஈடுபட் டுள்ளனர். நாட்டுப் பிரிவினைக்கு முன்னர் வளர்ந்து வந்த முறையிலேயே பிரிவினைக்குப் பின்னரும் 'கூட்டுறவு' இவ்விரு நாடுகளிலும் அவ்வப்போது ஏற்பட்ட சட்டங்களுக்கேற்ப தழைத்

தோங்கி வளர்ந்தது. டென்மார்க்கைப் போலவே அயர்லாந்திலும் நிலைமை இருப்பினும் கூட்டுறவுத் தன்மை (Co-op. Character), தொழிற் கல்வி (Technical Education) ஆகிய இரு துறைகளிலும் அயர்லாந்து பின்தங்கியே இருந்தது.

அந்நிய நாட்டினரின் ஆதிக்கத்தின் கீழ் இருத்தலால் ஏற்படும் தீய விளைவுகளை இந்தியர்களாகிய நாம் நன்கறிவோம். ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த நம் நாட்டைப் போலவே, அயர்லாந்தும் இங்கிலாந்தின் பிடியிலேயே நீண்ட நாள் சிக்கித் தவித்தது: அந்நியர்கள் ஆட்சியில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வழியேது? அயர்லாந்தின் பொருளாதாரம் சீர்குலைந்து கடை நிலைக்குத் தள்ளப்பட்டது. உற்பத்தித் தொழில்கள், வணிகம், முதலிய நலன் பயக்கும் துறைகள் பெரிதும் சீரழிந்து போயின. 1824-ஆம் ஆண்டிற்குப் பிறகு உற்பத்தித் தொழில்கள் சற்றே முன்னேற்றம் அடைந்தாலும் மக்களின் பொருளாதார நிலைமை உயரவே இல்லை. விவசாயத்தில் மக்களின் பின்தங்கிய நிலையும், வறுமையுமே இதற்குக் காரணங்களாகக் கருதப்பட்டன. வேறு தொழில்களே சரியாக வளராமையால் ஒவ்வொருவரும் 'தங்கள் தங்களது நிலத்தையே பெரிதும் நம்பி வாழவேண்டியிருந்தது. சிறு சிறு பண்ணைகளில் தங்களது குடும்பத்தையே காப்பாற்ற இயலாத நிலையில் குறைந்த வருவாயுடன் விவசாயிகள் குத்தகைக்காரர் களாக உழைக்கலாயினர். இயற்கை அன்னையின் நன்கொடை யான விளைநிலத்திற்கு அவர்கள் அளித்து வந்த தொகையும் அதிகரிக்கவே, அவர்களது இன்னல்கள் பெருகத்தலைப்பட்டன. இந்நிலையில் அரசாங்கம் 'தடையிலா வாணிபக்கொள்கை'யையும் கடைப் பிடித்தமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பே இல்லாமற் போயிற்று, விவசாயிகள் நில மேலாளர்களின் கையில் சிக்குண்டு சீரழிந்து போகலாயினர்.

நீண்ட தொரு போராட்டத்திற்குப் பிறகு, 1881-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 'அயர்லாந்து நிலச் சட்டம்'(Irish Land Act) உழவுத் தொழிலின் தொல்லைகளை அறவே நீக்காவிடினும், விவசாயிகளுக்குச் சற்று நிம்மதியை வழங்கியது. விளைநிலத் திற்கு அவர்கள் செலுத்திவந்த தொகைக்கு ஒரு உச்சவரம்பை இச்சட்டம் ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து வேறு சில சட்டங்களும் 1903-ஆம் ஆண்டு அயர்லாந்து அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டன. அவை மூலப் குத்தகைக்காரர்களாகக் குமுறிக் கொண்டிருந்த விவசாயிகள் அந்தந்த நிலங்களுக்கு அவர்களே உரிமையாளர்களாக ஆக்கப்பட்டனர். இத்தகைய

சூழ்நிலையில் தான் கூட்டுறவு முறையில் விவசாயத்தை வளப் படுத்த இயலும் என்ற எண்ணம் அயர்லாந்தில் உதித்தது. கூட்டுறவுக் கொள்கைகள் உழவுத் தொழிலில் கையாளப்பட்டு வெற்றி நோக்கி நடைபோடத் தொடங்கியது அயர்லாந்து.

இருப்பினும், வேறு சில தொல்லைகள் அயர்லாந்தில் இல்லாமல் இல்லை. இந்நாட்டு மக்கள் கூட்டுறவின் தன்மை யையும், நன்மையையும் சரியாக உணரவில்லை. அவர்களிடையே கூட்டுறவு மனப்பான்மை சரியாக மலரவில்லை. அயர்லாந்து அரசாங்கமும் கூட்டுறவுக் கொள்கைகளை மக்களிடையே பரப்ப யாதொரு முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. இதன் விளை வாகக், கூட்டுறவு இயக்கத்தின் தலைமை சரியாக அமையாமல், அதன் வியத்தகு வலிமை, ஒளி முதலான ஒப்புயர்வற்ற குணங்கள் பிற நாட்டவர்களால் சுட்டிக் காட்டப்பட்டன.

திரு. 'இராபர்ட் ஓவன்' (Robert Owen) என்ற தலைசிறந்த கூட்டுறவாளரின் சலியா உழைப்பினால் 'இராலஹிவ்' (Ralahive) என்னும் இடத்தில் 'கூட்டுறவுப் பொது நல சங்கம்' அமைக்கப் பட்டுச் செவ்வனே செயலாற்றி வந்தது. வேளாண்மை வளர்ச் சிக்கு உறுதுணையாக நின்றது இச்சங்கம். அயர்லாந்தின் வரலாற்றிலேயே இதுதான் முதல் முயற்சியாகத் தோற்றுவிக்கப் பட்ட கூட்டுறவுச் சங்கமாகும். தோற்றுவிக்கப்பட்ட இரண்டாண்டுகளுக்குப் பின்னர் இச்சங்கம் தோல்வி கண்டது. எனினும், அயர்லாந்தில் பின்னர் அமைந்த வலிமை யான கூட்டுறவு இயக்கத்திற்கு இச்சங்கம் நல்லதொரு முன்னோ டியாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

அயர்லாந்தின் வரலாற்றிலேயே குறிப்பிடத்தக்க நிகழ்ச் சிகள் பல உண்டென்றாலும் அவற்றில் 'கூட்டுறவு' மூலமாக நடைபெற்ற நிகழ்ச்சிகள்தான் காலத்தால் அழியாமல் நிற் கின்றன. 1874-ஆம் ஆண்டு முதல் 1880-ஆம் ஆண்டு வரை அயர் லாந்து விவசாயிகளின் இன்னல்கள் கணக்கிலடங்காமல் பெருகின. பசி, பஞ்சம் எங்கும் தலைவிரித்தாடின. விவசாயிகள் 'கொம்பீன்மென்' (Gombeen Men) என்ற ஒரு வகை வட்டித் தொழிலாளர்களுக்குக் கடன் பட்டே வாழ்ந்து வந்தனர். இவ் வட்டித் தொழிலர்கள் வணிகத்திலும் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் வணிகர்களாக மட்டுமின்றி, விவசாயிகளின் பொருளா தார நிலையை நன்கு தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அதிக வட்டிக்குக் கடன் கொடுத்து அவர்களின் அளவில் குறைந்த செல்வத்தைக் கணிசமாகக் குறைத்துக் கொண்டிருந் தனர். விவசாயிகள் வேறு வழியின்றி இவர்களது பிடியில் நன்கு

சிக்கிக் கொண்டிருந்தனர். தேவையேற்படும் போதெல்லாம், அயர்லாந்து விவசாயிகள் இவ்வட்டித் தொழிலாளர்களையே நாடினர். எனவே, இவர்களது இன்னல்கள் குறைவதற்குப் பதிலாகப் பெருமளவில் பெருகின.

இதுமட்டுமின்றி, வேறு சில பிரச்சினைகளும் அயர்லாந்தை அல்லற்பட வைத்தன. குறிப்பாக வெண்ணெய், பன்றி இறைச்சித் தொழில்களில் கடும் போட்டி உள்நாட்டில் மட்டு மின்றி, அதிக அளவு ஏற்றுமதி செய்யப்படும் இங்கிலாந்து நாட்டிலும் ஏற்பட்டது. எனவே, அயர்லாந்தின் ஏற்றுமதி இத் துறையிலும் குறையவே, விவசாயிகள் வறுமையில் வாடினர். இந் நிலையில்தான், இத்தொழில் துறையில் பல மாற்றங்கள் ஏற் பட்டன. குறிப்பாக, இயந்திரங்கள் அதிக அளவில் உற்பத் தியைப் பெருக்குவதற்கெனப் பயன்படுத்தப்பட்டன. பொருளா தார வசதியின்றித் தவித்த விவசாயப் பெருங்குடி மக்கள் இவ் வகை இயந்திரங்களைத் தங்கள் தொழில்களில் பயன்படுத்த முடிய வில்லை. எனவே, பல வகையிலும் அவர்களது முன்னேற்றம் தடைப்பட்டது.

விடிவெள்ளியின் தோற்றம்

இந்த இக்கட்டான சூழ்நிலையில்தான் 'சர் ஹொரேஸ் ப்ளங்கட்' (Sir Horace Plunkett) என்னும் அறிஞர் அயர் லாந்தில் தோன்றினர். ஒரு சாதாரணக் குடியில் 1854-ஆம் ஆண்டு பிறந்த இவர் வறுமையில் வாடிய தன் தாய்த் திரு நாட்டை மாற்றியமைக்கப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார். அவர் தனது கல்லூரி வாழ்க்கையின் போதே கூட்டுறவின் நன் மைகளை உணர்ந்து தன் எண்ணங்களுக்கு உருக் கொடுத்து வந்தார். கல்விகற்கும் போதே இங்கிலாந்துக் கூட்டுறவு இயக் கத்தை முன்னோடியாகக் கொண்டு அக் கொள்கைகள் மீது ஆழமான, அழுத்தமான பற்று கொண்டார். வலிமையான கூட்டுறவு இயக்கம் ஒன்றினல்தான் அயர்லாந்தின் பொருளா தாரத்தைச் சீர்படுத்த இயலும் என்பதை நன்குணர்ந்த இவர், அதைச் செயலாக்க அல்லும் பகலும் உழைத்தார். தனது உழைப்பில் வெற்றியும் நாளடைவில் கண்டார். அயர்லாந்தில் பின்னர் அமைந்த வளமான கூட்டுறவு இயக்கத்திற்கு அவரது அரும்பணிதான் வழிகாட்டியாக விளங்கியது. எனவேதான், 'அயர்லாந்தின் கூட்டுறவுத் தந்தை' என இன்றும் அவர் பாராட்டப்படுகிருர்.

கூட்டுறவின் தோற்றமும் வளர்ச்சியும்

இனி, அவர் எவ்வாறு கூட்டுறவு இயக்கத்தை அயர்லாந்தில் வேரூன்றச் செய்தார் என்பதைக் காண்போம். முதன் முதலில் 'ப்ளங்கட்' தன் தந்தையின் பண்ணையிலேயே ஒரு கூட்டுறவுப் பண்டகசாலை'யை உழவர் சமூகத்திற்கு உதவும் பொருட்டுத் தோற்றுவித்தார். அவர் 'இங்கிலாந்தின் துய்ப்போர் கூட்டுறவுப் பண்டகசாலை'யை (England Consumers' Co-op. Stores) மாதிரியாக வைத்துக் கொண்டு தனது பண்டகசாலையை அமைத்தார். முக்கியத் தேவைப் பொருள்களை பண்டகசாலையில் விற்பனை செய்யத் தொடங்கினர். ஆனால், அவரது முயற்சிகள் எதிர்பார்த்த அளவு வெற்றியடையவில்லை. போட்டியும் எதிர்ப்புணர்ச்சியுமே அதன் தோல்விக்குக் காரணங்களாக இருந்தன. தோல்வியால் மனம் தளராத அவர் டென்மார்க் கூட்டுறவு இயக்கத்தில் பற்றுக் கொண்டு உழைப்பால் உழவர் சமூகத்திற்கு எவ்வாறு கூட்டுறவு இயக்கத்தின் மூலம் நன்மை செய்ய முடியும் என்று தீவிரமாகச் சிந்திக்கலானர்.

இத் தருணத்தில்தான் அயர்லாந்து தரமான வெண்ணெய்ப் பொருள்களை உற்பத்தி செய்து வந்த 'கூட்டுறவு டென்மார்க்' குடன் கடுமையாகப் போட்டியிட்டமையால், நிலைமையைக் கட்டுப் படுத்த முடியாமல் தத்தளித்தது. ஹொரேஸ் ப்ளங்கட் இச் சூழ் நிலையைத் தனது எண்ணங்களுக்கும் திட்டங்களுக்கும் சாதக மாகப் பயன்படுத்த எண்ணிக் கூட்டுறவிற்கான விதையை விதைக்க ஏற்பாடுகள் செய்யத் தொடங்கினர். 1889-ஆம் ஆண்டு உழவர் சமூகத்திற்கென விவசாயச் சங்கங்களை உருவாக்க நட வடிக்கைகளை மேற்கொண்டார். மக்களிடையே கூட்டுறவு உணர்ச்சியை ஊட்டிக் கூட்டுறவு அமைவதற்கான அறைகூவலையும் விடுக்கத் தொடங்கினர். அவரது தளராத முயற்சியின் பலனாக மக்களிடையே கூட்டுறவு இயக்கத்தின் தன்மைகளும், நன்கு பரவத் தொடங்கின.

''சிறப்பாகப் பயிரிடுதல்—முறையான வாணிபம்—நல்ல முறையில் வாழ்தல்'' என்றே எங்கும் முழங்கினர். கூட்டங்கள் அமைத்து தன் எண்ணங்களை மக்களுக்குத் துல்லியமாக எடுத்துக் காட்டினர். தன் கொள்கைகளை யாவரும் புரிந்து கொள்ளும் பொருட்டுப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டார். இதன் விளைவாக, 1889-ஆம் ஆண்டு, முதல் 'கூட்டுறவு வெண் ணெய்த் தொழிற்சாலை' அமைக்கப்பட்டது. தோற்றுவிக்கப்பட்ட இரண்டாண்டுகளில் இதன் எண்ணிக்கை 16-ஆக உயர்ந்தது.

டென்மார்க்கைப் போலவே அயர்லாந்தும் தரமான பொருள்களை உற்பத்தி செய்ய உதவும் அறிவியல் கருவிகளைக் கையாளத் தொடங்கினர். 'ப்ளங்கட்டின்' சலியாத உழைப்பின் காரணமாக இந்தக் கூட்டுறவு வெண்ணெய்த் தொழிற்சாலைகள் 60-ஆக 1894-ஆம் ஆண்டில் பெருகியது. இவ்வெண்ணெய்த் தொழிற் சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட வெண்ணெய் நன்கு சோதனை செய்யப்பட்டு, பிறகு சந்தைகளில் விற்பனை செய்யப் பட்டது.

இது மட்டுமின்றிக் கூட்டுறவுக் கொள்கைகளை அடித்தளமாக அமைத்து ஒரு சில விவசாயச் சங்கங்களும் அமைக்கப்பட்டன. இச்சங்கங்கள் விவசாயிகளின் தேவைகளுக்கேற்பச் செயல்பட்டு வந்தன. குறிப்பாகத் தரமான விதைகள், உரங்கள் முதலானவை மொத்தமாகக் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. இதன் காரணமாக, உழவுத் தொழில் பெரும் பயன் பெற்றது. 1892-ஆம் ஆண்டு இக்கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் ஒன்று சேர்ந்து ஒரே குடையின் கீழ் "அயர்லாந்து கூட்டுறவுப் பதிலாண்மைச் சங்கம்." (Irish Co-operative Agency Society) என்ற பெயரில் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யும் பணியை மேற்கொண்டன. இவ்வாறாக, 1894-ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்தே அயர் லாந்தில் கூட்டுறவு இயக்கம் நன்கு வேரூன்றத் தலைப்பட்டது. இச்சூழ்நிலையில்தான், சில விநியோகப் பண்டகசாலைகளும், கடன் வழங்கும் சங்கங்களும், விவசாய வங்கிகளும் கூட்டுறவு முறையில் தோன்றலாயின.

இவ்வாறாகக் கூட்டுறவு இயக்கம் அயர்லாந்தில் வேரூன்றத் தலைப்பட்டபோது, இவ்வியக்கத்தின் பெருமைகளையும் அதனால் விளையும் நன்மைகளையும் நாடறியச் செய்ய நல்லதொரு பிரச்சார அமைப்பு இல்லாக் குறையை இந்நாட்டுக் கூட்டுறவாளர்கள் உணரலாயினர். இத்தகைய விளம்பரப் பணியை இங்கிலாந்து தொழில் இயக்கத்தின் ஓர் அங்கமான 'கூட்டுறவுச் சங்கம்' செவ்வனே செய்து வந்தது. இதன் விளைவாகப் பல பூசல்கள் தோன்றத் தொடங்கின. இங்கிலாந்தின் 'மொத்த விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்' (Co-operative wholesale Society of England) அயர்லாந்தின் பெரும்பகுதி வெண்ணெயைப் பெற்று வந்தது. அயர்லாந்தில் அமைக்கப்பட்ட 'அயர்லாந்துக் கூட்டுறவுப் பதிலாண்மைச் சங்கம்' விநியோகத் துறையில் பல புரட்சிகரமான மாற்றங்கள் செய்ய விரும்பியது. இதன் பயனாக, இங்கிலாந்தின் மொத்த விற்பனைச் சங்கத்துடன் கடும் போட்டி

ஏற்பட்டது. இங்கிலாந்தின் வலிமையான இம்மொத்த விற்பனைச் சங்கம் தனக்குரிமையான பால் பண்ணைகளை அயர்லாந்தில் நிறுவத் தொடங்கியது. சாதாரணமாகத் தொடங்கிய இப் போட்டி கடும் போட்டியாக மாறவே, இங்கிலாந்து கூட்டுறவுச் சங்கத்துடன் அயர்லாந்து கொண்டிருந்த நல்லுறவு அறவே அறுந்து போயிற்று.

இச்சூழ்நிலையை நன்கு பயன்படுத்திக் கொண்டு 1894-ஆம் ஆண்டு ஹொரேஸ் ப்ளங்கட் 'அயர்லாந்து விவசாய அமைப்புச் சங்கத்'துடன் தொடர்பு கொண்டு சிறப்பான கூட்டுறவு இயக் கத்தை அமைப்பதற்கான தக்க வழிமுறைகளை வகுக்கத் தொடங்கினர். அதன்படி, நல்லதொரு கூட்டுறவு அமைப்பு அமைக்கப்பட்டு, அயர்லாந்தின் வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்டப்பட்டு, நல்ல முறையில் அவை செயல்படுத்தப்பட்டன.

தொடக்கத்தில், உறுப்பினர்களிடமிருந்து பெற்ற சந்தாத் தொகை (Subscriptions), நன்கொடை ஆகியவற்றைக் கொண்டு செய்து வந்த பணிகளை அந்த ஐக்கிய அமைப்பு நாளடைவில் அரசாங்கத்தின் நிதி உதவியையும் பெற்றுச் செய்யலாயிற்று. இதன் தொடர்ச்சியாக, 1896-ஆம் ஆண்டு அயர்லாந்து அரசு வேளாண்மைக்காகவும், தொழில் நுணுக்கத்திற்காகவும் ஒரு தனித் துறையை உருவாக்கி மக்களுக்குக் கூட்டுறவு முறைகளை விளக்கமாகக் கற்பிக்கத் தொடங்கியது. மேலும், அயர்லாந்து 'விவசாய அமைப்புச் சங்கத்தின்' பணிகளுக்கும் உறுதுணையாக விளங்கியது. சர் ஹொரேஸ் ப்ளங்கட் இத்துறையின் முதல் வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு முறையான நிருவாகத்திற்கு அடி கோலினர். கூட்டுறவுப் பிரச்சாரப் பணியும் இத்துறையின் பல்வேறு கடமைகளில் ஒன்ருகக் கருதப்பட்டு, செவ்வனே நடை பெறவும் தொடங்கியது.

அயர்லாந்து வேளாண்மை அமைப்புச் சங்கம் இத்துடன் நில்லாமல் பல்வேறு புதிய கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கவும் பெரு முயற்சி எடுத்துக் கொண்டது. பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் அயர்லாந்தின் பொருளாதாரத்தை உயர்த்தும் அளவிற்கு அமைக்கப்பட்டன. குறிப்பாக, 'முட்டை விற்பனைச் சங்கங்கள்' (Eggs' Marketing Societies) கூட்டுறவு அடிப் படையில் நிறுவப்பட்டன. 1894-ஆம் ஆண்டு தரமான விதைகள், உரங்கள், இயந்திரங்கள் (விவசாயக் கருவிகள்) முதலானவற்றை மொத்தமாகக் கொள்முதல் செய்து தன்னுடன் இணைந்துள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்

வதற்கென அமைக்கப்பட்ட 'அயர்லாந்து கூட்டுறவு விவசாயப் பதிலாண்மைச் சங்கம்' (Irish Co-op. Agricultural Agency Soc.) 1898-ஆம் ஆண்டு 'அயர்லாந்து விவசாய மொத்த விற்பனைக் கழகம்' (Irish Agricultural wholesale Society) என மாற்றியமைக்கப்பட்டது. தனது பதிலாண்மைத் தொழிலை விடுத்து, இச்சங்கம் பொது வணிகத் துறையில் தனது முழுக்கவனத்தையும் செலுத்தியதன் விளைவாக, உழவுத் தொழில் நன்கு வளர்ச்சி பெறலாயிற்று. மெள்ள மெள்ளக் கூட்டுறவுப் பால் பண்ணைகளும், விநியோகச் சங்கங்களும் வலிவுடன் வேரூன்றத் தொடங்கின. அவைகளின் எண்ணிக்கையும் கணிசமாக உயரலாயிற்று. எனினும், மொத்தக் கூட்டுறவுச் சங்கங்களுடன் (C. W. S.) இருந்து வந்த போட்டியும், பூசலும் உடனே மறைந்து விடவில்லை. அச்சங்கங்கள் கலைக்கப்பட்டு அயர்லாந்தின் உள் நாட்டுப் பால் பண்ணைகளுடன் இறுதியாக இணைக்கப்படும் வரை அத்தொல்லை தொடர்ந்தே வந்தது.

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் அயர்லாந்து கூட்டுறவு இயக்கம் மிகவும் சீர்கேடு அடைந்தது. புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட பல கூட்டுறவுச் சங்கங்கள் தனித்து நிற்க இயலாமல் கலைக்கப்பட்டன. இலாபம் தரத்தக்க நல்ல வியாபாரம் இல்லாமல் இந்தச் சங்கங்கள் கடைசியில் தோல்வியைத் தழுவின. இந் நிலையில் முதல் உலகப் போர் ஏற்படவே, எஞ்சியிருந்த மற்றக் கூட்டுறவுச் சங்கங்களும் பாதிக்கப்படலாயின. குறிப்பாகக் 'கூட்டுறவுக் கடன் சங்கங்கள்' மிகவும் பாதிக்கப்பட்டன. வேறு சில சங்கங்களும் மறைந்தொழியும் நிலையை அடைந்தன. ஆயினும் 'கூட்டுறவு விவசாயச் சங்கங்கள்' நன்கு செழித்து வளர ஆரம்பித்தன. போரின் காரணமாக எல்லா நாடுகளும் உணவு உற்பத்தித் துறையில் அதிகத் தேவைகளைப் பெற்றிருந்தமையே இச்சங்கங்களின் வள்ர்ச்சிக்குக் காரணமாக அமைந்தன. அயர்லாந்து அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளும், பொருளாதார நெருக்கடியும், போக்குவரத்து இடையூறுகளும் 'கூட்டுறவுப் பால் பண்ணை'களை மிகவும் பாதித்தன என்றாலும், அப்பொருள்களின் விலை ஏற்றத்தைத் துணைக்கொண்டு ஏற்பட்ட இழப்பைச் சரி செய்து கொண்டன இப்பால் பண்ணைகள்.

மேலும், அயர்லாந்தின் வரலாற்றில் முதன் முதலாகப் 'பொது நோக்குச் சங்கங்கள்' (General Purpose Societies) என்ற சிறந்த கூட்டுறவு அமைப்புகள் இத்தருணத்தில்தான் தோற்றுவிக்கப்பட்டன. சுமார் 300 சங்கங்கள் ஒருங்கிணைந்து ஒரு 'கூட்டுறவுப் பண்டகசாலை'யாக மாற்றியமைக்கப்பட்டன. இப்

பண்டகசாலை வெண்ணெய், முட்டை, பன்றி இறைச்சி முதலான முக்கியப் பொருள்களுக்கு 'விற்பனையேற்பாடு' செய்து சிறந்த சேவை செய்யத் தொடங்கியது.

முதல் உலகப் போர் முடிந்தவுடன் மேலும் பல சோதனைகள் கூட்டுறவு இயக்கத்திற்கு ஏற்பட்டன. வியாபாரமந்தம், பொருள் களின் விலைவீழ்ச்சி ஆகிய காரணங்களே போரின் காரணமாகப் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் வீழ்ச்சிக்கு உறுதுணையாக நின்றன. எனினும், கூட்டுறவுப் பால் பண்ணைகள் தங்கள் திறமையான நிருவாகத்தின் காரணமாகப் பெரும் அழிவிலிருந்து தப்பிப் பிழைத்தன. பேரிழப்புக்கு அவை ஆளாக வில்லை.

நாட்டுப் பிரிவினையும் அதனால் கூட்டுறவு இயக்கத்தில் ஏற்பட்ட விளைவுகளும்

இங்கிலாந்து நாட்டின் பிடியிலேயே நீண்ட நாள் சிக்கித் தவித்த அயர்லாந்து 1921-ஆம் ஆண்டு விடுதலை பெற்றது. அடிமைத்தலையில் கட்டுண்டு இருக்கையில் ஒரே நாடாக விளங்கிய அயர்லாந்து விடுதலை பெற்ற பின்னர், 'வட அயர் லாந்து' (Northern Ireland or Ulster) 'சுதந்திர அயர்லாந்து' (Irish Free State or Eire) என இரண்டாகப் பிரிந்தது. இப் பிரிவினையால் நாட்டின் மொத்த அமைப்பில் பலவித மாற்றங்கள் ஏற்பட்டன. இனி, இந்நாட்டுப் பிரிவினையால் விளைந்த முக்கிய விளைவுகளைக் காண்போம்.

முதலாவதாக, அயர்லாந்தின் விவசாய வளர்ச்சிக்கு உறு துணையாகத் தோற்றுவிக்கப்பட்ட 'அயர்லாந்து விவசாய அமைப்புச் சங்கம்' (Irish Agricultural Organisation Soc.) நாட்டுப் பிரிவினையின் காரணமாக அரசாங்கம் அளித்து வந்த பொருளாதார உதவியை இழக்க நேரிட்டது. எனவே, இச் சங்கம் நாட்டுப் பிரிவினைக்குப் பின்னர் பொருளாதார நெருக் கடியில் சிக்குண்டது. ஆயினும், மெள்ள மெள்ள சுதந்தர அயர்லாந்தின் பொருளுதவி கொண்டு தன்னை வலுப்படுத்திக் கொண்டது.

இரண்டாவதாக, நாட்டுப் பிரிவினையைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்புகளும் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக விளங்கின. போக்குவரத்துத் துறையிலும் இடையூறுகள் ஏற்பட்டதால் வட அயர்லாந்தில்

உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சுதந்திர அயர்லாந்தில் சிக்குண்ட 'அயர்லாந்து விவசாய அமைப்புச் சங்கம்' (I. A. O. S.) அளித்து வந்த ஆலோசனைகளையும், உதவிகளையும் இழக்க நேரிட்டது.

மேலும், இச்சுதந்திர அயர்லாந்து விவசாய 'அமைப்புச் சங்கம்' வட அயர்லாந்திடமிருந்து பெற்றுவந்த பொருளுதவியையும் இழக்கநேரிட்டதால், அது வட அயர்லாந்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளித்துவந்த நிதி உதவியையும் நிறுத்த வேண்டியதாயிற்று. இதன் விளைவாகத் தொடர்ந்து வந்த தொடர்பு அறுந்து போகவே, வட அயர்லாந்தில் கூட்டுறவுச் சங்கங்களைக் கண்காணிக்கும் பொருட்டு 'வட அயர்லாந்து விவசாய அமைப்புச் சங்கம்' (Ulster Agricultural Organisation Soc.) என்றதொரு அமைப்பு கூட்டுறவு அடிப்படையில் தோன்றியது.

கூட்டுறவுப் பால் பண்ணைகளும் அவைகளின் வளர்ச்சியும்

அயர்லாந்து கூட்டுறவு இயக்கம் பால் பண்ணைகள், விவசாயச் சங்கங்கள், கோழிப் பண்ணைகள் ஆகிய மூன்று துறைகளிலும் ஒரு சேரத் தழைத்து வந்தாலும், கணிசமான முன்னேற்றம் பால் பண்ணைகளில் தான் ஏற்பட்டது. அயர்லாந்து கூட்டுறவு இயக்கத்திற்கே உயிர்நாடியாக விளங்கியது கூட்டுறவுப் பால் பண்ணைகளே. அந்நாட்டின் பொருளாதார மாற்றத்திற்கே இப்பால் பண்ணைகளே காரணமாக அமைந்தன என்றால் அது மிகையாகாது.

அயர்லாந்தின் தெற்குப் பகுதியில்தான் பால் பண்ணைகள் எண்ணிக்கையில் அதிகமாகத் தோன்றின. புல்வெளிகள் அதிகமாகத் தெற்கு அயர்லாந்தில் இருந்ததே இதற்குக் காரணமாகும். 1929-ஆம் ஆண்டு அயர்லாந்தின் தெற்குப் பகுதியில் மட்டும் 231 பால் பண்ணைகள் தோன்றி இருந்தன. வட அயர்லாந்தில் 64 பால் பண்ணைகள் மட்டுமே இருந்தன. பால் பண்ணைகள் யாவும் போதுமான மூலதனத்தைப் பெற்றுப் பண்ணைகளைச் சிறப்புற நடத்தி வந்தன. மேலும் 'வரையறுக்கப்பட்ட பொறுப்பின்' (Limited Liability) அடிப்படையில்தான் பால்பண்ணைகள் இயங்கின. அவைகள் பெரும்பாலும் வெண்ணெய் உற்பத்தியில் தான் தங்கள் கவனத்தைச் செலுத்தின. பால் விற்பனையும் செய்து வந்தன வேறு சில கூட்டுறவுப் பால் பண்ணைகள். நிதிப் பற்றுக் குறை ஏற்படும் போது இப் பால் பண்ணைகள் 'கூட்டுப் பங்கு'

வியாபார சங்கங்களிடமிருந்தோ (Joint-Stock Companies), 1927-ல் தோற்றுவிக்கப்பட்ட 'அயர்லாந்து விவசாயக் கடன்' கூட்டுறுவிடமிருந்தோ' (Irish Agricultural Credit Corporation) தேவையான தொகையைக் கடனாகப் பெற்று நிலைமையைச் சரிப் படுத்திக் கொண்டன. பொதுவாக அயர்லாந்துப் பால் பண் ணைகள் மூன்று வகைகளாக விளங்கின. இனி, அவற்றைப் பற்றி ஆராய்வோம்.

(1) மத்தியப் பால் பண்ணை (The Central Creamery) :

அளவிலும், செயல்திறனிலும் பெரிய இப் பால்பண்ணை தனது உறுப்பினர்களிடமிருந்து நேரிடையாகவே பாலைப் பெரும் அளவில் பெறுகின்றது. தனக்குச் சொந்தமான கட்டிடத் திலேயே அப் பாலைக் கொண்டு எல்லாச் செய்முறைகளையும் செய்கின்றது. மத்தியப் பால் பண்ணையின் கிளைகளும் பாலை அங்கத்தினர்களிடமிருந்து சேகரிப்பதில் உறுதுணையாக இருக் கின்றன. முதலில், சேகரிக்கப்பட்ட பாலை நன்கு சோதனை செய்து பிறகு அதன் எடையும் பார்க்கப்படும். பிறகு பாலி லிருந்து அதன் சக்தி அல்லது சாரம் பிரிக்கப்படுகின்றது. இவ்வாறு சக்தி பிரிக்கப்பட்ட அல்லது பாலேடு எடுக்கப்பட்ட பால் அதனை அளித்தவர்களுக்கே திருப்பித் தரப்படுகின்றது. உற்பத்தி செய்யப்பட்ட வெண்ணெய் உள்ளூர் சந்தையிலேயே விற்பனை செய்யப்படுகின்றது.

(2) மத்தியச் சங்கமும் அதன் கிளைகளும் :

தேவையான அளவு பாலைச் சேகரிக்க முடியாத போது மத்தியப் பால் சங்கம் பல கிளைகளை உருவாக்கி அவை மூலம் தனது தேவையை நிறைவேற்றிக் கொள்கின்றது. சிலசமயம் கிளைகளே தங்களிடமுள்ள இயந்திரக் கருவிகளைக் கொண்டு சேகரித்த பாலிலிருந்து பாலேடைப் (Cream) பிரித்தெடுத்து பிறகு அதைத் தலைமைச் சங்கத்திற்கு அனுப்பிவைக்கின்றது. எனவே இது பாலேட்டைப் பாலிலிருந்து பிரித்தெடுக்கும் சிறு சங்கங்களாகப் பணியாற்றி வந்தது.

(3) பாலேட்டைப் பிரித்தெடுக்கும் தனியான அமைப்புகள் :

சில சமயங்களில் சேகரிக்கப்பட்ட பாலிலிருந்து பாலேட்டைப் பிரித்துப் பதப்படுத்துவதற்கென்றே தனியாகக் கூட்டுறவுச் சங்கங்கள் முறையாகப் பதிவு செய்யப்பட்டுச் செயலாற்றி வருவதும் உண்டு. இவ்வாறு பிரிப்பதற்கென்றே அமைக்கப்படும் இவ்வகைச் சங்கங்கள் அதற்குத் தேவையான கருவிகளையும்

பெற்று முறையாக அச்செயலைச் செய்து வருகின்றன. அவ்வாறு பிரித்தெடுக்கப்படும் பாலின் உயிர்ச்சத்துப் பொருளை விற்பனை செய்யும் பொருட்டு இச்சங்கங்கள் சில மத்தியப் பால்பண்ணை களுடன் ஒப்பந்தம் செய்து கொள்கின்றன. எனவே இவ்வகைச் சங்கங்கள் மத்தியப் பால் பண்ணைகளுக்குத் துணையாகச் செய லாற்றி வருகின்றன. இனி, எவ்வாறு அரசாங்கம் இவ்வகைப் பால் பண்ணைகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தது எனக் காண்போம்.

அயர்லாந்து அரசாங்கத்தின் பணி

நாட்டு விடுதலைக்குப் பின்னர் சுதந்திர அயர்லாந்தில் செய லாற்றி வந்த பால் பண்ணைகளும், மற்றக் கூட்டுறவுச் சங்கங்களும் மிகவும் சீர்கேடு அடைந்தன. பல பால் பண்ணைக் கட்டிடங்கள் சமூக விரோதிகளால் கொளுத்தப்பட்டன. சீரழிந்த பால் பண்ணைகளையும், விவசாய வளர்ச்சிக் கழகங்களையும் சீர்ப்படுத்த அரசாங்கம் முழுமுயற்சி எடுத்துக் கொண்டது.

வெண்ணெயின் சிறந்த தரமே விற்பனைக்கு அடிப்படையாக அமையும் என்பதை நன்குணர்ந்த அயர்லாந்து அரசு அது குறித்துச் சட்டங்களை இயற்றி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்பட்டது. தீவிர ஆலோசனைக்குப் பின்னர், 1924-ஆம் ஆண்டு வெண்ணெயின் தரத்தை உயர்த்துவதற்கென்றே ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. ஏற்றுமதி செய்யப்படும் வெண்ணெயின் தரம் நன்கு சோதனை செய்யப்படுவதற்கு இச்சட்டம் வழிகோரியது. ஏற்றுமதிக்கென்றே தனியான வியாபாரக் குறியும் (Brand) ஏற்படுத்தப்பட்டது. முட்டைத் தொழிலுக்கும் இது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பாலின் தரத்தைப் பொறுத்தே அதன் விலையும் நிர்ணயிக்கப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகளால் அயர்லாந்தின் ஏற்றுமதிப் பொருளான வெண்ணெய் சீரும் சிறப்பும் பெற்றது. சீரிய முறையில் விற்பனை ஏற்பாடு செய்வதற்கென 'மத்திய விற்பனை ஏற்பாட்டுப் பதிலாண்மை' (Central Marketing Agency) என்றதொரு கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்த அயர்லாந்து அரசு பல முயற் சிகள் எடுத்தும் அவ்வமைப்பு உருவாகாத காரணத்தால் வெண்ணெய் விற்பனையில் கடும் போட்டி நிலவியது. கூட்டுறவுப் பால் பண்ணைகள் தங்களிடையே நிலவிய போட்டியால் மட்டு மின்றி, தனியார் துறையில் இயங்கி வந்த பால் பண்ணைகளாலும் சீர்கேடடையத் தலைப்பட்டன. எனவே, இப்போட்டியை நீக்கவும் அயர்லாந்து அரசு தீவிர நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதாயிற்று.

கடும் போட்டியால் தத்தளித்த கூட்டுறவுப் பால்பண்ணைகளைக் காக்கும் பொருட்டு அரசாங்கம் தீவிர ஆலோசனைக்குப் பிறகு, 1927-ஆம் ஆண்டு ஒரு 'பொது விற்பனைச் சங்கத்தைத்' (Public Company) தோற்றுவித்தது. அக்கம்பெனியின் நிதி நிலையும் வலுவானதாக இருந்தமையால் அது செவ்வனே செயல்பட முடிந்தது. இவ்வமைப்பின் முக்கிய நோக்கம் யாதெனில் சரியான நிர்வாகத்தைப் பெருமலிருக்கும் தனியார் பால் பண்ணைகளையும், கூட்டுறவுப் பால் பண்ணைகளையும் ஒரு சேரத் தன்னுள் அடக்கி மாற்றி அமைத்தலே ஆகும். அதாவது, தொடர்ந்து நட்டமே கொண்டிருக்கும் தனியார் பால் பண்ணைகளை இக்கம்பெனி தனதுடமையாக்கி மீண்டும் அவற்றைச் சரியான நிர்வாகத்தில் கூட்டுறவு அடிப்படையில் மாற்றியமைக்க முழு முயற்சி எடுத்துக் கொண்டது. 1930-ஆம் ஆண்டு ஏற்பட்ட மந்த நிலையால் (Depression) இவ்வமைப்பு முழு வெற்றி பெருவிடினும் கூட்டுறவுப் பால் பண்ணைகளுக்குப் பெரும் தொல்லை அளித்து வந்த தனியார் பால் பண்ணைகள் பெரிதும் மறைவதற்குக் காரணமாக இருந்தது என்பதை எவரும் மறுக்க இயலாது.

அயர்லாந்து அரசாங்கம் மற்றுமொரு வழியிலும் கூட்டுறவுப் பால் பண்ணைகளுக்குப் பெரும் உதவி அளித்து வந்தது. பால் பண்ணைகளின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் புல் வெளிகளே மூலகாரணம் என்பதை நாம் நன்கறிவோம். கோடை காலத்தில் புல்வெளிகள் செழிப்புடன் வளருவதால், பால் உற்பத்தி அதிக அளவில் செய்யப்பட்டது. இதையொட்டி, வெண்ணெய் உற்பத்தியும் பெருகவே, அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டது. கோடைக்காலம் முழுவதுமே எல்லாப் பால் பண்ணைகளும் ஓய்வின்றி இயங்கின.

இதற்கு மாருக, மாரிக் காலத்தில் புல்வெளிகளின் வளம் குறைவது வாடிக்கையாகிவிடவே, வெண்ணெய் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படும், கோடையில் ஏற்றுமதி செய்யும் அயர்லாந்து மாரிக் காலத்தில் வெண்ணெயை இறக்குமதி செய்யும் நிலைக்கு வந்துவிடுவதால், அரசாங்கம் இறக்குமதி செய்யப்படும் வெண்ணெய் மீது 'காப்பு வரி' (Tariff) விதித்தது. எனவே, இறக்குமதியின் அளவு குறைய வேண்டியதாயிற்று. இதன் பயனுக, அயர்லாந்து கோடையில் உற்பத்தி செய்யப்படும் வெண்ணெயைக் குளிர் சாதன வசதிகள்மூலம் வருடம் முழுவதும் நன்கு பத்திரப்படுத்தி வைக்கும் முறைகளைக் கையாளத் தொடங்கியது. பிறநாடுகள் எடுத்துக் கொண்ட பிறநடவடிக்கை

களும் அயர்லாந்து இத்துறையில் மேலும் வளர்ச்சி பெறுவதற்கு உறுதுணையாக அமைந்தன.

அயர்லாந்து அரசாங்கம் சில 'மத்திய விற்பனை ஏற்பாட்டு அமைப்புகளை' உருவாக்க எத்துணை அளவு முயன்றும், உள்ளூரைச் சேர்ந்த பால் பண்ணைகள் மத்திய அமைப்புகளின் தலையீட்டை விரும்பாததால் அரசின் எண்ணம் ஈடேறவே இல்லை. எனினும், அவ்வப்போது விற்பனைத் துறையில் அப்பால் பண்ணைகளைச் சரியான முறையில் அயர்லாந்து அரசு வழி நடத்திச் சென்லது.

அயர்லாந்துப் பால் பண்ணைகள் டென்மார்க் கூட்டுறவுப் பால் பண்ணைகளை முன்னேடியாகக் கொண்டு அமைக்கப் பட்டமையால், இவ்விரு கூட்டுறவு இயக்கங்களிலும் பல ஒற்றுமைகளை நாம் காணலாம். தோற்றம், வளர்ச்சி முதலிய வகைகளில் இவ்விரு நாடுகளும் ஒத்துவிளங்கினுலும் அவைகளுக் கிடையே சில வேற்றுமைகளும் இல்லாமல் இல்லை. இவ்விரு நாடுகளின் இயற்கைச் சூழ்நிலைகளே இவ்வகை வேற்றுமை களுக்குக் காரணமாக அமைகின்றன.

குறிப்பாக, அயர்லாந்தில் நல்ல வளமான புல்வெளிகள் நிரம்பியிருந்தமையால் ஆடு மாடுகள் வளர்ப்பதற்குரிய சூழ்நிலை இயற்கையாகவே அமைந்திருந்தது. மேலும் மற்ற பயிர்களைப் பயிரிடும் அளவுக்கு மண்வளம் தரமானதாக இல்லாமலிருந்த காரணத்தால் விவசாயிகள் மற்ற பயிர்களைப் பற்றிப் பெரிதும் கவனம் செலுத்த இயலாதவர்களாக இருந்தனர். தேவையான செழிப்பு நிறைந்த புல் அபரிமிதமாகக் கிடைத்தமையால் ஆடு மாடுகளுக்கென வேறு தீவனம் தேவையில்லாமலிருந்தது அயர் லாந்து நாட்டில். ஆனல் டென்மார்க்கைச் சேர்ந்த ஒரு சராசரி விவசாயியின் தேவைகள் பலதிறப்பட்டவையாக உள்ளன. தேவைகள் பெருகும்போது அவைகளைப் பெறும் துறைகளையும் மனிதன் பெருக்கித்தானே ஆகவேண்டும்? எனவே டென் மார்க்கில் 'அளிப்புச் சங்கங்களும்' (Supply Societies) பால் பண்ணைகளுடன் இணைந்து வளரத் தொடங்கின. ஆனல் இவ் வகைச் சங்கங்கள் அயர்லாந்தில் தோன்றவில்லை. தோன்றிய சில சங்கங்களும் வளர்ச்சி அடையவில்லை.

எனவே, கூட்டுறவுப் பால் பண்ணைகளே விவசாயிகளுக்குப் பல வகையிலும் பாதுகாப்புக் கொடுக்க வேண்டியிருந்தது. சில தருணங்களில் கூட்டுறவுப் பால் பண்ணைகளே பதிலாண்மைச்

சங்கங்களாகச் செயல்பட்டு வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தேவையான பொருள்களைக் குறிப்பாக ஆடு மாடுகள் வளர்ப்பதற்குத் தேவையானவற்றை வழங்கி வந்தன. பொதுவாகத் தேவையானவற்றை வழங்கவல்ல பெரியதொரு பண்டகசாலையாக இப்பண்ணைகள் இயங்கின. இவ்வகைச் செயல் முறையால் பொருளாதார இழப்புகள் பல சமயங்களில் ஏற்படாமல் தவிர்க்கப்பட்டன. இவ்வகைத் தொல்லைகள் டென்மார்க்கில் இல்லை. விவசாயிகளுக்குத் தேவையானவற்றை அளிப்பதற்கென்றே வெவ்வேறு கூட்டுறவு அளிப்புச் சங்கங்கள் செயலாற்றி வந்தன,

இனி அயர்லாந்தின் 'கூட்டுறவுக் கடன் சங்கங்கள்' பற்றி (Co-op. Credit Societies) ஆராய்வோம்.

கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

எத்துணைப் பெரிய வியாபார விற்பன்னராயினும். செல்வச் செழிப்பு நிறைந்த வணிகராயினும், சில தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் நிதிப்பற்றுக்குறை காரணமாகக் கடன்பட்டே தொழிலை நடத்திச் செல்ல வேண்டியிருக்கும். எனவே பொருளாதார நெருக்கடி ஏற்படும் போதெல்லாம் கடன் தொகையே கைகொடுத்து உதவுகின்றது என்பதை நாம் நன்கறிவோம்.

இத்தத்துவத்தின் அடிப்படையில்தான் அயர்லாந்தில் உழவுத்தொழில், பால்பண்ணைகள், முட்டை உற்பத்திச் சங்கங்கள் போன்ற அமைப்புகளுக்குப் பொருளுதவி செய்யும் பொருட்டுக் கடன் வழங்கும் சங்கங்கள் கூட்டுறவு அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டன.

அயர்லாந்து கடன் வழங்கும் சங்கங்கள் ஜெர்மனிய நாட்டில் தோன்றிய 'ரைபீசன்' சங்கங்களை மாதிரியாகக் கொண்டே முதன் முதலில் தோற்றுவிக்கப்பட்டன. (Raiffeisen Model) நல்ல நோக்கோடு இச்சங்கங்கள் தொடங்கப்பட்டிருந்தாலும் அவை வெற்றிகாண முடியாமல் ஒரு வழியாக முடிவில் கலைக்கப்பட்டன. இச்சங்கங்களின் தோல்விக்குப் பல காரணங்கள் இருப்பினும் சில முக்கியமான காரணங்களை மட்டும் இங்கு ஆராய்வோம்.

முதலாவதாக, இச்சங்கங்களின் நிதிநிலை போதுமான அளவிற்கு இருக்கவில்லை. ஒரு 'மத்திய வங்கி' (Central Bank) தொடங்கப்படாமலேயே இச்சங்கங்கள் அமைக்கப்பட்டமையால்

ஒரு கணிசமான முன்னேற்றம் ஏற்படவில்லை. உள்ளூர்வாசிகளின் ஆதரவையோ அவர்களது சேமிப்பையோ பெற முடியவில்லை. எனவே நிதிநிலை மந்தமான காரணத்தால் விரைவில் இச்சங்கங்கள் மறைந்து போயின.

இரண்டாவதாக, அயர்லாந்தில் தோற்றுவிக்கப்பட்ட 'அளிப்புச் சங்கங்களும்' (Supply Societies) கடன் வழங்கும் சங்கங்களின் தோல்விக்குக் காரணமாக அமைந்தன. இவ்வகை அளிப்புச் சங்கங்கள் தேவையான பொருள்களை முறையாக விற்பனை செய்து வந்தன. இப்பொருள்களை வாங்குவோர் கடனாகப் பெற்று வந்தமையால், கடன் வழங்குவதற்கென்றே அமைக்கப்பட்ட இவ்வகைச் சங்கங்கள் நிலைபெற முடியாமல் போயின.

மூன்றாவதாகக் கூட்டுறவுப் பால் பண்ணைகளும் அயர்லாந்து கடன் வழங்கும் சங்கங்களின் தோல்விக்குப் பொறுப்பேற்று நிற்கின்றன. இப்பால் பண்ணைகள் தங்களது உறுப்பினர்களுக்குத் தேவையான நிதி உதவியைத் தங்களது உபரித் தொகையிலிருந்து அளித்து வந்தமையால் கடன் சங்கங்களுக்கு வேலையும் தேவையும் இல்லாமற் போயிற்று.

கடைசியாக, இக்கூட்டுறவுக் கடன் சங்கங்களைச் சரியான முறையில் நிர்வகிக்கத் திறமையான 'நிருவாகர்கள்' (Managers) இல்லாத காரணத்தாலும், இச்சங்கங்கள் செவ்வனே நடைபெறவில்லை.

கூட்டுறவுப் பால் பண்ணைகள் தங்களது உறுப்பினர்களுக்குக் 'குறுகிய காலக் கடனும்' (Short-Term Loan), 'நீண்ட காலக் கடனும்' (Long-Term Loan) கொடுத்து அவர்களது தேவைகளை நிறைவு செய்தன. உறுப்பினர்கள் ஆடு மாடுகளுக்குத் தேவையான தீவனம் போன்றவற்றை வாங்குவதற்கெனக் குறுகிய காலக் கடனைப் பெறுகிறார்கள். பெரும்பாலும், இவ்வாறு வழங்கப்படும் கடன் தொகையை உறுப்பினர்கள் தங்களது ஆடு மாடுகளின் மூலம் பெறும் பாலை அக்கடன் வழங்கும் சங்கங்களுக்கு வழங்கியே ஈடுகட்டி விடுகின்றனர். ஆடு மாடுகள் வாங்குவதற்கென வழங்கப்படும் 'நீண்டகாலக் கடன்' தொகையை உறுப்பினர்கள் பல மாதங்களில் அடைத்து விடுகின்றனர்.

மற்றும் சில கூட்டுறவுப் பால் பண்ணைகள் பால் சம்பந்தப்பட்ட பொருள்களுடன் முட்டை, பன்றி இறைச்சி முதலான

பொருள்களின் விற்பனை ஏற்பாட்டையும் கவனித்துக் கொள்கின்றன.

எனவே அயர்லாந்து கூட்டுறவுப் பால் பண்ணைகள் பல நோக்குச் சங்கங்களாகப் பணிபுரிந்து பொருளாதார வளர்ச்சிக்கே ஆணிவேராக நிற்கின்றன.

இரண்டாம் உலகப் போரும் அதன் விளைவுகளும்

இரண்டாம் உலகப் போரும் அயர்லாந்தின் வேளாண்மை பெரிதும் சீர்கேடடையைக் காரணமாக அமைந்தது. போரின் காரணமாக உணவுப் பொருள்கள் இறக்குமதியும் தடை செய்யப் பட்டதால் நிலைமையைச் சீர்ப்படுத்துவதற்காகக் கோதுமை உற்பத்தி அதிகமாக்கப்பட்டது. கோதுமை உற்பத்தி எதிர் பார்த்தபடி இரு மடங்காக அதிகரித்தது. ஆனால் ஆடு மாடுகள் எண்ணிக்கை போரின் காரணமாகக் குறையவில்லை. ஆனால் முட்டை உற்பத்தி, பன்றி இறைச்சி உற்பத்தி போன்றவை பெரிதும் பாதிக்கப்பட்டன. வெண்ணெய், பால் உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டமையால், பலகூட்டுறவுப் பால் பண்ணைகள் கலைக்கப்பட்டன. எனவே அயர்லாந்தின் பொருளாதாரமே மிகவும் தாழ்ந்த நிலைக்கு வரவேண்டியதாயிற்று. வீழ்ந்துவிட்ட பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்த அரசாங்கம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலவாகும். பால், வெண்ணெய் முதலான பொருள்களை அதிகமாக உற்பத்திசெய்யும் பொருட்டு அரசாங்கம் ஆடு மாடுகளின் தரத்தையும் உயர்த்துவதற்குப் பாடுபட்டது. செயற்கை முறையில் ஆடு மாடுகளைக் கருத்தரிக்க வைக்கும் முறையைக் குறைந்த அளவில் அரசாங்கம் பிரபலப்படுத்தியது. மேலும் அரசாங்கத்தின் தூண்டுதலின் பேரில் கூட்டுறவுப் பால் பண்ணைகள் பன்றி வளர்ப்பு, உருளைக்கிழங்கு உற்பத்தி முதலான இலாபம் தரத்தக்க தொழில்களிலும் தங்கள் கவனத்தை திருப்பின. மாட்டுத் தீவன உற்பத்தியும் பெரும் அளவில் பெருகியது. 1946–ஆம் ஆண்டு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு 'குழு' (Committee) வேளாண்மைத் தொழிலின் பல்வேறு பிரச்சினைகளையும் நன்கு ஆராய்ந்து முடிவில் தனது விளக்கமான அறிக்கையை அரசாங்கத்திடம் சமர்ப்பித்தது. அவ்வறிக்கையின் அடிப்படையில் அரசாங்கம் உழவுத் தொழிலின் மேன்மைக்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. பால் பண்ணைகளே அயர்லாந்தின் முதுகெலும்பாக விளங்கியமையால் அவைகளை நல்ல முறையில் திருத்தி அமைக்கவும் அவற்றை மேம்பாடு அடையச் செய்யவும் பலவிதத் திட்டங்கள் தீட்டப்பட்டன.

'ஐந்தாண்டுத் திட்டங்கள்' தீட்டப்பட்டு அவை நல்ல முறையில் செயல்பட்டமையால், பால்பண்ணைகள் பெரிதும் பயனடைந்தன.

இனி வட அயர்லாந்தில் (Northern Ireland) எவ்வாறு கூட்டுறவு இயக்கம் வளர்ச்சி அடைந்தது எனக் காண்போம்.

நாம் முன்பு கூறியது போல், நாட்டுப் பிரிவினைக்குப் பின்னர் ஒன்றாக விளங்கிவந்த கூட்டுறவு இயக்கமும் இரண்டாகப் பிரிந்து வளர்ந்து வந்தது. நாட்டுப் பிரிவினைக்கு முன்னர் அயர்லாந்தின் கூட்டுறவு இயக்கத்திற்கே உறுதுணையாக விளங்கி வந்த 'அயர் லாந்து விவசாய அமைப்புச் சங்கம்' (I. A. O. S.) சுதந்திர அயர் லாந்தின் கையில் சிக்குண்டமையால் வட அயர்லாந்து அச் சங்கத்திடமிருந்து அதுவரை பெற்றுவந்த எல்லா உதவிகளையும் இழக்க வேண்டியதாயிற்று. தனக்கென அதுபோன்ற ஒரு சங்கம் தேவை என்பதை நன்குணர்ந்த வட அயர்லாந்து ஒரு 'கூட்டுறவு விவசாய அமைப்புச் சங்கத்தை'த் (Ulster Agricultural Organisation Society) தோற்றுவித்தது. பிரிவினைக்குப் பின்னர், வட அயர்லாந்தில் இயங்கிவந்த கூட்டுறவுப் பால் பண்ணைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. வட அயர்லாந்து அரசும் இது குறித்நு முறையான நடவடிக்கைகள் எடுக்கவில்லை. பலவித இன்னல்களையும், இழப்பையும் பொருட்படுத்தாமல் இயங்கிவந்த கூட்டுறவுப் பால் பண்ணைகள் இரண்டாம் உலகப் போர் தொடங்கியதும் கலைக்கப்பட்டன. போரின் காரணமாக ஏற்பட்ட விளைவுகளால் வட அயர்லாந்தில் இயங்கிவந்த 54 பால் பண்ணைகளில் 44 கலைக்கப்பட்டன. போரினுல் ஏற்பட்ட விளைவு களைக் கண்டு மனந் தளராமல், அயர்லாந்து அரசு ஒரு தொழிற் சாலையைத் தொடங்கியது. பாலை நன்கு உலர வைத்து, தரமான பால் பவுடரை இத்தொழிற்சாலை உற்பத்தி செய்தது. இந்த உற்பத்திப் பொருள் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் விளைவாகப் பல கூட்டுறவுப் பால் பண்ணைகள் மறைந் தொழிந்தன. போர் முடிவடைந்தவுடன் மீண்டும் இப்பால் பண்ணைகள் தோன்றின என்றுலும் அவை நல்ல வளர்ச்சியைப் பெற இயலவில்லை. கூட்டுறவுச் சங்கங்களைச் சிறந்த முறையில் கண்காணிப்பதற்கென்று அமைக்கப்பட்ட 'உல்ஸ்டர் விவசாய அமைப்புச் சங்கம்', தன் பணிகளை முறையாகச் செய்ய இயல வில்லை. தற்போது, வட அயர்லாந்து அரசாங்கம் 'பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை' (Multi-Purpose Societies) உருவாக்கப் பெரு முயற்சி செய்து வருகின்றது—வெற்றியும் கண்டு வருகிறது.

இரண்டாம் உலகப் போரின் போது அரசாங்கத்தால் தோற்றுவிக்கப்பட்ட 'அரசாங்கப் பால் பவுடர் தொழிற்சாலை'

இன்றும் செயல்பட்டு வருகின்றது. இத்தொழிற்சாலைக்கும் போருக்குப் பின்னர் மீண்டும் தலைதூக்கி வளர்ந்துவந்த கூட்டுறவுப் பால் பண்ணைகளுக்குமிடையே அதிக அளவில் பாலைப் பெறுவதில் கடும் போட்டி நிலவியது. அரசாங்கத்தின் தலையீட்டின் பேரில் இப்போட்டி தவிர்க்கப்பட்டு பால் வழங்கு பவர்கள் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டனர். கூட்டுறவுப் பால் பண்ணைகளுக்குப் பால் வழங்குபவர்கள் அத்தொழிற்சாலைக்குப் பால் வழங்கக் கூடாது எனவும் அப்பால்பவுடர் தொழிற்சாலைக்கு பால் விநியோகம் செய்பவர்கள் இப்பால் பண்ணைகளுக்குப் பால் வழங்குதல் கூடாது எனவும் ஒரு சிறந்த ஏற்பாடு செய்யப் பட்டமையால் கடுமையாக நிலவிய போட்டி எளிதாகத் தவிர்க்கப் பட்டது. கூட்டுறவுப் பால் பண்ணைகளும் செழித்து வளரத் தொடங்கின. 1952-ஆம் ஆண்டு வட அயர்லாந்தில் மட்டும் 21 கூட்டுறவுப் பால் பண்ணைகள் இயங்கி வந்தன. 1956-ஆம் ஆண்டு, 13 கூட்டுறவுச் சங்கங்கள் பால் விநியோகமும் செய்யத் தொடங்கியமையால் அவைகளின் நிதிநிலையும் கணிசமாக உயரத் தொடங்கியது. மற்றவை வெண்ணெய் விற்பனையில் மட்டும் தங்களது கவனத்தைச் செலுத்தி வந்தன. 1957-ஆம் ஆண்டு மேலும் சில கூட்டுறவுப் பால் பண்ணைகள் வேறு சில வியாபாரத் துறையிலும் ஈடுபடத் தொடங்கின. முட்டை விநியோகம், மோட்டார் (Motor) பொறி இயல் போன்ற நலன் பயக்கும் துறை களிலும் செயல்படத் தொடங்கின. மோட்டார் வாகனங்களும் பால் விநியோகத்திற்கு பயன்படுத்தப்பட்டன.

1952-ஆம் ஆண்டு, 'வட அயர்லாந்து விவசாய அமைப்புச் சங்கமும்' (U.A.O.S.), 'விவசாயிகள் சங்கமும்' (Ulster Farmers' Union) ஒன்று சேர்ந்து ஒரு கம்பளி உற்பத்தி தொழிற்சாலையை (Ulster Wool Growers' Ltd.) உருவாக்கின. இவ்வமைப்பு, நாட்டில் கிடைத்த மொத்த கம்பளியில் 50%-ஐ விற்பனை செய்யத் தொடங்கியது. 1956-ஆம் ஆண்டு, இவ்வமைப்பு 33 இலட்சம் பவுன்கள் (£ 53 Lakhs) மதிப்புள்ள கம்பளியை விற்பனை செய் துள்ளது. வட அயர்லாத்தில் நல்ல உயர்தர ஆடுகள் இருந் தமையால், இக்கம்பளி உற்பத்தி பல மடங்காக உயரலாயிற்று.

பொதுவாக, வட அயர்லாந்தில் கூட்டுறவு இயக்கம் நல்ல வலிமை வாய்ந்த இயக்கமாக தொடங்கப்படவில்லை. இதை யொட்டிக் கணிசமான வளர்ச்சியைப் பெற இயலவில்லை. கூட்டுறவுச் சங்கங்களைக் கண்காணிக்கும் பொருட்டு அமைக்கப் பட்ட விவசாய அமைப்புச் சங்கம் அயர்லாந்து அரசால் நன்கு ஆதரிக்கப்படாமையால், கூட்டுறவுச் சங்கங்களின் நிருவாகம் செம்மையடையவில்லை.

வட அயர்லாந்து, சுதந்திர அயர்லாந்து ஆகிய இரு பகுதி களிலுமே கூட்டுறவு இயக்கம் தற்போது நன்கு வளர்ந்து

வருகின்றது. உற்பந்தி, கொள்முதல், விற்பனை போன்ற எல்லாத் துறைகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது இயங்கி வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கு அயர்லாந்து அரசாங்கம் எல்லா உதவிகளையும் தற்போது அளித்து வருகின்றது. இனி, கூட்டுறவுச் சங்கங்களின் தற்போதைய நிலையைப் புள்ளி விவரங்கள் மூலம் காண்போம்.

கூட்டுறவுச் சங்கங்களின் தற்போதைய நிலை

1968-ஆம் ஆண்டு, அயர்லாந்துக் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியைக் காட்டும் புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள்

கூட்டுறவுச் சங்கத்தின் வகை	எண்ணிக்கை	உறுப்பினர் எண்ணிக்கை	பங்கு மூலதனம் £	மொத்த விற்பனை £
பலநோக்குப் பால் பண்ணைகள்	168	55,352	1,736,663	99,500,000
கால்நடைகள் அங்காடி	30	18,265	365,478	46,073,587
இறைச்சி பக்குவப் படுத்தும் நிலையம்	3	14,215	1,598,581	16,726,280
மொத்த விற்பனைச் சங்கங்கள்	3	480	253,407	12,773,082
விவசாயப் பண்டக சாலைகள்	59	17,060	104,555	6,213,600
தோட்ட வேளாண்மைச் சங்கங்கள்	15	9,776	260,752	1,589,567
மீன்பிடிப்புச் சங்கங்கள்	18	678	9,350	709,044
பன்றி வளர்ப்புச் சங்கங்கள்	14	3,852	108,326	704,232
கால்நடை வளர்ப்புச் சங்கங்கள்	4	81	36,485	513,743
கைத்தொழில் சங்கங்கள்	9	6,238	6,375	86,188
பண்ணைச் சேவைச் சங்கங்கள்	6	347	2,515	6,961
பிற சங்கங்கள்	17	1,218	22,862	548,477
மொத்தம்	346	127,563	4,505,349	185,456,284

பால் வெண்ணெய்—பாலேட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள்
(Creamery Socs.)

இன்றும் இக்கூட்டுறவுச் சங்கங்களே அயர்லாந்தில் எண்ணிக்கையில் அதிகமாக உள்ளன. 1966-ஆம் ஆண்டு, இக் கூட்டுறவுச் சங்கங்கள் 239 காலன் (Gallon) பாலைக்கையாண்டன. உறுப்பினர்களுக்கு 21 மிலியன் பவுன் மதிப்புள்ள பண்ணைப் பொருள்களை விற்பனை செய்துள்ளன. 1963-ஆம் ஆண்டு 49 மிலியன் பவுன் மொத்த விற்பனையாகக் கணக்கிடப் பட்டுள்ளது. 1968-ஆம் ஆண்டில் மொத்த விற்பனை 99 மிலியனாக உயர்ந்து காணப்படுகின்றது. 1966-ஆம் ஆண்டு, இக்கூட்டுறவுச் சங்கங்கள் 22 மிலியன் பவுன் 'வருமான மிகுதி' யாகப் (Surplus) பெற்றுள்ளன. 'நேப் அறிக்கை'யின்படி (Knaap Report) அயர்லாந்தில் தற்போது கூட்டுறவுப் பால் பண்ணைகளின் 'இணைப்பு' (Amalgamations) குறித்து நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய 'நிறுவன இணைப்பு'ச் செயல்களில் ஈடுபடுவதற்கென அயர்லாந்து அரசு 'அயர்லாந்து விவசாய அமைப்புச் சங்கத்திற்கு' (I. A. O. S.) போதிய அதிகாரங்களை வழங்கியுள்ளது. இதன் விளைவாக, இக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 158-லிருந்து 19-ஆகக் குறைந்துள்ளன.

அளிப்புச் சங்கங்கள்
(Supply Socs.)

1967-ஆம் ஆண்டு, அயர்லாந்தில் 62 'அளிப்புச் சங்கங்கள்' இயங்கின. மொத்த விற்பனை 4·3 மிலியன் பவுன். 1966-ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் ·5 மிலியன் பவுன் இலாபமாகப் பெற்றன. கோழித் தீவனம், கால் நடைத் தீவனம் முதலானவை முக்கியமாக விற்பனை செய்யப்பட்டன. 'அயர்லாந்து விவசாய அமைப்புச் சங்கம்' இச்சங்கங்களுக்கு ஆய்வுக் கூடங்களையும் அளித்துள்ளது.

கூட்டுறவுக் கால்நடைச் சங்கங்கள்

1968-ஆம்ஆண்டு இச்சங்கங்களின் எண்ணிக்கை 30 ஆகும். தேசிய உற்பத்தியில் 24% இச்சங்கங்களால் உற்பத்தி செய்யப்படு கின்றது. இச்சங்கங்களின் பணிகளை நெறிப்படுத்துவதற்கென ஒரு 'மந்தியக்குழு' (Central Committee) 1957-ஆம் ஆண்டு

அமைக்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கி வருகின்றது இம்மத்தியக் குழு.

தற்போது, எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களையும் சிறந்த முறையில் வழி நடத்திச் செல்வது ‘அயர்லாந்து விவசாய அமைப்புச் சங்கமேயாகும்’. இச்சங்கத்தின் நிலையான சொத்துக்களின் பேரில் அயர்லாந்து அரசு மானியங்கள் (Grants) வழங்குகின்றது. புதிய தொழிற்சாலைகளைக் கூட்டுறவின் அடிப்படையில் தொடங்குவதற்கும் அரசு நிதி உதவிகள் செய்கின்றது.

அரசாங்கத்தின் உதவியோடு மக்களின் நன்மதிப்பையும் பெற்றிருக்கும் அயர்லாந்துக் கூட்டுறவு இயக்கம் வலிமையாகத் திகழ்வதில் வியப்பேதுமில்லை.

10. ஜப்பானில் கூட்டுறவு இயக்கம்
(Co-operative Movement in Japan)

ஜப்பானைப் பற்றி

பொருளாதார நிபுணர்களுக்கு இன்றைய ஜப்பான் ஒரு பெரும் புதிர்! உலகிலேயே அதிகமாகத் துணிவகைகளை ஏற்று மதி செய்யும் நாடு ஜப்பான். ஆனால் அதற்குத் தேவையான பஞ்சு முழுவதையும் அது பிற நாடுகளிலிருந்துதான் இறக்குமதி செய்துக்கொள்கிறது. இரும்பு உற்பத்தித் தொழிலில் ஆசியா விலேயே முதன்மையாக இருப்பதுடன், மற்ற மேல் நாடுகளுடன் போட்டி போடக்கூடிய அளவிற்கு மிக்க வளர்ச்சி பெற்றுள்ளது ஜப்பான். 300 இலட்சம் டன்னுக்கும் (Tons) அதிகமான இரும்பு உருக்கு இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றது. 'பிரித் தானிய' நாட்டைவிட (Britain) இரும்பு உற்பத்தியில் உயர்ந்து உள்ள நாடாகும் இது. எனினும் இதற்குத் தேவையான இரும்புக் கனியும், நிலக்கரியும் இந்நாட்டில் கிடைக்கவில்லை. எனவே, மூலப் பொருள்களைப் பிற நாடுகளிலிருந்து தான் இறக்குமதி செய்து கொள்கிறது. அலுமினிய உற்பத்தியும் ஜப்பானில் நன்கு உயர்ந்து காணப்படுகின்றது. ஆனால் அலு மினியக் கனியும் அங்கு இல்லை; அக் கனியும் வெளிநாட்டி லிருந்தே தருவிக்கப்படுகின்றது. மண்ணெண்ணெய் ஊற் றுக்கள் இந்நாட்டில் கிடையாது, எனவே, தேவையான எண்ணெய் முழுவதும் இறக்குமதி செய்யப்படுகின்றது. சுருங்கக் கூறின், இந்நாட்டிற்குத் தேவையான உப்பும் கூட சுமார் 75 சத விகிதம் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. இந்நிலையில், பொருளாதார வளர்ச்சியில் ஜப்பான் மேல் நாடு களுக்கு எவ்விதத்திலும் குறைந்து காணப்படவில்லை. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தே காணப்படுகின்றது. இன்றைய ஜப்பான் பொருளாதார வல்லுனர்களுக்கு ஒரு புதிர்!

ஜப்பான் ஆசியாக் கண்டத்தைச் சார்ந்ததாகும். இக் கண்டப் பகுதியில், பசிபிக் கடலில் அமைந்துள்ள ஒரு தீவுக் கூட்டம் இந்நாடு! நான்கு முக்கியத் தீவுகளுடன் ஆயிரக் கணக் கான சிறு சிறு தீவுக் கூட்டம் ஒன்றுபட்டு இந்நாடு உருவாக்கப் பட்டுள்ளது. பெரும்பாலான பகுதி மலைகளால் சூழப்பட் டுள்ளது. மொத்த நிலப்பரப்பில் 80% மலைப் பாங்கான இடம் எனக் கணக்கிடப் பட்டுள்ளது. உயர்ந்த மலைகளின் காரண மாக, அடர்ந்த காடுகள் உள்ளன. இந்நாட்டில் மலைகளும் அதிகம்; மழையும் அதிகமாகப் பெய்கின்றது. அதிக மழை காரண மாகவே, நிலம் வளம் பெற்றுத் திகழ்கின்றது. இந்நாட்டில் எரி மலைகளும் அதிகமாகக் காணப்படுகின்றன. இங்கு 192 எரி மலைகள் உள்ளன. நோயைக் குணப்படுத்தவல்ல வெந்நீர் ஊற்றுகளும் இங்குண்டு. உலகிலேயே சிறந்த இயற்கைக் காட்சிகள் நிறைந்த நாடாகும் இது.

உலகில் மக்கள் தொகை மிகுந்த நாடுகளில் ஜப்பானும் ஒன்ருகும். ஏறக்குறைய பாகிஸ்தானும் ஜப்பானும் ஒரே மக்கள் தொகையுள்ள நாடுகளாகும், ஆனல் ஜப்பானின் நிலப் பரப்பு மிகவும் குறைவாக உள்ளது. அதிலும் மக்கள் வாழ்கின்ற பகுதி மிகவும் சிறியதாகும். எனவே, இது நெருக்கடி நிறைந்த நாடாகும். இந்நாடு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டது.

இரண்டாம் உலகப் போரின் போது அமெரிக்காவின் குண்டு வீச்சிஞல் மிகவும் பாதிக்கப்பட்ட நாடாகும் இது' இதனல் இங்கு பேரழிவு ஏற்பட்டது. இப்படிப் பாதிக்கப்பட்ட இந்த நாடு, 25 ஆண்டுகளுக்குள் பெரிய சாதனைகளைச் செய் துள்ளது. ஜெர்மனி, கனடா போன்ற நாடுகளையும் பொருளா தார வளர்ச்சியில் மிஞ்சி விட்டது ஜப்பான். இப்பொருளாதார வளர்ச்சிக்கு அமெரிக்காவின் பல வகை உதவிகளே காரணமாக அமைந்துள்ளன.

இனி, ஜப்பானில் எவ்வாறு கூட்டுறவு இயக்கம் வளர லாயிற்று என்பதைக் காண்போம்.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் ஜப்பான் ஏறக்குறைய இந்தியாவைப் போலவே பொருளாதாரத் துறையில் விளங்கியது. கிராமங்களில் வாழ்ந்து வந்த பெரும் பாலான மக்கள் விவசாயத்தையே பெரிதும் நம்பி இருந் தனர். ஒவ்வொரு குடும்பத்தின் விளை நிலமும் மிகக் குறைவாகவே

இருந்தது. விவசாயம் இயற்கையின் அரவணைப்பில் வளர வேண்டிய தொழில். இந் நாட்டில் அடிக்கடி வெள்ளம், கடும் புயல் போன்றவை ஏற்பட்டு வந்தமையால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. ஜப்பானிய மக்களின் கடும் உழைப்பு விழலுக்கு இறைத்த நீராக மாறியது. வறுமையில் வாடிக் கிடந்த மக்களை 'வட்டித் தொழிலர்'களின் (Money Lender) செயல்கள் மேலும் சீர் கேடு அடையச் செய்தன. இவர்கள் அதிக வட்டிக்குக் கடன் வழங்கி விவசாயிகளின் இன்னல்களை அதிகரித்தனர். எனவே, நிதி வசதி குறைந்த நிலையில், மக்கள் விவசாயத்தில் தகுந்த கவனம் செலுத்த இயலவில்லை. விளைபொருள்களை முறையாக விற்பனையும் செய்ய இயலாத நிலையில், விவசாயிகள் பெரும் இன்னல்களுக்கு ஆளாயினர். இத்தருணத்தில் தான் கூட்டுறவுக் கொள்கைகள் ஜப்பானில் குடியேறத் தொடங்கின.

இந்தியாவைப் போலவே, ஜப்பானும் தன் இன்னல்களைக் களையும் பொருட்டு, ஏனைய ஐரோப்பிய நாடுகளை மாதிரியாகக் கொண்டு கூட்டுறவு அமைப்புகளை அமைக்கத் தொடங்கின. 1900-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின் துணை கொண்டு, கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தொடங்கப்பட்டன. இச்சங்கங்கள் ஜெர்மனிய நாட்டைச் சேர்ந்த 'ரைபீசன் வங்கி'களை (Raiffeisen Banks) மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்டன. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 'ராக்டேல்' (Rochdale) கொள்கைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டன. தற்போதும், ஜப்பானியக் கூட்டுறவு இயக்கம் நம் நாட்டைப் போலவே இயங்குகின்றது. ஏறக்குறைய, இரு நாடுகளின் இயக்கங்களும் அமைப்பு, கொள்கைகள் போன்றவற்றில் ஒத்தே விளங்குகின்றன. ஜப்பானில், பொதுவாகப் 'பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்' (Multi-Purpose Co-op. Societies) அமைக்கப்பட்டுள்ளன. இச் சங்கங்கள் உறுப்பினர்களுக்குத் தேவையான நிதிவசதிகளை அளித்தல், அவர்களின் தேவையறிந்து பொருள்களைக் கொள் முதல் செய்தல், உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனை யேற்பாட்டைச் செய்தல் முதலானவற்றைக் கவனித்துக் கொள் கின்றன. உற்பத்தியும் கடன் வழங்குத் துறையும் ஒன்றாக இணைக்கப்படுவதைக் கூட்டுறவு இயக்கம் பெரிதும் விரும்பு கின்றது. இந்தியாவைப் போலவே, ஜப்பான் அரசும் உயர் மட்டக் கூட்டுறவு அமைப்புகளின் பங்கு மூலதனத்தில் பங்கு கொள்கின்றது. ஜப்பானிய அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங் களுக்குத் தேவையான நிதிவசதிகளை அளிப்பதுடன், அவ்வப் போது சங்கங்களை வழிநடத்தியும் செல்கின்றது.

எனவே, உள்ளூர்ப் பிரச்சினைகளை ஜப்பான் கூட்டுறவின் துணைகொண்டு எளிதில் தீர்த்துக் கொள்கின்றது கிராம மக்கள் கூட்டுறவு அமைப்புகளால் அடையும் நன்மைகள் கணக் கிலடங்கா.

கூட்டுறவு இயக்கத்தின் வரலாறு

ஜப்பானில் முதன் முதலில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களே தொடங்கப்பட்டன. முதல் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் 1879-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. முக்கியப் பொருள் களின் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவே இச்சங் கங்கள் உருவாக்கப்பட்டன. தொடங்கிய ஒரு சில ஆண்டுகளி லேயே, இச்சங்கங்களின் எண்ணிக்கை பெருமளவில் உயர்ந்தன. கிராமங்களில் குறிப்பாக இச்சங்கங்கள் பெரும் தொண்டாற்றி வந்தன. மக்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் நியாய விலையில் விற்பனை செய்யப்பட்டன. நீண்ட நாள் இந்நிலை நீடிக்கவில்லை. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் ஜப்பா னுக்கும் சீனுவிற்கும் எழுந்த போரின் காரணமாக பொருள் களின் விலை மீண்டும் உபரத் தொடங்கியது. விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்காக நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் எண் ணிக்கையில் அதிகமாகத் தொழிற்சங்க உறுப்பினர்களால் தொடங்கி வைக்கப்பட்டன. இதையொட்டிக் கடன் வழங்கும் சங்கங்கள் 'ரைபீசன்' சங்கங்களை மாதிரியாகக் கொண்டு அமைக் கப்பட்டன. கடன் வழங்கும் சங்கங்களை முறையாக அமைப்ப தற்காக, அன்றைய ஜப்பானின் உள்துறை அமைச்சர் ஜெர்மனிய நாட்டில் இயங்கி வந்த கூட்டுறவுச் சங்கங்களை நேரடியாகப் பார்வையிட்டுத் தன் அறிக்கையைச் சமர்ப்பித்தார். அவ்வறிக் கையின் அடிப்படையில்தான் ஜப்பானில் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

1898-ஆம் ஆண்டு, ஜப்பானில் மொத்தம் 346 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வந்தன. அவற்றுள் கூட்டுறவுக் கடன் சங்கங் களின் எண்ணிக்கை கணிசமாகக் காணப்பட்டது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களும் வெற்றிகரமாக இயங்கி வந்தன. 1900-ம் ஆண்டு, ஜெர்மனியச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஜப்பானில் தொழிற் கூட்டுறவுச் சட்டம் (Industrial Co-operative Law) இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு பெற வாய்ப்புகள் ஏற்பட்டன. எனவே, இச் சட்டத்தின் வாயிலாக ஜப்பானில் இயங்கி வந்த கூட்டுறவுச் சங்கங்கள் அங்கீகாரம் பெற்றன.

இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்பும் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை பெருமளவில் உயரவில்லை. 1905-ஆம் ஆண்டு ஜப்பானில் 872 சங்கங்களே இயங்கி வந்தன. இதே ஆண்டில், சங்கங்களின் எண்ணிக்கையை முறையான பிரச்சாரம் மூலம் அதிகரிக்கும் நோக்கோடு ஒரு கூட்டுறவு இணைப்புச் சங்கமும் உருவாக்கப்பட்டது. இச்சங்கத்தின் முறையான நிருவாகத்தினுலும், சலியா உழைப்பினுலும் ஜப்பானில் இயங்கி வந்த கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 1909-ஆம் ஆண்டு 5690 என உயர்ந்தது. இச்சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கை 3.8 இலட்சமாகும். கிராமக் கூட்டுறவுச் சங்கங்களை முறையாக வழி நடத்திச் செல்லவல்ல 'தேசியக் கொள்முதல் கூட்டுறவுக் கூட்டமைப்பும்' (National Purchase Co-op. Federation), 'மத்தியக் கூட்டுறவு வங்கி'யும் (Central Co-op. Bank) 1923-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டன. 'விலை வீழ்ச்சி'யின் காரணமாக விவசாயிகளின் வருமானம் குறையும் போது, கூட்டுறவுச் சங்கங்களே அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து வந்தன. தேவையான கடனுதவிகள் மூலம் அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டது. ஜப்பானிய அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் துன்பத்தில் வாடும் விவசாயிகளுக்கு நிதி உதவிகள் செய்து வந்தது. அரசும் கூட்டுறவுச் சங்கங்களும் ஒருமித்து உழைத்தமையால் விவசாயிகளின் வாழ்வு நலமுடன் திகழ்ந்தது.

இரண்டாம் உலகப் போரின் காரணமாக ஜப்பானின் பொருளாதாரம் மிகவும் சீர்கேடு அடைந்தது. போரினுல் ஏற்பட்ட பேரழிவு ஜப்பானைப் பல துறைகளிலும் பின்னடையச் செய்தது. குறிப்பாக, விவசாயத் தொழில் கடைநிலைக்குத் தள்ளப்பட்டது. விவசாய உற்பத்தி குறைந்தமையால், விவசாயிகளின் வருமானமும் கணிசமாகக் குறையலாயிற்று. விவசாயம் மட்டுமின்றி, எல்லாத் துறைகளுமே பேரிழப்பிற்கு ஆட்பட்டமையால், கூட்டுறவுச் சங்கங்களின் பணிகள் பெருமளவில் அதிகரித்தன. எல்லாத் துறைகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. இன்னல்கள் பெருகும் போதுதானே மனிதனின் அறிவு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் துடிக்கின்றது? ஜப்பானில் விளைந்த பேரழிவு அந்நாட்டின் கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்ததில் வியப்பேதுமில்லை.

இன்றைய நிலை

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நாடாக விளங்கிய ஜப்பான் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நன்கு வளர்ச்சி பெறலாயிற்று. இதையொட்டி, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவுக் கடன் சங்கங்களும் பெருமளவில் தோன்றலாயின. இனி, ஜப்பானின் இன்றைய நிலையைக் காண்போம்.

தற்போது, ஜப்பானில் இயங்கி வரும் கூட்டுறவுச் சங்கங்களின் வகைகளாவன—

1. விவசாயக் கூட்டுறவுக் கழகங்கள் (Agricultural Co-op. Associations).

2. கூட்டுறவு மீன் பிடிப்புக் கழகங்கள் (Fisheries Co-op. Associations)

3. வனக் கூட்டுறவுச் சங்கங்கள் (Forestry Co-op. Societies)

4. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் (Consumers' Co-operatives)

5. தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் (Industrial Co-operatives)

இனி, இக்கூட்டுறவுச் சங்கங்களை விளக்கமாக ஆராய்வோம்.

1. விவசாயக் கூட்டுறவுக் கழகங்கள்

ஜப்பானியப் பொருளாதாரத்தை உயர்த்துவதில் விவசாயம் பெரும் பங்கு வகிக்கவில்லை. ஏனைய தொழில்களே இந்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு உறுதுணையாக விளங்குகின்றன. மொத்த நாட்டு வருமானத்தில் (National Income) விவசாயத்தின் பகுதி 12 சதவிகிதமேயாகும். இதில், காடுகள் மூலம் கிடைக்கும் வருமானமும், மீன்பிடிக்கும் தொழில் மூலம் கிடைக்கும் வருமானமும் சேர்க்கப்பட்டுள்ளன. இயற்கை வளம் நிரம்பப் பெற்ற நாடானாலும், மொத்த நிலப்பரப்பில் 80 சதவிகிதம் மலைகளையும், ஆறுகளையும் கொண்டு விளங்குகின்றது. இந்நாட்டில் 17 சதவிகித நிலமே விவசாயத்திற்குப் பயன்படுத்தப் படுகின்றது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் உள்ள நிலம் சராசரியாக 2.5 ஏக்கர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, விவ

சாயம் இங்கு செழித்து வளரச் சூழ்நிலைகள் அமையவில்லை. இருப்பினும், இங்கு வேளாண்மைத் தொழில் மிக முக்கியமான தொழிலாகக் கருதப்படுவதற்குக் காரணம், ஜப்பானிய மக்கள் தொகையில் 33 சதவிகிதம் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளதேயாகும். மேலும், ஜப்பானிய வேளாண்மைத் தொழில் வீட்டுக்குரிய தேவைப் பொருள்களில் 80 சதவிகிதம் உற்பத்தி செய்து வழங்குவதால், அது ஒரு முக்கியத் தொழிலாகக் கருதப்படுவதில் வியப்பேதுமில்லை.

இந்நாட்டில் ஒரு விவசாயப் பண்ணையின் சராசரி அளவு, இரண்டரை ஏக்கராதான். இது அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள அளவில் ஆறில் ஒரு பங்குதான். எனவே, கிடைக்கின்ற நிலத்தை ஒரு சிறு அளவும் கூட வீணாக்காமல் விவசாயத்திற்குப் பயன்படுத்த எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகின்றனர். சாலைகளின் விளிம்புகள் வரை விவசாயம் செய்யப்படுகின்றது என்பதைக் காணும்போது, ஜப்பானியர்களின் திறமை கண் கூடாகத் தெரிகிறது. இதே முறையில், புகைவண்டிப் பாதையை ஒட்டியும் விவசாயம் செய்யப்படுகின்றது. மலைப்பகுதிகளையும் நன்கு சமப்படுத்தி விவசாயம் செய்ய முயற்சிகள் எடுத்து வருகின்றனர். மலைப் பகுதிகளில் காப்பி, தேயிலை போன்ற பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

ஜப்பானியர்கள் முறையான விவசாயம் செய்ய வல்லவர்கள். இங்கு முக்கிய விளைபொருள் நெல். உலகிலேயே ஜப்பானிய நெல் சாகுபடி முறை மிகவும் பெயர் பெற்றதாகும். நம் நாட்டிலும், இச்சாகுபடி முறையைப் பரவலாகக் கையாளுகிறோம். ஜப்பானியச் சாகுபடி முறையில் மிகவும் முக்கியமானவை தரமான விதை, வளமான உரம், நல்ல விவசாயத்திறன்.

இனி, ஜப்பானிய விவசாயத்தில் கூட்டுறவின் பங்கு என்ன என்பதைக் காண்போம்.

தொடக்கத்தில் ஜப்பானிய விவசாயிகள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியிருந்தது. விவசாயத்திற்குத் துணையாக இருக்க வேண்டிய இயற்கையன்னை பல இடையூறுகளுக்குக் காரணமாக இருந்தாள். மலைப்பகுதிகளில் விவசாயம் செய்ய இயலாததால் விளைநிலத்தின் பரப்பு மிகவும் குறைவாக இருந்தது. மேலும் பல எரிமலைகளாலும் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தது. இதுமட்டுமின்றி, விவசாயிகளுக்குத் தேவையான நிதிவசதிகளும் போதுமான அளவில் இல்லை.

எனவே, தேவைப் பொருள்களை அவர்கள் இலாபகரமாகக் கொள்முதல் செய்ய இயலவில்லை. வட்டித் தொழிலர்களின் பிடியில் சிக்குண்டு, பலவித இன்னல்களுக்கு மத்தியில் உற்பத்தி செய்யப்பட்ட விளைபொருள்களுக்கு அவர்களால் முறையான விற்பனையேற்பாட்டையும் செய்ய இயலவில்லை. எனவே. ஆதரவு அற்ற நிலையில் விவசாயமும் அதனை நம்பி வாழ்ந்து வந்த ஜப்பானியப் பெருங்குடி மக்களும் பொருளாதாரத் துறையில் மிகவும் பாதிக்கப்பட்டனர். இந்நிலையில்தான், விவசாயிகள் தங்கள் இன்னல்களைக் களையக் கூட்டுறவின் துணை நாடினர். தொடக்கத்திலேயே பல கூட்டுறவுக் கழகங்களை உருவாக்கப் பெருமுயற்சி எடுத்து வந்தனர். அவர்களால் அமைக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புகளில் ‘பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்’ (Multi-Purpose Societies) முதன்மையானவையாகும். இவ்வகைக் கூட்டுறவு அமைப்புகளே ஜப்பானிய விவசாயிகளின் பல பிரச்சினைகளைத் தீர்க்கவல்லவையாகக் கருதப்பட்டன. 1968-ஆம் ஆண்டு இப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 6470 என புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. ஜப்பானில் இத்தகைய கூட்டுறவுச் சங்கம் இல்லாத கிராமமே இல்லை என உறுதியுடன் கூறலாம். ஒவ்வொரு கூட்டுறவுச்சங்கமும் அது அமைக்கப்பட்டிருக்கும் கிராம எல்லைகளுக்குள் இயங்கி வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் 5·9 மிலியன் நிரந்தர உறுப்பினர்களையும் பெற்றுள்ளன. கிராமப்புறங்களில் வாழும் குடும்பங்கள் சுமார் 7 மிலியன் எனத் தெரியவருகின்றது. விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவருமே இச்சங்கங்களில் உறுப்பினர்களாக விளங்குகின்றனர்.

‘பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்’ மட்டுமின்றிப், பல ‘சிறப்பு நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும்’ ஜப்பானில் பணியாற்றி வருகின்றன. ஒரு குறிப்பிட்ட துறையின் வளர்ச்சிக்கென இவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் பயனாக, விவசாயத்தின் பல பிரிவுகளும் செழித்து வளர வாய்ப்புகள் உண்டாகின்றன. இச்சங்கங்களின் மூலம் விவசாய வருமானம் நன்கு உயர்ந்து வருகின்றது. 1968–ஆம் ஆண்டில் இச்சங்கங்களின் நிலையைக் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் அட்டவணை கொண்டு அறியலாம்,

சங்கங்களின் வகைகள் (Types of Societies	எண்ணிக்கை (Number)
பட்டுப்பூச்சி வளர்த்தல் (Seri-Culture)	3,685
கால்நடை வளர்ப்பு (Stock Breeding)	1,800
நிலவளர்ச்சியும் முன்னேற்றமும் (Land Development)	4,000
தோட்டக்கலை (Horticulture)	553
கிராமத் தொழில்கள் (Village Industries)	447
இதர சங்கங்கள்	2,100
மொத்தம் ...	12,585

இச்சங்கள் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட துறையில்தான் பணியாற்றி வருகின்றன. இச்சங்கங்கள் கடன் செய்கைகளில் ஈடுபடுவதில்லை. இச்சங்கத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாகப், பட்டுப் பூச்சி வளர்க்கும் துறையில் இயங்கும் சங்கங்கள் ஒவ்வொன்றும் சராசரி முப்பது உறுப்பினர்களையே கொண்டு விளங்குகின்றன. இச்சங்கத்தின் செயல்முறை எல்லை ஒரு கிராமத்தைக் கொண்டதாகும்.

தற்போது ஜப்பானில் இயங்கி வரும் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் 1947-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட விவசாயக் கூட்டுறவுக் கழகச் சட்டத்தின்' கீழ் (Agricultural Co-operative Associations Law) பதிவு செய்யப்பட்டவையாகும். இச்சட்டம் இருவகைக் கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது. அவையாவன :

1. பங்கு மூலதனத்தைப் பெற்ற கூட்டுறவுக் கழகங்கள்.

2. பங்கு மூலதனமற்ற கூட்டுறவுக் கழகங்கள்.

பங்கு மூலதனத்தைப் பெற்றிருத கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்குக் கடன் வசதிகள் அளிக்க இயலாது. நிருவாகச் செலவு முழுமையும் உறுப்பினர்களிடமிருந்தே பெறப்படும்.

பங்கு மூலதனத்தைக் கொண்டு இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்குக் கடன் வுசதிகளை அளிக்க

அனுமதிக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் 'வரையறுக்கப்பட்ட பொறுப்பின்' கீழ் (Limited Liability) இயங்குபவையாகும். ஒவ்வோர் உறுப்பினரும் குறைந்தது ஒரு பங்கையாவது பெற்றிருக்க வேண்டும்.

இச்சங்கங்கள் ஒரு குறிப்பிட்ட துறையிலும், சூழ்நிலைக்கேற்பப் பல துறைகளிலும் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. முறையான கணக்கு வைப்பு முறையும் வலியுறுத்தப்படுகின்றது. உறுப்பினரல்லாதாரும் இச்சங்கங்கள் மூலம் பயன் பெற வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளமையால் கிராம மக்கள் அனைவருமே வேறுபாடின்றி நன்மை பெறுகின்றனர். சங்கத்தின் நிருவாகம் இயக்குநர் அவையிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இயக்குநர் அவை குறைந்தது ஐந்து நபர்களை உறுப்பினர்களாகவும், இரண்டு தணிக்கையாளர்களையும் பெற்றிருக்க வேண்டும். இயக்குநர் அவையும், தணிக்கையாளர்களும் பொதுச்சபை உறுப்பினர்களால் ஆண்டுக்கொருமுறை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இரகசிய ஓட்டுப்பதிவு முறையே பின்பற்றப்படுகிறது. சங்கங்களின் 'துணை விதிகள்' (By-Law) இயக்குநர் அவையால் வகுக்கப்படுகின்றன.

தொடக்கத்திலிருந்தே 'பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஜப்பானின் கூட்டுறவுத் துறையில் வலிவுடன் திகழ்ந்துவந்தன. இச்சங்கங்களின் பணிகளை இனிச் சுருக்கமாகக் காண்போம்.

1. கடன் அளிப்பு (Supply of Credit):

இச்சங்கங்கள் ஆற்றிவரும் பலபணிகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது விவசாயிகளுக்குத் தேவையான கடன் வசதிகளை அளித்தலேயாகும். இத்துறையில் இச்சங்கங்கள் சிறப்பான 'கைக்கோளை'ப் பின்பற்றி வருவதால் விவசாய உற்பத்தி பெருகுவது மட்டுமின்றி, விவசாயிகளின் நிதி நிலையும் கணிசமாக உயர வாய்ப்பு ஏற்படுகின்றது. ஏனைய துறைகளில் ஈடுபடுபவர்களைவிட, விவசாயிகள் எப்பொழுதும் நிதிப் பற்றுக்குறை காரணமாக அல்லலுறுவது அசைக்க முடியாத உண்மை. விவசாயத் தொழிலின் ஒவ்வொரு கூட்டத்திலும் நிதி வசதிகள் தேவைப்படுகின்றன. ஜப்பானிய விவசாயிகள் தங்கள் சேமிப்பிலிருந்தே தங்கள் நிதி வசதிகளைச் சரி செய்து கொண்டு வந்தனர் என்றாலும், அச்சேமிப்பு நிதி பலதருணங்களில் போதுமானதாக இல்லை. குறிப்பாக, விளை நிலங்களைக் கொள்முதல் செய்தல்,

பெரிய அளவில் நீர்ப்பாசன வசதிகளைச் செய்தல் போன்ற காரியங்களில் அவர்கள் கடன் வசதிகளை நாடினர். இச்சூழ்நிலையில் தான் இப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு அவ்வப்போது கடன் வசதிகளை அளித்து வந்தன. 'மூலதன மின்றி முன்னேறுவது எப்படி?' என்ற வினாவிற்கு விடை காண முடியாமல் தவித்த விவசாயிகளுக்கு அருமருந்தென விளங்கின இச்சங்கங்கள். விவசாயிகள் தங்கள் தொழிலுக்குத் தேவையான விவசாயப் பொருள்களைக் கொள்முதல் செய்வதில் இச்சங்கங்கள் உறுதுணையாக நின்றன. 1960-ஆம் ஆண்டின் கணக்குப்படி, விவசாயிகள் இச்சங்கங்களுக்குச் 'செலுத்த வேண்டிய கடன் களின் (Loans Outstanding) மொத்த மதிப்பு 453 பில்லியன் 'யென்'* (Billion) ஆகும். அதாவது, 900 கோடி ரூபாயாகும். இதனைக் கொண்டே இச்சங்கங்கள் எவ்வாறு விவசாயிகளுக்கு உற்ற நண்பனாக விளங்குகின்றன என்பதை அறியலாம்.

விவசாயிகள் தங்களுக்குத் தேவையான நிதி வசதிகளை மூன்று துறைகளிலிருந்து பெறுகின்றனர். அவையாவன :

1. கூட்டுறவுக் கழகங்கள் :

விவசாயிகட்குத் தேவையான நிதி வசதிகளைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வாறு அளிக்கின்றன என்பதை நாம் முன்பே கண்டோம். விவசாயத்திற்குத் தேவையான மொத்த நிதி வசதிகளில் 51 சதவிகிதம் கூட்டுறவுச் சங்கங்களினாலேயே நிறைவேற்றப்படுகின்றன.

2. தனி நபர்கள் :

வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பலவகை அமைப்புகள் ஆயிரமாயிரம் தோன்றினாலும், விவசாயத்திற்குத் தேவையான நிதி வசதிகளில் ஒரு கணிசமான பகுதி தனி நபர் களால்தான் நிறைவேற்றப்படுகின்றது. ஜப்பானும் இதற்கு விதி விலக்கல்ல, 'முஜின்ஸ்' (Mujins), 'ஹொட்டகுஷாஸ்' (Hotakushas) என்ற இரு தனி நபர் அமைப்புகள் ஜப்பானில் பிரபலமானவையாகும். இத்தனி நபர் அமைப்புகள் மொத்தத் தேவையில் 33·4 சதவிகித நிதி வசதிகளை அளித்து வருகின்றன.

3. ஜப்பானிய அரசு :

கூட்டுறவு அமைப்புகளை ஊக்குவிப்பதோடு மட்டுமின்றி, ஜப்பானிய அரசாங்கம் விவசாயத் தொழிலுக்கு நேரடியாகவும் நிதி வசதிகளை அளித்து வருகின்றது. கூட்டுறவுச் சங்கங்கள்

---

* 'யென்' (Yen) என்பது ஜப்பானின் நாணயமாகும்,
One Rupee—50 Yen,

அவ்வப்போது ஏற்படும் சூழ்நிலைக்கேற்ப அரசிடமிருந்து நிதி வசதிகளைப் பெறுகின்றன. அரசாங்கமே நேரடியாக விவசாயத் தொழிலுக்கு உதவ முன்வருவதால், பெரும்பாலான பிரச்சினைகள் எளிதில் தீர்க்கப்பட்டு விடுகின்றன. எனினும், அரசிற்குப் பிற தொழில்களையும் கவனிக்கும் பொறுப்பின் காரணமாக கணிச மான நிதி வசதிகளை விவசாயத்திற்கு அளிக்க இயலவில்லை. மொத்த தேவையில் 5 சதவிகிதமே விவசாயிகள் ஜப்பானிய அரசாங்கத்திடமிருந்து பெற முடிகின்றது. எனவே, கூட்டுறவு அமைப்புகளே இத்துறையில் முதலிடம் வகிக்கின்றன.

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக ஜப்பானிய விவசாயிகள் பல வளர்ச்சித் திட்டங்களை வகுக்கத் தொடங்கிய தால், விவசாயத் தொழிலுக்கு அதிக அளவில் நிதி வசதிகள் தேவைப்பட்டன. எனவே, இப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்குப் பெருமளவு கடன் வசதிகளை அளிக்கத் தொடங்கின. கடந்த பத்தாண்டுகளில் விவசாயி களுக்கு இக்கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கியுள்ள கடன் தொகை வியப்புறும் வண்ணம் அமைந்துள்ளது. 1950-ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு இச்சங்கங்கள் வழங்கியுள்ள மொத்தக் கடன் 31 மிலியன் 'யென்' (About Rs. 62 Crores) ஆகும். 1967-ஆம் ஆண்டுக் கணக்கின்படி, விவசாயிகள் பெற்றிருந்த மொத்தக் கடன் 1120 பிலியன் யென் (About Rs 2240 Crores) ஆகும். வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடனில் 67 சதவிகிதம் 'குறுகிய காலக் கடன்'களாகும். ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு குறிப் பிட்ட தொகைக்கு மேல் கடனைப் பெற இயலாது. கடன் தொகையின் அளவு சங்கத்தின் துணைக் குழுவினால் நிருணயம் செய்யப்படுகின்றது. ஒவ்வோர் உறுப்பினரின் தகுதிக்கேற்பக் கடன்கள் வழங்கப்படுகின்றன. உறுப்பினர்களின் 'நாணயத் தகுதி'யை (Credit Worthiness) எவ்வாறு தீர்மானிப்பது என் பதைத் 'தேசிய விவசாயச் சங்கங்களின் இணைப்புச் சங்கம்' (National Union of Agricultural Co-operatives) தயாரித்து வெளியிட்டு இருக்கும் அட்டவணை கொண்டு எளிதில் அறியலாம்.

உறுப்பினர் பற்றிய விபரங்கள் (முழு மதிப்பெண் 100%)		உறுப்பினர் சொத்துபற்றிய விபரங்கள் (முழு மதிப்பெண் 100%)	
1. மனதைச் சார்ந்த பழக்கங்கள் (Mental habits)	20%	சொத்து (Property)	20%
2. ஊக்கம் (Diligence)	20%	நிகர சொத்து (Net Property)	20%
3. திறமை (Skill)	20%	வருவாய் (Income)	20%
4. சிக்கனம் (Thrift)	20%	மனை (House)	20%
5. குடும்ப இசைவும், ஆரோக்கியமும்	20%	கூட்டுறவுச் சங்கங்களில் பெற்றிருக்கும் பங்குகள்	20%

மேற் கூறப்பட்டுள்ள விபரங்களை நன்கு 'ஆராய்ந்த பின்னரே, உறுப்பினர்களுக்குக் கடன் தொகை வழங்கப்படு கிறது. எனவே, 'வராக் கடன்' (Bad Debts)என்ற சொல்லுக்கே இங்கு இடமில்லை.

இவ்வாறு சிறந்த 'கடன் கைக்கோளை' இச்சங்கங்கள் பின் பற்றுவதால்தான் விவசாயம் நல்ல மேன்மையைப் பெறுகின்றது. உற்பத்திக் காரியங்களுக்கு மட்டுமே நிதி வசதிகள் அளிக்கப்படு கின்றன. பெரும்பாலானக் கடன்கள் பணமாக உறுப்பினர் களுக்கு அளிக்கப்படுவதில்லை. அக்கடன் தொகைக்கு ஈடாக அவர்கட்குத் தேவையான விவசாய உற்பத்திச் சாதனங்களே அளிக்கப்படுகின்றன. இவ்வாறு செய்யப்படுவதால், கடன் வழங்கியதன் நோக்கம் எளிதில் நிறைவேறுகிறது, உறுப்பினர் களின் நுகர்விற்காகவும் சில தருணங்களில் கடன்கள் அளிக்கப் படுகின்றன. இவ்வாறு வழங்கப்படும் கடன் தொகையை உற்பத்திக்காக வழங்கப்படும் கடன் தொகையுடன் ஒத்திட்டுப் பார்த்தால், நுகர்விற்காக வழங்கப்படும் கடன் தொகை மிகவும் குறைவே என்பதை நன்கு அறிந்து கொள்ளலாம்,

நீண்ட காலக் கடன் வசதிகளும் விவசாயிகளுக்கு இச் சங்கங்கள் அளித்து வருகின்றன. இவ்வகைக் கடன்களைப் பெறும் உறுப்பினர்கள் விவசாய வளர்ச்சிக்கு அத்தொகையை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு வழி முறைகள் செய்யப் பட்டுள்ளன. இக்கடன்களின் கால அளவு ஒன்றிலிருந்து பத்து ஆண்டுகள் என வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால் பொதுவாக இக்கடன்கள் ஐந்து ஆண்டுகளுக்குள் உறுப்பினர்களால் திருப்பித்தரத்தக்க வகையில்தான் அளிக்கப்படுகின்றன. பெரும் பாலும், இக்கடன்கள் 'ஈடுடைக் கடன்'களாகவே (Secured Loans) விளங்குகின்றன. இக்கடன்களைக்கொண்டு, விவசாயிகள் நிலவளர்ச்சித் திட்டங்கள், நீர்ப்பாசன வசதிகள், விலை அதிக மான விவசாயக் கருவிகளை வாங்குதல், நீண்ட காலமாகச் செலுத்தாத கடன்களைச் செலுத்துதல் போன்ற காரியங்களில் ஈடுபடுகின்றனர். நம் நாட்டில் இருப்பது போல 'நிலவள வங்கிகள்' (Land Mortgage Banks) ஜப்பானில் இயங்கவில்லை. இத்தகைய வங்கிகளின் பணிகளையும் கூட்டுச் சங்கங்களே நிறை வேற்றுகின்றன. நீண்ட காலக் கடன்களின் 'வட்டி வீதம்' (Rate of Interest) பத்திலிருந்து பதினொன்று சதவிகிதம் (10 to 11%) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2. தொகை வைப்பு (Deposit) :

விவசாயிகளுக்குக் 'கடன் அளிப்பு' மட்டுமின்றி, அவர் களுக்கு வங்கியல் பணிகளையும் செவ்வனே செய்து வருகின்றன

ஜப்பானின் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், இச்சங்கங்கள் தங்களுக்குத் தேவையான 'நடைமுறை முதலை' (Working Capital), உறுப்பினர்களின் சேமிப்புத் தொகையை 'வைப்புத் தொகையாக'ப் (Deposit) பெற்று நிருவாகத்தை நடத்திச் செல்கின்றன. இது ஜப்பானின் பலநோக்குக் கூட்டுறவு இயக்கத்தின் தனிச் சிறப்பாகும். கடந்த சில ஆண்டுகளில் இச்சங்கங்கள் உறுப்பினர்களிடமிருந்து பெற்றுள்ள வைப்புத் தொகையைக் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்கள் மூலம் எளிதில் அறியலாம்.

ஆண்டு (Year)	மொத்த வைப்புத் தொகை (Total Deposits)
1949	96 பிலியன் 'யென்' (About Rs. 192 Crores)
1950	114 பிலியன் யென்
1952	170 பிலியன் யென்
1957	413 பிலியன் யென்
1960	668 பிலியன் யென்
1963	1,210 பிலியன் யென்
1966	2,333 பிலியன் யென்
1968	4,315 பிலியன் யென் (About Rs. 8630 Crores)

இப்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமின்றி, கூட்டுறவுக் கடன் கூட்டமைப்புகள் 2,500 மிலியன் யென் வைப்புத் தொகையும், மத்தியக் கூட்டுறவு வங்கி 1200 பிலியன் யென் வைப்புத் தொகையும் பெற்றிருந்தன. இவ்வாறு உறுப்பினர்களிடமிருந்து பெறும் வைப்புத் தொகையை மேலே குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுறவு அமைப்புகள் நடைமுறை முதலாகப் பயன்படுத்திப் பயன் பெறுகின்றன. உறுப்பினர்களுக்குச் சேமிக்கும் பழக்கமும், கடைப்பிடிக்க வேண்டிய சிக்கனமும் இதன் மூலம் ஊக்குவிக்கப்படுகின்றது. எனவே, இத்தொகை வைப்பு முறை உறுப்பினர்களுக்கும், கூட்டுறவு அமைப்புகளுக்கும் ஒரு சேர நன்மை பயக்கின்றது. விவசாயிகளின் மொத்த வைப்புத் தொகையில் 75 சதவிகிதம் கூட்டுறவுக் கழகங்களிடம் வைக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள வைப்புத் தொகை முறையே அஞ்சல் நிலையம் (10%), வங்கிகள் (20%) ஆகியவற்றில் வைக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து, ஜப்பானிய மக்கள் கூட்டுறவுச் சங்கங்களிடம் கொண்டிருக்கும் நம்பிக்கையை நாம் எளிதில் அறிந்து கொள்ளலாம். கூட்றடுவுச் சங்கங்கள் வழங்கும் கடன் தொகையைவிட இச்சங்கங்கள் பெறும் வைப்புத் தொகை கணிசமாக உயர்ந்து காணப்படுகின்றது.

1967-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் கணக்குப்படி, விவசாயி களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கியிருக்கும் மொத்தக் கடன் 4,000 கோடி ரூபாயாகும்.

உறுப்பினர்களிடமிருந்து பெறும் 'வைப்புத் தொகை'யை அதிகரிக்கத் தேவையான வழிமுறைகள், அரசிற்குத் தேவையான உணவுப் பொருள்களைச் சேகரிக்கும் முறைபுடன் நன்கு இணைக் கப்பட்டுள்ளன. ஜப்பானில் நெல் விளைச்சலுக்கே அதிகக் கவனம் செலுத்தப்படுகின்றது. மொத்த விவசாய உற்பத்தியில், 70 சத விகிதம் நெல் விளைச்சலால் ஏற்படுகின்றது. விவசாயிகள் அனைவரும் அறுவடைக்குப் பின்னர் தங்களிடம் உள்ள உணவுப் பொருள்களின் 'உபரி'யை அரசாங்கத்திற்கு முன்பே நிருணயம் செய்யப்பட்ட விலைக்கு விற்பனை செய்ய வேண்டும். இது ஜப்பானில் சட்டத்தின் மூலம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு விளைபொருளைக் கொள்முதல் செய்யும் பணியைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகச் செய்து வருகின்றது ஜப்பானிய அரசாங்கம். ஓர் உறுப்பினர் தன் விளைபொருளின் ஒரு பகுதியைக் கூட்டுறவுக் கழகத்திடம் அரசின் சார்பாக அளித்த வுடன், அவ்வுறுப்பினரது 'வைப்புக் கணக்கு' அவ்விளைபொரு ளுக்கு ஈடான தொகையைக் கொண்டு வரவு வைக்கப்படும். இவ் வைப்புத் தொகையைக் கொண்டு உறுப்பினர்கள் தரவேண்டிய கடன் தொகை வசூலிக்கப்படும். எஞ்சியுள்ள தொகை வைப்புக் கணக்கில் பாதுகாக்கப்படும். உறுப்பினர்கள் தங்கள் தேவைக் கேற்பப் பணத்தை அவர்களது வைப்புக் கணக்கிலிருந்து பெறு வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வைப்புத் தொகையில் பெரும் பகுதி விவசாயிகளால் எடுத்துக்கொள்ளப்பட்டாலும், இத்தொகையில் ஒரு கணிசமான பகுதி நிரந்தரமாக கூட்டுறவுச் சங்கத்தில் வைப்புத் தொகையாக நீடிக்கின்றது. இதன் மூலம், விவசாயிகள் வங்கியல் துறையிலும் பயிற்சி பெற வாய்ப்புகள் ஏற்படுகின்றன. அவர்களிடையே சேமிக்கும் பழக்கத்தையும், சிக்கனத்தையும் இப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இவ் வைப்புக் கணக்கு முறை மூலம் உருவாக்கியுள்ளன. இக்கூட் டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்கு ஆற்றி வரும் பணிகளில் இதுவே தலைசிறந்த பணியாகும். அறுவடைக்குப் பின்னர் விவசாயிகளின் செலவு முறை இப்பணியின் மூலம் ஒழுங்கு படுத்தப்படுகின்றது.

இனி, விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் நிதி நிலையை ஆராய்வோம்.

'பங்கு மூலதனமே' (Share Capital) கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய நிதியாகத் திகழ்கின்றன. இம்மூலதனம் இச்சங்கங்களின் நிலையான மூலதனமாகவும் (Fixed Capital), நடைமுறை முதலாகவும் பயன் படுகின்றது. ஒவ்வோர் உறுப்பினரும் சராசரியாக 4,300 யென் (Yen) கூட்டுறவுச் சங்கத்திற்கு அளிக்கின்றனர். 1966-ஆம் ஆண்டில், மொத்தக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனம் 102 பிலியன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. பங்கு மூலதனத்தைத் தவிர, இக்கூட்டுறவுச் சங்கங்கள், பலவகைக் 'காப்பிருப்பு'களையும் (Reserves), நிதிகளையும் (Funds) தங்களது இலாபத் தொகையிலிருந்து ஆண்டுதோறும் ஏற்படுத்தி வைக்கின்றன. நிதிப் பற்றுக்குறை ஏற்படும் தருணங்களில் இத்தொகை பயன்படுத்தப்படுகின்றது. ஜப்பானில் இயங்கும் அனைத்துக் கூட்டுறவுக் கழகங்களும் இவ்வகை நிதிகளைப் பெற்றுள்ளன. இருப்பினும், சில கூட்டுறவுக் கழகங்கள் நிதிப் பற்றுக்குறை காரணமாக தேவையான நிதியை கடனாகப் பெற்று நிலைமையைச் சரிசெய்து கொள்கின்றன. பெரும்பாலும், இக்கூட்டுறவுச் சங்கங்கள் மத்தியக் கூட்டுறவு வங்கியிடமிருந்தே தேவையான நிதிவசதிகளைக் கடனாகப் பெறுகின்றன. 1959-ஆம் ஆண்டில் இக் கூட்டுறவுச் சங்கங்கள் பெற்றிருந்த கடன்களின் மொத்தத் தொகை 131 பிலியன் யென் ஆகும். 1966-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் இச்சங்கங்கள் பெற்றிருந்த கடன் வசதிகளின் மதிப்பு 325 பிலியன் யென் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

சுருங்கக்கூறின், ஜப்பானின் பல நோக்குக் கூட்டுறவுக் கழகங்கள் தங்களுக்குத் தேவையான நிதிவசதிகளை உறுப்பினர்கள் வழங்கும் பங்கு மூலதனம், இலாபத்திலிருந்து உருவாக்கப்படும் 'காப்பிருப்புகள்' நிதிகள், ஆகியவையின் துணை கொண்டும், மத்தியக் கூட்டுறவு வங்கியிடமிருந்து பெறும் கடன் தொகையைக் கொண்டும் பெறுகின்றன.

3. விளைபொருள்களின் விற்பனையேற்பாடு (Marketing) :

ஜப்பானின் பலநோக்குக் கூட்டுறவுக் கழகங்களின் முக்கியப் பணிகளில் உற்பத்தி செய்யப்பட்ட விவசாயப் பொருள்களுக்கு விற்பனையேற்பாடு செய்தலும் ஒன்றாகும். இக்கூட்டுறவுச் சங்கங்கள் அரிசி, பார்லி (Barley), நவதானியங்கள் (Cereals), உருளைக்கிழங்கு, பழவகைகள், பால், புழுக்கூடுகள் (Cocoon) விதைகள், மரக்கரி (Charcocal) ஆகிய விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனையேற்பாடு செய்து உறுப்பினர்களுக்குப் பெரிதும் உதவுகின்றன. 1958-ஆம் ஆண்டில், மொத்த விவசாயப் பொருள்களில் 49 சதவிகிதம் இக்கூட்டுறவுச் சங்கங்களால்

விற்பனை செய்யப்பட்டன. இவ்வாறுவிற்பனையேற்பாடு செய்யப் பட்ட விவசாயப் பொருள்களின் மொத்த மதிப்பு 494 பிலியன் யென் என்பதைக் காணும்போது, இச்சங்கங்களின் பணிகள் எளிதில் தெரிகின்றன. 1962-ஆம் ஆண்டில் விற்பனையேற்பாடு செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு 706 பிலியன் யென் எனவும், 1968-ஆம் ஆண்டில் 1850 பிலியன்யென் (Rs. 3700 Crores) எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது, மொத்த விற்பனையில் 50 சதவிகிதம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் செய்யப்படு கின்றது. கிராமங்களில் பணியாற்றி வரும் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களிடமிருந்து விவசாயப் பொருள்களைப் பெற்று, அவ்வாறு சேகரித்த விளைபொருள்களைப் 'பிரதேச விற்பனையேற் பாட்டுக் கழகங்கள்' (Regional Marketing Associations) மூல மாகவும், 'தேசிய விற்பனையேற்பாட்டுக் கழகங்கள்' மூலமாகவும் (National Marketing Associations), சந்தைகளில் நியாய விலைக்கு விற்பனை செய்கின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள் பலவித விவசாயப் பொருள்களுக்கு விற்பனை யேற்பாடு செய்யினும், அரிசி விற்பனை யேற்பாட்டில் தான் அதிகக் கவனம் செலுத்தப்படுகின்றது. சட்டத்தின் துணை கொண்டு ஜப்பானிய அரசாங்கம் தேவையான அரிசியைக் கூட்டுறவுக் கழகங்கள் மூலம் கொள்முதல் செய்து கொள்கிறது. இச்சங்கங்களால் செய்யப்படும் மொத்த விற்பனையில் 58 சத விகிதம் அரிசி விற்பனையாகும். சுவை மிகுந்த உருளைக்கிழங்குகள் 'பக்குவப்படுத்தும் தொழிற்சாலை'கட்கு (Processing Factories) விற்பனை செய்யப்படுகின்றன. சில கூட்டுறவுச் சங்கங்கள் தங்க ளுக்குச் சொந்தமான தொழிற்சாலைகளிலேயே உருளைக் கிழங்குகளை நன்கு பக்குவப்படுத்தி 'மாவுப் பண்டங்களாக'த் (Starch) தயாரித்து, சந்தைகளில் விற்பனை செய்கின்றன. மேலும் காய்கறிகள், பழவகைகள் முதலானவை ஜப்பானின் முக்கிய சந்தைகளில் 'ஏலம்' (Auction) மூலம் விற்பனை செய்யப்படு கின்றன.

சில கூட்டுறவுச் சங்கங்கள் சொந்தமான பண்டகங்களையும் பெற்றுள்ளன. 1962-ஆம் ஆண்டில் இக்கூட்டுறவுச் சங்கங்கள் 30,700 பண்டகங்களைப் (Warehouses) பெற்றிருந்தன. இவை களின் மொத்தப் பரப்பளவு 50 மிலியன் சதுர அடிகளாகும். ஒவ்வொரு கூட்டுறவுச்சங்கத்திற்கும் சராசரியாக மூன்று பண்ட கங்கள் உறுதுணையாக உள்ளன. இப்பண்டகங்களின் மொத்த வருமானம் 7·7 பிலியன் யென் ஆகும். ஜப்பானிய அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல்

செய்யும் தானியங்களை இப்பண்டகங்களில்தான் பாதுகாத்து வைக்கின்றது. குறிப்பாக, அரிசி, பார்லி போன்றவை இவைகளில் பாதுகாத்து வைக்கப்படுகின்றன.

உற்பத்தி பெருக்கத்திலேயே தங்கள் கவனத்தைச் செலுத்தும் விவசாயிகள் விளைபொருள்களுக்கு விற்பனையேற்பாட்டையும் செய்வது என்பது எளிதான காரியமல்ல. இதையொட்டியே, ஜப்பானியப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளின் நலன் கருதி விற்பனையேற்பாட்டைத் தாங்களே கவனித்துக் கொள்கின்றன. பொருள்களின் தரத்தை மக்களுக்கு உணர்த்த விளம்பரச் சாதனங்கள் இன்றியமையாதவையாகும். எனவே, இக்கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனைக்குத் தயாராக இருக்கும் விவசாயப் பொருள்களுக்குத் தகுந்த முறையில் விளம்பரங்கள் செய்து சந்தைகளில் நல்ல சூழ்நிலைகளை உருவாக்குகின்றன. விற்பனையேற்பாட்டைச் சங்கங்கள் ஏற்றுக்கொள்வதால், விவசாயிகள் தங்கள் முழுக்கவனத்தையும், உழைப்பையும் உற்பத்திப் பெருக்கத்திற்கே செலவழிக்கின்றனர். சிறப்பான விற்பனையேற்பாடு செய்யப்படுவதால், ஆண்டு முழுவதும் விவசாயப் பொருள்கள் அங்காடிகளில் நியாய விலையில் கொள்முதல் செய்யத்தக்க வகையில் கிடைக்கின்றன.

4. விவசாயத் தேவைப் பொருள்களின் கொள்முதல்

ஜப்பானில் இயங்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்குத் தேவையான விவசாயப் பண்ணைப் பொருள்களையும், குடும்பத்திற்குரிய தேவைப் பொருள்களையும் நியாய விலையில் விற்பனை செய்கின்றன. இவ்வாறு விற்பனை செய்யப்படும் பொருள்களில் முக்கியமானது தரமான உரங்களாகும். ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் உறுப்பினர்களின் தேவையை அறிந்து, அதன்படி 'தேசியக் கொள்முதல் கூட்டமைப்புடன் (National Purchase Federation) தொடர்பு கொள்கின்றது. இக்கூட்டமைப்பு தேவையான உரத்தை உரத் தொழிற்சாலைகளிலிருந்து கொள்முதல் செய்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்கின்றது. உரத் தொழிற்சாலைகள் 'பற்று வழி' (Credit) அடிப்படையிலும் தேவையான அளவு உரத்தை விற்பனை செய்கின்றன. ஆனால், இவ்வகைக் கொள்முதலுக்கு மத்தியக் கூட்டுறவு வங்கி 'பொறுப்புறுதி' (Guarantee) அளிக்க வேண்டும். உறுப்பினர்களின் நாணய நன்மதிப்பை நன்கு ஆராய்ந்த பிறகே உரங்கள் பற்றுவழி முறையில் விற்பனை செய்யப்படுகின்றன. அறுவடைக்குப் பின்னர் இத்தொகை

உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்படும். கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனாகச் சில தருணங்களில் உரங்களை விற்பனை செய்வதால், இச்சங்கங்களின் நிதிநிலையையும், நிருவாகத்தையும் நன்கு ஆராய்ந்த பிறகே, இத்தொழிற்சாலைகள் உரங்களை அளிக்கின்றன. உர விற்பனையில் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே ஈடுபட்டிருக்கவில்லை. தனியார் துறையின் மூலமும் விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. எனினும், கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பான பணிகளில் ஈடுபாடு கொண்டுள்ள உறுப்பினர்கள் இச்சங்கங்களையே பெரிதும் நாடுகின்றனர். விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்ட மொத்த உரத்தில் 70% கூட்டுறவுச் சங்கங்களால் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. 1966-ஆம் ஆண்டு 98 பிலியன் யென் மதிப்புள்ள உரங்களை விற்பனை செய்துள்ளது. உறுப்பினர்கள் தற்போது அதிக அளவில் உரங்களில் முதலீடு செய்வதில்லை. சுமார் 19 சதவிகிதமே உரங்களில் உறுப்பினர்களால் முதலீடு செய்யப்படுகின்றது.

உரங்கள் மட்டுமின்றிக் கால்நடைத் தீவனம் (Fodder), பூச்சிக் கொல்லி மருந்துகள் (Insecticides) போன்ற விவசாயப் பொருள்களும் இக்கூட்டுறவுச் சங்கங்களால் உறுப்பினர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. 1966-ஆம் ஆண்டில், உறுப்பினர்கட்கு விற்பனை செய்யப்பட்டிருக்கும் கால்நடைத் தீவனத்தின் மொத்த மதிப்பு 165 பிலியன் யென் எனவும், பூச்சிக் கொல்லி மருந்துகளின் மதிப்பு 25 பிலியன் யென் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. இவை தவிர, உறுப்பினர்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கும் விவசாயக் கருவிகளின் மதிப்பு 33 பிலியன் யென் ஆகும். சில கூட்டுறவுச் சங்கங்கள் குடும்பத்திற்குத் தேவையான இதர நுகர்வுப் பொருள்களையும் விற்பனை செய்கின்றன. 1970-ஆம் ஆண்டு, 670 கோடி ரூபாய் மதிப்புள்ள குடும்பத்திற்குத் தேவையான பல பொருள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. விவசாயத்திற்குத் தேவையான இயந்திரங்கள் மீதும் பெருமளவில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 1955-ஆம் ஆண்டு இவ்வாறு செய்யப்பட்ட முதலீட்டின் மொத்த மதிப்பு 59 பிலியன் யென் ஆகும். ஆனால், 1966-ஆம் ஆண்டு இயந்திரங்கள்மீது செய்யப்பட்டிருந்த முதலீடு 200 பிலியன் யென் எனத் தெரிகின்றது.

மருத்துவத் துறையிலும் உறுப்பினர்களுக்கு உதவி தருகின்றன ஜப்பானின் கூட்டுறவுச் சங்கங்கள். உறுப்பினர்களுக்கு அவ்வப்போது தேவையான மருத்துவ வசதிகளை அளிப்பதுடன்

18000 படுக்கைகளைக் கொண்ட 173 மருத்துவ மனைகளையும் தொடங்கியுள்ளன. ஜப்பானியக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களின் உடல் நலத்தையும் கவனித்து வருவதால், உறுப்பினர்கள் 'உள்ள வலி'யுடன் 'உடல் வலிவையும்' பெற்றுத் திகழ்கின்றனர்.

இக்கூட்டுறவுச் சங்கங்கள் பண்ணைகளின் 'செயற்பாடு' களிலும் (Operations) விவசாயிகளுக்கு உற்ற நண்பனாக உள்ளன. எந்தெந்தப் பகுதிகளில் எவ்வகைப் பயிர்களை விளைவிக்கலாம் என்பதை உறுப்பினர்களுக்கு உரிய முறையில் சோதனைகள் மூலம் அறிவுறுத்துகின்றன. மேலும், விவசாயத்திற்கான திட்டங்கள் வகுப்பது பற்றியும் உறுப்பினர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. உற்பத்திப் பெருக்கத்திற்கான ஆலோசனைகளும் அவ்வப்போது வழங்கப்படுகின்றன.

உரங்களை எவ்வாறு பயன்படுத்துவது, விவசாய இயந்திரங்களை எவ்வாறு இயக்குவது, பூச்சி கொல்லி மருந்துகளை எவ்வாறு முழுமையாக உபயோகிப்பது போன்ற வினாக்களுக்கும் இச்சங்கங்கள் சிறப்பான முறையில் விடையளிக்கின்றன. மேலும், புதிய விதைகளின் கண்டுபிடிப்பு பற்றியும் உறுப்பினர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு, ஜப்பானியப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் அளிப்பு, உறுப்பினர்களிடமிருந்து வைப்புத் தொகையைப் பெறுதல், பொருள்களுக்கு விற்பனையேற்பாடு செய்தல், உறுப்பினர்களுக்குத் தேவையான விவசாயப் பொருள்களையும் குடும்பத்திற்குரிய தேவைப் பொருள்களையும் விற்பனை செய்தல் போன்ற சிறப்பான பணிகளைச் சீரிய முறையில் செய்து வருகின்றன.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு பணிகளைத் தவிர, வேறுசில பணிகளையும் ஜப்பானியக் கூட்டுறவுச் சங்கங்கள் செய்து வருகின்றன. ஜப்பானிய விவசாயக் கூட்டுறவுச் சங்கச் சட்டம் அப்பணிகளைச் சிறப்பாக வரிசைப்படுத்திக் கூறியுள்ளது. அவையாவன :

1. கூட்டுறவுப் பண்ணை விவசாயத்தின் மூலம் உற்பத்தித் திறனையும், உழைப்பின் தரத்தையும் உயர்த்துதல் ;

2. நீர்ப்பாசன வசதிகளைத் தேவையான அளவிற்கு ஏற்படுத்துதல் ;

3. உறுப்பினர்களின் பொருளாதார நிலையைப் புதிய கிராமக் கைத்தொழில்கள் கொண்டு உயர்த்துதல் ;

4. உறுப்பினர்களின் சொத்துக்களுக்கும், ஏனைய உடைமைகளுக்கும் இழப்பு ஏற்படாவண்ணம் 'காப்பீடு' (Insurance) செய்வித்தல் ;

5. விவசாயச் சமூகத்திற்குத் தேவையான வாழ்க்கை வசதிகளைப் பெருக்குதல் ;

6. கூட்டுறவுக் கல்வியை முறையாகப் பரப்புதல் ;

7. உறுப்பினர்களின் பொது நலனுக்குத் தேவையான எல்லாக் காரியங்களையும் சிறப்பாகச் செய்வித்தல்.

ஜப்பானின் கூட்டுறவுக் கூட்டிணைப்புகள் (Federations)

ஜப்பானின் விவசாயத் துறையில் இருவகைக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. அவை 'பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்', 'சிறப்பு நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்' ஆகும். இச்சங்கங்கள் தங்கள் நலன் கருதித் தங்களுக்குள் கூட்டிணைப்புகளை உருவாக்கிக் கொண்டுள்ளன. இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்சேர்ந்து ஒன்று ஒரு கூட்டமைப்பை உருவாக்கிக்கொள்ள இயலும். இவ்வாறு அமைக்கப்பட்ட அமைப்பு 'விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டிணைப்பு' என வழங்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட செயல்களில் ஈடுபடுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், கூட்டிணைப்பின் செயல்கள் ஓர் எல்லைக் கோட்டிற்குள் வரையறுக்கப்பட்டுள்ளன. மாவட்ட அளவில் இயங்கும் கூட்டிணைப்புகள் (Prefectural Federations) 'கடன் அளிப்பையும்' பிற பணிகளையும் ஒரு சேர இணைத்துச் செயற்பட இயலாது. ஜப்பானியக் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் உருவாக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களே கூட்டிணைப்பின் உறுப்பினர்களாக விளங்க முடியும். உறுப்பினர்களின் தேவைக்கேற்பக் கடன் வசதிகளை அளிக்க, ஜப்பானியக் கூட்டுறவுச் சங்கங்கள் 46 'கூட்டுறவுக் கடன் கூட்டிணைப்புகளை' (Credit Co-op. Federations) அமைத்துள்ளன. உறுப்பினர்களின் நன்மையைக் கருதி, கொள்முதல் கூட்டிணைப்புகள், விற்பனைக் கூட்டிணைப்புகள் ஆகியவற்றைப் பிரதேச அளவிலும், தேசிய அளவிலும் ஜப்பானியக் கூட்டுறவு இயக்கம் அமைத்துள்ளது. 'மீன்பிடிப்புத்

தொழிலு'க்காகவும் (Fisheries), விவசாயத்திற்காகவும் இக்கூட்டிணைப்புகள் 'மத்தியக் கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஜப்பானியக் கூட்டுறவு அமைப்பில், இக்கூட்டிணைப்புகள் பெரும் பங்கு வகிக்கின்றன. விற்பனையேற்பாட்டுத் துறையில், 13 சதவிகிதம் விவசாயப் பொருள்களே தனிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களால் விற்பனை செய்யப்படுகின்றன. எஞ்சிய விவசாயப் பொருள்கள் பிரதேசக் கூட்டிணைப்புகளாலும், தேசியக் கூட்டிணைப்புகளாலும் விற்பனை செய்யப்படுகின்றது. அரிசி விற்பனையில் 10 சதவிகிதமே சங்கங்களின் உறுப்பினர்களால் உள்ளூர்ச் சந்தைகளில் விற்பனை செய்யப்படுகின்றது. எஞ்சியுள்ள அரிசி முழுவதும் கூட்டுறவுக் கூட்டிணைப்புகளால் விற்பனை செய்யப்படுகின்றது.

விவசாயத்திற்குத் தேவையான பொருள்களும் கூட்டிணைப்புகள் மூலமாகவே விற்பனை செய்யப்படுகின்றன. உறுப்பினர்களின் தேவைகளை அறிந்து, கூட்டுறவுச் சங்கங்கள் 'தேசியக் கொள்முதல் கூட்டமைப்பு'டன் தொடர்பு கொள்கின்றது. இக்கூட்டமைப்பு, பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளிடமிருந்து தேவையானவற்றைப் பெற்று, உறுப்பினர்களுக்கு விவசாயப் பொருள்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்கின்றது. ஜப்பானின் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வழங்கும் விவசாயப் பொருள்களில் 65 சதவிகிதம் இக்கூட்டமைப்புகள் மூலம் பெறுபவையேயாகும்.

மீன்பிடிப்புக் கூட்டுறவுச் சங்கங்களும் இக்கூட்டிணைப்புகளைப் பிரதேச அளவிலும், தேசிய அளவிலும் (National Federation of Fisheries Co-op. Associations) அமைத்துள்ளன. இக்கூட்டிணைப்புகள் சுமார் 55 சதவிகித மீன் வகைகளையும், 28 சதவிகித கடல் பாசி, கடல் பூண்டு (Sea-Weeds) போன்ற தாவர வகைகளையும், 17 சதவிகிதப் பிற கடற் பொருள்களையும் சிறப்பாகக் கையாளுகின்றன. 1966-ஆம் ஆண்டு, 12 பிலியன் யென் மதிப்புள்ள பொருள்களை உறுப்பினர்களாக விளங்கிய கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்துள்ளன இக்கூட்டமைப்புகள்.

மேலும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவ்வப்போது அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றன இக்கூட்டுறவுக் கூட்டமைப்புகள். நிர்வாகத் துறையிலும், திட்டங்கள் வகுப்பதிலும் இக்கூட்டமைப்புகள் மீன்பிடிப்புக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உறுதுணையாக விளங்குகின்றன.

வனக் கூட்டுறவுச் சங்கங்களும் இத்தகைய கூட்டிணைப்புகளை உருவாக்கத் தவறவில்லை. இச்சங்கங்கள் 46 மாவட்ட கூட்டிணைப்புகளையும், ஒரு தேசியக் கூட்டிணைப்பையும் அமைத்துள்ளன. 1962-ஆம் ஆண்டு, 10 பில்லியன் யென் மதிப்புள்ள வனப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. கல்வி வளர்ச்சிக்கெனவும், விளம்பரத்திற்கெனவும் ஒரு 'தேசிய அமைப்பு' (National Union of Agricultural Co-operative) உருவாக்கப்பட்டுச் செவ்வனே செயலாற்றி வருகின்றது.

இக்கூட்டிணைப்புகளே ஜப்பானின் கூட்டுறவு இயக்கத்திற்கு முதுகெலும்பாகத் திகழ்கின்றன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

மீன்பிடிப்புக் கூட்டுறவுச் சங்கங்கள்

ஜப்பானின் கடற்கரைப் பகுதிகளில் வாழும் சுமார் 8 இலட்சம் மக்கள் மீன்பிடிப்புத் தொழிலையே நம்பி வாழ்கின்றனர். இக்கூட்டுறவுச் சங்கங்கள் வெகு காலத்திற்கு முன்பிருந்தே இந்நாட்டில் இயங்கி வருபவையாகும். கூட்டுறவு இயக்க வளர்ச்சியில் ஜப்பானின் மீன்பிடிப்புக் கூட்டுறவுச் சங்கங்களும் பெரும் பங்கு வகிக்கின்றன என்று சொல்ல இயலாவிடினும், ஒரு கணிசமான பங்கைப் பெற்றுள்ளன என்பதை எவரும் மறுக்க முடியாது. விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களைப்போல் மீன்பிடிப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் விரைவாக வளர்ச்சி பெறவில்லை. ஜப்பானியப் பொருளாதாரத்தை உயர்த்துவதில் இச்சங்கங்களும் உறுதுணையாக விளங்குகின்றன. 1966-ஆம் ஆண்டு, ஜப்பானிய மீன்பிடிப்புச் சங்கங்களின் எண்ணிக்கை 4009 ஆகும். இச்சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கை 12 இலட்சமாகும். இக்கூட்டுறவுச் சங்கங்களைத் தவிர, 832 மீன் உற்பத்திச் சங்கங்களும், 236 மீன் பதப்படுத்தும் சங்கங்களும் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருப்பது போலவே, உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குறைவாகவே உள்ளது. இனி, இச்சங்கங்களின் பணிகளை ஆராய்வோம்.

மீன்பிடிக்கும் உரிமைகள் யாவும் கூட்டுறவுக் கழகங்களுக்கு சட்டபூர்வமாக வழங்கப்பட்டுள்ளன. இவ்வுரிமைகளைச் சங்க உறுப்பினர்கள் யாதொரு தடையுமின்றி பயன்படுத்தி வருகின்றனர். சில கூட்டுறவுச் சங்கங்கள் மீன்பிடிப்பதற்குத் தேவையான வலைகளை உறுப்பினர்கட்குக் கொடுத்து உதவுகின்றன. வேறு சில சங்கங்கள் மீன்பிடிக்கத் தேவையான விசைப் படகுகளையும்

சொந்தமாகப் பெற்றுள்ளன. இப்படகுகள் உறுப்பினர்களுக்குப் பெரிதும் உதவுகின்றன. இச்சங்கங்களின் எண்ணிக்கை 25 ஆகும்.

இச்சங்கங்கள் கொள்முதல், விற்பனையேற்பாடு ஆகிய துறைகளிலும் உறுப்பினர்களுக்கு அவ்வப்போது அறிவுரைகள் வழங்குகின்றன. இதுதவிர, நவீன முறையில் மீன்பிடித்தல், படகுகளை இயக்கும் முறை போன்றவையும் உறுப்பினர்களுக்குப் போதிக்கப்படுகின்றன. இச்சங்கங்கள் சில சோதனைச் சாலைகளையும் பெற்றுள்ளதால், அவ்வப்போது நிகழ்த்தப்படும் ஆராய்ச்சிகளின் முடிவுகளை உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க முடிகின்றது. உறுப்பினர்கள் அவற்றிற்கேற்பச் செயலாற்ற இயலுகின்றது.

இச்சங்கங்களின் தலையாய பணி, சிறப்பான முறையில் மீன்களுக்கு விற்பனையேற்பாடு செய்தலேயாகும். உறுப்பினர்களின் விற்பனைப் பொருளாகிய மீன் உணவை இச்சங்கங்கள் தேவை நிரம்ப உள்ள சந்தைகளுக்கு எடுத்துச் சென்று நல்ல, நியாய விலைக்கு விற்று உறுப்பினர்களின் பொருளாதார நிலையை உயர்த்துகின்றன. பிடிக்கப்படும் மீன்களை நன்கு பதப்படுத்தி தகர அடைப்புகளில் அடைத்து அங்காடிகளில் விற்கின்றன இச்சங்கங்கள். சந்தைகளில் நல்ல சூழ்நிலைகள் உருவாகும் வரை, மீன்களைப் பத்திரப்படுத்தியும் வைக்கின்றன இக்கூட்டுறவுச் சங்கங்கள். இதையொட்டிக் குளிர் சாதன வசதிகளைக் கொண்ட அறைகளும் அமைக்கப்படுகின்றன. 1951-ஆம் ஆண்டு 47 பிலியன் யென் மதிப்புள்ள பொருள்கள் இச்சங்கங்களால் விற்பனை செய்யப்பட்டன. 1966-ஆம் ஆண்டு, மொத்த விற்பனை 300 பிலியனுக உயர்ந்தது. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தின் சராசரி மொத்த விற்பனை 77 மிலியன் யென் ஆகும். மீன்களின் பெரும் பகுதி கூட்டுறவுச் சங்கங்களின் சொந்த அங்காடிகளில் உடனே விற்பனை செய்யப்படுகின்றது. தனியார் துறையில் வணிகம் செய்துவரும் மொத்த வியாபாரிகளுக்கும், 'தரகர்'களுக்கும் (Broker) 'ஏலம்' வாயிலாக மீன்கள் விற்கப்படுகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலும் 'தரகுமுகவர்'களாகவே பணியாற்றுகின்றன. இவ்வாறு 'தரகுமுகவர்'களாகப் (Commission Agents) பணியாற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் 3-லிருந்து 6½ சதவிகிதம் வரை தரகுத் தொகையாகப் பெறுகின்றன. சில கூட்டுறவுச் சங்கங்கள் குளிர் சாதன வசதிகளைக் கொண்ட பண்டகங்களையும் பெற்றுள்ளன, எனவே, இவற்றில் மீன்களை நன்கு பத்திரப்படுத்தி வைக்க முடிகின்றது.

மொத்தக் கூட்டுறவுச் சங்கங்களில் 6 சதவிகிதம் மீன் பிடிப்புத் தொழிலுக்குத் தேவையான பொருள்களைக் கொள்முதல் செய்து உறுப்பினர்களுக்கு அளித்து வருகின்றன. 1951-ஆம் ஆண்டு, 2 பிலியன் யென் மதிப்புள்ள பொருள்கள் இத்தொழிலின் வளர்ச்சிக்கென உறுப்பினர்களுக்கு விற்பனை செய்யப்பட்டன. 1966-ஆம் ஆண்டு, இவ்வாறு உறுப்பினர்களுக்கு விற்பனை செய்யப்படும் பொருள்களின் மதிப்பு 40 பிலியன் யென் என கணக்கிடப்பட்டுள்ளது. பொதுவாக, மீன் பிடிக்கும் வலைகள், படகுகளை இயக்கத் தேவையான எரிபொருள் போன்றவை விற்பனை செய்யப்பட்டன.

இக்கூட்டுறவுச் சங்கங்களில் 50 சதவிகிதம், உறுப்பினர்களுக்குத் தேவையான கடன் வசதிகளையும் அளித்துவருகின்றன. எனவே, இச்சங்கங்கள் உறுப்பினர்களிடமிருந்து 'வைப்புத் தொகை'யைப் பெற்று வருகின்றன. இவ்வைப்புத் தொகையைக் கொண்டே உறுப்பினர்களுக்கு நிதி வசதிகள் வழங்கப்படுகின்றன. விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களில் இருப்பதுபோல, இச்சங்கங்களின் வைப்புத் தொகை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் கடன் தொகையைவிட அதிகமாக இருப்பதில்லை. 1966-ஆம் ஆண்டு, சங்கங்களின் வைப்புத் தொகை 86 பிலியன் யென் ஆகும்; ஆனால், உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் 'கொடு கடன்' 92 பிலியன் யென் ஆகும். பொதுவாக, இச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வழங்கியிருக்கும் கடனை மீன்களின் விற்பனையைக் கொண்டு திருப்பிப் பெறுகின்றன.

உறுப்பினர்களின் வைப்புத் தொகையைவிட கடன் தொகை அதிகமாக இருப்பதால், நடைமுறை முதலில் பற்றுக்குறை ஏற்படுகின்றது. இதைச் சரிப்படுத்தும் பொருட்டு ஜப்பானின் இக் கூட்டுறவுச் சங்கங்கள் 'கூட்டுறவுக் கடன் கூட்டிணைப்பு'களிடமிருந்து கடன் வசதிகளைப் பெறுகின்றன. அரசாங்கத்தின் 'பொறுப்புறுதி'யுடன் சில தனியார் நிறுவனங்களிடமிருந்தும் இச்சங்கங்கள் தேவையான கடன் வசதிகளைப்பெற்று, உறுப்பினர்களுக்கு உதவிகள் வழங்கி வருகின்றன.

உறுப்பினர்கள் விசைப்படகுகள், வலைகள், மீன் பிடிக்கும் நவீன தூண்டில்கள் போன்றவற்றை உருவாக்குவதற்கும், நீண்ட நாட்களாகத் தொடர்ந்துவரும் கடன்களைக் களைவதற்கும் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து நிதி வசதிகளைப் பெறுகின்றனர். உறுப்பினர்களின் பொருளாதார நிலை, நாணய நன்மதிப்பு, ஆகியவற்றை நன்கு ஆராய்ந்த பிறகே கடன் வசதிகள் அளிக்கப்

படுகின்றன. வைப்புத் தொகைக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 3-லிருந்து 5 சதவிகித வட்டி அளிக்கின்றன. உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகைக்கு 9-லிருந்து 10 சதவிகிதம் வட்டியாக வசூலிக்கப்படுகின்றது. நீண்ட காலக் கடன் வசதிகளுக்கு உறுப்பினர்களிடமிருந்து 11 சதவிகித வட்டி பெறப்படுகின்றது.

ஜப்பானின் வனக் கூட்டுறவுச் சங்கங்கள்

ஜப்பானின் மொத்த நிலப்பரப்பில் 80 சதவிகிதம் உயர்ந்த மலைகளையும், ஆறுகளையும் கொண்டுள்ளது. உயர்ந்த மலைகளின் காரணமாக, அடர்ந்த காடுகள் எங்கும் பரவிக் கிடக்கின்றன. இவ்வனங்களின் வளர்ச்சிக்கென கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன,

ஜப்பானின் வனக் கூட்டுறவுச் சங்கங்கள் இருவகைப்படும்—

(i) வனக் கூட்டு நலச்சங்கங்கள் (Forestry Joint Facility Associations);

(ii) வன உற்பத்திச் சங்கங்கள் (Forestry Production Associations).

1966-ஆம் ஆண்டு முதல் வகைக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 3,158 ஆகும். மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 1·7 மில்லியன். அதாவது, சராசரியாக ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் 434 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. உற்பத்தி, கொள்முதல் செய்தல், விற்பனையேற்பாடு செய்தல் ஆகிய மூன்றுமே இச்சங்கங்களின் முக்கியப் பணிகளாகும். இச்சங்கங்கள் உறுப்பினர்களுக்குக் கடன் வசதிகளை அளிக்கின்றன; ஆனால், அவர்களிடமிருந்து வைப்புத் தொகையைப் பெறுவதில்லை. 1966-ஆம் ஆண்டு இச்சங்கங்கள் உறுப்பினர்களுக்கு 28 பில்லியன் யென் கடனுக வழங்கியிருக்கின்றன. 1962-ஆம் ஆண்டு, இச்சங்கங்கள் மரக்கரி, விறகுக் கட்டை (Fire-Wood) போன்ற வனப் பொருட்களுக்கு விற்பனையேற்பாட்டைச்செய்தன. இவ்வாறு விற்பனையேற்பாடு செய்யப்பட்ட பொருள்களின்மதிப்பு 739 மில்லியன் யென் ஆகும். பெரும்பாலான பொருள்கள் 'அனுப்பீடு' முறையில்தான் (Consignment) விற்பனை செய்யப்பட்டன. சில சங்கங்கள் உறுப்பினர்களுக்குத் தேவையான 'நாற்று' அல்லது 'முளை'யை (Seedlings) விற்பனை செய்து வந்தன. ஆனால், இவ்விற்பனை பெருமளவில் வளரவில்லை,

இரண்டாம் வகைச் சங்கங்களான உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள், காடுதளின் கூட்டு நிர்வாகத்தின் அடிப்படையில் வரையறுக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் சாமான்கள் செய்ய உதவும் மரம், மரக்கரி, விறகு போன்ற வற்றை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றன. 'மரச் சாமான்கள் செய்ய உதவும் மரத்தின்' மூலம் (Lumber) இச் சங்கங்கள் கணிசமான விற்பனைத் தொகையைப் பெறுகின்றன. 1962-ஆம் ஆண்டின் மொத்த விற்பனை 5·5 பிலியன்யென் ஆகும். வன வளர்ச்சிக்குத் தகுந்த இடங்களை வனங்களாக மாற்றும் (Afforestation) பணியிலும் இக்கூட்டுறவுச் சங்கங்கள் ஈடு பட்டுள்ளன, இம்முயற்சியை ஜப்பானிய அரசாங்கம் தேவை யான நிதி வசதிகளை அளித்து ஊக்குவிக்கின்றது.

ஜப்பானின் இக்கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்டக் கூட்டமைப்புகளையும், தேசியக் கூட்டமைப்பொன்றையும் உரு வாக்கியுள்ளன. இக்கூட்டமைப்புகளே கூட்டுறவுச் சங்கங்களைச் சிறப்பாக வழிநடத்திச் செல்பவையாகும்.

வன விவசாய மத்தியக் கூட்டுறவு வங்கி (Central Co-op. Bank of Agriculture and Forestry)

விவசாயம், வன வளர்ச்சி, மீன் பிடிப்பு ஆகிய துறைகளில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் 'தேசிய' உயர்மட்ட அமைப்பே 'மத்தியக் கூட்டுறவு வங்கி' எனப்படும். இத்தேசிய அமைப்பின் உறுப்பினர்களாக 16,743 கூட்டுறவுச் சங்கங்களும், அச்சங்கங்களினால் உருவாக்கப்பட்டுள்ள கூட்டமைப்புகளும் விளங்குகின்றன (1968). இம்மத்தியக் கூட்டுறவு வங்கியின் பங்கு மூலதனத்தின் ஒரு பகுதியை ஜப்பானிய அரசு அளித்துள்ளது. எனினும், அரசின் பங்குகள் மெள்ளமெள்ள முழுவதும் திருப்பித் தரப்பட்டு விட்டன (at 7·5%) இம்மத்திய வங்கி நாடு முழுவதும் சிறந்த முறையில் பணியாற்றுவதற்கென 40 கிளை அலுவலகங் களைப் பெற்றுள்ளது.

இத்துடன் இணைக்கப்பட்டு உறுப்பினர்களாக விளங்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான கடன் வசதிகளை அளித்தலே இம்மத்திய வங்கியின் முக்கியப் பணியாகும். பெரும் பாலான விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் போதுமான நிதி வசதிகளைப் பெற்றிருப்பினும், ஜப்பானின் வடக்குப் பகுதியில் இயங்கிவரும் கூட்டுறவுச் சங்கங்கள் போதுமான நிதி வசதிகளைப்

பெற்றிருமல், பல பிரச்சினைகளை எதிர்நோக்கி இயங்கி வருகின்றன. இதுபோலவே, மீன் பிடிப்புக் கூட்டுறவுச் சங்கங்களும், வனக் கூட்டுறவுச் சங்கங்களும் போதிய நிதி வசதிகளின்றித் தவிக்கின்றன. இச்சங்கங்கள் யாவும், இம்மத்தியக் கூட்டுறவு வங்கியிடமிருந்துதான் போதிய நிதி வசதிகளைக் கடனாகப் பெற்று உறுப்பினர்களுக்கு உதவுகின்றன. விவசாய வளர்ச்சிக்கென அமைக்கப்பட்டிருந்த நிதிக் 'கூட்டுரு' (Corporation) இவ்வங்கியினால் அகற்றப்பட்டதேயாகும். ஜப்பானிய அரசாங்கம் உறுப்பினர்களிடமிருந்து அரிசி, பார்லி போன்ற பொருள்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்கின்றதல்லவா? அவ்வாறு கொள்முதல் செய்வதால் உறுப்பினர்களுக்குத் தரவேண்டிய பணத்தை இம்மத்திய வங்கியின் மூலமாகத்தான் வழங்குகின்றது. எனவே, அரசிற்கும் இம்மத்திய வங்கி உறுதுணையாக விளங்குகின்றது.

இவ்வாறு பணிபுரிந்து வரும் மத்தியக் கூட்டுறவு வங்கியின் நிதி நிலையைப் பற்றி ஆராய்வோம்.

இம்மத்தியக் கூட்டுறவு வங்கி இதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து 'வைப்புத் தொகை'யாக ஒரு கணிசமான தொகையைப் பெறுகின்றது. மொத்த வைப்புத் தொகையில் சுமார் 90 சதவிகிதம் உறுப்பினர்களாக விளங்கும் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தே பெறப்படுகின்றது. 1968-ஆம் ஆண்டில், இவ்வங்கியின் மொத்த வைப்புத் தொகை 1200 பிலியன் யென் ஆகும். 1952-ஆம் ஆண்டில் 75 கோடி ரூபாய் வைப்புத் தொகையைக் கொண்டு பணியாற்றி வந்த இம்மத்திய வங்கி தன் முறையான நிருவாகத்தினலும், செயற்பாடுகளினலும் மாபெரும் வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

ஜப்பானின் தலைமை வங்கியிடமிருந்தும் (Bank of Japan) இக்கூட்டுறவு வங்கி அவ்வப்போது நிதி வசதிகளைக் கடனாகப் பெற்று உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றி வருகின்றது. கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெறும் வைப்புத் தொகையை நன்கு உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. 1952-ஆம் ஆண்டில், ஜப்பானின் தலைமை வங்கியிடமிருந்து இக்கூட்டுறவு வங்கி 21,508 பிலியன் யென் கடனாகப் பெற்றது. 1956-ஆம் ஆண்டில், இக்கடன் தொகை 33 பிலியன் யென் எனக் குறைந்தது. 1969-ஆம் ஆண்டில் இம்மத்தியக் கூட்டுறவு வங்கி தலைமை வங்கிக்கு 2·7 பிலியன் யென் மட்டுமே கடன்பட்டிருந்தது. நீண்ட காலக் கடன்களைப் பெற விரும்

பினல், இம்மத்திய வங்கி 'கடனீட்டுப் பத்திரங்களை'(Debentures) வெளியிட்டு நிதி வசதிகளைப் பெருக்கிக் கொள்கின்றது. 1969-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம், கடனீட்டுப் பத்திரங்களின் மொத்த மதிப்பு 392 பிலியன் யென் ஆகும். உறுப்பினர்களுக்கு வழங்கியுள்ள கடன் தொகையைவிட அவர்களிடமிருந்து பெற்றுள்ள வைப்புத் தொகை அதிகமாகும். இம்மத்தியக் கூட்டுறவு வங்கி அதிகமாக இருக்கும் நிதியைக் கொண்டு உறுப்பினரல்லாதவர்களுக்கும் கடன் வசதிகள் அளிக்கின்றது. இத்தகைய நிதி உதவிகள் விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட தொழில்களுக்கே அளிக்கப்படுகின்றன. உதாரணமாக, உரத் தொழிற்சாலைகள், மது வகைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், முதலானவற்றிற்கே நிதி வசதிகள் அளிக்கப்படுகின்றன. இவை தவிர, மீன் பிடிப்புத் தொழில், வன வளர்ச்சித் தொழில் ஆகிய வற்றுடன் தொடர்புள்ள பிறதொழில்களுக்கும் நிதி உதவிகள் செய்யப்படுகின்றன. ஜப்பானியக் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லா வற்றிற்கும் உறுதுணையாக விளங்குவது இம்மத்தியக் கூட்டுறவு வங்கியேயாகும்.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

ஜப்பானில் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் 1948-ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டாலும், தொடக்கத்திலிருந்தே அதன் வளர்ச்சி குன்றியே காணப்பட்டது. உயர்ந்த நோக்கங் களைக் கொண்டே நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப் பட்டாலும் எதிர்பார்த்த அளவு அவை வெற்றிபெற இயலவில்லை. நிர்வாகச் சீர்கேடும், உறுப்பினர்களின் குறைந்த ஈடுபாடுமே இதற்குக் காரணங்களாகும்.

1948-ஆம் ஆண்டில்தான், இவ்வியக்கத்திற்கான விதை அரசாங்கச் சட்டத்தின் மூலம் (Consumers' Livelihood Co-op. Societies Act) விதைக்கப்பட்டது. 1969–ஆம் ஆண்டு முடிய 1172 கூட்டுறவுச் சங்கங்களே இச்சட்டத்தின் கீழ்ப்பதிவு செய்யப் பட்டிருந்தன. நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தில் சில்லறைக் கூட்டுறவுச் சங்கங்கள், காப்பீடுக் கூட்டுறவுச் சங்கங்கள். சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், சில்லறை வணிகத்தையும் காப்பீட்டுப் பணியையும் செய்யவல்ல கூட்டுறவுச் சங்கங்கள், போன்றவை பணியாற்றி வருகின்றன.

ஒவ்வொரு வகைக் கூட்டுறவுச் சங்கங்களும் ஜப்பானிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவே பாடுபடு கின்றன. இச்சங்கங்களின் மூலம் மக்களுக்குத் தேவையான

நுகர்வுப் பொருள்கள் நியாய விலையில் விற்கப்படுகின்றன. இதன் விளைவாக, 'கள்ளச் சந்தை' ஜப்பானில் அறவே அகற்றப் பட்டுள்ளது. இனி, இச்சங்கங்களைப் பற்றிய புள்ளி விவரங் களைக் காண்போம்.

கூட்டுறவுச் சங்கத்தின் வகை	சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர் எண்ணிக்கை
1. சில்லறைக் கூட்டுறவுச் சங்கங்கள் (Retail Societies)	563	1.92 மிலியன்
2. சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் (Service Co-operatives)	121	0.25 மிலியன்
3. காப்பீடுக் கூட்டுறவுச் சங்கங்கள் (Insurance Societies)	71	5.25 மிலியன்
4. சில்லறை விற்பனை, சேவை சங்கங்கள் (Retail and Service Societies)	371	1.51 மிலியன்
5. சில்லறை விற்பனை, காப்பீடுச் சங்கங்கள் (Retail and Insurance Socs.)	7	0.25 மிலியன்
6. சேவை, காப்பீடுச் சங்கங்கள் (Service and Insurance Socs.)	5	0.43 மிலியன்
7. பிற கூட்டுறவுச் சங்கங்கள் (Other Co-operatives)	34	0.45 மிலியன்
மொத்தம் (Total)	1,172	10.08 மிலியன்

1969-ஆம் ஆண்டில் இயங்கிவந்த நுகர்வோர் சில்லறைக் கூட்டுறவுக் கடைகளின் எண்ணிக்கை சுமார் 4000 ஆகும். இவை களின் மொத்த விற்பனை 300 கோடி ரூபாயாகும். ஒவ்வோர் உறுப்பினரும் சராசரியாக ரூபாய் 550 மதிப்புள்ள பொருள்களைக் கொள்முதல் செய்கின்றனர். பெரும்பாலான சங்கங்கள் தொழிற் சாலைகளிலும், பிறதொழில் நிலையங்களிலும் அமைக்கப்பட்டிருக் கின்றன. தொழிலாளர்களின் நலம் கருதி முதலாளிகளால் இச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் மருத்துவச் சங்கங்கள், சலவை நிலையங்கள், முடிதிருத்தும் நிலையங்கள், உண்டிச்

சாலைகள், பொதுக் குளியலறைகள் போன்றவை நிருவகிக்கப்படுகின்றன. 1966-ஆம் ஆண்டில், இச்சங்கங்களின் மொத்த விற்பனை சுமார் 205 மிலியன் ரூபாயாகும். ஜப்பானியக் கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பு அம்சம் 'பொது நலச் சங்கங்களாகும்' உறுப்பினர்களின் உடல்நலத்திற்கென 30-லிருந்து 50 படுக்கைகளைக் கொண்ட 29 மருத்துவமனைகளை இச்சங்கங்கள் நடத்தி வருகின்றன.

இச்சேவைச் சங்கங்கள் ஆண்டுதோறும் 35 மிலியன் ரூபாய் மதிப்புள்ள சேவைகளை உறுப்பினர்களின் நலன் கருதிச் செய்து வருகின்றன. ஜப்பானில் கல்லூரி மாணவர்கள் சிறப்பான கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கியுள்ளனர். இச்சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கை 5·2 இலட்சமாகும். இதில் கல்லூரிப் பேராசிரியர்களின் எண்ணிக்கை 35,000 ஆகும். இச்சங்கங்கள் கல்லூரி மாணவர்களின் தேவைப் பொருள்களையும், குடும்பத்திற்குரிய தேவைப் பொருள்களையும் விற்பனை செய்து வருகின்றன. 1967-ஆம் ஆண்டில் இச்சங்கங்களின் மொத்த விற்பனை 200 மிலியன் ரூபாயாகும்.

ஜப்பானின் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் போதிய பலத்தைப் பெற்றிருக்கவில்லை. தேசியப் பொருளாதாரத்தை இச்சங்கங்கள் ஓரளவிற்கே உயர்த்துகின்றன. 15 சதவிகித குடும்பங்களே இச்சங்கங்களில் உறுப்பினர்களாக விளங்குகின்றன. ஜப்பானின் மொத்த விற்பனையில் 10 சதவிகிதமே இச்சங்கங்களால் செய்யப்படுகின்றது.

ஜப்பானில் 20 குடும்பங்களுக்கு ஒரு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் இயங்கி வருகின்றது. எனவே, இக்கூட்டுறவுச் சங்கங்களிடையே கடும்போட்டி நிலவுவதால் போதுமான இலாபம் ஏற்படுவதில்லை. உறுப்பினர்களில் பலர் சங்கங்களின் வளர்ச்சிக்கென உழைப்பதில்லை. மேலும், பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை உரிமையாளர்கள் இரகசிய ஒப்பந்தங்கள் மூலம் பொருள்களின் அடக்க விலையை உயர்த்தி விடுவதால் இலாபம் ஏற்படுவதற்குப் பதிலாக இழப்பே ஏற்படுகின்றது.

இரண்டாவதாக, ஜப்பானிய நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் போதிய நிதி வசதிகளைப் பெற்றிருக்கவில்லை. எனவே, 'நடைமுறை முதல்' கூடப் போதுமானதாக இல்லை. இச்சங்கங்களின் முக்கிய நிதி வசதிகள் உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் பங்கு மூலதனத்தையே பெரிதும் நம்பியுள்ளன. 1966-ஆம் ஆண்டில். இச்சங்கங்களின் மொத்த பங்கு மூலதனம் 14·5

மிலியன் ரூபாயாகும். அதாவது, ஒவ்வோர் உறுப்பினரும் சராசரியாக ரூபாய் இருபது மதிப்புள்ள பங்குகளைப் பெற்றுள்ளனர். ஜப்பானியக் கூட்டுறவுச் சட்டம் இச்சங்கங்கள் உறுப்பினர்களிடமிருந்து வைப்புத்தொகை பெறுவதைத் தடை செய்துள்ளது. இச்சங்கங்களுக்குப் போதிய நிதி வசதிகளை அரசாங்கமும் அளிப்பதில்லை. மருத்துவமனைகள், மருந்துக் கடைகள் போன்றவற்றை உருவாக்குவதற்காக 'சேவைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு' மட்டுமே அரசாங்கம் நிதி உதவிகளை அளிக்கின்றது. தற்போது, ஜப்பானின் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 'தொழிலாளர் கூட்டுறவுக் கடன் வங்கி'யிடமிருந்து (Labour Credit Co-operative Bank) தேவையான கடன் வசதிகளைப் பெறத் தொடங்கியுள்ளன. 1969-ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் பெற்றிருந்த மொத்தக் கடன் 55 கோடி ரூபாயாகும்.

தற்போது, ஜப்பானின் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் சில்லறை வணிகத்தில் பலபுதிய உத்திகளைக் கையாளத்தொடங்கியுள்ளன. மக்களை மகிழ்விக்கத்தக்க வகையில் நுகர்வுப் பொருள்கள் அவர்களது இல்லங்களுக்கே கொண்டு சென்று அளிக்கப்படுகின்றன. தனியார் கடைகளிலும் கூட்டுறவுச் சங்கங்களின் பண்டங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. உறுப்பினர்களின் நன்மைக்காகக் 'கூட்டுக் கொள்முதல்' (Joint Purchase) முறையும் நடத்தப்படுகின்றது. மேலும், பல்வேறு இடங்களில் வாழும் மக்களுக்கு அஞ்சல் நிலையம் மூலமாகவும் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன (Mail Order Business). எனவே, பொருள்களைப் பெற விரும்புவோர் கூட்டுறவுப் பண்டகசாலைக்கு வருகை புரியாமலேயே எளிதில் தேவையான பொருள்களைக் கொள்முதல் செய்ய இயலுகின்றது. சந்தைகளில் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப இக்கூட்டுறவுப் பண்டகசாலைகள் இயங்கி வருகின்றன. 'பேரங்காடிகளும்' (Super Markets), நுகர்வோர் தங்கள் விருப்பம் போல் பொருள்களைத் தேர்ந்து எடுத்துக் கொண்டு அதற்கான விலையைச் செலுத்தும் வகையில் அமைக்கப் பட்டுள்ள கடைகளும் (Self-Service Shops) ஜப்பானில் அமைக்கப்பட்டுள்ளன. இவைகளின் எண்ணிக்கை சுமார் 200 ஆகும். இக்கூட்டுறவுப் பண்டகசாலைகள் உறுப்பினர்களுக்குத் தேவையான பொருள்களைப் 'பற்றுவழி' முறையிலும் விற்பனை செய்து வருகின்றன. இவ்வாறு வழங்கப்படும் கடன் தொகை (பொருள்களாக) உறுப்பினர்களின் மாத வருவாயிலிருந்து கழிக்கப்பட்டு முதலாளிகளால் சங்கங்களுக்கு நேரடியாகச் செலுத்தப்படுகின்றது. சில கூட்டுறவுச் சங்கங்கள் ரொட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகளையும், அரிசி அரைப்பு இயந்திரத் தொழிற்சாலை

களையும் நடத்தி வருகின்றன. ஜப்பானின் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களின் இணைப்புச் சங்கங்களை 28 மாவட்டங்களில் நிறுவியுள்ளன. தேசிய அளவில் மூன்று கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கூட்டமைப்புகள் சுரங்கத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் (Miners' Societies), காப்பீடுச் சங்கங்கள் (Insurance Societies), கல்லூரி மாணவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றிற்கென அமைக்கப்பட்டுள்ளன. நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தில் தலைமை அமைப்பாக 'நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்புச் சங்கம்' விளங்குகின்றது. இவ்வுயர்மட்டக் கழகம் உறுப்பினர்களிடமிருந்து 'சந்தாத் தொகை'யை (Subscriptions) பெற்று, தன் அன்றாடச் செலவுகளைச் செய்து வருகின்றது. இத்தலைமைக் கழகம், பொருள்களின் மொத்த வணிகத்திலும் ஈடுபடுவதால், தேவையான நிதி வசதிகளைத் தானே ஏற்படுத்திக் கொள்கின்றது. அரசாங்கத்திடமிருந்து நிதி வசதிகளை இக்கழகம் எதிர்பார்ப்பதில்லை. இக்கழகம் ஐந்து கிளை அலுவலகங்களையும் மாவட்ட அளவில் அமைத்துள்ளது. கூட்டுறவுக் கல்வியைப் பரப்புவதற்கென ஒரு தனிப் 'பிரிவையும்' (Section) ஏற்படுத்தியுள்ளது. உறுப்பினர்களாக விளங்கும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான பொருள்களை இத்தலைமைக் கழகமே மொத்தமாகக் கொள்முதல் செய்து விநியோகம் செய்வதால் இது 'கூட்டுக் கொள்முதல் அமைப்பென' அழைக்கப்படுகின்றது. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான பொருள்களின் அளவு, தரம் போன்றவற்றைக் குறிக்கும் உத்தரவுகளை (Order) இத்தலைமைக் கழகம் முதலில் சேகரித்து, அதற்குத் தகுந்தவாறு கொள்முதல் செய்கின்றது. பெரும்பாலான பொருள்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நேரடியாகவே அனுப்பப்படுகின்றன. தலைமைக் கழகம், மொத்தமாகப் பொருள்களின் விலையைக் கணக்கிட்டு உற்பத்தியாளர்களுக்குத் தொகையை அளித்து விடுகின்றது. தேர்ந்தெடுக்கப்படும் முக்கியப் பொருள்களின் மேல் இக்கழகத்தின் 'குறி' (Mark) இடப்படுகின்றது. ('Coop' என்று குறியிடப்படுகின்றது.) 1966-ஆம் ஆண்டில் இத்தலைமைக் கழகத்தின் மொத்த விற்பனை 70 மிலியன் ரூபாயாகும். இதன் சராசரி இலாபம் 2·4% என கணக்கிடப்பட்டுள்ளது. இவை தவிர மக்களுடன் தொடர்பு கொள்ளுதல், உறுப்பினர்களுக்குக் கூட்டுறவுக் கல்வியைக் கற்பித்தல், விளம்பர ஏற்பாடுகள் செய்தல் போன்ற பணிகளிலும் இத்தலைமைக் கழகம் ஈடுபட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவ்வப்போது நிருவாகம், கணக்கு வைப்பு முறை, பண்டக சாலையின் ஏற்பாடு அமைப்பு போன்ற பல காரியங்களில்

ஆலோசனைகளும், அறிவுரைகளும் வழங்கப்படுகின்றன. இத் தலைமைக் கழகம் பொருள்களின் விலை உயர்வைத் தடுக்க எல்லா வித ஏற்பாடுகளையும் செய்து வருகின்றது. விலை உயர்வைத் தடுக்க, தொழிற் சங்கங்களுடனும், பெண்கள் சங்கங்களுடனும் நெருங்கிய தொடர்புகொண்டுள்ளது. விலைஏற்றத்தைக் கண்டிப் பதற்கென, சில சமயங்களில் ஆர்பாட்டங்களையும் செய்கின்றது இத்தலைமைக் கழகம். துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் தன் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றது. ஜப்பானில் இயங்கிவரும் அனைத்து நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களையும் இத்தலைமைக் கழகமே வழிநடத்திச் செல்கின்றது. சங்கங்களின் வெற்றி தோல்வி இத்தலைமைக் கழகத்தின் செயற்பாடுகளைப் பொறுத் துள்ளது.

அயல்நாட்டு வாணிகமும் கூட்டுறவு அமைப்பும்

ஜப்பானில் இயங்கிவரும் விவசாயச் கூட்டுறவுச் சங்கங்கள், மீன்பிடிப்புக் கூட்டுறவுச் சங்கங்களுடனும், வனவளர்ச்சிக் கூட் டுறவுச் சங்கங்களுடனும் ஒன்று சேர்ந்து, 1961-ஆம் ஆண்டில் ‘அயல்நாட்டு வாணிகத்தை’ (Foreign Tradc) நடத்துவதற்கென ஒரு தனிக் கூட்டுறவு அமைப்பை (Unico-op. Japan) உருவாக்கி யுள்ளன. 1961-ஆம் ஆண்டு 28,000 டாலர்களாக (U.S. Dollar) இருந்த இக்கூட்டுறவுச் சங்கத்தின் மூலதனம், 1965-ஆம் ஆண்டு 2,80,000 டாலர்களாக உயர்ந்தது. இச்சங்கம் அமெரிக்க ஐக்கிய நாடு, சைனு, இங்கிலாந்து, ஜெர்மனி, சோவியத்து நாடு, இந்தியா, தாய்லாந்து போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டு, சிறந்த முறையில் ஏற்றுமதி இறக்குமதிச் செயல்களைச் செய்து வருகின்றது. 1964-ஆம் ஆண்டு, வணிகத் தொடர்பை அதிகரிக்கும் நோக்கோடு ஓர் அலுவலகத்தைத் ‘தாய்லாந்து’ நாட்டில் இச்சங்கம் நிறுவியது. 1966-ஆம் ஆண்டு, நியூயார்க் நகரில் மேலும் ஓர் அலுவலகத்தை ஏற்படுத்தியது. 1964-ஆம் ஆண்டில், இதன் மொத்த விற்பனை 3·8 மிலியன் டாலர்களாகும். உணவுப் பொருட்கள், கால்நடைத் தீவனம், தாதுப் பொருட்கள், சாமான்கள் செய்யத் தேவையான மரம், சிறு இயந்திரங்கள், இரசாயனப் பொருட்கள் ஆகியவற்றை இச் சங்கம் பொதுவாக இறக்குமதி செய்கின்றது. பழவகைகள், காய்கறிகள், துணி வகைகள், வானொலிப் பெட்டிகள், சிமெண்ட் (Cement), எஃகுப் பொருட்கள், உரங்கள், மருத்துவக் கருவிகள், டெலிவிஷன் (Television) போன்ற பல பொருட்களை ஏற்றுமதி செய்கின்றது இச்சங்கம். இச்சங்கத்தின் சிறந்த் பணிகளால், ஜப்பானிய அரசாங்கம் கணிசமான அந்நியச் செலாவணியைப் பெறுகின்றது.

விற்பனை முறை (Selling System)

ஜப்பானின் நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தில் பொதுவாக மூன்று முறைகளில் தேவைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இனி, அவற்றைப்பற்றி ஆராய்வோம்.

(i) விற்பனை செய்யப்படும் இடத்தில் பண்டகசாலையைச் சேர்ந்த ஒரு விற்பனையாளர் பொருள்களைத் தேவையான நபர்களுக்கு விற்பனை செய்தல். இது, எல்லா நாடுகளிலும் வெகு காலமாக நடந்துவரும் விற்பனை முறையாகும். (Conventional Counter Desk Service)

(ii) வாடிக்கையாளர்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களைப் பொறுக்கி எடுத்து, அவைகளை அருகிலிருக்கும் கூடைகளில் வைத்துப், பிறகு பண்டகசாலையின் விற்பனையாளரிடம் பணத்தை அளித்தல் இரண்டாவது விற்பனை முறையாகும். பொதுவாகப் பண்டகசாலையின் 'வாயிலில்' (Exit) அமர்ந்திருக்கும் நபரிடமே (Cashier) பணம் கொடுக்கப்படுகின்றது. இவ்விற்பனை முறையில், வாடிக்கையாளர்கள் தங்கள் விருப்பப்படி பொருட்களைத் தேர்த்தெடுத்துக்கொள்ள வசதிகள் உள்ளன. (Self-Service System).

(iii) வாடிக்கையாளர்களுக்குத் தேவையான பொருட்களை அவர்களது இல்லங்களுக்குக் கொண்டு சென்று, ஒப்படைக்கும் முறையே (Home Delivery System) மூன்ருவது விற்பனை முறையாகும் இம்முறையில், பண்டகசாலையின் விற்பனையாளர்கள் வாடிக்கையாளர்களின் இல்லங்களுக்குச் சென்று அவர்களது தேவைப் பொருட்களை அறிந்து. அவற்றிற்கேற்பப் பொருள்களை அவர்களுக்கு இல்லங்களிலேயே விநியோகம் செய்கின்றனர்.

இவ்விற்பனை மூலம் பண்டகசாலையின் விற்பனை அதிகரிக்கின்றது. பொருள்கள் இல்லங்களில் கொண்டுசென்று ஒப்படைக்கப்படுவதால், வாடிக்கையாளர்களுக்கும் பண்டகசாலைக்கு மிடையே நல்லதொரு தொடர்பு ஏற்படுகின்றது. மக்கள் தொடர்பு அதிகமாக ஏற்படுவதால், அவர்களின் பிரச்சினைகளையும் தேவைகளையும் நன்கு புரிந்துகொண்டு, அவற்றிற்கேற்ப இப்பண்டகசாலைகள் செயற்பட முடிகின்றன.

இவ்விற்பனை முறையில், ஒவ்வொரு பண்டகசாலையும் அதிக அளவில் பணியாளர்களை நியமிக்க வேண்டியிருப்பதால் 'செலவு'த் தொகை (Cost) கணிசமாக உயர வாய்ப்புள்ளது.

பொருள்களின் விலையுடன் ஒரு சிறு தொகையைக் கூட்டி விற்பனை செய்வதன் மூலம் இச்செலவுத் தொகையை எளிதில் சரி செய்துகொள்ள இயலுகின்றது.

விற்பனையாளர்களுக்குத் தகுந்த முறையில் கூட்டுறவுப் பண்டகசாலைகளால் பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஜப்பானில் தற்போது இவ்வகை விற்பனை முறையே மிகவும் பிரபலம் அடைந்து வருகின்றது. கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த விற்பனையில் 50 சதவிகிதம் இவ்விற்பனை முறை மூலமே நடை பெற்று வருகின்றது. உலகில் வேறு எந்த நாடும் இத்தகைய முன்னேற்றத்தைப் பெற்றிருக்கவில்லை. ஜப்பானில் பல 'சிறப்பு அங்காடிகள்' அமைக்கப்பட்ட பின்பும், இவ்விற்பனை முறை நடைபெற்று வருவதோடுமட்டுமின்றி வளர்ச்சி பெற்றும் வரு கின்றது. வாடிக்கையாளர்களுக்கு அவ்வப்போது விலைப்பட்டியல் களையும் இக்கூட்டுறவுப் பண்டகசாலைகள் வழங்கி வருகின்றன.

இனி, இரண்டாவது விற்பனை முறையினால் (Self-Service System) ஏற்படும் நன்மை தீமைகளைக் காண்போம்.

நன்மைகள்

1. பண்டகசாலையில் பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. எனவே, பண்டகசாலையின் செலவும் குறைவாகவே உள்ளது.

2. பண்டகசாலையின் விற்பனை அதிகரிக்கின்றது. வாடிக்கை யாளர்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களைத் தங்கள் விருப்பப்படி தேர்ந்தெடுத்துக்கொள்ள வாய்ப்புகள் வழங்கப் படுவதால், அவர்கள் உற்சாகத்துடன் கொள்முதல் செய்யத் தொடங்குகின்றனர். மேலும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பல பொருட்களைக் காணும் வாடிக்கையாளர்கள் அவைகளை வாங்க முயல்வது இயற்கையேயாகும்.

3. பொருள்களின் விலை, தரம், போன்ற குறிப்புகள் கட்டி வைக்கப்பட்டிருக்கும் பொருள்கள் மீதே குறிக்கப்பட்டுள்ளன. எனவே, எல்லா விவரங்களையும் வாடிக்கையாளர்களே பிறர் துயவின்றி அறிந்து கொள்கின்றனர், மேலும், பொருள்கள் அழகுற அடுக்கி வைக்கப்பட்டிருப்பதால், பண்டகசாலை சிறப் பாகத் தோற்றமளிக்கின்றது.

4. இவ்விற்பனை முறை 'பேரளவு செயற்பாடுகளுக்கும்' (Large-Scale Operations), சிறந்த நிருவாகத்திற்கும் காரணமாக விளங்குகின்றது.

5. இவ்விற்பனை முறையின் மூலம், வாடிக்கையாளர்களின் மாறி வரும் தேவைகளை அறிந்துகொள்ள முடிகின்றது.

6. பண்டகசாலையின் செலவுகள் குறைவதால், பொருள்களின் விலையும் குறைவாகவே நிருணயம் செய்யப்படுகின்றது. இதனால் மன நிறைவடைகின்றனர்.

7. தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் எழுவதில்லை.

தீமைகள்

1. வாடிக்கையாளர்களே பொருள்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதால், பொருள்களின் சேதம் அதிகமாகக் காணப்படுகின்றது. சில பொருள்கள் களவாடப்பட்டுவிடுகின்றது.

2. இவ்விற்பனை முறையில், பண்டகசாலையின் அளவு பெரிதாக இருக்கவேண்டியுள்ளது. இத்தேவை பண்டகசாலையின் செலவைக் கணிசமாக உயர்த்துகின்றது.

3. பொருள்கள் விற்பனைக்கு முன்னரே, கட்டப்பட்டுத் தயாராக வைக்கப்படுகின்றன. இப்பணி பண்டகசாலையின் வேலைச் சுமையை அதிகப்படுத்துகின்றது.

4. பழக்கமற்ற வாடிக்கையாளர்களுக்கு எவ்வாறு கொள்முதல் செய்வது என்று பயிற்சி மூலம் போதிக்கப்படவேண்டியுள்ளது.

5. விற்பனையாளர்களின் பணிகளை வாடிக்கையாளர்களே செய்துகொள்வதால், அதற்கேற்ற சூழ்நிலைகளை உருவாக்க வேண்டியுள்ளது.

6. பணத்தைச் செலுத்துமிடத்தில் வாடிக்கையாளர்களின் நீண்ட வரிசை முக்கிய நேரங்களில் காணப்படுவதால் பணத்தைச் செலுத்துவதிலும் பெறுவதிலும் தாமதம் ஏற்படுகின்றது.

தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

தொழில் வளர்ச்சியில் அமெரிக்காவிற்கும், சோவியத்து நாட்டிற்கும் இணையாக விளங்குகிறது இன்றைய ஜப்பான். தொடக்கத்திலிருந்தே ஜப்பான் சிறு தொழில்களையும் பிற கைத் தொழில்களையும் நன்கு பேணிக்காத்து வந்துள்ளன.

தொழில் துறையில் முறையாகப் பயிற்சி பெற்ற இளைஞர்கள் தங்கள் வருமானத்தில் பெரும் பகுதியை முதலீடு செய்து, பல புதிய தொழிற்சாலைகளை அமைக்கின்றனர். 'மிட்சுபுஷி' (Mitsui-bishi), 'ஹித்தாட்சி' (Hitachi) போன்ற தொழில் நிறுவனங்கள் ஜப்பானில் இன்றும் சிறந்து விளங்குகின்றன. ஜப்பானில் பெரும் தொழில்களை ஒட்டிப் பலவித உபதொழில்களும் இயங்கி வருகின்றன. ஓர் இயந்திரத்திற்குத் தேவையான எல்லாப் பாகங்களையும் ஒரே தொழிற்சாலையில் செய்ய முயல்வதில்லை. ஒரு சில முக்கியப் பாகங்களே பெரும் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஏனைய பாகங்களை வெவ்வேறு உபதொழிற் சாலைகளில் உற்பத்தி செய்து, பிறகு எல்லாவற்றையும் ஒரு தொழிற்சாலையில் சேர்த்து முழு இயந்திரத்தை உருவாக்குகின்றனர். ஜப்பானில் மட்டுமின்றித் தொழில்வளம் நிறைந்த எல்லா நாடுகளிலுமே இம்முறை பின்பற்றப்படுகிறது.

ஜப்பானிய அரசாங்கம் சிறு தொழில்களின் வளர்ச்சிக்கென ஒரு தேசிய வாரியத்தையும் உருவாக்கியுள்ளது. சிறு தொழில்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் இத்தேசிய அமைப்பு கவனித்துக் கொள்கின்றது. பல கூட்டுறவுச் சங்கங்களும் ஜப்பானின் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக விளங்குகின்றன. தொழில்களுக்குத் தேவையான மூலதனத்தை இக்கூட்டுறவுச் சங்கங்கள் வழங்குகின்றன. தொழில் உற்பத்தியில் பல புதிய உற்பத்தி முறைகளையும் இச்சங்கங்கள் புகுத்தி வருகின்றன. தொழில்களுக்குத் தேவையாள பல உதவிகளை இச் சங்கங்கள் செய்து வருவதால், சங்கங்கள் அவ்வப்போது தொழில்களை நன்கு கண்காணித்து வருகின்றன. புதிய தொழில்கள் தொடங்குவதற்கும் இக்கூட்டுறவுச் சங்கங்கள் உறுதுணையாக நிற்கின்றன. உற்பத்திப் பொருள்களின் அளவையும், தரத்தையும் இக்கூட்டுறவுச் சங்கங்கள் நன்கு கவனித்து வருகின்றன. தொழில்களுக்குத் தேவையான 'மூலப் பொருள் களையும் இச்சங்கங்கள் விற்பனை செய்கின்றன. உற்பத்திப் பொருள்களின் விலை நிர்ணயம் இச்சங்கங்களின் ஆலோசனைப் படியே செய்யப்படுகின்றது. கிராமப்புறங்களில் இயங்கி வரும் பிற கூட்டுறவுச் சங்கங்களுடனும் இத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பு கொண்டுள்ளன. தொழிற் சங்கங்களுக்குத் தேவையான நிதிவசதிகளை 'மத்தியக் கூட்டுறவு வங்கி' வழங்குகிறது. இத்தொழிற் சங்கங்கள் யாவும் ஜப்பானின் மத்திய விவசாய அமைச்சரவையின் கீழ் இயங்குபவையாகும். கிராமப் புறங்களில் பல புதிய சிறு தொழில்களை அமைப்பதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவு உதவி செய்கின்றன. உற்பத்திப் பொருள்களின் விற்பனை யேற்பாட்டிலும் இக்கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. உறுப்பினர் களின் எல்லாத் தேவைகளையும் இக்கூட்டுறவுச் சங்கங்கள் நன்கு

நிறைவேற்றுவதால், அவர்களது சலியா உழைப்பும், திறமையும் எளிதில் கிடைக்கின்றன. சிறு தொழில் வளர்ச்சியிலும், பிற கைத்தொழில்களிலும் ஜப்பானியப் பெண்கள் கணிசமாக ஈடுபடுவதால் தொழில் உற்பத்தி நன்கு உயர்ந்து காணப்படுகின்றது. தொழில்களுக்கும். அவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பளிப்பவை இக்கூட்டுறவுச்சங்கங்களே. 1947-ஆம் ஆண்டில், 7553 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் 8,09,456 உறுப்பினர்களைக் கொண்டு சிறப்பான முறையில் பணியாற்றி வந்தன. தற்போது, இக்கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை பெருமளவில் உயர்ந்து காணப்படுகின்றது.

பெறவேண்டிய படிப்பினை

ஜப்பானியக் கூட்டுறவு இயக்கம் தற்போது, முழு வளர்ச்சியைப் பெற்றுத் திகழ்கின்றது. உழைப்பால் உயர்ந்த நாடாக ஜப்பான் கருதப்பட்டாலும், அவ்வுழைப்பிற்கு உருக்கொடுத்தது அந்நாட்டின் கூட்டுறவு இயக்கமேயாகும். நம் நாட்டில் இயங்கும் 'சேவைச் சங்கங்களைப்' போலவே, ஜப்பானில் 'பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்' உறுப்பினர்களின் நலன் கருதி இயங்கி வருகின்றன. உறுப்பினர்களுக்குச் சேமிப்புப் பழக்கத்தின் அவசியத்தையும், சிக்கனத்தின் நன்மையையும், இச்சங்கங்கள் நன்கு கற்பிக்கின்றன. 'கடன் வழங்குத் துறை' உற்பத்தித் துறையுடன் நன்கு இணைக்கப்பட்டிருப்பதுபோல், விற்பனையேற்பாட்டுத் துறையுடனும் இணைக்கப்பட்டுள்ளது. இது நமக்கு ஒரு சிறந்த படிப்பினையாகும்.

ஜப்பானியக் கூட்டுறவு இயக்கத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியை கீழே கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களைக் கொண்டு எளிதில் அறியலாம்.

விவசாயச் சங்கங்கள்

தனி விபரம்	1950 Rs.	1960 Rs.	1963 Rs.
வைப்புத் தொகை	126 கோடி	880 கோடி	1,654 கோடி
கொடு கடன் (Loans Borrowed)	—	172 கோடி	120 கோடி
உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த கடன்	40 கோடி	300 கோடி	769 கோடி

இனி, ஜப்பானின் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியை அச்சங்கங்களின் மொத்த விற்பனையைக் கொண்டு ஆராய்வோம்:

தனி விபரம்	1958 Rs.	1962 Rs.
பொருள்களின் விற்பனையேற்பாடு	650 கோடி	1000 கோடி
பொருள்களின் அளிப்பு	300 கோடி	500 கோடி

மேலே கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களைக் கொண்டு, நாம் எளிதில் ஜப்பானிய விவசாயச் சங்கங்களின் வளர்ச்சியை அறியலாம். விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களைப் போலவே, மீன்பிடிப்புக் கூட்டுறவுச் சங்கங்களும் வளர்ச்சி பெற்றுள்ளன. 1960-ஆம் ஆண்டு, 17 பிலியன் யென் என விளங்கிய வைப்புத்தொகை 1963-ஆம் ஆண்டு 38 பிலியனாக உயர்ந்தது. உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் வசதிகளும் 24·6 பிலியனிலிருந்து 58 பிலியனாக உயர்ந்துள்ளது. இக்கடன் வசதிகளைக் கொண்டு, மீன்பிடிப்புக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் தங்கள் தேவைகளை எளிதில் நிறைவேற்றிக் கொள்கின்றனர். 1958-ஆம் ஆண்டில், 133 பிலியன் யென் மதிப்புள்ள பொருள்களுக்கு விற்பனையேற்பாடு செய்யப்பட்டது. ஆனால், இந்தத் தொகை 1961-ஆம் ஆண்டில் 153 பிலியன் யென் என உயர்ந்து காணப்படுகின்றது. 'அளிப்புச் செயற்பாடு' களும் (Suply Operations) 12 பிலியனிலிருந்து 14 பிலியனாக உயர்ந்துள்ளது. வன வளர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களும், தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் இதர கூட்டுறவு அமைப்புகளைப் போலவே நன்கு வளர்ந்துள்ளன. உறுப்பினர்களின் தேவைகளை அறிந்து இக்கழகங்கள் செயலாற்றுவதால், எளிதில் வெற்றி பெற இயலுகின்றது. எனவே, ஜப்பானியக் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி இமயமென நன்கு உயர்ந்து காணப்படுகின்றது. இவ்வளர்சியே பொருளாதாரத் துறையின் பின் தங்கியிருக்கும் இந்தியா போன்ற நாடுகளுக்கு வழிகாட்டியாகவும் திகழ்கின்றது.

ஜப்பானின் இத்தகைய வளர்ச்சிக்கு என்ன காரணம்? தொடக்கத்திலேயே, ஜப்பானியக் கூட்டுறவு இயக்கம் 'பல

நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையே' பெரிதும் நாடியது. குறிப்பிட்ட துறைகளில் செயற்படுவதற்கெனக் கணிசமான 'சிறப்பு நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் நாடியது. இவை தவிர, வனவளர்ச்சி, மீன் பிடிப்பு போன்ற தொழில்களின் வளர்ச்சிக்கெனவும் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களும், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களும் ஜப்பானின் முக்கியக் கூட்டுறவுச் சங்கங்களாகும். இக்கூட்டுறவுச் சங்கங்களை முறையாக வழிநடத்திச் செல்ல பல 'கூட்டிணைப்பு' களும் இயங்கி வருகின்றன. இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நிதிவசதிகளை வழங்க ஒரு 'மத்தியக் கூட்டுறவு வங்கி'யும் உள்ளது.

இத்தகைய ஒரு சிறந்த கூட்டுறவு அமைப்பே ஜப்பானின் பெரு வெற்றிக்குக் காரணமாகும். மேலும், கடன் வசதிகளை அளிக்கும் பணி சிறந்த வகையில் உற்பத்திச் 'செயற்பாட்' டுடனும், விற்பனையேற்பாட்டுடனும் இணைக்கப்பட்டுள்ளது. இது நாம் கடைப்பிடிக்கவேண்டிய நல்லதொரு முறையாகும்.

ஜப்பானில் பழையனவும் புதியனவும் ஒருங்கிணைந்து இயங்கி வருகின்றன என்றாலும், புதியன வளர்ந்து வருகின்றன. பழையன மறைந்து வருகின்றன. கட்டுப்பாடற்ற மக்களின் எண்ணிக்கை வளர்ச்சி, வளர்ந்து வரும் எந்த நாட்டிற்கும் ஒரு பெரிய பிரச்சினையாகும். பொருளாதார வளர்ச்சி தேவையென்றால், இந்தச் சிக்கலான பிரச்சினைக்கும் ஒரு தீர்வு கண்டு தான் ஆகவேண்டும். இது, ஜப்பான் நாடு இந்தியா போன்ற ஆசிய நாடுகளுக்குக் கொடுக்கும் முதல் படிப்பினை.

வறிய நாட்டில் வளம் பெருகவேண்டுமானால், விஞ்ஞானத் தொழில் நுட்ப அடிப்படையில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதன் மூலமாகத்தான் முடியும். இதை தான் ஜப்பான் சாதித்துக் காட்டியுள்ளது.

ஜப்பானுடைய கூட்டுறவு வளர்ச்சிக்கு முதற்காரணம், அந் நாட்டு மக்களின் கல்வி வளர்ச்சி! கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கல்வி வளர்ச்சிக்கென ஒரு தனிப் பிரிவு நடத்தப்படுகின்றது.

ஜப்பானில் காணும் தொழிலாளி—முதலாளி நல்லுறவைப் போல், உலகில் வேறெங்கும் காண்பதற்கில்லை என்று பொருளாதார வல்லுனர்கள் கூறுகின்றனர். வேலை தொடங்கு முன்பாக, தொழிலாளர்கள் ஒன்று கூடித் 'தங்களது தொழிற்சாலை வளர வேண்டும், உற்பத்திப் பெருக வேண்டும்' என்று பாட்டுப்பாடி,

தொழுது வேலையைத் தொடங்குவதைத் தொழிலாளி—முதலாளி நல்லுறவிற்கு ஓர் எடுத்துக்காட்டாகச் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஜப்பானில் விவசாய வளர்ச்சிக்கும் இரும்பு உருக்குத் தொழிலுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பைக் காண முடிகின்றது. இத்தகைய நெருங்கிய தொடர்பை நாமும் நம் நாட்டில் ஏற்படுத்துவதவசியம். ஜப்பானியக் கூட்டுறவு இயக்க வளர்ச்சியில் பெண்களும் பெரும் பங்கு வகிக்கின்றனர். உழைப்பால் உயர்ந்த நாடு ஜப்பான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

11. அமெரிக்க ஐக்கிய நாட்டில் கூட்டுறவு
(Co-operation in U. S. A.)

புதிய நாடும் பழைய மக்களும்

இன்று செல்வம் கொழிக்கும் நாடாக விளங்கும் அமெரிக்கா, தொடக்கத்தில் பல தொல்லைகளுக்கு ஆளாகிய நாடாகும். உலக நாடுகள் பலவற்றிலும் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுள்ள தென்றாலும், அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஏற்பட்டுள்ள அளவிற்கு ஏற்படவில்லை. இயற்கையிலேயே பல்வேறு செல்வங்களைப் பெற்றிருக்கும் இந்நாடு, நல்ல உழைப்பையே நம்பி வாழும் மக்களையும் பெற்றிருக்கின்றது. மக்கட் செல்வத்தையும் அளவாகப் பெற்றுள்ள நாடு இது. நிலப்பரப்பில் இந்தியாவை விடப் பெரிய நாடானாலும், மக்கட் தொகையில் இந்தியாவை விடச் சிறிய நாடாகும்.

இந்நாட்டின் கூட்டுறவு இயக்கம் மிகவும் தொன்மை வாய்ந்த தாகும். தூண்டுதல் யாதுமின்றி, இங்குக் கூட்டுறவு இயக்கம் வளரத் தொடங்கியது. மக்களாலேயே இவ்வியக்கம் இங்கு உருவாக்கப்பட்டு உயரலாயிற்று. 1620-ஆம் ஆண்டு நூறு பயணிகள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒரு கப்பலில் (May Flower) இப்புதிய பூமிக்குப் பயணமாகும்போதே இவ்வியக்கத்திற்கான விதை விதைக்கப்பட்டுவிட்டது. இவர்கள் இப்புதிய மண்ணில் காலடி எடுத்து வைத்த உடனே, தங்களுக்குள் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டனர். 'ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ள வேண்டும்' என்பதே அந்த ஒப்பந்தத்தின் அடிப்படை நோக்கமாகும்.

தங்குவதற்குத் தகுதியான மரத்தினாலான வீடுகள் எல்லோரது உழைப்பினாலும் உருவாகின. உணவுப் பிரச்

சினையைத் தீர்க்கவல்ல பயிர்த்தொழிலிலும் அவர்கள் ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருந்தனர். சாலைகள் அமைத்தல், குறைந்த அளவில் போக்குவரத்து வசதிகளைத் தோற்றுவித்தல் போன்ற பல காரியங்களிலும் மக்கள் கூட்டுறவு மனப்பான்மையுடன் உழைத்தனர். இந்நாட்டின் தொடக்கத்திலேயே கூட்டுறவு இயக்கமும் ஒரு சேரத் தொடங்கப்பட்டது. கூட்டுறவுக் கொள்கைகள் செவ்வனே செயல்படத் தொடங்கின.

கூட்டுறவின் தொடக்கம்

அமெரிக்காவின் கூட்டுறவு இயக்கம் முதன் முதலில் விவசாயிகளின் இடையேதான் தோன்றியது. விவசாயத்தில் மலிந்திருந்த இன்னல்களைக் களையும் பொருட்டே கூட்டுறவுக் கொள்கைகள் செயல்படத் தொடங்கின. குறிப்பாகப் பாலங்கள் கட்டுதல், காடுகளைத் திருத்தி அமைத்தல், கட்டிடங்கள் கட்டுதல் போன்ற பல காரியங்கள் புதிய நாடான அமெரிக்காவில் நடைபெற வேண்டியிருந்ததால் புதிதாகக் குடியேறிய ஐரோப்பிய மக்கள் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டியது அவசியமாயிற்று. எனவே தவிர்க்க இயலாத பல தேவைகளின் காரணமாக, அமெரிக்கக் கூட்டுறவு இயக்கம் ஒரு முறையற்ற நிலையில் செயல்படத் தொடங்கியது. இவ்வியக்கம் விவசாயிகளால் தோற்றுவிக்கப்பட்டது என்பதை மேற்கூறியபடி நாம் நன்கு அறியலாம். எனவே இந்நாட்டில் கூட்டுறவு இயக்கம் கிராமப் புறங்களிலும், புறநகர்ப் பகுதிகளிலும் தான் முதன் முதலில் தோன்றியது. இன்றும் அமெரிக்காவின் கிராமப் பகுதிகளில் கூட்டுறவு இயக்கம் மிகவும் வலிமை வாய்ந்ததாகத் திகழ்கின்றது. பலவகைக் கூட்டுறவுச் சங்கங்கள் இப்பகுதிகளில் தான் வெகு வேகமாக வளரத் தொடங்கின. இதன் பின்னர் தான் நகர்ப் புறங்களில் கூட்டுறவு இயக்கம் வேரூன்றத் தலைப்பட்டது. தொடக்கத்தில், அமெரிக்க அரசாங்கம் கூட்டுறவு அமைப்புகளுக்கு உதுதுணையாக விளங்கியதே தவிர சட்டங்கள் மூலம் இவ்வியக்கத்தை வலுப்படுத்தவில்லை. தேவைகளின் காரணமாக மக்களாலேயே இவ்வியக்கம் உருவாக்கப் பட்டதன் காரணத்தினால்தான் இதன் வளர்ச்சி நல்ல முறையில் அமைந்தது.

ஒற்றுமை (Unity), நேர்மை (Honesty), நம்பிக்கை (Trust)

அமெரிக்காவில் குடியேறிய மக்கள் தங்களது வீடுகளையும், மற்ற கட்டடங்களையும் நாடுகளில் அதிகமாகக் கிடைத்த நல்ல மரங்களைக் கொண்டே அமைத்து வாழ்ந்தனர். எனவே

உணவுப் பண்டங்களைத் தயாரிப்பதற்கும், இரவில் வெளிச்சத் திற்குப் பயன் படுத்தப்பட்டும் வந்த நெருப்பே இவர்களுக்குப் பெரியதொரு பிரச்சினையாக இருந்து வந்தது. பல இன்னல் களுக்கிடையே உருவாக்கப்பட்டு, நல்ல முறையில் நிருவகிக்கப் பட்டு வந்த வீடுகள், விவசாயப் பண்ணைகள், கடைகள் முதலானவை பெரும் தீ விபத்துக்களுக்கு இலக்காகின. இதன் விளைவாகப் புதிய இன்னல்கள் ஏற்பட்டன. பலர் வீடிழந்து வறுமையில் வாடத் தலைப்பட்டனர்.

இத்தருணத்தில் தான் அமெரிக்கத் தலைவர்களுள் ஒருவ ரான 'பெஞ்சமின் ப்ராங்களின்' (Benjamin Franklin) என்பவர் தீ விபத்துகளால் ஏற்படும் இன்னல்களை நீக்கும் வழிமுறைகளை ஆராயத் தொடங்கினர். 'பிலடல்பியா'வில் (Philadelphia) வாழ்ந்துவந்த நண்பர்களுடன் கலந்துபேசி இத்தொல்லைக்கு ஒரு தீர்வு கண்டார். தனிநபர் ஒருவர் தீ விபத்தால் பாதிக்கப்படின், மீண்டும் அவர் புதிய வீட்டைக் கட்டுவது என்பது மிகவும் கடின மான காரியமாகும் என்பதை நன்குணர்ந்து குடியேறிய மக்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவு அடிப்படையில் ஒரு 'காப்புறுதி அமைப்பை' (Co-operative Insurance Company) அமைப்ப தற்கு அடிகோலினர். இத் துறையில் அவர் எவ்வாறு செயல் படத் தொடங்கினர் என்பதைக் காண்போம்.

அவரது திட்டத்தின்படி அமைக்கப்பட்ட 'கூட்டுறவுக் காப் புறுதிக் கம்பெனி' உறுப்பினர்களின் பட்டியல் ஒன்று தயாரித்து, உறுப்பினர்களில் ஒருவரைச் செயலாளராகத் தேர்ந்தெடுத்து செயல்படத் தொடங்கியது; உறுப்பினர் ஒவ்வொருவரும் தீ விபத்தால் யாராவது பாதிக்கப்படின் தங்களது பங்குத் தொகையை அளிப்பதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்ற வேண்டுகோளுக்கு இணங்கினர். தொடக்கத்தில் 'பெஞ்சமின் ப்ராங்களின்' இவ்வமைப்பின் அவசியத்தை மக்களுக்கு ஏற் குமாறு எடுத்துக்காட்ட மிகவும் இன்னலுற்றுர். எனினும் அவரது முயற்சி வீண்போகவில்லை. மெதுவாகத் தோன்றிய இக்கூட்டுறவு அமைப்பு மக்களின் நல்லாதரவை நன்கு பெற்று மக்களிடையே செல்வாக்கும் பெறத் தொடங்கியது.

இக்கூட்டுறவு அமைப்பு மிகவும் எளிதான அமைப்பே என்றாலும் மக்களிடையே கூட்டுறவுக் கொள்கைகள் நன்கு பரப்புவதற்கு இது காரணமாக இருந்தது. இக்கூட்டுறவு அமைப்புக்கு மட்டுமின்றி, நாட்டின் பொருளாதார உயர்வுக்கே மக்களிடையே நிலவும் 'ஒற்றுமை, நேர்மை, நம்பிக்கை' ஆகிய

மூன்றும்தான் மிகவும் அவசியம் என்பதை இப்புதிய நாட்டின் பழங்குடி மக்கள் உணரத் தலைப்பட்டனர். "ஒற்றுமையே உயர்வுக்கு வழி—நேர்மையே நாட்டிற்குத் தேவை—நம்பிக்கையே நாட்டின் உயிர்நாடி" என்பதை அந்நாட்டு மக்கள் நன்குணரச் செய்த பெருமை பெஞ்சமின் ப்ராங்கிளினையே சாரும். இம்மூன்று தலையாய குணங்களுமே அமெரிக்க நாட்டின் கூட்டுறவு இயக்கத்திற்கு அடித்தளமாக அமைந்தன. எனவேதான், இவ்வியக்கத்தின் வளர்ச்சி அந்நாட்டில் நல்ல முறையில் அமைந்தது.

கூட்டுறவு இயக்கத்தின் வரலாறு

1865-ஆம் ஆண்டு வரை யாதொரு கூட்டுறவுச் சட்டமும் அமெரிக்க அரசால் நிறைவேற்றப்படவில்லை. எனவே அது வரை இயங்கி வந்த பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் அரசின் சட்டங்களுக்கு ஆட்படாமல் தாமாகவே இயங்கி வந்தன. 1866-ஆம் ஆண்டுதான் முதல் கூட்டுறவுச் சட்டம் அமெரிக்க அரசால் நிறைவேற்றப்பட்டது. இதன் பயனாக அமெரிக்காவில் இயங்கி வந்த பால் பண்ணைகள், காப்புறுதி அமைப்புகள், கால்நடைச் சங்கங்கள், விவசாயிகளின் கொள்முதல் சங்கங்கள் முதலானவை கூட்டுறவு அமைப்புகள் என அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டன. இச்சட்டமே அமெரிக்கக் கூட்டுறவு இயக்கத்தின் முதல் கட்டமாகும். இத்தருணத்தில் சுமார் 400 பால் பண்ணைகள் இலாபத்துடன் இயங்கி வந்தன.

1895-ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் கூட்டுறவு இயக்கம் நன்கு வளரத் தொடங்கியது. கூட்டுறவு இயக்க வளர்ச்சியின் இரண்டாவது கட்டம் 'கிரேன்ஞ் இயக்கம்' (Grange Movement) என அழைக்கப்பட்டது. அதன்படி முதலாவது 'தேசிய விவசாயப் பண்ணை' (National Grange) 1867-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இவ்வமைப்பு அமைக்கப்படுவதற்கு முன்னர் இயங்கி வந்த கூட்டுறவுச் சங்கங்கள் இணைப்பு உற்பத்தியிலேயே பெரிதும் ஈடுபட்டு வந்தன. 'மினிசோட்டா' (Minnesota) நகரைச் சேர்ந்த ஒரு சாதாரண விவசாயியே இவ்வியக்கம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தார். அமெரிக்க அரசாங்கம் தெற்கு மாகாணங்களின் வேளாண்மை நிலையை நன்கு ஆராயும் பொருட்டு இவரை நியமிக்கவே, அதன்படி அம்மா நிலங்களின் விவசாய நிலையை நன்கு இவர் ஆராயத் தொடங்கினர். முறையான ஆராய்ச்சிக்குப் பின்னர் இவர் தன் முழுமையான அறிக்கையை அரசாங்கத்திடம் சமர்ப்பித்தார். மேலும் விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டுக் கூட்டுறவுச்

சங்கங்களைத் தோற்றுவிக்கவும் தொடங்கினர். அவர் கருத்துப் படி, இக்கூட்டுறவுச் சங்கங்கள் மூன்று மட்டங்களில் உருவாக்கப் பட வேண்டியிருந்தன. முதல் மட்டத்தில் உள்ளூரைச் சேர்ந்த கூட்டுறவு விவசாயச் சங்கங்களும் (Co-operative Unions or Granges) மற்றும் சில கூட்டுறவு அமைப்புகளும் உருவாக்கப் படும். இக் கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் ஒன்றுகூடி மாநில அளவில் 'மாநிலக் கூட்டுறவு அமைப்புகளை' உருவாக்க உறு துணையாக நிற்கும். இம் மாநிலக் கூட்டுறவு அமைப்புகள் ஒரு 'தேசிய விவசாய அமைப்பு' (National Grange) உருவாகக் காரணமாக அமையும். அவரது கருத்துக்கள் யாவும் அரசாங் கத்தால் பாராட்டப்பட்டன. அவர் தம் அறிக்கையின்படி, 1867-ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஒரு தேசிய நிறுவனம் கூட்டுறவின் அடிப்படையில் அமைக்கப்பட்டது. இதன் பின்னர், அடித்தளத்தில் செயல்படுவதற்கென்று கூட்டுறவுச் சங்கங்கள் பல உருவாக்கப்பட்டன. 1874-ஆம் ஆண்டு சுமார் 11,927 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வந்தன. இவ்வியக்கத்தின் வளர்ச்சி 1874-ஆம் ஆண்டுக்குப் பின்னர் சற்று தடைப்படினும், பல மாநிலங்களிலும் நன்கு பரவத்தொடங்கியது.

சில மாநிலங்களில், இக்கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனையேற் பாட்டுக் காரியங்களையும் வேறு சில பணிகளையும் செய்து வந்தன. மற்றும் சில மாநிலங்களில், இக்கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டாகப் பொருள்களைக் கொள்முதல் செய்யும் பணியைச் செய்தன. விற்பனையேற்பாடும், கொள் முதலும் ஒருசேரச் செய்யப்பட்டு வந்தன. வேறு சில மாநிலக் கூட்டுறவுச் சங்கங் களால்.

விற்பனையேற்பாட்டின் அவசியத்தை உணர்ந்த இவ்வகைக் கூட்டுறவுக் சங்கங்கள் பல விற்பனையேற்பாட்டுச் சங்கங்களையும் உருவாக்கத் தொடங்கின. இக்கூட்டுறவு அமைப்புகளால் உறுப் பினர்கள் பல நன்மைகளைப் பெறத் தொடங்கினர். இக்கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயப் பொருள்களின் விலை மிகவும் வீழ்ந்து விடாமல் கண்காணித்துக் கொண்டன. தொடங்கிய பத்தாண்டு களில் இவை நன்கு வளர்ச்சி பெறினும் பிறகு இக்கூட்டுறவு அமைப்புகளின் தோற்றம் தடைப்படலாயிற்று. எனினும், சில சங்கங்கள் அதன் பின்னரும் செயலாற்றி வந்தன. இதே காரணங்களுக்காகப் பல விவசாய ஒப்பந்தச் சங்கங்கள், கூட்டுறவுக் கல்வியைப் பரப்புவதற்கென்று அமைக்கப்பட்ட சங்கங்கள் போன்றவைகளும் அமெரிக்காவின் கூட்டுறவு இயக் கத்தை வலுப்படுத்துவதற்கென்று உருவாக்கப்பட்டன.

முதலில் இந்நாட்டு மக்கள் 'கொள்முதல் சங்கங்களையே' கூட்டுறவின் அடிப்படையில் அமைத்தனர். அதன் பின்னர்தான் விற்பனையேற்பாட்டின் அவசியத்தை உணர்ந்து அதற்கென்று தனியாகச் சங்கங்களை உண்டாக்கினர். இவ்வியக்கத்தின் குறிப்பிடத்தக்க வெற்றிகளுள் இவ்வமைப்புக்கள் குறிப்பிடத்தக்கவையாகும். டென்மார்க், ஜெர்மனி, நார்வே போன்ற நாடுகளிலிருந்து இப்புதிய பூமிக்குக் குடியேறிய மக்கள் தங்கள் தங்கள் நாடுகளில் பெற்ற அனுபவங்களை இங்கு பயன்படுத்தியதால் இவ்வியக்கம் எளிதில் வெற்றி நடைபோடத் தொடங்கியது. அவ்வாறு குடியேறியவர்கள் பெரும்பாலும் விவசாயிகளே ஆவர். எனவே, அமெரிக்காவின் கூட்டுறவு இயக்கம் செழிப்பதற்கு இந்த 'கிரேன்ஞ் இயக்கம்' மிகவும் உறுதுணையாக இருந்தது. என்பதில் யாருக்கும் ஐயப்பாடே எழுவதில்லை.

இனி, அமெரிக்கக் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியை வேளாண்மைக் கூட்டுறவு, விவசாயக் கடன் வழங்கும் கூட்டுறவு, துய்ப்போர் கூட்டுறவு என்ற மூன்று தலைப்புகளில் ஆராய்வோம்.

வேளாண்மைக் கூட்டுறவு
(Agricultural Co-operation)

தொடக்கத்தில் அமெரிக்க விவசாயிகளுக்கு சூழ்நிலை சாதகமாக இல்லையாதலால் அவர்கள் வேளாண்மைத் தொழில் செய்வதில் மிகவும் இன்னலுற்றனர். எனினும் இயற்கையின் படைப்பான அப்புதிய பூமி இவர்களுக்கு மிகவும் ஆதரவாக இருந்தது. தொடர்ந்து பயிரிடப்படாததன் காரணமாக விளைநிலங்கள் மிகவும் செழுமையுள்ளனவாக இருந்தன. குறைந்த உழைப்பில் அவர்கள் அதிக அளவில் உற்பத்தி செய்ய முடிந்தது. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல, இந்நிலை மாறத் தொடங்கியது. பயிர்த் தொழிலுக்குத் தரமான விதைகள், நல்ல உரங்கள், கால்நடைத் தீவனம் போன்றவை தேவைப்படவே, விவசாயிகள் அவற்றைப் பெறுவதில் அக்கறை காட்டத் தொடங்கினர். இவையன்றி, விவசாயக் கருவிகளும், தடுப்பு வேலிகளும் தேவைப்பட்டன. அதிக விலை கொடுத்தே அமெரிக்க விவசாயிகள் இவற்றைப் பெற்றனர். மேலும், இப்பொருள்களைப் பெறுவதில் பெரிய வணிகர்களையே இவர்கள் நம்பி இருக்க வேண்டியிருந்தது. இவர்களது தயவில் வாழ விரும்பாத அமெரிக்க விவசாயிகள் தங்களது தொல்லைகளைக் களையத் தீவிரமாகச் சிந்திக்கலாயினர்.

அளிப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் (Supply Co-operative)

வேளாண்மைத் தொழிலுக்குத் தேவையான முக்கியப் பொருள்களை விவசாயிகளுக்கு வழங்குவதற்கென முதல் கூட்டுறவுச் சங்கம் 'நியுயார்க்' மாநிலத்தில் அமைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, மேலும் பல கூட்டுறவுச் சங்கங்கள் அமெரிக்காவில் தோற்றுவிக்கப்பட்டன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயத்திற்குத் தேவையான எல்லாப் பண்டங்களையும் மற்ற நிறுவனங்களிடமிருந்து பெற்று, பிறகு அவற்றை விவசாயிகளுக்கு விற்பனை செய்து வந்தன. நாட்கள் செல்லச் செல்ல, பிற நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்வதைவிடத் தாங்களே உற்பத்தி செய்யின் உறுப்பினர்கள் பெரும் பயன் அடைவார்கள் என்பதை உணர்ந்த இக்கூட்டுறவுச் சங்கங்கள் அதன்படியே செயல்படவும் தொடங்கினர். எனினும், பல கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்கென விதைப் பண்ணைகள், உர உற்பத்தித் தொழிற்சாலைகள் முதலானவை பெருமளிருந்தமையால் உறுப்பினர்கள் தங்களுக்குத் தேவையான உரம், விதை முதலானவற்றைக் குறைந்த விலையில் பெறமுடியவில்லை.

2. கூட்டுறவு விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள் (Co-operative Marketing Associations) :

நியாயமான விலையில் விவசாயத்திற்குத் தேவையான பொருள்களை வாங்கி நல்ல பயிர் விளைச்சலைச் செய்வதால் மட்டும் விவசாயிகள் பலன் பெறமுடியாது என்பதை அமெரிக்கா விரைவில் உணரத் தலைப்பட்டது. அறுவடைக்குப் பின்னர், விவசாயிகள் விளைபொருளை நல்ல விலைக்கு விற்றால்தான் அவர்களது உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெற முடியும் என்பதை விவசாயிகள் நன்கு உணர்ந்தனர். விவசாயிகளின் தொல்லைகள் அவர்களது விவேகமற்ற செயல்களினாலேயே பெருகின. உற்பத்திப் பொருளை விற்பதில் இவர்கள் தங்களுக்குள்ளேயே கடும் போட்டியை வளர்த்தமையால், பொதுவாக விவசாயத் தொழிலே பாதிக்கப்பட்டது. இவர்களால் ஒரு நல்ல விலையைத் தங்கள் விளைபொருளுக்கு நிருணயிக்க முடியவில்லை.

1860-ஆம் ஆண்டுதான் முதல் கூட்டுறவு தானிய விற்பனையேற்பாட்டுச் சங்கம் அமைக்கப்பட்டது. இவ்வகைச் சங்கங்கள் முதன் முதலில் கிழக்கு மாநிலங்களில்தான் உருவாயின. பிறகுதான் மற்ற மாநிலங்களிலும் இவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றின. வேகமாகவும் வளரத் தொடங்கின. இச்சங்கங்கள்

தானிய அடிப்படையில் அமைக்கப்பட்டன. அதாவது, ஒவ்வொரு தானியத்திற்கும் தனித் தனியாக விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. இவைகள் எண்ணிக்கையில் பெருமளவில் அமெரிக்க நாடு முழுவதும் செயலாற்றத் தொடங்கின. இச் சங்கங்களால் உறுப்பினர்கள் தங்கள் பிரச்சினைகளை எளிதில் சரி செய்து கொள்ள முடிந்தது. தானியங்களுக்கு மட்டுமின்றி, பருத்தி, கம்பளி, எண்ணெய்ப் பொருள்கள், கோழி முட்டை போன்ற பல விவசாயப் பொருள்களுக்கும் தனித் தனியான விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள் இயங்கின. பழங்கள், காய்கறி களுக்குக்கூட கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இவ் விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள் மற்ற எல்லா வகைக் கூட்டுறவு அமைப்புக்களைவிட எண்ணிக்கையில் உயரலாயின. 1956-57-இல் மட்டும் 6386 விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள் பணியாற்றிவந்தன. உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்கு இலட்சத்திற்கும் அதிக மாக இருந்தது. மொத்த விற்பனையும் கணிசமாக உயரத் தொடங்கியது. ஒவ்வொரு விவசாயப் பொருளுக்கும் தனித் தனியான சங்கங்கள் இயங்கியதால் வேளாண்மைத் தொழிலே செழிக்கலாயிற்று. உறுப்பினர்கள் தங்கள் உற்பத்திப் பொருளை இக்கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நல்ல விலைக்கு விற்க முடிந்தது. எனவே அவர்கள் இழப்புக்கு ஆளாகாமல் எளிதில் வியாபாரம் செய்ய முடிந்தது. 1956-57-ஆம் ஆண்டு, 4 மிலியனுக்கும் அதிக மான உறுப்பினர்களைக் கொண்ட 6,386 விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள் அமெரிக்காவில் இயங்கி வந்தன. மொத்த விற்பனை 3,842,858,000 டாலர்களாகும். ஒவ்வொரு விவசாயப் பொரு ளுக்கும் தனியான விற்பனையேற்பாட்டுச் சங்கம் இயங்கி வந்தமை யால் திறமை நிறைந்த நிர்வாகம் உருவாகியது.

கூட்டுறவுப் பால் பண்ணைத் தொழில்
(Co-operative Dairying)

அமெரிக்காவின் பழமையான தொழிலாகிய பால் பண்ணைத் தொழில் விற்பனையைப் பொறுத்தமட்டில் வலிமையுடன் திகழ்ந்து வந்தது. பால், பால் பொருள்கள் முதலியவற்றின் விற்பனைக் கென்று கூட்டுறவு அமைப்புகள் பெருமளவில் அமைக்கப்பட்டன. இத்துறையில் இயங்கி வந்த கூட்டுறவுச் சங்கங்கள் நான்கு வகை களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவையாவன :

(i) உள்ளூர் பாலேடுத் தொழில் திரட்டுகள் (Local Cream Pools);

(ii) உள்ளூர்க் கூட்டுறவு பால்—வெண்ணெய்—பாலேட்டு விற்பனைச் சங்கங்கள் (Local Co-op. Creameries) ;

(iii) கூட்டுறவு மத்தியப்பால்—வெண்ணெய்—பாலேட்டு விற்பனைச் சங்கங்கள் (Co-op. Centralised Creameries) ;

(iv) வெண்ணெய் விற்பனைப் பதிலாண்மைச் சங்கங்கள் (Butter Sales Agencies).

உள்ளூர்ப் பாலேடுத் தொழில் திரட்டுகள் குறைந்த அளவு பாலேடு உற்பத்தி செய்யும் குடியானவர்கள் வாழும் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. உற்பத்தி செய்யப்படும் பாலேட்டைத் தனி நபர்கள் சங்கத்திடம் வழங்கி விடுகின்றனர். இவர்கள் உறுப்பினர்களாக இச்சங்கத்தில் பணிபுரிகின்றனர். இச்சங்கம் மத்தியச் சங்கத்திடம் இப்பொருளை விற்பனைசெய்து விடுகின்றது. உறுப்பினர்களுக்குப் பொருளின் தரத்திற்கேற்பத் தொகை வழங்கப்படுகிறது.

இரண்டாவது வகைக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உறுப்பினர்களிடமிருந்து உற்பத்தி செய்யப்படும் மொத்தப் பாலேட்டையும் பாலையும் பெறுகின்றன. இவ்வாறு நாள்தோறும் பெறுகின்ற பால் அல்லது பால் பொருள்கள் மத்தியச் சங்கத்திடம் அளிக்கப்படுகின்றன. மத்திய விற்பனைச் சங்கங்கள் பல பகுதிகளிலிருந்தும் பால், பால் பொருள்கள் முதலியவற்றைப் பெறுகின்றன. தேவையான அளவிற்கு இப்பொருள்களைப் பெறுவதற்காகத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

உள்ளூர்ச் சங்கங்களைக் கொண்டு வெண்ணெய் முதலான பொருள்களின் விற்பனையேற்பாட்டைக் கவனிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கமே நான்காவது வகையாகும்.

இந்நால்வகைச் சங்கங்களையும் எண்ணிக்கையில் அதிகமாக அமைப்பதற்கென தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. 'மினிசோட்டா' (Minnesota), 'விஸ்கான்சின்' (Wisconsin) ஆகிய இரு மாநிலங்களிலும் இச்சங்கங்கள் பெருமளவில் இயங்கி வருகின்றன. வெண்ணெய் முதலான பொருள்கள் இவ்விரு மாநிலங்களிலும் கணிசமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. மினிசோட்டாவில் இயங்கும் கூட்டமைப்பு (Land-O'-Lakes) மிகவும் பிரபலமான தொன்றாகும். இத்தகைய கூட்டமைப்புகளின் எண்ணிக்கை ஐந்து என கணக்கிடப்

பட்டுள்ளது. நாலில் ஒரு பங்கு பால், பாலேடு முதலான பொருள்கள் இக்கூட்டமைப்புகளின் வாயிலாகவே விற்பனை செய்யப்படுகின்றன. இக்கூட்டமைப்புகளுக்குச் சொந்தமான தொழிற்சாலைகளில் வெண்ணெய் (40%), பாலடைக்கட்டி (16%), பால் பவுடர் (7%) முதலான பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இரண்டாவது உலகப் போரின் போது ஏற்பட்ட சூழ்நிலைகளைச் சாதகமாகக் கொண்டு பால்பவுடர் உற்பத்தியைப் பெருமளவில் உயர்த்தியது இந்நாடு.

தேவையான பால் பொருள்களை விநியோகம் செய்வதற்கெனப் பல கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. உயர் மட்டத்தில் 'தேசியக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் கூட்டமைப்பு' உருவாக்கப்பட்டது. இக்கூட்டமைப்பில் கூட்டுறவுப் பால் பண்ணைச் சங்கங்கள் உறுப்பினர்களாக விளங்கின. 1956-57-ஆம் ஆண்டு, 1,134,395 டாலர் மொத்த விற்பனையைக் கொண்ட 1654 கூட்டுறவுச் சங்கங்கள் இந்நாட்டில் இயங்கி வந்தன. பிரதேசச் சங்கங்களின் எண்ணிக்கை 263 ஆகும். இவைகளின் மொத்த விற்பனை 2,164,608,000 டாலர்களாகும்.

தானியச் சங்கங்கள்
(Grain Associations)

கிராமங்களில் வாழும் விவசாயிகள் அறுவடைக்குப் பின்னர் தங்கள் தானியங்களைக் கூட்டுறவுச் சங்கத்திடம் அளித்து விடுகின்றனர். விற்பனையேற்பாட்டை இச்சங்கங்களே கவனித்துக் கொள்கின்றன. சந்தைகளில் விலை சரிந்து காணப்பட்டால், உறுப்பினர்கள் தங்கள் தானியத்தை சங்கங்களின் 'கூலக் களஞ்சிய'ங்களிலேயே பாதுகாத்து வைக்கின்றனர். விற்பனைக்கேற்ற சூழ்நிலைகள் சந்தைகளில் உருவாகும் வரை தானியம் களஞ்சியங்களிலேயே பாதுகாக்கப்படுகின்றது. இவ்விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள் தங்களுக்கெனக் கோதுமையை உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்கின்றன. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் கோதுமை இவைகளுக்கு மேல் இயங்கும் சங்கத்திற்கு (Terminal Association) அனுப்பப்படுகின்றது. இச்சங்கங்கள் பிரதேச அளவில் அமைக்கப்பட்டுள்ளன. இக்கூட்டமைப்பில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களாக விளங்குகின்றன. இக்கூட்டமைப்பு கோதுமையை நல்ல விலையில் விற்பனை செய்கின்றது. இத்தகைய சிறப்பான விற்பனை முறையினால் கோதுமையின் விலை சரிந்து விடாமல் காக்கப்படுகின்றது. இக்கூட்டமைப்புகள் ஒன்றுகூடித் 'தேசியக் கூட்டமைப்பை'

உருவாக்கியுள்ளன. இதன் தலைமை அலுவலகம் 'சிகாகோவில்' இயங்கி வருகின்றது இத்தலைமைக் கூட்டமைப்பு அங்காடிகளில் ஏற்படும் மாற்றங்களை அவ்வப்போது கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவிப்பதால், கீழ் மட்டத்தில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாகப் பணியாற்ற முடிகின்றது. 1956-57-ஆம் ஆண்டு கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் 2652 இயங்கி வந்தன. இவைகளின் மொத்த விற்பனை 1,551,696,000 மிலியன் டாலர் களாகும். பிரதேசச் சங்கங்களின் எண்ணிக்கை 49 ஆகும். பிரதேசச் சங்கங்களில் குறிப்பிடத்தக்கச் சங்கம் செயின்ட் பால் (Minnesota) என்ற இடத்தில் இயங்கி வருகின்றது. ஐந்து மாநிலங்களில் இயங்கி வரும் 500 கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் இதன் உறுப்பினர்களாக விளங்குகின்றன. உறுப் பினர்களுக்குத் தேவையான தரமான விதை, உரங்கள் போன்ற விவசாயப் பொருள்களையும் உறுப்பினர்களுக்கு இக்கூட்டுறவுச் சங்கங்கள் (Terminal Associations) வழங்கி வருகின்றன.

பருத்தி—எண்ணெய் கூட்டுறவுகள்
(Cotton and Oil Co-operatives)

பருத்தி, எண்ணெய்ப் பொருள்களை சிறப்பாக விற்பனை செய்வதற்காக அமைக்கப்பட்டச் சங்கங்களே 'பருத்தி—எண்ணெய் கூட்டுறவுச் சங்கங்கள்' ஆகும். இச்சங்கங்களும் பல திறப்பட்டவையாக அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் உற் பத்தி, பக்குவப்படுத்துதல், விற்பனை போன்ற பால் துறைகளில் இச்சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. பருத்தி விதையிலிருந்து எண்ணெய் எடுக்க உதவும் பல இயந்திரங்களையும் இச்சங்கங்கள் பெற்றுள்ளன. எண்ணெய் தொழிற்சாலைகளையும் இச்சங்கங்கள் நடத்தி வருகின்றன. பருத்தித் தொழிலுக்குத் தேவையான அழுத்தும் கருவிகளையும் இச்சங்கங்கள் பெற்றுள்ளன. அளவில் பெரிய சங்கங்கள் பண்டகங்களையும், உரத் தொழிற்சாலைகளையும் பெற்றுள்ளன. இச்சங்கங்கள் யாவும் ஒரு தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன. இக்கூட்டமைப்பு (American Cotton Co-op. Association) உறுப்பினர் சங்கங்களின் முன்னேற்றத் திற்கும், கூட்டுறவுக் கல்வி வளர்ச்சிக்கும் பெரிதும் பாடுபடு கின்றது. இச்சங்கங்களில் மிக முக்கியமானதாகக் கருதப்படும் சங்கம் (Staple Cotton Co-op. Association of Greenwood) 'மிஸிஸிபி' (Mississippi) மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

1956-'57-ஆம் ஆண்டு, விற்பனையேற்பாட்டுச் சங்கங்களின் எண்ணிக்கை 578 ஆகும். மொத்த விற்பனை 146,764,000

மிலியன் டாலர்களாகும். பிரதேசக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 29 எனவும் இவைகளின் மொத்த விற்பனை 396,097,000 மிலியன் டாலர் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. நாட்டின் மொத்தப் பருத்தி உற்பத்தியில் 15 சதவிகிதத்தை இச் சங்கங்கள் கையாளுகின்றன. உறுப்பினர்கள் தங்களது உற்பத்திப் பொருளான பருத்தியைச் சங்கத்திடம் ஒப்படைத்த வுடன் அப்பொருளின் விற்பனையேற்பாட்டைச் சங்கமே ஏற்றுக் கொள்கின்றது.

உறுப்பினர்கள் தங்கள் உற்பத்திப் பொருளான பருத்தியைச் சங்கத்திடமே விற்பனை செய்து பணத்தைப் பெறுவதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சங்கத்திடம் உடனே விற்பனை செய்ய விரும்பாத உறுப்பினர்கள் பருத்தியைச் சங்கத்திடம் ஒப்படைத்து, சந்தையில் நல்ல சூழ்நிலைகள் உருவாகும் வரை காத்திருக்கவும் அனுமதிக்கபபடுகின்றனர். சில சமயங்களில் எல்லா உறுப்பினர்களது பருத்தியையும் ஒன்ருகச் சேர்த்து, சங்கமே விற்பனையேற்பாட்டைச் செய்கின்றது. இச்சேவையைச் செய்வதற்கென ஒரு குறிப்பிட்டத் தொகையை உறுப்பினர்களிட மிருந்து கூட்டுறவுச் சங்கம் பெற்றுக் கொள்கிறது. பொதுவாக, இச்சங்கங்கள் உறுப்பினர்களுடன் 'நட்டத் தடைப் பேர ஒப்பந்தனையே' (Hedging Contracts) செய்து கொள்கின்றன.

கூட்டுறவுச் சங்கத்திஞல் பெறப்படும் பருத்தி பண்டகங் களில் சிறந்தமுறையில் பாதுகாக்கப்படுகின்றது. தரம் வாரியாகப் பருத்தி பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. இம்முறை யில் ஒவ்வோர் உறுப்பினரது பருத்தியையும் தனித்துக் காண்பது இயலாத காரியமாகும். உறுப்பினர்கள் வழங்கும் பருத்தியின் அளவைப் பொருத்து இலாப ஈவுத் தொகையும் வழங்கப் படுகிறது.

உறுப்பினர்களின் பருத்தியைக் கொள்முதல் செய்யாத தருணங்களில், இச்சங்கங்கள் உறுப்பினர்களது உடைமைப் பொருளான பருத்தியைத் தனித் தனியாக பிரித்து வைக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் 'முகவர்'களாக (Agent) பணியாற்று கின்றன. இச்சங்கங்கள் சூழ்நிலைக்கேற்ப இப்பொருளைப் பிரதேசக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு (Terminal Socs.) விற்பனை செய்கின்றன. அங்காடிகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன. எனவே, இச்சங்கங்கள் 'கழிவு முகவர்களாக'ச் சேவை செய் கின்றன. அளிக்கப்பட்ட பருத்தியின் பேரில் உறுப்பினர் களுக்குக் கடன் வசதிகளும் செய்யப்படுகின்றன. பருத்தி

விற்பனை முடிந்தவுடன், உறுப்பினர்களுக்குத் தொகையை அளிக்கும் போது இக்கடன் தொகை (Commodity Loan) கழிக்கப் பட்டு விடுகின்றது.

உறுப்பினர்கள் அனைவரும் வழங்கும் பருத்தி முழுவதும் ஒன்றுக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் போது, உறுப்பினர் களுக்கு விற்பனைத் தொகை பிரித்தளிக்கப்படுகின்றது. இவ்வகை விற்பனையில், பருத்தி தரம் வாரியாகப் பிரிக்கப்பட்ட பின்பே விற்பனை செய்யப்படுகின்றது.

கம்பளிக் கூட்டுறவுச் சங்கங்கள் (Wool Co-operatives)

இக்கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு மிகச் சிறப்பாக விளங்குகிறது. உள்ளூர்க் கூட்டுறவுச் சங்கங்கள், பிரதேசக் கூட்டுறவுச் சங்கங்கள், மாநிலக் கூட்டமைப்புகள் ஆகிய மூன்று மட்டங்களில் இச்சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்குத் தலைமைக் கூட்டமைப்பாக 'தேசியக் கம்பளி விற்பனையேற்பாட்டு சங்கம்' செயற்படுகிறது. பிரதேசக் கூட்டுறவுச் சங்கங்களும் மாநிலச் சங்கங்களும் இத்தேசிய அமைப்பின் மூலமாகத்தான் கம்பளியை விற்பனை செய்கின்றன. 'தேசியக் கூட்டுரு' உற்பத்தி யாளர்களுடன் நேரடி ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண் டுள்ளது. கிராமங்களில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களிடமிருந்து கம்பளியைப் பெற்று, அவ்வாறு பெற்றதைப் பிரதேசக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பு கின்றன. பிரதேசச் சங்கங்கள் கம்பளி முழுவதையும் தேசியக் கூட்டமைப்பிடம் அளிக்கின்றன. கம்பளியின் தரத்திற்கேற்ப இத்தேசிய அமைப்பு விற்பனை யேற்பாட்டைக் கவனிக்கின்றது. அவ்வப்போது ஏற்படும் சந்தை நிலவரங்களையும், பிற செய்தி களையும் ஏனைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு இத்தேசிய அமைப்பு தவறாமல் தெரிவிக்கின்றது. கம்பளியின் தரத்தை நன்கு ஆராய் வதற்கென ஆய்வுக் கூடங்களையும் இக்கூட்டமைப்பு பெற் றுள்ளது. மொத்தக் கம்பளி உற்பத்தியில் நாலில் ஒரு பங்கு இத் தேசிய அமைப்பினால் கையாளப்படுகின்றது. இச்சங்கங்களுக்குத் தேவையான நிதி வசதிகளை அளிக்கும் பொருட்டு ஒரு 'தேசியக் கம்பளி கடன் கூட்டுரு' (National Wool Credit Corporation) அமைக்கப்பட்டுள்ளது. பொதுவாக, இக்கடன் சங்கம் பிரதேசச் சங்கங்கள் வாயிலாகவே கடன் வசதிகளை அளிக்கின்றது.

முட்டை விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள்

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே இச்சங்கங்கள் வளர்ச்சி பெறத் தொடங்கின. இச்சங்கங்களைத் தவிர, பிற துறைகளில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களும் முட்டை விற்பனையில் ஈடுபட்டுள்ளன. 1956-'57-ஆம் ஆண்டு 637 கிராம முட்டை விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள் இயங்கி வந்தன. மொத்த வியாபாரத்தின் மதிப்பு 209,830,000 டாலர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. பிரதேசக் கூட்டுறவு அமைப்புகளின் எண்ணிக்கை 44 எனவும், அவற்றின் மொத்த வியாபாரம் 209,054,000 டாலர் எனவும் தெரிகின்றது. மொத்த முட்டை உற்பத்தியில் 14% இச்சங்கங்களால் கையாளப்படுகின்றது. கோழி இறைச்சியில் 45%, வான்கோழி இறைச்சியில் 17% இச்சங்கங்களால் விற்பனை செய்யப்படுகின்றது. பஸிபிக் கடற்கரைப் பகுதிகளில் இக்கூட்டமைப்புகள் வலிமையுடன் பணியாற்றி வருகின்றன. இப்பகுதியில் இயங்கும் நான்கு அளவில் பெரிய கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றுசேர்ந்து ஒரு கூட்டமைப்பை 'நியூயார்க்' நகரில் உருவாக்கியுள்ளன. இக்கூட்டமைப்பு (Pacific Egg Producers' Co-operative) அமெரிக்காவின் கிழக்கு மாநிலங்களில் பெருமளவில் முட்டை, கோழி இறைச்சி முதலான பொருள்களை விற்பனை செய்கின்றது. 'சீயாட்டில்' (Seattle) என்ற இடத்தில் இயங்கும் மத்தியக் கூட்டமைப்பும் (Washington Co-op. Egg and Poultry Association) இவ்விற்பனையில் கணிசமாக ஈடுபட்டுள்ளது. இக்கூட்டமைப்பு மாநிலம் முழுவதும் கிளை அலுவலகங்களைப் பெற்றுள்ளது. உறுப்பினர்களின் முட்டை உற்பத்தியை ஊக்குவிப்பதற்கெனக் கோழித்தீவனம் போன்ற பொருள்களையும் விநியோகம் செய்கிறது இக்கூட்டமைப்பு. வாஷிங்டன் முட்டை விற்பனைச் சங்கம் பஸிபிக் முட்டை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினராகத் திகழ்கின்றது. கோழித்தீவனம் தயாரிப்பதற்கென்று பல தொழிற்சாலைகளை இக்கூட்டமைப்புகள் பெற்றுள்ளன.

காய்கறி, பழவிற்பனையேற்பாட்டுச் சங்கங்கள்

இக்கூட்டுறவுச் சங்கங்கள் அமெரிக்காவின் முக்கியச் சங்கங்களாகத் திகழ்கின்றன. ஒவ்வொரு மாநிலத்திலும் இக்கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவில் அமைக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவின் மேற்குப் பகுதிகளில் (குறிப்பாக கலிபோர்னியாவில்)

இக்கூட்டுறவுச் சங்கங்கள் பழவகைகளையும், காய்கறிகளையும் பெருமளவு விற்பனை செய்கின்றன. தொடக்கத்தில் தரத்தின் அடிப்படையில் பழங்களைப் பிரித்து, பெட்டிகளில் நிரப்பி, அங்காடிகளுக்கு அனுப்பி வந்தன. நாளடைவில் விற்பனையேற் பாட்டுப்பணிகள் முழுவ்தையும் ஏற்றுக்கொண்டன. இக்கூட் டுறவுச் சங்கங்கள் சர்வதேசப் புகழ் வாய்ந்தவையாகும். கலி போர்னியாவில் இயங்கிவரும் பழ உற்பத்தியாளர் சங்கம் அமெ ரிக்காவில் இயங்கிவரும் கூட்டமைப்புகளில் மிகப் பெரியதொன் றாகும். கலிபோர்னியா மாநிலத்திற்குத் தேவையான மொத்தப் பழவகைகளையும், காய்கறி வகைகளையும் இக்கூட்டமைப்பு விற்பனை செய்கின்றது. இதன் தலைமைக் கழகம் 'லாஸ் ஏஞ் சல்சில்' (Los Angeles) அமைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு சிறப்புறக் காணப்படுகின்றது. அடித்தளத்தில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன. சுமார் 200 கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றின் உறுப்பினர் எண்ணிக்கை சுமார் 14,000 ஆகும். இவர்கள் பல்வேறு கனி வகைகளை உற்பத்தி செய்பவர்களாவர். இச்சங்கங்கள் யாவும் 26 மாவட்ட அமைப்புகளில் உறுப்பினர்களாக விளங்கு கின்றன. இம்மாவட்ட அமைப்புகள் ஒன்று சேர்ந்து மாநில அளவில் ஒரு கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன. இக்கூட் டமைப்பு (California Fruit Growers' Exchange) பழவகை களுக்கும், காய்கறி வகைகளுக்கும் சிறந்த முறையில் விற்பனை யேற்பாட்டைச் செய்கின்றது. உள்ளூர்க் கூட்டுறவுச் சங்கங் களின் உறுப்பினர்கள் தங்கள் உற்பத்திப் பொருளான பழவகை களைச் சங்கங்களிடம் முறையாக ஒப்படைத்து விடுகின்றனர். கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் சந்தைகளில் நேரடியாகவே விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டாலும், மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் ஆலோசனைப்படியே இயங்கி வருகின்றன. பொது வாகக் கிராமச் சங்கங்கள் உறுப்பினர்களிடமிருந்து பெற்ற பழ வகைகளையும், காய்கறி வகைகளையும் மாவட்ட அமைப்புகளுக்கு அனுப்புகின்றன. மாவட்டச் சங்கங்கள் மத்தியக் கூட்டுறவு அமைப்புடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. எனவே, இம்மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்கள் மத்தியக் கூட்டுறவுச் சங்கங் களுக்குப் பழவகைகளை அனுப்புகின்றன. இம்மத்தியக் கூட் டமைப்பு சந்தைகளில் இயங்கி வரும் மொத்த விற்பனையாளர் களுடன் தொடர்பு கொண்டு, பழவகைகளையும், காய்கறி வகை

களையும் விற்பனை செய்கின்றது. சந்தை நிலையை அவ்வப்போது அறிவதற்கென இம்மத்தியக் கூட்டமைப்பு முக்கிய சந்தைகளில் தகுதி வாய்ந்த பிரதிநிதிகளை நியமித்துள்ளது. நவீன வியாபார முறைகளையும், குளிர்சாதன வசதிகளைக் கொண்ட பண்டகங் களையும் இம்மத்தியக் கூட்டமைப்பு பெற்றுள்ளது. விற்பனையை அதிகரிக்கவும், புதிய சந்தைகளைக் கைப்பற்றுவதற்கும் இக்கூட் டமைப்பு விளம்பர சாதனங்களை விரிவாகப் பயன்படுத்துகின்றது. பழ ஆராய்ச்சிக்கெனப் பல ஆய்வுக்கூடங்களை நிறுவி ஒரு கணிசமான தொகையைச் செலவிட்டு வருகின்றது. அயல்நாடு களுக்கும் பழவகைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவ்வாறு ஏற்றுமதி செய்வதற்கென அயல்நாட்டு முகவர்களுடன் இம் மத்தியக் கூட்டமைப்பு அவ்வப்போது தொடர்பு கொள்கின்றது. பழ விநியோகத்தில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்ப்பதற்காக இக் கூட்டமைப்பு ஒரு போக்குவரத்துப் பிரிவையும் நடத்தி வரு கின்றது. இக்கூட்டமைப்பின் பிரதிநிதிகள் சந்தைகளில் ஏற்படும் மாற்றங்களை அவ்வப்போது தெரிவிக்கின்றனர். இவ்வாறு சேகரிக்கப்படும் செய்திகள், புள்ளி விவரங்கள் இக் கூட்டமைப்பின்கீழ் இயங்கிவரும் எல்லாக் கூட்டுறவுச் சங்கங் களுக்கும் தாமதமின்றி அறிவிக்கப்படுகின்றன.

எனவே, கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் பழங்களைத் தரத்தின் அடிப்படையில் பிரித்து, பெட்டிகளில் நிரப்பி மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்புகின்றன. மாவட்டக் கூட் டுறவுச்சங்கங்கள் மத்தியக் கூட்டமைப்பிடம் பழவகைகளை வழங்கு கின்றன. விற்பனையேற்பாட்டில் ஏற்படும் பிரச்சினைகளை இம் மத்தியக் கூட்டமைப்பு கவனித்துக் கொள்கின்றது. விற்பனை யேற்பாட்டிற்குத் தேவையான திட்டங்களை இம் மத்தியக் கூட்டமைப்பு வகுக்கின்றது. அங்காடிகளில் நிலவும் 'கேட்பு' விவரங்களை உறுப்பினர் சங்கங்களுக்கு அறிவிப்பதால், உறுப்பினர் சங்கங்கள் சூழ்நிலைகளுக்கேற்பப் பணியாற்ற இயலு கின்றது. பொதுவாக எல்லா உறுப்பினர் சங்கங்களும் இம் மத்தியக் கூட்டமைப்பின் ஆலோசனைப்படியே இயங்கி வரு கின்றன. பழ உற்பத்தியில் தற்போது நவீனமுறைகள் கையாளப் படுவதற்கு இம்மத்தியக் கூட்டமைப்பே காரணமாகும். மொத்தப் பழ உற்பத்தியில் சுமார் 85% இக்கூட்டுறவுச் சங்கங்களினால் கையாளப்படுகின்றது. பழவகைகளையும், காய்கறி வகைகளையும் முறையாக விற்பனைக்குத் தயார் செய்வதற்காக ஒரு மரப்பெட்டித்

தொழிற்சாலையையும் இம்மத்தியக் கூட்டுறவுச் சங்கம் நடத்தி வருகின்றது. விற்பனையேற்பாட்டை இம்மத்திய அமைப்பு ஏற்று நடத்துவதால் 'இடை நிலையர்கள்' அறவே அகற்றப்படுகின்றனர். உற்பத்தியில் மட்டுமின்றி, விற்பனைத் துறையிலும் தற்போது நவீன முறைகள் கையாளப்படுகின்றன.

1956-'57-ஆம் ஆண்டு, 669 உள்ளூர்க் கூட்டுறவு சங்கங்களும் 75 பிரதேசக் கூட்டுறவுச் சங்கங்களும் இயங்கி வந்தன. இவைகளின் மொத்த விற்பனை முறையே $ 495,908,000, $ 561,127,000 எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

பஸிபிக் கடற்கரைப் பகுதிகளில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் பேரளவு முறையில் இயங்கி வருகின்றன. கிழக்கு மாநிலங்களில் இயங்குபவை அளவில் சிறிய கூட்டுறவுச் சங்கங்களாகவே விளங்குகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் தவிர, பிற பொருள்களான புகையிலை, அரிசி, சருக்கரை முதலான பொருள்களின் விற்பனையேற்பாட்டைக் கவனிப்பதற்கென்று வேறுபல கூட்டுறவுச் சங்கங்களும் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களுக்கென்று பிரதேசச் சங்கங்களும், மத்தியக் கூட்டுறவுக் கூட்டமைப்பும் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, விற்பனையேற்பாட்டுக் கழகங்கள் அமெரிக்காவில் ஒரே தன்மையுடையனவாகவே விளங்குகின்றன.

விற்பனையேற்பாட்டுச் சங்கங்களின் சிறப்பியல்புகள்

விவசாயப் பொருள்களின் விற்பனையேற்பாட்டிற்கென்று அமைக்கப்பட்டு இயங்கி வரும் இச்சங்கங்கள் பல சிறப்பியல்புகளைப் பெற்றுள்ளன. இத்தகைய சிறப்பியல்புகளைக் கொண்டு இக்கழகங்கள் விளங்குவதால்தான் பொருள்களின் விற்பனையேற்பாட்டுப்பணி செம்மையுற நடைபெறுகிறது.

1. அமெரிக்காவின் கூட்டுறவு இயக்கத்தில், விற்பனையேற்பாட்டுத் துறை பெற்றிருக்கும் வெற்றியைப்போல் பிற துறைகள் பெற்றுத் திகழவில்லை. ஏனெனில், விற்பனையேற்பாட்டுக் கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு சிறப்புற அமைந்துள்ளதால், எண்ணங்கள் எளிதாக ஈடேற முடிகின்றது. இச்சங்கங்கள் பெருமளவில் வளர்ச்சி பெற்றுள்ளன.

2. விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள் விவசாயப் பொருள்களின் விற்பனைத் துறையை மிகத் திறமையுடன் கவனிக்கின்றன.

ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனியாக விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. எனவே, குழப்பமின்றி விற்பனைத் துறையில் அவைகள் ஈடுபட வாய்ப்பேற்படுகின்றது.

3. இச்சங்கங்களில் சில உரங்கள், விதை, தீவனம் போன்ற பல பொருள்களையும் உறுப்பினர்களுக்கு வழங்கி வருகின்றன. எனவே, சில தருணங்களில் இவை கொள்முதல் சங்கங்களாகவும் பணியாற்றுகின்றன. இதையொட்டிச் சில கொள்முதல் சங்கங்களும் சில தருணங்களில் விற்பனையேற்பாட்டுச் செயல்களில் ஈடுபடுகின்றன. இது அமெரிக்கச் சங்கங்களின் தனிச் சிறப்பாகும்.

4. இச்சங்கங்கள் மிக எளிதான ஆனால் சிறந்த நிருவாக அமைப்பைக் கொண்டு விளங்குகின்றன. அடித்தளத்தில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன. மாவட்ட அளவில் மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களும், மாநில அளவில் மாநிலக் கூட்டுறவுக் கூட்டமைப்பும் இயங்கி வருகின்றன. இம்மத்தியக் கூட்டுறவுக் கூட்டமைப்பின் ஆலோசனையின் பேரில் ஏனைய சங்கங்கள் இயங்கி வருகின்றன. எனவே, இச்சங்கங்கள் யாவும் மிகச் சிறந்த முறையில் கூட்டுறவு நார்மூலம் இணைக்கப் பட்டுள்ளன.

5. உள்ளூர்க் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களுக்கு 'முகவர்'களாக இருந்தே பணியாற்றுகின்றன. உறுப்பினர்களது உற்பத்திப் பொருள்களைப் பொதுவாகக் கொள்முதல் செய்வதில்லை. இவைகள் அதற்குத் தக்கபடியே ஒப்பந்தங்களை உருவாக்கிக் கொள்கின்றன. இத்தகைய செயலால், இவைகள் இடர்ப்பாடுகளை அடைவது எளிதாகத் தவிர்க்கப் படுகின்றது.

6. மத்தியக் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனையேற்பாட்டுக் கென்று திட்டங்களைத் தீட்டி அவைகளை முறையாகச் செயல் படுத்துகின்றன. மேலும், உற்பத்தித் திறனை உயர்த்துவதற் கென்று ஆராய்ச்சிகள் நடத்துவதற்குச் சோதனைச் சாலைகளையும் இம்மத்தியச் சங்கம் பெற்றுள்ளது. அங்காடிச் செய்திகளையும், புள்ளி விவரங்களையும் அவ்வப்போது தனது உறுப்பினர்களாக விளங்கும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அறிவிக்கின்றது. மேலும், விவசாயப்

பொருள்களை விற்பனைக்குத் தயார் செய்வதற்கெனப் பல தொழிற் சாலைகளையும் பெற்றுள்ளது. உதாரணமாகப் பழ வகைகள், தானியங்களை நன்கு பக்குவப்படுத்துவதற்கென்று தொழிற் சாலைகளை (Processing Plants) இம்மத்தியச் சங்கம் பெற்றுள்ளது. இதன் உறுப்பினர் சங்கங்களுக்கு அவ்வப்போது கடனுதவிகளும் இம்மத்தியக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் அளிக்கப்படுகின்றன.

அரசாங்க ஆதரவு

அமெரிக்க அரசு இவ்விற்பனையேற்பாட்டுச் சங்கங்களுக்கு பெரிதும் ஆதரவு காட்டி வருகின்றது. எல்லா வகை உதவி களையும் விவசாய இலாகா மூலமாக விற்பனையேற்பாட்டுச் சங்கங் களுக்கு அளித்து வருகின்றது. மாநில அரசுகளும், அமெரிக்க கூட்டரசும், விவசாயக் கல்லூரிகளும் இச்சங்கங்களின் வளர்ச்சி யில் பெரிதும் ஈடுபாடு காட்டி வருகின்றன.

1929-ஆம் ஆண்டு, இச்சங்கங்களின் வளர்ச்சியை ஊக்கு விக்கும் வகையில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத் தின் (Agricultural Marketing Act) வாயிலாக இச்சங்கங்கள் பல சலுகைகளைப் பெற்றன. இச்சட்டத்தை நன்கு செயல்படுத்து வதற்கென ஒரு 'வாரியத்தை'யும் (Board) அமெரிக்க அரசு ஏற்படுத்தியது. இதன் மூலம் விவசாய விற்பனையேற்பாட்டுச் சங்கங்களின் எண்ணிக்கை பெருமளவில் உயரலாயிற்று. இச் சங்கங்களின் வளர்ச்சிக்குத் தேவையான நிதி வசதிகளை அளிக்கும் வகையில் ஒரு 'நிதியேற்பாட்டு நிறுவனமும்' தொடங் கப்பட்டது. இந்நிதி அமைப்பு 500 மிலியன் டாலர்களுடன் தொடங்கப்பட்டது. குறுகிய காலக் கடன்களும், நீண்ட காலக் கடன்களும் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டன. குறைந்த வட்டிக்கே இவ்வுதவிகள் அளிக்கப்பட்டன. 1933-ஆம் ஆண்டு இவ்வாரியம் ஆற்றிவந்த பணிகளை 'பண்ணைக் கடன் பொது நிருவாக அமைப்பு' ஏற்றுக் கொண்டது.

மேலும், அமெரிக்க அரசு ஆராய்ச்சித் துறையிலும் இச் சங்கங்களுக்குப் பேருதவி புரிந்து வருகின்றது. பல விவசாயக் கல்லூரிகளையும், ஆலோசனைச் சபைகளையும் ஏற்படுத்தியுள்ளது. மேலும் 1930-ஆம் ஆண்டு 6 'தேசிய விவசாயப் பொருள்களின் விற்பனையேற்பாட்டுச் சங்கங்களையும்', ஒரு 'சேவைப் பதி லாண்மைச் சங்கத்தையும்' அமெரிக்க அரசு விவசாய இலாகா மூலமாகத் தொடங்கியது. மாநில அரசுகளும் தங்கள் மாநிலங்

களில் இவ்விற்பனையேற்பாட்டுச் சங்கங்களின் வளர்ச்சிக்கெனத் தனிச் சட்டங்களை இயற்றியுள்ளன.

இனி, வேளாண்மைக் கூட்டுறவில் இயங்கி வந்த பல்வேறு சங்கங்களின் வளர்ச்சியைக் காட்டும் புள்ளி விவரங்களைக் காண்போம்.

அமெரிக்க அரசின் விவசாய இலாகா விவசாயச் சங்கங்களின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை காட்டி வருகின்றது. 1960-'61-ஆம் ஆண்டு, 9163 விற்பனை, அளிப்புச் சங்கங்கள் இயங்கி வந்ததாகப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. இதில் சேவைச் சங்கங்களும் அடங்கியுள்ளன. மொத்த விவசாயிகளில் ஐந்தில் நாலுபங்கு இச்சங்கங்களில் உறுப்பினர்களாக (சுமார் 4 மிலியன்) விளங்குகின்றனர். மொத்தச் சங்கங்களில் உள்ளூர்ச் சங்கங்கள் 92% எனவும், பிரதேசச் சங்கங்கள் 8% எனவும் கணக்கிடப் பட்டுள்ளது. விவசாயப் பொருள்களுக்குத் தனித் தனியான விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தானிய விற்பனைக்கென 2660 சங்கங்களும், பால் பொருள்களுக்கென 1609 சங்கங்களும் (1960-'61) இயங்கி வந்தன. சங்கங்களின் வளர்ச்சியைச் காட்டும் சில அட்டவணைகளைக் காண்போம்.

விற்பனை, அளிப்பு, சேவைச் சங்கங்கள் (1960-'61)

சங்கங்களின் வகை	சங்கம்		உறுப்பினர் நிலை	
	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%
1. விற்பனையேற்பாடு	5,727	62.5	3,473,425	48.2
2. அளிப்பு (Supply)	3,222	35.2	3,679,675	51.1
3. சேவை	214	2.3	49,795	0.7
மொத்தம்	9,163	100	7,202,895	100

1960-'61 ஆம் ஆண்டு, உள்ளூர்ச்சங்கங்களின் எண்ணிக்கை 8390 (91·6%) எனவும், பிரதேசச் சங்கங்களின் எண்ணிக்கை 773 (8·4%) எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

அட்டவணை I



அமெரிக்க ஐக்கியநாட்டின் பண்ணைகளின் எண்ணிக்கையும், விற்பனையேற்பாடு, கூட்டுறவு அளிப்புப்பண்ணை— இவற்றின் உறுப்பினர் எண்ணிக்கையும். [1960-'61]

அட்டவணை II



★ விற்பனையேற்பாடு, கூட்டுறவு அளிப்புப் பண்ணைத்-
தொடர்பான சேவைச் சங்கங்கள்.

அமெரிக்க ஐக்கிய நாட்டு விவசாயக் கழக உறுப்பினர்
எண்ணிக்கையும், பண்ணைகளின் எண்ணிக்கையும் [1930-'50]

இனி, அமெரிக்காவில் இயங்கிவரும் வேளாண்மைச் சங்கங்களின் வகைகள், அவற்றின் எண்ணிக்கை, கணக்கிடப்பட்ட உறுப்பினர் நிலை முதலானவற்றைக் காண்போம்.

சங்க வகை	புள்ளி விவர தேதி	எண்ணிக்கை	உறுப்பினர் நிலை
1. விற்பனை யேற்பாட்டுச் சங்கங்கள்	1960-61	5,727	3,473,425
2. அளிப்புச் சங்கங்கள்	1960-61	3,222	3,679,675
3. தேசிய விவசாயக் கடன் சங்கங்கள்	1-1-1963	772	379,754
4. பிற சேவைச் சங்கங்கள்	1960-61	214	49,795
5. உற்பத்திக் கடன் சங்கங்கள்	1-1-1963	486	527,707
6. வங்கிகள்	30-6-1962	13	3,775,291
7. கிராமக் கடன் சங்கங்கள்	1-1-62	682	233,054
8. கிராம மின்சாரச் சங்கங்கள்	1-10-62	911	4,718,655
9. கிராமத் தொலைபேசிச் சங்கங்கள்	1-10-62	209	403,878
10. கிராம மக்கள் நலச் சங்கங்கள்	30-6-62	21	61,921
11. காப்பீடுச் சங்கங்கள்	1-1-62	1,600	3,500,000
12. நீர்ப்பாசனச் சங்கங்கள்	1959	7,729	161,679
13. கால்நடை வளர்ப்புச் சங்கங்கள்	1-1-63	1,441	68,813
14. செயற்கைக் கருத்தரிப்பு நிலையங்கள்	1-1-63	39	591,589

விவசாயச் சங்கங்களில் பெரும்பாலானவை 'மினிசோட்டா' (Minnesota) மாநிலத்தில் அமைந்துள்ளன. சுமார் 1,159 சங்கங்கள் 1961–ஆம் ஆண்டு இயங்கி வந்தன. இவைகளின் உறுப்பினர் எண்ணிக்கை 601,530 ஆகும். மினிசோட்டாவை அடுத்து 'இலிநாயி' (Illinois) மாநிலம் அதிக உறுப்பினர்களைப் பெற்றுள்ளது. இம்மாநிலத்தில் 447 விவசாயச் சங்கங்கள் இயங்கி வருகின்றன (1960-61). உறுப்பினர் எண்ணிக்கை 470,225. 'விஸ்கான்சின்' (Wisconsin) மாநிலத்தில் 688 சங்கங்கள் 400,690 உறுப்பினர்களுடன் பணியாற்றி வருகின்றன.

விவசாயக் கூட்டுறவுச் சேவைச் சங்க அமைப்பு

(ORGANISATION OF THE FARMER CO-OP. SERVICE)



கூட்டுறவுக் கொள்முதல் சங்கங்கள்

இந்நாட்டுக் கொள்முதல் சங்கங்கள் பொதுவாக நுகர்வோர் சங்கங்களுடன் ஒன்றாகவே இணைத்துக் கருதப்படுகின்றன. ஏனெனில், இக்கொள்முதல் சங்கங்கள் அன்றாடத் தேவைப் பொருள்களையும், குடும்பத்திற்குரிய பல்வேறு பொருள்களையும் உறுப்பினர்களுக்கு அளித்து வருகின்றன. நுகர்வோர் பொருள்களுடன் விவசாயப் பொருள்களையும் இச்சங்கங்கள் விற்பனை செய்கின்றன.

இக்கூட்டுறவுச் சங்கங்களே அமெரிக்க ஐக்கிய நாட்டில் முதன் முதலில் தோன்றியவையாகும். இச்சங்கங்களைத் தொடர்ந்தே விற்பனை யேற்பாட்டுச் சங்கங்கள் தோன்றின. எனினும், இச்சங்கங்கள் வெகுவிரைவில் வளர்ச்சி பெற்று, இன்று இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கத்திற்கே ஆணிவேராகத் திகழ்கின்றன. தொடக்கத்தில் இச்சங்கங்கள் சிறிய அளவில் தான் இயங்கி வந்தன. இச்சங்கங்களின் செயற்பாட்டுப் பகுதியும் மிகச் சிறியதாகவே விளங்கியது. ஒவ்வொரு கொள்முதல் சங்கமும் தனித் தனியாகச் சுதந்திரத்துடன் இயங்கி வந்தது. இக்கொள்முதல் சங்கங்களுக்கென்று தலைமை அமைப்பு அமைக்கப்படவில்லை. சங்கங்களிடையே நெருங்கிய தொடர்பும் காணப்பட வில்லை. இந்நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்து இந் நிலைகள் மாறத் தலைப்பட்டன. கிராமக் கொள்முதல் சங்கங்கள் மத்தியக் கூட்டமைப்புகளை உருவாக்கத் தொடங்கின. தனியார் துறையில் இயங்கி வந்த வணிகர்களுடன் ஏற்படும் கடும் போட்டியைத் தவிர்ப்பதற்கென உற்பத்தித் துறையில் இச் சங்கங்கள் ஈடுபட்டு வருகின்றன. தற்போது அடித்தளத்தில் இயங்கும் கொள்முதல் சங்கங்கள் மத்தியக் கூட்டமைப்புச் சங்கத்தின் உறுப்பினர்களாகவே விளங்குகின்றன. இச்சங்கங்கள் விவசாயப் பொருள்களைத் தவிர, எண்ணெய் வகைகள் போன்ற பிற முக்கியப் பொருள்களையும் வழங்கி வருகின்றன. தோன்றிய காலத்தில் வளர்ச்சி குறைந்திருந்த இச்சங்கங்கள் நாளடைவில் கணிசமான வளர்ச்சியைப் பெற்றன. தேவை பெருகி வரும் சூழ்நிலைகளைக் கண்ட இச்சங்கங்கள் முக்கியப் பொருள்களின் உற்பத்தியிலும் ஈடுபட்டு வருகின்றன. இவ்வாறு உற்பத்தித் துறையிலும் இச்சங்கங்கள் ஈடுபடுவதால், இலாபத் தொகை கணிசமாக உயருவதுடன் உறுப்பினர்களும் பெருமளவில் பயனடைகின்றனர். உற்பத்திப் பணிகளையும் இச்சங்கங்கள் ஏற்பதால், பொருள்களின் விலை குறைவாகவே நிருணயிக்கப் படுகின்றது. விவசாயப் பொருள்கள், முக்கிய நுகர்வுப்

பொருள்கள் போன்றவற்றை வழங்குவதுடன் உற்பத்தித் துறையிலும் இச்சங்கங்கள் இயங்கி வருகின்றன.

பொதுவாக இக்கொள்முதல் சங்கங்கள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன :—

(i) விதை, உரங்கள் போன்ற விவசாயப் பொருள்களை உறுப்பினர்களுக்கு வழங்கும் சங்கங்கள்;

(ii) எண்ணெய் வகைகள், அவற்றுடன் தொடர்புடைய பிற பொருள்கள் முதலானவற்றை வழங்கும் சங்கங்கள்.

முதல் வகைக் கொள்முதல் சங்கங்களின் கீழ் நான்கு பேரளவுக் கூட்டுறவு அமைப்புகள் இயங்கி வருகின்றன. இவ்வமைப்புகள் அமெரிக்க நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. அவையாவன :—

(i) கிழக்கு மாநில விவசாயிகள் கூட்டமைப்பு ;

(ii) விவசாயப் பண்ணைகளின் இணைப்புக்குழு (G. L. F.).

(iii) தெற்கு மாநில கூட்டுறவுச் சங்கம் ;

(iv) விவசாயிகளின் கூட்டுறவுச் சங்கம் (F. C. X.)

எண்ணெய்ப் பொருள்களைக் கையாளும் பிரிவுடன் இச்சங்கங்கள் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. எண்ணெய்ப் பொருள்களை விற்பனை செய்யும் சங்கங்கள் பெருமளவு வளர்ச்சி பெற்றுள்ளன. இச்சங்கங்கள் பிரதேச அமைப்புகளையும் பெற்றுள்ளன. சில பிரதேசச் சங்கங்கள் உயர்மட்டக் கூட்டமைப்புகளையும் பெற்றுள்ளன. இக்கூட்டமைப்புகள் தங்களுக்குத் தேவையான பொருள்களைக் கூட்டாகக் கொள்முதல் செய்கின்றன. உயர்மட்டப் பிரதேசக் கூட்டுறவுச் சங்கம் தேசியக் கூட்டமைப்பில் உறுப்பினராக அங்கம் வகிக்கின்றது. தேசியக் கூட்டுறவுச் சங்கங்கள் மொத்த விற்பனையில் ஈடுபட்டுள்ளன. நகரங்களில் வாழ்வோருக்கும், கிராம மக்களுக்கும் இச்சங்கங்கள் பேருதவி புரிந்து வருகின்றன. அளவில் பெரிய கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்குச் சொந்தமான எண்ணெய்ச் சுத்திகரிப்புச் சாலைகளையும், எண்ணெய்க் கிணறுகளையும், பல தொழிற்சாலைகளையும் பெற்றுள்ளன. சில கொள்முதல் சங்கங்கள் 'கூட்டுறவு இணைப்புச் சங்கத்தின்' உறுப்பினர்களாகவும்

விளங்கி வருகின்றன. இச்சங்கம் அமெரிக்க நாட்டின் நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கென நாளும் உழைத்து வருகின்றது.

1950–ஆம் ஆண்டு மொத்த மண்ணெண்ணெய்ப் பொருள்களில் 16 சதவிகிதப் பொருள்களைச் இச்சங்கங்கள் விற்பனை செய்து வந்தன. 1957-ஆம் ஆண்டு இவ்விற்பனை 20·4% என உயர்ந்தது. 1957-ஆம் ஆண்டு, இக்கொள்முதல் சங்கங்கள் 1,957,000,000 காலன் மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள்களை விற்பனை செய்தன. உள்ளூர் மண்ணெண்ணெய்க் கூட்டுறவுச் சங்கங்கள் 2700 தொழிற்சாலைகளையும், 2000 மண்ணெண்ணெய் நிரப்பும் நிலையங்களையும் பெற்றிருந்தன. இச்சங்கங்களின் மொத்த விற்பனை கணிசமாக உயர்ந்து வந்துள்ளது. 1934-ஆம் ஆண்டு இச்சங்கங்களின் மொத்த விற்பனை 17,000 டாலர்களேயாகும். 1958-ஆம் ஆண்டு, மொத்த விற்பனை ஒரு மிலியனையும் தாண்டியது.

இச்சங்கங்களின் தனிச் சிறப்புகள் எல்லோராலும் பாராட்டப் படுகின்றன. அமெரிக்காவில் இயங்கும் கொள்முதல் சங்கங்கள் அளவில் மிகப் பெரியவைகளாக உள்ளன. அவற்றுள் சில மத்திய அமைப்புகளாகவும், மற்றும் சில கூட்டமைப்புகளாகவும் விளங்குகின்றன. இவற்றின் நிர்வாக அமைப்பு ஓரே சீராக விளங்குகின்றது.

முக்கியப் பொருள்களைக் கொள்முதல் செய்வதுடன் பொருள்களை விற்பனைக்கேற்றவாறு பக்குவப்படுத்தல், பொருள்களை உற்பத்தி செய்தல் போன்ற பல துறைகளிலும் ஈடுபட்டுள்ளன. பொருள்களின் தரத்தை உயர்த்துவதில் இச்சங்கங்கள் அரும்பாடுபட்டு வருகின்றன.

மொத்த விற்பனை மட்டுமின்றி, சில்லறை விற்பனையிலும் இச்சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. சில்லறை விற்பனையைச் சிறப்புறச் செய்வதற்கு இக்கொள்முதல் சங்கங்கள் பல திறமை வாய்ந்த முகவர்களை நியமித்துள்ளது.

இத்தகைய தனிச் சிறப்புகளைக் கொண்டு விளங்குவதால் தான் இச்சங்கங்கள் எளிதாக வெற்றி நடை போடுகின்றன. விவசாயப் பொருள்களையும் இச்சங்கங்கள் கணிசமாக உறுப்பினர்களுக்கு வழங்கி வருவதால், இத்தொழில் நன்கு மேன்மை பெற்று வருகின்றது.

கிராமச் சேவைச் சங்கங்கள்

கிராமங்களில் வாழும் விவசாயிகளுக்குப் பலவகையிலும் இச் சங்கங்கள் பேருதவி புரிந்து வருகின்றன. இச்சங்கங்கள் விவசாயிகளின் அன்றாடப் பிரச்சினைகளை எளிதில் தீர்த்து வைக்கின்றன. குறிப்பாகக் காப்பீடுச் சங்கங்கள், தொலைபேசிச் சங்கங்கள், மின்சாரச் சங்கங்கள், நீர்ப்பாசனச் சங்கங்கள், மக்கள் நலக் கழகங்கள் முதலானவை சிறந்த முறையில் இயங்கி வருகின்றன.

அமெரிக்க அரசாங்கம் நேரடியாகவே கடன் வழங்கி வருவது கிராமக் கூட்டுறவு மின்சாரச் சங்கங்களுக்கு மட்டுமேயாகும். வெகு நாள் வரை விவசாயிகள் மெழுகுவர்த்தியையும், எண்ணெய் விளக்குகளையுமே பயன்படுத்தி வந்தனர். இந்நூற்றுண்டின் தொடக்கத்தில், மின்சார வெளிச்சத்தில் ஏனையவை மறைந்தன. 1935-ஆம் ஆண்டு வரை 10 பண்ணைகளில் ஒரு பண்ணையே மின்சார வசதிகளைப் பெற்றிருந்தது. அமெரிக்காவில் மின்சாரம் தனியார் துறையின் மூலமாகவே (Public Utilities) விநியோகிக்கப்பட்டு வருகின்றது. பொதுவாக இத் தனியார் பங்கமைப்புகள் கிராமங்களைக் கவனிப்பதே இல்லை. அவ்வாறு வசதிகள் அளிக்கப்படுவதற்கு அதிகமான கட்டணத் தொகை பெறப்பட்டது (Rs. 9,500)

1935-ஆம் ஆண்டு விவசாயிகளின் துயர்துடைக்க அமெரிக்க அரசாங்கத்தால் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. கிராமங்களுக்கு மின்சார வசதிகள் அளிக்க ஒப்புதல் தந்த பங்கமைப்புகளுக்கு மிகக் குறைந்த வட்டியில் கடனுதவிகள் வழங்கப்பட்டது. இருப்பினும் நிலைமை சீரடையவில்லை. எனவே, விவசாயிகளே கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள விரும்பினர். இவர்களுக்கு உறுதுணையாக அரசாங்கமும் தன்னலியன்ற எல்லா உதவிகளையும் வழங்கியது. 1935-ஆம் ஆண்டு கிராம மின்சாரக்கூட்டுறவு அமைப்பு அமைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்தே கிராமங்கள் வெகு வேகமாக மின்சார வசதிகளைப் பெறலாயின. கிராம மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை கணிசமாக உயரலாயிற்று. 1950-ஆம் ஆண்டில் இச்சங்கங்களின் எண்ணிக்கை ஆயிரத்துக்கு அதிகமாகும். இச்சங்கங்களுக்குக் கடன் வசதிகளும் அளிக்கப்படுகின்றன.

கிராம மின்சார நிருவாக அமைப்பு (R. E. A.) ஏற்பட்ட பின்னர்தான் அமெரிக்கா ஒளிமயமாகத் திகழலாயிற்று. கிராம

மின்சாரச் சங்கங்கள் ஒன்று சேர்ந்து 'தேசியக் கிராம மின்சாரக் கூட்டமைப்பு' என்ற ஒரு தலைமை அமைப்பையும் உருவாக்கி யுள்ளன.

இதே போன்ற, காப்பீடுச் சங்கங்களும் விவசாயிகளுக்குப் பெருமளவில் பணியாற்றி வருகின்றன. தொலைபேசிச் சங்கங்கள், போக்குவரத்துச் சங்கங்கள், மக்கள் உடல்நலத்தைப் பேணிக் காக்கவல்ல கூட்டுறவுச் சங்கங்கள் முதலானவை அமெரிக்கக் கூட்டுறவு இயக்கத்தின் தனிச் சிறப்புகளாகும்.

கூட்டுறவுக் கடன் இயக்கம்

1933-ஆம் ஆண்டு அமெரிக்க அரசாங்கத்தால் விவசாயக் கடன் நிருவாக அமைப்பு அமைக்கப்பட்டது. அதன் பின்னரே விவசாயிகள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படத் தொடங்கியது. இக் கடன் நிருவாக அமைப்பு அமெரிக்க விவசாய இலாகாவின் கீழ் இயங்கி வருகின்றது. இதன் கீழ்ப்பல நிதிவழங்கும் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவையாவன;— (i) நிலவங்கி; (ii) இடைநிலைக் கடன் வழங்கும் வங்கி; (iii) உற்பத்திக் கடன் கூட்டுரு; (iv) கூட்டுறவுச் சங்க வங்கிகள். அமெரிக்காவின் இவ் விவசாயக் கடன் நிருவாக அமைப்பு விவசாயிகளுக்குத் தேவை யான நிதி வசதிகளை அளிப்பதுடன் ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றது. விவசாயப் பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து அவற்றை அவ்வப்போது சரிசெய்து விடுகின்றது. கூட்டுறவுக் கடன் சங்கங்களை நல்ல முறையில் வழிநடத்திச் செல்வது இத் தலைமை அமைப்பேயாகும். இனி, இக்கடன் வழங்கு துறையில் இயங்கும் பல்வேறு வங்கிகளை ஆராய்வோம்,

(i) கூட்டு நிலவங்கி (Federal Land Bank)

இவ்வங்கி விவசாயிகளுக்குத் தேவையான நீண்டகாலக் கடனுதவிகளை அளிக்கின்றன. இவ்வங்கி 12 பிரதேச வங்கிகளை யும், 1200 கிராம துணைச் சங்கங்களையும் (National Farm Loan Association) உறுப்பினர்களாகப் பெற்றுள்ளது. கடனுதவி பெற விரும்பும் தனி நபர்கள் இச்சங்கங்களின் பங்குகளைப் பெற்று முதலில் உறுப்பினர்களாக வேண்டும். பங்குகளை விரும்பாதோருக்குப் பங்குத் தொகை திரும்ப அளிக்கப்படு கின்றது. கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்குத் தேவை யான நிதி வசதிகளைப் பிரதேசச் சங்கங்களிடமிருந்து பெறு கின்றன. இவ்வாறு கடனுதவி பெற விரும்பும் சங்கங்கள் பிரதேச வங்கிகளின் பங்குகளில் முதலீடு செய்ய வேண்டும்

(5% of their Borrowings). கிராமக் கடன் சங்கங்கள் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் இயக்குநர்களைக் கொண்டு சிறந்த நிருவாகத்திற்கு வழி கோறுகின்றன. உறுப்பினர்களின் சொத்து மதிப்பில் 65 சதவிகிதம் வரை கடன் வழங்கப்படுகிறது. கடன் தொகை 30 ஆண்டுகளுக்குள் திருப்பி அளித்துவிடப்பட வேண்டும். குறைந்த வட்டிக்கே கடன் தொகை வழங்கப்படுகின்றது. கடன் தொகையை முழுவதும் திருப்பி வழங்கியவர்கள், அவர்கள் விரும்பினால் பங்குத் தொகையைத் திருப்பப் பெற்றுக் கொள்ளலாம். 'உறுப்பினர்களது கடன் விண்ணப்பங்களை நன்கு ஆராய்ந்த பிறகே, இக்கடன் சங்கங்கள் பிரதேசச் சங்கங்களுக்கு இவ்விண்ணப்பங்களை அனுப்புகின்றன. இப்பிரதேச வங்கியைச் சேர்ந்த ஓர் அதிகாரி உறுப்பினரது பொருளாதார நிலையை நன்கு ஆராய்ந்து தன் அறிக்கையைப் பிரதேச வங்கியிடம் சமர்ப்பிக்கின்றார். அதன் பிறகே கடன் வசதி அளிக்கப்படுகின்றது. பிரதேச வங்கியின் அனுமதியின்றி உறுப்பினர்களுக்குக் கடன் உதவிகள் அளிக்கப்படுவதில்லை. பிரதேச வங்கிகள் கடன் வழங்கும் முறையில் பல விதி முறைகளை வகுத்துள்ளன. கூட்டு நில வங்கியின் மூலதனம் அரசாங்கத்தால் அளிக்கப்பட்டதாகும். இவ்வங்கி, சில தருணங்களில் 'கடனீட்டுப் பத்திரங்கள்' மூலமாகவும் நிதி வசதிகளைப் பெருக்கிக் கொள்கின்றது. வணிக வங்கிகளிடமிருந்தும்; விவசாய அடைமானக் கூட்டுருவிடமிருந்தும் குறுகிய காலக் கடன் வசதிகளை இவ்வங்கி பெறுகின்றது. இவ்வங்கியின் மூலம் அமெரிக்க விவசாயிகள் பெரும்பேறு பெறுகின்றனர்.

உற்பத்திக் கடன் கூட்டுரு

இக்கூட்டுறவு அமைப்பு விவசாயிகளுக்குத் தேவையான குறுகிய காலக் கடன் வசதிகளை அளிக்கின்றது. இக்'கூட்டுரு' (Corporation) 12 பிரதேச வங்கிகளையும் பல உள்ளூர்க் கூட்டுறவுச் சங்கங்களையும் உறுப்பினர்களாகப் பெற்றுள்ளது.

இடைநிலைக் கடன் வங்கி

இவ்வங்கிகள் தனி நபர்களுடன் நேரடித் தொடர்பு கொள்வதில்லை. பொதுவாக இவ்வங்கி வங்கியல் தொழிலில் ஈடுபடுவதில்லை. கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றுச் சீட்டு மறுதள்ளுபடி (Rediscounting) மூலம் நிதி வசதிகளை அளிப்பதற்காகவே இவ்வங்கி அமைக்கப்பட்டுள்ளது. தனி நபர்களுக்குக் கடனுதவிகள் வழங்கப்படுவதில்லை. இது 12 பிரதேச வங்கிகளை உறுப்பினர்களாகப் பெற்றுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களின் வங்கி

விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி வசதிகளை அளிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ள வங்கியேயாகும் இது. விவசாயச் சங்கங்கள் தங்கள் தேவைக் கேற்பக் குறைந்த வட்டியில் கடனுதவிகள் பெறுகின்றன. இவ்வங்கியின் கீழ் 12 பிரதேச வங்கிகள் உள்ளன. இவ்வங்கி உள்ளூர்க் கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினர்களாகப் பெறவில்லை. கடன் வசதிகளைப் பெற விரும்பும் விவசாயச் சங்கங்கள் இவ்வங்கியின் பங்குகளைப் பெற்றிருக்க வேண்டும் (5% of the Funds borrowed). பொருள்களின் பேரிலும் கடனுதவிகள் வழங்கப்படுகின்றன. கடன் தொகை திரும்ப அளிக்கப்பட்டவுடன், சங்கங்கள் விரும்பினால் பங்குத் தொகையைத் திரும்பப் பெறலாம்.

கடன் தொகை குறுகிய காலத்திற்கு வழங்கப்படும் போதும், நீண்ட காலத்திற்கு வழங்கப்படும் போதும் கடன் பெற விரும்புவோரின் பொருளாதார நிலை நன்கு ஆராயப்படுகின்றது.

விவசாயப் பொருள்களின் பேரில் கடன் உதவிகள் வழங்கப்படுகின்றன. (Produce Pledge). பெரும்பாலும் இவ்வாறு வழங்கப்படுபவை குறுகிய காலக் கடன்களாகும். 1½ லிருந்து 2 சதவிகிதம் வரை வட்டித் தொகை உறுப்பினரிடமிருந்து பெறப்படுகின்றது.

நிலச் சொத்தின் (Estate) பேரிலும் குறுகிய காலக் கடன்கள் (Operating Capital Loans) வழங்கப் படுகின்றன. வட்டி விகிதம் 2½-லிருந்து 3 வரை வசூலிக்கப்படுகின்றது.

நீண்ட காலக் கடன்களும் (20 ஆண்டுகள்) வழங்கப்படுகின்றன. கடன் தொகை தவணை முறைகளில் திரும்பப் பெறப்படுகின்றது. நிலையான சொத்துக்களாகிய நிலம், கட்டிடங்கள், இயந்திரங்கள் முதலானவற்றை பெறுவதற்கு இக்கடனுதவி பெரிதும் துணைபுரிகிறது. இவ்வாறு பெறப்படும் நிலையான சொத்து கடன் முழுவதும் அடைக்கப்படும் வரை அடைமானப் பொருளாகவே கருதப்படும். இது தவிர வேறு சில அடைமான சொத்துக்களும் வங்கியின் பாதுகாப்புக்கென பெறப்படுகின்றன. பொதுவாக 'பத்திரங்களின்' (Security) மொத்த மதிப்பில் 60% வரை கடன் தொகை வழங்கப்படுகின்றது.

பிரதேச வங்கிகள் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு கொள்வதற்கென 'கடன் மன்றம்' அமைக்கப்பட்டுள்ளது. இதில்

கூட்டு நில வங்கி, உற்பத்திக் கடன் கூட்டுரு, கூட்டுறவுச் சங்கங்களின் மத்திய வங்கி முதலான வங்கிகளின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர். அரசாங்கத்தைச் சேர்ந்த மூன்று பேர்கள் இக் 'கடன் மன்றத்தில்' (Credit Council) உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

இனி, அமெரிக்காவின் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை ஆராய்வோம்.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

அமெரிக்காவின் 'நகர நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்' போதிய வளர்ச்சியைப் பெற்றுத் திகழவில்லை. இந்நூற்றுண்டின் பிற்பகுதியில் இச்சங்கங்களை வளர்ச்சியடையச் செய்வதற்குப் பல முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. பிறநாடுகளில் இச்சங்கங்கள் பெற்றிருக்கும் முக்கியத்துவம் இங்கு பெறவில்லை. அமெரிக்கக் கூட்டுறவு இயக்கத்தில் இது குறையாகும். நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் இங்கு வளர்ச்சி பெருமைக்குக் காரணங்களாவன-

(1) இந்நாட்டில் வாழும் மக்கள் பல வகைப் பழக்கங்களையும், வாழ்க்கை முறைகளையும் கொண்டவர்களாவர். இவர்கள் பல இனத்தவர்களாகையால் இவர்களின் 'நுகர்வில்' ஓரே தன்மையைக் காண இயலவில்லை.

(2) புதிய நாட்டில் குடியேறிய மக்கள் தொடக்கத்தில் அங்கு நிலைத்து வாழவில்லை. எனவே, அவர்களிடையே ஓரு நெருங்கிய தொடர்பு ஏற்படவே இல்லை. இத்தகைய தொடர்பு கூட்டுறவுப் பண்டகசாலையின் வெற்றிக்கு மிகத் தேவையானதாகும்.

(3) தனியார் துறையில் இயங்கி வந்தவர்களுடன் கடும் போட்டி ஏற்பட்டமையால், பொருளாதார நிலையில் உயர்ந்து காணப்பட்ட அவர்கள் விலையைக் கணிசமாகக் குறைத்தனர். மக்கள் கூட்டுறவுச் சங்கங்களை மறந்தனர்.

(4) இயற்கையிலேயே உடனே ஏற்படும் இலாபத்தை விரும்பும் அமெரிக்கர்கள், நாளடைவில் விளையும் நன்மைகளை நாடவில்லை.

இருப்பினும், அமெரிக்காவில் பல மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும், சில்லறை விற்பனைப் பண்டகசாலைகளும் இயங்கி வருகின்றன.

சில்லறை விற்பனைப் பண்டகசாலைகள்
(Retail Stores)

ஒரு மத்திய நிறுவனம் பல சில்லறை விற்பனைப் பண்டக சாலைகளைக் கண்காணித்து வருகின்றது. இப்பண்டகசாலைகள் சங்கிலித் தொடர் போல் அமைக்கப்பட்டுள்ளன. சில கூட்டுறவுச் சங்கங்கள் எல்லா முக்கியப் பொருள்களையும் விற்பனை செய்கின்றன. ஏனைய சங்கங்கள் ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கெனச் சில விற்பனைப் பொருள்களை மட்டுமே கையாளுகின்றன. பெரிய அளவில் இயங்கும் சங்கங்கள் பல பிரிவுப் பண்டகசாலைகளையும், வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பும் நிலையங்களையும் பெற்றுள்ளன. கிராமப் புறங்களில் கொள்முதல் சங்கங்களே நுகர்வோர் சங்கங்களாகவும் பணி புரிகின்றன. சில நுகர்வோர் சங்கங்கள் தங்களின் உறுப்பினர்களுக்காகக் 'கழிவு ஒப்பந்தங்களின்' (Commission Contracts) அடிப்படையில் இயங்கி வருகின்றன. இது இவ்வியக்கத்தின் தனிச் சிறப்பாகும்.

தற்போது, தொழிலாளர் குடியிருப்புகளில் இச்சங்கங்கள் பெருமளவில் அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்கான நடவடிக்கைகளை 'தொழிற் சங்கங்கள்' (Labour Unions) மேற்கொண்டுள்ளன. முக்கியப் பொருள்கள் நியாய விலையில் விற்கப்படுகின்றன.

மொத்த விற்பனைப் பண்டகசாலைகள்
(Wholesale Stores)

கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யும் பொருட்டு பல விற்பனைப் பண்டகசாலைகள் தற்போது தொடங்கப்பட்டு வருகின்றன. பலசரக்குப் பொருள்களைத் தவிர, டயர், எண்ணெய் வகைகள், மின்கலங்கள் (Battery), பெட்ரோல், (Gasolene) முதலான பல பொருள்களை இம் மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் விற்பனை செய்கின்றன. இச்சங்கங்கள் பொருள்களைப் பக்குவப்படுத்தல், உற்பத்தி செய்தல் போன்ற காரியங்களில் ஈடுபடுவதில்லை. உயர்ரக இயந்திரங்களையும், கருவிகளையும் தயாரிப்பதற்கெனத் தனியார் துறையில் இயங்கும் பங்கமைப்புகளுடன் இச்சங்கங்கள் ஒப்பந்தங்கள் செய்து கொள்கின்றன. இப்பண்டகசாலையின் செயற்பாட்டுப் பகுதி அதிகமாகையால் பல விற்பனைப் பிரிவுகளை இச்சங்கம் நிருவகித்து வருகின்றது. மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் மிகப் பெரியது 'விஸ்கான்சின்' (Wisconsin) என்ற மாநிலத்தில் உள்ளது. இம்மொத்த விற்பனைப் பண்டகசாலை

(Central Co-op. Wholesale of Superior) சுமார் 120 விற்பனைப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இணைக்கப்பட்டுள்ள 'நுகர்வோர் சங்கங்கள் 'வாக்குரிமை' (Voting Right) பெற்றுள்ளன. ஒவ்வொரு உறுப்பினர் சங்கமும் ஒரு 'வாக்குப்' பெற்றுள்ளது. ஒவ்வொரு 50 தனி உறுப்பினர்களுக்கும் மேலும் ஒரு வாக்கு அளிக்கப்படுகின்றது. இவ்வாறு வழங்கப்படுவதற்கு உறுப்பினர் சங்கம் மொத்த விற்பனைச் சங்கத்தில் ஒத்திசைவான பங்குகளைப் பெற்றிருக்க வேண்டும். உறுப்பினர் சங்கங்களுக்கு ஆண்டு முடிவில் அவைகள் செய்திருக்கும் கொள்முதல் அடிப்படையில் 'பங்கு ஆதாயம்' வழங்கப்படுகின்றது. இலாபத் தொகை முழுவதுமே உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப் படுவதில்லை. இலாபத்தில் ஒரு பகுதி 'காப்பு நிதிக்'காகவும் ஒதுக்கப்படுகிறது, உறுப்பினரல்லாத சங்கங்களுடனும் இம்மொத்த விற்பனைச் சங்கம் வியாபாரத் தொடர்பு கொண்டுள்ளது. ஆனால் அவைகளுக்கு ஆண்டு முடிவில் இலாப ஈவுத்தொகை வழங்கப் படுவதில்லை.

தேசிய மொத்த விற்பனைச் சங்கங்கள்

1930-ஆம் ஆண்டு, கொள்முதல் சங்கங்கள் யாவும் ஒன்று சேர்ந்து பிரதேச அடிப்படையில் 'ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புகள்' (United Co-operatives) உருவாக்கின. பண்ணைகளுக்குத் தேவையான எண்ணெய் வகைகளை அளிப்பதற்காகத் தொடங்கப்பட்ட இக்கூட்டமைப்பு நாளடைவில் விவசாய இயந்திரங்களையும் விற்பனை செய்யத் தொடங்கின. இக் கூட்டமைப்பு மொத்த விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களைவிட உயர்வானவையாகும்.

இவற்றின் அடுத்த மட்டத்தில் 'தேசிய மொத்த விற்பனைச் சங்கம்' அமைக்கப்பட்டுள்ளது. 1933-ஆம் ஆண்டு கொள்முதல் சங்கங்களாலும், நுகர்வோர் சங்கங்களாலும் அமைக்கப்பட்டதாகும். பிரதேச அடிப்படையில் இயங்கும் ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கமும் இதன் உறுப்பினராகும், இத்தேசிய அமைப்பின் தலைமைக் காரியாலயம் 'சிகாகோ' மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 'கூட்டுறவுக் குறி'யை (Co-op. Brand) உபயோகப்படுத்துவதில் இத்தேசிய அமைப்பு பல விதிமுறைகளை விதித்துள்ளது. தேசிய அளவில் இயங்கும் கூட்டுறவு 'இணைகுழுவிற்கும்' இது நல்லாதரவை அளித்து வருகின்றது. இத் தேசிய இணைகுழு (Co-op. League) கூட்டுறவுக் கொள்கைகளை நாடு முழுதும் பரப்பி வருகின்றது.

சேவைச் சங்கங்கள்

சேவைச் சங்கங்களில் மனைவழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள், காப்பீடுக் கழகங்கள், மக்கள் நல்வாழ்வுச்சங்கங்கள், முதலானவை குறிப்பிடத் தக்கவையாகும். கூட்டுறவு விடுதிகளும், உண்டிச் சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. மனைக் கூட்டுறவுச் சங்கங்களே இந்நாட்டில் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளன. 1950–ஆம் ஆண்டு, 24,353 உறுப்பினர்களைக் கொண்ட 160 சங்கங்கள் இயங்கி வந்தன. இச்சங்கங்களில் மிகப் பிரபலமானவை நியூயார்க் நகரில் உள்ளன. இச்சங்கங்கள் குடும்பத்திற்குத் தேவையான பொருள்களை விற்கும் பலசரக்குக் கடைகளை (Grocery Stores) நடத்தி வருகின்றன. மேலும், பால் கடைகளையும், சலவை நிலையங்களையும் நடத்தி வருகின்றன. இம் மனைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டமைப்பையும் உருவாக்கியுள்ளன.

பல உண்டிச்சாலைகளும் கூட்டுறவு முறையில் அமெரிக்க நாட்டில் இயங்குவதை இன்றும் நாம் காணலாம். கல்லூரி மாணவர்கள் தங்கள் நலனுக்கெனக் கூட்டுறவுப் பண்டகசாலைகளை நடத்துகின்றனர். கிராமப் புறங்களில் கூட்டுறவு ஆரோக்கியச் சங்கங்களும், காப்பீடுச் சங்கங்களும் இயங்கி வருகின்றன.

கடன் சங்கங்கள்
(Credit Unions)

வாணிப வங்கிகளிடமிருந்து நிதி வசதிகளைப் பெற இயலாத எளிய மக்களின் நல்வாழ்விற்கெனத் தொடங்கப் பட்டவையே 'கடன் சங்கங்களாகும்.' இச்சங்கங்கள் உறுப்பினர்களுக்குக் கடன் வழங்குவது மட்டுமின்றி, சிக்கனத்தின் அவசியத்தையும் நன்கு போதிக்கின்றன. எனவே, எளிய மக்களிடமிருந்து பெறப்படும் சேமிப்புத் தொகை நிதி வசதிகள் குறைந்த அம்மக்களுக்குத் தேவையான சமயங்களில் கடனாக அளிக்கப்படுகின்றது. எனவே, ஒரு குறிப்பிட்ட பகுதியிலோ அல்லது ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கோ நிதி வசதிகளை அளிக்கும் அமைப்பே கூட்டுறவுக் கடன் சங்கம் எனப்படுகிறது. இவைகள் 1934–ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டவையாகும். அமெரிக்க ஐக்கிய நாட்டில் இக்கடன் சங்கம் அமைக்கப்பட்டமைக்கு இந்தியாவே காரணமாகும். அமெரிக்க நாட்டில் இக்கடன் சங்கம் அமைக்கப்படுவதற்குக் காரணமாக விளங்கிய ஒரு வியாபாரி (Edward A. Filene) இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கையில் இச்

சங்கத்தைப்பற்றிக் கேள்வியுற்றார். இதன் பிறகே இச்சங்கங்கள் அமெரிக்க நாட்டில் தோன்றின. முதல் கடன் சங்கச் சட்டம் 1909-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. முதல் கடன் சங்கம் 1910-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அமெரிக்காவின் ஒரு மாநிலத்தில் மட்டும் (Massachusetts) அவ்வியாபாரியின் முயற்சியினால் 200 கடன் சங்கங்கள் வெகு விரைவில் தொடங்கப்பட்டன. ஏனைய மாநிலங்களிலும் இச்சங்கங்கள் பரவ வேண்டுமென்பதற்காக அவர் 1921-ஆம் ஆண்டு 'தேசிய விஸ்தரிப்பு அலுவலகத்தை'த் தொடங்கினார். இச்சங்கங்களுக்கெனப் பல சட்டங்கள் இயற்றப்படுவதற்கும் இவர் காரணமாக விளங்கினார். இவரது அரிய முயற்சியின் விளைவாக 44 மாநிலங்கள் கூட்டுறவுக் கடன் சங்கச் சட்டத்தை நிறைவேற்றின. 1934-ஆம் ஆண்டு நாடு முழுமைக்குமான சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதே ஆண்டில் தேசிய விஸ்தரிப்பு அலுவலகம் அகற்றப்பட்டுக் 'கடன் சங்க தேசிய அமைப்பு' (Credit Union National Association) தொடங்கப்பட்டது. மாநிலங்களில் இயங்கிவந்த கடன் சங்கங்கள் இத்தேசிய அமைப்பில் உறுப்பினர்களாகச் சேர்ந்தன. அத்தருணத்தில் சுமார் 3000 கடன் சங்கங்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் இயங்கி வந்தன. இதன் தலைமை அலுவலகம் 'மடிசன்' (Madison) என்ற நகரில் அமைக்கப்பட்டது. பிறகடன் சங்கங்கள் வழங்கும் தொகையைக் கொண்டே இத்தலைமைக் காரியாலயம் நடத்தப்படுகின்றது. உறுப்பினர்களுக்கு இச்சங்கங்கள் பெரும்பாலும் குறுகிய காலக் கடன் வசதிகளையே அளிக்கின்றன. பள்ளி ஆசிரியர்கள், சுரங்கத் தொழிலாளர்கள், தொழிற் சங்கங்கள், தபால் நிலைய ஊழியர்கள் முதலானவர்கள் இச்சங்கங்களினால் மிகுந்த நன்மை பெறுகின்றனர்.

5 டாலர் மதிப்புள்ள ஒரு பங்கைப் பெறுவதன் மூலம் எவரும் இச்சங்கத்தின் உறுப்பினராக அனுமதி வழங்கப்படுகின்றது. பங்குத் தொகை தவணை முறைகளிலும் பெறப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் அங்கத்தினராக இருப்பவரே இக்கடன் சங்கத்தில் உறுப்பினராக மாற முடியும். இனி, இச்சங்கங்களின் முக்கியப் பணிகளைக் காண்போம்.

(i) உறுப்பினர்களைச் சிக்கன நடவடிக்கைகளைக் கைக்கொள்ளச் செய்து சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த இச்சங்கங்கள் அரும்பாடுபட்டு வருகின்றன.

(ii) உறுப்பினர்களுக்குத் தேவையான நிதி வசதிகளை நியாயமான வட்டிக்கு வழங்குவதும் இச்சங்கத்தின் முக்கியப் பணியாகும்.

இக்கடன் சங்கம் வெளியார் யாரிடமிருந்தும் கடன் வசதிகள் பெறுவதில்லை. இக்கடன் சங்கங்கள் உறுப்பினர்களது முழு ஆதரவையும் பெற்றுள்ளதால் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படுவதில்லை. பொதுமன்ற உறுப்பினர்கள் ஓர் இயக்குநர் அவையை அமைத்து அதனிடம் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைக்கின்றனர். மேலும், 'கடன் குழு' (Credit Committee), 'தணிக்கைக் குழு' (Auditing Committee) என இரண்டு குழுக்களும் நியமிக்கப்படுகின்றன. சில சமயங்களில் அரசாங்க அதிகாரிகளும் தணிக்கையில் ஈடுபடுகின்றனர். கடன் சங்கம் பொதுவாக 6 சதவிகித வட்டியையே உறுப்பினர்களிடமிருந்து பெறுகிறது பங்குகளின் அடிப்படையில் பங்கு ஆதாயம் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றது. பங்கு ஆதாயம் வழங்கப்படுவதற்கு முன்னர் இலாபத்தில் ஒரு பங்கு காப்பு நிதிக்கு ஒதுக்கப்படுகின்றது. உறுப்பினர்கள் கடன் தொகையை மாதத் தவணைகளில் அடைக்கின்றனர். உறுப்பினர் பெறும் கடன் முறையாகச் செலவிடப்படுகிறதா என்றும் கண்காணிக்கப்படுகின்றது. உறுப்பினர்களுக்கு அவ்வப்போது கூட்டுறவுக் கொள்கை விளக்கங்களும் அளிக்கப்படுகின்றன இச்சங்கங்களைப் பற்றிய புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

விபரம்	1965-ஆம் ஆண்டு இறுதி	1964-ஆம் ஆண்டைவிட ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி %
1. கடன் சங்கங்களின் எண்ணிக்கை	22,182	1.60 %
2. உறுப்பினர் எண்ணிக்கை	16,655,609	6.64
3. சேமிப்புத் தொகை	9,376,492,168	13.77
4. திரும்பப் பெறவேண்டிய கடன்கள்	8,254,444,328	17.15
5. காப்பு நிதிகள்	598,520,366	17.28
6. மொத்தச் சொத்துக்கள்	16,644,547,524	13.71

கல்விப் பணியும் கூட்டுறவு இயக்கமும்

மக்களுக்கு முறையான கூட்டுறவுக் கல்வியையும், பயிற்சியையும் அளிப்பதற்கெனப் பல விவசாயக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. 'விவசாயக் கடன் நிருவாக அமைப்பும்' இப்பணியில் நன்கு ஒத்துழைக்கின்றது. 1906-ல் அமைக்கப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கம் (Co-op. League) நகர்ப்புறங்களில் கூட்டுறவுக் கல்வியை நன்கு பரப்பி வருகின்றது. குறிப்பாக நுகர்

வோர்களுக்கு இக்கூட்டுறவுச் சங்கம் தகுந்த ஆலோசனைகளை வழங்கி வருகிறது. பல கொள்முதல் சங்கங்களும், மொத்த விற்பனைச் சங்கங்களும் இத்தேசியக் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களாகத் திகழ்கின்றன. இதன் தலைமைக் காரியாலயம் சிகாகோ நகரில் இயங்கி வருகிறது. நியூயார்க், வாஷிங்ட்ன் ஆகிய நகரங்களில் இதன் கிளை அலுவலகங்கள் உள்ளன. சர்வ தேசக் கூட்டுறவு ஒப்பந்த அமைப்பில் இத்தேசியச் சங்கம் உறுப்பினர் பதவியை வகிக்கின்றது. முறையான பயிற்சி அளிப்பதற்கென 'ராக்டேல் நிறுவனம்' என்ற ஒரு பயிற்சி நிலையமும் நடத்தப்படுகின்றது.

1925-ஆம் ஆண்டு விவசாயக் கூட்டுறவின் வளர்ச்சிக்கென ஒரு நிறுவனம் தொடங்கப்பட்டது. ஆண்டுதோறும் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. கூட்டுறவுப் பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து துண்டு அறிக்கைகளையும் இந்நிறுவனம் வெளியிடுகின்றது. சுமார் 1500 கூட்டுறவுச் சங்கங்கள் இந்நிறுவனத்தில் உறுப்பினர்களாகப் பணிபுரிகின்றன.

1929-ஆம் ஆண்டு 'தேசியக் கூட்டுறவு மன்றம்' உற்பத்தியாளர் சங்கங்களின் நலன் கருதி அமைக்கப்பட்டது. கொள்முதல் சங்கங்கள், விற்பனை யேற்பாட்டுச் சங்கங்கள் ஆகியவை இதன் உறுப்பினர்களாக விளங்குகின்றன. இத்தேசிய அமைப்பின் தலைமை அலுவலகம் 'வாஷிங்டன்' நகரில் இயங்கி வருகிறது. தற்போது 110-க்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டு விளங்குகிறது. பொதுவாக விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் இது மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றது.

கூட்டுறவுச் சட்டம்

பொதுவாக நாடு முழுமைக்குமாக அமெரிக்காவில் கூட்டுறவு இயக்கத்திற்கெனச் சட்டங்கள் இயற்றப்படவில்லை. கடன் சங்க வளர்ச்சியைக் கருதி, நாடு முழுமைக்குமாக 1934-ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டது. இது தவிர ஏனைய கூட்டுறவுச் சங்கங்களுக்கென எவ்வித சட்டமும் இயற்றப்படுவதில்லை. கூட்டுறவு வளர்ச்சியைக் கருதி, அந்தந்த மாநிலங்களே சூழ்நிலைகளுக்கேற்பச் சட்டங்களை இயற்றிக் கொள்கின்றன. கொள்முதல் சங்கங்கள், விற்பனை யேற்பாட்டுச் சங்கங்கள் முதலானவற்றைக் கட்டுப்படுத்த மாநில அரசுகளே சட்டங்களை இயற்றிக் கொள்கின்றன.

அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கூட்டுறவு இயக்கத்தின் தனிச் சிறப்புகள்

இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கம் பெற்றிருக்கும் தனிச் சிறப்புகளாவன :—

(1) இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கம் விவசாயிகளின் இயக்கமாகும். தொடக்கத்திலிருந்தே விற்பனை யேற்பாட்டுச் சங்கங்களே நன்கு வளர்ச்சி பெறத் தொடங்கின. விவசாயப் பொருள்களின் விற்பனை யேற்பாட்டுப் பணியை இச்சங்கங்களே திறம்பட நடத்துகின்றன. ஒவ்வொரு விவசாயப் பொருளுக்கும் தனித் தனியாகச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. இவ்வியக்கம் கிராமப் புறங்களில் தான் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளது. எல்லா மட்டங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(2) விற்பனை யேற்பாட்டுச் சங்கங்களுக்கு அடுத்தபடியாகக் கொள்முதல் சங்கங்கள் இந்நாட்டில் வலிமையுடன் திகழ்கின்றன. இக்கொள்முதல் சங்கங்கள் மத்தியச் சங்கங்களைப் பெற்றுள்ளன. விவசாயப் பொருள்கள் மட்டுமின்றி, பல நுகர்வுப் பொருள்களும் இக்கொள்முதல் சங்கங்களால் கையாளப்படுகின்றன. இது இவ்வியக்கத்தின் தனிச் சிறப்பாகும். விற்பனை யேற்பாட்டுச் சங்கங்களும் கொள்முதல் சங்கங்களும் இந்நாட்டில் அதிக வேறுபாடுகளைக் கொண்டு விளங்கவில்லை. ஏனெனில், விற்பனை யேற்பாட்டுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு விவசாயப் பொருள்களை விற்பனை செய்வது போல், கொள்முதல் சங்கங்கள் விவசாயப் பொருள்களுக்கு விற்பனை யேற்பாட்டையும் இதர விற்பனைக்குரிய பணிகளையும் செய்து வருகின்றன.

(3) இச்சங்கங்கள் அளவில் பெரியனவாக விளங்குவதால் நிருவாகச் செலவு கணிசமாகக் குறைந்தே காணப்படுகின்றது. ஆனால் இச்சங்கங்கள் மக்களாட்சி முறையில் முழுவதுமாகக் கட்டுப்படுத்தப்படுவதில்லை. இது அமெரிக்கக் கூட்டுறவு இயக்கத்தின் தனிச் சிறப்பு என்று கூறுவதைவிடக் குறைபாடென்பதே பொருந்தும்.

(4) அமெரிக்கக் கூட்டுறவு இயக்க வளர்ச்சியில் நுகர்வோர் சங்கங்கள் பெரும் பங்கு வகிக்கவில்லை. விற்பனையேற்பாட்டுச் சங்கங்களைப் போலவோ அல்லது கொள் முதல் சங்கங்களைப் போலவோ இந்நாட்டு நுகர்வோர் சங்கங்கள் வளர்ச்சி பெற இயலவில்லை. இங்கிலாந்தில் துய்ப்போர் கூட்டுறவு இயக்கம்

தொழிலாளிகளால் தொடங்கப்பட்டதாகும். தொழிலாளர்கள் தங்கள் செலவைக் குறைப்பதற்கென்று ராக்டேல் பண்டக சாலையைத் தொடங்கினர். ஆனால், அமெரிக்க ஐக்கிய நாட்டில் கூட்டுறவு இயக்கம் விவசாயிகளால் தொடங்கப்பட்டதாகும். கிராமப் புறங்களில்தான் கூட்டுறவுச் சங்கங்கள் முதன் முதலில் தொடங்கப்பட்டன. விற்பனையேற்பாட்டுச் சங்கங்களையும், கொள் முதல் சங்கங்களையுமே அவர்கள் தொடங்கினர். துய்ப்போர் பொருள்களைக் கொள் முதல் சங்கங்களே விற்பனை செய்து வந்தமையால், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் வளர வாய்ப்புகள் உருவாகவில்லை.

(5) இந்நாட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் பக்குவப்படுத்தல், உற்பத்தி செய்தல் போன்ற பணிகளிலும் ஈடுபடுகின்றன.

(6) துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் வியாபாரத்தில் பெரும் பகுதியை 'கழிவு ஒப்பந்த அடிப்படையில்' (Commission Contract Basis) செய்கின்றன. இது இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கத்தின் தனிச் சிறப்பாகும்.

(7) விவசாயிகளின் கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் விவசாயப் பொது அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு விளங்குகின்றன. இதன் விளைவாக, உறுப்பினரல்லாதாரும் கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ள முடிகின்றது.

(8) அமெரிக்கப் பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் இவ்வியக்க வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக விளங்குகின்றன. பல பயிற்சி நிலையங்களும் நடத்தப்படுகின்றன. கூட்டுறவுக் கல்வியை நன்கு பரப்புவதன் மூலமே கூட்டுறவு இயக்கத்தை வளர்க்க இயலும் என்பதை நன்குணர்ந்து செயல்படும் நாடு அமெரிக்கா.

(9) கூட்டுறவு இயக்கத்தை மாநில அரசுகளும், கூட்டமைப்பு அரசும் நன்கு பேணிக் காக்கின்றன. அரசின் அரவணைப்பில் வலிவுடன் வளர்கின்றது இந்நாட்டுக்கூட்டுறவு இயக்கம்.

(10) இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் வங்கியல் தொழில் வளரவே இல்லை. கூட்டுறவுச் சங்கங்கள் நிதிவசதிகளைப் பெற வாணிப வங்கிகளின் தயவையே நாட வேண்டியுள்ளது.

(11) அமெரிக்க ஐக்கிய நாட்டில் நாடு முழுமைக்குமாக கூட்டுறவுச் சங்கங்களைக் கட்டுப்படுத்தவல்ல சட்டங்கள் இயற்றப் படுவதில்லை. அந்தந்த மாநில அரசுகளே சூழ்நிலைகளுக்கேற்பச் சட்டங்களை இயற்றிக் கொள்கின்றன.

(12) கூட்டுறவுக் கல்வியைக் கொண்டுதான் இயக்கத்தை வளர்க்க இயலும் என்பதை உணர்ந்த அமெரிக்கநாடு, தேசிய அளவில் கல்வி வளர்ச்சிக்கான செயல்களில் பணியாற்ற வல்ல பல நிறுவனங்களைப் பெற்றுள்ளது.

பொதுவாக, இன்றைய உலக அரங்கில் அமெரிக்க ஐக்கிய நாடு செல்வம் கொழிக்கும் நாடாக விளங்குகின்றது. வறுமையை அந்நாட்டு மக்கள் தொடக்கத்திலிருந்தே சரியாக உணராததால் தான் கூட்டுறவு இயக்கத்தின் சில துறைகள் போதிய வளர்ச்சியைப் பெறவில்லை. உதாரணமாக, இந்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் போதிய வளர்ச்சியைப் பெறவில்லை. நகரங்களைவிடக் கிராமங்களே கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு உறு துணையாக விளங்குகின்றன. அமெரிக்கா ஒரு முதலாளித்துவம் சார்ந்த நாடாகையால் அதற்கே உரிய பாணியில் கூட்டுறவு இயக்கத்தைப் போற்றிப் பாதுகாக்கின்றது.

12. கனடாவில் கூட்டுறவு இயக்கம்
(Co-operative Movement in Canada)

முன்னுரை

செல்வச் சிறப்புடன் விளங்கும் சில உலகநாடுகளில் கனடாவும் ஒன்ருக இன்று திகழ்கிறது. வேளாண்மையில் நல்ல வளர்ச்சி, அறிவியல் துறையில் வியத்தகு முன்னேற்றங்கள், சிறந்த அரசியலமைப்பு, இவற்ருல் அமைந்த உறுதியான பொருளாதார நிலை ஆகிய இவைகளின் கூட்டுத் தொகையே கனடாவாகும். நாம் கண்டு வியக்கின்ற இன்றைய கனடா ஒரே நாளில் இந்நிலைக்கு உயர்ந்து விடவில்லை. தளராத உழைப்பி ஞலும், தரங்குறையச் செயல் முறைகளிஞலும் உயர்ந்த நாடுதான் கனடாவாகும்.

வட அமெரிக்காவிற்கு வடபக்கத்தில் கனடா அமைந் துள்ளது. உலகின் இரண்டாவது பெரிய நாடாக விளங்கும் கனடா தேவையான எல்லாச் செல்வங்களையும் பெற்றிருப்பினும் 'மக்கள் செல்வத்தை' அதிகமாகப் பெற்றிருக்கவில்லை. அந் நாட்டின் மக்கள் தொகை ஏறக்குறைய 19 மிலியனுகும். இங்கி லாந்து நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட மக்களே இங்கு அதிக மாக வாழ்கின்றனர்.

கனடா ஒரு விவசாய நாடாகும். மொத்தப் பரப்பளவில் ஆறில் ஒரு பங்கு விவசாயத்திற்கு ஏற்றதாக விளங்குகிறது. இத்தகைய விளை நிலம் பத்துப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, வேளாண்மைத் தொழில் செவ்வனே நடைபெற்று வருகின்றது. பழ உற்பத்தி, கோதுமை உற்பத்தி, ஆடு மாடுகள் வளர்த்தல், மீன் பிடித்தல் போன்ற எல்லாத் துறைகளிலும் தன் கவனத்தைச் செலுத்தி வருகின்றது கனடா. பால் உற்பத்தியும் ஓரளவு இங்

குள்ளது. இவ்வகை முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இந் நாட்டின் தட்ப வெப்பச் சூழ்நிலைகளும் சிறந்து விளங்குகின்றன. விவசாயமே இந்நாட்டின் உயிர்நாடியாக விளங்குகின்றது. மக்கள் தொகையில் ஆறில் ஒரு பங்கு வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். கோதுமை உற்பத்தியில் கனடா தன்னிகரில்லாத நாடாகத் திகழ்கின்றது. தனது தேவைக்கு மேல் உற்பத்தியாகும் கோதுமை ஆசிய, ஐரோப்பா நாடுகளுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்கின்றது. தற்போது மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி. பழ வகைகள், முட்டை போன்ற முக்கியமான பொருள்களையும் அதிகமாக ஏற்றுமதி செய்து பொருளாதாரத் துறையை நன்கு வலுப்படுத்தி வருகின்றது இந்நாடு. இன்று இத்துணைச் சிறப்புடன் விளங்கும் கனடாவில் எவ்வாறு கூட்டுறவு இயக்கம் தொடங்கியது என இனிக் காண்போம்.

கூட்டுறவின் தொடக்கம்

இங்குக் குடியேறிய மக்களின் இன்னல்களைக் களைந்தெறிய வெகு நாட்களுக்கு முன்னரே கூட்டுறவு இயக்கம் தொடங்கியதென்றாலும், ஒரு முறையான கூட்டுறவு இயக்கம் 1870-ஆம் ஆண்டுக்குப் பின்னரே தோன்றியது. முதன் முதலில் விவசாயத் துறையில் மட்டுமே கூட்டுறவுக் கொள்கைகள் கையாளப்பட்டன. வெகு தூரம் பரவிக் கிடந்த புல்வெளிப் பகுதிகளில் வாழ்ந்து வந்த விவசாயிகள் தங்கள் ஏற்றுமதித் துறையில் 'இடைநிலையர்களையே' (Middle Men) பெரிதும் நம்பி வாழ வேண்டியிருந்தது. ஏற்றுமதியால் கிடைத்த இலாபத்தை இந்த இடை நிலையர்கள் பெரிதும் சுரண்டி வாழ்ந்தனர்.

மேலும் போக்கு வரத்துத் துறையிலும் விவசாயிகள் பல தடைகளைக் கடக்க வேண்டியிருந்தது. குறிப்பாக இரயில் போக்குவரத்து இவர்களுக்கு மிகுந்த தொல்லை கொடுத்து வந்ததால் ஏற்றுமதித் துறை மிகவும் பாதிக்கப்பட்டது. எனவே இவர்கள் விநியோகத் துறையில் விற்பனை ஏற்பாடு செய்ய இயலாமல் மிகவும் அல்லலுற்றனர். இதன்விளைவாக 'விற்பனை ஏற்பாடு' (Marketing) செய்யும் பொருட்டு பல கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டு அவை பெரும் வெற்றியையும் பெறத் தொடங்கின. கனடாவின் 'கூட்டுறவு விற்பனை ஏற்பாட்டுச் சங்கங்கள்' (Co-operative Marketing Aasociations) மிகவும் சிறப்பு வாய்ந்தவையாகும். இனி இவ்வகைச் சங்கங்களைப் பற்றி ஆராய்வோம்.

கூட்டுறவு விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள்

கனடாவில் இக்கூட்டுறவு விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள் கோதுமை, ஆடு மாடுகள், பழவகைகள், பால் முதலான முக்கியப் பொருள்களுக்குத் தனித்தனியாக முதலில் தோற்றுவிக்கப் பட்டன. எனவே கனடாவில் 'கோதுமைத் தொழில் திரட்டு' (Wheat Pools), 'ஆடு மாடுகள் தொழில் திரட்டு' (Livestock Pools), 'பழங்களுக்கான தொழில் திரட்டு' (Fruit Pools), 'பால் தொழில் திரட்டு' (Milk Pools) எனப் பலவகை அமைப்புக்கள் தோன்றின. முதன் முதலில் தோன்றியது கோதுமைத் தொழில் திரட்டேயாகும். இத்துறையில் மலிந்து கிடந்த குறைபாடுகளும், இடர்ப்பாடுகளுமே இத்தொழில் திரட்டுக்குக் காரணமாகும். 1900-ஆம் ஆண்டுக்கு முன்னர் கோதுமை விற்பனை ஏற்பாடு தனியார் துறையினராலேயே செய்யப்பட்டு வந்தது. அவர்களே கோதுமையின் 'விற்பனை முற்றுரிமையை'ப் (Monopoly) பெற்று இருந்தனர். இவர்கள் அதிக அளவில் கோதுமையை விவசாயி களிடமிருந்து கொள்முதல் செய்து, பிறகு அதைத் தேவையான நாடுகளுக்குப் போக்குவரத்து வசதிகள் மூலம் ஏற்றுமதி செய்து வந்தனர். கோதுமையை மற்ற நாடுகளுக்கு அனுப்புவதற்காகப் பயன்படும் இரயில், கப்பல் மேடைகளும் (Platforms) இவர்களது உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டன. மேலும் உயரே தூக்குவதற்குப் பயன்படும் பெரிய இயந்திரங்களையும் (Elevators) இவர்கள் பெற்றிருந்தனர். தனிப்பட்ட விவசாயிகள் ஏற்றுமதி செய்யப் பபன்படும் மேடைகளையோ அல்லது இயந் திரங்களையோ பயன்படுத்த இயலாமல் மிகவும்அவதிக்குள்ளாகித் தவித்தனர். 1900-ஆம் ஆண்டு இத்தடை நீங்கியது என்றாலும், தனி விவசாயிகளின் ஏற்றுமதி அளவு மிகவும் குறைவாக இருந் தமையால் போக்குவரத்து அதிகாரிகள் அதை ஏற்க மறுத்தனர். இந்நிலையில் கூட்டுறவுக்கொள்கைகளின் மூலம்தான் இத்தொல்லை களைக் களைய முடியும் என்பதை நன்குணர்ந்த விவசாயிகள் அவ் வகைச் சங்கங்களை உருவாக்க எல்லா முயற்சிகளையும் எடுக்கலா யினர். அதன் விளைவாகத் தோன்றியவையே கனடாவின் கூட்டுறவு விற்பனை ஏற்பாட்டுச் சங்கங்களாகும். இச்சங்கங்களின் தோற்றமே கனடாவின் பொருளாதாரத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

1906-ஆம் ஆண்டு 'தானியம் பயிரிடுவோர் சங்கம்' (Grain Growers Association) அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து 1911-ஆம் ஆண்டு மேலும் ஒரு கம்பெனி (Saskatchewan Elevator Company) தொடங்கப்பட்டது. இவ்விரு அமைப்புகளுமே

அரசாங்கத்தின் ஆதரவோடு நடைபெற்று வந்தன. உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அதிகமாகவே இச்சங்கங்கள் செவ்வனே நடைபெற்றன. கனடாவின் கூட்டுறவு இயக்கமே இவ்விரு சங்கங்கள் மூலம்தான் தொடங்கியது. முதல் உலகப் போருக்கு முன்னர் இவ்வாறு அமைக்கப்பட்ட இக்கூட்டுறவுச் சங்கங்கள் 'வின்னிபெக் தானிய பரிமாற்ற அமைப்பு' (Winnipeg Grain Exchange) மூலம் தானியத்தை விற்பனை செய்து வந்தன. இச்சங்கங்களின் விற்பனை 'நட்டத் தடைப் பேரம்' (Hedging), 'முன்னோக்கிய யூக பேரம்' (Future Dealings) ஆகிய முக்கியக் கொள்கைகளின் அடிப்படையில் அமைந்திருந்தது. பிறகு, சேகரிக்கப்படும் கோதுமை சரியான விலைக்கு ஓர் 'ஏற்றுமதிக் குழு' (Export Commission) மூலம் விற்பனை செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து 1919-ஆம் ஆண்டு கனடா அரசாங்கம் கோதுமை ஏற்றுமதிக்கென ஒரு தனிக் கழகம் (Wheat Board) அமைப்பதற்காக முயற்சிகளை எடுத்துக் கொண்டது. அவ்வாறே அக்கழகம் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக நடைபெற்று வந்தது. இவ்வமைப்பு கனடாவின் கோதுமையை இறக்குமதி செய்யும் நாடுகளின் அரசாங்கங்களுடன் தொடர்பு கொண்டு அவைகளுடன் ஒப்பந்தங்களை உருவாக்கிக் கொண்டது. இம்முறை விற்பனை யேற்பாடு மிகவும் இலாபகரமானதாக விளங்கியதால் விவசாயிகள் யாவரும் வேறுபாடின்றி ஆதரித்தனர். ஆனால் ஒரு வருடத்திற்குப் பின்னர் இக்கழகம் கலைக்கப்பட்டுவிட்டது. விவசாயிகள் எல்லோரும் ஒன்றுகூடி மீண்டும் இக்கழகத்தைத் தொடங்குவதற்காக அரசாங்கத்தை எதிர்த்துப் போராடியும், கனடா அரசாங்கம் விவசாயிகளின் கோரிக்கைக்கு இணங்கவே இல்லை. எனவே விவசாயிகள் யாவரும் ஒன்றுகூடி அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட அக்கழகத்தின் அடிப்படையிலே பல 'தொழில் திரட்டுகளை' (Pools) கோதுமை ஏற்றுமதிக்கென அமைத்தனர். அவ்வகை அமைப்புகளுக்கு மாநில அரசுகளும் முழு ஒத்துழைப்பை நல்கின. இனி இத்'தொழில் திரட்டுகள்' எவ்வாறு செயலாற்றி வந்தன என்பதைக் காண்போம்.

1923-ஆம் ஆண்டு முதல் 'கோதுமைத் தொழில் திரட்டு' (Wheat Pool) ஆல்பர்ட்டா மாகாணத்தில் (Alberta) தோற்றுவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து மற்ற மாகாணங்களிலும் இத்தொழில் திரட்டுகள் கூட்டுறவு அடிப்படையில் அமைக்கப்பட்டன. இக்கூட்டுறவு அமைப்புகள் உறுப்பினர்களாகிய விவசாயிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு அறுவடைக்குப் பின்னர் அவர்களது கோதுமையைப் பெறுகின்றன. இவ்வாறு உறுப்பினர்களிடமிருந்து பெற்ற கோதுமையை இத்தொழில்

திரட்டுகள் நன்கு சுத்தப்படுத்தி, பிறகு அதை நன்கு தரம் பிரித்துக் கூட்டுறவு முறையில் அமைந்த கிடங்குகளில் (Co-operative Elevators) பாதுகாக்கின்றன. சேகரிக்கப்பட்ட தரமான கோதுமை நல்ல விலைக்கு சந்தை நிலைக்கேற்பக் கொஞ்சம் கொஞ்சமாக விற்கப்படுகின்றது.

இச்சிறந்த முறையால் கோதுமையின் விலை பாதிக்கப்படாத தோடு நல்ல முறையில் அதன் விலையும் நிர்ணயம் செய்யப்படு கின்றது.

உறுப்பினர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கோதுமையை வங்கிகளில் அடகு வைத்துத் தேவையான கடனைப்பெற்று உறுப் பினர்களுக்கு முன்பணம் (Advance) கொடுத்து உதவுகின்றன இத்தொழில் திரட்டுகள். ஆண்டு இறுதியில் தரத்தின் அடிப் படையில் விற்கப்பட்ட கோதுமையின் மொத்த விற்பனைத்தொகை கணக்கிடப்பட்டு அத்தொகையிலிருந்து தொழில் திரட்டுகளின் செலவுத் தொகை கழிக்கப்பட்டபின் உறுப்பினர்களின் நிலுவை பாக்கி கொடுக்கப்பட்டு கணக்கு சரி செய்யப்படுகின்றது. உறுப் பினர்கள் பெற்ற முன்பணமும் அத்தொகையிலிருந்து கழிக்கப் படும் என்பது குறிப்பிடத்தக்கது. இச்சிறந்த முறையினால் கோதுமையின் விலை ஆண்டு முழுவதும் அதிக மாற்றங்களுக்கு உட்படாமல் நிலையாகவும் உறுதியாகவும் நிற்க முடிகின்றது. இதன் பயனாகக் கோதுமையைப் பயிரிடுவோர் மிகுந்த நன்மை பெற்றனர்.

செவ்வனே செயல்பட்டு வந்த இத்தொழிற் திரட்டுகள் ஒன்று கூடிக் 'கூட்டுறவு கோதுமை உற்பத்தியாளர்கள் சங்கம்' (Canadian Co-operative Wheat Producers Ltd.) என்ற பெயரில் ஒரு 'மத்திய விற்பனைப் பதிலாண்மையை'த் (Central Selling Agency) தோற்றுவித்தன. இதன் தலைமைக் காரியாலயம் வின்னிபெக் (Winnipeg)-கில் செயலாற்றி வந்தது. மேலும் நேரிடையாக விற்பனை யேற்பாடு செய்யும் பொருட்டு இலண்டன் போன்ற பல நகரங்களின் மத்தியில் பல கிளைகள் இக்கூட்டுறவு அமைப்பின் கீழ்ச் செயலாற்றி வந்தன.

தொடங்கிய சில ஆண்டுகளுக்கு வெற்றிகரமாக இத்தொழில் திரட்டுகள் நடைபெற்றாலும் 1929-ஆம் ஆண்டு உலகம் முழுவதும் ஒருமுகமாக ஏற்பட்ட வியாபார மந்தம் இத்தொழில் திரட்டுகளை மிகவும் பாதித்தது. பொதுவான விலை வீழ்ச்சியின் காரணமாக இத்தொழில் திரட்டுகள் இலாபகரமான முறையில் செயல்பட

முடியவில்லை அதிக அளவு கோதுமைக் கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டிருந்தது. முன்பணமாக உறுப்பினர்களுக்குக் கொடுத்திருந்த தொகை கோதுமையின் சந்தை விலையைக் காட்டினும் அதிகமாக இருந்தது. இதன் விளைவாக வங்கிகளிட மிருந்து பெற்ற கடன் தொகையைத் திருப்பித்தர இயலாமல் இத் தொழில் திரட்டுகள் மிகவும் அவதிக்குள்ளாயின. இந்நிலையில் வங்கிகளின் கடன் தொகைக்கு உத்தரவாதமளித்த மாநில அரசு களும் அவற்றின் பல்வேறு அலுவலகங்களுமே தலையிட்டு இவ் வின்னல்களைக் களைய வேண்டியிருந்தது. இந்த நெருக்கடியான சூழ்நிலையில் 'மத்திய விற்பனைப் பதிலாண்மைச் சங்கமே' கோதுமை உற்பத்தியாளர்களுக்கு மிகவும் பாதுகாப்பு அளித்து வந்தது. 1935-ஆம் ஆண்டு கோதுமை விற்பனைக்கெனக் கனடா அரசாங்கம் 'தேசியக் கோதுமை வாரியம்' (National Wheat Board) என்ற ஒரு வலுவான அமைப்பைத் தோற்று வித்தது. தொடக்கத்தில் இக்கழகம் கோதுமைக்கு ஒரு குறைந்த விலையை நிருணயம் செய்து அவ்விலைக்கு அது உத்தரவாத மளித்து வந்தது. கோதுமையின் சந்தை விலை இவ்வாறு உத்தரவாதமளிக்கப்பட்ட விலையைக் காட்டிலும் குறைந்தவுடன் தான் இக்கழகம் உறுப்பினர்களிடமிருந்து கோதுமையைப்பெறத் தொடங்கியது. எனினும் 1943-ஆம் ஆண்டு முதல் இக்கழகமே உற்பத்தியாளர்களிடமிருந்து மொத்தக் கோதுமையையும் கொள்முதல் செய்யத் தொடங்கியது. கூட்டுறவுத் தொழில் திரட்டுகளைப் போலவே இக்கழகமும் உறுப்பினர்களுக்குக் கோதுமையின் பேரில் முன்பணம் கொடுத்து உதவி வந்தது. மேலும் பங்கு பெறும் உறுப்பினர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதால் சேர்ந்துவரும் உபரித்தொகையிலும் அவர்கள் பங்கு பெற்றனர். பல கூட்டுறவுக் கிடங்குகளும் அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட இக்கழகத்திற்கு உறுதுணையாக விளங்கின. இனி இத்துணைச் சிறப்பு வாய்ந்த கூட்டுறவு விற்பனை யேற்பாட்டின் அமைப்பு பற்றி ஆராய்வோம்.

இக்கூட்டுறவு அமைப்பின் அடித்தளத்தில் உள்ளூரைச் சார்ந்த சங்கங்கள் இயங்கி வந்தன. தனி நபர்களையே இச் சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களாகப் பெற்றிருந்தன. ஒருவர் பல சங்கங்களில் உறுப்பினராக வரமுடிந்தாலும் அவர் ஒரே ஒரு சங்கத்தில் மட்டுமே தன் 'வாக்கைப்' (Vote) பயன்படுத்த இயலும்.

இச்சங்கங்களுக்கு அடுத்தபடியாக, 'பிரதேசச் சங்கங்கள்' (Regional Associations) உள்ளூரைச் சார்ந்த சங்கங்களால்

அமைக்கப்பட்டுச் செவ்வனே இயங்கி வந்தன. விற்பனை யேற்பாட்டு அமைப்பின் உச்சியில் மாநில சங்கங்கள் இயங்கின. இவையன்றிக் 'கூட்டுறவுக் கோதுமை உற்பத்தியாளர்கள் சங்கம்' (Co-op. Wheat Producers Ltd.), 'கூட்டுறவுக் கால்நடைச் சங்கம்' (Livestock Co-operative), கோழி, வாத்து போன்றவை களின் தொழில் திரட்டு (Poultry Pool), 'கம்பளி உற்பத்தி யாளர்கள் சங்கம்' போன்ற அமைப்புகளும் கனடாவில் கூட்டுறவின் அடிப்படையில் இயங்கி வந்தன.

இக்கூட்டுறவுத் தொழில் திரட்டுகள் தேவையான நிதியைப் பங்குகள் (Shares) மூலமாகவும் கடன் வழங்கும் சங்கங்கள், வங்கிகள், அரசாங்கம் போன்ற அமைப்புகளிடமிருந்து பெறும் கடன் தொகை மூலமாகவும் பெறுகின்றன. மேலும் 'சுழல் கடன் வசதி' (Revolving Credit System) மூலமாகவும் நிதிப் பற்றுக் குறை நிவர்த்திக்கப்படுகிறது. இதன் பயனாக, உறுப்பினர் களுக்கு இலாப ஈவுத் தொகை (Dividend) பணமாகக் கொடுக்கப் படாமல் அவர்களது 'வைப்புக் கணக்கில்' (Deposit Account) வரவு வைக்கப்படுகின்றது. உறுப்பினர்களின் வைப்புத் தொகை ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் வட்டியுடன் திருப்பித் தரும் முறை கையாளப்பட்டமையால் இத்தொழில் திரட்டுகள் நல்ல நிதி வசதியைப் பெற்றிருந்தன.

இத்தொழில் திரட்டுகளின் நிருவாகமும் செவ்வனே செயல் பட்டு வந்தது. உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 'இயக்குநர் அவை' (Board of Directors) நிருவாகப் பொறுப்பினை ஏற்றுச் சீரிய முறையில் செயல்பட்டு வந்தது. அன்றாடச் செயல்முறைகளை நடத்தும் பொருட்டு ஒரு மேலாளர் (Manager) நியமிக்கப்பட்டிருந்தார். 'இயக்குநர் அவை' பெரும் பொறுப்புகளைப் பெற்றிருந்தமையால் அதிக அளவு அதிகாரங் களையும் இவ்வவை பெற்றிருந்தது. செயல்படும் எல்லை பரந்த தாக இருப்பின் அப்பெரிய பகுதி பல தொகுதிகளாகப் பிரிக்கப் பட்டு, ஒவ்வொரு தொகுதிக்கும் தனியான, முறையான 'இயக்குநர் அவை' தேர்ந்தெடுக்கப்பட்டு நிருவாகம் செம்மையாக நடைபெற வழி செய்யப்பட்டது.

செயலாற்றி வந்த எல்லா விற்பனையேற்பாட்டுச் சங்கங்களுள் கோதுமைக்கான தொழில் திரட்டுகளே மிகவும் முக்கியமானவை களாகக் கருதப்பட்டன. ஏனெனில் கோதுமையே கனடாவின் முக்கிய ஏற்றுமதிப் பொருளாகும். கனடாவில் நான்கு கோதுமை விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள் கூட்டுறவின் அடிப்படையில்

இயங்கி வந்தன. ஆல்பர்ட்டா (Alberta), சாஸ்கட்சுவான் (Saskatchewan), மனிடோபா (Manitoba) ஆகிய பகுதிகளில் இயங்கி வந்த கூட்டுறவுச் சங்கங்கள் மாநில அளவிலேயே இயங்கி வந்தன. ஆனால் ஐக்கியக் கோதுமை உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கம் மேற் கூறிய மூன்று பகுதிகளிலுமே இலாபகரமாக செயலாற்றி வந்தது. கனடாவின் கோதுமை உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கமே மத்திய நிறுவனமாகச் செயலாற்றி வந்தது. மூன்று மாநிலத் தொழில் திரட்டுகளும் இம்மத்திய சங்கத்தின் நிருவாகத்தின் கீழ் இயங்கி வந்தன. மனிடோபா கோதுமைத் தொழிற் திரட்டு 199 கூட்டுறவு அமைப்புகளை தன்னுள் அடக்கி பெரியதொரு கூட்டமைப்பாக விளங்கியது. உறுப்பினர்களின் எண்ணிக்கையும் ஏறக்குறைய 36,000 ஆக இருந்தமையால் இத்தொழில் திரட்டு எளிதாகச் செயல்பட முடிந்தது. ஏனைய இரண்டு தொழில் திரட்டுகளும் இத்துணை வசதியைப் பெற்றிருக்கவில்லை.

இம்மூன்று தொழில் திரட்டுகளும் உற்பத்தியாகும் மொத்தக் கோதுமையில் 50 சதவிகிதம் பெற்று, அதற்கு விற்பனையேற்பாடு செய்து வந்தன. விற்பனையேற்பாடு செய்வது மட்டுமின்றி, கோதுமையைப் பக்குவப்படுத்துவதற்காக வேறு சில திட்டங்களையும் செயலாக்கி வந்தன. மேலும் எல்லாவகை வியாபாரங்களுக்கும் 'காப்புறுதி' (Insurance) வழங்கியும் இத்தொழில் திரட்டுகள் செயலாற்றி வந்தன. இத்தொழில் திரட்டுக்களுக்குச் சொந்தமான பல கிடங்கு இருந்தமையால் கோதுமையைப் பத்திரப்படுத்தி வைப்பதில் யாதொரு பாடும் இல்லை. மாநில அரசாங்கங்களின் நிதி உதவி கொண்டு இக்கிடங்குகள் நல்ல முறையில் கட்டப்பட்டன. இவையன்றி ஐந்து கோதுமையைப் பக்குவப்படுத்தும் தொழிற்சாலைகளும், நான்கு கால்நடை வளர்ப்புச் சங்கங்களும் இத்தொழில் திரட்டுகளுக்குச் சொந்தமானவையாக இயங்கி வந்தன. மேலும் கூட்டுறவுக் கல்வியின் வளர்ச்சிக்கென இத்தொழில் திரட்டுகள் நல்ல பிரச்சாரப் பணியிலும் சிறந்த முறையில் ஈடுபட்டன. பல ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் இவ்வமைப்புகளில் வேலை செய்து வந்தமையால் தொழிலாளர்களின் நிலையும் இத்தொழிற் திரட்டுகளால் உயரத் தொடங்கியது.

இனி கனடாவின் பல்வேறு கூட்டுறவு அமைப்புகளைப் பற்றி ஆராய்வோம்.

கூட்டுறவு விற்பனை யேற்பாடு கொள்முதல் சங்கங்கள்

விற்பனை யேற்பாட்டின் நிலையையும், தரத்தையும் உயர்த்துவதற்கென இந்நூற்றுண்டின் தொடக்கத்தில் அமைக்கப்பட்ட சங்கங்களே 'கூட்டுறவு விற்பனை யேற்பாடு கொள்முதல் சங்கங்களாகும்' (Co-operative Marketing and Purchasing Associations). தொடக்கத்திலிருந்தே இக்கூட்டுறவுச் சங்கம் நல்ல முறையில் வெற்றி நடை போடத் தொடங்கியது. 1957-ஆம் ஆண்டு இவ்வகைச் சங்கங்களின் எண்ணிக்கை 2022. மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 13,63,470. மொத்த விற்பனை 1,126,209 ஆயிரம் டாலர்களைத் தாண்டியது. இக்கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயப் பொருள்கள், பால் மூலம் உற்பத்தியாகும் பொருள்கள், கம்பளி, புகையிலை, தேன் முதலான பல இலாபம் தரத்தக்க பொருள்களின் விற்பனை யேற்பாட்டில் பங்கு பெற்று அவைகளின் மொத்த விற்பனையில் 30 சதவிகிதம் இச்சங்கங்களின் மூலம் நடைபெற்றது. புகையிலையும், விவசாயப் பொருள்களுமே இச்சங்கங்களினால் அதிக விற்பனை செய்யப்பட்டன.

மொத்த விற்பனைச் சங்கங்கள் (Wholesale Societies)

இம்மொத்த விற்பனைச் சங்கங்கள் விவசாயப் பொருள்களையும், துய்ப்போர் பண்டங்களையும் (Consumers' Goods) விற்பனை செய்து வந்தன. அவை எண்ணிக்கையில் பத்தாக இயங்கி வந்தன. 1957-ஆம் ஆண்டில் மட்டும் 126 மிலியன் டாலர் மதிப்புள்ள பொருள்களை இச்சங்கங்கள் விநியோகம் செய்து வந்தன. இவற்றிற்கு உறுதுணையாக உள்ளூரைச் சார்ந்த கூட்டுறவுச் சங்கங்கள் செயலாற்றி வந்தன. உள்ளூர்க் கூட்டுறவுச் சங்கங்கள் கால்நடைத் தீவனம், உரங்கள், விவசாயக் கருவிகள், நுகர்வோர் பண்டங்கள் போன்ற முக்கியப் பொருள்களை விற்பனை செய்து வந்தன. மேலும் தனிப்பட்ட உறுப்பினர்களிடமிருந்தும் பொருள்களைச் சேகரித்து அவற்றை மொத்தக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்ய உதவியாக இருந்தன. 1957-ஆம் ஆண்டு இம்மொத்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலதனம் 9 மிலியன் டாலர்களாகும். ஒவ்வொரு சங்கத்தின் நிதி நிலையும் போதுமான அளவிற்குச் சிறந்து விளங்கின. மொத்தப் 'பொறுப்புகளும்' (Liabilities) 'சொத்துகளும்' (Assets) 58 மிலியன் டாலர்களாக விளங்கியது. அதே ஆண்டில் இச்சங்கங்களின் மொத்த விற்பனை 219 மிலியன்

டாலர்களை எட்டிப் பிடித்தது. இச்சங்கங்களின் கொள்முதலைச் சரியான முறையில் இணைப்பதற்கென்றே மாநில அளவில் வேறு சில கூட்டுறவுச் சங்கங்களும் அமைக்கப்பட்டன. இங்கிலாந்தின் மொத்த விற்பனைச் சங்கமும் (C. W. S.) ஸ்காட்லாந்தின் மொத்த விற்பனைச் சங்கமும் சிறப்பு வாய்ந்த உறுப்பினர்களாக விளங்கினர். இக்கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கங்கள் பல உற்பத்தித் தொழில்களுக்கும் அவைகளுக்குத் தேவையான பொருள்களை விநியோகித்து வந்தன. பல நிலக்கரிச் சுரங்கங்களையும் இச்சங்கங்கள் சொந்தமாகப் பெற்றிருந்தன.

கொள்முதல் கூட்டுறவுச் சங்கங்கள்
(Purchasing Co-operatives)

பெரும்பாலும் இக்கொள்முதல் கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாகவே விளங்குகின்றன. இம்மொத்த விற்பனைச் சங்கங்களுக்கு இவைகள் பெரிதும் உறுதுணையாகச் செயல்படுகின்றன. இச்சங்கங்கள் விவசாயப் பொருள்களை நல்ல முறையில் கொள்முதல் செய்யும் பொருட்டே தோற்றுவிக்கப்பட்டனவாகும். கொள்முதல் செய்வது மட்டுமின்றி உணவுப் பொருள்களையும் இச்சங்கங்கள் முறையாக விற்பனை செய்கின்றன. கனடாவில் நடைபெறும் சில்லறை வணிகத்தில் (Retail Trade) 5 சதவிகிதம் இக்கொள் முதல் சங்கங்களால் நடைபெறுகின்றது. தனி நபர்களே இச் சங்கங்களின் உறுப்பினர்களாக விளங்குகின்றனர்.

1957-ஆம் ஆண்டுக் கணக்குப்படி, கனடாவின் 'கூட்டுறவு விற்பனை யேற்பாடு கொள்முதல் சங்கங்களின்' மொத்த சொத்துகள் 482 மிலியன் டாலர்களாகும். மொத்தப் 'பொறுப்புகள்' 262 மிலியன் டாலர்களாகும். இவையிரண்டின் வித்தியாசமான 220 மிலியன் டாலர்களே உறுப்பினர்களால் ஏற்படுத்தப்பட்ட மூலதனமாகும். குறிப்பிடத்தக்க கணிசமான முன்னேற்றத்தை இக்கொள்முதல் சங்கங்கள் பெறவில்லையா யினும், மக்களுக்கு இச்சங்கங்கள் பெரும் சேவை செய்து வந்தன என்பதில் எவருக்கும் ஐயப்பாடில்லை.

கூட்டுறவுச் சேவைச் சங்கங்கள்
(Service Co-operatives)

மேற் கூறியுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமின்றிப் பல கூட்டுறவுச் சேவைச் சங்கங்களும் கனடாவில் நன்கு பணி யாற்றின. பல துறைகளிலும் இச்சங்கங்கள் ஆற்றிய பணி

பாராட்டத்தக்கதாகும். கிராமப் புறங்களுக்கு மின்சாரம் அளித்தல், வீட்டு வசதிகளை அளித்தல், விதை சுத்திகரித்தல், விவசாயத்திற்குப் பயன்படும் இயந்திரங்களை இயக்கிக் காட்டுதல், போக்குவரத்து வசதிகளைக் கண்காணித்தல், பொழுதுபோக்கு வசதிகளை மக்களுக்குத் தேவையான அளவு வழங்குதல் போன்ற பல தொண்டுகளை இவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் செவ்வனே செய்து வந்தன. மக்களும் இச்சங்கங்களின் தொண்டினால் ஈர்க்கப்படவே கணிசமாக எண்ணிக்கையிலும், தரத்திலும் உயரத்தொடங்கின இச்சேவைச் சங்கங்கள். 1957-ஆம் ஆண்டு இக்கூட்டுறவுச் சேவைச் சங்கங்களின் எண்ணிக்கை 770 ஆகும். உறுப்பினர்கள் எண்ணிக்கை 2·5 இலட்சமாகும். இச்சங்கங்களின் மொத்த சொத்து மதிப்பு 72 மிலியன் டாலர்களாகும். அதில் யந்திர சாதனங்களின் மதிப்பு 64 மிலியன் டாலர்களாகும். ‘சேவை செய்தலே கூட்டுறவுக் கொள்கையாகும்’ என்பதைச் செயல் மூலம் மக்களுக்கு எடுத்துக் காட்டி வந்தன இக்கூட்டுறவுச் சேவைச் சங்கங்கள்.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்
(Fishermen's Co-operatives)

விவசாயத்தைப்போல் மீன் பிடிக்கும் தொழில் கனடாவில் சிறந்து விளங்கவில்லை. கடற்கரை ஓரங்களில் வாழ்ந்து வந்த சிறுபான்மைக் குடியினரே இத்தொழிலில் ஈடுபட்டு வந்தனர். தொடக்கத்தில் மீனவர்கள் மிகவும் பழமையான முறையில் மீன்களைப் பிடித்து அவைகளை அப்படியே தனியார்களால் நடத்தப் பட்டு வந்த நிறுவனங்களுக்கு விற்று வந்தனர். அத்தனியார் நிறுவனங்கள் மீன்களைப் பக்குவப்படுத்தியும் பாதுகாத்தும் தங்களது கிடங்குகளில் சேகரித்து வைத்தனர். இவ்வாறு மீன்களை வழங்கும் மீனவர்கள் இத்தனியார் நிறுவனங்களால் மிகவும் தொல்லை அடைந்தனர். மிகவும் குறைந்த விலைக்கே மீன்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. மீன்களின் தரத்திற்கேற்ப விலை முறையாக நிருணயிக்கப்படவில்லை. இன்னல்கள் ஏற்படும் போதுதானே மனிதனின் அறிவு அவ்வின்னல்களை அகற்றும் வழிமுறைகளை ஆராய முற்படுகிறது? இத்தனியார் நிறுவனங்களால் பெருத்த அவதிக்குள்ளான மீனவர்கள் தங்களது தொல்லைகளிலிருந்து விடுபடக் கூட்டுறவு அமைப்புகளை நாடினர். மீன் பிடிக்கும் தொழில் நிறைந்திருக்கும் பகுதிகளில் இவ்வகைக் கூட்டுறவு அமைப்புகள் அமைக்கப்பட்டன. எண்ணிக்கையில் அதிகமாகத் தோற்றுவிக்கப்பட்ட இக்கூட்டுறவுச் சங்கங்கள் 21 மிலியன் டாலர் மதிப்புள்ள வியாபாரத்தைச்

செவ்வனே செய்து வந்தன. மொத்த மீன் விற்பனையில் 9 சத விகிதம் இக்கூட்டுறவுச் சங்கங்களால் செய்யப்பட்டது. மேலும் 29 இலட்சம் டாலர் மதிப்புள்ள சரக்குகளைத் தங்கள் உறுப்பினர் களுக்கு இச்சங்கங்கள் விற்பனை செய்து வந்தன. வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஈடாக இம்மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் வளர வில்லையாயினும், இச்சங்கங்களினால் மீனவர் களது இன்னல்கள் கணிசமாகக் குறைந்தன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். 1967-ஆம் ஆண்டு இச்சங்கங்களின் எண்ணிக்கை 86 ஆகும். உறுப்பினர் எண்ணிக்கை 10,000 ஆகும். மொத்த விற்பனை 29 மிலியன் டாலர் ஆகும். உறுப் பினர்களுக்கு 3 மிலியன் டாலர் மதிப்புள்ள பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன.

எண்ணெய்க் கூட்டுறவுச் சங்கங்கள்
(Oil Co-operatives)

கனடாவின் விவசாயமே பெரும்பாலும் இயந்திர சாதனங் களால் நடைபெற்று வருகின்றது. வேளாண்மைத் தொழிலே கனடாவின் பொருளாதாரத்தை உயர்த்த வல்லது என்பதை நன்கு அறிந்திருந்த விவசாயிகள் பெருமளவில் இயந்திரங் களையும் மற்ற விவசாயக் கருவிகளையும் வேளாண்மையில் ஈடுபடுத்தி, அதிக உற்பத்திக்கு வழிசெய்யத் தொடங்கினர். அவ்வாறே விவசாயப் பொருள்களின் உற்பத்தியும் மனிதர் களால் அதிகமாகியது. ‘இயந்திரங்களும் மனிதர்களால் உருவானவையே’ ஆதலால் அதிக உற்பத்திக்கு மனிதர்களே காரணமாக அமைகின்றனர். இத்தொழிலில் உழும் இயந் திரங்கள் (Tractors) அதிக அளவில் எல்லோராலும் பயன் படுத்தப்படவில்லையாயினும் கணிசமான அளவில் கையாளப் பட்டன. சராசரியாக ஒவ்வொரு 240 ஏக்கர் விளை நிலங்களுக்கும் ஓர் உழும் இயந்திரம் உபயோகப்படுத்தப்பட்டது. இவ்வியந் திரங்களை இயக்குவதற்கு பெட்ரோல் (Petroleum) அதிகஅளவில் தேவைப்படவே விவசாயிகள் இன்னல்கள் பல பெறலாயினர். முறையான பெட்ரோல் விநியோகம் இல்லாமையே இதற்குக் காரணமாகும்.

போதுமான எண்ணெய் சுத்திகரிப்புச் சாலைகளிடமிருந்து (Refineries) பெற்று உறுப்பினர்களுக்குத் தேவையான அளவு விற்பனை செய்யும் பொருட்டு ஒரு சில கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளால் தோற்றுவிக்கப்பட்டன. ஆயினும் இக் கூட்டுறவுச் சங்கங்கள் போதுமான அளவு சுத்த எண்ணெயை

எண்ணெய்ச் சுத்திகரிப்புச் சாலைகளிடமிருந்து பெற இயல வில்லை. இதன் பயனாக விவசாயிகளின் தொல்லைகள் தொடர்ந்தே வந்தன. 1934-ஆம் ஆண்டு இக்கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்று சேர்ந்து 'நுகர்வோர் கூட்டுறவுச் சுத்திகரிப்புச் சாலைகளை' (Consumers' Co-operative Refineries) உருவாக்கின. உலக வரலாற்றிலேயே இக்கூட்டுறவு அமைப்புதான் முன்னோடியாகத் திகழ்கின்றது. 1934-ஆம் ஆண்டே இவ்வமைப்பு தொடங்கப் படினும், 1935-ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்துதான் செயல் படத் தொடங்கியது. இக்கூட்டுறவு அமைப்பின் மொத்தச் சொத்து மதிப்பு 14·7 இலட்சம் டாலர்களாகும். உள்ளூரைச் சார்ந்த 263 கூட்டுறவு சங்கங்களே உறுப்பினர்களாக விளங்கின. இதன் பின்னர்தான் விவசாயிகள் நல்ல முறையில் உழும் இயந் திரங்களைப் பெருமளவில் கையாளத் தொடங்கினர்.

1944-ஆம் ஆண்டு இக்கூட்டுறவு எண்ணெய்ச் சுத்திகரிப்புச் சாலை சாஸ்கட்சுவான் மொத்த விற்பனைச் சங்கத்துடன் ஒன்று சேர்ந்து ஓர் ஐக்கிய அமைப்பை(Amalgamation)உருவாக்கியது. இப்புதிய கூட்டுறவு அமைப்பு வெகு வேகமாக முன்னேறத் தொடங்கியது. தற்போது. அப்பகுதியின் மொத்த மண்ணெண் ணெயில் 50 சதவிகிதம் இக்கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றது. இக்கூட்டுறவுச் சங்கம் விலை யுயர்ந்த இயந்திர சாதனங்களைப் பெற்றிருப்பதோடு, எண்ணெய்ச் சோதனைகளுக்காகவும் அதிக அளவில் பணம் செலவிட்டு வருகின்றது. 1955-ஆம் ஆண்டு, எண்ணெய் விநியோகத்தில் ஈடுபட்டிருந்த 'மனிடோபா மொத்த விற்பனைச் சங்கம்' (Wholesale Society of Manitoba) 'சாஸ்கட்சுவான் ஐக்கியக் கூட்டுறவுச் சங்கத்துடன்' (Saskatchewan Federated Co-operatives Ltd.) ஒன்று சேர்ந்து ஒரு புதியக் கூட்டுறவு அமைப்பு உருவாக்கப்பட்டது. இக்கூட்டுறவு எண்ணெய்ச் சுத்தி கரிப்புச் சாலையில் 12 மிலியன் டாலர்கள் முதலீடு செய்யப் பட்டது. மொத்த விற்பனை ஓர் ஆண்டில் 112 மிலியன் காலன் களைத் (Gallons) தாண்டியது. இக்கூட்டுறவு அமைப்பின் 'நடை முறை முதல்' (Working Capital) 23 கோடி டாலர்களாகும். மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 150,000 ஆகும். இந்தக் கூட்டுறவு ஐக்கிய அமைப்பு 44 எண்ணெய்க் கிணறுகளைச் சொந்தமாகப் பெற்றுள்ளது. எண்ணெய் தவிர நிலக்கரி, வர்ணங்கள் முதலான பொருள்களையும் இக்கூட்டுறவுச் சங்கம் விற்பனை செய்யத் தொடங்கியது. எனவே இந்நாட்டின் விவசாயிகள் இக்கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் பல நன்மைகளைப்

பெறலாயினர். இன்றுவரை, இந்த ஐக்கியக் கூட்டுறவு அமைப்பு கனடாவின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு அருந் தொண்டாற்றி வருகிறது.

கூட்டுறவுக் கடன் சங்கங்கள் (The Co-operative Credit Unions)

இக்கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள் பெரும்பாலும் விவசாயம் நிறைந்த பகுதிகளில் செயலாற்றி வந்தன. இச் சங்கங்கள் 1900-ஆம் ஆண்டுதான் முதன் முதலில் தோன்றின. வைப்புக் கணக்கு (Deposit Account) வைத்திருக்கும் நபர்களே இச்சங்கத்தின் உறுப்பினர்களாகக் கருதப்படுவர். உறுப்பினர் களுக்கு மட்டுமே கடன் வழங்கப்பட்டு வந்தது. உறுப்பினர் களின் வைப்புக் கணக்கிலிருந்தே கடன்தொகை வழங்கப்பட்டது. உறுப்பினர்கள் பெரும்பாலும் வெளியார்களிடமிருந்து கடன் வாங்குவதில்லை. தற்போது, சுமார் 4500 கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கனடாவில் பணியாற்றி வருகின்றன. மொத்த உறுப் பினர்களின் எண்ணிக்கை 2 மிலியனையும் தாண்டியுள்ளது. 1957-ஆம் ஆண்டு மட்டும் 344 மிலியன் டாலர்கள் கடன் தொகை யாக வழங்கப்பட்டுள்ளது. இக்கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயத்திற்கு மட்டுமின்றி பிறதொழில்களுக்கும் நிதி உதவி செய்து வருகின்றன.

கூட்டுறவுக் கல்வியும் பிரசாரமும் (Co-op. Education and Propaganda)

ஆயிரமாயிரம் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படலாம், அவைகளின் செயல்களில் நல்ல உயிரோட்டமும் இருக்கலாம். ஆனால் மக்களுக்காக அமைக்கப்படும் இவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களிடையே கூட்டுறவு மனப்பான்மை மலராத வரையில் நல்ல வெற்றியைப் பெற முடியாது. எனவே, ஒவ்வொரு மனிதனும் கூட்டுறவுக் கொள்கைகளை நன்கு புரிந்து கொண்டு அவைகளைச் செயல்படுத்துவதில் தனது பங்கைச் செலுத்த வேண்டும். அப்பொழுதுதான் கூட்டுறவுக் கொள்கைகள் எல்லாத் துறையிலும் மக்களின் நல்வாழ்வுக்காக ஆட்சி செலுத்த இயலும். கூட்டுறவின் வெற்றி மக்களின் கைகளில்தான் உள்ளது. அவர்கள் காட்டும் ஈடுபாட்டைப் பொறுத்துதான் இச்சங்கங் களின் வெற்றி நிர்ணயிக்கப்படுகின்றது. அறிவுத் தெளிவு இல்லாதவரை கூட்டுறவின் சிறப்பும், அதனால் விளையும் நன்மை களும் மக்களால் உணரப்படா. எனவே கூட்டுறவுக்கொள்கைகள் நல்ல முறையில் பரவ வேண்டுமெனில், மக்களுக்குச் சிறந்த

முறையில் கூட்டுறவுக் கல்வி போதிக்கப்பட வேண்டும். எனவே இத்தகைய கூட்டுறவுக் கல்வி (Co-operative Education) மிகவும் அவசியமாகும்:

உற்பத்தி செய்யப்படும் பொருள் எவ்வளவுதான் தரத்தில் உயர்ந்திருப்பினும் சரியான விளம்பரம் இல்லையாயின் அப் பொருளின் விற்பனை உயராது என்பதை நாம் நன்கறிவோம். அதுபோலவே, கூட்டுறவுக் கொள்கைகள் எவ்வளவுதான் உயர்ந்திருப்பினும் சரியான பிரசாரம் இல்லையாயின் அக்கொள் கைகளை மக்கள் உணரவே முடியாது போகின்றது. எனவே 'கூட்டுறவுக் கல்வியும்', 'கூட்டுறவுக் கொள்கை பிரசாரமும்' நாட்டின் இரு கண்களாகும். இதை நன்குணர்ந்திருந்த கனடா அதற்கான வழிமுறைகளில் ஈடுபடத் தொடங்கியது.

கூட்டுறவுக் கல்வியைப் போதிப்பதற்காகவும், கூட்டுறவுக் கொள்கைகளைப் பிரசாரம் செய்வதற்காகவும் மாநில அளவில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. உள்ளூர்க் கூட்டுறவுச் சங்கங்களே அதன் உறுப்பினர்களாக விளங்கினர். உயர் மட்டத்தில் இரண்டு 'தேசியக்கூட்டமைப்புகள்' இப்பணிக்கெனத் தோற்றுவிக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வந்தன. கனடாவின் இவ்வகைக் கூட்டுறவுச்சங்கம் 9 மாநிலச் சங்கங்களைத் தன்னுள் அடக்கிப் பணியாற்றி வந்தது. சுமார் 900 கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களாக விளங்கின. பிரசாரப் பணி மட்டு மின்றி, இக்கூட்டுறவுச் சங்கம் கூட்டுறவுத் துறையில் பல ஆராய்ச்சிகளையும் செய்து வந்தது. கூட்டுறவு சம்பந்தப்பட்ட பாட நூல்களை வழங்குவதற்காகவும், ஆராய்ச்சிகள் நடாத்து வதற்குப் போதுமான பொருளுதவி செய்யும் பொருட்டு ஒரு 'கூட்டுறவு வளர்ச்சிநிதி நிறுவனம்' (Co-operative Development Foundation Fund) ஏற்படுத்தப்பட்டது. இந்நிறுவனம் சர்வ தேசக் கூட்டுறவு ஒப்பந்த அமைப்பிலும் உறுப்பினராக விளங்குகின்றது.

கனடாவில் கூட்டுறவு இயக்கம் நன்கு செயல்படத் தொடங்கி யதற்கு அந்நாட்டின் அரசாங்கம் மட்டுமே காரணமாகும் என்று சொல்ல இயலவில்லை. கூட்டுறவுக் கொள்கைகள் எல்லாத் துறை களிலும் அடியெடுத்து வைத்ததற்கு வேறு ஓர் இயக்கமும் உறு துணையாக இருந்திருக்கின்றது. அவ்வியக்கமே 'ஆண்டி கானிஷ் இயக்கம்' (The Antigonish Movement) என அழைக்கப்படு கின்றது.

கனடாவின் கூட்டுறவுக் கொள்கைகளின் வெற்றி இவ்வியக்கத்தின் சலியாத உழைப்பின் தன்மையை மையமாக வைத்தே பெறப்பட்டது என்ருல் அது மிகையாகாது. ஆண்டிகானிசைச் சார்ந்த 'நோவா ஸ்கோஷியா' (Nova Scotia) என்பவரால் இவ்வியக்கம் தொடங்கப் பட்டமையால் இப்பெயர் பெற்றது. 1930-ஆம் ஆண்டு உள்ளூர்ப் பொருளாதாரப் பிரச்சினைகளை ஆராய்ந்து அவைகளைக் களையும் பொருட்டு பல குழுக்களை உருவாக்க உறுதுணையாக இருந்தது இவ்வியக்கம். மக்களின் தேவைகளை அறியவும், இன்னல்களைக் களையவும், கூட்டுறவுக் கொள்கைகளைப் பரப்பவும் நூற்றுக்கணக்கான குழுக்கள் அமைக்கப்பட்டன. கிராமப் புறங்களில் கூட்டுறவுக் கொள்கைகள் பரவியதற்கு இவ்வியக்கமே காரணமாகும். கிராம மக்களுக்குப் புரியும் வகையில் கூட்டுறவுச் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன. ஆயிரமாயிரம் துண்டுப் பிரசுரங்களும் (Pamphlets) அறிக்கைகளும் (Bulletins) கூட்டுறவை வலுப்படுத்துவதற்கென வெளியிடப்பட்டன. மக்களுக்குக் கூட்டுறவை நன்கு விளக்கும் பொருட்டு, குறுகிய காலக் கூட்டுறவுப் பாட வகுப்புகளும், பல நூல் நிலையங்களும் நடத்தப்பட்டன. இம் முயற்சியில் டென்மார்க்கைச் சேர்ந்த 'போக் உயர்நிலைப் பள்ளி' (Folk High School) முன்னோடியாகக் கொள்ளப்பட்டது. மக்களின் பொது நலனைப் பாதிக்கும் பிரச்சினைகள் நன்கு ஆராயப்பட்டு அவைகளுக்குத் தீர்வும் காணப்பட்டது. முதன் முதலில் மீனவர்களின் பிரச்சினைகளும், விவசாயிகளின் பிரச்சினைகளுமே நன்கு ஆராயப்பட்டன. கூட்டுறவின் மூலம் எவ்வாறு அவர்களது இன்னல்களைக் களைய முடியும் என்பது அவர்களுக்கு நன்கு உணர்த்தப்பட்டது. பிறகு கூட்டுறவுப் பண்டகசாலைகளிலும், கடன் வழங்கும் சங்கங்களிலும் இம் முறை கையாளப்பட்டு இவ்வியக்கம் நல்லோர் எல்லோராலும் பாராட்டப்பட்டது. இவ்வியக்கத்தின் பணி அளவிட முடியாததாகும்.

இனி கூட்டுறவு சம்பந்தப்பட்ட சட்டங்கள் எவ்வாறு கனடாவில் இயற்றப் படுகின்றன என்பதைக் காண்போம்.

கூட்டுறவுச் சட்டங்கள் (Co-operative Acts)

கனடாவில் ஒரே கூட்டுறவு விதியோ சட்டமோ நாடு முழுவதும் கடைப்பிடிக்கவில்லை. ஒவ்வொரு மாநிலமும் தங்கள் தங்கள் சூழ்நிலைக் கேற்ப, மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கு ஒப்பச் சட்டங்களை இயற்றுவதற்கு உரிமை உள்ளது. அதற்கேற்ப அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு இயற்றப்படும் சட்டங்களுக்கேற்பப் பலவகைக் கூட்டுறவுச் சங்கங்களும்

பதிவு செய்யப்படுகின்றன. எனவே மாநிலங்களாலேயே கூட்டுறவுச் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. ஒரு சில மாநிலங்களில் கூட்டுறவுக்கான தனிச் சட்டங்கள் இயற்றப்படுவதில்லை. உதாரணமாக, மனிடோபா (Manitoba), ஒன்டாரியோ (Ontario) போன்ற மாநிலங்களில் கூட்டுறவுக்கெனத் தனியாகச் சட்டங்கள் இயற்றப்படுவதில்லை. இது போன்ற சூழ்நிலையில் 'கம்பெனி சட்டத்திலேயே' (Companies Act) கூட்டுறவுக்கெனச் சில விதிமுறைகள் அமைவதற்கு வழி செய்யப்படுகின்றது. மற்றும் சில மாநிலங்களில் ஒவ்வொரு வகைக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் தனித் தனியாகச் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. இம்முறையில் கூட்டுறவுச் சங்கங்களின் தரம் நன்கு ஆராயப்படுவதால், நிதி வசதி குறைந்த கூட்டுறவுச் சங்கங்கள் பாதுகாப்படைகின்றன. கூட்டுறவுச் சட்டங்கள் இயற்றப்படுவதில் எத்தனையோ வேறுபாடுகள் இருப்பினும், எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் கூட்டுறவுக் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. அதற்குத் தக்கபடி சட்டங்களும் இயற்றப்படுகின்றன. 'ஒருவருக்கு ஒரு வாக்கு' (One Man One Vote) போன்ற அடிப்படைக் கூட்டுறவுக் கொள்கைகள் எல்லா மாநிலக் கூட்டுறவு அமைப்புகளாலும் கடைபிடிக்கப்படுகின்றன. ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்களில் செயலாற்றி வரும் கூட்டுறவுச் சங்கங்கள் இந்நாட்டின் அரசு ஆணைக் கேற்ப இயங்கி வருகின்றன. பெரும்பாலும் கூட்டுறவுச் சங்கங்களைத் தோற்றுவித்தல், கண்காணித்தல், சங்கங்களை முன்னேற்றுவதற்கான வழிமுறைகளை ஆராய்தல் போன்ற முக்கியப் பணிகளை அரசு ஊழியர்களே செய்து வருவதால் நாடு நலம் பெற முடிகின்றது.

இனி கனடாவின் கூட்டுறவு இயக்கத்தில் உள்ள சிறப்பு அம்சங்களைச் சுருக்கமாகக் காண்போம். இதன் மூலம் கனடாவின் கூட்டுறவுச் சங்கங்களை நாம் ஒரு சேர உணர முடிகின்றது.

முதலாவதாக, இந்நாட்டின் கூட்டுறவு இயக்கம் விவசாயக் கூட்டுறவு இயக்கமேயாகும். வேளாண்மைத் தொழிலை வளப்படுத்தவே இந்நாட்டில் கூட்டுறவு இயக்கம் தொடங்கப்பட்டது. விவசாயத் துறையில், 'கூட்டுறவு விற்பனையேற்பாடு சங்கங்கள்' செவ்வனே செயல்பட்டு பெரும் வெற்றியையும் பெற்றன. விவசாயப் பொருள்களின் விற்பனைக்கென பலவகைத் 'தொழில் திரட்டுகள்' தோற்றுவிக்கப்பட்டன. இத்தொழில் திரட்டுகளும் எண்ணியபடி பெரும் வெற்றியைப் பெற்றன.

இரண்டாவதாக, கோதுமை விற்பனைக்கெனக் கனடா அரசாங்கம் 'கோதுமை விற்பனை யேற்பாட்டுச் சங்கம்' (Wheat Marketing Board) என்றதோர் அமைப்பை ஏற்படுத்தியது. இச்சங்கம் மட்டுமே விவசாயிகளிடமிருந்து கோதுமையைப் பெற்று விற்பனை செய்து வந்தது.

மூன்றுவதாகக், கனடாவில் 'கூட்டுறவுக் கொள்முதல் சங்கங்கள்' (Co-operative Purchase Societies) சிறந்த முறையில் பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. உறுப்பினர்கட்கு விவசாயத்திற்குத் தேவையான பொருள்களையும், நுகர்வோர் பண்டங்களையும் ஒரு சேர விற்பனை செய்து வந்தன.

நான்காவதாகக் கனடாவில் சில மாநிலங்களில் தொழில் திரட்டுகள் தங்கள் உறுப்பினர்களுக்கு 'இலாப ஈவை'ப் (Dividend) பணமாகக் கொடுக்காமல், அவர்களது 'வைப்புக் கணக்கில்' வரவு வைத்து விடுகின்றன. எனவே போதுமான நிதி வசதியை இத்தொழில் திரட்டுகள் பெற முடிகின்றன. அதாவது இத் தொழிற் திரட்டுகள் 'சுழல் கடன் வசதி முறையை'க் (Revolving Credit System) கடைப் பிடித்து வந்தன.

கடைசியாக, 'ஆண்டிகானிஷ் இயக்கம்' (Antigonish Movement) கனடாவின் கூட்டுறவு இயக்கம் சிறப்புற வளர்வதற்கு உரமாகச் செயல்பட்டு வந்திருக்கின்றது என்பதும் வெள்ளிடைமலை.

எனவே, கனடாவின் கூட்டுறவு இயக்கம் வலுவான அடித்தளத்தைக் கொண்டதாகும். பெரும்பான்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல நிதிவசதியைப் பெற்றுள்ளன. இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போலக் கனடாவின் பெருங்குடி மக்கள் கூட்டுறவின் நன்மைகளை உணர்ந்து, அக்கொள்கைகளைச் செவ்வனே கடைப்பிடித்தமையால் இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கத்திற்குப் பெரும் வெற்றி எளிதில் கிட்டியது. கனடாவைக் கண்டு பின் தங்கிய நாடுகள் கற்க வேண்டியவை ஏராளம்.

கனடாவின் தற்போதைய நிலை

1964-ஆம் ஆண்டின் இறுதியில் கனடாவில் சமார் 2500 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வந்தன. ஏனைய சங்கங்களின் எண்ணிக்கையும் கணிசமாக உள்ளன.

'விற்பனையேற்பாடு-கொள்முதல் சங்கங்கள்' சுமார் 1500 ஆகும். கூட்டுறவுச் சேவைச் சங்கங்களின் எண்ணிக்கையும் உயர்வாகவே உள்ளன. இனி, இச்சங்கங்களின் வளர்ச்சியைத் தனித் தனியாகக் காண்போம்.

கோதுமைத் தொழில் திரட்டுகள் (Wheat Pools)

கனடாவில் இத் தொழில் திரட்டுகள் மிகவும் முக்கியமானவை யாகும், இந் நாட்டின் பொருளாதாரம் இவைகளையே நம்பி யுள்ளன. ஆல்பர்ட்டா, சாஸ்கட்சுவான், மனிடோபா ஆகிய மாகாணங்களில் இத்தொழில் திரட்டுகள் வலிமையுடன் திகழ் கின்றன. இது தொழில் திரட்டுகளின் உறுப்பினர் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆல்பர்ட்டா (Alberta)	5,000
சாஸ்கட்சுவான் (Saskatchewan)	80,000
மனிடோபா (Manitoba)	36,000

மொத்தக் கோதுமையில் 55% இத்தொழில் திரட்டுகளால் கையாளப்படுகின்றது. தானியங்களைத் தவிர, விதை, பார்லி போன்ற பொருள்களும் இத்தொழில் திரட்டுகளால் விற்பனை செய்யப்படுகின்றன. குறைந்தது உறுப்பினர் எண்ணிக்கை 235,000 ஆகும். சொத்துக்களின் மதிப்பு 107 மிலியன் டாலர்க ளாகும். 1967-ஆம் ஆண்டு, கனடாவில் இயங்கி வந்த பலவகைக் கூட்டுறவுச் சேவைச் சங்கங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

சேவை வகை	சங்கங்களின் எண்ணிக்கை
மின்சாரம்	388
மருத்துவம்	46
குடியிருப்புவசதி	30
குளிர்சாதன வசதி	12
விதை சுத்திகரிப்பு	59
போக்குவரத்து	33
தண்ணீர் வசதி	20.

மனிடோபா, ஆல்பர்ட்டா, சாஸ்கட்சுவான் ஆகிய மாகா ணங்களில் இயங்கிவந்த மொத்த விற்பனைச் சங்கங்கள் ஒன்று சேர்ந்து ஓர் 'ஐக்கியக் கூட்டுறவு அமைப்பை' உருவாக்கின. இக் கூட்டமைப்பு தற்போது சுமார் 700 கூட்டுறவுச் சங்கங்களை உறுப்

பினர்களாகப் பெற்றுள்ளது. இவற்றுள் சில்லறை விற்பனைச் சங்கங்களின் எண்ணிக்கை சுமார் 500 ஆகும். இக்கூட்டமைப்புச் சங்கம் ஓர் உரத் தொழிற்சாலையைத் தொடங்கியுள்ளது. கால் நடை தீவனத் தொழிற்சாலைகள், எண்ணெய்ச் சுத்திகரிப்புச் சாலைகள் முதலானவை இக்கூட்டமைப்பால் உருவாக்கப் பட்டுள்ளன.

உரத் தொழிற்சாலை 1965-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத் திலிருந்து இயங்கத் தொடங்கியது. இத் தொழிற்சாலையின் வருட உற்பத்தி 2.25 இலட்சம் டன் எனக் கணக்கிடப்பட் டுள்ளது. தொடங்கிய முதலாண்டிலேயே 13 மிலியன் டாலர் மதிப்புள்ள உரங்கள் விற்பனை செய்யப்பட்டன. இவ்வாண்டின் வருமானம் மிகுதி .35 மிலியன் டாலர் எனத் தெரிய வருகின்றது. சில்லறை விற்பனைச் சங்கங்கள் மூலம் உரம் விற்பனை செய்யப் படுகிறது.

கூட்டுறவு விற்பனை யேற்பாட்டுக் கொள் முதல் சங்கங்கள்

இச்சங்கங்களின் வளர்ச்சியைக் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களைக் கொண்டு எளிதில் அறியலாம்.

ஆண்டு	சங்கங்களின் எண்ணிக்கை	மொத்த விற்பனை (ஆயிரம் டாலரில்)
1932	795	145,303
1942	1722	267,090
1952	2194	1,112,469
1957	2221	1,126,209
1964	1546	1,780,600
1967	1357	2,100,000

இச்சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கை சுமார் 1·4 மிலியன் ஆகும். விவசாயப் பொருள்களில் 66% விற்பனை செய்யப்பட்டது.

மொத்த விற்பனைச் சங்கங்கள்

1966-ஆம் ஆண்டு, இச்சங்கங்களின் எண்ணிக்கை 8 ஆகும். 1967-ஆம் ஆண்டு, உள்ளூர்ச் சங்கங்களின் மொத்தச் சொத்து மதிப்பு 193 மிலியன் டாலர்களாகும். இதே ஆண்டில்,

மொத்த விற்பனைச் சங்கங்களின் மொத்தச் சொத்து மதிப்பு 542 மிலியன் டாலர்களாகும். 1965-ஆம் ஆண்டு, சொத்துக்களின் மதிப்பு 412 மிலியன் டாலர்களாகும்.

சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள்

1957-ஆம் ஆண்டு, இச்சங்கங்களின் எண்ணிக்கை 770 ஆகும். உறுப்பினர் எண்ணிக்கை 2.5 மிலியன் ஆகும். மொத்தச் சொத்துக்களின் மதிப்பு 72 மிலியன் டாலர்களாகும். 1961-ஆம் ஆண்டு இச்சங்கங்கள் எண்ணிக்கையில் 882 ஆக உயர்ந்தன. 1967-ஆம் ஆண்டு சங்கங்களின் எண்ணிக்கை 695 ஆக வளர்ந்தது.

என்ணெய்க் கூட்டுறவுச் சங்கங்கள் கனடாவின் பொருளாதாரத்தைக் கணிசமாக உயர்த்தி வருகின்றன. தற்போது இயங்கி வரும் எண்ணெய்த் தொழிற்சாலையில் 300 மிலியன் டாலர் மூலதனமாக விளங்குகின்றது. வருட விற்பனை 112 மிலியன் 'காலன்க'ளையும் (Gallons) தாண்டியுள்ளது. தற்போது 144 'சேவை நிலையங்கள்' (Service Stations) கூட்டுறவுச் சங்கத்தின் கீழ்ப் பணியாற்றி வருகின்றன.

கனடாவின் மொத்த விற்பனைச் சங்கங்களினால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு 1965-ஆம் ஆண்டு, ஒட்டுப்பலகை தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையைத் (Plywood Plant) தொடங்கியது. சுமார் 40 மிலியன் சதுர அடியுள்ள ஒட்டுப் பலகைகள் ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

கனடாவின் இக்கூட்டமைப்பு உணவுப் பொருள்கள், இறைச்சி, மருந்து வகைகள், முதலானவற்றையும் விற்பனை செய்கின்றது. 1965-ஆம் ஆண்டு கையாளப்பட்ட பொருள்களின் மதிப்பு 33 மிலியன் டாலர் ஆகும்.

இக்கூட்டமைப்பின் வளர்ச்சியைக் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களைக் கொண்டு அறியலாம்.

(ஆயிரத்தில்—டாலர்)

விபரம்	1956	1960	1965
உறுப்பினர்களின் பங்குகள்	12,739	19,059	27,776
பெற்ற நீண்ட காலக் கடன்கள்	9,711	11,028	23,993
மொத்த விற்பனை	53,817	76,456	1,21,691

1966-ஆம் ஆண்டு, மொத்த விற்பனை சுமார் 174 மிலியன் டாலர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது, நிகரலாபம் (Net Profit) 5 மிலியன் டாலர் ஆகும். 1965-ஆம் ஆண்டின் இறுதியில் இக் கூட்டமைப்பின் மொத்தச் சொத்து மதிப்பு 64.5 மிலியன் டாலராகும்.

கனடாவில் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் (Credit Unions) நன்கு வளர்ச்சி பெற்றுள்ளன. இச் சங்கங்களின் வளர்ச்சியைக் காண்போம்.

ஆண்டு	சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர் எண்ணிக்கை	(மிலியன் டாலரில்)		நடைமுறை முதல்
			சேமிப்பு	வழங்கப்பட்ட கடன்கள்	
1931	174	43,600	—	—	11.5
1941	1,314	2,38,400	—	—	31.2
1951	3,120	11,37,900	334	125	359.0
1961	4,592	27,51,000	1,387	579	1510.0
1963	4,650	30,80,000	1,600	771	1888.0
1965	4,671	34,00,000	1,900	1,078	2250.0
1966	4,871	39,50,000	—	1,132	2900.0

இவ்வாறு, கனடாவில் கூட்டுறவுச் சங்கங்கள் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வருகின்றன. கனடாவின் கூட்டுறவு இயக்கத்திற்கு அரசாங்க ஆதரவு, மக்களின் சிறந்த ஈடுபாடு ஆகிய இரண்டும் இரு கண்களாகத் திகழ்கின்றன.

13. இஸ்ரேல் நாட்டில் கூட்டுறவு இயக்கம்
(Co-Operative Movement in Israel)

முன்னுரை

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்நாட்டில் கூட்டுறவு இயக்கம் தழைத்தோங்கி வளர்ந்தமையில் யாதொரு விந்தையுமில்லை. உலகமெங்கும் சிதறிக் கிடந்த யூதர்களின் சொந்த நாடாக விளங்கியதே பாலஸ்தீனமாகும். சிதறிக் கிடந்த யூதமக்கள் சீர் பெற்று வாழும் பொருட்டு இந்நாட்டில் குடியேறலாயினர். அளவில் சிறிய நாடாகும். இதன் பரப்பளவு சுமார் 10,000 சதுர மைல்களேயாகும். மொத்தப் பரப்பளவில் 27 சதவிகிதம் பயிர்த் தொழிலுக்குப் பயன்பட்டது. எஞ்சிய நிலப் பரப்பு காடுகளாலும், மலைகளாலும், சதுப்பு நிலங்களாலும் சூழப்பட்டுள்ளது. மண்வளம் நிறைந்த இந்நாடு மனஉறுதி நிறைந்த மக்களால் புது மெருகு பெற்றது. 1948-ஆம் ஆண்டு மே-திங்கள் 15-ஆம் நாளன்று இது தனி நாடாக அறிவிக்கப்பட்டு அங்கீகரிக்கவும் பட்டது. அது முதல் இந்நாடு 'இஸ்ரேல்' (Israel) என வழங்கப்படலாயிற்று. இதன் பின்னர்தான், கிழக்கு ஐரோப்பவிலிருந்தும், சோவியத் நாட்டிலிருந்தும் யூதர்கள் பெருமளவில் இந் நாட்டில் குடியேறத் தொடங்கினர். 1948-ஆம் ஆண்டு ஆறு இலட்சம் மக்களையே கொண்டிருந்த இந்நாடு, தற்போது சுமார் 2.5 மிலியன் மக்களைப் பெற்றுள்ளது என்றால் மக்களின் குடியேற்ற வேகத்தை நாம் எளிதில் அறிந்து கொள்ள முடியும். இந்நாட்டின் மக்கள் தொகை இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒருபுறம் யூதர்களும், மறுபுறம் அரேபியர்களும் இந்நாட்டில் ஒரு சேர வாழ்கின்றனர். தொடக்கத்தில் இரு சாராருக்குமிடையே யாதொரு பிணக்கும் ஏற்படவில்லையாதலால் நாட்டின் முன்னேற்றம் எள்ளளவும் தடைப்படவில்லை. மக்களின் சலியா உழைப்பினாலும், அரசின் முறையான திட்டங்

களாலும் தொடக்கம் முதலே இந்நாடு பொருளாதார நிறைவு பெற்று உயரலாயிற்று.

இந்நாட்டின் கூட்டுறவு இயக்க வரலாற்றை நாம் ஆராய வேண்டுமெனில், சுருக்கமாக மக்களின் குடியேற்றத்தைப் பற்றியும் அறியவேண்டியது அவசியமாகிறது. ஏனெனில், மக்களுக்குத் தேவையான கூட்டுறவுக் கொள்கைகள் இந் நாட்டில் நெடுங் காலந்தொட்டே இரண்டறக் கலந்தே வந்திருக்கின்றன. சுமார் 4000 ஆண்டுகட்கு முன்னரே, இந்நாட்டில் வாழ்ந்துவந்த யூதர்கள் கூட்டு முயற்சியில் நாட்டை உயர்த்துவதில் கவனம் செலுத்தி வந்தனர் என்றாலும், 1882-ஆம் ஆண்டுக்குப் பின்னர் தான், 'ரோத்சயில்டு' (Baron Edmund de Rothschild) என்பவரால் 'பாலஸ்தீன யூதக் குடியேற்றச் சங்கம்' (Palestine Jewish Colonisation Association) அமைக்கப்பட்டது. இதுவே முதல் முயற்சி ஆகையால், இவரே இவ்வியக்கத்தின் தந்தை எனப் போற்றப்படுகிறார்.

இக் குடியேற்றச் சங்கம் தேவையான நிலங்களைப் பெற்று, அவைகளைப் புதிதாகக் குடியேறும் மக்களுக்கு வழங்கின. விவசாயக் குடியிருப்புகளை அமைக்கும் எண்ணத்தோடு, இக் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வந்தது. விவசாயப் பண்ணைகள் அமைவதற்கான தகுந்த சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டன. புதிதாகக் குடியேறும் ஒவ்வொரு நபரும், தொடக்கத்தில் நிலம், கட்டடங்கள், விவசாயத்திற்குத் தேவையான ஆடுமாடுகள், விவசாயக் கருவிகள் போன்ற முக்கியத் தேவைகளைப் பெற்று, அதற்கான மொத்தத் தொகையில் ஒரு பகுதியை இச் சங்கத்திற்குச் செலுத்திவந்தனர். மீதித் தொகைக்கு அவர்கள் ஒரு கணிசமான வட்டித் தொகையும் (1 to 3%) வழங்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டது. மொத்தத் தொகையும் வசூலிக்கப்பட்டபின், அவர்கள் அந்நிலங்களுக்கு முழு உரிமையாளர்களாக அங்கீகரிக்கப்பட்டனர். 1882-ஆம் ஆண்டுக்கும் 1914-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில்தான் யூதர்கள் அதிக அளவில் இந்நாட்டில் குடியேறத் தலைப்பட்டனர். இத் தருணத்தில்தான் சுமார் மூன்று மிலியனுக்கும் அதிகமான யூதர்கள் கிழக்கு ஐரோப்பாவை விட்டு இங்கிலாந்து, கனடா, அமெரிக்க, தென் ஆப்பிரிக்கா, பாலஸ்தீனம் போன்ற நாடுகளுக்கு குடியேறலாயினர். இதன் விளைவாக, 1897-ஆம் ஆண்டு 'உலக யூதர்கள் குடியேற்ற அமைப்பு' (World Zionist Organisation) அமைக்கப்பட்டது. யூதர்களை முறையாகக் குடியேறச் செய்வதே இவ்வமைப்பின் முக்கிய நோக்கமாக இருந்தது. இதைத் தொடர்ந்து, குடியேறிய மக்களுக்குத்

தேவையான நிலங்களை வழங்கும் பொருட்டு ஒரு தேசிய நிதி அமைப்பும் 1901-ஆம் ஆண்டு, தோற்றுவிக்கப்பட்டது. எனவே, குடியேறிய மக்கள் பலவகையிலும் ஊக்குவிக்கப்பட்டனர். அரசாங்கத்தின் முழு ஆதரவு இச்சங்கத்திற்குக் கிடைத்தமையால், எண்ணங்கள் எளிதில் ஈடேறின.

1920-ஆம் ஆண்டு, மக்களுக்குத் தேவையான குறுகியகால, நீண்ட கால கடன் வசதிகளைப் பெருக்கும் பொருட்டு மேலும் ஒரு நிதி அமைப்பு (Jewish Foundation Fund) உருவாக்கப் பட்டது. 1901-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தேசிய நிதி அமைப்பும் (Jewish National Fund) செவ்வனே செயலாற்றி வந்தமையால், குடியேறிய மக்கள் குறைவேதுமின்றி வாழத் தொடங்கினர். 1929-ஆம் ஆண்டு, அனைத்துப்பிரிவு யூதர்களையும் கொண்ட 'யூதர்கள் பதிலாண்மை' (Jews Agency) என்ற ஒரு 'பொதுச்சபை' (Public Body) நிறுவப்பட்டது. 1930-ஆம் ஆண்டில் இச்சபை பாலஸ்தீன அரசால் அங்கீகரிக்கப்பட்டது. குடியேற விரும்பும் மக்களுக்குச் சரியான முறையில் உதவி செய்தலே இச்சபையின் முக்கிய நோக்கமாகும். இச்சபையின் தலைமைக் காரியாலயம் 'செருசலம்' (Jerusalem) நகரில் இயங்கி வந்தது. இச்சபை இலண்டன், பாரிஸ், வாஷிங்டன், ஜெனீவா போன்ற நகர்களிலும் பல அலுவலகங்களையும் பெற்றுள்ளது. செருசலம் நகரில் நிறுவப்பட்டிருந்த இச்சபையின் தலைமைச் செயலகம் பல பிரிவுகளைக் கொண்டு விளங்கியது. இப் பிரிவுகளில் 'விவசாயக் குடியேற்றப் பிரிவு' (Department of Agricultural Settlement) குறிப்பிடத்தக்கதாகும். இச்சிறப்புப் பிரிவு பல பணிகளைப் புரிந்தாலும், குறிப்பாக முன்னேற்றத் திட்டங்கள் பல தீட்டுதல், மனைகள் கட்டுதல், சாலைகள் அமைத்தல், நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குதல் போன்ற மிக முக்கியப் பணிகளில் மிகுந்த கவனம் செலுத்திவந்தது. விளை நிலங்களில் குடியேறிய எல்லா மக்களுக்கும், தேவையான உதவிகள் அளிக்கப் பட்டன. தற்போது, மொத்த நிலத்தில் 94.6 சதவிகிதம் அரசாங்கத்திற்கும், தேசிய நிதி அமைப்பிற்கும் (J. N. F.) சொந்தமானதாக உள்ளது என்றால் இந்நாட்டின் விரைவான முன்னேற்றத்தை நாம் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

மக்கள் குடியேற்றத்துடனேயே கூட்டுறவுக் கொள்கைகளும் பாலஸ்தீனத்தில் குடியேறின. என்றால் அது மிகையாகாது. தொடக்கத்தில் குடியேறிய மக்களுக்குப் பல்வேறு பிரச்சினைகளும், தொல்லைகளும் இருந்தன. நிலவளம் நிறைந்திருந்தாலும், சரியாகப் பதனிடப்படாமல் இருந்தமையால் விவசாயம்

எளிதில் தொடங்கமுடிய வில்லை. போக்குவரத்து வசதிக் குறைவும், நீர்ப்பாசனக் குறைபாடும் மக்களை மிகவும் இன்னலுற வைத்தன. விவசாயத் தொழிலே கிராமப் பகுதிகளில் முக்கியத் தொழிலாகக் கருதப்பட்டமையால் மக்கள் மேற்கூறிய குறைபாடு களால் மிகவும் வருந்தத் தலைப்பட்டனர். மேலும், பல்வேறு நாடு களிலிருந்து குடியேறிய மக்கள் வேளாண்மைத் தொழிலில் நன்கு பக்குவப்படாத காரணத்தால், இத்தொழில் இங்குச் சரியாகத் தழைக்க முடியாமல் தொடக்கத்தில் பல இடர்ப்பாடு களைக் கடக்க வேண்டியிருந்தது. நவீன முறையில் விவசாயம் செய்யப்படவில்லை. மேலும், இந்நாட்டுப் புதிய மக்கள் உடல் உழைப்பிலும் பழக்கப்படாதவர்களாக இருந்தனர். உழைப்பின்றி உயர்வு ஏது? குடியேறிய மக்கள் இந்நிலையில் மனமுடைந்து குடி யேறிய வேகத்திலேயே வெளியேற விரும்பினர். கையிலிருந்த செல்வத்தையும் நிலங்களை வாங்குவதிலும், விவசாயக் கருவிகள் வாங்குவதிலும் செலவழித்து விட்டமையால், அவர்கள் செய்வ தறியாது திகைத்தனர். இந்நிலையில் தான், கூட்டுறவுக் கொள் கைகள் இந்நாட்டில் மெள்ள அடிஎடுத்து வைக்கத் தொடங்கின. மத அடிப்படையிலும் ஒன்றுபட்ட யூத மக்கள் தங்களுக்குள் நல்ல ஒத்துழைப்பு ஒப்பந்தங்களை உருவாக்கிக் கொண்டனர். அவர்கள் கூட்டம் கூட்டமாகப் பல இடங்களில் கூட்டுறவு அடிப் படையில் தங்களது இருப்பிடங்களை அமைத்துக் கொண்டனர். இவ்வகை அமைப்பே பிற்காலத்தில் 'கூட்டுப் பண்ணைகள்' (Collective Farms) அமைவதற்குக் காரணமாக இருந்தது. தொடக்கத்தில் இத்தகைய கூட்டுப் பண்ணைகள் அமைக்கும் எண்ணம் இல்லையேயாயினும், தேவைகளின் காரணமாக இப் பண்ணைகள் எழத்தான் செய்தன. பாலஸ்தீனத்தில் இம் முறையில் குடியேறிய அமைப்புகளே 'க்வூட்சா' (Kvutza) என வழங்கலாயிற்று. சமூக அடிப்படையில் அமைந்த இக்கூட்டுக் குடியிருப்புகளே இவ்வாறு அழைக்கப்பட்டன. இதன் பின்னர் தான், இந்நாட்டின் பொருளாதாரமே உயரலாயிற்று ஏனைய நாடுகளுக்கும் இந்நாடு உதாரணமாக விளங்கலாயிற்று.

தொழிலாளர்க் கூட்டு அமைப்பு
(Jewish Federation of Labour)

1920-ஆம் ஆண்டு இத்தொழிலாளர் கூட்டமைப்பு (Histadrut) தொடங்கப்பட்டது. தேசிய அளவில் தொடங்கப் பட்ட தொழிற்சங்க அமைப்பேயாகும் இது. இவ்வமைப்பில், தனி நபர்கள், விவசாயிகள், தொழில் துறையில் ஈடுபட்டிருந் தோர் அங்கத்தினர்களாக அனுமதிக்கப்பட்டனர். தொழிலாளர்

களின் உயர்விற்குப் பல்வகையிலும் பாடுபடுகிறது இக் கூட்டமைப்பு. தற்போது, ஒரு மிலியனுக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டுள்ளது இத்தொழிலாளர் கூட்டமைப்பு. இதன் தலைமைக் காரியாலயம் 'டெல் அவிவ்' (Tel Aviv) என்ற நகரில் இருப்பினும், இச்சங்கம் பிறநாடுகளிலும் பல கிளை அலுவலகங்களைப் பெற்றுள்ளது. குறிப்பாக, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் இதன் கிளை அலுவலகங்கள் பணியாற்றி வருகின்றன, விளை நிலத்தில் குடியேறும் மக்களுக்கு எல்லாத் தேவையான வசதிகளையும் அளித்து வருகின்றது இச்சங்கம் மேலும், உறுப்பினர்களுக்கு அவ்வப் போது நிதி உதவியும், தொழில் நுணுக்க அறிவுரைகளும் அளித்து வருகின்றது இச்சங்கம்.

'ஹேவரத் ஓவ்டிம்' (Hevrat Ovdim)

1923-ஆம் ஆண்டு, இந்நாட்டுக் கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் ஒரு கூட்டுறவுச் சங்கம் (Hevrat Ovdim) முறையாகத் தொடங்கப் பட்டது பெரும்பாலும், தொழிலாளர்க் கூட்டமைப்புச் சங்கத்தில் இருந்த உறுப்பினர்களே இக்கூட்டுறவுச் சங்கத்திலும் உறுப்பினர் களாக உள்ளனர். கூட்டுறவு இயக்கத்திற்கும், தொழிலாளர் இயக்கத்திற்கும் நல்லுறவு ஏற்படுத்தும் ஒரு பாலமாக விளங்கு கின்றது இக்கூட்டுறவுச் சங்கம். இச்சங்கம் உயர்மட்டத்தில் செயலாற்றும் ஓர் அமைப்பாக கருதப்படுகின்றது. ஏனெனில் மொத்தக் கூட்டுறவுச் சங்கங்களில் 80% இச்சங்கத்தின் கீழ்தான் பணியாற்றி வருகின்றன. ஆனால் இயங்கி வரும் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்பன்று இக்கூட்டுறவுச் சங்கம். இக்கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக ஆனபின்பே. பிற கூட்டுறவுச் சங்கங்களில் ஒருவர் உறுப்பினராக முடியும். குறிப்பிட்ட ஒரு நபரை உறுப்பினர் பதவியிலிருந்து விலக்கவும் இச்சங்கம் அதிகாரம் பெற்றுள்ளது. மேலும், இயக்குநர் தேர் விலும் இச்சங்கம் ஏனைய கூட்டுறவுச் சங்கங்களை முறையாக வழி நடாத்திச் செல்கின்றது. இயங்கி வரும் கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் இச்சங்கத்தின் (Hevrat Ovdim) ஆணைகளுக்கு உட்பட்டே பணிபுரிய முடியும். கூட்டுறவுச் சங்கங்களால் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை நிராகரிக்கவும் முடியும் இச்சங்கத்தால். எனவே, மொத்தக் கூட்டுறவுச் சங்கங்களையும் பொறுப்புடன் கண் காணித்து வருகின்றது இக்கூட்டுறவுச் சங்கம். மேலும், மீன் வளம் பெருக்குதல்; தொழில்துறை முன்னேற்றம், போக்குவரத்து வசதிகளைப் பெருக்குதல், வங்கிகளை ஏற்படுத்துதல், வாணிப வளர்ச்சி போன்ற பல்வேறு துறைகளிலும் உறுப்பினர்களுக்கு உறுதுணையாக விளங்குகின்றது இக்கூட்டுறவுச் சங்கம்.

கூட்டுப் பண்ணை விவசாயத்தின் வரலாறு

தொடக்கத்தில் குடியேறிய மக்களின் துயர் துடைக்கவே கூட்டுப் பண்ணை விவசாயம் பாலஸ்தீனத்தில் ''யூதர்கள் குடியேற்ற அமைப்பு'' (Zionist Qrganisation) அறிமுகப்படுத்தப் பட்டது. இதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரமும், நாட்டின் பொருளாதாரமும் ஒருங்கே உயர்ந்தது. இந்நாட்டின் கூட்டுப் பண்ணை விவசாயத்தின் வளர்ச்சியைப் போல் உலகில் வேறு எந்த நாடும் பெற்றிருக்கவில்லை. இம்முறை விவசாயத்திற்கு இந்நாடே உலகிற்கு வழிகாட்டியாகவும், முன்னோடியாகவும் கருதப்படுகின்றது. 'க்வூட்சா' (Kvutza) எனப்படும் கூட்டுப் பண்ணைகளே இப்பெரு வெற்றிக்கு காரணமாகும். இப்பண்ணைகளைப் பெற்றுள்ள இந்நாடு உலக நாடுகள் அனைத்தையும் தன்பால் ஈர்த்ததில் வியப்பேதுமில்லை. பல்வேறு நாட்டைச் சேர்ந்த உரை ஆசிரியர்கள் இப்பெரு வெற்றியைக் கூட்டுறவுக் கொள்கைகளின் சாதனையென்றும், குறிப்பிடத்தக்க வெற்றி என்றும் வர்ணிக்கின்றனர். கூட்டுப்பண்ணை விவசாயத்தின் மூலம்தான் எதிர்ப்பட்ட எல்லாப் பிரச்சினைகளும் களையப்பட்டன. இவ்வகைச் சமூக அடிப்படையில் அமைந்த கூட்டுப் பண்ணைகள் மட்டும் இந்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்திவிடவில்லை. வேறு சில அமைப்புகளும் இந்நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கின. இனி அவற்றைப்பற்றிக் காண்போம் :

1. தனிநபர் பண்ணைகளைக் கொண்ட தனிப்பட்ட கிராமங்கள் (Moshava).
2. தொழிலாளர் குடியிருப்புகள் (Moshav Ovdim).
3. கூட்டுக் குடியிருப்புகள் (Kibbutz or Kvutza).
4. கலப்புக் கூட்டுக் குடியிருப்புகள் (Moshav Shitufi).

1. கிராமக் குடியிருப்புகள் (Moshava) :

இவ்வகை குடியிருப்புகளே பாலஸ்தீனத்தில் முதன் முதல் எழுந்த குடியிருப்புகளாகும். 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல், யூதர்கள் கிழக்கு ஐரோப்பாவிலிருந்தும் சோவியத் நாட்டிலிருந்தும் தொல்லைகளிலிருந்து விடுபடும் நோக்கோடு பாலஸ்தீனம் நோக்கி வரலாயினர். இவ்வாறு குடியேறிய மக்கள், நிதி வழங்கும் சங்கங்களிடமிருந்து தேவையான நிதி உதவி பெற்று அதன் மூலம் நிலங்களைப் பெறலாயினர். தனித் தனியாக விவசாயத்தை நடத்தத் தலைப்பட்டனர். இதன் மூலம், ஒவ்வொரு நபரும் தங்கள் தங்கள் நிலத்திற்கு முழு உரிமையாளராகக்

கருதப்பட்டு, விவசாயமும் பிறர் ஒத்துழைப்பின்றித் தனியாகவே செய்யப்பட்டது. விவசாயத்தில் தேவை யேற்படும் போது மட்டும், தொழிலாளிகள் கூலிக்கு அமர்த்திக் கொள்ளப்பட்டனர். குறிப்பாக, அறுவடைக் காலங்களில் ஒவ்வொரு நபரும் கூலிக்குப் பல தொழிலாளிகளை அமர்த்திக் கொண்டனர். மற்றபடி, குடும்பம் முழுமையும் தங்கள் தங்கள் நிலத்தில் பணிபுரிந்து வந்தனர். ஏறக்குறைய நம் நாட்டுக் கிராமங்களை ஒத்தே இந் நாட்டுக் கிராமங்களும் தொடக்கத்தில் இருந்தன. பல நில உரிமையாளர்கள் தங்கள் நிலங்களை குத்தகையாளர்களிடமும் (Tenants) ஒப்படைத்து விவசாயத்தைச் செய்து வந்தனர்.

இந்நிலையில், கூட்டுறவுக் கொள்கைகள் இக்கிராமங்களில் எள்ளளவும் கடைப்பிடிக்கப்படவில்லை. கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதுபற்றித் தொடக்கத்தில் மக்கள் அறியவே இல்லை. எனவே விவசாயப் பொருள்களின் உற்பத்தி உயரவே இல்லை. மேலும், விளைவிக்கப்பட்ட முக்கியப் பொருள்கள் அவர் களது தேவைகளை நிறைவு செய்யக் கூடியனவாகவும் இல்லை. எனவே, உணவுப் பொருள்களின் பற்றுக்குறை எல்லோராலும் உணரப்பட்டது. கூட்டுப்பண்ணை விவசாயம் கடைப்பிடிக்கப்பட வில்லையாயினும், பல கூட்டுறவு விற்பனைச் சங்கங்களையும், கொள் முதல் சங்கங்களையும், கடன் வழங்கும் சங்கங்களையும், நீர்ப்பாசன அபிவிருத்திச் சங்கங்களையும் இந்நாட்டு மக்கள் தோற்றுவித் திருந்தனர். அவை மூலம் நன்மைகளையும் பெற்றனர்.

2. தொழிலாளர் குடியிருப்புச் சங்கங்கள் (Moshav Ovdim):

தங்களுக்குக்கென்று சொந்தமான நிலத்தில் பயிரிட விரும்பிய மக்கள் பலரால் உருவாக்கப்பட்டதே இவ்வகைக் குடி யிருப்புச் சங்கங்கள். முதல் கூட்டுறவுச் சங்கம் (Moshav Ovdim) 1921-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. தற்போது இந்நாட்டில் இவ்வகைக் குடியிருப்புச் சங்கங்கள் சுமார் 300 இயங்கி வரு கின்றன. விளை நிலங்கள் யாவும் அரசாங்கத்திற்குச் சொந்த மானதாகக் கருதப்படுவதால், இவ்வகைக் குடியிருப்புச் சங்கங்கள் அரசிடமிருந்து நிலங்களைப் பெற்று, அவற்றைத் தங்களது உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கின்றன. எனவே, தனி நபர் ஒவ்வொருவரும் துண்டு நிலங்களைப் பெற்று, தங்கள் குடும்பத் தாரின் உதவியுடன் தனித் தனியாக விவசாயம் செய்கின்றனர். நிலங்கள் யாவும் உறுப்பினர்கட்கு நீண்ட காலக் குத்தகையின் அடிப்படையில் அளிக்கப்படுகின்றன. எனவே, அவர்கள் நிலங் களுக்கு உரிமை பாராட்டி மகிழ முடியாது. இக்கூட்டுறவுச் சங்கத்தின் அனுமதி இன்றி அவர்கள் கூலிக்கு வேலையாட்களை

அமர்த்திக் கொள்ளவும் இயலாமல் தடை செய்யப்பட்டது. உறுப்பினர்களுக்கு நிலங்கள் வழங்குவது மட்டுமின்றி, தரமான உரங்கள், பொறுக்கு விதைகள், விவசாயக் கருவிகள், குடும்ப வாழ்க்கைக்குத் தேவையான முக்கியப் பொருள்கள் முதலானவற்றையும் விநியோகம் செய்து வருகின்றன இக்கூட்டுறவுச் சங்கங்கள். நிதி வசதி குறைந்த உறுப்பினர்களுக்குத் தவணை முறையிலும், கடனுக்கும் விற்பனை செய்து வருவதால் உறுப்பினர்கள் யாவரும் எளிதில் வாழ வழி முறைகள் வகுக்கப்படுகின்றன. சில கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த உழும் இயந்திரங்களை (Tractors) உறுப்பினர்களின் உபயோகத்திற்காக வைத்துள்ளன. உறுப்பினர்கள தங்கள் விருப்பப்படி சுதந்திரமாக விவசாயம் செய்ய அனுமதிக்கப் பட்டாலும், அவர்கள் விவசாயத்திற்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் கூட்டுறவுக் கொள்முதல் சங்கங்களிடமிருந்தே கொள்முதல் செய்ய வேண்டுமென ஒரு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இதைப் போலவே, அறுவடைக்குப் பின்னர் உறுப்பினர்கள் தங்களது விளைபொருளை இக்கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே விற்பனை செய்கின்றனர். ஒவ்வொரு உறுப்பினரின் விளைபொருளையும் முறையாகத் தரம் பிரித்து, பின்னர் அதை மத்திய விற்பனையேற்பாடு சங்கத்திற்கு (Central Marketing Society) அனுப்புகின்றது. இம் மத்திய சங்கம் தகுந்த விற்பனைக்கு ஏற்பாடு செய்து உறுப்பினர்களுக்குப் பேருதவி புரிகின்றது.

இவை மட்டுமின்றி, இக் கூட்டுறவுச் சங்கம் சுகாதார வசதிகளைப் பெருக்குதல், கூட்டுறவுக் கல்வியை முறையாகப் பெருக்குதல், ஆரோக்கிய வாழ்விற்கு வழி வகுத்தல் போன்ற நகராட்சிக் கழகத்திற்குரிய பணிகளையும் செவ்வனே செய்து வருகின்றது. இப் பணிகளை முறையாக நிறைவேற்றும் பொருட்டு உறுப்பினர்களிடமிருந்து வரி வசூலிக்கின்றன இக்கூட்டுறவுச் சங்கங்கள். உறுப்பினர்களின் சக்திக் கேற்ப வரிகள் விதிக்கப்படுகின்றன. உறுப்பினர்கள் தங்களது சேமிப்புத் தொகையை இக்கூட்டுறவுச் சங்கத்திடமே சேமித்து வைப்பதால், இக்கூட்டுறவுச் சங்கம் சிறந்த வங்கியாகவும் (Bank) செயல்படுகின்றது. இக் கூட்டுறவுச் சங்கம் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த நிர்வாகிகளால் நிர்வகிக்கப்படுகின்றது. பல துணைக் குழுக்களும் அமைக்கப்படுவதால் நிர்வாகம் சிறந்த முறையில் நடைபெறுகின்றது. தீர்மானங்களை நிறைவேற்றும் பொருட்டு நடத்தப்படும் வாக்கெடுப்பின் போது, உறுப்பினர்கள் தங்களது கைகளை உயர்த்தி ஆதரவையோ அல்லது எதிர்ப்பையோ தெரிவித்துக் கொள்கினறனர். மொத்த உறுப்பினர்களில் 10%

இரகசிய வாக்கெடுப்பு முறையை விரும்பினல், அதற்கும் வழி செய்யப்பட்டுள்ளது. இவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் இலாப நோக்கோடு தொடங்கப்பட்டவையல்ல ஆதலால், உறுப்பினர்களின் நலனே பெரிதும் கவனிக்கப்படுகின்றது. முறையான நிர்வாகத்தின் காரணமாக விளையும் இலாபத்தை இக்கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது உறுப்பினர்களுக்கே பகிர்ந்தளித்து விடுகின்றன. ஒரு சிறு தொகையைக் கூட 'காப்புநிதி'க் கென்று (Reserve Fund) ஒதுக்குவதில்லை. நிதி வசதி தேவைப்படின் இக்கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களிடமிருந்து 'பங்கு மூலதனமாக'த் (Share Capital) தேவையான நிதியை எழுப்பிக் கொள்கின்றன. 'வணிக வங்கிக'ளிடமிருந்தும் (Commercial Banks) தேவையான நிதியை கடனகப் பெற்று நிலைமையைச் சரி செய்து கொள்கின்றன இக்கூட்டுறவுச் சங்கங்கள். 1962-ஆம் ஆண்டுக் கணக்குப்படி, 302 கூட்டுறவுச் சங்கங்கள் இந்நாட்டில் இயங்கி வருகின்றன.

இனி, இக்கூட்டுறவுச் சங்கத்தின் (Moshav Ovdim) முக்கியக் குறிக்கோள்களையும், நோக்கங்களையும் ஆராய்வோம்.

1. தனி நபர்களின் திறமையை நன்கு பயன்படுத்தி நிலங்களைத் தனி உடைமை ஆக்குதல் ;

2. அரசிடமிருந்து நிலங்களைப் பெற்று, அவற்றை உறுப்பினர்களுக்கு முறையாகப் பகிர்ந்தளித்தல் ;

3. கொள்முதல், விற்பனைச் செயல்களில் உறுப்பினர்கட்கு உறு துணையாக விளங்குதல் ;

4. சுகாதார வசதிகள், கூட்டுறவுக் கல்வி, மக்கள் நலம் போன்றவற்றைப் பேணிக் காத்தல்-போன்ற சிறந்த நோக்கங் கொண்டு செயல் புரிகின்றன இக்கூட்டுறவுச் சங்கங்கள்.

சிறப்பியல்புகள் (Characteristics)

இக்கூட்டுறவுச் சங்கத்தின் சிறப்பியல்புகள் பல இருப்பினும், அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

முதலாவதாக, மொத்த நிலங்களும் அரசிற்குச் சொந்தமானதாக உள்ளன. கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக உறுப்பினர்கள் தேவையான நிலத்தைப் பெற்று விவசாயம் செய்து வருகின்றனர்.

இரண்டாவதாக, தேவைக்கதிகமான நிலம் உறுப்பினர்கட்கு வழங்கப்படுவதில்லை. எனவே மக்கள் பெருமளவில் பயனடைய வழி செய்யப்படுகின்றது.

மூன்றாவதாக, இக்கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் உறுப்பினர்கள் சுதந்திரமான வாழ்வைப் பெறுகின்றனர். அவர்களது திறமையையும், உழைப்பையும் வெளிப்படுத்த இதன் மூலம் வாய்ப்பு ஏற்படுகின்றது.

நான்காவதாக, சங்கத்தின் முன் அனுமதி இன்றி உறுப்பினர்கள் பிற நபர்களை விவசாயத்தில் பயன்படுத்தக் கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

ஐந்தாவதாக, உறுப்பினர்கள் விவசாயத்திற்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் இக்கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகத்தான் கொள்முதல் செய்ய வேண்டும். விளை பொருளும் இச்சங்கத்தின் மூலமாகத்தான் விற்பனை செய்யப்பட வேண்டும். இவ்விதிகள் இச்சங்கத்தின் முக்கியச் சிறப்பியல்புகளாகும்.

கடைசியாக, சுகாதார வசதிகள், கல்வி வளர்ச்சி போன்ற நலன் பயக்கும் பணிகளும் இக்கூட்டுறவுச் சங்கத்தினால் நடைபெறுகின்றன.

பொதுவாக, உறுப்பினர்கள் தங்களுக்குத் தேவையான நிலங்களை நீண்ட காலக் குத்தகைக்குப் பெற்று (49 ஆண்டுகள்) முறையான வாழ்வை அமைத்துக் கொள்கின்றனர். நிலங்கள் உறுப்பினர்கட்கு முறையாகப் பகிர்தளிக்கப்படுவதால், அனைவரும் நன்மை பெறுகின்றனர். ஒவ்வொரு நபரும் 6 ஏக்கர் நஞ்சை நிலத்தையோ அல்லது 25 ஏக்கர் புஞ்சை நிலத்தையோ பெற்று விவசாயம் நடத்த வழி செய்யப்படுகின்றது. உறுப்பினர்கள் ஒவ்வொருவரின் குடும்பத்திற்குத் தேவையான நிலங்கள் ஒதுக்கப்படுகின்றன.

குடியிருப்பின் அமைப்பு

இக்கிராமக் குடியிருப்பு வட்ட வடிவமாக அமைக்கப்பட்டு, அதன் நடுவில் எல்லோருக்கும் பொதுவான பள்ளிக் கூடங்கள், மருத்துவ மனைகள், கூட்டுறவுச் சங்கம், போன்றவை நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அவைகளுக்கு எதிராக வட்ட வடிவில் மக்களின் குடியிருப்பு மனைகளும் கட்டப்படுகின்றன. ஒவ்வொரு மனையும் மாட்டுத் தொழுவமும், கோழிப் பண்ணை முதலானவற்றைக்

கொண்டு அழகுற விளங்குகின்றது. மனையின் பின்புறம் தோட்டக் கலை வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், பழவகைகள், காய்கறிகள், கால் நடைத் தீவனம் முதலான வற்றைப் பயிர் செய்வதற்கும் போதுமான நிலம் ஒதுக்கப்படு கின்றது. இவற்றைக் கடந்து சென்றால் நீர்ப்பாசன வசதிகள் குறைந்த நிலங்கள் இருப்பதால், அவற்றின் புஞ்சைப் பயிர்கள் பயிர் செய்யப்படுகின்றன. விளை நிலங்களும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வட்டப் பிரிவிலும் ஒரே விதமான பயிர்கள் பயிர் செய்யப்படுகின்றன. இவ்வாறு, இக்குடியிருப்பு கட்டுக்கோப்பாக அமைந்திருப்பதால், கள்ளர்கள் பயமின்றி மக்கள் வாழ்கின்றனர். இயந்திரங்களின் உதவி கொண்டு அறு வடையும் எளிதில் செய்யப்படுகின்றது. இவ்வியந்திரங்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் வாடகைக்கு வழங்குவதால் உறுப்பினர்கள் அறுவடையை எளிதில் செய்து கொள்கின்றனர்.

பொருளாதார சமத்துவம்

பொருளாதாரச் சமத்துவ அடிப்படையில்தான் இக் குடியிருப்பு அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு உறுப்பினரும் தரமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளச் சமவாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. பாகுபாடு ஏதுமின்றி விளை நிலங்கள் உறுப்பினர்களுக்குச் சமமாகத் தேவையான அளவு பகிர்ந் தளிக்கப்பட்டுள்ளதால் உறுப்பினர்களுக்கிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வு பெருமளவில் ஏற்படவில்லை. விவசாயப் பொருள் களைக் கொள்முதல் செய்யும் பொருட்டு, நிதி உதவியும் உறுப் பினர்களுக்குச் சமமாகச் செய்யப்படுகின்றது. நடுத்தர வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் சற்றே செல்வம் படைத்தவர்களாக விளங்கியமையால், அவர்களது செல்வ நிலையை அடிப்படை யாகக் கொண்டு பொருளுதவி செய்யப்படுகின்றது. இருப்பினும், இயற்கையின் காரணமாக விளைந்த அழிவுகளால் மக்களிடையே பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் ஏற்படத்தான் செய்தன. சுகாதார வசதிகள், மருத்துவமனைகள், பள்ளிகள் முதலான நலன் பயக்கும் நிறுவனங்களை நடத்தும் பொருட்டு எல்லோ ரிடத்தும் சமமாக வரி வசூலிக்கப்படுகின்றது.

விவசாயிகள் மட்டுமின்றி, பிறதொழிலாளிகள், பள்ளி ஆசிரியர்கள், கூட்டுறவுச் சங்கத்தைச் சார்ந்தவர்கள், மருத் துவர்கள் முதலானவர்களும் இக்கிராமக் குடியிருப்பில் வாழ் கின்றனர். எனவே, பாலஸ்தீனத்தின் இக்குடியிருப்பு அமைப்பு எல்லாத் துறைகளிலும் தன் கவனத்தை நன்கு செலுத்தி

நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு உறுதுணையாக விளங்குகின்றது. மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதில் கூட்டுறவுக் குடியிருப்புச் சங்கம் பல வகையிலும் உறுப்பினர்கட்கு உதவியாக உள்ளது. இனி இக்குடியிருப்பில் வாழும் மக்களின் செயல்முறைகளைக் காண்போம்.

ஒவ்வொரு நபரும் தங்களின் விருப்பப்படி தங்களது நிலத்தில் பயிரிட அனுமதிக்கப்படுவதால் அவர்கள் சுதந்திரமாகச் செயல்பட முடிகின்றது. உறுப்பினர்கள் தங்கள் நிலங்களிலேயே ஓரே மாதிரியான வீடுகளைக் கட்டிக் கொள்கின்றனர். வீடுகளைச்சார்ந்துள்ள தோட்டங்களில் பழவகைகள், கால்நடைத் தீவனம் போன்றவையும் பயிரிடப்படுகின்றன. ஆடு மாடுகள், கோழிகள் முதலானவற்றை வளர்ப்பதால் இவர்களது பொருளாதார நிலையும் கணிசமாக உயர்வதற்கு வழி ஏற்படுகின்றது. அவர்களுக்கென்று அளிக்கப்பட்டுள்ள நஞ்சை நிலங்களில் அவர்கள் தங்கள் விருப்பப்படி பயிரிட அனுமதிக்கப்பட்டாலும், நீர்ப்பாசன வசதிகள் குறைந்த புஞ்சை நிலங்களில் கூட்டுறவுக் குடியிருப்புச் சங்கத்தின் திட்டப்படியே அவர்கள் பயிரிட முடியும். இத்திட்டத்தினால், அறுவடைக் காலங்களில் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான இயந்திரங்களைக் கொண்டு உறுப்பினர்கள் பெரும் பயன் அடைகின்றனர். கொள்முதல், விற்பனை போன்ற காரியங்களும் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகவே நடைபெறுகின்றது. ஒவ்வொரு உறுப்பினரும் தங்களது பொருளாதார நிலையை உயர்த்துவதில் மிகவும் கவனமாக இருக்கின்றனர்.

இக்குடியிருப்பில் உறுப்பினர்கள் தங்கள் விருப்பப்படி பயிரிட அனுமதிக்கப்பட்டாலும், விவசாயத்தின் சில பிரிவுகள் கூட்டுறவு முறையில் நடைபெறுகின்றன. பயிர்களைப் பயிரிடுவதற்குத் தேவையான தகுந்த திட்டங்களைக் கூட்டுறவுச் சங்கமே வகுத்து அதன்படி உறுப்பினர்கள் உழைப்பதற்கு வழிசெய்யப்படுகின்றது. உறுப்பினர்கள் யாவரும் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லா நடவடிக்கைகளிலும் பங்கேற்றுப் பொது முன்னேற்றத்திற்குப் பாடுபடவேண்டும் என்ற கட்டுப்பாடும் விதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், உறுப்பினர்கள் கூட்டுறவு அடிப்படையில் வாழ்வதற்கு நல்ல முறையில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. நீர்ப்பாசன வசதிகள், குடி தண்ணீர் வசதி, பொருள்களின் கொள்முதல், பொருள்களின் விற்பனையேற்பாடு, சுகாதார வசதிகள், கல்வி, பொது முன்னேற்றம் போன்ற முக்கியமான காரியங்கள் யாவும் கூட்டுறவு அடிப்படையில் செயலாற்றப்படுகின்றன.

இப்பணிகள் மட்டுமின்றி, இக்கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்குத் தேவையான போது தேவையான கடனுதவியும் செய்கின்றன. சில தருணங்களில், உறுப்பினர்களுக்குப் 'பிணையாளாகவும்' (Surety) இக்கூட்டுறவுச் சங்கம் உதவி செய்கின்றது. செய்யும் சேவைகளுக்கு உறுப்பினர்களிடமிருந்து கணிசமான கட்டணத்தைப் பெறுகின்றது இக்கூட்டுறவுச் சங்கம். இழப்பு ஏற்படும் போது, உறுப்பினர்கள் அதை ஈடுசெய்து விடுகின்றனர். உறுப்பினர்கள் செலுத்தும் 'வருமான வரி' மூலம் சமூகத்திற்குத் தேவையான எல்லா நற்பணிகளையும் செய்கின்றது இக்கூட்டுறவுச் சங்கம்.

3. கூட்டுக் குடியிருப்புகள் (Kvutza or Kibbutz)

உலக நாடுகள் அனைத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்குவது இக்குடியிருப்பாகும். யூதர்கள் அனைவரும் மத சம்பந்தப்பட்ட காரியங்களில் ஒத்த கருத்தையே கொண்டிருந்தனர். எனவே அவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து பல சிறிய பெரிய பிரிவுகளைக் கூட்டாக உருவாக்கித் தங்கள் குடியிருப்புகளை அமைத்துத் கொண்டனர். எனவே, இக்குடியிருப்புகள் மக்களின் இச்சைப்படி எழுந்த சமூக அமைப்புகளாகும். எல்லாத்துறையிலும் ஒத்த கருத்து கொண்டவர்கள் என்பதால் இவ்வகைக் குடியிருப்பு எளிதில் அமைந்தது. இவ்வாறு குடியேறிய மக்கள் சுய உழைப்பையே பெரிதும் நம்பி வாழ்கின்றனர். முக்கியப் பொருள்களின் உற்பத்தி, கல்வி, விற்பனை யேற்பாடு, மக்கள் நலன் பேணும் பணிகள், போன்றவை இச்சமூக அமைப்பின் நேரடிப் பார்வையிலும், பராமரிப்பிலும் நிறைவேற்றப்படுகின்றன. இவ்வாறு மத அடிப்படையில் ஒன்றுபட்ட மக்கள் தங்களின் விருப்பப்படி அமைத்துக் கொண்ட சமூக அமைப்பே உலகப் புகழ்பெற்ற கூட்டுக் குடியிருப்புகளாகும் (Kibbutz). கூட்டுறவு இயக்க வரலாற்றிலேயே இது ஒரு திருப்பு முனையாக அமைந்துள்ளது. இந்நாட்டின் கூட்டுறவு இயக்கம் செம்மையுற இச்சமூக அமைப்பே பெரிதும் காரணமாகும். பல வகையிலும் ஒத்த கருத்துக் கொண்ட மக்கள், தங்கள் சலியா உழைப்பினால் தங்களையும், தங்கள் தாய்நாட்டையும் ஒரு சேர உயர்த்தினர். இவர்களிடையே நேச மனப்பான்மை நன்கு நிலவியதால், பிணக்கு ஏற்பட வழியின்றிப், போற்றத்தக்க பொருளாதார வளர்ச்சி ஏற்படலாயிற்று. மக்களின் வாழ்க்கைத்தரம், பொருளாதார நிலை, கல்வி, பண்பாடு, மக்கள் நலம் போன்ற ஒரு சேர உயர்வதற்குக் காரணமாயிருந்தது இச்சமூக அமைப்பேயாகும். இவ்வாறு வலிமையாக அமைந்த இக்குடியிருப்புகளே இந்

நாட்டின் பெரிய இயக்கமெனக் கருதப்படுவதில் வியப்பேது மில்லை. கூட்டுறவுக் கொள்கைகள் இந்நாட்டில் வேரூன்றக் காரணமாக இருந்தவை இக்குடியிருப்புகளேயாகும்.

இக்குடியிருப்புகளில் எல்லாப் பணிகளும் கூட்டுறவு முறையில் நிறைவேற்றப்படுகின்றன. விவசாயம், வாணிபம், கல்வி, சுகாதாரம் போன்ற எல்லாத் துறைகளும் கூட்டுறவு முறையில் இயங்குவதால் மக்களின் வாழ்க்கை நிலை எண்ணிய படியே உயர்ந்துள்ளது. சொத்துகள் யாவும் அரசிற்குச் சொந்தமானதாக உள்ளதால், உறுப்பினர்கள் தங்களின் தேவைக்கேற்ப அவற்றைப் பெறுகின்றனர். ஒவ்வொரு உறுப் பினரும் முறையாக உழைப்பதால் ஊதியமும் உயர வழி ஏற்படு கின்றது. இச்சமூக அமைப்பில் பணம் பெரும் பொறுப்பு வகிக்க வில்லை. எனவே, இக்குடியிருப்பில் பணத்திற்கு முக்கியத்துவமும் அளிக்கப்படவில்லை. எல்லாத் துறைகளிலுமே கூட்டுறவுக் கொள்கைகள் முறையாகக் கையாளப்பட்டமையால் விவசாயம், கல்வி, பிறதொழில்கள் முதலானவை செவ்வனே வளர்ச்சி பெற்றன. இதன் பயனாகப், பொருளாதார நிலையும், சமுதாய வாழ்க்கை முறையும் பெருமளவில் உயர்வு பெறலாயிற்று. இவை மட்டுமின்றி, மக்கள் தன்னடக்கம், சமூகப் பொறுப்பு, சமூகக் கட்டுப்பாடு போன்ற உயர்ந்த கருத்துக்களையும் கடைப் பிடித்தமையால் திட்டங்கள் யாவும் பெரு வெற்றி பெறலாயின. ஏனைய சமூக அமைப்புகளுக்கு இக்கூட்டுக் குடியிருப்பு மாதிரி யாகக் கொள்ளப்பட்டது. கூட்டு முயற்சியால் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு எளிதில் தீர்வு காணலாம் என்ற கருத்தை வலுப்படுத்தியது இக்கூட்டுக் குடியிருப்பேயாகும். உறுப்பினர் களுக்குச் சொந்தமாக எந்தச் சொத்தும் இல்லையாயினும், அவர்கள் தங்கள் பணிகளில் மிகவும் அக்கறை கொண்டவர் களாக இருப்பதால் அரசிற்கு எந்த விதத் தொல்லையும் ஏற்படுவ தில்லை. பலனை எதிர்பார்க்காமல் உறுப்பினர்கள் உழைப்பதால் நாடு நன்கு வளம் பெற்றுத் திகழ்கின்றது. நாடு உயரும்போது நாட்டு மக்களும் நன்கு உயர்கின்றனர். சமுதாயக் கருத்துகளும் மக்கள் மனதில் நன்கு நிலைபெற்று இருப்பதால் ஒரு பண்பட்ட சமுதாயம் எளிதாக உருவாக வாய்ப்பு ஏற்படுவதில் வியப்பேது மில்லையல்லவா ? உறுப்பினர்கள் தங்களுக்குத் தேவையான நிலத்தைக் குடியேற்ற அமைப்புச் சங்கத்திடமிருந்து நீண்ட காலத்திற்குக் (49 ஆண்டுகட்கு) குத்தகை முறையில் பெறு கின்றனர். உறுப்பினர்கள் நிலத்தைப் பெறத் தேவையான நிதி வசதியை தேசிய நிதி அமைப்பு (J. N. F.) வழங்குகின்றது. பெற்ற நிலத்தில் முறையாக விவசாயம் செய்து உறுப்பினர்கள்

தங்களையும் தங்கள் தாய்த்திருநாட்டையும் பொருளாதார ரீதியில் உயர்த்தப் பாடுபடுகின்றனர். எனவே, இதன் மூலம் சிறந்த சமூக அமைப்புகள் உருவாக வாய்ப்பு ஏற்படுகின்றது.

இனி, இக்கூட்டுக் குடியிருப்புகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைக் காண்போம். இதன் செயல் முறையை 'மார்கெரட் டிக்பி' (Miss Margaret Digby) என்னும் ஆசிரியர் 1954-ஆம் ஆண்டு விவசாய ஆண்டு மலரில் ஒரு கட்டுரை மூலம் அழகாக விளக்கியுள்ளார். உறுப்பினர்கள் யாவரும் கூட்டுறவுக் குடியிருப்புச் சங்கத்திற்கு மூலதனம் அளிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படவில்லை. இயங்கிவந்த பல்வேறு நிதி அமைப்புகளே தேவையான 'நடைமுறை முதலை' (Working Capital) வழங்கிவந்தன. ஆண்டுதோறும் ஏற்பட்டுவந்த இலாப உபரித்தொகையைக் கொண்டே நிதி நிலை சரி செய்யப்பட்டது. இக் குடியிருப்புச் சங்கத்தின் கணக்குகள் முறையாக எழுதப்பட்டு, நன்கு பாதுகாக்கவும் படுகின்றன. பணத்திற்கு அங்கு (உறுப்பினர்களிடையே) வேலையே இல்லை எனச் சொல்லலாம். உறுப்பினர்கள் யாவரும் ஒரு பொது அறையில் ஒன்றாக உணவு அருந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுப் பண்டகசாலையிலிருந்து உறுப்பினர்கள் தங்களுக்குத் தேவையான ஆடைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். உறுப்பினர்களுக்குத் தனிப்பட்ட முறையில் தேவைப்படும் சோப்பு, சிகரெட் போன்ற பொருள்களும் பொதுப் பண்டகசாலையிடமிருந்தே பெறப்படுகின்றன. இக் குடியிருப்பு நன்கு அமைக்கப்பட்டுள்ளதால், உறுப்பினர்கள் யாவருக்கும் தனி வீடுகளும் போதுமான வசதிகளுடன் அளிக்கப்பட்டுள்ளன. திருமணமானவர்களுக்குத் தனி அறைகளைக் கொண்ட வீடுகள் வழங்கப்படுகின்றன. வீடுகளில் உள்ள மேசை, நாற்காலி போன்ற தட்டு முட்டுப் பொருள்கள், புத்தகங்கள், புகைப் படங்கள், வாத்தியக் கருவிகள், வானொலிப் பெட்டி, முதலானவை உறுப்பினர்களின் சொந்த உடைமைகளாகும்.

கூட்டுக் குடியிருப்புச் சங்கத்தின் சொத்துக்களைக் கொண்டு இப்பொருட்கள் உறுப்பினர்கட்கு அளிக்கப்படுகின்றன. மேலும், ஆண்டு விடுமுறையின் போது, ஒவ்வொரு உறுப்பினருக்கும் £ 20 அளிக்கப்படுவதால் அப்'படியை'க் (Allowance) கொண்டும் உறுப்பினர்கள் தங்கள் சிறு தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர். உறுப்பினர்கட்குக் கூலி வழங்கப்படுவதில்லை. ஆண்டு முடிவில் இலாப உபரித்தொகை பகிர்ந்தளிக்கப்படுவதுமில்லை. உறுப்பினர்களின் எல்லாத் தேவைகளும் குடியிருப்புச்

சங்கத்தின் மூலம் நிறைவேற்றப்படுவதால், உறுப்பினர்கள் கூலியைப்பற்றி நினைப்பதுமில்லை. வருட இறுதியில் வரும் இலாப உபரித்தொகை உறுப்பினர்களின் நல்வாழ்விற்கே பயன்படுத்தப் படுகின்றது. இக்குடியிருப்புச் சங்கத்தைவிட்டு விலக விரும்பும் உறுப்பினர் எவரும் இச்சங்கத்தின் பொதுச் சொத்தில் உரிமை கொண்டாட இயலாது.

பொதுவாக, குழந்தைகள் தனிப்பட்ட 'சிறுவர் இல்லங்களில்' (Nurseries) வளர்க்கப்படுகின்றனர். சில கூட்டுக் குடியிருப்புகளில் பெற்றோர்களுடனேயே குழந்தைகள் வசிக்க அனுமதி அளிக்கப்படுகின்றது, அவர்கள் பள்ளிகளில் கல்வி கற்கும் போதும் தனியாகவே வளர்கின்றனர். அவர்கள் குடியிருப்புச் சங்கத்திற்கு உழைக்கத்தக்க வயதை அடைந்தவுடன் உறுப்பினர்களாக அங்கீகரிக்கப்படுகின்றனர். எல்லாக் கூட்டுக் குடியிருப்புகளிலும் தொடக்கக் கல்விக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இஸ்ரேலில் பதினான்கு வயதுவரை கட்டாயக் கல்வி போதிக்கப் படுவதால், போதுமான பள்ளிகள் இயங்கி வருகின்றன. பல உயர்நிலைப் பள்ளிகளும் கூட்டுக் குடியிருப்புச் சங்கங்களினால் நடத்தப்படுகின்றன. குடியிருப்புச் சங்கத்திற்குத் தகுந்த நபர்களை உருவாக்கும் எண்ணத்துடன், மாணவர்களின் கல்லூரிச் செலவையும் இக் குடியிருப்புச் சங்கங்களே ஏற்றுக் கொள்வதால் தரமான உறுப்பினர்கள் உருவாக்கப்படுகின்றனர். மாணவர்கள் ஆராய்ச்சித் துறையில் ஈடுபடுவதற்குப் போதிய வசதிகள் செய்து தரப்படுகின்றன. வயோதிக உறுப்பினர்கள் குடியிருப்புச் சங்கத்தின் சிறந்த பராமரிப்பில் நலமுடன் வாழ வழி செய்யப் பட்டுள்ளது.

நிர்வாக இயந்திரத்தைச் செவ்வனே நடத்தும் பொருட்டு ஒரு 'பொதுச் சபை' (General Assembly) உறுப்பினர்களால் அமைக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து 'தலைமைச் செயலகம்' (Secretariat) பொதுச் சபையால் தீர்மானிக்கப்டுகின்றது. சிறந்த நிர்வாகத்தை மனதில் கொண்டு பல 'ஆலோசனைக் குழுக்களும்' (Committees) அமைக்கப்பட்டுள்ளன. செய்யப் பட வேண்டிய பணிகள் யாவும் முறையாக குழுக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. திட்டக்குழு உறுப்பினர்களின் தகுதிப் படி வேலைகளை பகிர்ந்தளிக்கின்றது. உறுப்பினர்கள் யாவரும் பள்ளிக்கூடங்கள், சலவை நிலையங்கள், சமையலறைகள் போன்றவற்றிலும் பணி புரிகின்றனர். பெரும்பாலும் கணிசமான உறுப்பினர்கள் விவசாயத்தில் தான் ஈடுபடுத்தப்படுகின்றனர். விவசாயம் இயற்கை நிலைகளை ஒட்டியே பெரும்பாலும் அமைவு

தால், அந்தந்த நிலத்தின் வளத்திற்கேற்பக் கால்நடைத் தீவனம் (Fodder Crops), நவதானியங்கள் (Cereals), பழவகைகள், காய் கறிகள் முதலானவை பயிர் செய்யப்படுகின்றன, ஆடுமாடுகள் பெரும்பாலும் எல்லோராலும் வளர்க்கப்படுவதால் பால், பால் பொருள்கள் முதலானவற்றின் உற்பத்தியும் கணிசமாக உள்ளது. நவீன வசதிகளுடன் பல கோழிப் பண்ணைகளும் அமைக்கப்பட்டுள்ளன. செயலாற்றிவரும் எல்லா நிறுவனங் களும் மக்களின் முன்னேற்றத்திற்கே உழைக்கின்றன. குறைந்த அளவில் ஆட்டுப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. மத அடிப்படையில், பன்றிகள் வளர்க்கப்படுவதில்லை. விவசாயத் திற்குத் தேவையான நீர்ப்பாசன வசதிகள் இந்நாட்டில் போது மானதாக இல்லை. குழாய்க்கிணறுகள் அதிகமாக அமைக்கப்படு வதால் செலவுத் தொகை கணிசமாக உயர்ந்தே உள்ளது. இவ்வாறு முறையான நீர்ப்பாசன வசதிகளைக் கொண்டு வளம் மிக்க நாடாகத் திகழ்கின்றது இஸ்ரேல். பயிரிடும் முறைகளும் சூழ்நிலைகளுக்கேற்பக் குடியிருப்புகளிடையே மாறுபட்டுள்ளது.

இக் கூட்டுக் குடியிருப்புச் சங்கங்கள் அரசியல் கட்சிகளுட னும், சில தருணங்களில் மதச்சார்புள்ள கட்சிகளுடனும் தொடர்பு கொண்டு ஏற்ற பணிகளை எளிதாக முடிக்கின்றன. சில குடியிருப்புச் சங்கங்கள் பெருமளவில் திட்டமிட்டுக் காலணி கள், மரச்சாமான்கள், உணவுப் பொருள்கள், மின்சாரக் கருவி கள், விவசாயக் கருவிகள் முதலானவற்றைச் சிறந்த முறையில் தயாரிக்கின்றன.

1967-ஆம் ஆண்டில் 225 குடியிருப்புச் சங்கங்கள் ஓர் இலட்சம் உறுப்பினர்களைக் கொண்டு பணியாற்றி வந்தன. நான்கு இலட்சம் ஏக்கர் விளை நிலம் இச்சங்கங்களுக்குச் சொந்த மானதாக உள்ளது. மொத்த விவசாயப் பொருட்களின் உற்பத்தியில் 28 சதவிகிதம் இக்குடியிருப்புச் சங்கங்களினால் உற்பத்தி செய்யப்படுகின்றது. இஸ்ரேலின் இக்கூட்டு விவசாய முறை சோவியத் நாட்டின் கூட்டுப் பண்ணை முறையை விடத் தீவிரமானதாக உள்ளது என்றால் அது மிகையாகாது.

கூட்டுக் குடியிருப்புகளின் நோக்கங்கள்

இஸ்ரேலின் கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் இக்கூட்டுக் குடி யிருப்புகள் முறையாக பதிவு செய்யப்படுகின்றன. இக்குடி யிருப்புகளின் நோக்கங்களாவன:

1. கூட்டுப் பண்ணை விவசாயத்தை உருவாக்கி நல்ல முறை யில் நிர்வகித்தல்;

2. குடியிருப்புகளின் விவசாயப் பணிகளையும், பிற வேலைகளையும் மேற்கொள்ளுதல் ;

3. பல்வேறு தொழில்களைக் குடியிருப்புகளில் தோற்றுவித்தல் ;

4. விளைபொருள்களுக்குச் சிறந்த முறையில் விற்பனையேற்பாடு செய்தல் ;

5. குடியிருப்பு உறுப்பினர்களுக்குத் தேவையான பொருட்களை முறையாகக் கொள் முதல் செய்தல் ;

6. உறுப்பினர்களுக்குத் தேவையான உணவு, உடை, இருப்பிடம் முதலானவற்றை முறையாக வழங்குதல் ;

7. உறுப்பினர்கள் தங்களது பொருளாதார, கலாச்சார நிலையை உயர்த்துவதற்கு உறுதுணையாக இருத்தல் ;

8. பள்ளிக் கூடங்கள், மருத்துவ மனைகள் போன்றவற்றை உறுப்பினர்கள் நலன் கருதி அமைத்தல்.

மேற் கூறியுள்ள சீரிய நோக்கங்களைக் கொண்டு இக்குடியிருப்புகள் விளங்குவதால் உறுப்பினர்கள் மிகுந்த நன்மை பெறுகின்றனர். யூதர்கள் மட்டுமே இச்சங்கங்களில் உறுப்பினர்களாக அனுமதிக்கப்படுகின்றனர். பதினேழு வயது வந்த ஆண் பெண் எவரும் இச்சங்கத்தின் உறுப்பினராகத் தடையின்றி முடிகின்றது.

அடிப்படைக் கொள்கைகள்

உயர்ந்த நோக்கங்களைப் போலவே சிறந்த கொள்கைகளைக் கொண்டு அமைக்கப்பட்டவையாகும் இக்கூட்டுறவுக் குடியிருப்புகள், கீழ் கொடுக்கப்பட்டுள்ள கொள்கைகளை அடித்தளமாகக் கொண்டே இக்குடியிருப்புகள் செயலாற்றி வருகின்றன.

1. இக்குடியிருப்பில் நிலங்கள் யாவும் அரசிற்குச் சொந்தமாக உள்ளதால் உறுப்பினர்கள் தேவையான அளவு நிலத்தைப் பெற்று வாழ்க்கை நடத்துகின்றனர்.

2. உறுப்பினர்கள் யாவரும் 'சுய உழைப்பில்' (Self-Labour) வாழ்வதற்கு வழி செய்யப்பட்டுள்ளது. வழங்கப்பட்டுள்ள நிலத்தில் முறையாக வாழ்க்கை நடத்துகின்றனர் உறுப்பினர்கள்,

3. குடியிருப்பின் சொத்துகள் யாவருக்கும் சொந்தமானதாகக் கருதப்படுவதால் 'தனி உடைமை' என்ற சொல்லுக்கே இங்கே இடமில்லை.

4. பொருள்களின் உற்பத்தியும் (Production) 'நுகர்வு'ம் (Consumption) கூட்டாக நடைபெறுகின்றன.

5. முறையாகக் கல்வியைப்போதித்தலும், சிறப்புறக் குழந்தைகளை வளர்த்தலும் இக்குடியிருப்பின் சிறந்த கொள்கையாகும்.

6. விவசாயமும் கூட்டு முயற்சியிலேயே செய்யப்படுகின்றது.

7. உறுப்பினர்கள் யாவரும் தங்கள் சக்திக்கேற்ப உழைக்கவும், தேவைக்கேற்பப் பொருட்களைப் பெறவும் வழி செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வோர் உறுப்பினரும் தமது சொந்த உடைமைகளை (உடைகள், காலணிகள், சோப்புபோன்ற பொருள்கள் நீங்கலாக) குடியிருப்புச் சங்கத்திடமே உறுப்பினராகும் போது வழங்கிவிடுகின்றனர். உறுப்பினராக அங்கீகரிக்கப்பட்ட நாளிலிருந்தே, உறுப்பினர்களுக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் வேற்றுமையின்றி இக்குடியிருப்புச் சங்கம் வழங்கி வருகின்றது. எனவே உறுப்பினர்கள் பெரும்பாலும் பணத்தை நாடுவதே இல்லை.

குடியிருப்பின் அமைப்பு
(Lay-out of The Settlement)

நவீன முறையில் திட்டம் தீட்டப்பட்டுக் குடியிருப்புகள் அமைக்கப்படுகின்றன. சிறந்த முறையில் வரை படங்கள் முதலில் வரையப்பட்டு அதன்படி கட்டடங்கள் கட்டப்படுவதால் குடியிருப்புகள் அழகுற விளங்குகின்றன. உறுப்பினர்களின் வீடுகள் குடியிருப்பின் மத்தியில் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு குடியிருப்பிலும், புல் வெளிகள், தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள், சிறு சிறு காடுகள் முதலானவை இடம் பெறுகின்றன. இவை மட்டுமின்றி, உறுப்பினர்களுக்காக வீடுகளை ஒட்டிக் குளியலறைகள், சமையலறைகள், சலவை நிலையங்கள், சிறுவர் இல்லங்கள், பண்டகசாலைகள் முதலானவையும் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, ஒவ்வொரு குடியிருப்பும் எல்லா வசதிகளைக் கொண்டு சிறப்புற விளங்குகிறது.

நிருவாகம் (Administration)

ஒவ்வொரு குடியிருப்பின் நிருவாகமும் உறுப்பினர்களால் உருவாக்கப்படும் 'பொதுச் சபையின்' (General Assembly) நேரடிக் கண்காணிப்பில் உள்ளது. உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவதும், விலக்கப்படுவதும் பொதுச் சபையின் முடிவைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றது.

பொதுச் சபைக்கு உதவியாக ஒரு 'நிருவாகக் குழுவும்' (Managing Committee) அமைக்கப்பட்டுள்ளது. ஆறு அல்லது அதற்கு அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட இக்குழு பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.

இவை மட்டுமின்றி, பல 'துணைக் குழுக்களும்' (Sub-Committees) அமைக்கப்பட்டுள்ளதால் நிருவாக இயந்திரம் பழுதுபடாமல் செவ்வனே செயல்பட முடிகின்றது. உறுப்பினர்கள் ஆற்ற வேண்டிய பணிகளை முறையாகப் பகிர்ந்தளிப்பவை இக்குழுக்களேயாகும். 'துணை நிதிக்குழு' (Finance Sub-Committee) வீட்டு வசதித் துணைக்குழு போன்றவை உறுப்பினர்களின் பணிகளையும், உழைப்பையும் சிதறி விடாமல் பாதுகாக்கின்றன. முறையாகப் பயிற்சி பெற்ற நிருவாகிகளே பொதுச் சபையால் நியமிக்கப்படுகின்றனர். நிருவாகிகளின் திறமைமிக்க நிருவாகத்தால், எண்ணங்கள் எளிதாக ஈடேறுகின்றன.

இவ்வாறாக, இக்கூட்டுக் குடியிருப்புகள் (Kibbutz) சிறந்த முறையில்அமைக்கப்பட்டு, நிருவகிக்கப்படுவதால் உறுப்பினர்கள் யாவரும் நலமுடன் வாழ்கின்றனர். இராபர்ட் ஓவன் (Robert Owen), லூயிஸ் ப்ளாங் (Louis Blanc) போன்ற சிறந்த கூட்டுறவாளர்கள் கண்ட கனவுகள் இக்கூட்டுக் குடியிருப்புகள் மூலம் பெருமளவில் நனவாகியுள்ளன என்றால் அது மிகையாகாது.

வெற்றிக்கான காரணங்கள்

பாலஸ்தீனத்தில் அமைந்த இக்கூட்டுக் குடியிருப்புகள் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளதை எவரும் மறுக்க முடியாது. இக்கூட்டுக் குடியிருப்பு செயல்படும் முறையை உலக மக்கள் பலரும் நேரில் கண்டு வியந்தபடியே உள்ளனர். இனி இப்பெரு வெற்றிக்கான காரணங்களைக் காண்போம்.

1. தொடக்கத்தில் இந்நாட்டில் 'நிலப்பிடி முறை' (Land Tenure System) இல்லையாதலால், குடியேறிய மக்கள் அனைவரும்

யாதொரு இடர்ப்பாடுமின்றி விவசாயத் தொழிலை மேற்கொண்டனர். மண்வளம் நிறைந்த புதிய நிலமாகையால் எண்ணியவை எண்ணியவாங்கு நடைபெற்றன.

2. இயற்கையிலேயே மன உறுதியும், அறிவாற்றலும் நிறைந்த யூதமக்கள் கூட்டுறவு முறையில்தான் விளைச்சலை உயர்த்த முடியும் என்பதைத் தொடக்கத்திலேயே அறிந்து கொண்டு உழைத்தமையால் வெற்றிக் கனி இவர்களது கைகளில் தானுகவே விழுந்தது.

3. தொடக்கத்தில் பல இடர்ப்பாடுகள் தோன்றிய போது, யூதர்கள் பிரச்சினைகளைக் கண்டு துவண்டு விடாமல் மனவலிமையுடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டனர். முதலீடு செய்த பணத்தை விரயம் செய்துவிடாமல், பொறுமையுடன் உழைத்தமையால் வெற்றி இவர்களை நாடி வந்தது.

4. மத அடிப்படையிலும் ஒன்றுபட்ட யூதமக்கள் ஒற்றுமையுடன் வாழ்வதற்குத் தடையேது? எனவே, இவர்களது மதக் கோட்பாடுகளும் வெற்றிற்கான காரணங்களில் ஒன்ருக உள்ளது.

5. மேற்கூறியுள்ள காரணங்கள் மட்டுமின்றி, குடியேறிய நாட்டை எப்படியாவது பொருளாதார ரீதியில் உயர்த்த வேண்டுமென்று அவர்கள் கொண்டிருந்த ஆர்வம், அவர்கள் கொண்டிருந்த தொழில் நுட்ப அறிவு, சிறந்த நிருவாகம், தங்களை அரேபியர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்ற நியாய உணர்வு போன்றவையும் வெற்றிக்கனியை எளிதில் கொய்யக் காரணமாக அமைந்தன என்பதில் யாதோர் ஐயப்பாடுமில்லை.

4. கலப்புக் கூட்டுக் குடியிருப்புகள் (Moshav Shituz):

கூட்டுக் குடியிருப்புகள் (Kibbutz), சிறு நில உரிமையாளர் கூட்டுறவுக் குடியிருப்புகள் (Moshav Ovdim) ஆகிய இரு குடியிருப்புகளின் தொகுப்பு அல்லது சேர்க்கையே (Combination) இக்கலப்புக் கூட்டுக் குடியிருப்புகளாகும். எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருப்பினும், இவ்வகைக் குடியிருப்புகள் வெகு வேகமாக முன்னேறி வருகின்றன.

இக்குடியிருப்பில், உறுப்பினர்கள் தங்கள் நிலத்தை ஒன்ருகச் சேர்த்துக் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்கின்றனர். நிலங்

களுக்கிடையே உள்ள தடைகள் யாவும் நீக்கப்படுவதால் இயந்திரங்களைக் கொண்டு விவசாயம் செவ்வனே நடைபெறுகிறது. எனவே பொருளாதார, சமூகப் பணிகளில் உறுப்பினர்கள் கூட்டுறவு முறையில் செயல்படுகின்றனர். உறுப்பினர்கள் தன்னலமின்றி உழைப்பதால் இக்குடியிருப்பு எளிதில் உயர முடிகின்றது. இத்தகைய பணிகளில் உறுப்பினர்கள் கூட்டுறவு முறையில் ஒற்றுமையாக உழைத்தாலும், அவர்களது தனி வாழ்க்கை தனித்தே நிற்கின்றது. இவர்கள் தங்கள் விருப்பப்படி வீடுகளை அமைத்துக் கொண்டு தங்கள் விருப்பம் போல உணவு, உடை போன்றவற்றில் தன்னிச்சையாகத் தனித்தே வாழ்கின்றனர். வாழ்க்கை உயரக் கூட்டுறவு முறையில் ஒன்றுகூடி உழைக்கின்றனர். சலியா உழைப்பின் பலனைப் பெறும் ஊதியத்தைத் தங்கள் எண்ணப்படி செலவிட்டு நலமுடன் வாழ்கின்றனர். தங்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக ஒன்று கூடி உழைக்கும் மக்கள், தங்கள் இனிய வாழ்க்கை வசதிகளைத் தனித் தனியாகத் துய்க்கின்றனர். எனவே, ஏனைய குடியிருப்புகளிலிருந்து இக்கலப்புக் கூட்டுக் குடியிருப்பு வேறுபட்டு நிற்கின்றது. சிறந்த கொள்கைகளைக் கொண்டுள்ளதால் இக்குடியிருப்பு பலராலும் பாராட்டப்படுகின்றது,

இக்குடியிருப்பைச் சேர்ந்த உறுப்பினர்களும் தங்களுக்குத் தேவையான நிலத்தை அரசாங்கத்திடமிருந்தோ அல்லது தேசிய நிதி அமைப்பிடமிருந்தோ பெற்று, விவசாயத் தொழிலில் ஈடுபடுகின்றனர். கூட்டு முயற்சியினால் ஏற்படும் நன்மைகளை உறுப்பினர்கள் யாவரும் பகிர்ந்து கொள்கின்றனர். உறுப்பினர்களுக்கு வேற்றுமையின்றிச் சமமாக வருமானம் பிரித்தளிக்கப்படுவதால் கருத்து வேறுபாடுகள் எழுவதில்லை. உறுப்பினர்களுக்கு வீடுகள் முதலான எல்லா வசதிகளும் அவர்கள் விருப்பப்படி அளிக்கப்படுவதால் அவர்களது குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியாக அமைந்துள்ளது. இக்குடியிருப்பின் நிருவாகம் ஏறக்குறைய ஏனைய குடியிருப்புகளின் நிருவாகத்தை ஒத்தே உள்ளது. இக்கலப்புக் குடியிருப்புகள் இஸ்ரேலின் கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்களெனப் பதிவு செய்யப்படுகின்றன. குடும்பச் செலவுக்கென 'படி' (Allowance) அளிக்கப்படுவதால், உறுப்பினர்கள் தங்கள் விருப்பப்படி செலவு செய்து மகிழ்வுடன் வாழ்கின்றனர். தற்போது, சுமார் 17 கலப்புக் குடியிருப்புகள் இந்நாட்டில் பணியாற்றி வருகின்றன. இவ்வகைக் குடியிருப்புச் சங்கங்கள் மக்களிடையே நல்ல ஆதரவைத் தற்போது பெற்று வருவதால், இவைகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் உயர்ந்து வருகின்றது. இக்கலப்புக் குகுயிருப்புகள் ஏறக்குறைய

சோவியத்து நாட்டைச் சேர்ந்த 'கோல்கோசு' (Kolkhozes) என்ற அமைப்பை ஒத்துள்ளன.

இக்கலப்புக் குடியிருப்புகளும் இஸ்ரேலின் பெருமையை உயர்த்தியே உள்ளன. இக்குடியிருப்பில் வாழும் உறுப்பினர்கள் நலமுடன் வாழ்வதால், உலக நாடுகள் யாவும் இஸ்ரேலைக் கூர்மையாகவும், நுட்பமாகவும் கவனித்து அதன் மூலம் நன்மை பெறப் பெரிதும் விரும்புகின்றன. இக்குடியிருப்புகள் அரசாங்க உதவிகளையும் அவ்வப்போது பெறுவதால் எளிதாக இயங்க முடிகின்றது.

இதுவரை, இஸ்ரேலில் அமைந்துள்ள குடியிருப்பு வகைகளைப்பற்றி ஆராய்ந்தோம். இனி, தற்போதைய கூட்டுறவு இயக்க வளர்ச்சி பற்றிக் காண்போம்.

1968–ஆம் ஆண்டு தொடக்கத்தில், 1953 கூட்டுறவுச் சங்கங்கள் தொண்டாற்றி வந்தன. அவற்றுள் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் 1009 ஆகும். எண்ணிக்கையில் கணிசமாக உயர்ந்து வருவது 'விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களேயாகும் (Agricultural Co-operatives). அதே ஆண்டில், மனை வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் (Housing Societies) எண்ணிக்கை 328 எனவும், போக்குவரத்துச் சங்கங்கள் (Transport Societies) 237 எனவும் கணக்கிடப்பட்டுள்ளன. காப்பீட்டுக் கழகங்கள் (Provident Fund Societies), நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் முறையே 191,51 ஆகும். இந்நாட்டின் பொருளாதார உயர்விற்கு இக்கூட்டுறவுச் சங்கங்களே காரணமாகும். நாட்டுப் பொருளாதாரத்தில் 28 சதவிகிதம் கூட்டுறவுச் செயல்களால் (Co-operative Activities) நிறைவேற்றப்படுகின்றது. விவசாயத்துறையில், 75 சதவிகித உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தே அமைந்துள்ளது. விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களும் இந்நாட்டில் மிகக் குறைவாக உள்ளன. வேளாண்மைத் துறையில் சேவை புரிந்து வரும் இதர கூட்டுறவுச் சங்கங்களாவன :

(1) நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் (Irrigation Societies) தற்போது இச்சங்கங்களின் எண்ணிக்கை 129 ஆகும்.

(2) பொது வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் ...136
(General Agricultural Societies)

(3) பரஸ்பர விவசாயக் காப்புறுதிச் சங்கங்கள் – 6
(Mutual Agricultural Insurance Societies)

(4) விவசாய விற்பனை யேற்பாட்டுச் சங்கங்கள்...26
(Agricultural Marketing Societies)

இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் ஆற்றிவரும் சிறந்த பணி களால்தான் இஸ்ரேல் இன்று நலமுடன் திகழ்கின்றது.

இஸ்ரேலின் கூட்டுக் குடியிருப்பிற்கும் (Kibbutz)சோவியத்து நாட்டின் கூட்டுப்பண்ணைக்கும் (Collective Farms or Kolkhozes) உள்ள வேறுபாடுகளைக் காணுவிடில், இந்நாட்டுக் கூட்டுறவு இயக்க வரலாறு நிறைவு பெருதாகையால் இனி அவ்வேறுபாடு களைக் காண்போம்.

1. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் குடியேறிய யூத மக்களுக்கு இருப்பிடம் அளிப்பதற்காக உருவாக்கப்பட்டதே இஸ்ரேலின் கூட்டுக் குடியிருப்புகளாகும் (Kibbutz). ஆனல் விவசாயத் துறையில் இயந்திர சாதனங்களைப் பயன்படுத்துவதற் காகவும், விவசாய உற்பத்தியை உயர்த்துவதற்காகவும் உருவாக்கப்பட்டதே சோவியத் நாட்டின் கூட்டுப்பண்ணையாகும் (Kolkhozes). இந்நாட்டு விவசாயத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்ட தற்கு இக்கூட்டுப் பண்ணைகளே காரணமாகும்.

2. இஸ்ரேலின் கூட்டுக் குடியிருப்பில், உறுப்பினர்கள் தங்களுக்குத் தேவையான நிலத்தை 49 வருடங்களுக்குக் குத்தகை முறையில் பெற்று விவசாயம் செய்கின்றனர். ஆனல், சோவியத்து நாட்டில் ‘நிலப்பிடி முறை’ (Tenure) உள்ளதால் உறுப்பினர்கள் நிலத்தைச் சொந்தமாகப் பெறுதல் இயலாது. நில உரிமை முழுவதும் அரசின் கைகளில் உள்ளது.

3. இஸ்ரேலின் கூட்டுக் குடியிருப்பில் வயது வந்த யூதர்கள் மட்டுமே உறுப்பினர்களாக முடியும். ஆனல் சோவியத்து நாட்டில் வயதுவந்த எவரும் கூட்டுப்பண்ணையில் உறுப்பினராகச் சேர்ந்து பணியாற்ற முடியும்.

4. இஸ்ரேலின் கூட்டுக் குடியிருப்பில் வெளியார் தலையீடு ஏதுமின்றிக் காரியங்கள் நடைபெறுகின்றன. இக்குடியிருப்பு சுதந்திரமாக இயங்கும் ஓர் அமைப்பாகும். ஆனல், சோவியத்து நாட்டின் கூட்டுப்பண்ணைகள் அரசாங்கத்தின் நேரடிப் பார் வையில் இயங்கி வருவதால் இங்குக் கட்டுப்பாடுகளும், விதிமுறை களும் அதிகமாக உள்ளன. இதன் பயனக நிருவாகத்தில் தவறுகள் எளிதில் ஏற்படுவதில்லை.

5. இஸ்ரேலின் கூட்டுக் குடியிருப்பில் உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்கப்படுவதில்லை. அவர்களது எல்லாத் தேவைகளும் குடியிருப்புச் சங்கத்தினால் நிறைவேற்றப்படுகின்றன. ஆனால் சோவியத்து நாட்டில் உறுப்பினர்கள் யாவரும் தாங்கள் உழைத்த நாட்களின் அடிப்படையில் ஊதியம் பெறுகின்றனர்,

6. இஸ்ரேலின் கூட்டுக் குடியிருப்பில், சோவியத்து நாட்டில் இருப்பதைப் போலக் கடினமான கட்டுப்பாடுகளும், விதிமுறைகளும் இல்லை.

7. இஸ்ரேலின் இக்குடியிருப்பு தானாகவே தேவைகளை முன்னிட்டு உருவான ஒரு சமுதாய அமைப்பாகும் ஆனால் சோவியத்து நாட்டின் கூட்டு பண்ணைகள் அரசாங்கத்தின் தீவிரத் திட்டங்களினால் உருவாக்கப்பட்டவையாகும்.

எனவே, சோவியத்து நாட்டின் கூட்டுப் பண்ணைகள் பல வகையிலும் இஸ்ரேலின் கூட்டுக் குடியிருப்புகளிலிருந்து வேறுபட்டு நிற்கின்றன.

மிகச் சிறிய நாடாக இஸ்ரேல் விளங்கினாலும், அளவில் பெரிய பல நாடுகளுக்கு வழிகாட்டியாக இன்று திகழ்கின்றது. சிதறிக்கிடந்த யூதர்களுக்குப் புகலிடம் அளித்து அவர்களைச் சிறப்புற வாழவைத்த பெருமை இந்நாட்டிற்கு உண்டு. அதை மறவாத மக்கள் பலவகையிலும் இஸ்ரேலை உலக அரங்கில் உயர்த்தியே வருகின்றனர். விவசாயம் மிகப் பழைய தொழிலானாலும் இந்நாட்டில் குடியேறிய யூதமக்களால் புதிதாகத் தொடங்கப்பட்டதால் மண்ணும் பொன்னாக மாறத்தொடங்கியது. எழுதாத கரும்பலகையில் எழுதுவது எளிதான செயல்தானே! எழுதத் தெரிந்த மக்கள் கூட்டுறவு என்னும் எழுது கோலைக் கொண்டு சிறப்பாக எழுதி விட்டார்கள்!

கலைச் சொற்கள்

[ஆங்கிலம்—தமிழ்]

A

Administration	— பொது நிருவாகம்
Agent	— முகவர்
Agency	— பதிலி, பதிலாண்மை, முகமை
Agricultural Co-op. Associations	— விவசாயக் கூட்டுறவுக் கழகங்கள்
Agricultural Economic Researeh Institute	— விவசாயப் பொருளாதார ஆராய்ச்சி மன்றம்
Agricultural Producers' Co-operatives	— விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
Agricultural Finance Federation	— விவசாய நிதிக் கூட்டமைப்பு
Agricultural Marketing Socs.	— விவசாய விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள்
Agricultural Organisation Soc.	— கூட்டுறவு விவசாய அமைப்புச் சங்கம்
Allowance	— படி
Area of Operations	— செயற்பாட்டுப் பகுதி, செயல்படும் எல்லை
Arithmetic Ratio	— எண்வளர்ச்சி விகிதம்
Articles	— நடைமுறை விதிகள்
Assets	— சொத்துக்கள்
Auction	— ஏலம்
Audit	— தணிக்கை
Arbitrator	— இசைவுத் தீர்ப்பாளர்

B

Bad Debts	— வராக் கடன்
Basic Fund	— அடிப்படை நிதி
Board of Directors	— இயக்குநர் அவை

Board — வாரியம்
Board of Management — நிருவாக அவை
Bonus — மேலூதியம்
Book Value — கணக்கேட்டு மதிப்பு
Borrowed Capital — கடன் பெற்ற முதல்
Broker — தரகர்
Bill-of-Exchange — மாற்றுச்சீட்டு

C

Cash Sales — ரொக்க விற்பனை
Capital Investments — மூலதன முதலீடுகள்
Central Co-op. Bank — மத்தியக் கூட்டுறவு வங்கி
Central Marketing Soc. — மத்திய விற்பனையேற்பாட்டுச் சங்கம்
Central Organisation — மத்திய அமைப்பு
Chief Executive Officer — தலைமைச் செயற்குழு அலுவலர்
Chief Registrar — தலைமைப் பதிவாளர்
Collective Farming — கூட்டுப்பண்ணை விவசாயம்
Commercial Banks — வணிக வங்கிகள்
Commission Contract Basis — கழிவு ஒப்பந்த அடிப்படை
Compensation — நிறையீடு
Consumers' Co-op. Refineries — நுகர்வோர் கூட்டுறவுச் சுத்திகரிப்புச் சாலைகள்
Consumers' Co-op. Retail Socs. — நுகர்வோர் கூட்டுறவுச் சில்லறை விற்பனைக் கழகங்கள்
Consumption — நுகர்வு
Consumers' Stores — நுகர்வோர் பண்டகசாலைகள்
Confiscation — பறிமுதல்
Contracts — ஒப்பந்தங்கள்
Consignment — அனுப்பீடு
Co-operative Credit Unions — கூட்டுறவுக் கடன் சங்கங்கள்
Co-operative Development Foundation Fund — கூட்டுறவு நிதி வளர்ச்சி நிறுவனம்
Co-operative Permanent Building Soc. — கூட்டுறவு நிரந்தரக் கட்டிடச் சங்கம்

Co-operative Printing Soc. — கூட்டுறவு அச்சுத் தொழில் சங்கம்
Co-operative Production Federation — கூட்டுறவு உற்பத்திக் கூட்டிணைப்பு
Co-operative Banking — கூட்டுறவு வங்கியியல்
Co-operative Credit Movement — கூட்டுறவுக் கடன் இயக்கம்
Co-operative Character — கூட்டுறவுத் தன்மை
Co-operative Dairy — கூட்டுறவுப் பால் பண்ணை
Co-operative Meat Marketing Soc. — கூட்டுறவு இறைச்சி விற்பனை யேற்பாட்டுச் சங்கம்
Corporation — கூட்டுரு
Credit — பற்றுவழி, நாணயம், கடன்
Credit Worthiness — நாணயத் தகுதி
Council — மன்றம், ஆலோசனை சபை
Creamery Societies — பால்-வெண்ணெய்-பாலேட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள்
Current Account — நடப்புக் கணக்கு
Commission Agent — தரகு முகவர்
Co-operative Acts — கூட்டுறவுச் சட்டங்கள்
Companies Act — பங்கமைப்புச் சட்டம், கம்பெனிச் சட்டம்
Capital — மூலதனம்
Consortium — கூட்டிணைப்பு

D

Debenture — கடனீட்டுப் பத்திரம்
Decree — தீர்ப்பாணை
Department — பிரிவு, இலாகா
Departmental Store — பல பிரிவுப் பண்டகசாலை
Deposit — வைப்புத் தொகை, தொகை வைப்பு
Deposit Account — வைப்புக்கணக்கு
Demand — கேட்பு, தேவை
Discounting Bill of Exchange — மாற்றுச்சீட்டு தள்ளுபடி செய்வது
District Committees — மாவட்டக் குழுக்கள்

District Consumers' Co-operative Union — மாவட்ட நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம்
District Organisations — மாவட்ட அமைப்புகள்
Division of Labour — வேலைப் பகுப்பு
Dividend — இலாப ஈவுத் தொகை, பங்கு ஆதாயம்
Department of Agricultural Settlement — விவசாயக் குடியேற்ற இலாகா
Doctrine of Circumstances — சூழ்நிலைகளின் சித்தாந்தம்
Definition — இலக்கணம்

E

Egg Drying Factory — முட்டை உலர்த்தும் தொழிற் சாலை
Elasticity of Demand — தேவை நெகிழ்ச்சி
Export Council — ஏற்றுமதிக் குழு

F

Fertilisers — உரங்கள்
Field Brigade — நிலத் தொழிலாளர் படை

G

General Assembly — பொதுச்சபை
General Body — பொது மன்றம்
General Insurance Soc. — பொதுக் காப்புறுதிச் சங்கம்
General Union — பொது இணைப்புச் சங்கம்
Geometric Ratio — இரட்டிப்பு விகிதம்
Grain Growers' Association — தானியப் பயிரிடுவோர் சங்கம்
Grant — மானியம்
Guarantee — பொறுப்புறுதி
Guaranteed Amount — உத்தரவாதத் தொகை

H

Handicrafts Artels — கைத்தொழில் கூட்டுறவு அமைப்புகள்
Heavy Industries — கனரகத் தொழில்கள்
Hedging — நட்டத் தடைப் பேரம்
Hedging Contract — நட்டத் தடைப் பேர ஒப்பந்தம்

Horticulture	—	தோட்டக்கலை
Hours of Work	—	வேலைக் கால அளவு

I

Individual Farming	—	தனியார் விவசாயம்
Industrial Co operatives	—	தொழிற் கூட்டுறவுச்சங்கங்கள்
Industrial Co-operative Law	—	தொழிற் கூட்டுறவுச் சட்டம்
Industrial Revolution	—	தொழிற் புரட்சி
Insecticides	—	பூச்சிக் கொல்லி மருந்துகள்
Insurance	—	காப்பீடு, காப்புறுதி
Insurance Company	—	காப்புறுதிப் பங்கமைப்பு
International Co-op. Alliance	—	சர்வதேசக் கூட்டுறவு ஒன்றிப்பு
Integration	—	இணைப்பு, ஒருமைப்பாடு
Irrigation Socs.	—	நீர்ப்பாசனச் சங்கங்கள்
Insolvency	—	நொடிப்பு நிலை

J

Joint Purchase	—	கூட்டுக் கொள்முதல்
Joint-Stock Company	—	பங்கமைப்பு, கம்பெனி

L

Labour Notes	—	உழைப்புக் குறிப்புச் சீட்டு
Labour Colony	—	தொழிலாளர் குடியிருப்பு
Land Development	—	நில வளர்ச்சி
Large-scale Industries	—	பேரளவுத் தொழில்கள்
Land Mortgage Banks (Land Development Banks)	—	நில அடைமான வங்கிகள் (நில வள வங்கிகள்)
Land Tenure System	—	நிலப் பிடிமுறை
Law of Diminishing Returns	—	குறைந்து செல் விளைவு வதி
League of Nations	—	சர்வதேச சங்கம்
Liabilities	—	பொறுப்புகள்
Limited Liability	—	வரை நிலைப் பொறுப்பு
Livestock Pools	—	கால் நடைத் தொழில் திரட்டுகள்
Livestock Co-operatives	—	கூட்டுறவுக் கால் நடைச் சங்கம்
Loan	—	கொடுகடன், கடன்
Loan and Savings Soc.	—	கடன்—சேமிப்புச் சங்கம்

Local Societies — உள்ளூர்ச் சங்கம்
Local Savings Bank — உள்ளூர்ச் சேமிப்பு வங்கி
Loans Outstanding — செலுத்த வேண்டிய கடன்
Long-term Loan — நீண்ட காலக்கடன்.

M

Machine Tractor Stations — உழும் இயந்திர நிலையங்கள்
Manager — நிருவாகர், மேலாளர்
Management — நிருவாகம், செயலாட்சி
Managing Secretary — நிருவாகச் செயலாளர்
Managing Committee — நிருவாகக் குழு
Marketing — விற்பனையேற்பாடு
Manure — எரு
Miners' Society — சுரங்கத் தொழிலாளர் சங்கம்
Middlemen — இடை நிலையர்கள்
Milk Pools — பால் தொழில் திரட்டு
Money-lenders — வட்டித் தொழிலர்
Monopoly — விற்பனை முற்றுரிமை
Multi-Purpose Co-operauive Soc. — பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
Mutual Agricultural Insurance Soc. — பரஸ்பர விவசாயக் காப்புறுதிச் சங்கம்
Mutual Aid Teams — பரஸ்பர உதவிக்குழுமங்கள்.

N

National Congress — தேசியப் பேராண்மைக் கழகம்
Notional Grange — தேசிய விவசாயப் பண்ணை
National Income — நாட்டு வருமானம்
National Marketing Association — தேசிய விற்பனையேற்பாட்டுக் கழகம்
National Purchase Co-op. Federation — தேசியக் கொள்முதல் கூட்டுறவுக் கூட்டிணைப்பு
National Union of Agricultural Co-operatives — தேசிய விவசாயச் சங்கங்களின் இணைப்புச் சங்கம்
National Wholesale Co-operative Agency — தேசிய மொத்த விற்பனைக் கூட்டுறவுப் பதிலான்மை
Net Profit — நிகர இலாபம்
New Economic Policy — புதிய பொருளாதாரக் கைக்கோள்
Non-Trade Property — வணிகத் தொடர்பற்ற சொத்து

O

Objects — நோக்கங்கள்
Open Membership — எவரும் உறுப்பினராகும் நிலை
Outstanding Debt — செலுத்த வேண்டிய கடன் தொகை

P

Panel — பெயர்ப் பட்டியல்
Part-time Secretary — குறை நேரத்திற்குரிய செயலர்
Partner — கூட்டாளி
Pass Book — செல்லுப் புத்தகம்
Premium — கட்டணத்தொகை, முனைமம்
Primary Co-operative Societies — தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள்
Price Policy — விலைக் கைக்கோள்
Principle of Equity — தகைமை முறை
Privilege — சிறப்புரிமை
Progress Sheet — வளர்ச்சிக்குறிப்பு
Processing Factories — பதப்படுத்தும் தொழிற் சாலைகள்
Producers' Team — உற்பத்தியாளர் குழுமம்
Purchasing Co-operative — கொள்முதல் கூட்டுறவுச் சங்கங்கள்
Public Body — பொதுச்சபை
Plywood Plant — ஓட்டுப்பலகைத் தொழிற்சாலை
Profit-sharing Basis — இலாபப் பங்கீடு அடிப்படை

R

Rate of Interest — வட்டி விகிதம்
Raw Materials — மூலப் பொருட்கள்
Regional Marketing Associations — பிரதேசு விற்பனையேற்பாட்டுக் கழகங்கள்
Regional Warehouse — பிரதேசப் பண்டகங்கள்
Refineries — சுத்திகரிப்புச் சாலைகள்
Regional Consumers' Co-op, Union — பிரதேச நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம்
Reserves — காப்பிருப்புகள்
Right — உரிமை
Remedies — பரிகாரங்கள்

Remedial Measures — தீர்வழி நடவடிக்கைகள்
Retail Trade — சில்லறை வணிகம்
Reserve Fund — காப்பு நிதி
Revolving Credit System — சுழற்கடன் வசதி
Rural Societies — கிராமச் சங்கங்கள்

S

Scarcity — கிடைப்பருமை
Section — பிரிவு
Seri-Culture — பட்டுப் பூச்சி வளர்த்தல்
Secured Loan — ஈடுடைக்கடன்
Serviee Co-operatives — கூட்டுறவுச் சேவைச் சங்கங்கள்
Service Stations — சேவை நிலையங்கள்
Sellers' Market — விற்போர் சந்தை
Seizure — கைப்பற்றுகை
Security — பிணையம்
Share Capital — பங்கு மூலதனம்
Short-term Loan — குறுகிய காலக் கடன்
Socialist Farm — சமதர்ம விவசாயப் பண்ணை
Specialisation — தனித்துறைப் பயிற்சி
Stock-breeding — கால் நடை வளர்ப்பு
Stock — பங்குத் தொகுப்பு
Supply of Credit — கடன் அளிப்பு
Super Market — சிறப்பு அங்காடி, பேரங்காடி
Subscription — சந்தாத் தொகை
Surety — பிணையாளர்
Supply Socs. — அளிப்புச் சங்கங்கள்
Subscribed Shares — ஒப்பிய பங்குகள்

T

Tariff — காப்பு வரி
Tenants' National Union — தேசியக் குடியிருப்போர் சங்கங்கள்
Temporary Associations — தற்காலிகக் கழகங்கள்
Total output — மொத்த உற்பத்தி
Trade Combination — வணிகச் சேர்க்கை
Trading Activities — வாணிகச் செயல்கள்
Tender — அளிப்பு முனைவு

U

United Co-operatives — ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டுறவுக் கழகங்கள்

Urban Societies — நகர்ப்புறச் சங்கங்கள்

V

Village Industries — கிராமத் தொழில்கள்

Vote — வாக்கு

W

Warehouse — பண்டகம்

Wheat Pool — கோதுமைத் தொழில் திரட்டு

Wholesale Socs. — மொத்த விற்பனைச் சங்கங்கள்

Wool Co-operatives — கம்பளிக் கூட்டுறவுக் கழகங்கள்

Working Capital — நடைமுறை முதல்

BIBLIOGRAPHY

Bhatnagar, K. P. — Co-operation at Home and Abroad

Bhatnagar, N. L. — Co-operation at Home and Abroad

Blanc, G. T. — Co-operative Movement in Russia

Bedi — History, Theory and Practice of Co-operation

Calvert, H. — Law and Principles of Co-operation

Cole, G. D. H. — A Century of Co-operation

Darling, M. L. — Some aspects of Co-operation in Germany, Italy and Ireland

Digby, M. — i. Agricultural Co-operation in Great Britain.
ii. The World Co-operative Movement

Faber, H. — Danish Co-operation in Agriculture

Fay, C. R. — Co-operation at Home and Abroad (Vols. I and II)

Guha, S. — The Co-operative Way

Hall, H. and Watkins — Co-operation in Great Britain and Ireland

Holyoake — History of Co-operation

Kulkarni, K. R. — Theory and Practice of Co-operation in India and Abroad (Vols. I, II and III)

Mahesh Chand — Co-operation in China and Japan

Mamoria, C. B. and Saksena, R. D. — Co-operation in Foreign Lands

Mathur, M. P. — Co-operative Movement in India and Abroad

Plunkett, H. — Agricultural Co-operation in Ireland

Rajagopalan, S. — Co-operation in Foreign Countries

Webb — Industrial Co-operation

Wolf, H W. — People's Banks

Journals

Indian Co-operative Review.

Journal of All - India Co-operative Union.

Rural India.

U.S.I.S. Publications, British Council Publications, etc.